# MADRAS GOVERNMENT ORIENTAL SERIES

No. CLVI

---

# DINA KAVITHAI

VOLUME II

# தின கவிதை

பாகம் - உ.

1955

MADRAS GOVERNMENT ORIENTAL SERIES

Published under the authority
of the
Government of Madras

*General Editor:*

T. CHANDRASEKHARAN, M.A., L.T.,
Curator, Government Oriental Manuscripts Library,
Madras.

No. CLVI

# திணை கவிதை

பாகம் - 2.

# DINA KAVITHAI

## VOLUME - II

CRITICALLY EDITED WITH INTRODUCTION AND NOTES

By

Vidvān **M. RAJAKKANNU**, M.A., B.O.L.,
*Head of the Tamil Department, Government Arts College, Madras.*

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY,
MADRAS.

**1956**

Price Rs. 8—12—0

# பொருளடக்கம்

# INTRODUCTION

The Government of Madras took up for consideration the *question of publication* of the various manuscripts in different languages on subjects like Philosophy, Medicine, Science, etc., early in May 1948. Important Manuscripts Libraries in the Madras Presidency were requested to send a list of unpublished manuscripts with them for favour of being considered by the Government for publication. The Honorary Secretary of the Tanjore Maharaja Serfoji's Saraswathi Mahal Library, Tanjore, alone complied with this request. This list as well as a similar list of unpublished manuscripts in the Government Oriental Manuscripts Library, Madras, were carefully examined and a tentative selection of manuscripts suitable for publication was made. The Government in their Memorandum No. 34913/48-10, Education, dated 4th April, 1949, constituted an Expert Committee with the Curator of the Government Oriental Manuscripts Library, Madras, as the Secretary, for the final selection of manuscripts suitable for printing and for estimating the cost of publication.

The following were the members of the Committee :—

1. Sri T. M. Narayanaswami Pillai, M.A., B.L.
2. ,, R. P. Sethu Pillai, B.A., B.L.
3. ,, C. M. Ramachandra Chettiar, B.A., B.L.
4. ,, R. Krishnamoorthy. (*Kalki*)
5. Dr. N. Venkataramanayya, M.A., PH.D.
6. Sri M. Ramanuja Rao Naidu, M.A.
7. ,, V. Prabhakara Sastri.
8. ,, N. Venkata Rao, M.A.
9. ,, H. Sesha Ayyangar.
10. ,, Masti Venkatesa Ayyangar.
11. ,, M. Mariappa Bhat, M.A., L.T.
12. Dr. C. Achyuta Menon, B.A., PH.D.
13. ,, C. Kunhan Raja, M.A., D.PHIL.
14. ,, A. Sankaran, M.A., PH.D., L.T.
15. Sri Polakam Rama Sastri.
16. ,, S. K. Ramanatha Sastri

17. Dr. M. Abdul Huq, M.A., D.PHIL. (Oxon.)
18. Sri Afzul-ul-Ulama Hakim Khader Ahamed.
19. Sri P. D. Joshi.
20. „ S. Gopalan, B.A., B.L.
21. „ T. Chandrasekharan, M.A., L.T., Curator.

With the exception of Sri Masti Venkatesa Ayyangar, and Dr. C. Kunhan Raja, the above members continued to be members of the Expert Committee for 1950-51 also to which the following gentlemen were added in Government Memo. No. 7297-E/50-3, Education, dated 19th May, 1950, and Government Memo. No. 15875-E/50-4, Education, dated 7th September, 1950:—

1. Dr. A. Chidambaranatha Chettiar, M.A. PH.D.
2. Sri S. Govindarajulu, B.A., B.L., LL.B., Bar-at-Law.
3. Capt. G. Srinivasamoorthy, B.A., B.L., M.B. & C.M.
4. Dr. Muhammad Hussain Nainar, M.A., PH.D.
5. Sri T. V. Subba Rao, B.A., B.L.
6. Principal, College of Indian Medicine, Madras.

In Government Memorandum No. 18947-E/52-2, Education, dated 7th August, 1952, a few changes were made in the personnel of the Expert Committee.

The names of the following members were deleted:—

1. Sri V. Prabhakara Sastri.
2. Dr. C. Achyuta Menon.
3. „ M. Abdul Huq.

The following gentlemen were included as members of the Expert Committee :—

1. Sri M. Somasekhara Sarma.
2. Dr. V. Raghavan, M.A., PH.D.
3. „ R. Nagaraja Sarma, M.A., PH.D.
4. „ S. Krishnan Nayar, M.A., PH.D.
5. Prof. S. A. W. Bukhari, M.A., L.T.

In G. O. Ms. No. 1849 Edn., dated 8-11-1955, the Government reconstituted the Expert Committee with the following members :—

## SANSKRIT

1. Dr. A. Sankaran, M.A., Ph. D., L.T.
2. Sri P. S. Rama Sastri.

3. Dr. V. Raghavan, M.A., Ph. D.
4. „ R. Nagaraja Sarma, M.A., Ph. D., L.T.
5. Sri K. Balasubramania Iyer, B.A., B.L., M.L.C.

TAMIL

6. Sri T. M. Narayanaswami Pillai, M.A., B.L., M.L.C.
7. „ R. P. Sethu Pillai, B.A., B.L.
8. C. M. Ramachandran Chettiar, B.A., B.L.,
9. T. P. Meenakshi Sundaram Pillai, M.A., M.O.L.
10. Dr. A. Chidambaranatha Chettiar, M.A. Ph. D.
11. Sri N. T. Viswanathan, B.A., B.L.

KANNADA

12. Captain G. Srinivasamurthi, B.A., B.L., M.B. & C.M.
13. Sri M. Mariappa Bhat, M.A., L.T.
14. „ H. Sesha Iyengar.

MALAYĀLAM

15. Dr. S. Krishnan Nayar, M.A., Ph. D.

MARĀTHI

16. Sri P. D. Joshi.

ISLAMIC LANGUAGES

17. Professor S. A. W. Bukhari, M.A., L.T.
18. Dr. M. Abdul Huq. M.A., D. Phil (Oxon).
19. Sri S. M. Fazlullah, M.A., L.T.

OTHERS

20. Sri S. K. Ramanatha Sastri, Sanskrit & Malayalam.
21. „ T. V. Subba Rao, B.A., B.L., Music in all languages.
22. The Principal, College of Indigenous Medicine, Madras-10. Medicine in all languages.
23. Sri S. Gopalan, B.A. B.L. Sanskrit, Tamil and Telugu.
24. „ T. Chandrasekharan, M.A., L.T., In all languages (Secretary of all the Committees).

The members of the Committee met at Madras and at Tanjore to examine the manuscripts and make a selection. The recommendations of the Committee were accepted by the Government and they decided to call these publications as the "MADRAS GOVERNMENT ORIENTAL SERIES," and appointed the Curator, Government Oriental Manuscripts Library, Madras, as the General Editor of the publications under this series.

The following manuscripts were taken up for publication till now:—

---

## "A" FROM THE GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS.

### TAMIL

1. Kappal Śāttiram.
2. Anubhava Vaiddiya Muṟai.
3. Āttānakōlāhalam.
4. Upadēśa Kāṇḍam.
5. Cōḻaṉ Pūrva Paṭṭayam.
6. Śivajñāna Dīpam.
7. Daṭcaṇāyaṉār Vaiddiya Aṭṭavaṇai.
8. Vaiddiyak Kaḷañciyam.
9. Anubhava Vaiddiya Muṟai, Vol. 3
10. Saptariṣināḍi, Vol. I, Meṣa Lagnam.
11. Karnāṭakarājākkaḷ Savistāra Carittiram
12. Bharata Siddhāntam.
13. Piḷḷaippiṇivākaṭam (on infantile diseases), Vol. I.
14. Anubhava Vaiddiyam, Vol. 4
15. Māṭṭuvākaṭam.
16. Saptariṣināḍi, Vol. II —Viruṣabha Lagnam.
17. South Indian Temple Inscriptions, Vol. I
18. Saptariṣināḍi, Vol III, Mithuna Lagnam.
19. South Indian Temple Inscriptions, Vol. II.
20. Piḷḷaippiṇivākaṭam (on infantile diseases), Vol. II.
21. Saptariṣināḍi, Vol. IV, Kaṭaka Lagnam.
22. Pērūr-k-Kōvai.

23. Siddhāntaviḷakkam.
24. Sāmudrikālakṣaṇam.
25. Ānandaraṅga-k-Kōvai.
26. South Indian Temple Inscriptions, Vol. III, Part I.
27. Saptariṣināḍi, Vol. V, Simha Lagnam.
28. Māghasnāna Purāṇa Ammānai.
29. Kōlācala Stalapurāṇam.
30. Dina Kavitai.
31. South Indian Temple Inscriptions, Vol. III. Part II.

## SANSKRIT

1. Viṣanārāyaṇīyam (Tantrasārasaṅgraha).
2. Bhārgava Nāḍikā.
3. Hariharacaturaṅgam.
4. Brahmasūtravṛtti—Mitākṣarā.
5. Nyāyasiddhānta Tattvāmṛtam.
6. Ārogyacintāmaṇi.
7. Tattvasāra with Ratnasāriṇi.
8. Sūtrārthāmṛta Laharī.
9. (a) Ratnadīpikā.
   (b) Ratnaśāstram.
10. Devakeraḷam—Candrakalā Nāḍi, Vol. I
11. Pātañjala yogasūtra bhāṣya vivaraṇa by Sri Śaṅkarācārya.
12. Nyāyaratnam with the commentary Dyutimālikā.
13. Cikitsātilakam.
14. Nṛttaratnāvali.
15. Daivajñābharaṇam.
16. Ābhoga.
17. Aumāpatam.
18. Mahābhāskarīyam with Govindabhāṣya
19. Devakeraḷam—Candrakalā Nāḍi, Vol. II.
20. Nayadyumaṇi.
21. Tattva Prakāśikāvyākhyā—Bhāvabodha.

## TELUGU

1. Auṣadhayōgamulu.
2. Vaidyanighaṇṭuvu.
3. Dhanurvidyā Vilāsamu.

4. Yōgadarśanaviṣayamu.
5. Khaḍgalakṣaṇaśirōmaṇi..
6. Śaivācārasaṅgrahamu.
7. Anubhavavaidyamu.
8. Abhinayadarpaṇamu.
9. Brahmavidyāsudhārṇavamu.
10. Rāgatāḷacintāmaṇi.
11. Vaidyacintāmaṇi.
12. Kumārarāmuni Kathā.
13. Kaṭamrāju Kathā.
14. Śārīramu.
15. Bharatasārasaṅgraha.
16. Bobbiliyuddhakathā
17. Haidarcaritramu.
18. Āryabhaṭīya Vāykhya.

## MALAYĀLAM

1. Garbha Ciktisā.
2. (a) Vāstulakṣaṇam.
   (b) Śilpaviṣayam.
3. Mahāsāram.
4. Kaṇakkusāram.
5. Kriyākramam.
6. Kaṇakkusāram (Bālaprabōdham).
7. Aśvacikitsā.
8. Phalasārasamuccayam.
9. Kiḷivaṇḍusamvādam.
10. Advaita Vēdāntam.
11. Bārhaspatyasūtra with Malayāḷam commentary.
12. Karaṇapaddhati.
13. Vidyamādhavīyam.
14. Sarvasādhāraṇa Cikitsā.
15. Viṣacikitsa and Viṣappaṭṭusāram.
16. Jñānapīyūṣam.
17. Vētāḷapañcavimśati.
18. Yudhiṣṭhiravijayam.
19. Kathakaḷi Mañjari.
20. Vaidyagrantham.

## KANNADA

1. Lōkōpakāram.
2. Raṭṭamatam.
3. Aśvaśāstram.
4. Vividhavaidyaviṣayagaḷu.
5. Saṅgītaratnākara.
6. Sūpaśāstra.
7. Vaidyasārasaṅgraham, Vol. I.
8. Sadgururahasyam.
9. Vaidyasārasaṅgraham, Vol. II.
10. Manmathavijaya.
11. Abhidhānaratnamāla.
12. Vyavahāragaṇita.
13. Jīvasambōdhanam.
14. Kāmandaka Nīti Sāra.

## ISLAMIC LANGUAGES

### PERSIAN

1. Jami-Al-Ashya.
2. Tibb-E-Faridi.
3. Tahqiq-Al-Buhran.
4. Safinat-Al-Najat.
6. Baharistan Sukhan.
7. Nuskha-e-Shajahani.
8. Tuhfa-e-Khani.
9. Ruqa'at-e-Wālājāhi.

### ARABIC

1. Shawakil-Ul-Hur.

## "B" FROM THE TANJORE MAHARAJA SERFOJI'S SARASWATHY MAHAL LIBRARY, TANJORE.

### TAMIL

1. Śarabhendra Vaiddiya Muṟai (Diabetes).
2. Do. (Eyes).
3. Do. (Anaemia).
4. Do. (Śvāsakāsam).

5. Agastiyar 2000.
6. Koṅkaṇarśarkku Vaippu.
7. Tiruccitṛambalakkōvaiyār with Padavurai.
8. Tāḷasamudram.
9. Bharatanāṭyam.
10. (a) Pāṇḍikeḷi Vilāsa Nāṭakam.
    (b) Purūravacakravarti Nāṭakam.
    (c) Madanasundaravilāsanāṭakam.
11. Percy Macqueen's Collection of Folklore in the Madras University Library.
12. Rāmaiyan Ammanai.

TELUGU

1. Kāmandakanītisāramu.
2. Tāladaśāprāṇapradipikā.
3. Raghunātha Nāyakābhyudayamu.
4. Rājagōpāla Vilāsamu.
5. Rāmāyaṇamu by Kaṭṭa Varadarāju.

MAHRĀTHI

1. Nāṭyaśāstra Saṅgraha.
2. (a) Book of Knowledge.
   (b) Folk Songs.
   (c) Dora Darun Veṇi Paddhati.
   (d) Aśvasa Caṭula Dumani.
3. (a) Pratāpasiṁhendra Vijaya Prabandha.
   (b) Sarabhendra Tīrthāvali.
   (c) Lāvaṇi.
4. Devendra Kuṟavañji.
5. Bhakta Vilāsa.
6. Śloka Baddha Rāmāyaṇa.

SANSKRIT

1. Aśvaśāstra with Tricolour illustrations.
2. Rājamṛgāṅka.
3. Ānandakandam.
4. Āyurvedamahodadhi.
5. Gīta Govinda Abhinaya.

6. (*a*) Colacampū.
   (*b*) Sahendra Vilāsa.
7. Dharmākūtam—Sundara Kāṇḍa.
8. Jātakasāra.
9. Viṣṇutattvanirṇaya Vyākhyā.
10. Saṅgīta Darpaṇam.

The Government in their G. O. Ms. No. 1820, Education, dated 4th August 1952, sanctioned a grant of Rs. 9,000 to the Dr. V. Swaminatha Aiyar's Tamil Library, Adyar, towards the publication of the following manuscripts as part of the "Madras Government Oriental Series":—

1. Tiiruvācaka Vyākhyānam.
2. Mahābharata Cūḍāmaṇi.

It is hoped that the publication of most of the important manuscripts will be completed within the next few years.

Some of the manuscripts taken up for publication are represented by single copies in the Library and consequently the mistakes that are found in them could not be corrected by comparing them with other copies. The editors have, howevers tried their best to suggest correct readings. The wrong reading, are given in round brackets and correct readings have been suggested in square brackets. When different readings are found, they have been given in the foot-notes except in the case of a few books in which the correct readings have been given in the foot-note or incorporated in the text itself.

The Government of Madras have to be thanked for financing the entire scheme of publication, although there is a drive for economy in all the departments. My thanks are due to the members of the Expert Committee who spared no pains in selecting the manuscripts for publication. I have also to thank the various editors, who are experts in their own field, for readily consenting to edit the manuscripts and see them through the Press. The various Presses that have co-operated in printing the manuscripts in the best manner possible also deserve my thanks for the patience exhibited by them in carrying out the corrections made in the proofs.

The present edition Dinakavithai, Volume II, is based on a single palmleaf manuscript, preserved in the Government Oriental Manuscripts Library, Madras, under No. R.4997 (vol. II) The size of the manuscript is 1 × 14 inches, consisting of 1300 folios having 4 lines on a Page. This was purchased in 1954-55, from Sri Singaravelu Kavirayar of Mitilaippatti.

This volume contains about 2500 stanzas, in praise of the Lord Subrahmanya.

MADRAS,
16—2—1956.

T. CHANDRASEKHARAN,
*General Editor,*
*Madras Government Oriental Series.*

முருகன் துணை

சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன் திருவடி வாழ்க.

# ஆராய்ச்சி முன்னுரை

—(o)—

## தின கவிதை

தினம் **நாள்** என்னும் பொருள் படுவதொரு சொல். இங்கு நாளினை ஆக்கும் விண்மீனினைக் குறிக்கின்றது. இந்நூலாசிரியர் பாடியுள்ள இப் பாடல் தொகுதியில் ஒவ்வொரு பாட்டடியிலும் பாடிய நாள்—**விண்மீன்**—நக்ஷத்திரம் குறிக்கப்படுகிறது. எனவே, நூலாசிரியர் தினம் என்பதற்கு நக்ஷத்திரம் எனப் பொருள் கொண்டுள்ளார்.

காலையில் எழுந்து கடன் முடித்துக் கடவுளாகிய முருகனை நெஞ்சி லிறுத்தித் தம்முள்ளத்தே வந்து மோதிய எண்ணத்தினைக் கவிதையாக்கியவர் இக்கவிதை யாசிரியர். ஒவ்வொரு நாளும் ஒரு கவிதையினைப் புனைந்து புனைந்த அக்கவிதை மலரினை இறை முருகனின் திருவடிக்குரிய தாக்கியமையால் அக் கவிதைத் தொகுதி **தின கவிதை** எனலாயிற்று.

தினகவிதையின் தொடக்கத்தில்,

"தினகவிதைப் புஸ்தகம்—அழகுமல்லையூர் அழகிய சிற்றம்பலக் கவி ராசர் குமாரன் குழந்தைக் கவிராசன் குன்றக்குடிக் குமரேசர் பேரில் பாடின கவிதைப் புஸ்தகம். குமாரகுருபர சரவணபவன் திருவடித்தாமரை துணை யாக வேண்டுவது. சரஸ்வதி துணையாக வேண்டுவது. அத்திமுகத்துத்தமனை சித்தரினை சித்தமே. சுந்தரேசர் துணையாக வேண்டுவது. மீனும்பிகை துணையாக வேண்டுவது. சபாநாயகர் சிவகாமியின் திருவடித்தாமரை கதி. சைவராச குருவே துணை. சிற்றம்பலப் பண்டாரம் அவர்கள் துணையாக வேண்டுவது" எனும் குறிப்புக் காணப்படுகிறது.

இக்குறிப்பு, இந்நூலின் பெயர் இன்னது என்பதனையும் பாடினோர் பெயர், ஊர், பாடப்பட்ட இறைவனுர் முதலியவற்றையும் தெள்ளத் தெளி வாக்கி விடுகிறது. எனவே, இவைபற்றிய ஆராய்ச்சி ஏதும் தேவை இல்லை.

**குழந்தைக் கவிராயர்** 18-ஆம் நூற்றாண்டிற்குச் சிறிது முன்பாக அருணகிரி நாதர், பகழிக் கூத்தர் ஆகியோருக்குப் பிந்தியவராக இருத்தல் வேண்டும் எனத் தினகவிதை முதல்பாகத்தில் அமைந்த முன்னுரை வேறு வழியாக விளக்கம் காணப்படும் வரையில் ஏற்றுக் கொள்ளப் படுதலில் தவ றொன்றும் இல்லை.

இந்நூலாசிரியராகிய **குழந்தைக் கவிராயர்** இக்கவிதைகளைப் பாட நேர்ந்த காரணத்தைப் பலபடியாகக் கூறலாம். மேல்வரும் செய்திகள் இது பற்றிய விளக்கத்தினைத் தரும்.

நிற்க, இவர் வயிற்று வலியால் துன்பமுற்ற செய்தியைச் சில இடங் களில் குறித்துள்ளார். அப்பமூர்த்திகள் சிவபெருமானின் துணைகொண்டு அவ்வலியினைப் போக்கிக் கொண்டதை இவர் முருகப் பெருமானுக்கு நினை வூட்டுகின்றார். ஆகவே, சூலை நோயினைப் போக்கிக் கொள்ள என்றும் இவர் முருகனைப் பாடியிருக்கலாம்.

இவ்வேளையில் இந்நூற்றாண்டில் நடந்ததொரு நிகழ்ச்சி எனக்கு நினை வுக்கு வருகின்றது. சிவத்தின் திருவருளில் கலந்த சிவத்திரு **ஞானியாரடி களை** அறியாதவர் இந்நாட்டில் மிகக்குறைவு. அவர்களுடைய முதுமைப் பரு வத்தில், வயது சுமார் 61 இருக்கும்போது, குடியேற்றம் சென்றிருந்தார். சென்று தங்கியிருந்த வீட்டில் உள்ள படிகளின் உயரம் நினைவில்லாமல் இரவில் வெளியில் எழுந்து வந்தபோது இறங்கினார். திடுமெனக் கால் கீழே சென்ற காரணத்தினால் முழங்கால் எலும்பு முறிந்தது. உடனே, அடி களைக் குடியேற்றத்திலிருந்து திருப்பாதிரிப்புலியூரிலுள்ள மடத்திற்கு அன்பர்கள் கொண்டு வந்தார்கள். அங்குப் பல வகையான சிகிச்சைகள் செய்யப்பட்டன. எனினும், முறிந்த எலும்புகள் ஒன்று சேர்வனவாகத் தெரியவில்லை. இது நடந்தது ஆடிமாதத்தில் என்று எண்ணுகின்றேன். கால் முறிந்தும் உணர்வு சிறிதும் முறியாது வழக்கம்போல் பாடம் சொல்லி வந்தார்கள் அடிகள். அதுகாலை, இடம் விட்டு இடம் பெயர்வது என்பது அடி களால் முடியாத செயல்; ஆதலின் அவர்களை நாற்காலியிலிருத்தி அன்பர் கள் தூக்கிச் செல்வது வழக்கமாக இருந்தது

மருத்துவ முறையெல்லாம் பயன் தாராது ஒழியவே மருத்துவனாகிய முருகப் பெருமானையே நினைந்துருகும் நெஞ்சினை இரவு பகல் எப்போதும் பெற்ற அடிகள் ஒரு சீரிய செயல் செய்தனர். காலைக் கடன் முடித்துச் சிவ பூசையினை முடித்துக் கொண்டபின் சிவபுராணம் முதலியவற்றைப் படித்துப் பின்னரே உணவு கொள்வது அவர்கள் வழக்கம். உணவு கொள்ளும் முன்பு முருகனையும் முருகனுருவாய் அவர்கட்கு அமைந்து அருள்புரிந்த குரு மூர்த்திகளையும் தோத்தரிக்கும் முகமாகச் சில பாக்களை பாடுவர். பாடியபாக் களை **வண்டிப்பாளையத்துச் சமாதி கோட்டத்தில் உள்ள குருமூர்த்தி**

**களின் சமாதியில் திரு. உருத்திரசாமி ஐயரவர்கள்** படித்து வந்தார்கள்; இது தொடர்ந்து நடந்து வந்தது.

ஐப்பசி மாதம் நெருங்கியது. இம்மாதத்தில் கந்தர் சஷ்டி விரதத்தினை அடிகளார் மேற்கொள்வது வழக்கம். காலில் கடுகிய துன்பம் இருந்தும் பூசை முதலிய நித்ய ஒழுக்கத்தில் முழுவதும் ஈடுபட்டுக்கொண்டு வந்த அடிகள் கந்தர் சஷ்டி விரதத்தையும் மேற்கொண்டனர். அவ்விரதத்தினைக் குறைவறச் செய்து முடித்தனர். அதே மாதத்தில், விரதம் முடிந்த பிறகு, மடத்தின் உள்பகுதியில் அமைந்த கூடத்தில் வழக்கம்போல் அவர்கள் இருக்கும் இருக்கையில் இருந்து பாடம் சொல்லிக் கொண்டிருந்தனர். அப்போது சிவஞான முனிவர் இயற்றிய காஞ்சிப் புராணம் படிப்பிக்கப்பட்டது.

பாடம் சொல்லிக் கொண்டிருந்த அடிகள் உடலில் தோன்றிய ஏதோ ஓர் உணர்ச்சி காரணமாக உடலை அசைத்தனர். அதுபோது அவர்களின் படிந்து இருந்த காலும் உடன் எழுந்தது. முறிந்திருந்த காலின் பாதம், முறிந்திருந்த காரணத்தினால் தொங்கிக் காண்பது முன்னைய நிலை. ஆனால், அவர்கள் காலைத் தூக்கியபொழுது பாதமும் சேர்ந்தாற்போல் மேலெழுந்தது. இதனைக் கண்ட நான் வியப்பு மேலீட்டினால் "சுவாமி, கால் கூடிவிட்டது" என்று கத்திவிட்டேன். என்னைச் சுற்றிலும் இருந்தவர்கள் என்னைப் பித்தனெனக் கருதி நோக்கினர். ஆனால் நான் எழுந்து அடிகள் அருகே சென்று அவர்களின் காலைத் தூக்கிப் பார்த்தேன். ஒடிந்த பகுதி நிமிர்ந்து ஒன்றுபட்டுச் சேர்ந்திருந்த தன்மை புலனாயிற்று. மருந்தாலும் மற்ற எதனாலும் குணப்படுத்த முடியாத கால் குணமாகிவிட்ட செய்தி எல்லோருக்கும் வியப்பினை ஊட்டிற்று. அதே வேளையில் அடிகளாரின் முறையீடு அழகு திகழும் வேலை ஏந்திய முருகன் செவியில் முழுவதும் விழுந்தது என்பதும் அறியப்பட்டது. யாவரும் வியந்து மகிழ்ந்தனர்.

இது நான் பல ஆண்டுகளுக்கு முன்னர்க் கண்ட காட்சி. ஒருவேளை இதுபோலவே இந்த நூலாசிரியரான கவிராயர் அவர்களும் தம்மைத் தாக்கித் துன்புறுத்திய வயிற்றுவலி முதலிய துன்பம் காரணமாக இப்பாடல் தொகுதியைப் பாடினரோ என்று எண்ணுவதற்கு இடம் இருக்கிறது.

இரண்டாம் பாகமாகிய இத் தொகுதியில் காணப்படுகின்ற பல்வகைப்பட்ட கருத்துக்களை ஓரளவு முறைப் படுத்திப் பல தலைப்புக்களிலே கொடுத்தற்கு முயன்றிருக்கிறேன். பிழை காணின் மன்னிக்க.

பாண்டி நாட்டிலே திருப்புத்தூருக்கு அருகிலே உள்ள **குன்றக்குடியில்** எழுந்தருளி உள்ள முருகனை இந்நூலாசிரியர் பாடிச் சிறப்பித்துள்ளார். குன்றக்குடியில், முருகப் பெருமானின் ஊர்தியாகிய **மயில் மலைவடிவாக** இருக்கின்றது என்பது புராண வரலாறு. ஆதலின் **மயில் மலை** என்ற பெயரும் இந்த ஊருக்கு உண்டு. **குன்றை மலை, மயில் மலை, சிகிமலை,** என்றெல்லாம் இவ்வாசிரியர் பாடிச் செல்கிறார்.

## முருகன்

பாடப்பட்ட இறைவன் முருகன். முருகவேளின் இனிய **பெயர் பலவற்றையும்** பாடல்களிலே அழகாக அமைத்துச் செல்கிறார்.

முருக! குக! குமர! (2640) *

கருணை தங்கிய மகிமை மிஞ்சிய கடவுள்! (2666)

தோகைமயில் வரு சேவகா!
சாமி! சரவண நாதனே! (2761)

மதிக்கு நிகரானனா! (2795)

செக நாயக! (2306)

ஆறுமுக நாத! (2807)

புனித! (2859)

கருணாநிதி! (2860)

வான மதி வதனா! (2929)

கருத்தனே! (என் கருத்தில் உள்ளவனே) (3047)

சித்து விளைவித்த குக! (3051)

கந்தனே! (3260)

ஆறுமுக வடிவே! (3313)

குரு நாயக! குக நாயக! (3326)

அருவா! (3419)

குன்றை மாமலை அன்பரே! (3451)

சேயனே! குரு தேசிகா! (3468)

அழகு படைத்திடு குகநாதா! (3505)

படித்த பாவலரில் பரக்கு ஆசைதரு புதல்வோனே! (3508)

வரத! அற்புத! (3353)

குகனே! (3656)

ஆறு படைத்த சீர்கொள் ஆனன முற்ற தேவ! (3711)

நட மயிலை நடத்து சேயே! (3904)

கந்தா! குக! காரண! காரியனே! (3938)

முருகையா! வேளே! (4124)

---

* விளிவுக் குறியினுள் தரப்படுவது பாட்டெண்.

சாமி! குருசாமி! (4128)

சரவண பவனே! (4148)

புனித! (4161)

தூயனே! வேலவா! குக! குருபரா! (4238)

சேய்! குமரேச! (4255)

சரவண பவ! குக! குமர! குருபர! சண்முக! (4308)

ஆறு முகத் தழகா! (4333)

தனி நாயகமே! (4426)

குழந்தை வடிவேலா! (4441)

அழகுள துரை! முருகா! (4486)

இந்நூலாசிரியர், முருகப் பெருமானுக்கு உரியனவாய்ப் பழங்காலந் தொட்டு இந்நாள்வரை இட்டு அழைக்கப்பட்டு வந்த திருநாமங்களை மேற் கொள்வதோடு 'துரை' என்ற சொல்லை அன்பாக மிகுதியும் கையாளு கின்றார்.

குற மாதுள் கொஞ்சி அணை துரையே! (2854)

தொடுத்த நீப மலர் புயத்தின் மீதிலணி
துரை! குகா! குமர! குருநாதா! (2864)

அழகிய துரை! (3022)

துரை! வேலவ! (3131)

சத்தியை அணி துரையே! (3296)

கருணை பெற்ற துரை! முருகா! (3476)

மடமயில் பரியில் வரு துரைக் குமர! (3529)

வடிவுற்றிடு தோகை மயிலிற்றுரை! (3575)

துரை! முருகேச! (3638)

துரை நாதா! (3691)

துரை! (3745) (4658)

துரை வேலவ! (3817)

மதி கொள் சடைப் பொன் முடியார்
மகவென வுற்ற துரையே! (3845)

அன்பு மிகுகின்ற துரையே (4312)

துரைக் குகேச! (4357)

துரைக் குருபர! (4463)

அழகுள துரை! முருகா! (4486)

துரை! முருக! (4651)

துரை! நாயக! (4737)

ஆசிரியர் 'துரை' என்ற இந்தச் சொல்லை எத்துணை கனிந்த அன்போடு பயன்படுத்துகிறார் என்பது காட்டியுள்ள சான்றுகளால் தெளிவாகும். இன்றும் உலக வழக்கத்தில் காணப்படும் **துரைசாமி** எனும் பெயர் இங்கு எண்ணிக் கொள்ளுதற்கு உரியது.

முருகனை எண்ணும்போது அக் கடவுளுக்கு வாகனமாய் அமைந்த மயிலும் உடன் எண்ணிக் கொள்ளுதற்குரிய தோன்றும். அநுபூதி பாடிய **அருணகிரிநாதர்** 'ஆடும்பரி வேல் அணி சேவல் எனப்பாடும் பணி' தனக்கு வேண்டும் என்று வேண்டுகின்றார். **மயிலேறி விளையாடி வருகின்ற முருகனை**

கதியான தோகை மயிலாள! (2623)

கதி கதிமி யான தகு நடன வீர மயில் (2710)

கூவி நடமிடு தோகை மயில்மிசை
கோலமுடன் வரு சீராளா! (2899)

கவன மிஞ்சிய களி நடம்புரி
கன செகண்டியில் வருதேவே! (2965)

மயிலேறி விளையாடு குக! (3015)

தந்த தோமென ஆடலே புரி மயிலாளா! (3036)

வனசம்போல் முகம் மலரவே முனம்
மயிலிலே வரு சிகி மோரா! (3459)

படித்த பாவலர்க்கா பசைத்த தோகை
மலை மேல் வரு தேவே! (3524)

மடமயில் பரியில் வருதுரைக் குமர! (3529)

வடிவுற்றிடு தோகை மயிலிற்றுரை! (3575)

நட மயிலை நடத்து சேயே! (3904)

தித்தமி திமிதியெண திக்குவென
நடன மிடு மயிலாளா! (3973)

தண்டைகள் ஒலியா தந்திமி எனவே
மயில்மீதே தொண்டன் முன் வருவாய். (4102)

தித்திமி திதியென நடமாடிய
சித்திர மயில் மிசை வருவாய். (4313)

கனக தண்டை ஒலி முழங்க
கனமிகுந்த மயிலில் ஏறி வருவாயே! (4349)

பட அரவின் உயர் முடியில்
பட படென திமி திமி திதிமி எனவேதான்

நடனமிடு மயிலின் மிசை
நலமுலவ அடியன் முனம் வருவாயே! (4559)

எனப் பாராட்டுகின்றார்.

இன்றும் முருகனைக் குழந்தை உருவினனாக வழிபடும் வழக்கம் தமிழ் நாட்டில் நிலவி வருகிறது. 'என்றும் இளையாய்' எனப் போற்றப்பட்ட காரணத்தினால் போலும் சேயாக, இளவலாக, இளையோனாக, குழந்தையாக முருகனை எண்ணி வழிபடுகின்ற வழக்கம் இருந்து வருகிறது. இவ்வாசிரியரும் முருகனைக் **குழந்தையாகக் கொண்டு** பாடுகின்றார்.

குழந்தை வடிவேலா! (444)

கனக தண்டை மணி சதங்கை
கல கலென்று ஒலி முழங்க வருவாயே! (3926)

தண்டை சிலம்பு சதங்கை யிலங்கிட வருவாயே (3930)

கனக தண்டை ஒலி முழங்க................வருவை (3941)

கனக தண்டை ஒலிமுழங்க..............
........கமழ் கடம்ப மலர் விளங்க வருவாயே (3991)

கனக தண்டை ஒலி முழங்க.................வருவாயே (4036)

கலுக்கு என இசை கனத்த பணியணி இருதாளா! (4155)

தத்த தத்தக வென நடமாடி வருவாய் (4233)

கனக தண்டை ஒலி முழங்கக்
கனமிகுந்த மயிலிலேறி வருவாயே (4349)

கனக தண்டை ஒலி இலங்கு
கழல்கள் என்றன் விழிகள்கண்டு குளிரேனோ (4726)

முருகப் பெருமானின் திருவடிகள் எல்லாம் தரும் வல்லமை பொருந்தியன. **அத்திருவடிகளை** இவ்வாசிரியர் பலபடியாகவும் சிறப்பிக்கின்றார்.

தருவில் அரசுபுரி இறைவன் முதல் அமரர்
சகல முனிவர் பணி இருதாளா! (2640)

மூது மறை வாயன் மோகமொடு நாளும் அணிதாளா! (2644)

விதிமால் முதல் இமையோர் அடியோர்
பணி சரணு ! (2661)

பூவினில் வளர் வேதனுர் பூவளர் அடியார்களே
துதி தாளா ! (2688)

போது வரு வேதன் போத முனிவோர்கள்
பணி தாளா ! (2792)

அண்டர் முதலோர்கள் அன்பினெடு
தேடு இருதாளா ! (2871)

பைந்தமிழ் உகந்த பங்கசம் இலங்கு இரு தாளா ! (3176)

அடையலர்கள் பணி சரண ! (3455)

சகத்தோர் முதலானேர் தமிழ்ப் பாவலர்கள்
பணி தாளா ! (3502)

செந்தமிழினேர்கள் வந்து பணிதாளா ! (3696, 3731)

ஞான முற்ற கமலாசனக் கடவுள்
நாளும் அர்ச்சனை செய் இருதாளா ! (3708)

சந்த மேவிய சங்க நாவலர் புகழ் தாளா ! (3727)

பைந்தமிழ் தேடு பங்கசமான இருதாளா ! (3934)

பைந்தமிழினில் உயர்ந்த துதி புரி
பண்பின் அடியவர் பணி தாளா ! (4644)

திருவடிகளை மேற்கூறிய வாறு போற்றுகின்ற ஆசிரியர் அவ்விறைவனுடைய **புயத்தினையும் மார்பினையும்** கீழ்க்காணுமாறு வருணிக்கின்றார்.

நீப மலர் மார்பா ! (2623)

நறையுலவு கடம்பினை நயந்தணியும்
எங்கள் நாயக ! (2672)

கடி கமழ் நீப மாலை
கன புயம் மீது சூடும் முருகோனே ! (2679)

மது துளி கடப்ப
மலர் அணி புயத்து முருகோனே ! (2684)

தருப் பொலி கானக மயிற்சொரு மாமலர்
தரித்தினி தாய் மருவிய தோளா ! (2793)

தொடுத்த நீப மலர் புயத்தின் மீதிலணி
துரை ! குகா ! குமர ! குருநாதா ! (2864)

தாதவிழ் மலர் நீப மதணி
 தாரணி புய! முருகோனே! (3449)

செச்சை தரித்த புய வீர! (4207)

இனி, முருகனின் புயத்தினையும் மார்பினையும் பற்றிப் பேசிய ஆசிரியர் அப்பெருமான் **திருமேனியின்** அழகில் ஈடுபட்டுப் பாடுகிறார்.

அருணோதயமாம் அழகாகிய சீர் ஒளியாளா! (2718)

பவளம் ஒளிர் மேனி வடிவு திகழ் நாத! (2747)

அருண மேனிய! (3124)

குண திசை மேலுதி இளவெயில் போல் ஒளி
 குலவிய மேனியின் அமரேசா! (3262)

தினகரனை நேர ஒளிரு வடிவான
 செய வடிவின் வேல! (3284)

உதி சூரியனை நேரு உருவாள! வடிவாள! (3471)

புடங்கொள் ஆடகம் பொதிந்த
 மேனியின் முருகோனே! (3526)

தினக ரப்பிரபை ஒளிப டைத்திடு செக யிரச்சக! (3533)

கிழக்கே தோன்றி யாவர் உளத்திலும் மகிழ்ச்சியை விளைக்கும் **இள ஞாயிற்றின் இன்ப ஒளியையும் செம் பவழத்தின் செந்நிற ஒளியையும்** புடம் இட்டுத் தூய்மைப் படுத்திய **பொன்னின் நிறத்தையும்** முருகப் பெருமானின் **திருமேனிக்கு** ஒப்பாக ஆசிரியர் கூறுவதைக் காண்க.

செந்தமிழ் நாட்டின் முந்தைய கடவுள் முருகன். செந்தமிழ் மொழி கண்டினும் தேனினினும் மிக இனிக்கும் இயல்பினது. அம்மொழியுடன் தொடர்புற்ற எந்தல் முருகனின் **திரு வாய் மொழியும்** அவ்வண்ணம் இனிக்கும் இயல்பினது என ஆசிரியர் கூறுகின்றார்.

கொம்பில் இருக்கு தேனு கொண்ட மொழிக் குகா! (2687)

தெண்டிரையின் அமுதாகிய வாயா! (4197)

வடித்த அமிர்தான மொழிக்குமர! (4288)

செவ்வேள் ஏந்தி நிற்பது செவ்விய **வேல்.** இவ்வேல் ஞானவேல், தங்கவேல், வைரவேல், வெற்றிவேல், வீரவேல் எனப் பலவாறு புகழப் படும். இது ஞானமயம் ஆகியது; அறிவின் உருவினன் ஆகிய ஆண்டவன் முருகனே எனக் கொள்ளப் படுதற்குரியது. இவ்வேலின் பெருமையை

யும், அருமையையும், உயர்வையும், சிறப்பையும், இன்றியமையாத் தன்மையையும் நன்குணர்ந்த அறிவின் மிக்கோர் முருகவேளை வேல் இன்றி வணங்க மாட்டார்கள். இவ்வாறு இப் பெருண்மையை அடிக்கடி தமிழ்கூறு நல்லுலகத்திற்கு எடுத்துக் கூறி வலியுறுத்தியவர் காலங் கடந்த கடவுளொடு கலந்த எங்கள் **ஞானியார் அடிகளாவர்** இவ் **வேல்** பெருமையை இந்நூலாசிரியர் உணர்ந்து அனுபவித்துப் பாடுகின்றார்.

திறமுலவிய குந்த ஆயுத! (2762)

செரு வுலாவும் வடித்த வேலவ! (2720)

வடிகொள் வேலவா! (2725)

ஞான வடிவின் வேலை அணி தேவே! (2731)

அடம்புரி மாவின் குலம் பொடியாக
அழிந்திட வேலை எயும் நாதா! (2810)

வாதடர் சூரன் மீது மாறிடு கூறதாக அடுவேலா! (2853)

பொரு சூர் உடல் இரு கூறிடு
புகழ் வேல் கொடு செயவீரா! (2826)

அடமேபுரி அவுணேர் குல
அசுரோன் உடல் கிழி வேலா! (2860)

வேலணி கைநாயக! (2869)

தினகரனை நேர ஒளிரு வடிவான
செய வடிவின் வேல! (3284)

சத்தியை அணி துரையே! (3296)

அரிய மறை புகழ் அழகு திகழயில் (3359)

நாச மாகிட வேளதி ரே வரு
நாலு சேனையு மேவிழ மாவுடல் அடுவேலா! (3454)

புகழான வேலாயுதா! (3621)

சமரிடு வெற்றி வேல! (3670)

துரை வேலவ! (3817)

சத்தி யணி குக! (3973)

செங்கை எடுத்த அயிலா! (3989)

அசுரோன் மேல், குந்த மேவி யொரு ரெண்டு கூறுபட
கோன்ற சூர! (4143)

குந்த ஆயுதனே! (4875)

இவ்வாசிரியர் வேலினைக் **குந்தம்** எனப் பல இடங்களிலே கூறுவது நோக்குதற்குரியது. குந்தம் எனின் குத்துவாள், உடைவாள் எனப் பிற் காலத்தே பொருள் கொள்ளப்பட்டது. குந்தம் குருதி தோய்ந்த வேலையில் **செங்குந்தம்** என அழைக்கப்பட்டது. இன்று தமிழ் நாட்டில் காணப்படு கின்ற பலபிரிவினராகிய மக்களுள் செங்குந்தர் என்ற ஒருவகையினராகிய பழங்குடி மக்கள் இங்கு நினைந்து கொள்ளுதற்குரியர்.

முருகனின் கொடி **சேவற் கொடி**யாகும். இக்கொடியினை இவ் வாசிரியர்

"காலா யுதமுற்ற சேவலின் கொடியாளா." (4059)

எனப் புகழ்கின்றார்.

**கலை** என்பது கடவுளைகாட்டும் ஒரு துணைப் பொருள். கலைவழி நின்ற பெருமக்கள் கடவுளொடு கலந்த ஞானிகளாய் முடிந்தனர். இவ் வாசிரியரும் கருணைக் கடவுளாகிய கந்தனைக் **கலை வழி நிற்போர்க்கு உரிய பொருள்** எனவும் **கலை உருவினன்** அவன் எனவும் கூறுகின்றார்.

கலைகள் பயில் வாயனே! (2721)

கலை யாவுமே செய்வாய்! (3395)

கலை யாவுமே உணர் பாவல! (4721)

கலை பழகுபவர் நினது அடிபரவு பொற் சரண! (3011)

தமிழ் நாட்டினைப் பழந்தமிழர் நாற்பெரும் பிரிவுகளாக பிரித்துப் பேசி வந்தனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன. ஒவ்வொரு பிரிவாக அமைந்த நிலத்திற்கும் சிறப்பாகப் பொருள்களை மூன்று பிரிவு-களாகப் பிரித்து அறிந்தனர். அவை முதற் பொருள், கருப்பொருள் உரிப்பொருள் என்பனவாம். நிலத்தினையும் பொழுதினையும் முதற் பொரு-ளில் அடக்கினர். வாழுகின்ற மனிதன் முதலிய எல்லாவற்றையும் கருப் பொருளில் அடக்கிக் கண்ட தமிழர் அந்நிலத்தில் வாழும் மக்கள் வழி படுகின்ற கடவுளையும் அதே பொருளில் சேர்த்துக் கண்டனர். எங்கும் வாழ்ந்த தமிழ் மக்கள், படைப்புக் காலந்தொட்டுப் பரவி வந்த பாவை குறமின் மணாளன் முருகனையும் சிறப்பாக ஒரு நிலத்திற்கே உரிமையாக்கி வணங்கினர். எனவே, **குறிஞ்சி நிலக் கடவுளாகக் குமரன்** போற்றப் பட்டான். இப்பழமைச் செய்தியையும் இவ் வாசிரியர் மறந்தார் அல்லர். முருகனை,

குறிஞ்சி நகராளா! (2722)

எனப் போற்றுவதைக் காண்க.

குமரன் தேவர் வேண்டச் சிவபெருமான் திருவருளினால் அவர்தம் ஆறுமுகங்களிலும் அமைந்த நெருப்புக் கண்களாகிய நெற்றிக் கண்களி லிருந்து நெருப்புப் பொறி உருவாகத் தோன்றினன் என்றும் அப் பொறிகள் உலகம் முழுவதும் பரவி நிற்க ஆற்றாத தேவர் மீண்டும் சிவனைக் குறையிரக்க அப்பெருமான் தந்த வன்மையால் அவற்றைக் கனற்கடவுளும் காற்றுக் கடவுளும் கையில் தாங்கிச் சரவணப் பொய்கையில் விடுத்தனர் என்றும் விடப்பட்ட ஆறுபொறிகளும் ஆறு அழகிய குழந்தைகளாகப் பொய்கையிலிருந்த செந்தாமரை மலர்களில் தவழ்ந்து விளையாடின என்றும் கந்தபுராணம் கூறும். **தாமரை மலர்களே வாழும் வீடாக அமைந்த அழகினை.**

மூவிருமலர் போல் ஆகிய மணிமேல்
மோகம துடனே வளர்தேவே! (2743)

என ஈடுபாடுற்றுப் பாடுகின்றார்.

முருகன் தோற்றத்திற்கிடமானவர் சிவபெருமான். எனவே முரு கனைச் சிவகுமரன் என்றழைக்கின்றோம். 'ஐந்து முகத்தோடு அதோ முகமாய்' நின்ற சிவபெருமான் தோற்றமே ஆறுமுக உருவினனாகிய முருகவேளின் உருவமும் ஆதலான் சிவபெருமானுக்கும் குமரக்கடவுளுக்கும் வேறுபாடு காணாது இருவரையும் ஒருவரே எனக்கொள்வர்.

**"சங்கரனே சண்முகன்"** என்னும் கருத்தினை நலமுற வற்புறுத்திப் பேசியவர் **ஞானியாரடிகள்** என்பதும் இங்கு நினைந்துகொள்ளுதற்குரியது. இந்நூலாசிரியர் இவ்வுண்மையைப் பலமுறையாகவும் தெளிவுறுத்திச் செல்வர்.

பிரபல ஈச! (2944)

அரவுபுனை வேணி அரனருள்செய் பால—எனையாளாய்.

பரவடியர் நாத! பரமசிவ! தோகை—மலைவேளே! (3224)

சந்த மேவிய குன்றை மாமலை
சங்கரா! அறு முகநாதா! (3811)

மன்னு சிவ வடிவே! (4168)

ஆதிய னாதிய சித்திர ஆறுமுக! (4249)

இருக்கு மறியாத எழிற்குமர! (4261)

ஆரண முடிவாகிய குகநாதா! (3000)

வேதம் அறிவுமயமாகியது. பேரறிவினனாகிய அறுமுகக் கடவுளை **வேதப் பொருள்** எனக் கூறுவதில் வியப்பொன்றுமில்லை. இந்நூலாசிரியர் வேதப் பொருளாம் முருகனை வேதமும் துதித்து வணங்கும் என்பர்.

அருபா! மறை துதி நாயக! (2655)
சதுமறைப் பொருள் நாதன் (2740)

ஆறு திருமுகங்களும் இரு திருவடிகளும் பன்னிரு கரங்களும் கருணை பொழி கண்கள் பன்னிரண்டும் கொண்டு கயிலைமலையில் முருகன் எழுந்தருளி யிருந்தனன் என்றும் அப்போது வீரவாகு முதலிய ஒன்பது வீரர்களும் குழந்தை வேலனை வணங்கி உடனிருந்தார்கள் என்றும் தேவரும் மற்றைக் கணத்தாரும் முருகனை வணங்கிச் செல்ல அங்கு வந்த பிரமன் வணங்காது சென்றனன் என்றும் சென்ற பிரமனை அழைத்து வருமாறு வீரவாகுவினை முருகன் ஏவினன் என்றும் கொண்டு வரப்பட்ட பிரமனை முருகன் பிரணவப் பொருளை வினவினன் என்றும் கூற அறியாது திகைத்த அன்னோனைக் குட்டிச் சிறையிலிட்டனன் என்றும் கூறும் **கந்தபுராண வரலாற்றினை** உளங்கொண்டு இவ்வாசிரியர் பாடுவார்.

அயனைச் சிறையினில் வைத்திடு அருமைத்துரை! (3063)
கஞ்ச னஞ்சிறை கன்றி அன்றிடு முருகோனே! (3301)
விதிக்கு முன்சிறை தானிடு நாயக! (3332)
பதுமா சனத்தின் வருதேவனுக்குப்
பழமா மறைச் சொல் முருகோனே! (4300)
செந்தாமரை மலர்வந்தோன் மகிழமுன்
தென்பாய் மறைபயில் கனிவாயா! (2724)
மலருறை வேதன் செவிதனில் வேதம்
மகிழ்வுட னேசொல் கனிவாயா! (2785)
சதுமறை அயனார் குருபர! (2630)
மருவுள மலரயனார் வழிபடு குருபரனே! (3495)
நான முற்ற கம லாசனக் கடவுள்
நாளும் அர்ச்சனைசெய் இருதாளா! (3708)

பிரமன் சிறைப்படவே படைப்புத்தொழில் நின்றது என்றும் தேவரும் பிறரும் சிவபெருமானிடம் சென்று பிரமன் விடுதலையை வேண்டினர் என்றும் சிவபெருமானின் விருப்பத்தின்படி பிரமனை முருகன் விடுதலை செய்தனன் என்றும் சிவபெருமான், முருகன் பிரமனை வினவிய வினவினை முருகனையே கேட்டனன் என்றும் அவ் வினவிற்கு விடை கூறுதல் தன்னால் இயலும் என வேலவன் கூறினன் என்றும் குருவாக இருந்து பரமசிவனுக்கு மறைப்பொருளைக் குகன் கூறினான் என்றும் கூறுவது **கந்தபுராணம்.** இந் நிகழ்ச்சியால் முருகப் பெருமானின் **முழுமுதற்றன்மை** உறுதிப் படுத்தப்படுகிறது. இக் கருத்தினை இக்கவிதை யாசிரியர் கீழ்க்காணுமாறு எடுத்துக்காட்டுவர்.

சதுர்வித இருக்கு தனைமிகு முதற்கு உபதேசா! (2684)

ஆதிபரம ருக்கு ஆனபொருளுரைத்த குருநாதா! (3820)

தந்தையின் ஒருசெவி யின்கனி வுடன்மறை
தங்கிட அருள்புரி—கனிவாயா! (4776)

திங்கள் தரித்த சடையார்
செங்கம லத்தர் முதலோர் பணிதேவே! (3499)

சூரபதுமன் செய்த கொடுமைக் காற்றாது தேவர் இறைவனை வேண்ட முருகன் தோன்றினன். கொடுமைக் கிடமாகிய அவ்வரக்கன் அழிவும் முருகன் தோற்றமும் காரிய காரணத் தொடர்புடையன. ஆகவே முருகன் புகழ் பாட வந்த ஆசிரியர் **சூரபதுமனின் வீழ்வினையும்** பெரும்பாலும் ஒவ்வொரு பாட்டிலும் அமைத்துச் செல்கின்றார். அவற்றுள் சில கீழ்வருவன.

தலையாகம தேபுரி சூருடல்
தனையே யிரு கூறிடு வேலவ! (2758)

பொரு சூருடல் இருகூறிடு
புகழ்வேல்கொடு செயவீரா! (2826)

அடமேபுரி அவுணோர்குல
அசுரோ னுடல்கிழிவேலா! (2860)

வஞ்சமிகு சூரனுவி
மண்டிவரு போரில்வீழ—அடுவேளே! (2861)

பொருதிடு சூரன்
புளபட வேமுன் அடுவோனே! (3442)

பொருதா சூருடல்
புளவ தாகிட எயும் வீரா! (3443)

நாச மாகிட வேயெதி ரேவரு
நாலு சேனையு மேவிழ மாவுடல்-அடுவேலா! (3444)

மோதமார் சூழு'மாவை
மூரிமிகு வேலை ஏவி அடுசூரா! (3457)

விருதுகட்டி வருஅவுணர் கெட்டழிய.......
.........பிரபல! குமர! (3566)

அசுரோன்மேல்,
குந்த மேவியொரு ரெண்டு கூறுபட
கொன்ற சூர! (4143)

ஏழாம் நூற்றாண்டில் சோழவள நாட்டில் சீர்காழிப் பதியில் கௌணியர் குலத்தில் பிறந்த திருஞான சம்பந்தப் பெருமான் சமண பௌத்தமதங்களிடையே சிக்கிச் சீரழிந்திருந்த சைவத்தை மீளவும் தழைத்தோங்குமாறு வளர்த்தார். அமணர் அவருடன் வாதிட்டுத் தோற்றுக் கழுவேறி மடிந்தனர். திருஞான சம்பந்தரைப் பிள்ளையார் என்பதும் வழக்கு. அவரைத் திருமுருகனின் அவதாரம் எனக் கொள்வாரும் உளர். அம்முறையில் இந்நூலாசிரியரும் **முருகனைச் சம்பந்தரெனக் கொண்டு** திருஞான சம்பந்தர் செய்தனவாகக் கூறப்படும் **சமணரை அழித்தல்; பௌத்தரை ஒடுக்குதல்** ஆகிய நிகழ்ச்சிகளை முருகன்மேல் ஏற்றிப் பேசுகிறார்.

வாதமணேர்கெட வேகழு வேறிட
வாழ்வுள காழியில் வருதேவே—(3833)

சமணக் கொடியரை அழியக் கழுதனில்
தனிவைத் திடுகவு—ணியர்கோவே! (4404)

புத்தரை யேவெலு முருகோனே! (3662)

புத்தரை வெற்றிகொள்.........முருகேச! (4524)

தன்னை வழிபடும் **அடியார்க்கு வேண்டுவன எல்லாம் தந்து போற்றிக் கொள்ளும் முருகன் பெருமையினை**

அடியவருட மனத்தில்
அனுதின மிருக்கும் குமரேச! (3188)

எங்கள் நாயக! (3112)

பரவடியவர் நாத! (3224)

எனப் பாடுவார் இந்நூலாசிரியர்.

முருகன் திருமால் மகளிராகிய இருவரையும் மணந்தனன், ஆதலின் **திருமால் மருகன்** ஆவன்; இதனை உட்கொண்டு

சீதை தன் மருகா! (4107)

எனப்பாடுவார்.

அருணகிரிநாதர் அடியாரைக் காப்பாற்றுவதில் சேவகன்போல் முன் நிற்பவன் முருகன் என்பதனை வலியுறுத்த 'சேவகன் வகுப்பு'ப் பாடினர். இவ்வாசிரியரும் முருகனைச் **சேவகன்** எனப் போற்றுவர்.

சேவக! நாவல! (3501)

சேவகத்திலுயர் பெருமானே! (3536)

தமிழ் நாட்டுப் பழங்கடவுள் முருகன். எனவே தமிழர் தம் பழைய திருமண முறையாகிய ஐந்திணை ஒழுக்கத்தின்வழி வள்ளியம்மையை முருகன் மணந்தனன் என்று பரிபாடல் கூறும். தண்டமிழ்ப் பொருளாகிய இப் பொருள் துணிவினை அறிந்தவர்களே முருகப் பெருமான் எழுந்தருளியுள்ள திருப்பரங்குன்றமாகிய மலையினை அறிதல் இயலும் என அந்நூல் தெளிவு படுத்தும். வள்ளியம்மையை மணந்த வரலாற்றினைக் கந்தபுராணம் சுவை படக் கூறும். அத்திருமண நடைமுறைக்கு முன் **வேலன் வள்ளி யம்மைக்காக வேங்கை மரமாக நின்றான்** என்றதொரு நிகழ்ச்சி கூறப் படுகிறது. இந் நிகழ்ச்சியை இவ்வாசிரியரும் எடுத்தாள்கின்றார். குறவர் வாழும் குடியில் குறப்பெண் மயலால் மரமாக நின்ற கபடாளன் என முருகனைப் பாடுகின்றார். இதோ அவ்வரிகள் :

அனநடை நடக்கும் கிளிமொழி பயிற்றும்
அழகிய குறப்பெண்—மயலாலே
வனமதி ருக்கும் குரவர்கள் குடிக்குள்
மரமென முளைத்த—கபடாளா ! (4549)

ஆதியில் தமிழ் நூலினை அகத்தியர்க் குணர்த்தியவன் மாதொரு பாகன் என்பர். இருமாது தழுவிய பெருமான் முருகன் அந்தக் குறுமுனிக்கும் தமிழ் தந்தவன் என்பதும் வரலாறு. குழந்தைக் கவிராயர் பின் கூறப்பட்ட கருத்தினை முழுவதும் மேற்கொண்டுள்ளார் என்பது பின்வரும் மேற்கோள் களால் விளக்கமுறும்.

துறவி யாகிய குறுமகாமுனி
தொழுது பூசனை—புரிநாதா ! (3715)
பைந்தமிழ் புகலுங் கனமிகு
பண்புயர் குறுமுனிநாதன்—குருநாதா ! (4671)
தவனற்குறு முனிவர்க்கருள்
தகுமெய்க்குரு பரவேளே ! (4762)

குறுமுனிக் கருள் புரிந்த குமரன், என்றும் குன்றாத எழிலுடன் விளங் கும் செந்தமிழ் மொழிக்கும் உரியவன். 'புலவர் ஏறே' எனத் தாம் பாடிய திருமுருகாற்றுப் படையில நக்கீரர் முருகனை விளித்தார். தமிழ்ப் புலவ னாகவும் தமிழ் நாவலனாகவும் தமிழ்மொழியின் தலைவனாகவும் தமிழர் வணங் கும் தனி முதற் கடவுளாகவும் முருகன் பெருமையை இவ்வாசிரியரும் பலவாறாகப் போற்றிக் கொள்ளும் நெறி கீழே தரப்பட்டுள்ளது.

**முருகன் தமிழ் நாவலன் :**

மதுரித்த தமிழ் நாவலா ! (2740)
சந்த நாவல ! (3545) 3580) (3109)

பாடிய தமிழ் நாவல! (4126)

செஞ்சொல் தமிழ் பாடிய நாவல! (3421)

படித்த நாவல! (3491)

சேவக! நாவல! (3501)

செந்தமிழின் நாவலா! (3813)

பைந்தமிழின் நாவலா! (3900)

**முருகன் தமிழ்ப் பாவலன் :**

பாடிய தமிழ்வாயின் பாவல! (2898)

பாவல! (3000)

பாடிய தமிழா! பாவலர்! (3030)

சகத்தோர பணி தமிழ்ப் பாவல! (3121)

படித்த பாவலவ! (3544).

பாடியாடி தேவர் சூழும் பாவலா! (4306)

**முருகன் தமிழ்ப் புலவன் :**

பாடிய புலவா! (3133), (3240), (3269), (3474), (3520), (3709) (3903) (4074]

தமிழ்ப் புலவா! (3453)

முத்தமிழ் சொல் புலவா! (3985)

சங்கமிசைவரு துங்க மிகு கவி தங்கு புலவ! (4232)

**முருகன் தமிழ் கனிந்த வாயினன் :**

மதுரித்த தமிழ்ச்சொல் கனிவாயா! (2650)

பாடிப தமிழ் வாயா! (3192), (2833), (4707)

கனிந்த தமிழ் வாயா! (3330)

பாடிய கனி வாயா! (3503), (3586), (3793), (3940)

தண்தமிழ் சொல் வாயா! (3563)

வடிக்கு மதுவான தமிழ்ச்சொல் கனிவாயா! (3705)

கனிந்த தமிழ் வாயனே! (3878)

தண்தமிழ் மிகுந்த வாயா! (4108)

படித்த கனிவாய! (4110)

செந்தமிழ் கொண்ட வாய! (4182)

செந்தமிழைப் புகல் திங்கள் முகக்குக! (4199)

செந்தமிழ் சொல்வாய! (4267)

செந்தமிழ் பகரிடு செங்கனி இலகிய அருள்வாய். (4774)

**தமிழ்த்தலைவன் முருகன்:**

பாடிய தமிழ் நாயகா! (2757)

படிக்கு முயர்வான தமிழ்க்கு முதலே! (3423)

தமிழ்ச் சொல் அற்புத நாயகனே! (3714)

பாடிய தமிழ் முதல்வா! (3815)

வண்டமிழ்ச் சொலும் நாயகா! (4126)

பாடிய தமிழ் நாதா! (3776)

சீரும் சிறப்பும் செறிந்த பழந்தமிழ் நாட்டில் அமைந்த முச்சங்கங்களுள் முதலாவதாம் தலைச் சங்கத்தில் இறைனுர் முதலியோர் இருந்து செந்தமிழை ஆய்ந்து அதன் பெரும்பயனைத் துய்த்தனர் என்பது களவியலுரை கூறும் வரலாறு. அச்சங்கத்திருந்த **உருத்திர சன்மன்** முருகனின் அவதாரம் எனக் கொள்வர். அப்பெரு மகனே களவியலுக்கு உரை கண்டனன் என்பர். இவ்வாசிரியர் அக்கருத்துக்களுக்கு உடன்பாடுடையவர் என்பதே அன்றித் தமிழ்ச் சங்கத்தினைக் கண்ட பெருமையினையும் முருகனுக்குரிமையாக்குகின்றார். இக்கருத்துக்களுக்கு அரண் செய்யும் பின்வரும் மேற்கோள்கள்.

சங்கத் தமிழ்ப் புலமை கொண்டற் புகச்சொன்னய
சங்கத்தினுற்ற குரு பர வேளே! (4230)

சங்க மிசைவரு துங்கமிகு கவி தங்கு புலவ! (4232)

சந்த மிகுத்திடு செந்தமிழைப் பகர்
சங்கமதில் புல மையுளோனே! (4275)

சந்த மிகுத்திடு பைந்தமி ழுக்குயர்
சங்க மிருத்திய புலவோனே! (4305)

சங்கத் தமிழ்ப் புலவா! (4345)

சங்கத் தமிழ்ப் புலவர்
தங்கட் கிசைத்தமிழ் புகல்வாயா! (4401)

சங்கப் புலவர்கள் தங்கட் கிசைபொருள்
தந்தற் புதமொடு பகர்வாயா! (4513)

தேறு தமிழ்ப் புலவோர்கள் மனக்கனி
சேரு முதற்பொருள் பகர்வாயா! (4688)

பொருளுறை தமிழ்க்குப்
பொருட்சொலு கனிவாயா! (4701)

## தோகைமலை

இம்முகவுரையின் தொடக்கத்தில் குன்றக்குடி என்பது பாண்டி நாட்டில் திருப்பத்தூருக்கருகில் உள்ளதென்றும் அங்கு முருகன் எழுந்தருளும் வாகனமாகிய மயில் மலைவடிவமாக இருப்பதாகப் புராணம் கூறுகின்றதென்றும் மயில்மலை, தோகைமலை, சிகிமலை, சிகிமேர் முதலிய பெயர்களால் இந்நூலாசிரியர் இதனை அழைக்கின்றார் என்றும் குறிக்கப்பட்டது.

இம்மயின்மலை தமிழ் நாட்டின் தென் பகுதியில் உள்ளது. வடபகுதியில், தென்னார்க்காடு மாவட்டத்தில் 'மைலம்' என்னும் மயில்மலை விளங்கி வருகிறது. ஆண்டும் முருகப் பெருமான் எழுந்தருளியிருந்து அன்பர்க்கருள்புரிகின்றார். நூலாசிரியர் இந்த வடக்கிலுள்ள தோகைமலையாகிய 'மைலத்'தினின்றும் வேறுபிரித்துக் காட்டுவதற்காக

"செஞ்சாலி வயற்பொழி லேமிகு
**தென்தோகைமலை**" (4420)

என்று விளக்கிச் சொல்கின்றார். இத்தொகுதியில் அமைந்த பாடல்கள் எல்லாவற்றிலும் 'தோகைமலை' எனும் தொடர் பெரும்பாலும் பாடல் இறுதியில் இடம் பெறுகின்றது. சிற்சில பாடல்களில் முதல்வரியிலோ அல்லது இரண்டாவது வரியிலோ அல்லது மூன்றாவது வரியிலோ இத்தொடர் இடம்பெறுகின்றது. இங்குத் தோகைமலை பற்றிக் கிடைப்பன யாவற்றையும் தொகுத்து விளக்குவதாயின் மிக நீண்டுவிடும் இவ்வுரையாதலின் சில கருத்துக்களை மட்டும் கீழே தருகிறேன்.

தோகைமலையைச் சுற்றிலும் சீரிய **சோலைகள்** சூழ்ந்திருக்கின்றன. அச் சோலைகளைப் பலபடியாகவும் ஆசிரியர் விளக்குகின்றார். அவற்றுள் சில:

தேனலர் பொழில் சூழ் சீர்சேர் சிகிமலை (2636)

கனி உதிர் பொழில் நிறை..........சிகி (2638)

கருமுகில் சூழும் உயர்பொழில் மேவும்
கனசிகி மேரில் வருவேளே! (2664)

கடிகொள் பூமலி பொழில்கள் சூழ்தரு கனசிகாமலை (2723)

வீசலருகுக்கு சோலை மேவிய சிகிப்பொன் மேர் (2744)

அரித்திரள் பாடும் மலர்ப்பொழில் சூழும்
அருட்பொலி தோகைமலை (2788)

தடமிகு பொழில் உகுகனமது
தனில் நிறைசெனல் விளைநேமா! (2874)

மடையில் வருகுவ வண்டுண் தெண்மலர்
மதுவழியுவயல் வளநேமா! (3455)

மடல்முறுக்கவிழ் பொழில் நிறைத்திடு மயின்மலை (3473)

பணைத்த தோகைமலை அருளாளா!
நலத்த தோகைமலை வருதேவே! (3491)

வெடித்த பூமி வெளியே கடிப் பலாச மதுவால்
விளைத்த நேம வளநாடு (4001)

தூரி லெழுப லாச மூறுமது
தோய வேவிளையும் வயல்நேமா! (4003)

கொண்ட மதுநிறை குன்றைமலை (4078)

போதைக்கி ழித்தொழுகு தேனுற்ற பூம்பொழிலே
பூணூற் றுயர்ந்த சிகி (4739)

மேலே காணும் சான்றுகளில் தோகைமலை தோன்றி விளங்கும் நிலப் பகுதி **நேம நாடு** எனவும் வழங்கப்படுவது அறியப்படுகின்றது.

மயில்மலையின் சிறப்பைக் கூறும் நெறியால் **சந்திரன் தவழும் சோலை** சூழ்ந்தது அம்மலை என்பர்.

விது தவழ் பொழில் சூழ் சிகிமலை (2630)

அந்திமதி தாவுகின்ற பொழில் சூழும்
அந்தமிகு தோகைமலை (2706)

சிகிமலையினைச் சேர்ந்து சூழ்ந்த சோலைகளில் சந்தனமரம் நாவல்மரம் வாழைமரம் முதலிய **மரங்கள்** செழித்தோங்கியிருக்கின்றன என்பர்.

சந்த னாவல்சூழ் தண்சிகாமலை (2626)

பைங்குலையின் வாழை நீடு
பண்பு செறி நேம நாடு (2779)
.........

மலைச்சோலைகளில் திருவிளையாடல்புரியும் **மந்திகளின் இயல்புகளை** அவற்றின் தன்மை விளங்க ஆசிரியர் எடுத்துக் காட்டுகின்றார். அவற்றுள் சில.

மந்தியொர்யி லாயாடு தண்டலைகள் மேனீடு
மங்குல்தவழ் சீர்தோகைமலை (2722)

மந்திதவு நற்பொழில்கள்
மண்டு சிகரச் சிகி (3960)

மந்தி குதிபோட உதிர்ந்த கனியுளே
மண்டு ரசமேறிட விளேநேமா! (4035)

மண்டு பொழிலினின் மந்தி குதியிடு விசையாலே
கொண்ட மதுநிறை குன்றைமலே (4078)

மலேயைச் சுற்றி அழகுற்ற **ஆறு** ஓடுவதை

நதிசூழ் சிகிமலே (2913)

நதிமிகு குன்றை (3162)

நதியால் விளே வயலேநிறை
நலநேமநன் நகர் (3460)

எனக் குறிப்பிடுகின்ருர்.

இம் மலேயில் உயரிய **ஒளிக்கற்கள்** பல ஒளி வீசி விளங்குவதை

குருமணி இலகிய சிகிமலே (2767)

வான்மணி அமை தோகையின் மலே (2873)

என விளக்குகின்ருர்.

நேமவள நகரைச் சுற்றியுமுள்ள **வயல் வளத்தினே**

கயல்குதித்த விசையடித்துக்
கமுத்திறக்கும் வயல்படைத்த வளநேமா' (1677)

எனவும்

நேமநகர் **மாளிகை வீதிகள்** முதலியன பெற்று விளங்கும் சிறப்பினே

மாழிகைத்தெழு வீதிசேர்
மாசிகிக்கிரி (2678)

சலதிவளே நேம வளரு நகர் சூழும்
தகு சிகி (2771)

மாட மாளிகையர் சூழும் நேம நகர் (2794)

கூட கோபுர விலாச வீதிநிரை
கூடு தோகைமலே (2794)

மாடமதில் சூழவரு மாவுலவு நேமவள
நகர் (3599)

எனவும்

மலைகள் பலவற்றுள்ளும் கலைநலத்தனாகிய கந்தக்கடவுள் எழுந்தருளும் இம்மலை **உயர்ந்தது** என்பதனை

மலையில் உயர் தோகை மாமலை (2721)

எனவும்

இம் மலையினையும் **அடியரும் அன்பரும் போற்றி** வணங்குகின்றனர் என்பதனை

வட்டவடி வேழலகு மிக்கபணி யேபுரியும்
மைப்படி சிகாமலை (2729)

அரகரென் றமு னடியார் கும்பிடு
அழகு தங்கிய சிகி (4012)

எனவும்

தெற்கே இருக்கும் இம்மலை வடக்கில் உள்ள மேருமலை, கயிலைமலை ஆகியவற்றினை **ஒத்துயர்ந்த சிறப்பினது** என்பதனை

கனக கிரியை நிகர் முடியில கியதொரு
கமழ் சிகி (2642)

துதியே மிகு கனகா சலமே நிகர் முடிசேர்
சுபமாகிய சிகிமாமலை (2661)

கனக கிரி மீறு கயிலை மலை நேரு
சிகி (2872)

வடதிசை மேரை நேரு
வளர் சிகிமேர் (3809)

எனவும் இவ்வாசிரியர் கூறுகின்றார்.

## சிவ பெருமான்.

சிவகுமாரன் முருகன். எனவே முருகனைப் பாராட்டும் ஆசிரியர் சிவ பெருமானையும் பார்வதி தேவியாரையும் மிகச் சிறப்பாகப் பாராட்டிச் செல்கிறார்.

சிவபெருமான் **மதி சூடிய இறைவனார்** என்னும் கருத்தினை

மதி சூடு வேணி பரமேசர் (2623)

மதி யணி சடா தரர் (2637)

மதி சூடிய சடையார் நடமாடிய அரனார் (2661)

மதியை யணிந்த சடையார் (2670)

வால மதி யணி வேணியர்
வாச மிலகிய தாதகி புனைவோர் (2694)

விது தரித்திடு வேணியார் (2740)

மதி தாதகி புனை வேணியர் (2746)

கலை மாமதி தாதகி சூடிய
கருணாநிதி யாகிய நாயகர் (2758)

சீத மதி புனை வேணியர்
மானை யணி யொரு பாணியர்
சீர் கொள் நிதி மலை காணியர் (2761)

கூனப் பிறை யணி வேணியர் (2814)

மதியை யணி வேணி (2862)

சீத மதி புனைவோர் தேவர் (2863)

வால மதி சூடிய வாதி னடமாடிய நடராசர் (2869)

மதி புரி சடையார் (2917)

பா னல நிறைந்த பாரனை இலங்கு மதியே சேர்
தேனலர் அணிந்த சீர் சடையர். (3003)

மதி தரித்திடும் சடை முடிதவர்
மலை விழைந்தவர் (3469)

சீத மாமதி தேவனார் (3631)

கலை மதி தரித்த பரமர் (3844)

சோமன் அணி சடையார் (3860)

அந்த மதி யணி செஞ் சடையி னரன் [3868]

திங்களணி சடையார் (4197)

என இவ்வாறு விளக்கிச் செல்வர்.

சிவபெருமான் தேவரைக் கொல்ல வந்த நஞ்சினைக் குடித்து **நீலகண்டராய்** அன்பர்க்கு அருள்புரிந்த வரலாற்றினை

கறை யுலவு கண்டனார் (2672)

நஞ்சணி மிடறுர் (2676)

நஞ்ச மிலகு மிடற்றினார் (2691)

ஆலந் திகழ் தார் புனை கண்டனார் (2741)

கறை கெழு மிடற்றினர் (2978)

கங்குல் மிகு மிடறுர் (3033)

கறைக் கண்டர் (3314)

கடுக் கொள் மிடறுன ஈசர் (3881)

கண்ட மேவ நஞ்சுண்ட நாயகர் (3915)

என மேற் காட்டிய சான்றுகளின் வழிக் காணலாம்.

நாகம் அஞ்சுதற்குரிய பொருள். அதன் நஞ்சினைக் குடித்தவன கால கண்டன். ஆகவே நாகத்தினையும் தன் ஆகத்தில் அணிந்து உலகினுள்ள பொருள்கள் யாவும் தன் வழி இயங்கும் அன்றித் தான் எப்பொருள் வழியும் இயங்குவதில்லை என்ற உண்மையை அறிவுறுத்துகின்றுன் என்பதைப் பின் வரும் வரிகள் எடுத்துக் காட்டும்.

சீறு படு நாகம் தேன் கொள் மலர் வேணி (2775)

படவ ராவணி வேணி நாயகர் (2800)

நஞ்சர வணி வேணியர் (2806)

படரா வணி சடை நாயகர் பரமேசுரன் (2860)

நஞ்சரவு சூடு வேணி நம்பர் (2861)

பட அரவு சூடு புரமர் (2909)

பட அரவு ஏறு பவள மென் வேணி (2915)

படம் புரை நாகம் பணிந்திடு நாதர் (3236)

அர வணிந்திடும் அரன் (3234)

சின வரா வ்ணி சிவ சடாதரன் (3465)

கடிக்கும் அர வேறு சடைப் பரமர் (3917)

அரவு தரித்தவர் பரமர் (4161)

பொன்னம்பலம், வெள்ளியம்பலம் முதலிய மன்றங்களின் நடித்தும் இடையறுது உயிர்களிடையே கலந்திருந்து நடித்தும் அணுத்தொறும் அணிவினுள் அணுவாய் இருந்து அசைந்தும் நிற்கும் சிவபெருமானின் தன்மையைக் கீழ்க்காணுமாறு ஆசிரியர் உரைக்கின்றுர்.

தாதகி புனை வேணியர் தாவி நடி சபேசுரர் (2719]

கனக சபைமீது நடனமிடு பாதர்
கருணை மிகு நாதர் (2859)

ஆடிய பாதர் தேவியர் லோலர் (2880)

சபை நடன ராசர் (3043)

பாத நடனமாடிய
பதமென் மலரின் நாயகர் (4147)

சிற்சபை நடமிடு நாதர் (4258)

கனகசபை புகல் நடஞ்செய் கருணையுள பரமர் (4259)

நாடகம் நடத்து தாளினர் (4571)

சிவபெருமானின் ஒப்பற்ற உயர்ந்த தன்மையையும் யாவரும் ஏத்தும் சிறப்பினையும் யாவருக்கும் நலஞ்செய்யும் இயல்பினையும் எல்லாவற்றையும் அடக்கியாளும் தனித் தன்மையையும் சடை முடிப் பெருமையையும், பிற **இயல்புகளையும்** கீழ்க் குறித்தவாறு விளக்குவர் இந் நூலாசிரியர்.

வானவர் தொழும் அரனுர் (2652)
சங்கரர் (2674, 3422)
பரமர் (2800)
சங்கர சருவேசுவரர் (2806)
சித்து விளையாடிய அரனுர் (2904)
சலத்தை யணி வேணி (3077)
கொன்றை சூடிய செஞ்சடாதரர் (3170)
ஆதி பரமேசர் (3184)
கரந்தை கொள் வேணியார் (3606)
தேவர் சிவநாதர் (3647)
பெருமான் (3861)
சங்கர சம்பு (3872)
இண்டை யணிந்திடு எம் பரமன் (3930)
பகிரதி முடித்த திரிபுர தகனர் பரமர் (3954)
நதி சூழ்தரு சடை நாயகர் (3983)
முத்தர் (3985)
காபாலி (4223)

உமைக்குத் தன் உடலில் ஒரு **பாதியைத் தந்த சிவபெருமானின்** சிறப்பினைக் கீழே காண்க.

மாதுமை பாகனுர் (2689)
தேவியர் லோலர் (2880)

உமையவள் துணைபெறு கைலையின்
அரசுயர் இறை (2928)

நம்பர் உமை வாலை தேவி நண்புபர் (3210)

மாதுமை பாகனுர் (3787)

தன் அருட்கண் பார்வையினுல் அடியாரைப் பற்றிப் பழி வாங்கும் பற்றென்னும் **பாசத்தை அடியோடு அழிப்பவன்** அரன் என்பதனை

பாச நோய்கள் தீரப்
பார்வை பார்ப்போன் (2727)

எனவும்

**பரசு** என்னும் ஆயுதத்தினையும் **மானினையும் வெண் தலையினையும் கையில் ஏந்தியவர்** என்பதனை

பரசு தன் கரமதின் அணிந்திடு பரமன் (2752)

மானைத் தரி கரனுர் (3557)

வெண் தலை மேவிய செங்கையின்
நாயகர் (2839)

எனவும்

திரிபுரத்தில் வாழ்ந்த அரக்கர் மூவரும் சிவனை மதியாதவராய்ச் சிவனடியார்க்கு இன்னல் பல விளைத்தபோது அவர்களை அவர்தம் **முப்புரங்களுடன் சிரித்து எரித்த வரலாற்றினை**

செரு விளைத் திரிபுரம் எரித்தவர் (3035)

புரத்தை எரித்த
புகழ்ச்சி படைத்த அரனுர் (3953)

புரமது எரிக்க நகையினை
விளைத்த புனிதர் (4516)

எனவும்

சிவனுர் அணிந்துள்ள **உடை,** முதலியவற்றை

கடவரை யுரித்த உடையினர் தரித்த
கமழிதழி யுற்ற சடையார் (4165)

தங்கச் சடை யுயர் சங்கக் குழையுள
செம்பொற் சடையவர் (4215)

உரித்திடும் அதள் புனை உருத்திரர் (4596)

எனவும்,

மதுரை மாநகரத்தில் சிவபெருமான் செய்த திருவிளையாடல்களுள் மாணிக்க வாசகருக்காக நரியைக் குதிரை ஆக்கிய **திருவிளையாடலினை**

நரித் திரள் மாவென வரவே தான்
நடத்திய நாயகர் (4723)

எனவும்,

சனகர் முதலிய முனிவர் நால்வரும் சுற்றும் அமைதி பெறுதவராகிச் சிவபெருமானை நெருங்க அவர் அவர்களுக்கு வாயால் ஏதும் கூறாது வட வால மரத்தடியில் அமைதி மூலமாகவும் கைச் சின்னங்கள் மூலமாகவும் **ஞானம் பெறுமாறு அருளிய வரலாற்றினை**

சனகாதிபர் பால் உபதேசிகனுர் (4475)

எனவும்,

**பதஞ்சலி வியாக்கிரர்** எனும் இருவோரும் தில்லைத் தலத்தில் இறை வனைப் பூசித்து அவன் திருநடனம் கண்டு பிறவிப் பிணி போக்கிய நிகழ்ச்சி யினை

பதஞ்சலி வியாக்கிரர்
பதந் தொழு சிலாக்கியர் (4076)

வரிப் புலி தேடு பதப்பா மேசர் (4338)

கனக மன்றினில் இருவர் கண்டிட
களி நடம் புரி பெருமானுர் (4392)

எனவும்,

வெண்ணிற விடையின் மேல் எழுந்தருளிக் **காட்சி தரும் செந்நிறச் சிவபெருமானை**

விடை யெடுக்கவரு பவளம் உற்ற உடல்
விமலர் (3380)

எனவும் கவிராயர் புகழ்வர்.

## பார்வதியம்மையார்

சிவபெருமானின் ஒரு பாதியில் அமர்ந்து முருகப் பெருமானைத் தன் இருங் கரங்கொண்டு அணைத்து அருமை மகனுக அப்பெருமானை வளர்க்கும் அம்பிகையை ஆசிரியர் பல படப் புனைந்து செல்வதை இனிக் காண்போம்.

**அம்பிகையின் திருநாமங்கள் :**

கௌரி (2621)
பார்வதி (2639)
உமையவள் (2773) (2925) (3399)
வரைமான் (2849)
நாரணி (2889)
வாலை, புவனை, திரிபுரை, கௌரி (2906)
உமையார் (2937)
ஆதி பரமேசுரி (3062), (3165)
வாலை, கௌமாரி (3165)
சங்கரி, யாமளை, கொங்கவிழ் கேசமின் (3687)
வித்தகி (4009)
யாமளை, உமை மானுள் (3796)
சங்கரி (4197)
அந்தரி, கௌமாரி, சங்கரி, குமாரி,
அம்பிகை, வராகி (4267)

**உறுப்பு நலம் :**

சூது மிகுத்த தான
தூய தனப் பெண் மாது உமை (2685)
திலக வாள் நுதல் உமை மினுள் (2781)
தோடுலவு காதின் தோகை அபிராமி (2910)
கொடியின் இடையான குமரி (2963)
கோவை யாகிய வாயி னுளுமை (2986)
குவிமாமுலை உமையாள் 3400)
குடநிகர் முலையாள் குமரி (3435)
கயலே நிகர் விழிமாதுமை கௌரி (3464)
தோகைச் சிகி உமையாள் (3558)

**நடை நலம்**

அன நடையின் மாது தேவி
அரிய கௌமாரியாள் (2659)
அன நடம் பயில் அழகு சுந்தரி (2669)

அன நடையின் மாது
அழகு திகழ் தேவி (2680)

அன நடம் பயில் அழகு சுந்தரி (3159)

**மொழி நலம் :**

பாலை நிகர் மொழியார்
பாவை உமை (2686)

பானல மிகுந்த தேன் மொழி பகர்ந்த
பார்வதி (2732)

கரும்பு போல மொழி சிறந்த தேவி உமை (2918)

குயிலாகிய மொழியாள் (3400)

**மகளிருள் உயர்ந்த தன்மை :**

மாதர சான தேவி (2804)

மாதரசி உமையாள் (2970)

**திருமாலின் சோதரி :**

சீதர ருடை சோதரி (2969)

**சிவன் ஒரு பாதியில் அமர்ந்த அன்னை :**

அரனுருட ஒரு பாதி கொள் அனை மாதுமை (3072)

அந்தி மதிசூடும் அம்பிகை மின்மாது (3185)

நீறு புனை நாத னுர்தன்
நீவி யபிராமியாள் (3697)

பாதி மதி தரித்த பாவை உமை (3820)

**ஒளி மயமாகிய உயர்வு :**

சோதி உமை (2802)

**உலகைக் காக்கும் உயர்ந்தவள் :**

அகிலம் முழுவதும் அருளும் உமையவள் (2714)

## விநாயகர்

முருகனுக்கு முன் பிறந்த இவர் மூத்த பிள்ளையார் என்று போற்றப் படுபவர். யானை முகமும், மதம் ஒழுகும் கன்னமும், நீண்ட மருப்பும்,

அழகிய சிறு கண்களும், அசையும் செவிகளும், வடக் கயிற்றினையும் பானை வயிற்றினையும் பெற்ற இப் பெருமானைப் புலவர் கீழ்க் கண்டவாறு பாராட்டு கின்றார்.

**விநாயகர் :**

கடமதத்திடு இருமருப்புயர் களிறு (2641)

பிறை நிகர்த்திடு இருமருப்புள
பிளிறு மதக்களிறு (2649)

கவள மதமீறு சிறுகண் வளர்கோடு களிறு (2747)

கடமத மொழுகிய அசையிரு செவியுள கரிமுகர் (2773)

கடம்பொழியானை (2810)

மதகரியாகிய வதனர் (2832)

மதஅருவி ஒழுகியசை, ஒருகை கொளும் மலையுருவின்
மகிழ்வரு துணைவன் (2842)

கடமாமுகர் (2860), (3216)

மதங்கொளு கயமா (2877)

கடகரி (2881), 3181), (3529)

ஆனைமுகர் (2919)

மதசல மொழுகிய மணியொலி நிறைகரி (2926)

கரிமுகவோர் (3118)

கடமதக் கனகளிறு (3128)

தந்திமுக நாயகர். (3135)

கடமிலகு களிறூர் (3189)

கடகரி நாதர் (3235)

அத்திமுக நாயகர் (3287)

கடமத வாரணனூர் (3310)

வடம்புரி ஆனை (3509)

தந்தி முகத்தினர் (3554)

பானை வயிற்றினர் ஆனைமுகத்தினர்
பாதி மருப்பினர் (3713)

கடக்கரி முகத்தர் வயிறது பெருத்த
தடையொரு மருப்பர் (3719)

கடகரி முகத்த ஓரெயிறு படைத்த
கனமிகை கரத்தர் (3755)

தந்தி யணிமுகர் தொந்தி வயிறினர் (3919)

கடகரி முகத்தர் (3920)

கடகரியின் முகனுர் (3924)

கடம்புரி யானையார் (3933)

தந்தி முகத்தினர் தொந்தி வயிற்றினர் (3949)

## திருமால்

திருமால் பெற்றெடுத்த செல்வியர் இருவர்; அவர்கள் முருகனை மணக்க விரும்பிச் சரவணப் பொய்கைக் கரையில் தவமிருந்தனர். அவர்கள் ஒற்றுமையைக் கண்டு மகிழ்ந்த கண்ணுதலோன் திருமகன் அவர்கள் முன் தோன்றி யருளி அவர்கள் எண்ணம் அறிந்து அவர்களுள் ஒருத்தியை வானுலகத்தில் இந்திரனிடத்தில் வளருமாறும் மற்றவளை மண்ணுலகத்தில் வளருமாறும் கட்டளை இட்டனன். முன்னவள் தேவசேனை. பின்னவள் வள்ளியம்மை. சூரபதுமனை வென்றவுடன் முருகன் தேவசேனையை மணந்தனன்; அடுத்து வள்ளியைத் திருமணம் புரிந்து கொண்டனன். இவ்விருவரும் திருமாலின் மக்களாகவே திருமால் முருகனுக்கு மாமன் ஆவன். ஆதலின் அருணகிரியார் வள்ளியைக் களவில் மணந்த முருகனைச் 'செம்மால் மகளைத் திருடும் திருடன், பெம்மான் முருகன் பிறவான் இறவான்' என்றனர். கூறிவந்த இவ்வரலாறு கந்தபுராணத்தில் காணப்படுவது. மாமனாகிய திருமாலை இந்நூலாசிரியர் சிவபெருமான், உமையம்மை, விநாயகர் ஆகியோரைப் புகழ்ந்தது போலவே கீழ்வருமாறு சிறப்பித்திருக்கின்றார்.

**பெரும் பெயர்த் திருமால்:**

நாரணர் (3133)

அச்சுதன் (3911)

திருமால் (4046)

பருந்தினில் ஏறு நாதர் (2936)

சீதரன் எனும் மால் (2968)

**சங்கேந்திய திருக்கரத்தினர்:**

நந்தணி கர மாயவன் (3132)

சங்க பாணி (3212)

நந்த மேயணி செங்கை மாயவன் (3887)

சங்கை எடுத்த விறலார் (3989)

**பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங் கொண்டல்:**

பைந்துளே அலங்கல் புனேவோர்
பைந்தமிழை என்று முகந்தோர்
பங்கச மின் மங்கை விறலார் (4312)

**துளவணிந்த தூயோன்:**

நறுந்துளப மாயனுர் (3878)

கமழ்துளே மார்பன் (2765)

விரைத்துளே சூடிய செயப்படு மாதவன் (2793)

**யானை காத்த அரியன்:**

ஆனே யழைக்கு முனேவரு அச்சுதனுர் (3806)

கடக்களிறு கூவவேயக்
கணத்தில் வரு மாயனுர் (3810)

**சிவனை மயக்கிய செம்மல்:**

கங்கை தரித்த சடையார்
கண்டு மயக்கு விறலார் (3531)

**கருணைக் கடலாயோன்:**

கருணேயுள துளவர் (3346)

**கருநிறக் கடவுள்:**

கரிய நிறமான கடவுள் (3298)

கருப்பு நிற மாயன் (3368)

கருமேகமென் நிறமால் (2799)

**பாற்கடல் துயின்ற பரமர்:**

ஆழியிற் றுயில் மாயனுர் (2768)

அலேயாழியிலே துயில் மால் (2758)

கடல் துயில் மாயன் (2765)

திரைமீதர வணேயார் துயில் செயுமால் (2849)

**திருமகள் கேள்வன் :**

தேனலர் மலர் மகளாள் சீரோடு புணர் விறலார் (2639)

வனச மலர்மீது
வாழும் மடமயிலி மேவுநாதன் (2659)

வனச மண்டப வனிதை பங்கர் (2669)

திருக்கிளர் மார்பினர் (2667)

வனச மலர்மீது வளரும் மடமாது புணர் மாயோன் (2680)

மருவார் மலர்மான் மகிழ்மா யவனர் (2718)

வனச லெட்சுமி வாசனர் (2740)

வனச மண்டப வனிதை அன்பர் (2783)

பொதிதாதவிழ் தாமரை மேவிய
பொருவேல் விழியாள் புணர் மாயோன் (2803)

வனச மலர் மாதினுள் மருவு புய மாயனர் (2865)

வனச மாமலர் வனிதை சேர்விறல் (2993)

**கிருட்டிணான் ஆன தேவன் :**

மருதடர்த்தவர் கனியுதிர்த்தவர் (2999)

அரவின் நடித்த அழகிய வித்தன் (3367)

கனகனுருடல் கிழிய வேயடு கரிய மாயவன் (3504)

ததியே யுணு விறலார் (3552)

கஞ்சன் மாழ்கிட வேசெய் கங்குல் மேனியனர் (3564)

மாம னொடு போரதே செயும் மாயனர் (4019)

பிணையணி தோளன் (2664)

துட்டரவி லேநடன மிட்டுவிளை யாடவலர்
துப் பிதழின் மேவு விறல் (2729)

கஞ்சனையுடல் கீறிய கங்குல் நிறமால் (2912)

ததிவாயினர் (2913)

ததியுறை வாயன் (3487)

பஞ்சவர் சகாய பண்பின் விறல் மாயன் (4424)

**சானகி மணந்த சாமி :**

சானகி புணர் கார்நிற விறல் (2999)

சனகன் மயில் நாதர் (3094)

சானகி மணவாளனுர் (2646), (3127)

மடமயில் சானகி மருவிய ராகவன் (3598)

சானகி சிறையெடுத்த
தானவன் விழ அடித்த ரெகுராமன் (3883)

வலுத்த ராவணன் குலத்தர் சேனைகள்
மடிந்து வீழிட அடுமாயோன் (3955)

சானகி மணந்த நீலநிற விண்டு (4037)

ஒருமுனி பின்பு தொடாவரு மார்பு
உயர் ரகு வமிசம் வருமாயோன் (4218)

சானகி நாதனுர் (2653)

சானகி மாது தான்மகிழ் மாயன் (2755)

சானகி புணர் மாயோன் (2709)

வஞ்சக ராவணன்மேல் மண்டிய போர்புரிமால் (2830)

சானகி தனக்கு மாலைகள் தரித்த சாமி (2841)

செனகன் மகளோடு மடவி னினிதாடு
திரியும் ரெகுராமன் (2859)

கூர்கொள் கணைவிறல் மாயனுர் (2954)

சிலைதின முறித்துச் சனகியை மணந்த திருவிறல் (4445)

## தேவ சேனை

முருகன் மணந்த மனைவியர் இருவருள் ஒருத்தி தேவசேனை. இப் பெருமாட்டியை ஆசிரியர் **துரைமகள்** எனவும் **இந்திரன் திருமகள்** எனவும் **இனிய மொழியினைப் பேசுபவள்** எனவும் பாராட்டுவதைக் காண்க.

தருநாயகனுர் மாது (2668)

திருமடந்தையின் நிகரி லன்புடன் திகழு குஞ்சரி (2666)

தருமினுள் (2675)

துரைமகள் (2747), (2922), (3002), (3251), (3252)

வச்சிரதரன் மாமகள் (2952)

துரைமகள் தெய்வானை (3043)

வானர சன்மாது (3275), (3457)

துடிக்கு நிகரிடையாள் துரைக்கொடி (3376)

வானவ ராசன் மாது (3437)

மகநூறு புரிவானவன் மகள் (3477)

வானவர் மகள் (3486)

மகத்தே புரிபவன் மகள் (3502)

மகநூறுசெய் அமரேசனின் மகவாள் (3817)

துடிக்கிசைத்த நூலின் இடையாள் துரைப்பெண் (3879)

குஞ்சரி (4006), (4040)

கொஞ்சு கிளியினை யஞ்ச மொழிபயில் குஞ்சரி மயிலி (4008)

அமரர்க் கிறை தரு மகள் (4404)

குலிசன் மகள் (4544)

துரைப் பெண் (4769)

## வள்ளியம்மையார்

முருகன் பழந்தமிழர் ஐந்திணை நெறி வழி மணந்த பெருமாட்டி வள்ளி அம்மை ஆவர். இவர் திருமாலின் மகளாய் முன்னிருந்து பின்னர் மான் மகளாய்த் தோன்றியவர் என்பது முன்னர் உரைக்கப்பட்டது.

முருகனுக்கும் வள்ளியம்மைக்கும் நடந்த திருமண அமைப்பினைக் கந்த புராணத்தில் காண்க. இக் கவிதைத் தொகுதியின் நூலாசிரியராகிய கவி ராயர் அவர்கள் தாம் பாடியுள்ள பாடல்களில் பெரும்பாலான இடத்தில் வள்ளியம்மையைச் சுட்டிச் சொல்கின்றனர். இவ்வம்மையைக் **கானக மாது** எனவும், **வேட மகள்** எனவும், **குறமயில்** எனவும், **புனமாது** எனவும், **வன மயில்** எனவும், **வன மகள்** எனவும், **வேடிச்சி** எனவும் கூறுவர்.

அம்மையின் **அழகினைப்** பலவாறும் வருணிக்கின்றார்.

பெருமாட்டியின் **மொழி யினிமையை** எடுத்து விளக்குகின்றார். தேனும் பாகும் ஒத்த மொழி அவர் தாம் பேசும் மொழி என்பர்.

அம்மையார் வளர்ந்த குடி **வேடர் குடி.** அக்குடியினையே அவருக்கு பிறப்புரிமை யாக்கி அக்குடியினைப் பலவாறும் புகழ்ந்து செல்வர்.

முதல்வி என இவ்வம்மையைக் குறிக்கும் இவ்வாசிரியர் இவ்வம்மையின் கதிர் விரிக்கும் **கருமேனி யழகில்** கலந்து பாடுகின்றார்.

அருள் மடையாய்த் திகழும் அம்மையின் **விழிகளைப்** பெண்மான் விழிக்கு உவமை கூறி உவகை கொள்கின்றார். காட்டில் வாழ் மயிலும் வெட்கும் அம்மையின் **சாயல் சிறப்பினைச்** செந்தமிழில் நாவாரப் பாடுகின்றார்.

சமமாகக் கூறுதற்குரியார் ஒருவருமிலாது உயர்ந்த அம்மையின் **கூந்தலினையும், தோளினையும், முகத்தினையும், தனத்தினையும், வடிவினையும், நிறத்தினையும், கற்பினையும், இதழினையும், மாதர் அரசாம் தன்மையினையும், கொடியிடையினையும், குயில் மொழியினையும்** பாடும் நெறியினைக் காண்க.

வடிவுபெறு வேடமாது (2629)

மதுரிதமொழியாள் குழையடர் விழியாள்
    மணமலி மலர்மா லிகைபுனை குழலாள்
பதுமென முகைபோல் திரளிணை முலையாள்
    பணியணி குறமான் (2630)

வடம்புனை மார்பின்
    மடந்தை பொன் வேடர் மகள் (2633)

வனத்தில் வந்திடு வேட நாயகி (2634)

பனிபடு பொழில் மடமயில் (2633)

மடமயில் குறமகள் (2641)

அனநடை பயில்பவள் குறவர்கள் குலமயில் (2642)

இருணறைகொள் கேசமான் இனியகுற மாதினாள் (2643)
கானவர்கள் குல மாதினாள் (2646)

கொண்டல் போல்வளர் குழலாள்
    கொஞ்சுமா மொழி குறமான் (2647)

ஒருதியு நிகர்க்க முடியா
    உயர்குற மடப்பெண் (2648)

குடமிணைத்தயிரு தனமிருத்ததொரு
    குறமயில் (2650)

கானமின் (2652)

கானக மாது (2653)

வனமகள் (2654)

மடமயில் வேடமகள் (2656)

மாது குறத்தி (2657)

கொஞ்சிய கிளிமொழி மாதினுள் (2658)

வடிவுள குறமான் (2662)

மாதர சான தேவி (2663)

குடமிணைத்திடு தனமயிற்கொடி குறமகள் (2665)

கொந்து செறி தண்டலைமின் (2671)

தண்டலை மாது (2674)

பாவை நற்குற மாதினுர் (2678)

குடிசினில் வாழு தேவி குறமயில் (2679)

புனமாது (2682)

காவினில் வளர் மாதினுள் (2683)

மதுரித மொழிச்சி வடிவுள குறத்தி (2684)

மாலையணி குழலாள் மாதுகுற மயிலாள் (2686)

துங்க மிகுத்த வேடர்மகள் (2687)

மதுமலர் தரித்த
வளர்குழல் குறத்தி (2692)

இனிதான தேனை நிகரான கூறல்
எழில் வேடர்மாது (2693)

ஏலமிகு குழல் மாதினுள்
ஏர்கொள் குறமடமான் (2694)

மந்தி குதிபோடும் அண்டர் விளையாட
மண்டு பொழில் வாழும் மயிலாமோர்
பந்திணைய தான கொங்கை மிகமீறு
பங்கசமின் வேடர் மகள் (2706)

கானக மடமானுள் (2709)

கனிபோலும் வாயள் கமழ்கேச வேடுவி (2711)

பந்து போலு முலை
பாவை வேடமகள் (2712)

மயிலா கியசாயல்
மடமாதினுள் வேடர் மகள் (2713)

பெருத்த முழு முலையாள்
பிணக்கி நேர்விழி மடமானுள்
ஒருத்தி வேடமகள் (2715)

குறமயில் (2731)

கான மயிலினாள் (2731)

சூதுநிகரான தூயமுலை வேடர் மகள் (2735)

கானவர் தரும் மானாள் (2738)

கோலம் புனை வேடுவர் மங்கையாள் (2741)

குடிவிளங்கிய எயினர் பைங்கொடி
குறமடந்தை (2751)

மாது குறமான் (2776)

வனமயில் (2777)

செங்குமுத வாயின் மாது
செந்திருவை நேரும் வேடர்மகள் (2779)

அனநடம்பயில் அழகுகொண்டிடு குறமானாள் (2783)

வடிவுதங்கிய குறமடந்தை (2789)

கானவர் குறமயிலாள் (2790)

குடமாகிய தனநாயகி குறமாது (2791)

சாதியில் உயர்ந்த வேடுவர் குழந்தை (2802)

காதல்கொள் வேடமாது (2804)

பஞ்சினு மெலிதாகிய அஞ்சிறையன நேர்நடை
பங்கசஅடி வேடமின் (2806)

மெலுக்குள ரூப மடக்கொடியான
விரைக்குழல் வேடர் மகள் (2845)

அருமையாகிய அழகுவேடமின் (2852)

வஞ்சி நிகரிடையாள்
மங்கு றவழ்குழலாள் குறமானாள் (2854)

வடித்த பால் மொழியாள்
மருக்குலவு குழலாள் குறமானாள் (2825)

காதலியாகிய காரிகை வேடமின் (2858)

புனமயிலி வேடர்மகள் (2859)

கொஞ்சுகிளி யானதேவி
கொண்டனிறை கேசவேடர் மகள் (2861)

வாரணி முலையாள் வாழ்குற மடமான் (2889)

வடிவியான குறமயில் (2890)

குயின்மொழிக் குறமானுள் (2903)

வடம்புனையும் முலையாள்
மனங்குலவு குறமான் (2914)

திருந்திகழ் ரூபி
தினைப்புன மாது (2916)

கண்டை போல்விழி
மங்கை வேடமின் (2921)

வேடுவர் பூப்புரி குழல்மாது (2924)

தடமிகு சோலை தனில்வளர் மாது (2930)

குடியிலங்கிய குறமடந்தை (2933)

கரிய வேடுவர் அருளுநாயகி (2946)

வனமகள் (2948)

வேய் நிகர்ந்திடு தோளி தண்டலை
வேடமங்கை (2956)

எவண மிஞ்சிய குறமடந்தை (2965)

கோதுகிளி மொழியாள்
சோலை கனி இதழாள் (2988)

திருந்திய ரூபம்
சிறந்திடு வேடர்மகள் (2991)

குறமயில் (2992)

கானக மயில் (2999)

மோகன வனமான் (3000)

காருக் கிசைந்த குழலாள்
கானகக் குறப்பெண் மடமான் (3006)

வடிவு தங்கிய குறமடந்தை (3007)

கச்சுமேவு தனத்து நாயகி
கற்பி னீடு குறத்தி (3049)

இடைகொடிக்குமரி
இனிய மைக்குறமின் (3050)

குடிலில் வாழ்குற மயிலி (3106)

கருமேனியான கனவேடர் மாது (3119)

சுதியுள வண்டுகள் சுழல்பொழில் மங்கை (3162)

ஓவியநிக ராகிய வடி வோர் குறமயில் (3203)

சந்திரமுக வேடர் தங்கொடி (3345)

முருகார் மலர் முடிவேடமின் (3374)

மடமாமயில் எனவே வரு மறமான் (3458)

புயலே நிகர் குழலாள் வளர்
புனநாயகி (3464)

முகமதி மீறு குரல்குயிலான
முதல்வியளாகும் மறமானுள் (3472)

உருப்பொலி வேடர் மாது (3494)

வடித்த பாகுமொழி
மயிற்பெண் வேடமகள் (3508)

தகரமணி குழலாள் சரசி குறமயிலாள் (3569)

வித்துருமத்தை நிகர்த்த நிறத்தினள்....மெய்க்கொடி (3639)

கற்புயர் மெய்க்கொடி (3654)

வேடிச்சி (3846)

மாதர சாய்வரு வேடமினுள் (3932)

வடிவுள வேடமாது (3963)

காதல்விளை வேடமாது (3964)

குருக்கி னலரான சிவத்த இதழ்மாது
குறத்தி (4240)

## கற்பில் உயர்மாதர் இருவர்

ஆசிரியர் தேவசேனை, வள்ளியம்மையார் ஆகிய இருவரோடும் அமைந்த முருகனைப் பாராட்டும்போது தனித்தனியே தேவ சேனை அம்மையையும், வள்ளி அம்மையையும், முருகனோடு சேர்த்துப் பாடி நிகழ்வர். மிக அருமை யாகச் சில பாடல்களில் அவ்விருவரொடும் **கலந்து காட்சியளிக்கும் கந்த வேளை** சொல்லில் எழுதித் துயர் போக்கி மகிழ்வர். அவ்வண்ணம் அமைந் தவை சில.

துவள மிடைவேடு வியைய ருமையோடு
துரைமகளைமேவு புயசீலா! (2747)

சுகமொழி மாது குறமகளோடுந்
துரைமகளோடு மணந்தோளா! (2749)

தனகிரியின் மாது
தருவில் வளர்மாது புணர்தோளா! (2932)

வானவன் மடந்தை யோடும்
வாழ்புன மடந்தை யோடும் அணைதோளா! (3413)

சுகமிருந்தலீலை புரி குறத்தியாசை
துரை மகட்கு மாலை யணிநாதா! (3943)

சுகர சொல் போலு கரிய வேடமயில்
துரையின் மாது புணர் புயநாதா! (4146)

கயலார்விழி இருமாதர்கள் கணவா! (4410)

இருவரன்பி னொடு மருவு மம்புயவ (4477)

## ஆசிரியர் கவிராயர்

இந்நூலாசிரியர் இப்பாடல்களைப் பாடுதற்குக் காரணத்தினை இம்முன்னுரையின் முதல் பகுதியில் ஊகித் தெழுதினேன். இவர் தீராத கொடிய **வயிற்று வலியால் மிகத் துன்புற்றவர்** என்பதை அவர் பாடியுள்ள பாடல்களே நமக்கு அறிவிக்கின்றன.

உந்தி வரு நோயை (3345)

குடலெடுத்த வயிறு வலியை அற்றுவிடு (3690)

அடியேன் வயிற்றில் வருநோய் அகற்ற (3743)

இக்கொடிய நோய், சூலை நோயாக இருத்தல் வேண்டும்; குடரினை முறுக்கிக் கொல்வது போன்ற பெருந்துயரினை ஆசிரியருக்குத் தந்திருத்தல் வேண்டும்; உண்ண முடியாமலும் எச்செயலும் செய்ய முடியாமலும் உடலிளைத்து அவர் துன்புற்றிருத்தல் வேண்டும். தான் சீரழிந்து போவது நன்றோ என இவர் வினவுவதால் இவற்றை நாம் அறியமுடிகின்றது.

தேகபிணி வருநோயால் சீரழிவ திதுவாழ்வா (3676)

இத்துயர் விடுதலைக்காகவும் முருகனை எண்ணி நெஞ்சுருகியவர் கவிராயர். இத்துன்பத்தினை வேறோரிடத்தில் மேலும் தெளிவு படுத்துகின்றார்.

**திருநாவுக்கரசு நாயனார்** நடுநாட்டில் பிறந்தவர். சிறந்த சிவநெறிச் செல்வர்; ஆயினும் இறைவனருள் கிட்டாத காரணத்தினால் புறமதம் புகுந்து பெரிய ராயினர். அவர்தம் தமக்கை திலகவதியார் தம்முடைய தம்பியார் மதிசூடியை மறந்த மதி கெட்ட செயலை நினைந்து மனம் வருந்தித் தாம் வணங்கி வந்த திருவதிகைச் சிவபெருமானிடத்தில் முறையிட்டார். தோடுலவு காதுடைய சோமனணி ஏந்தல் அம்மையின் குறையினைக் களையத்

திருநாவுக்கரசுக்குத் தீராத வயிற்று வலியை அருள்புரிந்தார்; வலியால் நொந்த வாகீசர் எம்மருந்தாலும் மந்திரத்தாலும் அந்நோய் தீராதது அறிந்து பாயுடையையும் பீலியையும் நீக்கித் தமக்கை வாழிடத்தினைச் சேர்ந்தார்.

வந்த தம்பிக்குத் திருநீறளித்துச் சிவனிடம் முறையிடுமாறு திலகவதியார் கூறினர். தம்மை வாட்டும் கொடிய வயிற்றுப் பிணியைப் போக்குமாறு சிவனை அவர் வேண்டினர். திருவருள் அவர் தீ நோயைப் போக்கியது. இந்நிகழ்ச்சியை இவ்வாசிரியர் முருகனுக்கு நினைவூட்டுகின்றார்.

அப்ப சாமிக ளுறையெ லாம்முனம்
அத்து வீழிட வேசெய் தாரது—அறியாயோ?

இப்ப நாயினேன் நோயெ லாமினி
இற்று வீழிட வேசெய் வாய்குரு—பரவேளே! (2879)

இத்தீநோயும் பிற துன்பமும் இவர் **உடலைப் பெரிதும் வாட்டிய செய்தியினைப்** பின்வருமாறு கூறிச் செல்வர்.

தீவினை யதனாலே உடல்வரு நோய் (2743)
யானனி யாய நோயில்
ஆழ்ந்துவி டாதுவேண தருளாயோ? (2766)
உடலினில் வருதுயர் பொடிபட அருள்புரி. (2773)
வருத்த மேசெயு நோயை
மறுத்து வீழிட மேன்மை அருளாயோ? (2939)
வருந்திய நோயை மடிந்திட வேண தருளாயோ? (2991)
வருத்த நோய் தவிர். (3004)
வருத்து துயர் தீர.........வருவாயே. (3008)
உடல்வரு துயர்தனை உடன்வில கிடஅருள். (3095)
எனதுடைய நோய்கள் தீரிட (3265)
வந்த நோய் தவிர் (3268)
எனது துயர் தீர (3272), (3206)
பாவியான எளியேன்
பார நோயை இனிநீ தவிராயோ? (3317)
உடல்படு நோயை ஒட உடனருள் செய்க (3333)
நோவி னாலையே மேனி வாடியே நோகலாகுமோ? (3350)
கருகி நோயினில் மெலிவு டாதருள் (3425)

உடலில்வரு நோயை அழிவுபட நாளும்
உனதுதய வாலும் அடுவாயோ ? (3497)

உடம்புள நோயை மாய
உளங்கனி வாக வேண தருளாயோ? (3606)

எந்தன் வியாதி தீர..........வருவாயே (3723)

நோயினால் மேனி வாடியதும் (3350) கருநிறமாகி உடல் மெலிந்ததும் (3425) பருத்து வலுத்துத் துன்புறுத்தும் பாரநோயாக அந்நோய் ஆகி யதும் மேல் காட்டிய சான்றுகளினால் விளக்கமுறும்.

உடல் நோய் உள்ளத்துயருக்கு வித்து. உடல் நலக்கேடு நெஞ்சினை வாட்டுவது இயற்கை. ஆகவே ஆசிரியர் தம் முள்ளம்படும் துன்பத்தினை இடையறாது பேசுகின்றார்.

மனத்தில் வந்திடு நோய்கள் தீரிட (2634)

மனதில் வரு நோய்கள் தீர வரமருள்வை (2659)

மனத்தின் மீறிய வருத்தம் ஓடிட (2673)

நெஞ்சகம் அடு நோய் தவிர் (2676)

மனதில் வரும் நோயை
மடியவரம் யாவும் அருளாயோ ? (2680)

மனதினில் வருதுயர்
மடிபட அருள்புரி. (2778)

எந்தன் மனதினில் வந்த துயர்தனை
என்று அகலிட அருள்வாயோ ? (2801)

மனத்தில் வருதுயர் தீரிட (3017)

மனத்தில் உற்றிடு துயரம் அற்றிட (3022)

மனதினில் உறைதுயர் தொலைவிட (3078)

மனதினுறு நோயை (3175)

மனதிலுள மாசு தீரிட (3265)

மனதுள துயர் அது விலகிட (3267)

நெஞ்ச நோய் தவிர் (3282)

மனதில்வரு நோயை அகலிடவும் (3284)

மனநோய் தவிராய் (3311)

நெஞ்சினின் நோய் தவிர் (3492)

'மனத்திலுறு நோயை
மடியவரமேசெய் (3500)

மனத்தில் தோய்ந்து துன்புறுத்திய துன்பத்தினை ஆசிரியர் நோய் எனவும் வருத்தம் எனவும் துயரம் எனவும் கூறுவதைக் காண்க.

'கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும், ஒண்டொடி கண்ணே யுள' எனத் திருவள்ளுவர் கூறினர். அன்றியும், 'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகை சான்ற, சொற் காத்துச் சோர்விலாள் பெண்' எனவும் பெண்மையைப் பாராட்டுவார். இவ்வாசிரியர்,

அப் **பெண்மையைப்** பற்றி

" இருவகை மனத்து மறிபடு குணத்து
இசைவில மடப்பெண்" (4535)

என்கிறார். இவ்வளவு முரண்பட இவ்வாசிரியர் பேசுவது தக்கதோ என்பது ஆராய்தற்குரியது.

இவ்வாசிரியர் நல்லதொரு மகளை மணந்து மக்களைப் பெற்று **இல்லறத்தில்** வாழ்ந்த இயல்பினர் என்பது

கட்டிய மனையினில் உற்றிடு மனைவியர்
கத்திய புதல்வர்கள்—இவையாமோர்
கட்டிய வலையினுள் பட்டிடும் எனை (4315)

எனும் அவர் வாக்கினால் தெளிவாகும். பற்றினை அறுத்து முருகனாகிய உத்தமனின் திருவடிகளில் தன்னைச் சேர்க்க வேண்டும் எனும் நினைவும் முயற்சியும் இவரிடத்தில் வளர்ந்து வந்த காரணத்தினால் புதல்வர்களைக் '**கத்திய புதல்வர்கள்** எனவும் இல்லற இன்ப வீட்டினைக் '**கட்டிய வலை**' எனவும் குறிக்கின்றார் என்று எண்ணவேண்டியிருக்கின்றது. மண்ணையும் பொன்னையும் வெறுப்பதால் பற்றினை முற்றத் துறந்து விடுதல் இயலும் என்று வளர்ந்து வந்த கொள்கையில் இவர் ஊறிவிட்டார். தாம் வணங்கும் முருகப் பெருமானைக் '**காதலி குறமின் அணைதுரை**' எனவும் '**துரை மகள் நாதன்**' எனவும் போற்றும் உள்ளம் இவரிடத்திலிருத்தலையும் காண்கின்றோம்.

வெறுக்கும் உள்ளத்தினை வளர்த்துக்கொண்ட இவர் மகளிர் அழகினில் அச்சத்தினைக் காண்கின்றார். இவர் வெறுப்புப் பொதுவாக அமையாது **விலைமகளிர்** காரணமாக எழுந்ததோ என்று எண்ணுதற்கும் இடம் இருக்கின்றது.

விலைமாதர்கள் மயலாலுடல்
மெலிவாய் விட லாகிட லாகுமோ (4721)

மேற் காட்டிய வரிகளே அத்தகைய ஐயத்திற்கு இடம் தருகின்றன.

அன்றியும், தம் ஐம்புலனையும் கட்டுப்படுத்தி வாழமுயன்ற முயற்சியால் எழுந்தது வெறுப்பெனவும் கொள்ளலாம். கட்டுப்படாத புலனைக் கட்டுப் படுத்துவதற்கு அப்புலன்கள் விரும்பும் பொருள்களை வெறுப்பதும் ஒரு வழி அன்றோ? **மகளிர் மயக்கத்தினால்** தம் மேனிவாடிக் கருத்த செய்தியையும் மகளிராசையாகிய புலியை ஓட்டவேண்டியது முருகன் கடமை யெனவும் இவ்வாறு பலவாறாகக் கூறுகின்றார்.

வம்பணி முலையார் மயலாலே நொந்திட விதியோ? (2648)

கயலார் விழியார்கள் தருமாசை யதான
கடல்மூழ்கு வதுபோக அருளாயோ? (2713)

திலக வாணுதல் அயன்மி னாரொடு
திரிதல் பாவம தடுவாயே (2150)

சரச மிஞ்சிய அழகு கொண்டிடு
தருண மங்கையர் மயலாலே
உரசு கொண்டுநல் மனமவிந்தவர்
உடனி ணங்கிட விதியாமோ? (2752)

குடமில கியமுலை மடவியர் விழிவலை
கொடுஎனை மயல்செயல் அதுபாராய் (2773)

கடுகிய மொழி பேசியும் மயலொடு தயவாகியும்
கனவினு நினையாதிடு—கெடுமாதோ(டு)
அடிபடு துயரான்மெலி படவிதி வசமோ? (2784)

விடாதமாய மடமாதர்..........மெலிவேனோ? (2787)

குடியி லங்கிய குழல ரின்றுசெய்
குடில மென்றுமே தவிராதோ? (2789)

விருப்பொடு மாதர்கள் பயிர்ப்பினில் வாடிய
மிடிக்கொரு சீரருள் உதவாயோ (2793)

சாலமத னுருட
சாப மதினான் மயல்
மிகுவாதல் தவிராயோ? (2869)

காதல் மிகுத்த மாதர்
ஆசை வருத்த மேனி
நாரின் நிறத்து வாடி அலையாதே

மாதயவுற்று நாயன்
    மேனி சிறப்ப தாக
  மாமயி லிற்கு லாவி வருவாயே (2643)

வடித்தாச மொழியார்
    மயக்குவிழி மயலால் மெலிவேனோ? (3273)

தனத்தியர்கள் ஆசை
    தனக்கு எளிதாதல் தவிராயோ? (3277)

மத்தநிகர் முலையாள்
    மட்டுளகன குழலார் மயலாலே
சித்தமது அலைவாய்ச்
    சிக்கிடலது பழியாம்—அதுதீராய் (3296)

மதிக்க ணைந்திடு ஆனன மாதர்கள்
    மருட்டு கின்றிடு மாமய லாகினி மெலிவேனோ?
        (3332)

பரவர வல்குலார்..........மெலிவேனோ? (3348)

குயிலாகிய மொழிமாதர்கள் குவிமாமுலை மயலாலே
ஒயிலாயலை கிறநோய்தவிர் (3355)

மாறுபாடான மாதர்.........விலகாயோ? (3436)

திருக்கலச முலை மாதர்
    திருக்கதனில் விழுகாமல் அருள்தாராய். (3511)

வடம்புனை தனத்து மடந்தைய ரிடத்து மயலாலே
உடம்பது வளைத்து உவந்திடல் விலக்கி அருளாயோ?
        (3518)

மடவார்தரு மயலால் மனநோய்பட விதியோ? (3618)

சரசம் மிஞ்சிய.........அலையாதே (3773)

மிரட்டு தொழிலேபுரி மாதர்கள்........மெலிகுதலாமோ?
    (3778)

வாடிய கொடியிடையார்
    மாயம திடுவதனுர் மயலாலே

நாடிய அறிவினன்நான் மேனியும் மெலிகுவனோ? (3815)

மடந்தைய ராசை யென்று
    வரும்புவி யோட இன்று அருளாயோ? (3927)

*காதுற்ற விழியார்..........மயலாலே..........*
*.........மெலிகுவனோ?* (3992)
*மஞ்ச ளான்முடி கொண்டை யாலொளிர்*
*மண்டு பூணகை யதனாலே*
*மிஞ்ச வேவரு கின்ற மாதர்கள்*
*வென்று மாமயல் தவிராயோ?* (4250)

கூறிவந்த சான்றுகளால் தம் புலன்கள் மகளிர் **சாயலினையும் பேரழகினையும்** கண்டு அவற்றில் ஈடுபாடுற்று அம்மகளிரைச் சுற்றிக் கொண்டிருந்த அத்தன்மையை அறிந்து அதிலுள்ள தவறினை உணர்ந்து அந்நெறியினின்றும் நீங்கி வாழ விரும்புகின்ற ஆசிரியரின் நெஞ்சம் முருகனைத் தஞ்சமாக அடைகிறது என்பது உறுதியாகும்.

புலனலைக்கழிவால் நைந்து வாடும் மாந்தர்கள் உள்ளத்தினையே தமக்கு உறுதியாகக் கொண்டு கள்ளப் புலனை வெல்ல முயன்றனர். அடியார் பலர் இம்முயற்சியை மேற்கொண்டு அழுதரற்றி யுள்ளனர். தம் நெஞ்சம் தளர் விலாதிருக்கத் தமக்குப் பற்றுக் கோடாக இறைவன் திருவடியை இறுகப் பற்றிய மெய்யடியார் போலவே கவிராயர் அவர்களும் முருகன் திருவடிகளைப் பற்றி நிற்கின்றனர்.

மகளிர் வழிவரும் **மயக்கத்தினையும்** கவிராயர்,

*கொடிய பாதக மடவி யால்வரு*
*குறைகொள்* **நோய்** *தவி ரிடுவாயே* (2723)

என **நோய்** என்றே கூறுகின்றார். உடல்வழியும் உள்ளத்தின்வழியும் மகளிர் வழியும் வரும் நோய் நீக்கத்தக்க **மருத்துவத்தினைக்** கவிராய ரவர்கள் நாடி நிற்கின்றார்கள்.

மூலமலமாகிய ஆணவ நோயினையும் அடியோடு அழிக்கும் முருகனுக்கு அமைந்த திருநாமங்கள் பலவற்றுள் ஒன்று வைத்தியநாதன் என்பது. வைத்தீசுவரன் கோவிலை அறியாதார் தமிழ் நாட்டில் இருக்கமாட்டார்கள். பல்வகைப் பிணிக்கும் மருத்துவனாகப் பரமகன் விளங்குகின்றானதலின் கவிராயர், அப்பரமகனிடத்திலேயே தம் நோய்களைப் போக்கும் **நல்லவிழ்தத்தினையும் மருந்தினையும் மூலிகையினையும்** விரும்பிச் சீரிய **மருத்துவத்தைச்** செய்யுமாறு வேண்டி நிற்கின்றார்.

**அவிழ்தம் வேண்டிய நிலை:**

*உந்திவரு நோயை உண்டு விடவேகல் லவிழ்தமேதா* (3345)

*எனது பிணிக்கு அவிழ்தமே*
*இனிய நலத்தி லருளுவாய்* (4720)

**மூலிகை வேண்டி நின்ற நிலை :**

தேகத்தினி லேவரு நோயது
திரத்திர மாகிய மூலிகை தருவாயே (4018)

**மருந்து வேண்டிய நிலை :**

நோய கன்றிட வேமருந்தருள் (2956)

வந்த வினைக்கு மருந்து களைச் செய்வை (4450)

எனதுடலிற்கு வருதுயருக்கு
இனிய மருந்து தனைபாராய் (4543)

**மருத்துவம் வேண்டிய நிலை :**

வருத்து துயர்தீர
மருத்துவ மெலாமும் அருளாயோ (2870)

எந்த னுடற்றினு துன்ப மதற்கொரு
இன்ப மருத்துவம் அருளாயோ (4348)

எந்த னிடத்தில் வந்த பிணிக்கொரு
இன்று மருத்துவம் அதுபாராய் (4374)

இனி, விதி, ஊழ், சஞ்சிதம் என்பன எல்லாம் மனிதன் எடுத்திறந்த பிறப்புக்களில் செய்த **பழவினைகளாம்.** செய்த வினை செய்தவனைப் பற்றியே தீரும். பல மாடுகளிடையே தன் தாயினைத் தேடிக் கண்டுகொள்கின்ற கன்றினைப்போல வினையும் கோடிக் கற்பம் சென்றாலும் தன்னைச் செய்து தனக்கு உருவம் தந்தவன் எவனோ அவனைத் தேடி அடையும் என்று சொல்லுவார்கள். அப் பழவினைகள் முற்றிய வேளையில் தம் பயனை உடையானை அடையச் செய்கின்றன. அவற்றை அநுபவிக்காது விடுத்தல் மனிதனுக்கு அரிய செயலாகும்.

மனிதன் தான் வாழும் காலத்தில் **புதிய வினைகளையும்** செய்கின்றான். இவ்வினைகளும் இன்ப துன்பத் தொடர்புடையனவாக அமைகின்றன. இவ்வினைத் தன்மைகளை நன்குணர்ந்த ஆசிரியர் கவிராயர் அவற்றைப் பற்றிய **தெளிவான விளக்கங்களை** நமக்குத் தருகின்றார்.

**பழவினையைப் பற்றினை :**

என் பண்டைவினை தூளாக அருள்வாய் (2722)

விதியால் வரு தீவினை ஓடிட (2803)

அடுத்தனையும் வினைகெடுத்து வேணதொரு
அருட்செய்வாய் (2864)

வந்த வினை தீர (3108)

படியின் மிசை அடியேன் பழவினையை விலகாய் (3166)

சஞ்சிதவினை வந்தது தவிர் (4216)

சஞ்சித வினையால் வந்திடு துயர்தான்
தண் கிருபை கொடுநீ அடுவாயே (4461)

பழைய வினை (4480)

முந்திய பழவினையால் நொந்திட வருதுயரால்
மொய்ம்பது தவறிடவே அலைவேனோ (4579)

என்றெடுத்துக் கூறுகிறார். ஆசிரியரால் விதி, பழவினை, சஞ்சிதம், தொடர்ந்துவரும் வினை, முந்தியவினை என்றெல்லாம் கூறப்படுவது முன் கூறியதுபோல எடுத்த பழம் பிறப்புக்களில் மனிதன் செய்து அவனைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் வினைகளாகும். இந்த வினைகளின் விளைவுகள் பலவாக இருக்கும். வினை நல்லதாயின் நற்பயனைத்தரும். தீயதாயின் தீமையை விளைக்கும். சங்கிலி பொன்னால் அமைந்ததாயினும் இரும்பினால் அமைந்ததாயினும் பிணிக்கும் இயல்பில் இருவகைச் சங்கிலிகளும் ஒரு தன்மையன ஆனாற்போல, வினைகள் நல்லன ஆயினும் கெட்டன ஆயினும் பிறப்பினைத் தொடர்ந்து தருதலினும் மற்றைய விளைவுகளினும் ஒரு தன்மையனவே. **தீவினையால் விளைவன நோயும் தொடிபும்** அவை போன்ற பிறவுமே.

விதியால்வரு கிற நோய்தனை
மெலிவாய் விழ அடுவாயே (3460)

சஞ்சித வினையால் வந்திடு துயர்தான்
தண்கிருபை கொடுநீ அடுவாயே (4461)

விதியால்வரு துயராகிலும் வினையால்வரு துயராகிலும்
.........அணுகாமே.......வருவாயே (4469)

முந்திய பழவினையால் நொந்திட வருதுயரால்
மொய்ம்பது தவறிடவே அலைவேனோ (4579)

மேலும், எடுத்த பிறப்பில் செய்யும் வினைகளாலும் பல விளையும்.

கவிராயர் **புதிய வினையினை மதியோடு** தொடர்பு படுத்தி அவை மதியால் விளைவன என்று சொல்கிறார்.

விதியாலும் மதியாலும் விழை நோயை
அடுவாயே (3471)

விதியினுல் வரு வினையும் மேல்வரு
வினையும் ஓடிட (4456)

விதியால்வரு துயராகிலும் வினையால்வரு துயராகிலும்
அணுகாமே......வருவாயே (4469)

இவ் விருவகை வினைகளும் தோன்றுதற்குக் காரணம் மனிதனின் **அறியாமையே.** இந்த அறியாமை **ஆணவம்** எனப்படும் மூல மலத்தொடு தொடர்புடையது. மூல மலமாகிய இவ்வாணவம் முற்றும் பொடிபடினன்றி மனிதனுக்கு வினைகளினின்றும் விடுதலை கிடையாது ஆதலின் கவிராயர் **ஆதாரமலமும்** அழியவேண்டும் என்கின்ருர்.

ஆதாரவினை யாகிலு மேதான் இனிதின் ஓடிட (4285)

இருவினைப் பயனுல் அடியனிப் படியே
இனியும் கெட்டிட அலைவேனே (4686)

பிறவி கொடுமையானது. பிறந்தவர் படுவது துன்பமே. பிறந்தவர் இறப்புக் கஞ்சுவர். 'இறப்பதனுக் கென்கடவேன்' என்றனர் **மாணிக்க வாசகரும்.** கவிராயரும் இறப்புக் கஞ்சுகின்றனர். **எமன்கையில்** அகப்படாது தான் தப்புதல் வேண்டும் என்றும் **எமதூதர்** கையினின்றும் விடுதலை பெற வேண்டும் என்றும் எமனே எமதூதரோ தன்னுயிரைக் கவருதற்கு வரும்முன் தனக்கு அருள் புரிய முருகன் வருதல் வேண்டும் என்றும் காலதூதர்கள் வரும்போது வருதல் வேண்டும் என்றும் காலன் வரும்போது வருதல் வேண்டும் என்றும் கூறுகின்ருர்.

**எமன் நீக்கம் வேண்டல்:**

படிவிளங்கிய மறலியின்றகல்
படவாங்கனி வொடுதாராய் (2751)

கூகை குழறிய லறவுமே
கோப எமனிடியின் வரவுமே ஏகிடவே
காகை கதறுவென அலறவே
காத வுயிருவில கிடவுமே செயலாமோ (2884)

நமனுரெனை அணுகாதிட
நலமேயருள் புரிவாய் (3291)

**எமதூதர் நீக்கம் வேண்டல்:**

கால தூதர்கள் வருமுனே
கால்கை மேலது குளிர்முனே வருவாயே (3266)

ஆவியை எம்பட ராள்பிடி யாவகை
ஆய்வரம் வேணது தருவாயே (4002)

**எமன் வரும்முன் வருதலைவேண்டல் :**

ஏமன் வருமுனமே........வருவாய் (3860)

சண்டனார் வருமுன்பு......வாராய் (4021)

**எமதூதர் வரும்முன் வரவேண்டல் :**

இருவர் காலர்கள் வருமுனே........ (4590)

காலதூதர்கள் வருமுனே
பாசமே மிக விடுமுனே
கான மாதொடு மயிலிலே முன்வருவாயே (4238)

கால தூதர்கள் ஓடியேவரு
காலமாகுமுனே அய்யா என்முன்
வருவாயே (3758)

**காலதூதர் வரும்போது வரவேண்டல் :**

கால தூதர்கள் ஓடியே வரு
காலம் நீயதை அடுவாயே (3827)

கால தூதர்கள் ஆவிமேல் வரு
காலை நீஎன்முன் வருவாயே (4013)

**எமன் வரும்போது வரவேண்டல் :**

ஏம னார்வரு போது தோகையில்
ஏறி நாயன்முன் வருவாயே (4019)

இழிவு தருவது சிற்றினம்; சிறுமைத் தன்மை பெற்றோர் **சிறியர்** எனப் பட்டார். இவர்கள் நன்மை சிறிதும் இல்லாதவர்; நன்மை என்பதில் நம்பிக்கை கொள்ளாதவர்கள். பிறருக்குச் சிறிதும் பயன்படாதவர்கள். அம்முறையால் அவர்கள் தங்களுக்கும் பயன்படாதவர்கள்.

பிறருக் கன்பு செய்வதே பிறவியின் பெரும்பயன்; அப்பயனில் இச் சிற்றினத்தார்க்கு எள்ளளவும் தொடர்பு கிடையாது. இத்தகைய இழிசனர்களை ஆசிரியர் கவிஞர் **'லோபர்' 'உலுத்தர்' 'தோசியர்' 'பாவியர்' 'அற்பர்'** எனக் குறிக்கின்றார். இந்த மக்கள் **தொடர்பும்** இவர்களிடம் தம் வாழ்க்கைக்காகப் **பொருள் கோடலும்** இழிவு எனக் கருதுகின்றனர்.

**சிற்றினஞ் சேராமை :**

சூது செயு வோர்கள் தோசியர்கள் பாகம் அணுகாதே
நீதய வாக நீடுவரம் யாவும் உதவாயோ (3107)

பாவிய ராகிய பேரிட மேசெலும்
பாவ தாமதை விலகாயோ (3414)

நஞ்சது வுக்கிணை கொண்டிடு உலுத்தரை
நன்கு மதித்திடல் விலகாயோ (3422)

பாச மோடெதிர் பாவியர் லோபர்கள்
பாக மேசெலல் பாவம யாகிருபை புரிவாயே (3444)

உலுத்த ராவரு மனித ராகிய
ஒருத்தர் பாலணு கிடலாதே அருளாயோ (3955)

**சிறியோர் பொருளை விரும்பாமை:**

அநியாய லோப ரவரூடு போய்முன் நிதிதாராய்
எனவாசை யாக இரவாமல் வேண அருள்தாராய்
(2770)

படுபாவியான அனியாய லோபர்........
.........நிதி தாராய் (2797)

உலுத்தர்களான.........ஆமோ (2845)

பாவியராய் லோபியராய் பாதகராய் வருவோர்பால்
ஆவியெலாம் நோகிடவே யாசகராய் அலையாமே
(2886)

சூதுலவு பாதக ராக வேவரு
தோசியர்கள் மாநிதி தூரவிட அருள்
புரிவாயே (2938)

அனியாய லோபர் அவர்வாச லோடி
அலையாது கோடி அருளாயோ (3039)

உலுத்தர்பால் நிதிபெறச் செயாதருள் (2591)

அற்ப ரானபிர புக்க ளால்வரும்
அத்த மேகொளல் தவிராயோ (3952)

கொடியவற்றுள் மிகக் கொடியது **வறுமை**. வறுமை இன்மை எனப் படும். ஒன்றுமில்லாது எல்லாம் வேண்டிய இவ்வுலகில் வாழ்தல் இயலாத செயல். கொடிய மிடி கொல்லப் படல் வேண்டும். கவிராயர் மிடியினைத் **துயர்** என்றும் மனிதனை ஆழ்த்தும் **கடற்சுழி** என்றும் **மிடி நீக்கப் படல் வேண்டும்** என்றும் மிடி நீங்கத் **தனம் தேவை** என்றும் கூறு கின்றார்.

**மிடி கொடிய துயர் :**

*வருத்த மானமிடி வருத்த* (2715)

*மிடியினால் வளர் துயரில் மூழ்கியவிதி* (2723)

**மிடி ஆழ்த்தும் கடற்குழி :**

*தரித்திரமான கடற்குழி.......*(2788)

*தரித்திர மான கடற்குழி வீழ்வன்* (4338)

*மிடியென ஒரு கடல்விழுமெனை* (4758)

**மிடியினை நீக்குமாறு வேண்டுகோள் :**

*அடியேன் மிடி தவிராயோ* (2753)

*மிடியோடிட.........வருவாய்* (3641)

**மிடியழியப் பொருள் :**

*மிடிபோய் எனக்கு வெகுமா தனத்தை*
*அருளாயோ* (3862)

'உடலார் அழியின் உயிரார் அழிவர், திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்' என்றனர் திருமூலர். உடல் நலக்கேடு அடையின் உடல் முயற்சியில் குன்றும்; எனவே பிறவிப் பெரும் பயனாகிய ஞானம் பெறுதல் தடையுறும். கவிராயர் சீரிய **நல்வாழ்வினை** விரும்புகின்றார். எடுத்த உடல் பெருமையுற வேண்டும் எனக் கருதுகின்றார். **நீண்ட பெருவாழ்வினை** விரும்புகிறார். தமிழர் போற்றும் சிறந்த பண்புகளுள் ஒன்று **மான உணர்வு.** தம் நிலையினின்றும் தாழாமையும் ஒரோவழி தாழ்வு நேர்ந்த விடத்து உயிர் வாழாமையும் மானம் எனப்படுகின்றது. இந்த மானத்தின் தன்மையை மதித்துப் போற்றும் ஆசிரியர் வாழ்தலுக்குத் தேவையாகிய **ஆடை, சோறு, உடை** முதலியவற்றுடன் **செல்வத் திரட்சியையும்** விரும்பி நிற்கின்றார்.

**பிறப்புச் சிறத்தல் :**

*எடுத்த காயமது சிறக்க வேயருள்செய்* (3748)

**நீண்ட பெருவாழ்வினை வேண்டி நிற்றல் :**

*நீடுமேக வாழ்வு அருள்வாயோ* (2627)

**மானம் மடியாது வாழ்தல்:**

*மான மழிவிலாது வாழ அருள்செய்* (2731)

*மான மாகிய பூடணுதிகள்*
*மாறிடா வகை அருளாயோ* (4492)

**வாழ்வுக்கு மிக இன்றியமையாதன:**

*ஆடை மாநிதி சாதம் வேணது ஆவலாய் அருள்* (1481)

**பொருள் வளம்:**

*தனமினு யருள்வாய்* (3233)

*மாநிதி தருவாயே* (3559)

*சேகர மான நிதி*
*சேரிட வேணவருள் புரிவாயே* (3838)

*நிதிதனை அருள்வாய்* (4243)

தமக்காகவே வாழ்தல் தகுந்ததன்று. **பிறர்க்காகவும் வாழ்தல் பெருமை தருவது.** பிறர் துயரினைத் தம் துயர்போல் போற்றுவோர் பெரியர். முருகன் திருவடிகளைத் தமக்காக மட்டும் வேண்டி நில்லாது தம்மை யொத்த **அடியார்களுக்காகவும்** கவிஞர் வேண்டுவது அவரிடத்துக் காணப்படும் போற்றுதற்குரிய பண்பாகும். பல பாடல்களில் அடியவரை வாட்டும் **மிடி, வினை, பிணி** ஆகியவற்றைப் போக்கிக் **குற்றம்** களைந்து **ஆதரவு** தந்து **பெருமைப்** படுத்தி **இருளை** ஒழித்து **தெளிவைத்** தந்து **சீர்** பெறச் செய்து **சாகாவரம்** தந்து **அருள்புரி** என வேண்டுகின்றார்.

**குறை நீக்கல்:**

*அடியருடை குறைக்கு அருள்புரிவை* (3389)

**மிடி தவிர்த்தல்:**

*மிடியொடு அடியவர்பால்*
*வெகுவெகு பிணிதனையே அடுதேவே* (3259)

*அடியார், மிடிப்புலியை அடுவாய்* (3273)

*அடியார்கள் மிடிதீர அருளாய்* (3299)

*அடுத்த அடியார்கள்*
*அழிக்கு மிடித்தீர அருளாயோ* (3323)

*அடியாருட மிடிதீரிட அருளேபுரி* (3777)

*ஏது தரித்திரம் ஏது உடற்பிணி*
*ஏது உனைப்பணி அடியார்பால்* (4485)

**வினை ஒழித்தல்:**

பதமலர் களைதொழு பவர்வினை தவிரிட அருள்தாராய்
(2926)

கணமதிலே அடியார்வினை தூளிடு (3262)

அடியருட வினைதீரிட அருளைபுரி குகநாதா (3328)

பாடுகிற வாய ரானவடி யார்கள்
பாவவினை தீர அருளாயோ (4159)

**பிணி அழித்தல்:**

அடியவர் தமக்கு வருபிணி யகற்றி
அருமையிடு வெற்றி முருகோனே (3493)

அடியாருட கொடுநோய் தனை விலகாயோ (3678)

ஏது உடற்பிணி.........அடியார்பால் (4485)

**குற்றம் களைதல்:**

கூடிய அடியாருட
கோதறு படவே கிருபை புரிவாயே (3538)

**அன்புடன் ஆதரித்தல்:**

அடியார்களை ஆதரி (4041)

**பெருமைப் படுத்தல்:**

மனதுமகி ழிட அடியர்
மகிமைபெற மயிலின்மிசை வருவாயே (3767)

**இருளை ஒழித்தல்:**

அடியாருட இருள்தீரிட
அருளைபுரி குகநாதா (3314)

**தெளிவு கொடுத்தல்:**

வாடிய அடியார் தெளிவுசெய் (3390)

**சீர் செய்தல்:**

தேடிய அடியார்பால்
சீர்புரி சிகிமோர (3193)

**சாகா வரம் தருதல்:**

சாகாவரம் அடியாரிடம்
தானே. யருள் குருநாதா (3532)

**அருளைப் பொழிதல்:**

உலக மாய்கையில் அவதி ஆகியே
உனது தாள் தொழும் அடியார்பால்
கலக மேமிகு கலிக ளோட நின்
கருணை மாரிகள் பொழியாயோ (2781)

சற்குண அடியார்க் கருள்குக! (3286)

முதிய அடியார் களிடமே
முற்று மருளேசெய் (3441)

திடலெடுத்த புவி அடியருக் கருள்செய் (3700)

அடியவர்க் கருள் (4209)

பக்தர்கள் பக்கமுன்
பத்ம விழிக்கடை
புரியாத தெதனாலோ (4424)

கவிராயர் உள்ளம் முருகனிடத்தில் எந்த அளவு தோய்ந்திருந்ததோ அந்த அளவு செந்தமிழ் மொழியிலும் தோய்ந்திருந்தது. தம் உள்ளத்தில் முகிழ்த்த முருகப்பெருமானின் அருமை பெருமைகள் யாவற்றையும் செந் தமிழ் மொழியிலே கவிஞர் உருவம் தந்தார் ஆதலின், அம்மொழியினையும் அம்மொழியில் பாடும் வன்மையினையும் பாடல் செய்யும் பாங்கினையும் அப்பாடல் தமிழில் அமைந்தது ஆதலின், தமிழ்ப் பாடலினையும் விரும்பி நிற்கின்றார்.

**தமிழ் மொழி:**

நலவரு பைந்தமி ழருள் (3162)

தருவாய் தருவாய் தமிழ்யா வையுமே (3214)

முதிய நற்றமிழ்தனை அருளாயோ? (3252)

தண்டமிழை அருள்வாய் (3431)

பதுமாசனி பகர்சீர்தமிழ் தருவாயே (3577)

செந்தமி ழைச்சொல வந்தருள் செய்குவை (4191)

தேறுபடு தேனமரு செந்தமிழை நீதான்
தேறவாம் வேணபடி நீதருவை நாதா (4184)

தண்டமிழை இன்று அருள்வாய் (4312)

தேறு தமிழருள்வாய் (4333)

நற்றமிழ் உதவாயோ (4342)

சார மானதமிழ் பாட வேணு அருள்
தானிலாதபடி அலேவனோ (4379)

முத்தமி ழைத் தருவை (4428)

சந்த மிகுத்திடு தண்டமி ழைச் செய்வை (4447)

அகமகிழ் வாக்கில்
அழகிய சொல்லாக்கு தமிழ் தாராய் (4487)

நயமிகுத்திடு தமிழினைச்சொல
நலவரத்தினை உதவாயோ (4518)

தேறுநற் றமிழை நாய னுக்கருள்வை (4536)

தேறு நற்றமிழ் பாடும் வித்தைகள்
தேறி டக்கிருபை புரிவாயே (4561)

தண்டமிழ் சொலற்கருள்
தந்தினி நலத்தினை உதவாயோ (4565)

**தமிழ்ப் பாடல் :**

நாவினி லினிதாய் அமுரித மயமாய்
நாடிய தமிழ்பா டல்கள் தாராய் (2743)

இனிய தமிழ் பாட
லினிலதிக மாக அருள்வாயே (3067)

**பாடல் வேண்டல் :**

நயமாகிய பாடல் தருவாய் குமரேச ! (2713)

சாரம் மிஞ்சிய பாடல் தந்தருள் (2964)

கோது தவிர்பாடல்
கூறும் வரம் யாவும உதவாயோ (2998)

நாளு வித பாடலே
நாயேனிடம் நீ செய்வாய் (3040)

**தமிழைப் பாடத் திருவருள் வேண்டல் :**

வண்டமிழ் பாட அருள்வாய் (2674)

புகழ் தமிழ் பாடவே அருளாயோ (2677)

மதுகரித்த தமிழ்ச்சொ லெனக்கருள் (3053)

மதுக ரித்ததமி ழதனை யெனக்கருள் (3096)

வடிந்த தமிழ்பாட
மகிழ்ச்சியுடன் வேண தருளாயோ ? (3292), (3493)

வண்டமிழ் பாடிட வந்தருளே புரி (3851)

உலகோர் தன்னைச் சீரிய கவிஞன் என்று போற்ற வேண்டும் என்று முருகனை வேண்டும் ஆசிரியர் கவிஞனுக்கு வேண்டும் **கூரிய அறிவு** கெடாது தனக்கு என்றும் அமைய வேண்டும் என்றும் வேண்டுகின்றார்.

கூடிய கவி வாணரில்வெகு
கூர்மையன் என அருளாயோ ? (3456)

கூர்மை கெட்டலையா தெனக்கருள் (4023)

கூரிய அறிவில் தம் சிந்தனையைச் செலுத்தும் இக்கவிஞர் உள்ளம் தூய செந்தமிழ் நிலைத்து நின்று பயன்தரும் இடமாகவும் அமைந்திருந்தது நோக்குதற்குரியது. தமிழ்மொழி உலகத்தில் இன்று பேச்சு வழக்கு மறைந்த மொழிகள் பலவற்றுடன் காலப் பழமையில் ஒத்திருந்தும் இன்றும் மக்கள் வாழ்க்கைக் குதவும் மொழியாக விளங்கி வாழும் பெருமையினை உணர்ந்து 'முதிய நற்றமிழ்' (3252) எனப் போற்றிக் கொள்கின்றார். அம்மட்டோ! செந்தாமரையில் எழுந்தருளி கலைகளுக் கெல்லாம் தாயாக உற்றவள் எனப்படுபவள் **தாமரைவாழ் கலைமகள்**. அம்மகளும் இனிய செந்தமிழைப் பகர்கின்றாள் எனப் 'பதுமாசனி பகர் சீர்தமிழ்' (3577) என்று கூறி மகிழ்கின்றார்.

தமிழ்மொழியில் போராற்றலும் பெருநலமும் **அகத்திய முனிவர்** பெற்ற நெறி போலப் பெறவேண்டும் என முருகனை வேண்டுகின்றார்.

தமிழ்க் குறுமுனிஎனத் தமிழ் உதவாயோ ? (4665)

இயற்கைத் தன்மையிலேயே இயலிலும் இசையிலும் தான்மிக ஆற்றல் வாய்ந்தவன் என்று தன்னைப் பிறர் சொல்லுமாறு அருளவேண்டும் என,

இயலிசைக்குள் அடியன் மெத்த
இயல்பெனச் சொல் விட அருட்செய் குகவேளே (4677)

என்று வேண்டுகின்றார்.

கவிஞர் தமிழ்மொழியில் ஊறியவர் என முன் கூறினேன். தாய் மொழிப் பற்றுப் பிறமொழி வெறுப்பாகாது என்று அறிஞர் பலர் கூறுவர். 'செந்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன்' எனத் தமிழ்

மொழியுடன் தமிழர்தம் பழங்கடவுளாகிய முருகனையும் இயைத்துக் கூறினர் அருணகிரிநாதர். அவர் கூற்றுத் தமிழ்மொழியில் முருகனுக் கமைந்த ஆழ்ந்த அன்பினையும் எடுத்துக் காட்டுகிறது.

கவிராயர் அருணகிரியை ஒத்த தமிழ்ப்பற்று மிக்கவர் எனக் கூறின் மிகையாகாது. எனவே தமிழ்மொழியைப் பலவாறாகவும் புகழ்ந்து செல்வர்; பல வகையான இனிய அடைகளைத் தமிழ்மொழிக்குத் தந்தும் அடை இன்றியே தமிழ் எனமட்டும் கூறியும் சிறப்பிப்பார். இன்பமயமானது தமிழ்மொழி ஆதலின்,

**மதுரித்த தமிழ்** (2650) (2740) (3053) (3096)

என்றும்,

சொல்வளம் பொருள்வளம் முதலிய நல்வளம் பலவற்றையும் பெற்று மிகப் பழங்காலமாக வளர்ந்து உயர்ந்தமொழி தமிழ்மொழியாதலின்,

**வண்டமிழ்** (4126) (2674) (3851)

என்றும்,

மிகக் குறைந்த வல்லோசைகளைப் பெற்றுப் பெற்ற சில வல்லோசைகளையும் மெல்லோசைகளுடன் இணைத்துச் சொல்லாக்கும் வேளையில் இனிய நல்லோசையதாய் இம்மொழி சிறத்தலின்,

**தண்டமிழ்** (3563) (4108) (3431) (4312) (4565)

என்றும்,

இலக்கண வரம்பிலா மொழிகளைப் போலாகாது பண்டையிலக்கணப் பெருமையுடன் வளர்ந்து செழித்துச் சிறந்து உயர்ந்துவரும் மொழி இம் மொழியாதலின்,

**செந்தமிழ்** (3696) (3731) (3813) (4182) (4267) (4774) (4191) (4184)

என்றும்,

காலங்கடந்த கண்ணுதல் போல மூல மறிய முடியாத பழமை அமைந்ததாயினும் முதுமை இன்றிக் கன்னித்தமிழாய் இன்றும் என்றும் நின்று நிலவும் இயல்பினது ஆதலின்,

**பைந்தமிழ்** (3900) (3162)

என்றும்,

படிப்போர் நெஞ்சினைக் கனியவைக்கும் உணர்வுப் பிழம்பாய்த் திகழும் பெருமையினது ஆதலின்,

**கனிந்த தமிழ்** (3878)

என்றும்,

வடித்தெடுத்த தேனும் தெளியவைத்த அமிழ்தும் இனிக்கும் தன்மையில் இம்மொழியினும் குறைந்துவிடுகின்ற காரணத்தினால்,

**வடிக்கு மதுவான தமிழ்** (3705) (3292) (3493)

என்றும்,

படித்தற்குப் பல மொழிகள் அமையினும் அவற்றுள் கூறிவந்தவாறு சிறந்த இச்சீரிய மொழி படித்தற்குரிய மொழிகளுளே உயர்ந்தது ஆதலின்,

**படிக்கு முயர்வான தமிழ்** (3423)

என்றும்,

கூரிய இனிய நல்ல இனித்த செஞ்சொற்களால் ஆகிச் சிறக்கும் தன்மையது ஆதலின்,

**செஞ்சொற்றமிழ்** (3421)

எனவும்,

இயலாய் இயன்றும் இசையாய் இயன்றும் நாடகமாய் இயன்றும் இவ்வாறு முத்திற இயல்பினையும் தன்னிடத்துக் கொண்டு தழைக்கின்றது இம்மொழியாதலின்,

**முத்தமிழ்** (4428) (3985)

எனவும்,

**இயல் முத்தமிழ்** (4750)

எனவும்,

தெளிந்த நீரோட்டமுடைய நல்லாறு போலப் பல்லாயிரமாண்டுகளாகத் தமிழ் நிலத்தில் வாழும் மக்களிடையே உயிரோட்டத்துடன் குலவித் தெளிந்த தன்மையுடனும் சாரமாகிய தன்மையினுடனும் நலம் அமைந்த தன்மையுடனும் விளங்குவதாதலின்,

**தேறு தமிழ்** (4333) (4536) (4561)

எனவும்,

**சாரமான தமிழ்** (4379)

எனவும்,

**நற்றமிழ்** (4342)

எனவும்,

**போப்பையர்** முதலிய வெளிநாட்டு மக்களும் இம்மொழியின் தொடர்பினைப் பெற்றபோது இம்மொழியைப் பயின்ற அளவில் நில்லாது இம்மொழியோடு ஒன்றுபடும் தனிச்சிறப்பு நிலையை இம்மொழி பெற்ற பெருமையினது ஆதலின்

**சகத்தோர் பணி தமிழ்** (3321)

எனவும்,

கூறக் கூறக் கூறிமுடியாத நலம் தன்மாட்டுச் செறிந்த அளக்கலாகா அளப்பரும் தன்மையது ஆதலின்,

**புகழ் தமிழ்** (2676)

எனவும்,

**தமிழ்** (2743) (3214) (4320)

எனவும்,

சீரிய செந்தமிழை இக்கவிஞர் போற்றியுள்ளனர்.

கற்றுக் கவின் பெற்றவர் கவிஞராகிய இந்நூலாசிரியர். இறைவனுகிய செவ்வேளின் முன்னர்த் தாம் கற்ற கல்வியும் பெற்ற அறிவும் அணுவினும் சிறியதாய் விடுகின்ற தன்மையை உணர்ந்து தன்னறியாமையை உணரமுடியா நிலையை வெளிப்படுத்துகின்ருர்.

ஏது பிழை ஏது குறை ஏது எளி
யேன்முன் மயில்மிசை வாரா தறியேனே. (3754)

என்ன வினைவரினும் என்ன துயர் வரினும்
இன்ன தென அறியேன் அறியாயோ? (4168)

என்ன துயரிது என்ன துயரிது
என்ன பழியிது அறியேனே. (4653)

"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல், சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்" எனச் சிவபெருமானை நோக்கிப் பாடினர் **காரைக்காலம்மையார்**. "கருவாய்க் கிடந்துன் கழலே நினைக்கும் கருத்துடையேன், உரு

வாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன்" எனத் **திருப்பாதிரிப்புலியூரில்** எழுந்தருளியுள்ள சிவபெருமானைக் கடலினின்றும் கரையேறிய **திருநாவுக்கரசர்** பாடிப் பாராட்டினர். அடியார் பலர், இறைவன் திருவருட்குரியராகியோர் பலரும் கருவினுள் அமைந்த காலந்தொட்டுக் கடவுள் கழலிணைகளை மறவாத தன்மையை வெளிப்படுத்தினர். கவிஞர் அவரும் **'உடலெடுத்த நாள்முதல்'** கந்தன் சேவடியிணைகளை மறவாது அப்பெருமானைத் **தொழுது நிற்கும்** தம் தன்மையைக் கீழ்வருமாறு வெளிப்படுத்துகின்றார்.

உடலெடுத்த நாள்முதலா
 உனது பத்தியே மறவாத எனை (3476)

உனது பாதமதை
 உறுதி யாகநினை எனையாளாய். (3573)

அனவரத காலும் அடியை மறவாது
 தொழுவேன் நான். (3840)

உனதடியை நாளும்
 உறுதியென வேகொள்
உனதடியன் வாழ
 நினையாயோ ? (2859)

ஒத்த இனத்தினர் கூட்டத்தில் ஒருமை பெருகும். மலமழிந்த முத்தரும் தம்மையொத்த அடியாருடன் கூடி இருத்தலையே விரும்புவர். நெஞ்சம் வேறு வழியாகச் சலித்தலின்றிக் கொண்ட குறிக்கோளில் நிலை பெற்றிருத்தற்காகக் குறிக்கோளில் முதிர்ந்த அடியாருடன் இணங்கிக் கலந்து வாழ்வதால் பேச்சும் நினைவும் செயலும் மாறுபடாதிருக்கும் எனக்கொள்வர். ஆகவே கவிராயர் தம்மை யொத்த முருகனடியாருடன் வாழ்தலை விரும்புகின்றனர். முதிய அடியார்களுடன் தன்னையும் ஒருவனுகச் சேர்த்தெண்ண வேண்டும் என்றும் உலகறிய அடிமை எனக்கொள்ள வேண்டும் என்றும் வேண்டுதலினின்றும் அடியார் உறவினை வேண்டும் இவர் **மனப்பாங்கு** புலனுகின்றது.

முதிய அடியவரோடு என நினை. (3020)

உலகினி லடியார் பலரினி லெளியேன்
 உறுதுயர் தனையே விலகாயோ ? (2785)

உனதுடைய அடிமையென
 உலகறிய வெகுவயவு புரிவாயே. (3767)

உனதடிக்கு அடிமையெனத்திரிய
 உறுதியைத் தருவை. (4132)

உனதடியர் குழுவிலிவன் ஒருவனென நினைகுவை. (4311)
அடியவருட் காப்பன்
அடியனைமெய் யாக்கி அருள்வாயே. (4643)

உடலெடுத்ததன் பயனை ஒருவன் பெறுதலின் இன்றியமையாமையைத் தன்மேல் வைத்து

அட்டா இவனுடலெடுத்தது
அநியாயமதென உரைப்பார்கள்
அது தீராய் (3731)

எனக் கூறுவர் ஆசிரியர்.

தாயாகித் தண்ணளி கூட்டுவோன் கடவுள். சேயோனை தன் அன்னையாக வேண்டுவர் ஆசிரியர்.

அன்னைபோலெனை இனியாதரி (4620)

அவ்வாறு வேண்டுவோர் தன்னை மகன் எனக் கூறிக்கொள்ளும் பான்மையையும் பெற்றுள்ளார்.

சுதன் என்றுனருள் நீசெய் (3037)

இத்தகை நெஞ்சுணர்வு கொண்டு நித்தன் நிமலன் ஆகிய இறைவனைப் **பாடும் பணியே பணியாகக் கொண்ட** கவிஞர் தம்முள்ளம் உருக வேண்டும் என உருகி வேண்டுவர்.

பாடிக் கொண்டு நினையே
பார்த்தன் புகொடு பணிவேன். (2736)
பாடிய நாயினன் மீதினி லேவரு
பாவம தோடிட அருள்வாயே. (3594)
இருகணீர் மழை பொழியாதோ? (4590)

தன் நிலையில் சில வரங்களைத் திருமுருகனிடம் பின்வருமாறு கேட்கின்றார் ஆசிரியர். "புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா! உன்னடி என் மனத்தே வழுவாதிருக்க வரந்தரல் வேண்டும்" என்றார் திருநாவுக்கரசர். இவ்வாசிரியரும் முருகனை நோக்கி நாள்தோறும் அப்பெருமானைத் துதித்திட வரம் வேண்டி நிற்கின்றார்.

உனைநிதம் நினைத்துத் துதித்திட
ஒருவரம் எனக்குக் கருத்துடன் அருளாயோ? (4701)

மடவார் மயல் மாமுருகனை மறக்கச் செய்திடும் என்ற அச்சத்தினால் மகளிர் மயல் மாறித் தீர வேண்டும் என்றும் ஒரு **வரம்** கேட்கின்றார்.

எனக்கு ஒருவரம் அருட்செய் குருபரா!
இனத்த இதழ்மட வியாராலே
மனத்தில் வருதுயர் மிகுத்த மயறனை
மறக்க வருள்புரி குமரேசா! (4266)

கவிஞர் பாடிய இப்பாடற்பெருகுதி முழுவதும் வேண்டுகோள் உருவிலேயே அமைந்துள்ளது. 'அருள் தாராய்' 'தீராய்' என்றே பெரும்பாலும் பாட்டடிகள் முடிவதைக் காணலாம். சிறப்பாக அமைந்த சில வேண்டுகோள் பகுதிகளைத் தொடுத்துக் காண்போம்.

பாடல் முழுவதுமே **வேண்டுகோளாக** அமைவதைக் கீழ்க்காணும் பாடலில் காணலாம்.

எடுத்த செனனம் எவ்வளவோ!
எனக்கு ஒருவழி உதவாய்—இனிமேலாய்
அடுத்த எனதுதீ வினையெலாம்
அடுப்பி லுலையென மடியவே—அருளாயோ?
உடுத்த கடலுடை அவனிமேல்
உழத்துக் கொடிய கலிகளான்—மெலிவேனோ?
கெடுத்த மனம்நொடு முனிவரே
கிளக்கு மயில்மலை முருகையா!—எனையாளாய். (2737)

**'கலி'** என்றசொல் '**துன்பம்**' என்ற பொருளில் வழங்கப் படுவதைக் காண்கின்றோம். **கலியாகிய துயர்** தன்னைத் தொடாதிருக்கவேண்டும் என்று,

கலியாகிய துயரம் வெகு
கடல் மூழ்கிட விதியோதான் (2739)

காலங்கலி காலம் என்றுதான்
காணும்படி நாயன்முன் வந்துநீ-அருளாயோ? 2741)

கலியாகிய துயராகினி
கரைகாணிட அருளாமோர்
வலிதாகிய புணையாலெனை
மடியாவகை செய்குவையே (4231)

இவ்வாறு வேண்டுகின்றார்.

'வித்தை' என்பது அறிவு. **வித்தைகள் பலவற்றை** உலகோர் புகழுமாறு தனக்குத் தால் வேண்டும் என்று,

அதிக வித்தையை உலகர் மெய்த்திட
அடியனுக் கருள் புரிவாயே. (2876)

எனவும்,

பாவிகளின் பாவத்தைப் போக்கும் பண்பினுயர்ந்த முருகவேளைப் பாடிப் பழகிய வாயினால் **பாவிகளைப் பாடாதிருக்க** வேண்டும் என்று

பாவியர்கள் மீது பாடுவதை நாளும்
விலகாயோ? (2942)

எனவும்,

**தன்னுயிர் உடலைவிட்டு நீங்கு முன்னர்த்** தனக்கு அருள் புரிய வேண்டும் என்று

ஆவி போகுமுனே
ஆசை தீர வரமே புரிவாயே. (3317)

எனவும்,

தன்னுயிர் உடலைவிட்டு **நீங்காதிருக்கும் சாகாக்கலை** தனக்கு வேண்டும என

ஆவியக லாதவகை ஆதரவு நீசெய் (3647)

எனவும்,

'பிறப்பினும் வித்து' எனப்படும் **ஆசையை** அழித்தருள்க என்று

உலகமதி லாசைதனை அகல வேசெய் (2771)

எனவும்,

உயிர் உடலை விட்டு நீங்காதிருக்க அருள்புரிவாய் என வேண்டியவர் **இறத்தலைப் போக்கு** என

உறக்க மாகிய இறப்பு தீரிடு (2796)

மடியு நோய் தவிர் (3365)

எனவும்,

மீளப் பிறத்தல் துன்பத்தில் தன்னை ஆழ்த்திக் கொள்வதாகும் என்பதனை அறிந்த ஆசிரியர் மீளவும் **கருவில் நுழையாதிருக்க** வேண்டும் என

இனியொரு தரங் கருவினில் வர
எனைவிட மனம் நினையாதே (2638)

மடவார் மயல் மாமுருகனை மறக்கச் செய்திடும் என்ற அச்சத்தினால் மகளிர் மயல் மாறித் தீர வேண்டும் என்றும் ஒரு **வரம்** கேட்கின்றார்.

எனக்கு ஒருவரம் அருட்செய் குருபரா!
இனத்த இதழ்மட வியாரலே
மனத்தில் வருதுயர் மிகுத்த மயறனை
மறக்க வருள்புரி குமரேசா! (4266)

கவிஞர் பாடிய இப்பாடற்றொகுதி முழுவதும் வேண்டுகோள் உருவிலேயே அமைந்துள்ளது. 'அருள்தாராய்' 'தீராய்' என்றே பெரும்பாலும் பாட்டடிகள் முடிவதைக் காணலாம். சிறப்பாக அமைந்த சில வேண்டுகோள் பகுதிகளைத் தொடுத்துக் காண்போம்.

பாடல் முழுவதுமே **வேண்டுகோளாக** அமைவதைக் கீழ்க்காணும் பாடலில் காணலாம்.

எடுத்த செனனம் எவ்வளவோ!
எனக்கு ஒருவழி உதவாய்—இனிமேலாய்
அடுத்த எனதுதீ வினையெலாம்
அடுப்பி லுலையென மடியவே—அருளாயோ?
உடுத்த கடலுடை அவனிமேல்
உறுத்துக் கொடிய கலிகளான்—மெலிவேனோ?
கெடுத்த மனம்தொடு முனிவரே
கிளைக்கு மயில்மலை முருகையா!—எனையாளாய். (2737)

'**கலி**' என்றசொல் '**துன்பம்**' என்ற பொருளில் வழங்கப் படுவதைக் காண்கின்றோம். **கலியாகிய துயர்** தன்னைத் தொடாதிருக்கவேண்டும் என்று,

கலியாகிய துயரம் வெகு
கடல் மூழ்கிட விதியோதான் (2739)

காலங்கலி காலம் என்றுதான்
காணும்படி நாயன்முன் வந்துநீ-அருளாயோ? 2741)

கலியாகிய துயராலினி
கரைகாணிட அருளாமோர்
வலிதாகிய புணையாலெனை
மடியாவகை செய்குவையே (4231)

இவ்வாறு வேண்டுகின்றார்.

'வித்தை' என்பது அறிவு. **வித்தைகள் பலவற்றை** உலகோர் புகழுமாறு தனக்குத் தரல் வேண்டும் என்று,

அதிக வித்தைதயை உலகர் மெய்த்திட
அடியனுக் கருள் புரிவாயே. (2876)

எனவும்,

பாவிகளின் பாவத்தைப் போக்கும் பண்பினுயர்ந்த முருகவேளைப் பாடிப் பழகிய வாயினால் **பாவிகளைப் பாடாதிருக்க** வேண்டும் என்று

பாவியர்கள் மீது பாடுவதை நாளும்
விலகாயோ? (2942)

எனவும்,

தன்னுயிர் **உடலைவிட்டு நீங்கு முன்னர்த்** தனக்கு அருள் புரிய வேண்டும் என்று

ஆவி போகுமுனே
ஆசை தீர வரமே புரிவாயே. (3317)

எனவும்,

தன்னுயிர் உடலைவிட்டு **நீங்காதிருக்கும் சாகாக்கலை** தனக்கு வேண்டும என

ஆவியக லாதவகை ஆதரவு நீசெய் (3647)

எனவும்,

'பிறப்பீனும் வித்து' எனப்படும் **ஆசையை** அழித்தருள்க என்று

உலகமதி லாசைதனை அகல வேசெய் (2771)

எனவும்,

உயிர் உடலை விட்டு நீங்காதிருக்க அருள்புரிவாய் என வேண்டியவர் **இறத்தலைப் போக்கு** என

உறக்க மாகிய இறப்பு தீர்டு (2796)

மடியு நோய் தவிர் (3365)

எனவும்,

மீளப் பிறத்தல் துன்பத்தில் தன்னை ஆழ்த்திக் கொள்வதாகும் என்பதனை அறிந்த ஆசிரியர் மீளவும் **கருவில் நுழையாதிருக்க** வேண்டும் என

இனியொரு தரங் கருவினில் வர
எனைவிட மனம் நினையாதே (2638)

*கருவுலாவு பிறப்பிலா தருள்* (2720)

*கருவாசலின் நுழையா தருள்* (2753)

*கருக்குழி விழிடாது கனச்சிறை யானதோகை*
*மிசை வாராய்* (3494)

*குடர்தசைக ளாலும் எடுசெனன நோய்கள்*
*குறைதனலம் வேண தருளாயோ* (3497)

எனவும்,

*தன் முன் முருகன்* **தோன்றி** *அருள் புரிய வேண்டும் என*

*கனக தண்டை கலகலெனவே வருவாயே.* (3223)

*கனக தண்டை கலக லென்ன வருவாயே.* (3354)

*ஆறு முகமிலங்க பாத மணி சிலம்பு*
*ஆரமொடு குலுங்க வருவாயே.* (3430)

*நடிக்குச்சிறை மாமயில் ஏறிமுன்*
*நலத்தண்டைகள் ஒலிட வேளென்முன்*
*வருவாயே.* (3446)

*தண்டை யாடவே தந்தி மீதிலே வருவாயே.* (3762)

எனவும்,

**மூவரும் முருகனுக** வரவேண்டும் என

*மூவரும் நீயதாக வருவாயே.* (2663)

எனவும்,

வந்து **அருளைத் தரவேண்டும்** என

*இந்தா அருள் பிடியென்றே மயில்மிசை*
*எந்தாய்! அடியன்முன் வாயே.* (2724)

எனவும்,

**வீட்டின்பத்தினைத்** *தனக்குத்* **தரல் வேண்டும்** என

*வீட்டின் வருஇன் பமதருள்* (2960)

எனவும்,

பங்குனி உத்திரம் சிறந்த நாளாதலின் அந்நாளில் **உத்தரம்** தனக்கு வேண்டும் என,

உத்திர மதிலடியன்முன்
உத்திர மினியுதவுவை செகாதா ! (4778)

எனவும் இவர் வேண்டி நிற்கின்றார்.

அடக்க மொன்றே ஒருவரை ஆண்டவனிடம் சேர்க்கத் தகுந்தது. புல னடக்கம் முதலிய எல்லாம் விரும்பி வேண்டிப் பாடிய ஆசிரியர் 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்பதனை நன்கறிந்திருந்தனர். ஆதலின் தம்மை மிகப் பணிவுடன் **அடியான், கடையன், எளியன், நாயேன், சிறியன்** முதலிய சொற்களால் குறிக்கின்றார். அவற்றின் பெருவழக்கினைக் கீழே காண்க

**அடியன்** என்னும் வழக்கு 2651, 2714, 2724, 2725, 2767, 2786, 2789, 2794, 2842, 2859, 2866, 2890, 2892, 2941, 3007, 3018, 3035, 3069, 3071, 3075, 3083, 3129, 3164, 3318, 3348, 3365, 3507, 3566, 3632, 3635, 3824, 3873, 3941, 3985, 4058, 4070, 4319, 4347, 4559, 4632, 4643, 4686, 4702 முதலிய எண்ணுள்ள

பாடல்களிலும்

**அடியான்** என்னும் வழக்கு 3693, 4702 முதலிய எண்ணுள்ள

பாடல்களிலும்

**அடியனேன்** என்னும் வழக்கு 2800, 2933 முதலிய எண்ணுள்ள பாடல்களிலும்

**அடியேன் என்னும்** வழக்கு 2661, 2753, 2799, 2857, 2877, 2920, 3017, 3069, 3110, 3166, 3206, 3226, 3226, 3233, 3531, 3599, 3610, 3634, 3641, 3665, 3705, 3710, 3720, 3743, 3790, 3808, 3947, 4031, 4130, 4243, 4310, 4366, 4416, 4566, 4586, 4652, 4704, 4714, முதலிய

எண்ணுள்ள பாடல்களிலும்

**கடையன்** என்னும் வழக்கு 2901 முதலிய

எண்ணுள்ள பாடல்களிலும்

**சிறியன்** என்னும் வழக்கு 2714 முதலிய

எண்ணுள்ள பாடல்களிலும்

**எளியன்** என்னும் வழக்கு 2928, 2996, 3029, 3097, 3557, 3629, 3655, 3850, 3430, 3431, 3583, 3997, 4340, 4350, 4389, 4497, 4500, 4716, 4779

எனும் எண்ணுள்ள பாடல்களிலும்

**எளியேன்** என்னும் மழக்கு 2716, 2785, 3105, 3317, 3404, 3621, 3754, 3778, 3825, 3968, 4288, 4459,

என்னும் எண்ணுள்ள பாடல்களிலும்

**அன்பன்** என்னும் வழக்கு 2658, 2960, 3260, 3393, 3434, 4103, 4195, 4198, 4254, 4351, 4736

முதலிய எண்ணுள்ள பாடல்களிலும்

**தமியன்** என்னும் வழக்கு 4020, 4038, 4456 முதலிய எண்ணுள்ள

பாடல்களிலும்

**தமியேன்** என்னும் வழக்கு 3036, 3698 முதலிய

எண்ணுள்ள பாடல்களிலும்

**தாசன்** என்னும் வழக்கு 4086 முதலிய

எண்ணுள்ள பாடல்களிலும்

**தீயேன்** என்னும் வழக்கு 2704 முதலிய

எண்ணுள்ள பாடல்களிலும்

**தொண்டன்** என்னும் வழக்கு 2764, 3603, 4102, 4410 முதலிய

எண்ணுள்ள பாடல்களிலும்

**நாயன்** என்னும் வழக்கு 2702, 2768, 3395, 3548, 3575, 3745, 3763, 4053, 4612, 2837, 2853, 2951, 2943, 3021, 3037, 3039, 3090, 3265, 3284, 3352, 4019, 4333, 4358, 4394, 4504, 4508, 4728, 4767

முதலிய எண்ணுள்ள பாடல்களிலும்

**நாயடியன்** என்னும் வழக்கு 4439 முதலிய

எண்ணுள்ள பாடல்களிலும்

**நாயினன்** என்னும் வழக்கு 3228, 3594, 3614, 4317 முதலிய
எண்ணுள்ள பாடல்களிலும்

**நாயினேன்** என்னும் வழக்கு 3466 முதலிய
எண்ணுள்ள பாடல்களிலும்

**நாயேன்** என்னும் வழக்கு 2717, 3040, 4540
முதலிய எண்ணுள்ள பாடல்களிலும்

**பத்தன்** என்னும் வழக்கு 2649 முதலிய
எண்ணுள்ள பாடல்களிலும்

**வினையன்** என்னும் வழக்கு 3085 முதலிய
எண்ணுள்ள பாடல்களிலும் காணப்படுகின்றன. இச்சொற்கள் ஆசிரியர் அடக்கப் பண்பினையும் பணிவுணர்வினையும் புலப்படுத்துகின்றன.

## நூல்

இந்நூல் முழுவதும் சந்தப் பாடல்களால் ஆகியது. **சந்தப்பாவின்** வரலாற்றினைச் சிறிது காண்போம்.

தமிழ்மொழி இனிமை அமைந்தமொழி; இன்னோசை யுடையமொழி. இன்பத் தேன் போன்று உணர்விலும் உடலிலும் பயிலும் நாவிலும் இனிக்கும் நன்னயம் அமைந்த செம்மொழி என்பது தமிழறிந்தோர் அறிந்த செய்தியாகும். இத்துணை இன்பம் வாய்ந்த இம்மொழியில் எழுந்த பாவும், பாவகைகளும் இனிய ஓசையைத் தழுவிச் செல்வன. வெண்பா, முதலிய பாவகைகளுக்கும் ஓசை வரையறை உண்டு என்பது இங்கு நினைவூட்டிக் கொள்ளவேண்டும்.

பழந்தமிழ் இலக்கணம் தொல்காப்பியம். அதன்மாட்டுப் பாவகை பேசுவது பொருளதிகாரத்தில் அமைந்த செய்யுளியல். அதனிடத்து வண்ணங்களின் வகைகளைப் படிக்கின்றோம்.

தொடர்ந்த இடைக்காலத்தே பாவின் இலக்கணத்தைப் பகரவந்த தனி நூல்கள் யாப்பருங்கலக் காரிகையும், யாப்பருங்கல விருத்தியும் ஆகும். இந்நூல்களும் சந்தப் பாக்களாதற்குரிய வண்ணத்தின் இயல்புகளை அறிவித்துச் செல்கின்றன.

வண்ணத்தின் பெருமை அருணகிரிநாதர் திருப்புகழில் அறியப் படுகிறது. அருணகிரிநாதர் வண்ணத்தின் பல்வேறு வடிவங்களைச் செந்தமிழில் குழைத்து முருகன் பெருமையினை அதில் தோய்த்துப் படிப்

போரும் கேட்போரும் இசையால் அசைந்து கருத்தால் நெகிழ்ந்து கண்கள் நீர் வார உடல் சிலிர்க்க உள்ளம் மலர உணர்வு இழக்குமாறு பாடினர். இப் பாடல்கள் வண்ணத்திற்குச் சீரிய எடுத்துக் காட்டுகளாகக் கலங்கரை விளக்கங்களாகக் காட்சி யளிக்கின்றன.

தொடர்ந்த பிற்காலத்தே பலர் வண்ணத்தின் பெருமையை உணர்ந்து அதன் அருமைப் பாட்டையும் உள்ளங் கவரும் உணர்வுத் தன்மையையும் அறிந்து பாடத் தலைப்பட்டனர். இம்முறையால் வண்ணத்தின் அடிப் படையில் பல நூல்கள் எழுந்தன.

முதலதாகியதும் பின்னோர்க்கு வழிகாட்டியாக அமைந்ததும் திருப் புகழ். அப்புகழ் முருகன் புகழே. ஆதலின் பின் வந்தவர் பெரும்பாலும் முருகன் புகழினையே வண்ணப்பாவில் வழங்குவாராயினர்.

இவ்வண்ணம் வண்ணத்தின் வழி வளர்ந்து வந்த மெய்யடியார் கூட்டத் தில் இத் தொகுதியின் ஆசிரியாகிய கவிராயரும் ஒருவர் ஆவர். இவர் வண்ணப்பாவினையே இத்தொகுதி முழுவதும் பாடியுள்ளார். இந்நூலில் அமைந்தன வாகிய சுமார் 2500 பாடல்களேயன்றி இவர் பாடியுள்ள பாடல்கள் சுமார் 15000 க்கு மேல் உள்ளன. அவைகள் எல்லாம் விரைவில் அச்சிடப்படும் என நம்புகின்றேன்.

வண்ணம் அல்லது சந்தம் பாவிற்கு மெருகூட்டுவது என்ற அளவில் இந்த ஆசிரியர் நின்று விடவில்லை. சந்தப் பாவை முருகனும் பயின்றனன்; பாடினன்; என்றெல்லாம் பாடுகின்றார்.

சந்த மேவிய சங்க நாவல! (2834)
சந்த நாவல! (3890) (3580) (3545) (3109) (3268)
பண் குலவு வாயா! (3329)
சந்த மிகு நாவலா! (3907)
சந்த மிகுந்திடு செந்தமிழைப் பகர்
    சங்க மதில் புலமை யுளோனே! (4276)
சங்க மிகுத்திடு செந்தமிழைச் சொலும்
    தண் கனி வுற்றிடு திருவாயா! (4353)
சந்த மிகு செந்தமிழ்ச் சொல்
    தண் கனி நிகர்ந்ததொரு திருவாயா! (4360)
சந்த மிகு பாடல் வாய! (4367)

இவர் முருகனைப் பல வேண்டுகின்றார். அவற்றுள் சந்தத் தமிழைப் பாடத் திருவருள் புரிய வேண்டும் என்பது கருதுதற்குரியது.

சந்த மிகு பாடல் தந்தருள் செய் (2730)

சந்த மிகு கவி உந்தன் மலரடி
தங்கு துதி சொல அருளாயோ? (2801)

சந்த மிகு பாடல் தந்து யெனையாள வருவாயே. (3995)

சந்த மிகு பாடல்
தந்து தயவாக வருவாயே. (4094)

சந்தம் மிகுந்த பாடல் தந்து........
........அருள்வாயே. (4182)

சந்த மிகுத்திடு தண்ட மிழைச் செய்வை. (4450)

கவிராயர் பாடியுள்ள இப்பாடல்கள் பலநூறு சுவையுற்ற சந்தத்தினைப் பெற்றுத் திகழ்கின்றன. பதினைந்து சீர்கள் கொண்ட அடி முதலாக முச்சீர் கொண்ட அடி இறுதியாக இப்பாடல்கள் அமைகின்றன. ஒவ்வொரு பாட்டிலும் நான்கடிகள் அமைந்துள்ளன என்று கூறுதல் மிகையாகும்.

சீர்கள் எண்ணிக்கையில் ஒன்றாய் அமைந்தாலும் சீர்களின் வேறு பாட்டினால் இசை வேறுபாடு தோன்றிச் சந்த இன்பம் மிகுகின்றது. உதாரணமாகக் கீழே மூன்று பாடல்கள் காட்டப்படுகின்றன. காட்டப் பட்டுள்ள ஒவ்வொரு பாட்டும் எழுசீர் கொண்ட நாலடியால் ஆகியது. ஒற்றுமை இந்த அளவே. முதல்பாட்டில்,

“ கூவிளங்காய் தேமா புளிமா
கூவிளங்காய் தேமா புளிமா—புளிமாங்காய் ”

எனும் வாய் பாடும்,

அடுத்த பாட்டில்,

“ கருவிளங்காய் தேமா தேமா
கருவிளங்காய் தேமா தேமா—புளிமாங்காய் ”

என்னும் வாய் பாடும்

மூன்றாவது பாட்டில்,

“ தேமா கூவிளம் கூவிளம்
தேமா கூவிளம் கூவிளம்—புளிமாங்காய் ”

என்னும் வாய் பாடும் வருவதால் சந்த வேறு பாடு தோன்றி இன்பம் பயக்கின்றது. அம்மூன்று பாடல்களும் பின் வருமாறு;

**முதல் பாடல்:**

ஆவியது போகு முனமே
    ஆடுமயி லேறி யென்முனே—வருவாயே.
காவியலர் போலும் விழியாள்
    கானமயி லான் குறமா—னணைதோளா!
தேவியுமை மாது புதல்வா!
    தேவர்முத லோர்கள் பணிசீர்—இருதாளா!
வாவிதிகழ் சோலை நிறைசீர்
    மாமுடிகள் சூழு சிகிமா—மலைவாழ்வே! (4890)

**இரண்டாவது பாடல்:**

மருப்பொலியு நீப மான
    மலர்ப்புயவ! ஏழை யேற்கு—அருளாயோ?
திருப்பொலியு மார்பு சேரும்
    திருத் துளப மாய னுசை—மருகோனே!
தருப்பொலியு மீறு கானந்
    தனிக்குலவி வாழு மாது—மயிலாளா!
உருப்பொலியு மேரு போல
    உயர்ச்சிபெறு தோகை மேரில்—வருதேவே! (4892)

**மூன்ருவது பாடல்:**

வஞ்ச மாகவெ னேடுதான்
    வந்து மாயைசெய் மாதரா—சையைதீராய்.
நெஞ்ச மாசைகள் தீரவே
    நின்பொன் மாமயி லேறியே—வருவாயே.
அஞ்ச நேர்வரு சூரனுர்
    அண்டு சேனைக ளோடவே—அடுவாயே.
தஞ்சம் வேறிலை நாதனே!
    தங்க மாமலை நேர்சிகா—மலைவாழ்வே! (4893)

இந்நூலாசிரியர் கையாண்டுள்ள சந்த வேறுபாடுகள் மேலும் ஆராயுதற்குரியது. இடங்கருதி இந்த அளவில் நிறுத்திக்கொள்கிறேன்.

இந்நூலுள் அமைந்து கிடக்கும் கருத்துக்கள் பலமுறையாகவும் இதற்குமுன் ஆராயப்பட்டன.

இந்நூலாசிரியர் கையாண்டுள்ள **உவமைகள்** மிகச் சிலவே. ஆசிரியர் கருத்துக்கள் பலவற்றைப் புதிய முறையில் கூறுவதற்கோ பலரும் போற்றும் அரிய நூல் ஒன்றினைச் செய்து முடிக்கவேண்டும் என்ற நினைவினை அழுத்த முறக் கொண்டோ இப்பாடல்களைப் பாடுதற்குத் தொடங்கினர் என்று எண்ணுதற்கில்லை.

அவ்வகைய நினைவும் இவருக் கிருந்திருக்குமே யானால் இவர் பெற்றுள்ள சொல்லாற்றலையும் கடுகி விசைத்து அடித்துச் செல்லும் நீர் வெள்ளம் போல் பாடும் வன்மையையும் மிக நன்றாகப் பயன்படுத்தி யிருக்கலாம். ஆயிரக் கணக்கான பாடலைப் பாடுவது எளிய செயலன்று. சந்த ஓசை அமைய அழகிய தமிழ்ச் சொற்கள் கலந்து சேர்ந்து சங்கிலிபோல் தொடர்ந்து வரப் பாடும் தனிச் சிறப்பு ஆசிரியருடையது என்பது மறுக்க முடியாத தொன்று. தம் நெஞ்சினைத் திறந்து உள்ளத்தில் ஓடிய கருத்துக் கிளை உலகம் கடந்த ஒருவனிடத்திலே ஒப்படைக்கவே இவர் பாடியவர். ஆய்வுத் திறன்வழி எடைபோடும் ஆராய்ச்சியாளர் கையில் சிக்கி அவர் தம் துலைக்கோலில் ஏறி யிருக்கவேண்டிய நிலை தமக்கு நேரும் என்பதனைப் பாடியபோது அவர் எண்ணியே இருந்திருக்கமாட்டார். ஆதலினால் தான் உவமை முதலிய அணிவகைகளைப் பெரிதும் கையாண்டு அழகு படுத்தாது விட்டனர் என எண்ணவேண்டி யிருக்கிறது.

மேலும், அணி பொருளை விளக்குதற்குத் தேவை ஆகிய தொன்று. தெள்ளத் தெளிவாக எவரும் புரிந்து கொள்ளும் நிலையில் பாடுகின்ற இவ் வாசிரியரின் பாடல்கள் அறிவின் எல்லையைக் கடந்து உணர்வெல்லைக்கே உரியன ஆதலின் அணிவகைகளின் துணை வேண்டாது போயிற்று என்று கூறுவதில் குற்றம் ஒன்றும் இல்லை.

இனி, சூரபதுமனின் சினத்திற்கு இடியேற்றினையும், முருகப் பெருமானின் கருணையின் பொழிவிற்கு மேகத்தினையும், தன் தீவினை மடிதற்கு அடுப்பின் உலையையும், ஆட்டிப் படைக்கும் துன்பத்திற்குப் பம்பரத்தினையும், மகளிர் சாயற்கு உடைதலைப் போரில் இளைத்த தன்மைக்கும், மயிலின் விரைவிற்கு அம்பின் வேகத்தினையும், தான் மெலிதற்கு வெயிலான் மெலிந்து போகும் பயிரினையும், மாமழை அறியாது வாடிய பயிரினையும், தன்னை முருகன் அறிந்து கொள்ளாமைக்கு அறியாத பேர்களையும், இறை அருள் பெறாத தன்தன்மைக்கு வறியோர்களையும், மகளிர் வாய்மொழிக்கு வடித்தெடுத்த பாகினையும் உவமை கூறுவர்.

இடியதரு போல வேமுன்
 இகல்புரிசெய் சூரனுயி அடுவேலா! (2629)
கருணைபொழி மேகமென வருவாயே. (2637)
அடுத்த எனதுதீ வினையெலாம்
 அடுப்பில் உலையென மடியவே அருளாயோ? (2737)
கோப எமனிடியின் வரவுமே (2884)
ஆட்டி விடுபம்ப ரமென
 ஆக்கிவிடு துன்பமது தவிராயோ? (2960)
ஆடிய பம்பரம் என
 ஆகிய துன்பமவை விலகாயோ? (3247)

**முதல் பாடல்:**

ஆவியது போகு முனமே
    ஆடுமயி லேறி யென்முனே—வருவாயே.
காவியலர் போலும் விழியாள்
    கானமயி லான குறமா—னணைதோளா!
தேவியுமை மாது புதல்வா!
    தேவர்முத லோர்கள் பணிசீர்—இருதாளா!
வாவிதிகழ் சோலை நிறைசீர்
    மாமுடிகள் சூழு சிகிமா—மலைவாழ்வே! (4890)

**இரண்டாவது பாடல்:**

மருப்பொலியு நீப மான
    மலர்ப்புயவ! ஏழை யேற்கு—அருளாயோ?
திருப்பொலியு மார்பு சேரும்
    திருத் துளப மாய னாசை—மருகோனே!
தருப்பொலியு மீறு கானத்
    தனிக்குலவி வாழு மாது—மயிலாளா!
உருப்பொலியு மேரு போல
    உயர்ச்சிபெறு தோகை மேரில்—வருதேவே! (4892)

**மூன்றாவது பாடல்:**

வஞ்ச மாகவே னோடுதான்
    வந்து மாயைசெய் மாதரா—சையைதீராய்.
நெஞ்ச மாசைகள் தீரவே
    நின்பொன் மாமயி லேறியே—வருவாயே.
அஞ்ச நேர்வரு சூரனார்
    அண்டு சேனைக ளோடவே—அடுவாயே.
தஞ்சம் வேறிலை நாதனே!
    தங்க மாமலை நேர்சிகா—மலைவாழ்வே! (4893)

இந்நூலாசிரியர் கையாண்டுள்ள சந்த வேறுபாடுகள் மேலும் ஆராயுதற் குரியது. இடங்கருதி இந்த அளவில் நிறுத்திக் கொள்கிறேன்.

இந்நூலுள் அமைந்து கிடக்கும் கருத்துக்கள் பலமுறையாகவும் இதற்குமுன் ஆராயப்பட்டன.

இந்நூலாசிரியர் கையாண்டுள்ள **உவமைகள்** மிகச் சிலவே. ஆசிரியர் கருத்துக்கள் பலவற்றைப் புதிய முறையில் கூறுவதற்கோ பலரும் போற்றும் அரிய நூல் ஒன்றினைச் செய்து முடிக்கவேண்டும் என்ற நினைவினை அழுத்த முறக் கொண்டோ இப்பாடல்களைப் பாடுதற்குத் தொடங்கினார் என்று எண்ணுதற்கில்லை.

அவ்வகைய நினைவும் இவருக் கிருந்திருக்குமே யானால் இவர் பெற்றுள்ள சொல்லாற்றலையும் கடுகி விசைத்து அடித்துச் செல்லும் நீர் வெள்ளம் போல் பாடும் வன்மையையும் மிக நன்றாகப் பயன்படுத்தி யிருக்கலாம். ஆயிரக் கணக்கான பாடலைப் பாடுவது எளிய செயலன்று. சந்த ஓசை அமைய அழகிய தமிழ்ச் சொற்கள் கலந்து சேர்ந்து சங்கிலிபோல் தொடர்ந்து வரப் பாடும் தனிச் சிறப்பு ஆசிரியருடையது என்பது மறுக்க முடியாத தொன்று. தம் நெஞ்சினைத் திறந்து உள்ளத்தில் ஓடிய கருத்துக் கிளை உலகம் கடந்த ஒருவனிடத்திலே ஒப்படைக்கவே இவர் பாடியவர். ஆய்வுத் திறன்வழி எடைபோடும் ஆராய்ச்சியாளர் கையில் சிக்கி அவர் தம் துலைக்கோலில் ஏறி யிருக்கவேண்டிய நிலை தமக்கு நேரும் என்பதனைப் பாடியபோது அவர் எண்ணியே இருந்திருக்கமாட்டார். ஆதலினால் தான் உவமை முதலிய அணிவகைகளைப் பெரிதும் கையாண்டு அழகு படுத்தாது விட்டனர் என எண்ணவேண்டி யிருக்கிறது.

மேலும், அணி பொருளை விளக்குதற்குத் தேவை ஆகிய தொன்று. தெள்ளத் தெளிவாக எவரும் புரிந்து கொள்ளும் நிலையில் பாடுகின்ற இவ் வாசிரியரின் பாடல்கள் அறிவின் எல்லைக் கடந்து உணர்வெல்லைக்கே உரியன ஆதலின் அணிவகைகளின் துணை வேண்டாது போயிற்று என்று கூறுவதில் குற்றம் ஒன்றும் இல்லை.

இனி, சூரபதுமனின் சினத்திற்கு இடியேற்றினையும், முருகப் பெருமானின் கருணையின் பொழிவிற்கு மேகத்தினையும், தன் தீவினை மடிதற்கு அடுப்பின் உலையையும், ஆட்டிப் படைக்கும் துன்பத்திற்குப் பம்பரத்தினையும், மகளிர் சாயற்கு உடைதலைப் போரில் இளைத்த தன்மைக்கும், மயிலின் விரைவிற்கு அம்பின் வேகத்தினையும், தான் மெலிதற்கு வெயிலான் மெலிந்து போகும் பயிரினையும், மாமழை அறியாது வாடிய பயிரினையும், தன்னை முருகன் அறிந்து கொள்ளாமைக்கு அறியாத பேர்களையும், இறை அருள் பெறாத தன்தன்மைக்கு வறியோர்களையும், மகளிர் வாய்மொழிக்கு வடித்தெடுத்த பாகினையும் **உவமை** கூறுவர்.

இடியதுரு போல வேமுன்
இகல்புரிசெய் சூரனுவி அடுவேலா! (2629)

கருணைபொழி மேகமென வருவாயே. (2637)

அடுத்த எனதுதீ வினையெலாம்
அடுப்பில் உலையென மடியவே அருளாயோ? (2737)

கோப எமனிடியின் வரவுமே (2884)

ஆட்டி விடுபம்ப ரமென
ஆக்கிவிடு துன்பமது தவிராயோ? (2960)

ஆடிய பம்பரம் என
ஆகிய துன்பமவை விலகாயோ? (3247)

வாரி முடித்த குழலார்
　　வாளை நிகர்த்த விழியார்—மயலாலே
போரில் இளைத்த சகலர்
　　போல இருத்தல் நலமோ? (3322)

கதி படைத்திடு சாமிருத்திடு கனம கிபரி (3469)

வெயிலான் மெலி பயிர் போலவும்
　　விளராதருள் புரிவாயே. (3470)

மாமழை யறியாதே
　　வாடிய பயிர்போல மெலிவேனோ? (3796)

அறியாத பேர்கள் போல
　　அடியேனை வாழ வேண தருளாதது எதனாலோ?(3808)

வறியோர்கள் போலிலாது வரமேசெய். (3808)

வடித்தமொரு பாகுபோல மருட்டுமொழி வாயினர் (3931)

வடித்தெடுத்த பாகுபோல
　　மயக்கிசை வாயின் வேடர் மகள் (4237)

காட்டப்பட்ட உவமைகள் யாவும் மிக எளிமை யமைந்தனவாய்த் தவறின்றிப் புரிந்து கொள்ளுதற்குரியனவாய் அமைந்த தன்மை போற்றிக் கொள்ளுதற்குரியது.

இந்நூலில் சந்த இசைக்கேற்பச் சொற்களைப் பலவாத் திரித்து ஆள்வதைக் காணலாம். சில வடசொற்களை அவ்வாறே ஆளுதலையும் காணலாம். சில கீழே காட்டப்பட்டுள்ளன.

திவியம் (2625)
தாமிசம் (2667)
வெகுசான (2668)
லெட்சுமி (2703) (2740) (4581) (4709)
பிழியாயோ (2742)
தேசசு (2744)
மகிட்சி (2796)
ப்னகசம் (2837)
பூசிதை (2843)
மெனுக்கு (2845)
பனுக்கு (2845)
உருமை (2875)

செகம் (2945) (4240)
நிமிசம் (3009)
இப்ப (3014) (4494) (4543) (4603) (4649)
பெலம் (3070) (3196)
எதிராளி (3227) (2623)
சணம் (3454) (3848) 4723)
கெருவம் (3479)
செனனம் (3497) (3800) (4170) (4574) (4689) (4695)
இரச்சக (3533)
சனனம் (3738)
கெதி (3745) (3884) (4706)
பெலத்த (3801)
நிமிசம் (3874)
கெஞ்ச (3894)
பிலுக்கு (3955)
பெலம் (4026) (4452) (4719)
எப்ப (4112)
ரெண்டு (4143) (4214) (4262) (4351) (4453) (4725)
செனகன் (4170)
ரெகுநாதன் (4212)
கெளித்திட (4263)
அடுமை (4350)
இருக்குதா (4383)
சுபட்சம் (4505)
இரட்சி (4505)
ரட்சி (4517)
ரட்சக (4659)
தாச்சணியம் (4664)
பிறத்தியார் (4400)

இறுதியாக, இக்கவிதைத் தொகுதி முருகனிடத் தெழுந்த முருகிய அன்பால் எழுந்தது என்பதும், இக்கவிதை யாசிரியர் மிகச் சிறந்த முருகன் அடியார் என்பதும், மிக அரிய கவிஞர் என்பதும் மறவாது போற்றிக் கொள்ள வேண்டியன.

## முடிவுரை

இந்நூலினைச் சரிபார்த்து அச்சிடுதற்குரியன செய்து இந்நூலோடு இடையறாப் பெருந்தொடர்பினை எனக்குண்டாக்கித் தந்த **சென்னை அரசாங்கத்திற்கும்** இத்தகைய அரிய நூற்றொகுதிகளைத் தேடிக் கண்டு உலகறியச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டு வாழும் **திரு தி. சந்திரசேகரன்** அவர்களுக்கும், செம்மையமைந்த முறையில் செய்யுள் முதற் குறிப்பகராதியினைத் தொகுத்து உதவிய தமிழ் ஆசிரியர் **திரு வி. ஸ்ரீ. கிருட்டிணன்** அவர்களுக்கும், அழகான முறையில் காலங் கடத்தாது அச்சிட்டு உதவிய **இரத்தினம் அச்சகத்து உரிமையாளருக்கும்** எனது நன்றி உரியது.

தமிழ் வழியில் என்னை ஊக்கித் தமிழ்க் கடவுளாகிய முருகப் பெருமானிடத்தில் ஆறாத மெய்யன்பினை என் உள்ளத்தே மலர்வித்த ஐந்தாம் பட்டத்தமர்ந்து ஞானச் செங்கோல் ஓச்சிய புலிசை அருட்டிரு **ஞானியார் அடிகளின் திருவடிகளுக்கும்,** இந்நூலினைச் செம்மையாக அறிந்து அச்சிட்டு முடித்தற்கு ஆவன எல்லாவற்றையும் என்னுள் இருந்து இனிமையாய் இயக்கி அறியவைத்த **இயவுள், புலவர் ஏறு** எனச் சங்கப் புலவர்களால் போற்றித் துதிக்கப்படும் **திருமுருகன் திருவடிகளுக்கும்** என இறைஞ்சுதலைக் கூறிக் கொள்கின்றேன்.

**முருகனே! செந்தில் முதல்வனே! மாயோன்**
**மருகனே ஈசன் மகனே!—ஒருகைமுகன்**
**தம்பியே! நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுதும்**
**நம்பியே கைதொழுவேன் நான்.**

"பழம் பாடல்"

அரசினர் கலைக் கல்லூரி
சென்னை.
9—7—1956.

**முத்து. இராசாக்கண்ணனார்.**

உ

தண்டாயுதபாணி துணை.

# தினகவிதை

## (இரண்டாம் பாகம்)

2623. எதிராளி யாக வருசூர னோடு
இகலே செயுங்கூர்—அயிலாளா!
கதியான தோகை மயிலாள! தேவ
கணநாத! நீப—மலர்மார்பா!
மதிசூடு வேணி பரமேசர் போற்று
மகவாக நீடு—குமரேசா!
நதிசூழு நேம நயனு டனேபொன்
நலமேவு தோகை—மலைதேவே!

2624. பொருமடங்கல்நிகர்
வலுவி லங்கமயா
பொருது கின்றவசு—ரனைநேராய்
இருமடங்குஅமை
யுயிர டங்கமுனம்
இருபி ளந்துசெய்—யும்வீரா!

---

2623. எதிராளி - பகைவன். சூரன் - சூரபதுமன். இகல் - பகைமை. அயில் - கூர்மை; கூர்மை யமைந்த வேலைக் குறித்தது. கதி - விரைவு: இச்சொல் இந்தப் பொருளிலேயே பெரும்பாலும் பின்வரும் பாடல்களில் வழங்கப்படுகிறது. தேவ கணநாத - தேவ கணங்களுக்குத் தலைவனே. நீபமலர் - கொன்றை மலர். மதி - சந்திரன். வேணி - சடைமுடி; இச்சொல், சிவபெருமானைக் குறிக்கப் பல இடங்களில் பயன்படுத்தப்படுகிறது. பரமேசர் - பரம+ஈசர் - மேலாகிய இறைவன். நீடு - நிலைத்து விளங்குகின்ற. பொன் நலம் - அழகின் சிறப்பு.

2624. பொரு - போர் புரிகின்ற. மடங்கல் - சிங்கம். வலு - வன்மை. இலங்க - விளங்க. மயா - மாயா என்பது குறுகி நின்றது; சூரபதுமன் இறந்தொழியாது சேவலும் மயிலும் ஆனான் என்பது கந்தபுராணம். இருமடங்கு அமை உயிர்: சூரன், பதுமன் என்று இரு பகுதிகளாக அமைந்த உயிர். இரு பிளந்து - இரு

மருநி றைந்தநற
வுகுக டம்பமணி
மலர ணிந்தசுப—கரவேளே !
அருளம் கொண்டுஎன்முன்
வருவை குன்றைமலை
அதில்வ ளர்ந்தகுரு—பரநாதா !

2625. அவுணர் குலகாலா !
அடிய னிடம்நீயே—வருவாயே
கௌரி தருபாலா !
கருணை யுடன்வாராய்—அமரேசா !
மவுன முனிவோரே
மயிலி னொடுதாமே—பணிதாளா !
திவிய மிகுசீரார்
சிகிம லையின் நாதா !—எனையாளாய் !

2626. வந்த சூருடன்
மண்ட வேல்விடு—செயவீரா !
கந்த மாமலர்
கஞ்ச நாயகர்—பணிதாளா !
அந்த மேவிய
அண்ட நாயக !—எனையாளாய்
சந்த னாவல்சூழ்
தண்சி காமலை—முருகோனே !

---

கூறுகளாகப் பிளந்து எனக் கொள்க. மரு - நறுமணம். நற - நறா, தேன். உகு - ஒழுகுகின்ற. கடம்பம் அணிமலர் - கடம்பமாகிய அழகுற்ற மலர். சுபகரவேளே - சுபத்தை (நலத்தை) உண்டாக்குபவனாகிய முருகவேளே. அருளம் - அருள் என்னும் சொல் அம்சாரியைகொண்டு நின்றது. அருள்+அம். அருள் - அன்பின் முதிர்வில் விளையும் பண்பு. வருவை - வருகுவாய். வளர்ந்த - எழுந்தருளியுள்ள.

2625. அவுணர்-அரக்கர். குலகாலா-குலத்திற்கு எமன் ஆனவனே. கௌரி-உமை. அமரேசா - அமரர்கள் (தேவர்கள்) தலைவனே. 'மவுன முனிவோர்கள் நின் மயிலினையும் நின் திருவடிகளையும் பணிகின்றார்கள்' என்பது மூன்றாம் அடியின் பொருள். திவியம் - திவ்வியம் - சிறப்பு.

2626. சூருடன் - சூர்+உடல் - சூரபதுமன் உடல். மண்ட - பட்டுப் பிளக்குமாறு. செயவீரா - வெற்றி பெற்ற வீரனே. கந்தம் - நறுமணம். கஞ்ச நாயகர் - தாமரை மலரில் எழுந்தருளியுள்ள பிரம்மா. அந்தம் - அழகு. சந்தனாவல் - சந்தன், நாவல் - சந்தன மரமும் நாவல் மரமும். தண் - குளிர்ந்த.

2627. தாதவிழ் நீப மாலை
தானணி மார்ப! தேவர்—பணிதாளா!
நாதர்மெய்ஞ் ஞான சோதி
நாடுமை மாது பாகர்—அருள்பாலா!
நீதய வாக நாளும்
நீடும னேக வாழ்வு—அருள்வாயோ?
வாதகல் சோலை சூழும்
வாரசி கின்மலை மேவு—குருநாதா!

2628. கருணா நிதியா கையினாலே
கனிவாய் வரமே
தானருள்வாய்—அமரேசா!
அருமா மறையோர் மாமுனிவோர்
அனைவோர் களுமே
பாதமதே—பணிதேவே!
தருநா யகனார் மாதுடனே
தனத்தா சையினா
லேபுணர்சீர்—புயலோலா!
வருசூ ருடனே போர்புரிவேல்
மகிபா! சிகிமா
மேரினிலே—வருதேவே!

---

2627. தாது - பூந்தாது-மகரந்தம். தேவர் பணிதாளா - தேவர்கள் பணிகின்ற (வணங்குகின்ற) திருவடிகளை உடையவனே. 'நாதரும், உண்மை யறிவுமயமாகிய வரும் தன்னைத் தேடும் உமையம்மையை ஒரு பாகத்தில் உடையவரும் ஆகிய சிவ பெருமான் தந்த இளையோனே' - என்பது இரண்டாவது வரியின் பொருள். தயவாக - கருணையுடன். நாளும் - நாள்தோறும். வாது - குற்றம். அகல் - நீங்கிய. வார சிகின்மலை - அன்பர் தொழும் அன்பமைந்த மயில்மலை.

2628. கருணாநிதி - அருட்கடல். கனிவாய் - உள்ளம் கனிந்து. அருமா மறை யோர் - அருமை பொருந்திய பெருமை அமைந்த மறை வழி நிற்போர். அனை வோர் - மறையோரும் முனிவோரும் நீங்கிய மற்றை எல்லோரும். பாதமதே - பாதம்+அது+ஏ - அது - பகுதிப்பொருள் விகுதி, ஏ - தேற்றப்பொருளில் வந் தது. தருநாயகனார் மாது - கற்பகத்தருவின் தலைவனாகிய இந்திரன் மகள் - தேவ யானை. மகிபா - பெருமை உடையவனே.

2629. வடிவுபெறு வேட மாது
மயலினெடு சேரு நாதா!—எனையாளாய்
அடியவர்கள் ஆசை தீர
அருள்புரியு நாத! நாயென்—முனம் வாராய்
இடியதுரு போல வேமுன்
இகல்புரிசெய் சூர னாவி—அடுவேலா!
முடியுலவு தோகை மேலில்
முதல்வ! அடி யேன்மு னாக்—வருவாயே.

2630. மதுரித மொழியாள்
குழையடர் விழியாள்
மணமலி மலர்மா
லிகைபுனை குழலாள்
பதுமென முகைபோல்
திரளிணை முலையாள்
பணியணி குறமான்
மருவிய துரையே!
சதுமறை யயனார்
குருபர! முதலே!
தமியன்முன் உடனே
மயிலினில் வருவாய்
விதுதவழ் பொழில்சூழ்
சிகிமலை யரசே!
வெகுதய வுடனே
வரமினி யருள்வாய்

---

2629. வடிவு - அழகு. வேடமாது - வேடர்களிடை வளர்ந்த வள்ளியம்மையார். மயல் - மையல் - இன்ப மயக்கம். நாயென் - நாயேன், எனற்பாலது குறுகி நின்றது. இடியதுரு - இடியின் உருவம். இகல்புரி செய் - மாறுபாட்டினை விருப்பத்தோடு செய்த. ஆவி - உயிர். அடுவேலா - கொன்ற வேலை ஏந்தியவனே. முடி - மலையுச்சி. முனாக - முன்னாக.

2630. மதுரிதம் - இன்பம். குழை - காதில் அணியும் அணி. மலி - மிகுந்த. மாலிகை - மாலை. புனை - சூடிய. பதுமென - பதுமம் என. பதுமம் - தாமரை. பணி - நகை. குறமான் - குறவர் மகளாகிய வள்ளி யம்மையார். துரை - முருகனைக் குறித்தது. சதுமறை - நான்கு வேதங்கள். அயனார் - பிரமனார். குருபர - பிரணவப் பொருளை அறியாத பிரமனுக்கு அறிவிக்க நின்றநிலையில் குருபரனாக விளங்கியவனே. விது - மதி.

2631. வந்த சூருடன்
மங்க வேல்விடு—செயவீரா!
சந்த நாவலர்
சந்த்ர வேணி—அருள்பாலா!
கந்த னே!யருள்
கஞ்ச னூர்பணி—குருநாதா!
அந்த மார்சிகி
அண்ட ரேபணி—மலையாளா!

2632. அடல்புரி சூர
னலறிட வேலை—எயும்வீரா!
கடல்துயின் மாயன்
கனமிக வான—மருகோனே!
நடமிடு தோகை
நலமிகு சீர்கொள்—பரியாளா!
வடவரை நேரு
மயின்மலை மேவு—குகநாதா!

2633. அடம்புரி சூரன்
அடுங்கன போரி—லெதிராகி
திடம்புரி வேலின்
செயஞ்செயு நாத!—முருகோனே!
வடம்புனை மார்பின்
மடந்தைபொன் வேடர்—மகள்தோளா!
தடம்புகு சோலை
தகுஞ்சிகி மேரில்—வருதேவே!

---

2631. முதலடி, 2626-ம் பாட்டின் முதலடியுடன் பெரும்பாலும் ஒத்திருத்தல் காண்க. சந்த நாவலர் - ஓசை மயமாகிய வேதத்தைப் பயிலும் நாவினைப் பெற்ற சிவபெருமான். சுந்தரம் - அழகு. அண்டர் - தேவர்.

2632. வேலை - வேலினை. எயும் - எய்யும். மாயன் - திருமால். நேரு - ஒத்திருக்கின்ற.

2633. அடம் - துன்பம். அடுங்கனபோர் - சூரபதுமன் முருகனுடன் சண்டை செய்தபோது அவன் இறுதியில் மாமர உருவாகி உலகில் வாழும் எல்லாஉயிர்களையும் அழித்தற்கு முற்பட்டபோது எழுந்த பெரும்போர். எதிராகி - எதிர்ப்பட்டு. திடம் - வன்மை - செயம் - வெற்றி. வடம் - மாலை. மடந்தை - வள்ளியம்மையார். தடம்புகு சோலை - இடம் அகன்ற சோலை.

2634. வனத்தில் வந்திடு
வேட நாயகி
மகிழ்ச்சி கொண்டணை
நாயக னே!கிருபை—புரிவாயே
சினத்தில் வந்தெதிர்
சூர னையெதிர்
செயித்த செங்கதிர்
வேல னே!அருள்—புரிவாயே!
மனத்தில் வந்திடு
நோய்கள் ஓடிட
மகிழ்ச்சி பொங்கிட
வாசை யாகிமுன்—வருவாயே
தனத்தில் மிஞ்சிய
கோடு சேர்சிகி
தழைத்த குன்றினில்
வாழ்கு கா!நல—முதவாயோ

2635. வஞ்ச மேசெயு
மண்ட ராகிய
வம்ப னாகிய—அசுரோன்மேல்
மிஞ்ச வேயமர்
கொண்ட கூரிய
மென்பு லால்கமழ்—அயிலாளா!
தஞ்சம் வேறிலை
இன்பமேயருள்
சந்திர வேணிய—ரருள்பாலா!
கஞ்ச நாயகர்
கண்டு தாள்பணி
கங்குல் சூழ்சிகி—மலைநாதா!

---

2634. வேட நாயகி - வேடர் தலைவி - வள்ளியம்மையார். மனத்தில் வந்திடு நோய்கள் - உள்ளத்தை வாட்டும் துன்பங்கள். தனம் - முலை. கோடு - மலைமுடி. குகன் - வாழ்த்தும் அன்பர் உள்ளக் குகையில் வாழ்பவன்.

2635. மண்டர் - முற்பட்டுத் துன்பம் செய்வோர். வம்பன் - வீணன். மிஞ்ச - எதிர்த்தவனை மிஞ்சுமாறு (வெல்லுமாறு) புலால் - மாமிச மணம். தஞ்சம் - பற்று. சந்திரவேணியர் - சந்திரனை முடியில் அணிந்த சிவபெருமான். தாள் - திருவடிகள்.

2636. வானவர் தொழுதாளா!
வாசனை மிகுநீபா!—கிருபைதாராய்
கானக மடமானுள்
காதல் கொள் புயசீலா!—நயவேளே!
தானவர் குலகாலா!
தார்புனை துணைவேலா!—குகநாதா!
தேனலர் பொழில்சூழ்சீர்
சேர்சிகி மலைமீதே—வருதேவே!

2637. எதிர்வரு சூரனுடன்
இகல்புரியும் வேல்விடு—செயவீரா!
மதியணி சடாதரர்தன்
மகவுயர்குகா!குமர!—குருநாதா!
கதிமயி லேறிவரு
கருணைபொழி மேகமென—வருவாயே
நதியுலவு நேமமணி
நகுமுடிகு லாவுசிகி—மலைநாதா!

2638. இனியொருதரங்
கருவினில்வர
எனைவிடமனம்—நினையாதே
பனிபடுபொழில்
மடமயில்தனை
பணைமுலைதனில்—அணைவோனே!
மனிதர்களிடை
இடமிலைமுனம்
மயிலொடிவண்—வருவாயே
கனியுதிர்பொழில்
நிறைசிகிமலை
கமழ்குருபர!—முருகோனே!

---

2636. கிருபை - திருவருள். கானக மடமானுள் - கானத்தில் வாழ்ந்த மடம் பொருந்திய மான்போன்றவள், வள்ளி. நயவேளே - யாவரும் விரும்புதற்குரிய முருகனே. தானவர் - அரக்கர். தார் - மாலை. துணைவேலா - தொழுதார்க்கெல்லாம் பெருந்துணையாகும் ஞான வேலினை ஏந்தியவனே. தேனலர் பொழில் - தேன் நிறைந்த மலர் அலரும் சோலை.

2637. சடாதரர் - சடையினைத் தரித்தவர், சிவபெருமான். மகவுயர் குகா - மகவாகிய உயர்ந்த குகனே. மேகம் என - மேகம் என்று சொல்லுமாறு. நகுமுடி - விளக்கம் அமைந்த மலையுச்சி. குலாவு - விளங்குகின்ற.

2638. இனியொருதரம் - மற்றொரு முறை. கரு - பிறப்பு. வர - வருமாறு. பனிபடு பொழில் - குளிர்ச்சி அமைந்த சோலை. இடமிலை - 'நான் வாழ்தல் இயலாது'. என்னும் பொருளது. கனி - பழம்.

2639. வானவர் தொழுசரணா!
மாமறை புகழ்குமரா!—குருநாதா!
தேனலர் மலர்மகளாள்
சீரொடு புணர்விறலார்—மருகோனே!
பானல மதியணிவோர்
பார்வதி தருமகவே!—எனையாள்வாய்
தானவர் குலகாலா!
தார்புனை புய! சிகிமா—மலைநாதா!

2640. தருவில் அரசுபுரி
இறைவன் முதலமரர்
சகல முனிவர்பணி—இருதாளா!
பொருது வசுரருடன்
எதிரில் அமரம்புரி
புலவு மிகுவயில்சேர்—அமரேசா!
அருமை யுடன்வருவை
முருக! குக! குமர!
அழகு திகழ்மயிலில்—வருதேவே!
பெருமை மிகுபொழில்கொள்
நிறையு மழகுதிகழ்
பிரபல மிகுசிகியின்—மலைநாதா!

2641. நடன மிட்டிடு
மயிலி லுற்றிடு
நறும லர்த்தொடை!—புனைமார்ப!
கடம தத்திடு
இரும ருப்புயர்
களிறு மெச்சிய—துணையாளா!

---

2639. வானவர் - தேவர். மலர்மகளாள் - திருமகள். விறலார் - திருமால். பானல மதி அணிவோர் - சிவபெருமான். தார் புனை புய - மாலை அணிந்த புயத்தினை யுடையவனே.

2640. தரு - கற்பகத்தரு. இறைவன் - இந்திரன். அமரம் - போர். வருவை - வருகுவாய்.

2621. மலர்த்தொடை - மலர்மாலை. கடமதம் - ஒரு பொருட் பன்மொழி. களிறு - யானைமுகனாகிய விநாயகன். துணையாளன் - உடன்பிறந்தவன். திடம் -

திடமி குத்திடு
அசுர னைக்கொலு
திகழ்ப டைத்திடு—வயிலாளா!
மடம யில்குற
மகள்பு ணர்த்திடு
வளர்சி கிக்கிரி—முருகோனே!

2642. மனதினில் வருதுயர்
தவறிட வருள்புரி
மயிலினில் வருகுரு—பர! வேளே!
சினமுடன் வருவசு
ரனதுயிர் கணமதில்
தெறிபட வயில்விடு—செயவீரா!
அனநடை பயில்பவள்
குறவர்கள் குலமயில்
அதிமய லுடன்அணை—புணர்தோளா!
கனககி ரியைநிகர்
முடியில கியதொ
கமழ்சிகி மலைவரு—குகநாதா!

2643. தருணமிது வாகையால்
தமியனிட மாவலாய்—வருவாயே
அருணநிற மேனியாய்!
அமிர்தகுண நாயகா!—எனையாளாய்
இருணறைகொள் கேசமான்
இனியகுற மாதினுள்—புணர்தோளா!
வருணமிகு சோதிசேர்
மகிமையுள தோகைமா—மலைநாதா!

---

வன்மை. திகழ் - புகழ். மடமயில் குறமகள் - மடப்பம் பொருந்திய மயில்போல் வானாகிய குறமகள், வள்ளியம்மையார்.

2642. தவறிட - தவிர்ந்துபோக. கணமதில் - மிக விரைந்த நேரத்தில், தெறிபட - தெறித்து அழிய. அனநடை பயில்பவள் - அன்னத்தின் நடைபோன்று நடப்பவள். அதிமயல் - மிக்க மையல். கனக கிரி - பொன்மலை.

2643. தருணம் - நேரம். வாகையால் - சந்தம் நோக்கி 'வகையால்' என்பது நீண்டு நின்றது. அருணன் - சூரியன். இருணறைகொள் கேசமான் - இருளினைப் போல இருண்ட கூந்தலை உடையவள். வருணம் - நன்னிறம். மகிமை - பெருமை.

2644. வாது புரிசூரன்
மாள வயிலேவு—செயவீரா!
தாது லவுநீபத்
தார்புனையுமார்ப!—எனையாளாய்!
மூது மறைவாயன்
மோக மொடுநாளு—மணிதாளா!
தீது வகல்சோலை
சேர்சிகியின்மேரில்—வருதேவே!

2645. வந்தருள் குகனே!
வம்பணி முலையார்—மயலாலே!
நொந்திட விதியோ?
நுங்கிருபை புரிவா—யமரேசா!
நந்திட வருசூர்
நைந்திட வயிலே—வியவீரா!
அந்தம துயர்சீர்
அண்டர்கள் பணிதோ—கையின்மேரா!

2646. வான வர்கள்பணி தாளனே!
வாச மிகுமலர் நீபமா—மலர்மார்பா!
கான வர்கள்குல மாதினுள்
காத லுடனணை நாயகா!—அருளாயோ
தான வர்கள்குல காலனே!
சானகி தன்மண வாளனுர்—மருகோனே!
தேனலர் கொள்பொழில் சூழுமோர்
சீர்சிகி யின்மலை நாதனே!—கிருபைதாராய்.

---

2644. மாள - இறக்க. மூது மறை - முது மறை, பழைமையாகிய வேதம். வாயன் - வாயினுல் சொல்லிக்கொண்டிருக்கும் பிரமன். மோகம் - மிக்க அன்பு. அணிதாளா - மலர்களை அணிவித்து வணங்குகின்ற திருவடிகளை உடையவனே.

2645. வம்பு - கச்சு. மயல் - மயக்கம். நைந்திட - அழிந்திட. சீர் - சிறப்பு.

2646. கானவர்கள் - வேடர்கள்: சானகிதன் மணவாளனுர் - சானகியின் கணவராகிய இராமபெருமான்; திருமாலை நினைந்தவாறு. மருகோன் - மருமகனுகிய தலைவன்.

2647. வண்ட னாகிய வசுரோன்
மண்டை வீழிட வயிலே—வியசூரா!
கொண்டல் போல்வளர் குழலாள்
கொஞ்சு மாமொழி குறமா—னணைதோளா!
அண்ட வானவர் முனிவோர்
அன்பர் நாள்தோறு தொழுசீ—ரிருதாளா!
வண்டர் சூழ்தரு பொழில்சேர்
மங்கி லாமயின் மலைமேல்—வருதேவே!

2648. கருதிய படிக்கி அருள்வாய்
கமழ்தரு கடப்ப மலர்மா—லிகைமார்பா!
ஒருதியு நிகர்க்க முடியா
உயர்குற மடப்பெண் மயலா—யணைதோளா!
பொருதிட மிகுத்த வசுரோன்
புளபட வயிற்கொ டுடனே—அடுசூரா!
பருதித வழுற்ற பொழில்சூழ்
பளிரிடு முடிச்சி காம—லையினாதா!

2649. பிறைநி கர்த்திடு மிரும ருப்புள
பிளிறு மதக்களிறு—துணையாளா!
மறைப யிற்றிய சதுமு கத்தினர்
மனம கிழ்ச்சிகொள்—குருநாதா!
நறைது ளித்திடு நிறைக டப்பணி
வளர்பு யக்குக!—எனையாளாய்
நிறைபொ ழிற்சிகி மலையின் வித்தக!
நினது பக்தன்முன்—வருவாயே.

---

2647. வண்டன் - தாழ்ந்தோன். வீழிட - கீழே விழுமாறு. சூரா - அச்சத்தை உண்டாக்குபவனே. கொண்டல் போல் - மேகத்தினைப்போல் கருநிறம் கொண்ட. வண்டர் - வண்டுகள்; இறுதிப்போலி. மங்கு - ஒளியின் குறைவு.

2648. கருதியபடிக்கு - எண்ணியவாறு.. ஒருதி - ஒருத்தி. பொருதிடம் - போர்புரியும் வன்மை. புளபட - பிளவுபட. பருதி - சூரியன். பளிரிடு - பளீரென ஒளிவிடுகின்ற.

2649. பிறை நிகர்த்திடு-மூன்றாம் பிறையினை ஒத்த. மருப்பு-தந்தம். களிறு- இங்கு விநாயகனைக் குறித்தது. சதுமுகத்தினர் - நான்முகனார். நறை - தேன். புத்தன் - அன்பன்.

2650. குடமி ணைத்தயிரு தனமி குத்ததொரு
குறம யிலவளோ—டிணைரூபா!
திடமி குத்தவசு ரனைவ யிற்கொடுயிர்
செகுகு க! க்குமர!—முருகேசா!
மடம யிற்குமரி தருசி றப்பினக
மலர்ம லர்ந்துதரு—இருதாளா!
வடவ ரைக்கிநிகர் சிகிம லைக்குளுயர்
மதுரி தத்தமிழ்சொல்—கனிவாயா!

2651. மகித லத்திலுள
அடிய வர்க்குநினை
வவைமு ழுக்கவருள்—குருநாதா!
பகிரி டத்தகுவா
குலம ழிக்கஅயில்
படையெ டுத்துவிடு—செயவீரா!
சிகிந டைப்பரியில்
அடிய னுக்குவருள்
செயம கிழ்ச்சியொடு—வருவாயே
முகிற ழைத்தநிறை
பொழில்வ ளைத்தசிகி
முடிம லைக்குள்வளர்—குகவேளே!

2652. வானவர் தொழுமரனர்
மாமக! மலர்நீபா!—அருளாயோ
தானவர் குலகாலா!
தாதகி முடியார்பா—லக! வேளே!
ஞானர்கள் குருநாதா!
நாமமின் வடிவேலா—யுத! சூரா!
கானமின் மணவாளா!
காரண! சிகிமேரா!—எனையாளாய்!

---

2650. ரூபா-உருவத்தினை உடையவனே. செகு - அழித்த. மடமயில் குமரி-மடப்பம் பெருந்திய மயில் போன்ற இளமகள் - வள்ளியம்மையார். மதுரிதம் - இன்பம்.

2651. மகிதலம் - மண்ணுலகம். நினைவவை-நினைவுகளாகிய அவை. ஆகுலம்-துன்பம். அயில் படை - வேற்படை. சிகி நடைப்பரி - மயிலாகிய விரைவாக நடக்கும் குதிரை. முகில் - மேகம்.

2652. அரனர் - சிவனர். தாதகி - கொன்றை. ஞானர்கள்-ஞானிகள். நாமமின் வடிவேல் - அச்சத்தைத் தரும் மின்னொளி தங்கிய வடித்த வேல். கானமின் - காட்டில்வாழ் வேடர்களின் அழகிய மகள், வள்ளியம்மையார். காரண - உலக இயக்கத்திற்குக் காரணமானவனே.

2653. கானக மாது மேவு
காரண ஞான ரூப!—அருளாயோ
சானகி நாத னார்மின்
தாரணி மார்பி னர்தன்—மருகோனே!
நானமு லாவு நீப!
நான்மேவி வாத னய—மிலையேதான்
வானவர் தேடு பாத!
மாயிரு தோகை மேரில்—வளர்தேவே!

2654. வனமகள்த னைசை தீர
மயிலினொடு சேரும் லோல!—எனையாளாய்
தனமிடியன் வாழ நீசெய்
தகுசிகியி லேறி நாளும்—வருவேளே!
அனநடையின் மாது தேவி
அருள்புதல்வ! ஆவ லாக—வருவாயே
கனகமலை நெரு தோகை
கமழ்மலையின் வாச மான—முருகோனே!

2655. பொருசூருடன் அடலேபுரி
புயனே!கிருபை—புரிவாயே
அருபா!மறை துதிநாயக!
அடியேன்மிடி—தவிராயோ
திருமான்மரு வியநாயகர்
திகழ்பூவினர்—பணிதேவே!
தருவேசிறை கமழ்தோகையின்
தகுமாமலை—முருகோனே!

---

2653. தாரணி மார்பினர் - மாலை தரித்த மார்பினை உடையவர்; திருமால். நானம் - கத்தூரி. 'கத்தூரி பூசிய மார்பில் அணிந்த கொன்றை மலர் மாலை உடையவனே' என்பது மூன்றாவது அடியின் முதற்பகுதியின் பொருள். மாயிரு - மிகப் பெரிய.

2654. தனமிடியன் - பொருளில்லா வறியன். சிகி - மயில். தேவி - பார்வதி. கனகமலை - பொன்மலை. நேரு - ஒத்த.

2655. அருபா - ரூபம் (உருவம்) இல்லாதவனே. மறை துதி நாயக - வேதம் துதிக்கின்ற தலைவனே. மிடி - வறுமை. திருமான் மருவிய நாயகர் - திருமகள் கலந்த தலைவர் - திருமால். திகழ் பூவினர் - விளங்குகின்ற தாமரை மலரில் வாழ்கின்ற பிரமனார். தரு - மரங்கள், மாமலை - பெருமை பொருந்திய மலை.

2656. அடல்புரி சூரன்
அலறிட வேலை—எயும்வீரா!
மடலவிழ் நீப
மலரணி மார்ப!—எனையாளாய்
மடமயில் வேட
மகள்மய லோடு—புணர்தோளா!
திடமுடி சேரும்
சிகிமலை மேவும்—முருகோனே!

2657. வாது மிகுத்த சூரன்
மார்பு பிளக்க வேலை—எயும்வீரா!
மாது குறத்தி யோடு
மாலை தரித்து மேவு—புயலோலா!
தாது நிறைத்த நீபத்
தார்கள் தரித்த தோள!—எனையாளாய்
தீது தகர்த்த பேரின்
தீமை அழித்த தோகை—மலையாளா!

2658. வஞ்சனை செய்வது நாயமா
வண்டமிழ் பொருளதா யேதையும்—அறியாயோ?
கொஞ்சிய கிளிமொழி மாதினுள்
கும்பவி னையின்முலை வேடமா—னணைதோளா!
அஞ்சிட வருகலி யோடவே
அன்பன்முன் மயிலினில் ஏறியே—வருவாயே
மஞ்சிகள் தவழ்பொழில் சூழுசீர்
மண்டிய சிகிமலை மீதுவாழ்—குகநாதா!

2659. வனசமலர் மீது வாழும்
மடமயிலில் மேவும் நாதன்—மருகோனே!
அனநடையின் மாது தேவி
அரியகௌ மாரி யாள்தன்—மகவேளே!

---

2656. அடல் - வன்மை. மடல் - மலரிதழ். திடமுடி - வன்மையமைந்த மலை உச்சி.

2657. தீது தகர்த்த பேர் - தீமையை ஒழித்த மக்கள். தீமை - அவர்களைப் பற்றித் துன்பம் தரும் ஆணவம் முதலிய தீமைகள்.

2658. நாயமா - 'நியாயம் ஆகுமா' என்பது மருவி வந்துளது. வண்டமிழ் வளப்பம் பொருந்திய தமிழ். மஞ்சிகள் - மேகங்கள்.

2659. வனசமலர் - தாமரை. நாதன் - திருமாலைக் குறித்தவாறு. கௌமாரியாள் - கௌரியம்மையாகிய பார்வதி. மகவேள் - மகவாகிய வேள், முருகன் என்றவாறு. அருள்வை - அருள்வாய் ஆக.

மனதில்வரு நோய்கள் தீர
வரம் அருள்வை தோகை மீது—வருதேவே!
கனகமலை நேரு தோகை
கமழ்சிகி மலையில் வாழும்—முருகோனே!

2660. வாது புரியசுரன் மாள வயிலேவு—செயவீரா!
சூது முலைமாது தோகை குறமானை—அணைதோளா!
தாது லவுநீபத் தார ணியும்மார்ப!—எனையாளாய்!
மாது நிறைதோகை மாம லையின்வாச!—முருகோனே!

2661. மதிசூடிய சடையார்
நடமாடிய வரனுர்
மகிழ்பாலக! முருகா!—எனையாளாய்
விதிமால்முத லிமையோர்
அடியோர்பணி சரணு!
விமலா!கிருபை புரிவாய்—குகநாதா!
கதியாகிய மயின்மேல்
வருநாயக! அருள்வாய்
கருணைநிதி யடியே—னிடம்வாராய்
துதியேமிகு கனகா
சலமேகிகர் முடிசேர்
சுபமாகிய சிகிமா—மலையாளா!

2662. ..........................................பவ மொழியாள்
வடிவுள குறமடமான்—மணவாளா!
..........................................புகழ் சரணு
தன தடி யவர்தனையே—மணமேசேர்
...........................மின்மலர் மனையார்
பணிசெயு முயர்குருவே—எனையாளாய்
...........தவர்கள் பொழி லேமிகு
சிகிமலை யரசே!—அருளாயோ

---

2660. மாள - மடியுமாறு.

2661. விதி - பிரமன். மால்-திருமால். விமலா-குற்றம் அற்றவனே. துதி-போற்றுதல். கனகாசலம் - பொன்மலை. சுபம் - நன்மை.

2662. இந்தப் பாடலில் பல அடிகள் சிதைந்துள்ளன, உள்ளவரே பதிப்பிக்கப்படுகிறது.

2663. தாதவிழ் நீப மாலை
தானணி மார்ப! நாளும்—அருள்வாயே
மூதடி யார்கள் வாழ
மூவரும் நேய தாக—வருவாயே
மாதர சான தேவி
மானின பார்வை வேடர்—மகள்தோளா!
வேதவி லாச! வானில்
மீறிய தோகை மேலில்—வருதேவே!

2664. பொருதிய சூர
னுடல்கிழி வாகிப்
பொடிபட வேலை—எயும்வீரா!
அருமறை தேடும்
மலரிணை பாத!
அடியவர் நாத!—எனையாளாய்
பெருமைகொள் தோகை
மயில்வரு தேவ!
பினையணி தோளன்—மருகோனே!
கருமுகில் சூழு
முயர்பொழில் மேவுங்
கனசிகி மேலில்—வருவேளே!

2665. நடன முற்றிடு மயிலில் உற்றவ!
நளின நற்பத—முருகோனே!
அடமி குத்திடு வசுர னைக்கொலும்
அயில்தொ டுத்திடு—செயவீரா!
குடமி ணைத்திடு தனம யிற்கொடி
குறம கட்கொரு—மணவாளா!
வடவ ரைக்குயர் முடிநி றைத்திடு
மயின்ம லைகுக!—குருநாதா!

---

2663. மூதடியார்கள் - மிக நீண்ட காலமாக முருகனை வழிபட்டு வருகின்வர்கள். மூவரும் - படைத்தல், காத்தல், அழித்தல், எனும் முத்தொழிற்குரிய கடவுளர் மூவரும். மானின பார்வை - மானின் பார்வையை ஒத்த பார்வை. மீறிய - வீறுற்று விளங்கும்.

2664. பொருதிய - போர் புரிந்த. கிழிவாகி - கிழிந்து. மலரிணை பாத - (தாமரை) மலர்போன்ற இரண்டு திருவடிகளை உடையவனே. பினை - நப்பின்னை பிராட்டியார். தோளன் - தோள்களை உடையவனாகிய திருமால்.

2665. நளினம் - தாமரை.

2666. கருணை தங்கிய
மகிமை மிஞ்சிய
கடவுள் எந்தன்முன்—வருவாயே
தருண மன்புடன்
மயிலில் வந்தருள்
தருவை சுந்தர—முருகோனே!
திரும டந்தையின்
நிகரி லன்புடன்
திகழு குஞ்சரி—மணவாளா!
தருநி றைந்திடு
பொழிலு யர்ந்திடு
தழைசெ கண்டியின்—மலைநாதா!

2667. தாவியமயில் வாகனு!
நாயன்முனல மாகவே
தாமிசமிலை காவலாய்—வருவாயே
மேவிடவெகு வாசையாய்
மேரினில்வளர் வேடுவர்
மீறியகுல வேடராய்—வருதேவே!
கூவியசெய சேவலா!
மாகலிதனை யோடவே
கூரியவயி லேவியே—அடுவாயே
காவியினுடை நாயகா!
தோகைமலை வாசனே!
காரண!கரு ணாநிதி!—எனையாளாய்!

2668. கலியினல் அனியாயம் ஆகினேன்
கடவுளே! வெகுசான வோர்கிருபை—புரிவாயே
வலியினல் வருசூரன் மார்பிலே
வடிகொள்வே லைமுனை கவேவிடு—செயவீரா!

---

2666. சுந்தர முருகோன்-அழகிய முருகன். திருமடந்தையின் நிகரில் அன்புடன் திகழு குஞ்சரி - திருமகளின் அரவணைப்பிலும் அன்பிலும் வளர்ந்த மகளிர் இருவருள் ஒருத்தியாகிய தேவசேனை.

2667. நாயன்-நாயினுங் கடைப்பட்டவன். முனலமாக - முன்+நலம்+ஆக. தாமிசம் - தாமதம். கலி - துன்பம். காவியினுடைய நாயகா - காவி நிறம் தோய்த்த உடையினை அணிந்த தலைவனே.

2668. வெகுசான - மிகுதியான. வடிகொள் வேலை - வடித்தல் அமைந்த வேலாயுதத்தை. விரை - நறுமணம். நிபமென்மாலை - நீப மென். மாலை - கடப்ப மாலை. 'ஞானிகள்நேமியோர் வானவர்(வாழ்த்)தொலியுடன் வணங்கும் மலையாளா'—என நான்காம் அடியைப் பொருத்துக.

மெலியுநோய் களையோட வேசெய்வாய்
விரைகொணிப மென்மாலை மார்பனே!—அருள்வாயே
ஒலியின்ஞா னிகளோடு நேமியோர்
உயரும்வா னவர்தாழு தோகைமா—மலையாளா!

2669. வனச மண்டப
வனிதை பங்கர்தன்—மருகோனே!
மனது கந்திடு
வரம ளிழ்ந்தருள்—குகநாதா!
அனாக டம்பயி
லழகு சுந்தரி—தருபாலா!
தினக ரன்தவழ்
சிகியெ னுங்கிரி—முருகோனே!

2670. மதியை யணிந்த சடையார்
மருவு சவுந்த ரியினுள்—தருபாலா!
கதியி னடஞ்செய் மயிலா!
கருணை யிலங்கு துரையே!—கிருபைதாராய்
துதிகொள் இரண்டு சரணு!
துணையில் கடம்ப மலர்மா—லிகைமார்பா!
அதிக வரங்கள் தருவாய்
அழகு சிறந்த சிகிமா—மலையாளா!

2671. வந்துவரந் தந்துவெனை
மைந்தன்என—நினையாயோ
பந்துவென முந்துநின
பங்கசம்இனி—தருவாயோ?
கொந்துசெறி தண்டலைமின்
கொண்டமயன்—மணவாளா!
செந்துரசு ரஞ்சுகுகா!
தென்சிகிமா—மலையாளா!

---

2669. வனச மண்டபம் - தாமரையாகிய மண்டபம்; திருமகள் தங்கும் இடம் தாமரை ஆதலின் தாமரை மண்டபம் என்று கூறப்பட்டது. சுந்தரி - அழகுடைய பார்வதி. தினகரன் - சூரியன்.

2670. சவுந்தரியினுள்-சவுந்தரியாகிய பார்வதி. துணையில்-சமானம் இல்லாத.

2671. பந்து என - உறவு என்று. முந்து - முற்படும். நின-நின்னுடைய. பங்கசம் - தாமரை: இச்சொல் தாமரையினை ஒத்த திருவடிகளைக் குறிக்கின்றது. கொந்து - கொத்து, மலர்க்கொத்துக்கள். தண்டலை - குளிர்ந்த சோலை. மின் - மின்னலை ஒத்த வள்ளி அம்மையார். செந்துரசுரஞ்சுகுகா - செந்துர, அசுரர், அஞ்ச, குகா எனப் பிரித்துக்கொள்க, செந்துர - திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ளவனே!

2672. கறையுலவிய கண்டனார்
கருணைமிகு கனவும்பர்நா—யக! பாலா!
நறையுலவு கடம்பினை
நயந்தணியு மெங்கள்நா—யக! வேளே!
சிறையுலவு செகண்டியா!
திறமுலவிய குந்தவா—யுத! வீரா!
மறைதுதிசெய் கந்தனேசிகி
மலையில்வருக நாயென்முன்—முருகோனே!

2673. சினத்த சூருடல்
தெறிக்க வேல்விடு—செயவீரா!
கனத்த தோகைய!
கருத்த னே! கிருபை—புரிவாயே.
மனத்தின் மீறிய
வருத்தம் ஓடிட—அருளாயோ!
வனத்தின் மீறிய
மணிச்சி காமலை—முருகோனே!

2674. வண்டமிழ் பாட அருளாய்
மண்டிய தோகை மயின்மேல்—வருதேவே!
தொண்டன்மு னுக வருவாய்
சுந்தர மான துரையே!—எனையாளாய்!
அண்டர்கள் தேடு தேவே!
அஞ்சிகி மேரில் முருகா!—குகநாதா!
தண்டலை மாது கணவா!
சங்கரர் பால! குமரா!—செகநாதா!

---

2672. கறை - நஞ்சுண்டதால் விளைந்த நீலநிறம். கண்டனார் - கழுத்தினை உடையவர். நறை - தேன். செகண்டியா - மயிலை உடையவனே. குந்தவாயுத - குந்தம் என்னும் ஆயுதத்தை உடையவனே; குந்தம் - குத்துவாள்.

2673. தெறிக்க - பிளக்க. தோகைய - மயிலினை உடையவனே. மனத்தின் மீறிய வருத்தம் - உள்ளத்தில் அடங்கமுடியாத துன்பம். வனத்தின் மீறிய - மிக்க காடுகளை உடைய.

2674. வண்டமிழ் - சொல் பொருள், சுவை முதலிய நலம் சிறந்த தமிழ்.

2675. பொருது சூரனுடல்
கிழிய வேலைவிடு
புகழ்சி காமலையின்—முருகோனே!
திருமி னுள்மருவு
விறலி னுர்மருக!
சிகியி லேறிவரு—குகநாதா!
மருவு லாவுசுப
மிகுபொ னீபமெனும்
மலரு லாவுபுய!—அமரேசா!
தருமி னுள்மயலி
னிறையு நாத! அருள்
தருவை நாயனலம்—உறவேதான்.

2676. வஞ்சகமிடு சூரனை
மண்டியபடை வீழிட—அடுசூரா!
நெஞ்சகமடு நோய்தவிர்
நின்கிருபைதரு வாய்குக!—குருநாதா!
நஞ்சணிமிட றூர்தரு
நன்றுளசுப பாலக!—எனையாளாய்.
மஞ்சதுதவழ் சோலைகள்
மண்டியசிகி மேரினில்—வளர்தேவே!

2677. திருக்கிளர் மார்பினுர்
திருத்துணை மாயனுர்—மருகோனே!
மருக்கிளர் நீபமா
மலர்மலை நாதனே!—எனையாளாய்.
பொருக்கிளர் வேலவா!
புகழ்தமிழ் பாடவே—அருளாயோ?
தருக்கிளர் சோலைசூழ்
தழைத்திடு தோகைமா—மலையாளா!

---

2675. திருமினுள் - திருமகளாகிய மின்னலை ஒத்தவள். விறலினுர் - திருமால். தருமினுள் - கற்பகத்தரு வளரும் தேவ நாட்டுத் தேவசேனை அம்மையார்.

2676. சூரனை...அடுசூரா-சூரபதுமனை அழித்த முருகனே. மிடறூர்-கழுத்தினை உடையவராகிய சிவபெருமான்.

2677. மலர்மலை நாதனே - மலரை அணிந்துகொள்ளும் நாதனே.

2678. ஆழி யிற்றுயின் மாயனுர்
ஆவ துக்கிசை வானதோர்—மருகோனே!
வாழி யைத்தொடு தானவோர்
மாகு லத்தைவெல் வீரனே!—எனையாளாய்.
பாழி யப்பு யத்தனே!
பாவை நற்குற மாதினுர்—புணர்பாலா!
மாழி கைத்தெழு வீதிசேர்
மாசி கிக்கிரி மீதிலே—வருதேவே!

2679. கடிகமழ் நீப மாலை
கனபுய மீது சூடு—முருகோனே!
அடியவர் தேடு பாத!
அழகுள தோகை நீல—மயிலாளா!
குடிசினில் வாழு தேவி
குறமயில் ஆசை யான—மணவாளா!
வடிவுறு தோகை மேரில்
வளர்குரு நாத னே! நன்—னயவேளே!

2680. வனச மலர்மீது
வளரும் மடமாது [புணர்மாயோன்]—மருகோனே!
அனந டையின்மாது
அழகு திகழ்தேவி—தருபாலா!

---

2678. பொருக்கிளர் - 'போருக்குக் கிளர்' என்பது குறுகியும்தொகுத்தும் நின்றது; 'போர் புரிவதற்குக் கிளர்ந்தெழுகின்ற' என்பது பொருள். தருக்கிளர் சோலை - தரு, கிளர், சோலை - மரங்கள் செழித்துள்ள சோலை. தானவோர்-தானவர் என்ற சொல் சந்தம் நோக்கி நீண்டது. பாழியப்புயத்தனே - வன்மையமைந்த தோள்களை உடையவனே. வாழி - வாளி என்ற சொல் எதுகை நோக்கி வாழி எனத் திரிந்தது; அம்பு என்பது பொருள். மாழிகை - மாளிகை என்னும் சொல் மேல் குறித்த முறைப்படித் திரிந்தது. 'மாழிகை யெழு என்பது 'மாழிகைத் தெழு' எனச் சந்தம் நோக்கி வந்தது.

2679. கடி - நறுமணம். குடிசினில் - குடிசையில், பரண்மீது.

2680. முதலடியில் 'புணர்மாயோன்' என்னும் தொடர் தேவையாகத் தோன்றவில்லை. உனதினருள் - உனது+இன்+அருள் - உன்னுடைய இனிமையாகிய திருவருள். சேது - சேறு என்ற சொல் எதுகை நோக்கித் திரிந்தது. மீனு - மீன்+உ - உ, சாரியை.

மனதில் வருநோயை
மடிய வரம்யாவும்—அருளாயோ ?
உனதி னருள்செய்யாய்
உயர்சி கியின்மேரில்—வருநாதா !

2681. வாதுபுரி சூர னோடு
மாவடல்செய் கூர்மை வேலை—எயுநாதா !
சூதுமுலை மீறு தேவி
தோகைகுற மாதி னோடு—புணர்தோளா !
தாதுலவு நீப மாலை
தானணியும் மார்ப ! நாளும்—அருளாயோ ?
சேதுலவு மீனு தாவு
சீர்சிகியின் மேரில் வாச !—எனையாளாய்.

2682. எனதாசை போல வரயாவு நீசெய்
எழிலான தோகை—மயிலோளா !
புனமாதி னோடு மயலாக நாளும்
புணர்தோள ! வாழ்வு—தருவாயே
சினசூர னவி இழிவாக வேசெய்
திறமான வேலை—அணிவேளே !
இனமான சோதி மணிசூழு தோகை
எனுமேரில் வாழு—முருகோனே !

2683. தாவியமயில் வாகனு !
தாரணிபுய ! நாதனே !—எனையாளாய்.
கூவியகன சேவலா !
கோதறுமுனி வோர்களே—துதிதாளா !
பூவினில்வளர் வேதனுர்
பூவளர்அடி யார்களே—துதிதாளா !
காவினில்வளர் மாதினுள்
காதல்கொள்கண வா!சிகா—மலைநாதா !

---

2682. 'யாவும் எனதாசை போல வர' என மாறுக. இனமான சோதிமணி - ஒளிக் கற்கள் ; நீலமணி முதலியன.

2683. தாரணி புய-மாலையைத் தரித்த புயத்தை உடையவனே. கனசேவலா- பெருமை பொருந்திய சேவலை உடையவனே. கோது - குற்றம். வேதனுர் - பிரம்மா. பூவளர் - பூமியில் வாழ்கின்ற.

2684. மதுரித மொழிச்சி
வடிவுள குறத்தி—புணர்தோளா!
சதுர்வித யிருக்கு
தனைமிகு முதற்கு—உபதேசா!
மதுதுளி கடப்ப
மலரணி புயத்து—முருகோனே!
விதுத்வழ் சிகிப்பொன்
விழைமலை யுற்ற—குகவேளே!

2685. மாது குறத்தி மீது
மால்கொள் கடப்ப மாலை—புனைமார்பா!
சூது மிகுத்த தான
தூய தனப்பெண் மாது—உமைபாலா!
கோது படைத்த சூரன்
கூறு படப்பொன் வேலை—எயும்வீரா!
சேது மிகுத்த வாய
சீர்பொழில் உற்ற **தோகை—மலைநாதா!**

2686. மாலையணி குழலாள்
மாதுகுற மயிலாள்—புணர்தோளா!
பாலைநிகர் மொழியாள்
பாவையுமை புதல்வா!—எனையாளாய்.
வேலையெதிர் அசுரோன்
மீதுவிடு செயனே—எனையாளாய்
சோலையழ கியர்சேர்
**தோகை மலை**யரசே!—அருளாயோ.

2687. அம்பின் விழிச்சி யாளின்
அம்புய முற்ற அன்ப!—முருகோனே!
தும்பி மிகுத்த நேச!
துங்க மிகுத்த வேடர்—மகள்தோளா!

---

2684. சதுர்வித.........உபதேசா-மறைமுதல் பொருளாகிய பிரணவத்தைச் சிவபெருமானுக்கு முருகன் கூறிய கதை இங்குக் குறிப்பிடப்படுகிறது.

2685. சேது - சேறு.

2686. வேலை......செயனே-எதிர் அசுரோன்மீது வேலை விடுசெயனே என மாறுக. செயன் - வெற்றியை உடையவன்.

2687. அம்பின் விழிச்சி - அம்பினை ஒத்த விழியை உடையவள். அம்புயம் அழகிய தோள். தும்பி - யானைமுக விநாயகன். நேச - நேசனே. துங்கம் தூய்மை. தேனு - தேன்+உ; உ, சாரியை. பம்பி - தழைத்து.

கொம்பில் இருக்கு தேனு
　　கொண்ட மொழிக்கு கா! நல்—லருளாயோ?
பம்பி மிகுத்த சோலை
　　பண்பு படைக்குந் தோகை—மலையாளா!

2688. தானவர் குலகாலா!
　　தார்புனை யும்வேளே!—எனையாளாய்.
கானவர் குலமானுள்
　　காதல்கொள் மணவாளா!—அருளாயோ.
வானவர் குலதீபா!
　　மாமயில் முருகேசா!—பரமேசா!
தேனலர் பொழில்சூழ்மா
　　சீர்சிகி மலைமீதே—வருதேவே!

2689. மாதுமை பாகனுர்
　　மாமதி வேணியார்—தருபாலா!
சூதுயர் சூரனுர்
　　தோல்விய தாகவே—அடுசூரா!
தாதுள நீபனே!
　　தார்புனையு வேலவா!—எனையாளாய்.
வாதுயிலி சோலைசூழ்
　　வானுயரு தோகைமா—மலையாளா!

2690. வருசூருடல் கிழிவாகிட
　　வளர்வேல்கொடு—எயும்வீரா!
மருவாசனை மிகுநீபமென்
　　மலர்சூடிய—புயநாதா!
திருநாயகி புணர்மாபெருந்
　　திருமாலுட—மருகோனே!
தருமேவிய சிகியாகிய
　　தகுமாமலை—முருகோனே!

2691. கஞ்ச மலரை நிகர்த்த தாளினுய்!
　　கந்து கமயி னடத்து நாயக!—எனையாளாய்.
அஞ்ச வெதிர வமர்செய் சூருடன்
　　அண்டர் மகிழ வயிற்கொ டேவிய—செயவீரா!

---

2688. குலதீபா - குலவிளக்கே.

2689. மாதுமை - மாது+உமை. வாதுயிலி - குற்றமற்ற.

2690. கொடு - கொண்டு. திருமாலுட - திருமாலுடைய.

2691. கந்துகம் - குதிரை, இங்கு, வாகனம் எனும் பொருளில் வந்துளது. அஞ்சவெதிர - அஞ்சவும் நடுங்கவும். சுபுத்திரன் - நன்மகன். கொஞ்சமதி - பிறைமதி.

நஞ்ச மிலகு மிடற்றி னார்தரு
நன்று லவுசு புத்திர னே! கிருபை—தருவாயே.
கொஞ்ச மதிதவ ழுற்ற சோலைகள்
கொண்ட சிகிமலை யுற்ற நாயக!—அருளாயோ.

2692. மதுமலர் தரித்த
வளர்குழல் குறத்தி—புணர்தோளா!
விதுதரி முடிப்பொன்
மிகுமலை படைத்த—வர்பாலா!
கதுமென நடத்த
கனமயி லிருக்கு—முருகோனே!
முதுமறை துதித்த
முளரியின் மிகுத்த—சிகிமேரா!

2693. அனியாய மான
கலிநோய்க ளோட
அழகான தோகை—மிசைவாராய்.
இனிதான தேனை
நிகரான கூறல்
எழில்வேடர் மாது—புணர்தோளா!
தனியான மோக
மிடுவோர்கள் தேடு
சரண! எந்நாளும்—அருளாயோ.
பனிமேவு சோலை
நிறைவானு ளோர்கள்
பணிதோகை மேரில்—வருதேவே!

2694. வால மதியணி வேணியர்
வாச மிலகிய தாதகிபுனை—வோர்பாலா!
ஞாலம் அருளிய தேவியார்
நார ணியவள் மாரியுமை—அருள்பாலா!
ஏல மிகுகுழன் மாதினள்
ஏர்கொள் குறமட மானையே——புணர்சீலா!
தால நிறைவளர் நேமநா
டாளும் முருகைய! தோகைமா—மலைநாதா!

---

2692. மது - தேன். கதுமென - விரைவாக.

2693. கூறல் - கூறுதல், இங்குச் சொற்களைக் குறிக்கின்றது. தனியான. மோகம் இடுவோர்கள் - தனிமையிலிருந்து முருகனைப் பற்றி எண்ணுபவர்கள்.

2694. வாலமதி - பாலமதி, இளம்பிறை. ஞாலம் - உலகம். ஏலம் - மயிரில் பூசிக்கொள்ளும் நறுமணச் சாந்து.

2695. அலையாகிய சமுசாரமா
மதினலலை—வதுவாமோ?
மலையாகிய தனநாயகி
வனமாதினை—அணைதோளா!
கலையாகிய பொருளே!செயக்
கலிகால—முருகாவோ!
நிலையாகிய சிகிமாமலை
நிருபா! கிருபை—புரிவாயே!

2696. சமராடிய அசுரோனுடல்
தனிசெல அயில்—விடுசூரா!
இமையாசல உமையாடரு
பிளையோய்! சர—வணநாதா!
கமராகிய கருவாய்வரு
கனமாதுயர்—தவிராயோ?
அமராபதி யிமையோர்பணி
அழகா!சிகி—மலையோனே!

2697. சந்த மிகுபாடல்
தந்து அருள்செய்தோகை—மயிலாளா!
அந்த மிகுவேடர்
அன்பு வுயர்மாது—புணர்தோளா!
கந்த மிகுநீப!
கங்கு றவழ்சோலை—மலைநாதா!
நந்த மிகுநேம
நன்று லவுதோகை—மலையாளா!

2698. தஞ்சம் வேறிலை
வந்து வேணது
தந்து வாதரி—குகநாதா!
வஞ்ச னகிய
மிஞ்சு சூருடல்
மண்ட வேல்விடு—செயவீரா!

---

2695. அலை - அலையினையுடைய கடலைக் குறித்தது, மூன்றாமடியின் முதற் பகுதி முருகனைக் கலைவடிவினன் என்று குறித்தலைக் காண்க.

2696. சமர் - போர். இமையாசலம் - இமயமலை. பிளையோய் - பிள்ளையே. கனமாதுயர் - மிகப் பெரிய துன்பம்.

2697. கந்தம் - நறுமணம்.

2698. வேணது - வேண்டியது. சகா - சகாயம் - துணை. இனி வேறே - இனிமேல் வேறு எனக்கு என்ன உளது.

நெஞ்சு நோய்தவிர்
அண்டர் நாயக!
நின்ச காவல—தினிவேறோ?
மஞ்ச தேதவழ்
கின்ற சோலைகள்
மண்டு தோகையின்—மலையாளா!

2699. ஆடிய மயின்மீதே
ஆவல்க ளுடனேமுன்—வருவாயே.
பாடிய தமிழாளா!
பான்மதி யணிவோர்மால்—மிகுபாலா!
கூடிய கலிகாலா!
கூரிய அயிலாளா!—அருளாயோ.
தேடிய யிருதாளா!
சீர்சிகி மலைவாழும்—குகவேளே!

2700. அடத்திலேவரு
தயித்திய ஞகிய
அமர்செய் சூருடல்—அடுவீரா!
கடத்தை நேரிடு
கனத்த பூமுலை
கருத்த வேடமி—னணைதோளா!
படத்த ராவணி
முடிப்பொன் மேனியர்
பரற்கு வாசைகொள்—புதல்வோனே!
தடத்தி லேமிகு
சிகிப்பொன் மேருவின்
தருத்த தோகையின்—மலைநாதா!

2701. இதுநாள்வரை யடியேனிடம் இடர்தீரிட—அருளாமே
மெதுவாய்விடு வதுவொத்துமே விளையாடிய—மயிலாளா!
பதுமாசனர் முதலோர்துதி பணியேபுரி—இருதாளா!
விதுதாவிய சிகிமாமலை மிசைவாழ்வுறு—கணநாதா!

---

2700. கடம் - குடம். வேடமின்-வள்ளியம்மையார். படத்தரா - படத்தினைப் பெற்ற பாம்பு. பரற்கு - தலைவணுகிய சிவபெருமானுக்கு.

2701. மெதுவாய் விடுவது ஒத்துமே-மெல்லமெல்ல விட்டு விடுவது போல. பதுமாசனர் - பிரமன். துதி பணியேபுரி - துதித்துக் கட்டளைகளைச் செய்கிற. விது - மதி.

2702. வாதுபுரி சூரன்
மாளவயி லேவு—செயவீரா!
போதுநிகர் பாத!
பூசைபுரி நாய—னிடம்வாராய்.
தாதுலவு தூய
தாதகிகொள் வேணி—அருள்பாலா!
மாதுவளர் தோகை
மாமலையில் வாச!—எனையாளாய்.

2703. வனச லெட்சுமி வாசனுர்
வளர்து ளைக்கணி மாயனுர்—மருகோனே!
புனம யிற்கிசை காதலா!
புனித! வற்புத! வேலவா!—எனையாளாய்.
மனம கிழ்ச்சிய தாகவே
மயிலி லுற்றிடு நாதனே!—வருவாயோ?
கனக மயக்கிரி போலவே
கருது நற்சிகி மேரில்வாழ்—குகவேளே!

2704. வார்த ரித்தமுலை
வேல்ப டைத்தவிழி
மான்ம கட்குமய—விடுருபா!
போர்த ரித்தகன
சூர னைப்பொருது
போரில் வெற்றி கொளு—மடல்வீரா!
தார்த ரித்தபுய
வா!வெ னக்குனிரு
தாள்கி டைக்கவருள்—புரிவாயே.
சீர்த ரித்தபொழில்
சூழ்சி கிக்கரசே!
நீயே னுக்குவரம்—உதவாயோ.

2705. மலிவாகிய தாதகி சூடிய
மகிடேசர்சொல் பாலக னகிய—குகநாதா!
கலிகாலமெ னேஅடி யேனிடங்
கருணாநிதி யே!வர மேதெனும்—அருளாயோ?

---

2702. போது நிகர் பாதம் = (தாமரை) மலரினை ஒத்திருக்கும் திருவடி.

2703. வளர் துளைக் கணி மாயனுர் = வளரும் துளசியை அணிகின்ற திருமால். கனக மயக்கிரி = பொன்மயமாகிய மலை.

2704. வார் = கச்சு. வேல் படைத்த விழி = வேலின் தன்மையாகிய கூர்மையினைப் பெற்ற விழி. மான்மகள் = வள்ளியம்மையார்; மான் வயிற்றிலிருந்து பிறந்தவர் என்று கந்தபுராணம் கூறும்.

பொலிவாகிய நீபமென் மாலிகை
புனைமாபுய வா! மயின் மீதினில்—வருவாயே.
சலியாவகை நீயருள் வாய்குக!
சகமேபுகழ் தோகையின் மாமலை—வருதேவே!

2706. மந்தி குதிபோடும்
அண்டர் விளையாட
மண்டு பொழில்வாழு—மயிலாமோர்
பந்தி ணையதான
கொங்கை மிகமீறு
பங்க சமின்வேடர்—மகள்தோளா!
நந்தி லகுநேம
மிஞ்சு வளநாட!
நம்பும் அடியார்கள்—தமையாளாய்.
அந்தி மதிதாவு
கின்ற பொழில்சூழும்
அந்த மிகுதோகை—மலையாளா!

2707. வனத்தின் மாதினை
மகிழ்ச்சி யாயணை—இருதோளா!
சினத்தி லேவரு
சிறுத்த சூருடல்—கிழிவேலா!
மனத்தின் நோய்தனை
மறுக்க வேகிருபை—புரிவாயே.
கனத்த தோகையின்
கதித்த மாமலை—வருதேவே!

2708. அடுத்தவர் சகாயா!
அருட்செய் குருநாதா!—அமரேசா!
தொடுத்த மலர்நீபா!
துரை!கு மர!மயிலே—றியவேளே!
கடுத்த வசுரோன்மேற்
கதித்த தொருகூர்வேல்—விடுவீரா!
உடுத்த கடல்சூழ்சீர்
உயர்ச்சி பெறுகோடார்—சிகிமேரா!

---

2706. மந்தி - குரங்கு. பொழில் வாழும் மயிலாகும் பங்கசமின் என இயைக்க. நந்து - சங்கு. அந்தி மதி - மாலைக்காலச் சந்திரன்.

2707. சிறுத்த - சிறுமையுடன் கூடிய. மறுக்க - துன்புறுத்த.

2709. வானவர் தொழுநாதா!
மாமண மிகுநீபா!—எனையாளாய்.
கானக மடமானுள்
காதல்கொள் புயநாதா!—அருளாயோ?
சானகி புணர்மாயோன்
தான்மகிழ் மருகேசா!—குகவேளே!
தானவர் குலகாலா!
தாழ்வகல் சிகிமேரா!—அமரேசா!

2710. எதிர்வரு சூர
னிடறிவிழ வேலை—விடுதேவே!
கதிகதிமி யான
தகுநடன வீர—மயிலாளா!
மதிதவழ் சோலை
வளம்உலவு தோகை—மலைநாதா!
முதியதவ மேசெய்
முனிவர்புகழ் பாத!—எனையாளாய்.

2711. அனியாய லோபர்
அவருடு போக—அருளாதே
கனிபோலும் வாயள்
கமழ்கேச வேடு—வியின்நாதா!
முனிவோர்கள் தேடு
முதலே!உ லாச!—முருகோனே!
தனியான தோகை
தகுமேரில் வாச!—எனையாளாய்!

2712. பந்து போலுமுலை
பாவை வேடமகள்—புணர்தோளா!
கொந்து நீபமலர்
கொண்ட மார்ப! அருள்—புரிவாயே!
வந்து வேணவருள்
மங்கு ளெயுமுடி—சிகிமேரா!
இந்து வேணியருள்
இன்ப மானகுரு—பர!வேளே!

---

2709. மருகேசா - மருகனாகிய ஈசனே.

2710. கதிகதிமி - ஒலிக் குறிப்பு.

2711. கேச வேடுவி-தலைமயிரினையுடைய வேடர்மரபில் வந்த வள்ளியம்மை யார்.

2712. இந்துவேணி - சந்திரனைத் தரித்த சிவபெருமான்.

2713. மயிலா கியசாயல்
மடமா தினுள்வேடர்
மகண்மேல் மயலான வதிரூபா!
கயலார் விழியார்கள்
தருமா சையதான
கடல்மூழ் குவதுபோக அருளாயோ!
நயமா கியபாடல்
தருவாய் குமரேசா!
நதிசூழ் உயர்நேம வளநாடா!
புயலார் பொழில்சூழுஞ்
சிகிமா மலைவாழும்
புனிதா! எனையாள வருவாயோ?

2714. அகில முழுவதும்
அருளும் உமையவள்
அருளும் நலமிகு—அயிலாளா!
முகில்கள் தவழுயர்
பொழிலி லிருந்தருள்
முனிவர் பணிபுரி—இருதாளா!
மகிமை முழுவது
மடிய னிடமருள்
மயிலில் வருகுரு—பர! வேளே!
சிகியின் மலைவளர்
அமரர் பணிகுக!
சிறியன் எனையினி—இனிதாளாய்!

2715. பெருத்த முழுமுலையாள்
பிணைக்கி நேர்விழி—மடமானுள்
ஒருத்தி வேடமகள்
உருக்கு வாசமிகு—புயலோலா!
வருத்த மானமிடி
வருத்த நீயதனை—விலக்காயோ?
திருத்த மானதொரு
சிகிப்பொன் மேரில்வளர்—குகநாதா!

---

2713. சந்த விருத்தம். கயல் ஆர் விழியார்கள் - கயல் மீனின் தன்மை அமைந்த விழியை உடைய மகளிர்.

2715. பிணைக்கு - பெண்மானுக்கு. நேர் விழி - ஒத்த கண்கள்.

2716. ஆடிய மயிலாய்!
யான்மகி ழிடவே—அருளாயோ?
தேடிய அடியார்
சீர்மிகு படவே—அருளாயோ?
நாடிய படியே
நாயக! வெளியே—னையும்ஆளாய்.
சூடிய பொழில்சேர்
**தோகையின் மலைமேல்—வளர்தேவே!**

2717. வானவர் பணிதாளா!
மாதுமை தருபாலா!—எனையாளாய்.
கானக மடமானுள்
காதல் கொள்நாயேன்—இடம்வாராய்.
தானவர் குலகாலா!
தாவி லயில்வேலா—யுத! வேளே!
தேனலர் பொழிலேசேர்
**சிகிமலை யரசாளும்—குகவேளே!**

2718. கருணை நிதியே!
கமலா சனனுர்—பணிதாளா!
அருணை தயமாம்
அழகா கியசீ—ரொளியாளா!
மருவார் மலர்மான்
மகிழ்மா யவனுர்—மருகோனே!
திருசேர் பொழில்சேர்
**சிகிமா மலையாய்!—அருளாயோ!**

2719. தாதகிபுனை வேணியர்
தாவிநடி சபேசுரர்—அருள்பாலா!
பாதகமலம் ஓடிடப்
பாவலர்கிருபை யோடிட—அருளாயோ!
வாதிடுவசு ரோனுடல்
மாறிடவயி லேவிய—செயவீரா!
சீதளமிகு சோலைகள்
சேர்சிகிமலை மேவிய—குகநாதா!

---

2717. தாவில் அயில் - குற்றமற்ற கூர்மை. வேலாயுத - வேற்படையினை உடையவனே.

2718. கமலாசனனுர் - தாமரையாகிய ஆசனத்தினை உடையவர்.

2719. பாதகமலம் - குற்றம் விளைக்கும் ஆணவம் முதலியன. "என்னை விட்டு ஆணவம் முதலியன ஓடவேண்டும்; பாவலர் அன்பு என்னை நோக்கி வரவேண்டும்" இவ்வாறு இரண்டாவது அடியில் வேண்டுகோள் அமைகின்றது.

2720. மருவு லாவு
கடப்ப மாலிகை
மருவி தூங்ிலை
துற்ற வேயணி—புனைதோளா!
தருவு லாவு
சசிப்பொ னுள்உடல்
தழுவு வாசவன்
மொய்க்கும் வானவர்—பணிதாளா!
கருவு லாவு
பிறப்பி லாதருள்
கனியும் மாதவ
ரற்பு தாகரர்—அருள்பாலா!
செருவு லாவும்
வடித்த வேலவ!
சிகியின் மாமலை
உற்ற நாயக!—எனையாளாய்.

2721. கலைகள்பயில் வாயனே!
கருணைபொழி நாதனே!—அடியேன்மேல்
அலையின்துய ரோடவே
அருள்செய்கு குருபரா!—அருளாயோ?
கொலைகொளயில் வேலவா!
குறமயிலை மேவிவாழ்—குமரேசா!
மலையினுயர் தோகைமா
மலையில்வரு நாதனே!—அருளாயோ?

2722. செந்திமலை வாசா!கு
றிஞ்சிநக ராளா!பொன்
திங்கள்வத னு!வேண—அருள்தாராய்.
நொந்திருக ணீரோடி
மிஞ்சுதுய ராலாவர்
நொண்டொருவ ரேசாது—அருள்தராய்.

---

2720. சசி - இந்திராணி. வாசவன் - தேவேந்திரன். செரு - போர்.

2721. அருள்செய்கு - அருள்செய்வாய், கு - சாரியை எனக் கொள்க. கொலை கொள் அயில் வேலவா - கொலைத்தொழிலைக் கொண்ட கூரிய வேலை ஏந்தியவனே.

2722. நொண்டொருவர் ஏசாது - குறைகூறி ஒருவர் (என்னை) இழிவாகப் பேசாது. ஒயிலாய் - அழகாய்.

பந்தியென வானோர்கள்
வந்துபணி தேவே!யென்
பண்டைவினை தூளாக—அருள்தாராய்
மந்தியொடி லாயாடு
தண்டலைகண் மேனீடு
மங்குறவழ் சீர்தோகை—மலைநாதா!

2723. கொடிய பாதக
மடவி யால்வரு
குறைகொள் நோய்தவி—ரிடுவாயே.
மிடியி னல்வளர்
துயரில் மூழ்கிய
விதியை நீதவி—ரிடுவாயே.
இடியி னேறென
வதிரு சூருடன்
இகலி யேயமர்—புரிவேலா!
கடிகொள் பூமலி
பொழில்கள் சூழ்தரு
கன்சி காமலை—வருதேவே!

2724. செந்தாமரை மலர்வந்தோன் மகிழுமுன்
தென்பாய் மறைபயில்—கனிவாயா!
இந்தாவருள் பிடியென்றே மயின்மிசை
எந்தாய்! அடியன்—முன்வாயே.
பந்தார கொங்கார்பொழில் மயில்மகள்
பங்கா! மடநடை—மயில்தீரா!
கொந்தாயில குகடம்ப! அருள்புரி
குன்றா கியசிகி—முருகோனே!

---

2723. கொடிய பாதக மடவி - கொடுமையுடன் கூடிய பாதகமாகிய மடத் தன்மை; மடமைப் பண்பு, மடவி எனப் பண்பியாக்கப்பட்டுள்ளது. இடியினே றென - ஆற்றல் மிக்க இடிபோல.

2724. தென்பாய் - தெம்பாய், வன்மையோடு. அருள், இந்தா, பிடி என இயைக்க. பிடி - கொள். கொந்தாய் யிலகு கடம்ப - கொத்துக்களாக விளங்குகின்ற கடம்ப மலர்கள் அணிந்தவனே.

2725. அடியன் வானிட
அழகு மாமயில்—தனில்வாராய்.
கடிகொ ணீப! பொன்
கமழு தோகையின்—மலையாளா!
முடிகொள் வானவர்
முதலி னோர்பணி—இருதாளா!
வடிகொள் வேலவா!
மனதி னேய்தவிர்—முருகோனே!

2726. வந்த சூருடன்
மண்ட வேல்விடு—செயவீரா!
கொந்து லாவிய
கொங்கு சேர்தரு—மலர்நீபா!
அந்த மாகிய அண்ட
ரேபணி—இருதாளா!
நந்தி லாதொரு
நன்று சேர்சிகி—மலைநாதா!

2727. வாச மேவு நீப
மாலை மார்ப! வந்து—எனையாளாய்.
நேச மாக வேடர்
நீடு ஆவல் மாது—புணர்தோளா!
பாச நோய்கள் தீரப்
பார்வை பார்ப்போன் மைந்த!—மயிலாளா!
தேசர் வானவர் தேடு
சீர்கொள் தோகை மேவில்-வருதேவே!

2728. பாதகவினை தீர வேயருள்
பான்மதியொளி ரானனு! குரு—பர! வேளே!
தாதவிழ்மலர் நீப மாலிகை
தானணிதட மார்ப னே! கிருபை—புரிவாயே.
வாதடபொழில் சூழு தோகையின்
மாமலைதனில் வாழு நாயக!—எனையாளாய்.
ஆதரவுக ளேசெய் வாய்குக!
ஆடியமயின் மீதி லேவரு—முருகோனே!

---

2725. வானிட - இன்ப உலகத்தில் (என்னை) இடுதற்கு.

2726. நந்து - நந்துதல், கேடு.

2728. பான்மதி-பால்போன்ற சந்திரன். ஆனனு - திருமுகத்தை உடைய வனே.

2729. கொட்டமிடு சூரர்படை
கெட்டழியவேலைவிடு
கொத்துமயில் ஏறிவரும்—பெருமானே!
துட்டரவி லேநடன
மிட்டுவிளை யாடுவலர்
துப்பிதழின் மேவுவிறன்—மருகோனே!
மட்டவிழு நீபமலர்
உற்றபுய பூதர! என்
மட்டும்அரு ளாததென்?—அறியேனே.
வட்டவடி வேழுலகு
மிக்கபணி யேபுரியும்
மைப்படிசி காமலையின்—வருதேவே!

2730. வந்தகலி தீரத்
துங்கமயில் மீது
வந்துநய மாக—அருளாயே.
எந்தன்மன நோய
கன்றுவிட வேண
இன்பமுடன் ஆக—அருளாயோ?
கந்தமலர் நீப!
அண்டர்பணி தாளா!
கங்கைநிறை நேம—வளநாடா!
சந்தமிகு பாடல்
தந்தருள்செய் சோலை
தங்கு சிகிமேரில்—வருதேவே!

2731. மான மழிவி லாது
வாழ வருள்செய் நாத!—எனையாளாய்.
கான மயிலி னுளைக்
காத லுடனே நாளு—மணிதோளா!
நான முலவு நீப!
ஞான வடிவின் வேலை—அணிதேவே!
வான முதலி னோர்கள்
மால்கொள் சிகியின் மேரில்—வருதேவே!

---

2729. கொட்டம் - அடம் செய்தல் முதலிய குறும்புத்தனத்தைக் குறிக்கும் சொல். துட்டரவு - துன்பம் தரும் பாம்பு; காளிங்கன். மட்டு - தேன்.

2730. துங்கம் - தூய்மை. கந்தமலர் — நறுமணத்துடன் கூடிய மலர்.

2732. கானக மடந்தை
தான்மகிழ் சிறந்த
காளை யெனவந்த—குகநாதா!
தேனலர் நிறைந்த
பூமலி கடப்பச்
சீருயர் சுகந்த—மணிமார்பா!
பானலர் மிகுந்த
தேன்மொழி பகர்ந்த
பார்வதிதன் மைந்த!—எனையாளாய்.
வானவர் மிகுந்த
ராதிபர் பணிந்த
வாழ்வுள சிகண்டி—மலைநாதா!

2733. எனதாசை யதுபோல
எளியென்முன்—வருவாயே.
மனதூடு உளநோயை
வளராது—வருவாயே.
புனமாதி னுடன்லீலை
புரிவால—முருகோனே!
கனகாச லமதான
கனதோகை—மலைநாதா!

2734. பாவத் தால்வரு தீவினை யோடப்
பாதத் தால்அடி யேன்முடி மீதினின்—மிதியாயோ?
வேவத் தானெடு நாறிய தோருடல்
வீடுற் றேபட மாகலி யோடிட—அருளாயோ?
ஆவத் தாலிமை யோர்முறை யேசெய
ஆண்மைத் தானவ னாகிய சூருட—னடுவேலா!
சாவத் தாமிகு லாமுனி வோர்பணி
சாரற் சோலைகள் சூழ்சிகி மேரினில்—வருதேவே!

---

2732. நராதிபர்=மண்ணுலகாளும் மன்னர்.

2733. நோயை வளராது - நோய்த்தன்மை தான் வளராமலிருக்க. வால முருகோன் - பால முருகன் - இள முருகன்.

2734. வேவத்தான் நெடு நாறிய தோருடல் - எரியிலிட்டு வேகவைக்கப் படுவதற்கே நீண்டு வளர்ந்து நாற்றம் அமைந்த உடல். ஆவத்தால் - ஆபத்தினால். இமையோர் முறையே செய - தேவர்களுக்கு நீதி வழங்குவதற்காக. சாவத்தாமிகுலா முனிவோர் - சாபம் தரும் ஆற்றல் மிக்க முனிவர்.

2735. வாது புரிசூரன்
மாய வழிலேவு—செயவீரா!
சூது நிகரான
தூய முலைவேடர்—மகள்தோளா!
தாது லவுநீபத்
தாம மணிமார்ப!—எனையாளாய்.
மாது மலராள்தன்
மாம ருக! தோகை—மலைநாதா!

2736. ஆடிக் கொண்டு மயின்மேன்
யான்முற் கண்டு தொழுவே—வருவாயோ?
பாடிக் கொண்டு நினையே
பார்த்தன் புகொடு பணிவேன்—எனையாளாய்.
கூடிக் கொண்டு விமையோர்
கூறிக் கொண்டு பணியே—புரிசீலா!
கோடிக் கொன்று நீகார்
கோலக் குன்ற மலைமேல்—வளர்தேவே!

2737. எடுத்த செனனம் எவ்வளவோ!
எனக்கு ஒருவழி யுதவயா—இனிமேலாய்.
அடுத்த எனதுதீ வினையெலாம்
அடுப்பி லுலையென மடியவே—அருளாயோ?
உடுத்த கடலுடை அவனிமேல்
உறுத்துக் கொடிய கலிகளான்—மெலிவேனோ?
கெடுத்த மனம்கொடு முனிவரே
கிளைக்கு மயின்மலை முருகையா!—எனையாளாய்.

2738. தானவர் குலகாலா!
தார்புனை புயநாதா!—எனையாளாய்.
வானவர் பணிதாளா!
வாசனை மிகுநீபா!—அருளாயோ?

---

2735. நீபத்தாமம் - கொன்றை மாலை.

2736. கூறிக்கொண்டு - (நின் திருநாமங்களைச்) சொல்லிக்கொண்டு.

2737. செனனம் - பிறப்பு. உதவயா - உதவுவாய் முருகையா. அவனி - உலகம். கெடுத்த மனம் - தீவினைகள் செய்தற்கும் நினைத்தற்கும் அடிப்படையாகிய தன்மைகள் யாவற்றையும் ஒழித்த உள்ளம்.

தேனலர் மிகுகாவார்
சீர்சிகி மலைநாதா!—கிருபைதாராய்.
கானவர் தரும்மானுள்
காதல்கொள் புயசீலா!—குகநாதா!

2739. கலியாகிய துயரம்மொரு
கடல்மூழ்கிட—விதியோதான்!
ஒலியாய்எதிர் வருசூருடன்
உயர்போர்புரி—அயிலாளா!
சலியாமனி னடியேதுதி
தமியேனிடம்—வருவாயே!
மலிவாகிய பொழில்சூழ்சிகி
மலைவாழ்வுறு—குமரேசா!

2740. மதுரித் ததமிழ் நாவலா!
வனச லெட்சுமி வாசனுர்—மருகோனே!
சதும றைப்பொருள் நாதனே!
தமிய னுக்கருள் வாய்குகா!—குமரேசா!
விதுத ரித்திடு வேணியார்
விழைம கிழ்ச்சிகொள் பாலகா!—எனையாளாய்!
மதும லர்ப்பொழில் சூழ்சிகா
மலையி லுற்றிடும் நாயக!—கிருபைதாராய்!

2741. காலங்கலி காலம் என்றுதான்
காணும்படி நாயன்முன் வந்துநீ—அருளாயோ?
கோலம்புனை வேடுவர் மங்கையாள்
கூறுங்கனி வாய்மொழி யுண்டுசேர்—புயவேளே!
ஆலந்திகழ் தார்புனை கண்டனுர்
ஆளுங்கொடி மாதுமை அன்புசேர்—அருள்பாலா!
தாலம்புகழ் வானுயர் கின்றதோர்
தாவும்பொழில் சூழ்கன குன்றைமா—மலையாள்ா!

---

2739. ஒலியாய் - ஒலித்து.

2740. சதுமறைப் பொருள் நாதனே - நான்கு வேதங்களிலும் கூறப்படும் பொருள்களுக்குத் தலைவனுக உள்ளவனே. மது - தேன்.

2741. கொடிமாது - கொடிபோன்ற பெண்.

2742. நெஞ்சநோய் தவிர்த்திடுவாய்
நின்கணல் அடியவன்மேல்—பிழியாயோ ?
வஞ்சன மசுரன்முனே
மண்டுபோர் புரிவயிலா—யுதவேளே !
கஞ்சமா மலர்அயனர்
கண்களா யிரமுடையார்—பணிதாளா !
தஞ்சம்வே றிலைஅருள்வாய் !
தண்கொள்தோ கையின்மலையா !—எனையாளாய் !

2743. தீவினை யதனு லேஉடல் வருநோய்
தீரிட உடனே—அருளாயோ ?
மூவிரு மலர்போ லாகிய மனைமேல்
மோகம துடனே—வளர்தேவே !
நாவினி லினிதாய் அமுரித மயமாய்
நாடிய தமிழ்பா—டல்கள்தாராய்.
கூடிய மயின்மே லேறிய துரையே !
கூன்மதி தவழ்தோ—கையின்மேரா !

2744. வாசனை படைத்த நீப
மாலைகள் தரித்த மார்ப !—எனையாளாய்
தேசசு மிகுத்த ரூப !
தேனினு மினித்த பாடல்—அருளாயோ!
மாசற உடற்கு நோயை
மாறிட விரட்டி யோட—விடுவாயே.
வீசல ருகுக்கு சோலை
மேவிய சிகிப்பொன் மேரில்—வருதேவே !

---

2742. பிழியாயோ - பொழியாயோ. முனே - முன்னே. கண்களாயிர முடையார் - எண்ணற்ற கண்களை உடைய இந்திரனர்.

2743. தீரிட - தீர்ந்திட. மூவிருமலர் - ஆறாக அமைந்த தாமரை மலர்கள் ; முருகன் தோன்றியபோது ஆறு குழந்தைகளாய் ஆறு தாமரை மலர்களில் தவழ்ந்தனன் என்பது புராணக் கருத்து. அமுரிதமயமாய் - அமிழ்த மயமாய். கூன் மதி - பிறை மதி.

2744. தேசசு - ஒளி. உடற்கு நோய் - உடலில் வரும் நோய். வீசலர் - காற்றினல் வீசப்படும் மலர். உகுக்கு சோலை - விழவிடும் மலர்ச்சோலை.

2745. கலைமாமதி பக்கரு காடரவு
சீர்மீது தரித்த கருணைநிபதி
கனகாசல விற்கர னைசிவன்—அருள்பாலா!
சிலைமானு நுத லற்புத நாயகிதன்
குவிபூமுலை யிற்புணர் தார்கொள்புயன்
திறலாளியி னிற்றுயில் மாலினுட—மருகோனே!
கொலையேபுரி புத்தியி லாதவர்கள்
அசுரோர்குல முற்றுமி லாதழிய
கொடிதாகிய சத்தியை யேவிமுன—மடுவீரா!
அலைதாவு கடற்புவி சூழ்நிதி
மயின்மாமலை யிற்றின மேவியபொன்
அயிலாயுத! சிற்பர னைகுக!—முருகோனே!

2746. மதிதாதகி புனைவேணியர்
மகிடாசலம் வளர்வோர்—அருள்பாலா!
கதியாகிய நடையேபுரி
கனதோகைய மயின்மேல்—வருதேவே!
விதிமால்பணி சரணு! மிகு
விரைநீபமென் மலர்மா—லிகைமார்பா!
நதிசூழ்தரு வளநெம! பொன்
நல்தோகையின் மலைமேல்—வருநாதா!

2747. தவள யிதழ்சூழு
மினிய மதுவூறு
தனிம லர்மினுவில்—அருளாயோ?
கவள மதமீறு
சிறுகண் வளர்கோடு
களிறு மகிழ்வான—துணையாளா!
துவள மிடைவேடு
வியைய ருமையோடு
துரைம களைமேவு—புயசீலா!
பவள மொளிர்மேனி
வடிவு திகழ்நாத!
பருமை யுளதோகை—மலையாளா!

---

2746. சிலைமானு நுதல் - வில்லினை ஒத்த நெற்றி. சிற்பரனை குக - அறி வுருவமாகிய குகனே.

2747. தவளம் - வெண்மை. மலர் மினுவில் அருளாயோ-மலரில் எழுந்தருளி யுள்ள மின்போன்ற கலைமகள் என் நாவில் இருக்குமாறு அருள்புரிவாயோ. துவள மிடை - துவள்கின்ற அழகிய இடுப்பு. களிறு - விநாயகர். துரைமகள்-தேவசேனை.

2748. எடுத்த காயமது
சிறக்க வேயருள்செய்.
இகழ்ச்சி யாதலது—நலமாமோ.
தொடுத்த நீபமலர்
தரித்த மார்ப! வொரு
தொகைக்கி லாததுயர்—விலகாயோ?
படுத்த பாடுபட
எதிர்த்து போர்கள்புரி
பதைத்த சூரனுடல்—கிழிவேலா!
கெடுத்த வாசைமுனி
வருக்கு நாத! முடி
இளைத்த தோகைமலை—முருகோனே!

2749. இகலிடு சூரன்
படையழி வாக
எதிரிடு கூரின்—அயிலாளா!
சுகமொழி மாது
குறமக ளோடுந்
துரைமக ளோடு—மணிதோளா!
மகபதி தேவர்
முனிவர்கள் கோடி
மனதொடு தேடு—இருதாளா!
அகலிடு சோலை
வளமிகு தோகை
அழகுள மேரில்—வருதேவே!

2750. உலக மாய்கையை
அடுத போதரு
உரிமை யாகிய—குருநாதா!
கலக மேபுரி
அசுரர் வாழ்குடி
கழிய வேயயில்—தொடுவீரா!

---

2748. முதல் வரியில் அது என்று சுட்டியது உடலினை. தொகைக்கிலாத் துயர் - தொகைப்படுத்திக் கூற முடியாதவாறு மிக்க துன்பம். 'கெடுத்த ஆசை முனிவர்' என மாறுக.

2749. கூரின் அயில் - கூர்மையைப் பெற்ற வேல். சுகமொழி - இன்பம் தரும் சொல். மகபதி - இந்திரன். முனிவர்கள் கோடி - எண்ணிக்கை அற்ற முனிவர்கள்.

2750. 'உலகமாகிய பற்றினை அழித்த ஞானிகளுக்கு உரிமைப் பொருளாய் விளங்குபவன் முருகன்' என்பது முதலடியின் பொருள். அயன்மினர் - அயலவ ராகிய மகளிர்.

திலக வாணுத
லயன்மி ஞெரொடு
திரிதல் பாவம—தடுவாயே.
அலக லாதுயர்
பொழில்கள் சூழ்தரு
அழகு சேர்சிகி—மலைநாதா!

2751. குடிவி ளங்கிய
எயினர் பைங்கொடி
குறம டந்தையை—அணைதோளா!
துடிவி ளங்கிய
இடையர் தந்திடு
சுகமி லங்கிய—மயலாலே.
படிவி ளங்கிய
மறலி யின்றகல்
படவ ரங்கனி—வொடுதாராய்
முடிவி ளங்கிய
இமைய ரும்பணி
முதிய குன்றையின்—மலையாளா!

2752. சரச மிஞ்சிய
அழகு கொண்டிடு
தருண மங்கையர்—மயலாலே
உரசு கொண்டு நல்
மனம விந்தவ
ருடனி ணங்கிட—விதியாமோ?
பரசு தன்கர
மதின்அ ணிந்திடு
பரம னன்புறு—முகவேளே!
சுரர்கு லங்கெட
அயில்எ றிந்திடு
சுமுக! குன்றையின்—மலைநாதா!

---

2751. துடி விளங்கிய இடையர் - உடுக்கையின் தன்மை விளங்குகின்ற இடையை உடைய மகளிர். மயல் - மயக்கம். படி - மண்ணுலகம். மறலி - யமன். அகல்பட - அகன்றொழிய.

2752. தருண மங்கையராகிய மனம் அவிர்தவர் எனக் கூட்டுக. மனம் அவிர்தவர் - உள்ளத்துணர்ச்சி ஒழிர்தவர். பரசு - சிவபெருமான் ஏந்திய ஆயுதம்.

2753. வருசூருட னுடல்கீறிட
வலுபோர்புரி—அயிலாளா!
கருவாசலி னுழையாதருள்
கமழ்நீபமென்—மலர்மார்பா!
அருமாமறை புகழ்நாயக!
அடியேன்மிடி—தவிராயோ?
தருவேநிறை சிகிமாமலை
தனில்வாழ்வுறு—குகநாதா!

2754. தாதவிழ் மலர்நீபத்
தார்புனை புயநாதா!—எனையாளாய்!
மாதர்சேர் மாவேடர்
மான்மரு வியமார்பா!—அருளாயோ!
ஆதரவு புரிவாய்தென்
ஞர்சிகி மலையின்மீ—தேவருவாய்.
சீதமதி தவழும்சீர்
சேர்சிகி மலையின்மேல்—வருதேவே!

2755. கானக மாது
காதல்கொள் தேவ!—எனையாளாய்.
சானகி மாது
தான்மகிழ் மாயன்—மருகோனே!
வானவர் கோடி
வாசவன் வேதர்—பணிதாளா!
தேனலர் சோலை
சேர்சிகி மேரில்—வருதேவே!

2756. மதுமலர் நீப
மலர்அணி மார்ப!—எனையாளாய்.
கதுமென ஆடுங்
கனமயி லேறும்—முருகோனே!

---

2753. சூரனுடல்-சூரனுடைய உடல். வலுபோர் - வன்மைகொண்ட போர்.

2754. தென்னர் - வண்டுகள் பொருந்திய எனவும், தெற்கில் அமைந்த எனவும் பொருள் கொள்ளலாம். சீத மதி - குளிர்ச்சி அமைந்த சந்திரன்.

2755. வாசவன் - இந்திரன்.

2756. கதுமெனவாடும் - விரைவுடன் நடனமாடும். காண - (யான்) காணு தற்காக.

பதுமம தான
பதமலர் காண—வருவாயே.
விதுதவழ் சோலே
மிகுசிகி மேரின்—அமரேசா!

2757. ஆடியமயில் வாகனு!
ஆரணம்அறி யாததோர்—முதலாளா!
பாடியதமிழ் நாயகா!
பார்புகழ்கரு ணைநிதே!—கிருபைதாராய்.
கூடியயிடை யோர்களே
கோதறுமுனி வோர்களே—பணிதாளா!
நீடியபொழில் சூழ்சிகா
நேருமலே நாயகா!—எனையாளாய்!

2758. கலேமாமதி தாதகி சூடிய
கருணைநிதி! யாகிய நாயகர்—அருள்பாலா!
தலேயாகம தேபுரி சூருடல்
தனையேயிரு கூறிடு வேலவ!—எனையாளாய்.
அலேயாழியி லேதுயில் மாலுடன்
அனவானவர் மாமுனி வோர்பணி—கணநாதா!
உலேயாதொரு சீர்வர மேபுரி
உயர்தோகையின் மாமலே வாழ்வுறு—குகவேளே!

2759. வந்த சூருடல் நொந்து வீழிட
மண்டு போர்புரி—செயவீரா!
கந்த மேவுக டம்ப னே!அருள்
கஞ்ச நாயகர்—பணிதாளா!
எந்த நாள்தொறு மன்ப ரானவர்
இந்தி ராதிபர்—பணிதாளா!
அந்த மாகிய குன்றை மாமலே
அண்டர் நாயக!—எனையாளாய்.

2760. வாதுபுரி சூரன்
மாள அயிலேவு—பெருமாளே!
சூதுநிக ரான
தூய முலேவேடர்—மகள்தோளா!

---

2757. ஆரணம் - வேதம்.

2758. உலேயாது - துன்பமுறாது.

தாதுலவு நீபத்
தார்மருவுமார்ப !—எனையாளாய்
தீதுதவிர் நாத !
சீர்சிகிமின்மேரில்—வருதேவே !

2761. சீத மதிபுனை வேணியர்
மானை யணியொரு பாணியார்
சீர்கொள் நிதிமலை காணியார்—அருள்பாலா !
தாத விழுமலர் மாலையாய் !
தோகை மயில்வரு சேவகா !
சாமி சரவண நாதனே !—எனையாளாய்.
ஆத ரவுபுரி வாய்குகா !
நீய லதுணை யாரயா ...
ஆவ லுடன்வர நீசெய்வாய்—அமரேசா !
காதன் மிகுகுற மாதினுள்
சேரு மிருபுய நாதனே !
கார்கள் வழிசிகி மேரில்வாழ்—குருநாதா !

2762. வருசூருடன் மறவேல்விடு—செயவீரா !
திருமாலுடன் திருமான்விழை—மருகோனே !
அருமாமறை அடியேபணி—முருகோனே !
தருசூழ்சிகி தகுமாமலை—வருதேவே !

2763. கொங்குலவு நீப மாலை
கொண்டபுய சீல! *வருள்—புரிவாயே.
சங்குலவு சீத நாட !
தந்திமுக னை தேவர்—துணையாளா !
செங்குமுத வாயின் மாது
செந்திருவை நேரும் வேடர்—மகள்தோளா !
மங்குறவழ் சோலை நாளு
மண்டுசிகி மேரில் வாழு—முருகோனே !

---

2764. கஞ்சன்முத லோர்கள்
கண்டுபணி பாத !—முருகோனே !
அஞ்சவரு சூரை
அண்டர்மகிழ் வாக—அடுவீரா !

2761. பாணியார்-திருக்கரத்தினை உடையவர். யாரயா - யார் ஐயா. கார்கள்-மேகங்கள்.

2763. * இங்குச் சந்தம் சரியில்லை.

தஞ்சமிலை யாவுந்
தந்துதவ வேணும்—அமரேசா!
கொஞ்சமதி தாவு
குன்றைமலை மேவும்—குகநாதா!

2765. அடல்புரி சூரன்
அலறிட வேலை—எயும்வீரா!
கடல்துயின் மாயன்
கமழ்துளை மார்பன்—மருகோனே!
மடமயின் வேடர்
மகள்மகிழ் வாக—அணைதோளா!
வடவரை நேரு
மயின்மலை வாழும்—முருகோனே!

2766. வானவர் மகுட கோடி
மாமணி உதிரும் பாத!—முருகோனே!
தேனலர் நீப மாலை
சீர்புய மீது சூடு—குகநாதா!
யானனி யாய நோயி
லாழ்ந்துவி டாது வெண—அருளாயோ
நானமு லாவு சோலை
நாள்தோறு மேவு தோகை—மலையாளா!

2767. பிறவியில் வருதுயர் முழுவதும்
பிறனிட அருள்புரி குக! குரு—பரவேளே!
உறவினில் விலகிய மடமன்ற
ருடன்மரு விடுமயல் தவறிட—அருளாயோ!
அறமெலி வதுவிது நயமிலை
அடியன்முன் மயின்மிசை அருள்செய்வை-அமரேசா!
குறவர்கள் மடமயில் புணர்பவ!
குருமணி யிலகிய சிகிமலை—வருதேவே!

---

2765. துளை - துளசி.

2766. 'தேவர்கள் இடையறாது வணங்குகின்றமையால் கோடிக்கணக்கான அன்னவர்களின் திருமுடிகளில் உள்ள மணிகள் முருகன் திருவடிகளில் வீழ்ந்து கிடக்கின்றன' என்பது முதலடியின் பொருள்.

2767. பிறனிட - பிற்பட்டொழிய. மடமன்றர் - மடமானர் என்பது சந்தம் நோக்கிக் குறுகி விரிந்தது.

2768. பாவவினை தீரவருள்
பாவலவ! தோகைமயின்—முருகோனே!
கோவவள மானவிழி
கோவையிதழ் வேடர்மகள்—புணர்தோளா!
பூவலர்க ளால்அதிக
பூசைபுரி நாயனுட—கலிதீராய்
சேவல!பொன் மேவுபொழில்
சேர்சிகிரியின் மேரிலுறை—குகநாதா!

2769. சூதுமிக ரிணைமுலையி [ளுள்.........
.........சாய தாளமெனு நல்]—குறமானுர்
தாதுமிகு மலர்மண மாலையே
தான்மகிழ அணிமுரு கய்யா—எனையாளாய்.
வாதுபுரி யெதிரிடு சூரன்மேல்
மாநனுனை வயிலதனை யேவியே—அடுவீரா!
மோதுபொழில் மினிஞர்சிகி மேரில்வாழ்
மூதுமர ஞர்புகழ்குரு நாதனே!—அருளாயோ?

2770. அனியாய லோப
ரவருடு போய்முன்—நிதிதாராய்
எனவாசை யாக
இரவாமல் வேண—அருள்தாராய்.
கனிவாக வேடர்
கனகாதன மாது—புணர்தோளா!
பனிதாவு சோலை
படர்தோகை மேரில்—வருதேவே!

2771. வலுவில்வரு சூரன்
உடல்கிழிய வாவி
மடியஅயி லேவு—செயவீரா!
உலகமதி லாசை
தனையகல வேசெய்
உயர்முனிவர் கோடி—பணிதாளா!

---

2668. பூவலர்கள்-பூ, அலர்கள்; மலர்கள். நாயனுடை-நாயேனுடை. சேவல-சேவலங் கொடியுடையோய்.

2769. [ளுள்.........நல்]-இப்பகுதியில் சில சீர் அசைகள் சிதைந்துள்ளன. மானனுனை - சிறந்த நல் நுனியினை உடைய.

2770. கனகா - கானக என்ற சொல் திரிந்து நின்றது.

அலையவரு நோயை
விலகவரு ளேசெய்
அடியன்குறை தீரும்—வடிவேலா!
சலதிவளை நேம
வளருநகர் சூழுந்
தருசிகியின் மேரில்—வருதேவே!

2772. மாதரசி யான தேவி
வேலேநிக ரான பார்வை
மாலையணி கேச வேடர்—மகள்தோளா!
தாதவிழு நீப மாலை
மார்பில்அணி தேவ! தேவ!
சாமிகுரு சாமி என்ன—அருளாயோ?
காதவரும் மாத ராசை
யான்மெலிவி லாது தோகை
கானமயி லாள! கோடி—அருளாயோ?
சீதமிகு சோலை சூழுந்
தோகைமலை மீது வாழும்
தேடரிய நாத! நாளும்—உயர்தேவே!

2773. கடமத மொழுகிய
அசையிரு செவியுள
கரிமுகர் கருணைகொள்—துணையாளா!
உடலினில் வருதுயர்
பொடிபட அருள்புரி
உமையவள் அருளிய—புதல்வோனே!
குடமில கியமுலை
மடவியர் விழிவலை
கொடுளனை மயல்செயல்—அதுபாராய்.
வடவரை தனைநிகர்
முடிநிரை யுளசிகி
மலைவரு குருபர!—முருகோனே!

2774. வந்த தீவினை
நொந்து வீழிட
வஞ்சி யாளுடன்—வருவாயே.
கந்த நீபம்
நிறைந்த சீர்புய!
கஞ்ச நாயகர்—பணிதாளா!

---

2771. சலதி - கடல்.
2772. காதவரும் - கொன்று நீக்குதற்கரிய.

அந்த ஞானியர்
இந்தி ராதிபர்
ஆன வானவர்—பணிநாதா!
சந்த மேவு
செகண்டி யாகிய
தங்க மாமலை—வருதேவே!

2775. வீறுபடு சூரன் மீதுஅயி லேவுஞ்—செயவீரா!
மாறுபடு நோய்கள் மாயஅருள் யாவும்—உதவாயோ?
சீறுபடு நாகந் தேன்கொள்மலர் வேணி—அருள்பாலா!
நாடுபடு சோலை நாளும்வளர் தோகை—மலைநாதா!

2776. வாதுபுரி சூரன் மாளஅயி லேவு—குகவேளே!
மாதுகுற மானை மாலினொடு சேரு—புயநாதா!
தாதுலவு நீபத் தார்புனையு மார்ப!—எனையாளாய்.
மோதுபொழில் சேரு மூதுசிகி மேரில்—வருதேவே!

2777. வனமயின் நாதா!
மகிழிட அருள்வாய்—குகவேளே!
அனுதின மயின்மேல்
அடியன்முன் னுறுவாய்—அமரேசா!
முனிவர்கள் பணிசேர்
முளரியை நிகரா—கியதாளா!
கனகநன் மலைநேர்
கனசிகி மலைமேல்—வருதேவே!

2778. மனதினில் வருதுயர்
மடிபட வருள்புரி—வேலா!—கன—சீலா!
அனநடை மயில்தரு
அழகிய குறமகள்—நாதா!—அருள்—வேதா!
சினமிகு வசுரனை
தெரிபட அடல்புரி—கோவே!—உயர்—தேவே!
கனககி ரியைநிகர்
கமழ்சிகி மலைவரு—கோலா!—உமை—பாலா!

2779. கொங்குலவு நீப மாலை
கொண்டபுய நாத! வாழ்வு—தருவாயோ?
செங்குமுத வாயின் மாது
செந்திருவை நேரும் வேடர்—மகள்தோளா!

பைங்குலையின் வாளை நீடு
பண்புசெறி நேம நாட!—அருளாயோ?
மங்குறவழ் சோலை சூழ
மஞ்சுலவு தோகை மேரில்—வருதேவே!

2780. அடமிகு சூரன்
அலறிட வேலை—எயுநாதா!
கடமத யானை
கருணைகொள் சீரின்—துணையாளா!
நடமிடு தோகை
நலமயி லேறு—முருகோனே!
வடவரை நேரு
மயின்மலை வாழுங்—குகநாதா!

2781. உலக மாய்கையில் அவதி யாகியே
உனது தாள்தொழும்—அடியார்பால்
கலக மேமிகு கலிக ளோடகின்
கருணை மாரிகள்—பொழியாயோ?
திலக வாணுதல் உமைமி னளருள்
திகழு நீபமென்—மணிமார்பா!
அலக லாதவிண் இமையர் சூழ்தரு
அழகு சேர்கிரி—மலைநாதா!

2782. வருகிற கலியோட மயில்மிசை யுடனேறி—அருளாயோ?
பொருதிய அசுரோன்முன் புகர்பட அயிலேவு—செயவீரா!
கருதிய படியேயென் கணுமுனம் மயலாகி—வருவாயே..
அருவிகள் பொழில்சேரு மழகிய சிகிமேரில்—வளர்தேவே!

2783. வனச மண்டப வனிதை அன்பர்தன்—மருகோனே!
அனக டம்பயி லழகு கொண்டிடு—குறமானுள்
மனம கிழ்ந்துடன் மருவு மம்புய—முருகோனே!
கனக மிஞ்சிய கமழ்சி கண்டியின்—மலைநாதா!

---

2781. கருணைமாரி - அருளாகிய மழை. அலகு - எண்ணிக்கை.

2782. பொருதிய - போரிட்ட, வேல்பட்ட அசுரோன் மயிலாகவும் சேவலாக வும் ஆனான் எனும் கதையை இரண்டாவது வரி நினைப்பூட்டுகிறது. கணுமுனம் - கண்முன்னர். மயலாகி - அன்பாகி.

2783. கனகம் - பொன்.

2784. கடுகிய மொழிபேசியு மயலொடு தயவாகியும்
கனவினு நினையாதிடு—கெடுமாதோர்(டு)
அடிபடு துயரான்மெலி படவிதி வசமோஇனி
அதைநல மிகவேசெய—முடியாதோ?
குடிவளர் குறநாயகி தருமய லதனுல்விழை
குளிர்புன மிகுசாரலி—லணைதோளா!
முடிமிசை கரமேதொழு தடியவர் முதல்வானவர்
முனிவரர் பணிதோகையின்—மலைநாதா!

2785. மலருறை வேதன் செவிதனில் வேதம்
மகிழ்வுட னேசொல்—கனிவாயா!
உலகினி லடியார் பலரினி லெளியேன்
உறுதுயர் தனையே—விலகாயோ?
அலமர விமையோர் முதலினர் தமையே
அழிசெயு மசுரோர்—குலகாலா!
விலகிவிண் மீறு மணிமுடி சேரும்
விரைமிகு தோகை—மலைநாதா!

2786. கதிர்ப ரப்பிய முடிய முத்திய
கனக ரேபணி—முடிவானோர்
துதிசொ லிக்கர முடியில் வைத்தவர்
தொழும லர்க்கிணை—இருதாளா!
அதிக வித்தையை உலகர் மெய்த்திட
அடிய னுக்கருள்—புரிவாயே.
கதிய ருட்சிகி மலையில் உற்றவ!
கருணை யுற்றென்முன்—வருவாயே.

2787. படாத பாடு படலாமோ
இலாமல் வாடி விடலாமோ
பராரை நீப மலர்மாலை—அணிதேவா!
கெடாத வாழ்வு அருளாயோ
அதாலென் ஆசை தவிராதோ
கெதாயு தேசர் மகிழ்வார்மோர்—மருகோனே!

---

2784. "கடுமொழிகளைப் பேசியும் மயக்கம் மிகுந்து குழைந்தும் நின்னைக் கனவிலும் நினையா வண்ணம் கெடுக்கும் மாதர்களின் சேர்க்கையால் துன்பப்படுதல் விதியோ?" என்பது முதலிரண்டடிகளின் பொருள்.

2786. "தேவர்கள் வாழ்த்துக் கூறித்தம் கைகளைக் தலையில் குவித்து வணங்குகின்ற மலரினை ஒத்த இரு திருவடிகளை உடையவனே" என்பது இரண்டாம் அடியின் கருத்து. மெய்த்திட - மெச்சிட.

2787. பராரை-பருத்த அடிமரம். கெதாயுதேசர்—கதை ஆயுதத்தை உடைய தலைவராகிய திருமால். வெகாசையாக - வெகு ஆசை ஆக ;. மிக்க ஆவல் உண்டாக, அகாதபோர் - ஆகாதபோர் - சூரன் செய்த நியாயமற்ற போர்,

விடாத மாய மடமானர்
உலாச மான புணர்வாலே
வெகாசை யாக மெலிவேனோ—குகநாதா!
அடாத தேசெய் அசுரோனே
டகாத போர்வெல் அயிலாளா!
அனேக ரூப மயிலாமே—ரினில்வாசா!

2788. தரித்திர மான கடற்குழி மூழ்கித்
தவிப்பது இந்நாளில்—விடலாமோ?
பரித்தினி தான அனுக்கிரக வோடம்
பரித்திட வேணும்—நினையாயோ?
விரித்திடு சோதி முடிக்கன வானர்
விருப்போடு தாழும்—இருதாளா!
அரித்திரள் பாடு மலர்ப்பொழில் சூழும்
அருள்பொலி தோகை—மலைவாசா!

2789. வடிவு தங்கிய குறம டந்தையை
மருவும் இங்கித—மணவாளா!
குடியி லங்கிய குழல ரின்றுசெய்
குடில மென்றுமே—தவிராதோ?
அடியன் எந்தனை மருவு துன்பம
தனைக்க டந்திட—அருளாயோ?
துடிமி குந்திடு அசுரர் சங்கர!
துரைசெ கண்டியின்—மலைநாதா!

2790. வானவர் பணிசரண!
வாசவன் மகிழ்மருகா!—எனையாளாய்.
தானவர் குலகலகா!
தார்புனை புய!அடியேன்—கலிதீராய்.
கானவர் குலமயிலாள்
காதல்கொள் குருபரனே!—அம்ரேசா!
தேனலர் மிகுபொழில்சேர்
சீர்சிகி மலை யரசே!—அருளாயோ?

---

2788. ‘வறுமை யென்னும் கடலாகிய நீர் நிலையில் நான் மூழ்கி அழியா திருக்க நின் திருவருளாகிய படகினைத் தாங்கள் அருளவேண்டும்’ என்பது முதலிரண்டடிகளின் வேண்டுகோள். அரித்திரள் - வண்டுக்கூட்டம்.

2789. இங்கிதம் - குறிப்பு. துடி - துடிதுடிப்பு.

2791. மடமாதர்கள் அனுராகமென்
மயலாழியில்—உழலாதே
நடிமாடிய மயின்மீதினில்
நலமாகமுன்—வருவாயே.
குடமாகிய தனநாயகி
குறமாதோடு—புணர்தோளா!
திடசூரனை அடுவேலவ!
சிகிமேருவின்—கிரிநாதா!

2792. வாதுபுரி சூரன்
மாயஅயி லேவு—செயவீரா!
பேதுவரு வேதன்
போதமுனி வோர்கள்—பணிதாளா!
தாதுலவு நீபத்
தார்புனையு மார்பா!—எனையாளாய்!
மாதுலவு தோகை
மாமலையின் நாதா!—அருளாயோ?

2793. தருப்பொலி கானக மயிற்கொரு மாமலர்
தரித்தினி தாய்மரு—வியதோளா!
விருப்பொடு மாதர்கள் பயிர்ப்பினில் வாடிய
மிடிக்கொரு சீரரு—ளுதவாயோ?
திருப்பொலி மார்பினர் விரைத்துளே சூடிய
செயப்படு மாயவன்—மருகோனே!
குருப்பொலி மாமுடி மிகுச்சிகி மேருவுள்
குக!குரு நாயக!—எனையாளாய்.

2794. மாட மாளிகையர் சூழும் நேமநகர்
வாசனே! குமர—குருநாதா!
கூட கோபுர விலாச வீதிநிரை
கூடு தோகைமலை—வருதேவே!
வேட மாதுபுணர் தேவ தேவ! அருள்
வீறு சூரையடு—கதிர்வேலா!
ஆட லேபுரியு மீறு தோகைவரு
ஆரண! அடிய—னிடம்வாராய்!

---

2792. பேது வருவேதன்-அறியாமை வருபிரமா, பேதமை நிறைந்த பிரமன்.

2793. குரு = நன்னிறம்.

2794. மீறு தோகை = விளக்கம் அமைந்த மயில்.

2795. கதிக்குமயில் வாகனு!
கனத்தஅயி லாயுதா!—எனையாளாய்.
மதிக்குநிக ரானனு!
மகிழ்ச்சியுட னுகவே—வருவாயே.
விதிக்குமுன மேன்மையாய்
விருப்போடுசொல் வேதனே!—குருநாதா!
பதிக்குளுயர் தோகையாம்
பணைத்தகிரி மீதிலே—வருதேவே!

2796. திறத்த சூருடன் அடுத்த போர்புரி
சிவத்த கூரயில்—முருகோனே!
அறக்கு போனிற மிகுத்த தாதுயர்
அரிக்கு ழாமிகு—மலர்நீபா!
மறப்பெண் ணுகிய மயிற்கு மாலிகை
மகிட்சி யாய்அணி—புயலோலா!
உறக்க மாகிய இறப்பு தீரிடு
உயர்ச்சி யாகிய—சிகிமேரா!

2797. படுபாவி யான அனியாய லோபர்
படிறேசொல் வோர்கள்—வருபாலாய்
கடுகாக வோடி மனநொந்து யாச
கமதேசெ யாது—நிதிதாராய்.
வடுவான பார்வை யதினுல்செ யாசை
வலைமீது வீழ்தல்—விதியாமோ?
விடுசோதி மாம ணிகள்சூழு சோலை
மிகுதோகை மேரில்—வருதேவே!

2798. கருத்தி னேய்தவிர் கருத்த னே! நட—மயிலாளா!
வருத்த மாவுடல் வகிர்க்க வேல்விடு—செயசூரா!
உருத்த தாயென முனுப்ப வேவர—நினையாயோ?
திருத்த மாகிய சிகிப்பொன் மேரினில்—வருவாயே.

---

2796. அரிக்குழாம் - வண்டுக் கூட்டம். மகிட்சி - மகிழ்ச்சி. 'உறக்கமாகிய இறப்பு' - 'உறங்குவதுபோலும் சாக்காடு' எனும் திருக்குறள் நினைந்து கொள்ளுதற்குரியது.

2797. படிறு-பொய். பாலாய் - பக்கமாய். கடுகாக - விரைவாக. வடுவான - மாவடுவினை ஒத்த. பார்வை - பார்வைக்கிடமாகிய கண்கள்.

2798. உருத்த தாயென - மகவுக்காக நெஞ்சு கனியும் தாயைப்போல. முனுப்பவே வர - முன்னே இப்பொழுதே வருமாறு.

2799. வருநோய்தவி ரிடவேயருள்
மயிலேறிய—பெருமாளே!
கருமேகமெ னிறமாலுட
கனமாகிய—மருகோனே!
அருமாமறை புகழ்நாயக!
அடியேனுட—மிடிதீராய்.
தருஞ்சூழ்சிகி மலைமேவிய
சண்முகா! குரு—பரவேளே!

2800. மடலு லாவிய
நீப மாலிகை
மருமமீதினில் வாச மாகியணி—முருகோனே!
படவ ராவணி
வேணி நாயகர்
பரமர் பாலக! தோகைமாமயில்—அமரேசா!
அடவி சூழ்சிகி
மேரு நாயக!
அடிய னேனிரு பார்வை காணிட—வருவாயே.
திடம தாகிய
வசுரர் கால! பொன்
திகழு லாவிய வேல வா! கிருபை—புரிவாயே.

2801. எந்தன் மனதின் வந்த துயர்தனை
என்று அகலிட—அருள்வாயோ?
கந்த மிலகு கடம்ப மதுமலர்
கண்ட மதிலணி—குகநாதா!
சந்த மிகுகவி யுந்தன் மலரடி
தங்கு துதிசொல—அருளாயோ?
அந்த முலவுகொ டுங்க ளுயர்சிகி
அண்டம் அளவிய—மலைநாதா!

2802. சாதியில் உயர்ந்த வேடுவர் குழந்தை
தான்மகிழ் சிறந்த—அதிரூபா!
வாதில குகின்ற சூரர் சதுரங்கம்
மாளஅயில் கொண்ட—செயவீரா!

---

2799. 'கருமேகம் எனத்தகும் நிறம்பெற்ற திருமாலின் பெருமை அமைந்த மருகனே' என்பது இரண்டாவதடியின் பொருள்.

2800. மடல் = இதழ். மருமம் = மார்பு.

2801. கொடுங்கள் = கோடுகள்.

சோதியுமை அன்ப தாகஅருள் மைந்த!
தோகைமலை வந்த—முருகோனே!
மேதினிபு கழ்ந்த தாமரைமி கர்த்த
மேன்மைதிக ழுந்த—இருதாளா!

2803. மதிதாதகி கூவிளை சூடிய
மலிவேணியர் நாடக நாயகர்—அருள்பாலா!
பொதிதாதவிழ் தாமரை மேவிய
பொருவேல்விழி யாள்புணர் மாயவன்—மருகோனே!
கதிசூழ்மயில் மேலிருந் தேயருள்
கருணாகர! முடிவாழ்சிகி மாமலை—முருகோனே!
விதியால்வரு தீவினை தீரிட
விளையாடிய தோகையி லேறிமுன்—வருவாயே.

2804. தாதவிழ் நீப மாலை
தானணி மார்ப! நாளும்—அருளாயோ?
காதல்கொள் வேட மாது
கானக மீது மேவு—குகநாதா!
மாதர சான தேவி
மாரிகௌ மாரி பாலா!—எனையாளாய்.
பூதல வோர்கள் தேடு
பூமலி தோகை மேரில்—வருதேவே!

2805. நடன மிட்டிடு மயிலுற் றென்முனம்
நலமெ னக்கரு—ளிடவாராய்.
மடம யிற்குற மகளை அற்பொடு
மருவு சிற்பர!—முருகோனே!
தடவ ரைப்புய வசுர னைப்பொரு
சமர்இ யற்றிட—விடுவேலா!
அடவி யுற்றிடு சிகிமலைக்குக!
அடிய னுக்கருள்—புரிவாயே.

2806. வஞ்சனைபுரி சூரனை நைந்திடஅயி லேவிமுன்
மண்டியசம ராடிய—செயவீரா!
பஞ்சினும்மெலி தாகிய அஞ்சிறையன நேர்நடை
பங்கசஅடி வேடமின்—அணைதோளா!

---

2805. அற்பு - அன்பு.

2806. அஞ்சிறை யனம்-அழகிய சிறகுகளை உடைய அன்னம். பங்கச அடி - தாமரையினை ஒத்த திருவடி. சங்கர சருவேசுரர் - சங்கரரும் சருவேசுவரரும் ஆகிய சிவபெருமான்.

நஞ்சரவணி வேணியர் தந்தருள்குக! நாயக!
சங்கரசரு வேசுரர்—முருகோனே!
மஞ்சதுதவழ் சோலைகள் மண்டியசிகி மாமலை
வந்திடுசெக நாயக!—அருளாயோ?

2807. மாறுபடு சூரன் மாயஅமி லேவு—செயவீரா!
கூறுபடு பார்வை கோகனக மாது—மருகோனே!
ஆறுமுக நாத! ஆதரவு நீசெய்—அமரேசா!
மீறுமுடி சேரும் மேன்மைமிகு தோகை—மலைநாதா!

2808. வடிக்கு மதுமொழியாள்
மலர்க்கு நிகர்முகமான்—நலமேசேர்
நடிக்கு மடமயிலாள்
நலக்கு றவர்கொடியாள்—புணர்தோளா!
மிடிக்கு ளலைகுவனே
விரைக்க மலஅடியாய்!—அருளாயோ?
படிக்குள் உயர்சிகியாம்
பணைத்த மலையரசே!—எனையாளாய்.

2809. வாதுபுரி சூரன் மாயஅமி லேவு—செயவீரா!
தாதுலவு நீபத் தார்மலர்கள் சூடு—புயநாதா!
மோதுசிறை நீடு மோகமயின் வேடர்—மகள்தோளா!
போதுலவு சோலை பூணுசிகி மேரில்—வளர்தேவே!

2810. அடம்புரி மாவின் குலம்பொடி யாக
அழிந்திட வேலை—எயும்நாதா!
கடம்பொழி யானை மனங்கனி வான
கனங்கொளு மாசோ—தர! குகேசா!
நடம்புரி தோகை எனும்பரி மீது
நலந்தர நாயன்—முன்வாராய்.
திடங்கொளு மேரை நிகர்ந்திடத் தாய
செகண்டியின் மேரில்—வருதேவே!

2811. துயர மாகிய கடலில் வீழ்வது
தொலைய வேநல—முதவாயோ?
கயல்கள் போலிரு விழிக ளால்மயல்
கடிது தானிடு—மடமானர்

---

2809. மிடி = வறுமை.

2810. மா சோதர = சிறிய உடன்பிறந்தவனே.

அயலில் நேர்இடல் விலக வேயருள்
அமரர் சூழ்தரு—குகநாதா!
வயல்கள் சூழ்தரு சிகியின் மாமலை
வரத! தோகையின்—மயிலாளா!

2812. அடியவ ருக்கருள் தேவ!
குறமக ளுக்கிசை தேனே!
அழகுப டைத்திடு நாதா!—இரும்பதாராய்.
மிடியை யடித்திடு காலா!
அளிகள் சுவைத்திடு நீபா!
விரைமலர் உற்றிடு வேதா—உபதேசா!
கெடியை நடத்திடு சூரா
திபனை யடக்கிய வேலா!
கெதியை எனக்கினி நீயே—அருளாயோ?
கடிமல ருற்றிடு காவே
நிறைசிகி யிற்கிரி வாழ்வே!
கனபொரு ளுற்றிடு பாவே!—குகவேளே!

2813. சரச மிஞ்சு குறம டந்தை
தழுவு கின்ற—புயலோலா!
வரம கிழ்ந்து அடிய னின்று
வளமி லங்க—அருளாயோ?
தரணி யெங்கும் அருள்சு ரந்து
தழைய வந்த—குகநாதா!
பரமர் தங்கு கயிலை என்று
பனுசெ கண்டி—மலைவாழ்வே!

2814. கூனப் பிறையணி வேணியார்
கூறுற் றிடுகன மாதினு—ளருள்பாலா!
பானத் தணியிருண் மாயனார்
பார்வைக் கிசைவடி வாயின—மருகோனே!
நானக் கமலவி லாசனார்
ஞானக் குரு!பெரு நாதனே!—அருளாயோ?
வானத் தளவிய தோகையாய்
வாழ்வுற் றிடுமலை மீதுவாழ்—குகவேளே!

---

2813. பனு = பன்னத்தகுந்த, சொல்லத்தகுந்த.

2814. கூனப் பிறை = வளைந்த பிறை. கூறுற்றிடு கனமாது=உடலில் ஒரு பாதியில் பொருந்திய உமையம்மை.

2815. கொஞ்சிய கிளிமொழியார்
குங்கும நிறவுடலார்—தருமாலால்
அஞ்சிட விதிவசமோ?
அண்டர்கள் பணிசரணு!—அதுதீராய்.
பஞ்சினு மெல்லடியாள்
பங்கச மயில்குறமா—னணைதோளா!
மிஞ்சிய பொழிலுறைசீர்
விண்டலம் உயர்சிகிமா—மலையாளா!

2816. நடன மிடுபரியாய்!
நலமு தவிசெய்குவாய்—அமரேசா!
அடமு லவும்அசுரோன்
அலற அயில்விடுவோய்—செயவீரா!
குடமி ணையின்முலையாள்
குறவர் மடமயிலாள்—புணர்தோளா!
வடவ ரையைநிகர்சீர்
மயின்ம லையினரசே!—எனையாளாய்.

2817. தாதகி கூவிளை
தார்புனை வேணி—அருள்பாலா!
மாதர சாகிய
மாரிகு மாரிதன்—மக!வேளே!
ஆதர வேயருள்
ஆரண னே!குரு—பரநாதா!
தாதவிழ் சோலைகள்
சார்சிகி மேருயர்—முருகோனே!

2818. வாதுபுரி சூரன் மாயஅயி லேவு—செயவீரா!
தாதுலவு நீபத் தார்புனையு மார்ப!—எனையாளாய்.
சூதுமிகு பார்வைத் தோகைகுற மாது—புணர்தோளா!
மாதுலவு தோகை மாமலையின் வாச!—எனையாளாய்.

2819. அனியாய சூரன் அழிவாகக் கோலும்—செயவீரா!
கனிபோலும் வாயள் கமழ்கெச வேடர்—மகள்தோளா!
பனிமேவு சோலை படர்தோகை மேரில்—வருதேவே!
இனிதான பாட லெளியேன்மு னுக—அருளாயோ?

---

2818. சூதுமிகு பார்வை - களவுகொண்ட பார்வை.

2819. அழிவாகக் கோலும் - அழிவு அடையுமாறு செயல் புரியும்.

2820. வந்த அசுரனை மார்பில்
மண்டி விழஅயி லேவு—செயவீரா!
கந்த மிலகிய நீபங்
கண்ட மதிலணி தேவ!—எனையாளாய்.
எந்த னிடம்வரு நோயை
இன்று அகலிட வேண—அருள்தாராய்.
நந்த வயலுள மேன்மை
நன்று மிகுசிகி மேரில்—வருதேவே!

2821. விருத்த மாயெனை வருத்து நோயக—லிடவாராய்.
கருத்த னே!எதிர் கனத்த சூருடல்—கிழிவேலா!
விருத்த மாமதி மிலைத்த வேணியர்—அருள்பாலா!
திருத்த மாகிய திருச்சி காமலை—முருகோனே!

2822. அடியனிடம் வருகலியை
அழிவுபட அருள்புரிவை—குகநாதா!
குடியினுயர் குறவருட
குவிமுலையின் மடவிமரு—வியதோளா!
கடியுலவு மலரில்வளர்
கமலமிசை யுலவுபவர்—பணிதாளா!
வடிவுமிகு மயில்முருக!
மயின்மலையி னரசுபுரி—அமரேசா!

2823. இகல்புரி சூரன்
இடறிட வேலை—எயுநாதா!
மகபதி தலத்தோர்
மகிழ்வோடு நாளும்—பணிதாளா!
அகம்வரும் நோயை
அகலிட வேசெய்—குகநாதா!
செகம்வளர் சீர்கொள்
சிகிமலை வாழும்—முருகோனே!

2824. தண்டைக் கலகலெனவே
தங்க ளுடமனைவிய—ரோடுவாராய்.
மண்டை உடைபடவே
மண்டிடு படையசுரோன்—எதிர்வேலா!

---

2820. நந்தவயல் - நந்துகள் (சங்குகள்) உழுகின்ற வயல்.

2821. விருத்தமாய் - வேறுபாடு விளைய, மிலைத்த - மிலைந்த, அணிந்த.

கொண்டை நிகர்விழியாள்
கிஞ்சுக மென்மொழியாள்—கருபாலா!
கொண்டை மயின்முருகா!
குன்றை மலையரசே!—எனையாளாய்.

2825. வடித்த பால்மொழியாள்
மருக்கு லவுகுழலாள்—குறமானுள்
குடிக்குள் மேன்மைபெற
குருக்கொள் மலர்புனைவாய்!—எனையாளாய்
படிக்க நாயன்முனம்
பணைத்தோ கைமயின்மேல்—வருவாயே.
முடிக்கு லவுபொழில்சேர்
முதுச்சி காமலைமேல்—வருதேவே!

2826. பொருசூர்உடல் இருகூறிடு
புகழ்வேல்கொடு—செயவீரா!
மருமேவிய செயநீபமென்
மலர்சூடிய—புமவேளே!
வருநோய்தவி ரிடவேஅருள்
மயிலேறிய—குகநாதா!
திருமாமகள் அகலாதிரு
சிகிமாமலை—வளர்தேவே!

2827. நடிக்குமயில் வாகன!
நலக்குரிய நாதனே!—அருளாயோ?
பிடிக்குளடி யேனினுள்
மெலித்தலினி ஞாயமோ?—அருளாயோ?
குடிக்குளுயர் தேவியார்
குலத்தி லுயர் மாதினுள்—புணர்தோளா!
கடிக்குருகர் நீபனே!
கமழ்பொழில்கொள் தோகைமா—மலைநாதா!

2828. தாதவிழ் நீப மாலை
தானணி மார்ப! நாயன்—முன்வாராய்.
தீத்று பாடல் வாய
தேவர்கள் தேவ தேவ!—எனையாளாய்.

---

2824. கெண்டை - ஒருவகை மீன். கிஞ்சுகம் - கிளி. கொண்டை மயில் - தலையில் கொண்டையினைப் பெற்ற மயில்.

2827. பிடிக்குள் அடியேன் இன்நாள்-வறுமையில் அடியேன் இந்த நாளில்.

2828. பாடல் வாய தேவர்கள்-பாடல்களைப் பாடிக்கொண்டிருக்கும் வாயினைப் பெற்ற தேவர்கள்.

சீதர னுரை மேவு
சீர்மகிழ் வான ரூப—மருகோனே!
மாதகலாத தோகை
மாமலை மீது மேவு—குகநாதா!

2829. வனச மலர்மீது
வளரும் மயின்மேவு—புயமாயோன்
சினவ சுரரோடு
திறவ டல்செய்மால்தன்—மருகோனே!
புனம யிலைமேவு
புனித! குருநாத!—எனையாளாய்.
கனக மலைநேரு
கனசிகி யின்மேரில்—வளர்தேவே!

2830. வஞ்சக ராவணன்மேல்
மண்டிய போர்புரிமால்—மருகோனே!
கஞ்சமென் வீடுறைவோர்
கண்டுதொ ழாதாரை—அறைவோனே!
கிஞ்சுக மாமொழிநேர்
கின்றசொல் வேடமினள்—புணர்தோளா!
மஞ்சுகள் தாவியதோர்
வண்சிகி மாமலைமேல்—வருதேவே!

2831. பொருது சூருடல் புளவ தாயயில்—விடுசூரா!
அருமை யாயென்முன் அழகுமாமயில்—தனில்வாராய்.
மருவு லாவிய வனச மான்மகிழ்—மருகோனே!
தருவு லாவிய தகுசி காமலை—முருகோனே!

2832. மதகரி யாகிய வதனர்ச கோதர!—முருகோனே!
இதமுள நீபமென் இனியநன் மாலிகை—புனைதோளா!
கதமுயர் சூரொடு கடுமைய தாய்எதிர்—அயிலாளா!
பதமருள் சீருயர் பணைசிகி மாமலை—வருதேவே!

2833. ஆடியமயில் ஏறி ஆதரவுட னடி—வருவாயே.
பாடியதமிழ் வாயா! பார்வதிதரு பாலா!—எனையாளாய்
கூடியபுல வோர்கள் கூறியதுதி யாள!—அருளாயோ?
நீடியமக மேரே நேர்சிகிமலை நாத!—குகவேளே!

---

2229. திற அடல்செய் - ஆற்றலுடன் கொல்லுதலைச் செய்கின்ற.

2834. வந்த சூருடன்
மண்டு போர்புரி—அயிலாளா!
சந்த மேவிய
சங்க நாவல!—எனையாளாய்.
கந்த மேவிய
கஞ்ச நாயகர்—பணிபாதா!
அந்த மேவிய
அண்டமேவிய—சிகிமேரா!

2835. வாதுபுரி சூரன் மாயஅயி லேவு—செயவீரா!
சூதுநிக ரான தூயமுலை வேடு—வியினுதா!
தாதுலவு நீபத் தார்புனையு மார்ப!—எனையாளாய்.
ஓதுமறை யேசொ லோகைகளை நாத!—சிகிமேரா!

2836. தாதவிழ் நீப மாலை
தானணி மார்ப! தோகை—மயிலாளா!
மாதர சான தேவி
மாதுயர் வேட மானை—அணைதோளா!
கோதடர் சூர னுவி
கோள்அயி லா! யெ னுளும்—எனையாளாய்.
ஆதர வேசெய் நாத!
ஆவல்கொள் தோகை மேரில்—வருதேவே!

2837. மனதில்வரு நோயை மறையவரு ளேசெய்—குகநாதா!
உனதடியை நாய னுறுதியென நாளும்—நினைவேனே.
பனகச நேசர் பருவமலர் மாது—மருகோனே!
கனகமலை நேரு கனசிகி மேரில்—வருதேவே!

2838. வால மதியணி வேணியர்
வாலை கௌரிம னேன்மணி—தருபாலா!
ஆல நிகரவு ணர்களை
ஆனை முதலிய சேனைகள்—அழிசூரா!
கால மிதுகலி யோயவே
கார ணு!கரு ணையினுன்—முனம்வாராய்.
ஞால அடியவர் வானவர்
நாளும் நிறைசிகி மேரினில்—வருதேவே!

---

2836. கோள் - கொள் என்பது நீண்டது.

2837. பனகசம் - பங்கசம், தாமரை.

2838. ஆல நிகரவுணர்களை - ஆலகால நஞ்சினை ஒத்த அரக்கர்களை,

2839. கொண்டலை நேர்குழல்
மண்டிய வேடுவர்
கொண்டிடு காதல !—எனையாளாய்.
தொண்டர்கள் சூழ்தரு
மண்டப ! வாசனை
தொங்கல்கள் சூடிய—புயநாதா !
வெண்டலை மேவிய
செங்கையி னயகர்
மின்கொடி யாளருள்—புதல்வோனே !
அண்டமு லாவிய
தண்டலை நீடிய
அந்தம தாகிய—சிகிமேரா !

2840. வனசமலர் மீது
வளரும்மட மாது—மருகோனே !
அனவரத காலும்
அடியனிடம் வேண—தருள்தாராய்.
மனதில்வரு நோயை
மடியஅரு ளேசெய்—குகவேளே !
கனகமலை நேரு
கமழ்சிகியின் மேரில்—வருதேவே !

2841. சானகி தனக்கு மாலைகள் தரித்த
சாமி மகிழ்ச்சி—மருகோனே !
கானக மயிற்கு ஆசைகள் மிகுத்து
கானவ ரெனத்தி—ரியும்நாதா !
தேனளி நிறைத்த பூமண மிகுத்த
(சேயனிமிர) கடப்ப—மலர்மார்பா !
வானக முயர்த்த சோலைக ணிறைத்த
வாசனை படைத்த—சிகிமேரா !

2842. மதவருவி ஒழுகியசை
ஒருகைகொளும் மலையுருவின்
மகிழுவரு துணைவனெனும்—முருகோனே !
கதமுலவு அசுரர்களை
இகல்பொருது அயில்கொடுமுன்
கனபடைகள் முறிபடவெ—அடுதேவே !

---

2839. வெண்டலை மேவிய செங்கையின் நாயகர் - பிரம்ம கபாலத்தினைக் கையில் ஏந்திய சிவபெருமான்.

2840. அனவரதகாலும் - எப்பொழுதும்.

2841. (சேயனிமிர) -இப்பகுதி தெளிவாக இல்லை.

நிதமுனது பதமலரை
நினைஅடியன் மகிழஅருள்
நினதுதய வுடன்அருள்வை—குகநாதா!
இதழுலவு மலர்களுள
பொழில்கணிறை சிகிமலையின்
இனிதினுடன் வருகுமரா!—குருநாதா!

2843. தாதவிழு நீபத்
தார்புனையு மார்ப!
தாதையெனு நாத!—எனையாளாய்.
மாதரசி யான
வேடர்மகள் மேவு
மாமயல! வேண—தருள்தாராய்.
போதமுனி வோர்கள்
பூசிதைசெய் பாதா!
பூமருவு சோலை—மலைவாழ்வே!
ஆதரவு நீயே
ஆறு முகவேல!
ஆடுமயில் மேரில்—வருதேவே!

2844. மனதினில் வருதுயரம்
மடிந்திட அருள்புரியாய்!—செகநாதா!
தனகிரி மறமயிலாள்
தருமயில் மிகுகணவா!—எனையாளாய்.
அனநடை மயின்மடவார்
அவருட மயலதனை—விலகாயோ?
புனனிறை வயலுளசீர்
பொருசிகி மலையரசே!—கிருபைதாராய்.

2845. உலுத்தர்க ளான
சினத்தசொல் வாயர்
உலோபரென் பேயர்—பாலாகி
வெலுத்திய தாக
அலக்கழி வாக
விணில்நலம் போக—விதியாமோ?

---

2843. தாதை - தந்தை. பூசிதை செய் பாத - பூசை செய்யும் திருவடிகளை உடையவனே.

மெலுக்குள ரூப
மடக்கொடி யான
விரைக்குழன் வேடர்—மகள்தோளா!
பலுக்குள தேவர்
மறைபடு வாயர்
பணித்திடு தோகை—மலைநாதா!

2846. தானவர் குலகலகா!
நீபம தணிபுயவா!
சானகி மகிழ்மருகா!—எனையாளாய்.
வானவர் முதலினர்பூ
மாமழை பொழிந்திடவே
வான்மயில் மிசைவருவாய்—என்முனமே.
கானவர் குலமயிலாள்
தான்மயல் செயுமுருகா!
கார்முகில் தவழ்சிகிமா—மலைநாதா!
மோனவர் முனிவோரே
நாள்தொறு துதிசரணு!
மூடிகர் துணைவடிவே!—அருடாராய்.

2847. வருதீவினை யதுவோடிட மயின்மீதினில்—வருவாயே.
பொருசூருட லிருகூறிடு புகழ்வேலவ!—எனையாளாய்.
ஒருநாளினு மறவாதெனை உடனுதரி—முருகோனே! [நாதா!
கருமாமுகில் தவழ்சோலைகொள் கமழ்தோகையின்—மலை

2848. வெஞ்சமர் ஆடிமுன் நெஞ்சுப கீரிட
வென்றிடு வேலவ!—செயவீரா!
கிஞ்சுக வாயினள் ரஞ்சித வேடுவி
(கெரதசி) வாதணி—தனமீதே
மிஞ்சிய காதல! தண்டலை மேவிய
மின்பயில் தோகையின்—மயில்வீரா!
அஞ்சிய நோய்தவிர் குன்றைய தாகிய
அங்கிரி மேவிய—முருகோனே!

2849. விரைசேர்மது மலர்நீபமென்
வெகுமாலைகள்—புனைமார்பா!
திரைமீதர வணையார்துயில்
செயுமாலுட—மருகோனே!

---

2845. பணித்திடு - பணிந்திடு, பணிகின்ற.

2846. மூடிகர் - விநாயகர்.

2848. (...) சொல் விளங்கவில்லை.

வரைமானருள் புதல்வா! நடை
மயிலேயிவர்—முருகோனே!
தரையோர்முத லனவோர்ப்பணி
தருதோகையின்—மலேநாதா!

2850. வருசூரன் உடல்கீறு வடிவேலா!—எனேயாளாய்.
திருவான வடிவான செயவேடர்—மகள்தோளா!
ஒருவானம் வருதேவ ரொடுவேதர்—பணிபாதா!
தருமேவு சிகிமேரு தனில்வாழும்—முருகோனே!

2851. கூவிய மயின்மிசை கோலம துடன்முனம்—வருவாயே.
ஆவியை நிகர்வரு ஆசைகொள் குறமயில்—மணவாளா!
பாவிய ரெனவளர் பாதக மடவியர்—மயல்தீராய்.
வாவிகள் நிறைசிகி மாமயின் மலேமிசை—வருநாதா!

2852. பொருது சூருடல் புளவ தாகமுன்—அடுவேலா!
அருமை யாகிய அழகு வேடமின்—அணேதோளா!
தருவு லாவிய தழைசி காமலே—முருகோனே!
மருவு நீபநன் மலர்கள் சூடிய—குகநாதா!

2853. தாதவிழ் நீப மாலே
தானணி மார்ப! நாய—னிடம்வாராய்.
வாதடர் சூரன் மீது
மாறிடு கூற தாக—அடுவேலா!
வேதல மாது நேரு
பூமலி வேடர் மாது—புணர்தோளா!
வேதனும் வானு ளோரு
மேபணி தோகை மேரில்—வருதேவே!

2854. வஞ்சி நிகரிடையாள்
மங்கு றவழ்குழலாள்—குறமானுள்
கொஞ்சி அணேதுரையே!
கொங்கு லவுநீப—மென்மார்பா!
வஞ்சி யர்கள்மயலால்
மண்டி வருதுயரோ—டிடவாராய்.
மிஞ்சி வளர்பொழில்சேர்
மின்சி கியின்மலேநா—யக! வேளே!

---

2849. மயிலே இவர் - மயிலினை ஏறிச் செலுத்துகின்ற.

2855. கானக மாது மேவிய கோல
காரண ! நாத !—எனையாளாய்.
வானவர் கோடி வேத்தியர் கோடி
மாமகிழ் வோடு—பணிபாதா !
தேனலர் நீப மாலிகை மார்ப !
தேவர்கள் தேவ !—குருநாதா !
மீனலர் வாவி சூழ்தரு தோகை
மேரினில் வாச !—கிருபைதாராய்.

2856. மருவு லாவிய நீப
மலர ணிபுய ! மார்பா !—அயிலாளா !
செருவு லாவிய சூரன்
தெறிப டையெயும் வீரா !—எனையாளாய்.
தருவு லாவிய கானம்
தனில்வ ளர்மயில் மானுள்—புணர்தோளா !
திருவு லாவிய தோகைச்
சிகிம லைவரு தேவே !—அருளாயோ ?

2857. ஆடி வருமயின் மீது
யான்ம கிழஅடி யேன்முன்—வருவாயே.
நாடி வருகுற மாது
நாளு மகிழ்புய லோல !—எனையாளாய்.
பாடி வருபுல வா ! என்
பாவின் மகிழ்புரி வாய்தென்—முருகோனே !
கூடி பொன்மலர் வாவி
கோல மிகுசிகி மேரில்—வருதேவே !

2858. காதலி யாகிய காரிகை வேடமின்—அணைதோளா !
ஆதர வேபுரி ஆரண ! ஆதியே !—எனையாளாய்.
மாதய வாய்முன் மாமயின் மீதினில்—வருவாயே.
சீதமு லாவிய சீர்சிகி மாமலை—முருகோனே !

2859. கனக சபைமீது நடன மிடுபாதர்
கருணை மிகுநாதர்—அருள்பாலா !
உனத டியைநாளும் உறுதி எனவேகொள்
உனத டியன்வாழ—நினையாயோ ?
செனகன் மகளோடு மடவி னினிதூடு
திரியும் ரெகுராமன்—மருகோனே !
புனம யிலிவேடர் மகள்ம ருவுதோள !
புனித ! சிகிமேரில்—வருதேவே !

2860. அடமேபுரி அவுணோர்குல அசுரோனுடல்—கிழிவேலா!
கடமாமுக ருடசோதர! கருணாநிதி!—அருளாயோ?
படராவணி சடைநாயகர் பரமேசுரன்—மக! வேளே!
தடவாவிகள் மிகுசோலைகள் தகுதோகையின்—மலைநாதா!

2861. வஞ்சமிடு சூர னுவி
மண்டிவரு போரில் வீழ—அடுவேளே!
நஞ்சரவு சூடு வேணி
நம்பர்தரு பால! வேண—தருளாயோ?
கொஞ்சுகிளி யான தேவி
கொண்டனிறை கெச வேடர்—மகள்தோளா!
மஞ்சுதவழ் சோலை சூழும்
மங்களசிகாபொன் மேரில்—வருதேவே!

2862. எதிர்வரு சூரன்
இடறிவிழ வேலை—எயும்வீரா!
மதியையணி வேணி
மகிழவரு பால!—அருளாயோ?
கதியுலவு தோகை
கணபரியி லேறி—வருவாயே.
நதியுலவு நாட!
நலமிகுபொன் மேவு—சிகிமேரா!

2863. ஆதரவு புரிவாய் ஆடுமயின்—முருகா!
மாதயவின் உடனே வாழஎதிர்—வருவாய்.
சீதமதி புனைவோர் தேவர்தரு—புதல்வா!
கோதகல அடியார் கூடுசிகி—மலையா!

2864. தொடுத்த நீபமலர் புயத்தின் மீதிலணி
துரைகுகா! குமர!—குருநாதா!
அடுத்த ணையும்வினை கெடுத்து வேணதொரு
அருட்செய் வாய்!கமலம்—நிகர்பாதா!
படுத்த பாடுபட தயித்தியர் சூரனுடல்
பகர்க்க வேலைவிடு—செயவிரா!
விடுத்த பூவின்மது விரைந்த தேனருவி
மிகுத்த தோகைமலை—வருதேவே!

2865. வனசமலர் மாதினுள் மருவுபுய மாயனுர்—மருகோனே!
புனம்வளரும் வேடுவோர் புதல்விமய லாசையால்—அணை
[தோளா!
சினமுலவு சூரனுர் செருவிலேயி லேவியே—அடுவீரா!
கனககிரி நேருமோர் கனசிகியின் மேலில்வாழ்—குகநாதா!

2866. அடியன் மீதுதய வதுவி லாமலலே—குதலாமோ?
கொடிய தானவர்கள் குலமெ லாம்அழிய—அடுசூரா!
வடிவில் வேடுவர்கள் மயிலி மாதுமரு—வியதோளா!
முடிகொள் தோகைமலே முதல்வ! வேணவரம்—அருளாயோ?

2867. அடல்புரி சூரன் அலறிட வேலே—எயுவேலா!
(மடலரின்) மறவர்கள் மாது—புணர்தோளா!
நடமிடு தோகை நலமயி லேறி—வருவாயோ?
தடமிகு சோலே தகுசிகி மேரில்—வளர்வோனே!

2868. தாதுலவு நீப மான
தாமமணி மார்ப! நாயன்—முனம்வாராய்.
ஆதரவு நீய லாது
யாருதுணை சாமி நீயும்—அறியாயோ?
காதன்மிகு வேட மாது
கானிலணே தேவ தேவ!—எனேயாளாய்.
மாதயவு நீசெய் தோகை.
வாழ்மலேயில் வாச மான—குகநாதா!

2869. வாலமதி சூடிய
வாதினட மாடிய
நடராசர்—தருபாலா!
கோலமிகு வேடரின்
கோதைதனே மேவிய
புயநாத!—எனேயாளாய்.
சாலமத ருேட
சாபமதி னுன்மயல்
மிகுவாதல்—தவிராயோ?
வேலணிகை நாயக!
மேன்மைமிகு தோகையின்
மலேநாதா!—அருளாயோ.

---

2865. செருவில் - போரில்.

2867. (...) இரு சீர்கள் இருத்தல் வேண்டும்; உள்ளவாறே பதிப்பிக்கப் படுகிறது.

2868. வாசம் - தங்குதல்.

2870. ஒருத்தர் துணை யேது? உனக்கென்ன மேதும்-இலையோதார்
வருத்துதுயர் தீர மருத்துவமெ லாமும்—அருளாயோ? [ன்.
பருத்தமயில் ஏறும் பணைத்தபுய நாத!—எனையாளாய்.
திருத்தமிகு சோதி சிகிக்கிரியின் மேவும்—குகநாதா!

2871. சண்டையிடு சூரன்
தன்குலம தோடும்—அழிவாகக்
கொண்டயிலை ஏவும்
குன்றை மலைவாச!—அருளாயோ?
அண்டர்முத லோர்கள்
அன்பினொடு தேடு—இருதாளா!
வண்டர்படி நீப
மங்களகல் யாண!—எனையாளாய்.

2872. எனதுதுய ரோவிட எழில்கொள்மயி லெறி—வருவாயே.
மனதிலுள ஆவல் மடியவர வேண—தருளாயோ?
அனநடையின் மாத ரவர்மயலில் வீழ்தல்—அறியாயோ?
கனககிரி மீறு கயிலைமலை நேரு—சிகிமேரா!

2873. தாதுறு கமலாசனர் தான்மகிழ் குருவாகிய—குமரேசா!
மாதுமை அருள்பாலக! மாமண மிகுநீபமென்—மலர்மார்பா!
தீதுள கலிநோய்துயர் தீரிட மயின்மீதனில்—வருவாயே.
வாதுயர் பொழில்சூழ்தரு வான்மணி யமைதோகையின்—
மலைநாதா!

2874. தடமிகுபொழி லுகுகனமது
தனில்நிறைசெனல்—விழைநேமா!
உடல்வருவினை ஒலிகலிதுயர்
ஒழிபடஅருள்—புரிவாயே.
கடமதமொழு கியதுளையுள
கரிமுகர்துணை—முருகோனே!
வடவரைநிகர் சிகிமலைதனில்
வருகுருபர!—குகநாதா.!

2875. தருவி னிறைதரு கொலுவி லிமையவர்
சரண மெனவளர் மகவானர்—மருகோனே!
கரும வினைமிகு பிறவினை தனையொழி
கதியை இனியருள் புரிவாயே—குகநாதா!

---

2871. வண்டர் - வண்டுகள்.

2872. 'உள்ளத்தில் வாழும் ஆசைகள் அழிதற்கு 'வரம் தருக' என்பது இரண்டாம் அடியின் பொருள்.

2875. தருவின் இறை - கற்பகத் தருவின் தலைவனாகிய இந்திரன்.

அருமையி னிடுபோக இனமட வரர்களுட
அதிக மயல்தனை விலகாயோ?—குருநாதா!
உருமை யுனையல தொருவ ரிலையருள்
உயர்பொன் மலைநிகர் சிகியாமோர்—மலைநாதா!

2876. வானவர் கோடி வேத
மாமுனி வர்கள் கோடி—பணிதாளா!
தேனலர் நீப மாலை
சீர்புய மீது சூடு—குகவேளே!
தானவர் சேனை யோடு
சாகிட வேலை ஏவு—செயவீரா!
கானக நீடு வாழுங்
கார்தவழ் தோகை மேரில்—வருதேவே!

2877. பதந்தொழும் அடியேன் பதம்பெற அருள்வாய்-அமரேசா!
கதங்கொளும் அசுரோன் கலங்கிட அயிலே—வியசூரா!
மதங்கொளு கயமா மகிழ்ந்திடு துணையா—கியநாதா!
இதந்தனை அருள்வாய் இலங்கிய சிகிமா—மலைநாதா!

2878. தாதவிழு நீப மான
தார்புனையும் மார்ப! நாளும்—அருளாயோ?
சீதமதி சூடு வேணி
தேவர்தரு பால! வேண—தருளாயோ?
மாதரசி யான தேவி
மான்மகளை மேவு நாத!—எனையாளாய்.
பூதலவி ணோர்கள் தேடு
பூமலியுஞ் சிகிமென் மேரில்—வருதேவே!

2879. அப்ப சாமிக ணேயெ லாம்முனம்
அத்து வீழிட வேசெய் தாரது—அறியாயோ?
இப்ப நாயினேன் நோய லாமினி
இற்று வீழிட வேசெய் வாய்குரு—பர!வேளே!
குப்ப குப்பல்க ளாக வேமலர்
கொட்டி வானவர் வேதி யோர்பணி—இருதாளா!
செப்ப லாமறை தேடொ ணாதுயர்
சித்திர மேவிய தோகை மாமலை—முருகோனே!

---

2875. உருமை - உரிமை.

2879. அப்பசாமி - திருநாவுக்கரசு நாயனார். திருநாவுக்கரசு நாயனாரை வாட்டிய சூலை நோயினைச் சிவபெருமான் போக்கிய வரலாறு முதலடியில் குறிக்கப்பட்டுள்ளது. இப்ப - இப்பொழுது. தேடொணாதுயர் - தேடிமுடியாதவாறு உயர்ந்த.

2880. ஆடிய பாதர் தேவியர் லோலர்
ஆசைய தான—புதல்வோனே!
தேடிய நோய்நொ டிமுத லான
தீவினை தீர—அருள்வாயே.
பாடிய பாவின் மேன்மிகு வாகப்
பாவைசெய் தேவர்—பணிதாளா!
நீடிய சோலை மேவிய **தோகை**
நீதிப! நாயன்—முன்வாராய்.

2881. உடலில்வரு நோயை உடன்அகல வேண—தருளாயோ?
நடனமயின் மீது நலமிருவ ரோடும்—வருவாயோ?
கடகரியின் ஆசை கருணையுள சோதர!—பொன்வேலா!
தடமுலவு தோகை தகுசிசியின் மேரில்—வருதேவே!

2882. நானமிகு நீப மாலை
நாளும்அணி மார்ப! தேவர்—பணிதாளா!
கானகமி ஞளை மேவு
காரண! கிரு பாணி தே! பொன்—மயிலாளா!
பானலம தான சோதி
பான்மதியு லாவு வேணி—தருபாலா!
வானளவு **தோகை மேரில்**
வாழ்வுதரு ஞான! போத!—எனையாளாய்.

2883. வருகிற நோய்க ளோட
மயின்மிசை ஆவ லாக—வருவாயே.
பொருதிய சூர னுவி
புதைபட வேலை யேவு—செயவேலா!
அருமறை யோர்கள் தேடும்
அழகிய பாத! வேண—தருளாயோ?
மருமிகு சோலை சூழும்
மதிதவழ் **தோகை மேரில்**—வருதேவே!

2884. கூகை குழறிய லறவுமே
கோப எமனிடியின் வரவுமே—ஏகிடவே
காகை கதறுவென அலறவே
காத லுயிருவில கிடவுமே—செயலாமே.
பாகை நிகருமொழி குறிஞள்
பார்வை மயல்வலையின் மிசையிலே—திரிவேலா!
ஓகை புனைபுயமே யொயிலனே!
ஓசை அருவியுள சிகியின்மா—மலேநாதா!

2885. கொஞ்சு கிளிமொழியாள்
 கொண்ட னிறைகுழலாள்—நலமேசேர்
பஞ்சின் மெல்லடியார்
 பண்பு செறிகுறமான்—அணைதோளா!
அஞ்சி வருவசுரோன்
 அன்று விழஅயிலே—வியவீரா!
மஞ்சி தவழ்பொழிலே
 மண்டு சிகிமலைவாழ்—குகநாதா!

2886. பாவியராய் லோபியராய்
 பாதகராய்—வருவோர்பால்
ஆவியெலாம் நோகிடவே
 யாசகராய்—அலையாமே
தாவியதோர் தோகையனே!
 சாமி! குகா!—அருளாயோ?
தூவிகளே மேவியசீர்
 தூய சிகா—மலைநாதா!

2887. கானக மடமான்
 காதல்கொள் குகனே!—எனையாளாய்.
வானவர் பணிசேர்
 மாமலர் நிகரா—கியதாளா!
தானவர் கலகா!
 தாரணி புயவா!—அருளாயோ?
ஞானவர் முதலோர்
 நாள்தொறு முயர்தோ—கையின்மேரா.

2888. உடலின் நோய்கள்வர
 உயிரு வாதைபடல்—நலமாமோ?
படவ ராவையணி
 பரம ராசையுள—புதல்வோனே!
திடம தானகன
 செருகொள் சூரனைவேல்—அயிலாளா!
தடமு லாவுபொழில்
 தகுசி காமலையில்—வருதேவே!

---

2885. 'பஞ்சின் மென்மைத் தன்மை அமைந்த திருவடிகளை உடைய பண்புகள் செறிந்த வள்ளியம்மையார்' என்பது இரண்டாவது அடியின் பொருள்.

2889. வாரணி முலையாள்
வாழ்குற மடமான்—அணைதோளா!
ஆரணி புயனே!
ஆடிய மயின்மேல்—வருவாயே.
நாரணி உமையாள்
நாண்மலர் மடமான்—மகிழ்பாலா!
சீரணி பொழில்சேர்
சீர்சிகி மலைமேல்—வருதேவே!

2890. அடியன் மீதுதய
வதனைநீ புரிவை—குகநாதா!
வடிவி யானகுற
மயிலை மேவுபுய—முருகோனே!
மிடியி னுளதீ
விதிய தாயதென்—நலமாமோ?
கடிகொள் சோலைநிரை
கனசி காமலையின்—வருதேவே!

2891. பொருசூருடல் புளவேசெயும்—அயிலாளா!
மருநீபமென் மலர்சூடிய—புயலாளா!
திருமாமறை தினமேபுகழ்—குகநாதா!
கருமாமுகில் கமழ்தோகையின்—மலைநாதா!

2892. அடியன் மீதுதய ரதுவி லாதுவரம்—அருள்வாயே!
கடியி னீபமலர் கமழ்கொள் மாலையணி—புயலோலா!
வடிவ தானகுற மயிலை மேவுகுரு—பர! வேளே!
முடிகொள் சோலைநிறை முதிய தோகைமலை-முருகோனே!

2893. வனச மலர்மேவு
மயில்தன் மகிழ்வான—மருகோனே!
பனகநெ சனேசார்
பதும மனைவேதன்—பணிபாதா!
அனநடையின் மாது
அழகுதிகழ் வேடர்—மகள்தோளா!
கனக மலைநேரு
கனசிகியின் மேரில்—வருதேவே!

---

2889. வார் - கச்சு. ஆர் - ஆரம், மாலை.

2893. வனசமலர் மேவு மயில் - தாமரைமலரில் எழுந்தருளியுள்ள திருமகள். பனகநெசன் - பாம்பணை விரும்பும் திருமால். பதும மனை - தாமரையாகிய வீடு.

2894. நாடகமிடு நாயகர்
நாரணனறி யாதவர்—தருபாலா!
தேடரிய பதேசுரர்
சீருளகன மாமயில்—முருகோனே!
ஏடவிழ்மல ரேநிபம
தேயணிபுய நாயக!—அருளாயோ?
ஆடகமய மாகிய
ஆர்சிகிமலை மேவிய—குகநாதா!

2895. ஆதரவு புரிவாய் ஆறுமுக வரசே!
காதலுள குறமான் கானில்மரு வியவா!
சேதமிகு வசுரோன் தீயஅயிலே வியவா!
மாதடரு பொழில்சேர் மாமயிலின் மலையா!

2896. எனதுதுயர் தீர இனியவர மேசெய்—குகநாதா!
மனதில்வரு நோயை மடியவரம் யாவும்—அருளாயோ?
அனவரத காலும் அழகுமயின் மீது—வருவாயே.
கனக மயமான கனசிகியின் மேரில்—வருதேவே!

2897. வேதியர் முதலோர்கள்
மேல்வளர் வானோர்கள்—பணிதாளா!
வாதிடு அசுரோரை
மாறியிரு கூறு—யடுவேலா!
ஓதிமிசை யேறு
வோன்மகி ழிடவேமு—னருள்வேதா!
மேதினி யடியார்கள்
மீறிய சிகிமேரில்—வருதேவே!

2898. வாடிய துயர்தீர
மாமயின் மிசையேறி—வருவாயே.
மோடிகொள் குறமாது
மோகம தனின்மீறு—குகநாதா!
பாடிய தமிழ்வாயின்
பாவல! எனையாள்வை—முருகோனே!
நீடிய பொழில்சேரு
நீள்முடி மிகுதோகை—மலைநாதா!

---

2894. தேடரிய பதேசுரர் - தேடுதற்குக் கிட்டாத அருமையான திருவடிகளை உடைய ஈசுவரர். ஆடகம் - பொன்.

2897. ஓதிமம் - அன்னம்.

2899. ஆவி துடிபட மேனு மெலிபட
ஆசை தவிரிட நோயாலே—நோவேனே?
கூவி நடமிடு தோகை மயின்மிசை
கோல முடன்வரு சீராளா!—தார்மார்பா!
பாவி யெனவளர் வோர்க ளிடமிசை
பாடி யவரிட மேபோகா—தேதாராய்.
காவி லுயர்பொழில் சூழ முடியுயர்
கார்கள் தவழ்சிகி மேராளா!—வாராயோ?

2900. போரா டிமுன்வரு சூரா திபனுயர்
போர்சே னைகள்முழு—வதுமேதான்
பாரா ழிடவயி லாலே யடுகுக!
பார்வா னவர்பணி—இருதாளா!
நாரா யணன்மரு கேசர் கிருபைபுரி
நாதா! சரவண—பவ! வேளே!
சீரார் சிகிமலை மீதே வருபர
தேவே! எளியனை—இனியாளாய்.

2901. படையெ டுத்துவரு அவுண னைப்பொருத
பனிரெ னப்பிரபை—அயிலாளா!
நடைப யிற்றுமயின் பரிந டத்துகுக!
நளின முற்றிடுவர்—பணிதாளா!
கடைய னுக்குவரு துயர்வி லக்கியருள்
கருணை முற்றுகுரு—பரவேளே!
விடைந டத்துபவர் மகிழு நற்புதல்வ!
மிகுபொ ழிற்சிகியின்—மலைநாதா!

2902. பருவ முற்றிய குறவர் நற்கொடி
பணைமு லைக்கிசை—புயநாதா!
உருவ முற்றிய மதனன் நற்கணை
உருவ மெத்தவு—மயலாலே
புருவ முற்றிய விழிய ருக்கருள்
புரிய இப்படி—விதியாமோ?
தருவ முற்றிய அருளெ னக்குசெய்
தகுசி கிக்கிரி—முருகோனே!

2903. மருவு லாவிய
வனச மாமலர்
மடமானுள்—மருகோனே!
பொருது சூருடல்
புளவ தாகிட
அயிலாலே—செயும்வீரா!

அருமை யாய்வரு
அழகுவேடமின்
அணைதோளா—குகநாதா!
தருவு லாவிய
தருசி காமலை
வருநாதா!—எனையாளாய்.

2904. சித்துவிளை யாடிய அரனார்
சித்தமகிழ் வாகிய புதல்வா!—எனையாளாய்.
முத்துநிக ராகிய எயிறுள்
மொய்த்தகுழன் வேடுவர் மடமான்—அணைதோளா!
சத்துருவ னாகிய வசுரோன்
தட்டழிய வேநற் றுணைவேல்—விடுசூரா!
தத்துமயி லேறிய துரையே!
சத்திதல மேபுகழ் சிகிமா—மலைநாதா!

2905. அரிய மறைபுகழ் மலர்கள் மிகுபத!
அதிக நடமிடு—மயில்வாகா!
கரிய கனகுழல் மடவி குறமயில்
கருணை யுளநல—மிகுதேவே!
உரிய அடியனை வளர்க வருள்புரி
உமைதன் மனமகிழ்—புதல்வோனே!
பரிய முடிநிறை பொழில்க ளுயர்கன
பதிகள் துதிசிகி—மலைநாதா!

2906. வாலை புவனை திரிபுரை
மாது கௌரி தருகுரு—பர! வேளே!
சேலை நிகரும் விழியினள்
தேவி குறவர் புதல்வியின்—மணவாளா!
வேலை அவுண னுரமதில்
வேக முடன்மு னடல்செயும்—முருகோனே!
மாலை முகில்கள் தவழுவிண்
மாக முயரு சிகிமலை—வருதேவே!

2907. தானவர் குலகலகா!
தாதவிழ் மலரணி சீ—ரிருதாளா!
வானவர் பணிசரணா!
வாகன மயின்மிசையே—றியவீரா!

---

2904. சத்துருவன் - பகைவன்.

2905. மயில்வாகா - மயிலாகிய வாகனத்தை உடையவனே, வளர்க - வளரு மாறு.

கானக மடமயிலாள்
காதல்கொள் வடிவழகா!—எனையாளாய்.
தேனலர் மிகுபொழில்கள்
சேர்சிகி மலையரசே!—அருளாயோ?

2908. மயின டத்திய வீரா!
வரமெ னக்கருள் தேவே!—குகநாதா!
அயிலெ டுத்தெதிர் சூரோன்
அலறி டத்தொடு கோலா—கலவேளே!
குயின்மொ ழிக்குற மாளுள்
குவிமு லைக்குட மீதே—புணர்தோளா!
ஒயில்மி குத்திடு நாதா!
உயர்சி கிக்கிரி மீதே—வளர்தேவே!

2909. நடன மிடுதோகை நலம யிலேறு—குகநாதா!
அடம துசெய்சூரன் அலற அயிலேவு—செயவீரா!
படவ ரவுசூடு பரம ரருள்பால!—எனையாளாய்.
வடவ ரையைநேரு மயின்ம லையில்வாழு—முருகோனே!

2910. ஆடு மயிலேறி யான்ம கிழஓடி—வருவாயே.
காடு லவுவேடர் காரி கையைமேவி—அணைதோளா!
தோடு லவுகாதின் தோகை அபிராமி—தருபாலா!
தேடு மடியார்கள் சேனை நிறைதோகை—மலைநாதா!

2911. தருவனம் வளர்மயில் தனைமரு வியபுய!—எனையாளாய்.
செருபுரி யசுர ருடல்தெரி படஅடு—செயவீரா!
மருவுல் வியயிதழ் நிபமலர் அணிபுய!—முருகோனே!
அருவரை நகர்மலி அழகிய சிகிமலை—குகநாதா!

2912. வஞ்சனைபுரி சூருடல் மண்டிடஅயி லேவிய—செயவீரா!
கஞ்சனையுடல் கீறிய கங்குனிற மாலுட—மருகோனே!
பஞ்சணை தனில் வேடுவர் பைங்கிளிதனை மாவோடு—புணர்
தோளா!
மஞ்சது தவழ் சோலைகள் மண்டியசிகி மாமலை-முருகோனே!

2913. மதிசூடிய சடையார்
மகிழ்மாதுமை புதல்வா!—எனையாளாய்.
கதியாகிய மயிலா!
கருணாகர! முதலே!—அருளாயோ?

ததிவாயினர் மருகா!
தருமான்மரு வியவா!—குகநாதா!
நதிசூழ்சிகி மலையா!
நரைநீப மலர்மா—லிகைமார்பா!

2914. கடம்புபுனை புயவா!
கனிந்து வரமருள்வாய்—முருகோனே!
அடம்புரி அசுரோன்
அடங்கஅமர் புரிவாய்—செயவீரா!
வடம்புனையும் முலையாள்
மனங்குலவு குறமான்—அணைதோளா!
தடம்புவன நிரைசீர்
தகுந்தசிகி மலையா!—எனையாளாய்.

2915. அடல்புரி சூர னகமது போக—அடுசூரா!
நடமிடு தோகை நலமயி லேவு—முருகோனே!
படவர வேறும் பவளமென் வேணி—தருபாலா!
தடமிகு சோலை தகுசிகி மேரில்—வருதேவே!

2916. வருத்திடு நோயை மறுத்திட வேண—தருள்தாராய்.
திருத்திகழ் ரூபி தினைப்புன மாது—புணர்தோளா!
பருத்திடு தோகை பணைத்தபொ னன—மயில்வீரா!
தருத்திகழ் சோலை தழைத்திடு தோகை—மலைநாதா!

2917. மதிபுரி சடையார் மழுவணி கரனார்—அருள்பாலா!
துதிபுரி சரணு! துரைமுரு கையனே!—எனையாளாய்.
கதிபுரி மயிலா! கருணைகொள் முகிலே!—அருளாயோ?
நிதிபுரி முடிசேர் நிலைபெறு சிகிமா—மலையாளா!

2918. சுரும்பு ணீபமலர் அணிந்த மார்பகுக!
சுபங்க ளாகவரம்—உதவாயோ?
விரும்பு தேவிகுற மடந்தை மேவுதுரை!
விழைத்த தோகைமயின்—முருகோனே!
கரும்பு போலமொழி சிறந்த தேவியுமை
கனிந்த ஆசையுள—புதல்வோனே!
அரும்பு பூவுநிரை மிகுந்த சோலைநிறை
அலர்ந்த தோகைமலை—வளர்தேவே!

2919. ஆதி மறைபுகழ் பூவி லுயர்பத!
ஆனை முகருட—துணையாளா!
வாதி லுயர்கன சூரன் உடல்கிழி
வாக அயில்விடு—செயவீரா!

2913. ததி - தயிர்.

பாதி மதியணி வேணி தரவரு
பால! சரவண—பவ! வேளே!
மோதி வளர்பொழில் நீழ லனுதின
மூடு சிகிமலை—முருகோனே!

2920. ஆடுமயி லேறிவிளை யாடிஅடி யேன்மகிழ—வருவாயே.
தேடுமடி யார்களொடு தேவர்முத லோர்கள்பணி-இருதாளா!
காடுலவு வேடர்தரு கார்குழலி மேவுசர—வண! வேளே!
கோடுநிறை சோலைநிழல் கூடுசிகி மேவில்வரு—முருகோனே!

2921. தண்டை யாடிட வந்து வேணது
தந்து ஆதரி—குக! நாதா!
கண்டை போல்விழி மங்கை வேடமின்
கண்டு ஆசைகொள்—புயநாதா!
சண்டை யேபுரி கின்ற சூருயிர்
தங்கு வேல்விடு—செயவீரா!
இண்டை சூடுவர் தங்கு மால்வரை
என்று தான்வளர்—சிகிமேரா!

2922. கதியினடை புரிசீர்
கனமயிலின் மிசையே—வருதேவே!
மதியிலகு சடையார்
மகிழவரு புதல்வா!—எனையாளாய்.
துதியுலவு சரணா!
துரைமகளை அடைசீர்—மணவாளா!
அதிகபொழில் மிகுவான்
அமரர்பணி சிகிமா—மலையாளா!

2923. வனிதை யாருடன் மருவும் ஆசையின்
மயலி னிலினி—அலையாதே
இனியு லாசமொ டழக தாகிய
இனிய தோகையில்—வருவாயே.
புனித மாதவர் அமர ரானவர்
புகழ்செய் பூமல—ரிருதாளா!
கனிக ளால்மர மொழுகு சீருள
கமழ்சி காமலை—முருகோனே!

2924. நாட்டி யமிடு மயிலி லேறியே
நாப்ப யில்தமிழ் துதிக ளேசெய—வருவாயே.
வாட்டி டவெதி ரான சூருயிர்
மாய்த்தி டஅயி லேவி யேயடல்—புரிவேளே!

---

2921. தண்டை - கெண்டை மீன்.

பூட்டி யமயன் மீற வேடுவர்
　　பூப்பு ரிகுழன் மாது மேவிய—புயநாதா!
ஈட்டி யநிதி சேரு தோகையின்
　　நேர்க்கி ரிவளர் நாத! நாயக!—எனையாளாய்.

2925. செருபுரி தானவர் தெறிகெட வேல்விடு—செயவீரா!
மருமிகு நீபமென் மலர்மலி மாலிகை—அணிதோளா!
ஒருயிணை தானுய ருமையவள் ஆசைகொள்—மகவேளே!
கருமுகி ருவிய கமழ்பொழில் சூழ்சிகி—மலைநாதா!

2926. மதசலம் ஒழுகிய மணியொலி நிறைகரி—துணையாளா!
கதமிகு அசுருடல் களிபட அயில்விடு—செயசூரா!
பதமலர் கனைதொழு பவர்வினை தவிரிட—அருடாராய்.
விதவித மணிநிரை மிகுசிகி மலைவரு—குகநாதா!

2927. சதுமறை யவர்புகழ் மணமலர்
　　தருமிரு பத! சண்—முக! கோனே!
பதுமமென் மலர்வளர் திருமகள்
　　பரிவொ டுமகிழ்—மருகோனே!
கதுமென நடைபுரி மயில்வரு
　　கருணை கொள்சர—வணவேளே!
விதுதவழ் பொழில்நிறை சிகிமலை
　　விழைவொ டுவரு—குக! நாதா!

2928. மறையவர் முதலினர் பணிபுரி குருபர!
　　மயின்மிசை எளியன்முன்—வருவாயே!
சிறைதவி ரிடகன அவுணர்கள் குலமது
　　தெறிகெட விடுபவர்—மருகோனே!
கறைகெழு மிடறினர் உமையவள் துணைபெறு
　　கயிலையி னரசுயர்—இறைபாலா!
பிறைதவழ் பொழினிறை சிகிமலை தனில்வரு
　　பிரபல! மிகவருள்—புரிவாயே.

2929. சூதுநிகர் முலையாள் தூயதினை வனம்வாழ்—குறமானுள்
மீதுதய வுடனே மேலுமயன் மிகவே—புணர்தோளா!
மாதுவுமை புதல்வா! வானமதி வதனு!—எனையாளாய்.
வாதுலவு பொழில்சேர் வானுலவு சிகிமா—மலைநாதா!

---

2925. ஒரு இணைதான் உயர் - ஒப்பற்ற தனக்குத்தானே சமமாக.

2930. அடல்புரி சூர னலறிட வேலை—எயும்வீரா!
தடமிகு சோலை தனில்வளர் மாது—புணர்தோளா!
மடமயின் மீது வருகுரு நாத!—எனையாளாய்.
வடவரை நேரு மயின்மலை வாழு—முருகோனே!

2931. வானவர் முதலினர் வாசமென் மலரொடு—பணிதாளா!
கானகம் வளர்வரு காதலி தனைமரு—வியதோளா!
தானவர் விழஅயில் தான்விடு குருபர!—முருகோனே!
நானம துயர்பொழி லுறிய சிகிமலை—வருதேவே!

2932. வனசமலர் மீது வளரும்மட மாது—மருகோனே!
தனகிரியின் மாது தருவில்வளர் மாது—புணர்தோளா!
மனதில்வரு நோயை மடியவரம் நீசெய்—அமரேசா!
கனககிரி நேரு கமழ்சிகியின் மேரில்—வருதேவே!

2933. வடிவு தங்கிய மயிலி பைங்கிளி—நலமேசேர்
குடியி லங்கிய குறம டந்தையை—அணைதோளா!
அடிய னென்நி னழகு கண்டிட—வருவாயே!
கடிமி கும்பொழில் கமழ்செ கண்டியின்—மலைநாதா!

2934. படையெ டுத்துவரு சூரனே
படியி லற்றுவிழ வேலையே—வியசூரா!
நடைப டித்தமயில் மீதிலே
நலமெ னக்கருள வேயினுள்—வருவாயே.
இடைசி றுத்தகுற மாதினுள்
எழில்சி றக்கவன மீதிலே—புணர்தோளா!
விடையர் பொற்கயிலை நிகரவே
மிகுசி கிக்கிரியின் நாதனே!—எனையாளாய்.

2935. மனத்துயர் தீர மயிற்பரி மீது—வருவாயே.
தனக்கனி வேடர் தனிக்குற மாது—புணர்தோளா!
சினத்தர வேறு திருச்சடை நாதர்—அருள்பாலா!
கனப்பொழில் சேரு கமழ்சிகி மேரில்—வருதேவே!

2936. வருந்திய நோய்கள் தீர
மகிழ்ந்தென்மு னுக நாளும்—வருவாயே.
திருந்திய ரூப மான
திறங்கிளர் வேடர் மாது—புணர்தோளா!
பருந்தினில் ஏறு நாதர்
பரிந்திடு ஆசை யான—மருகோனே!
பொருந்திய சோலை யாவும்
பொதிந்திடு தோகை மேரில்—வருதேவே!

2937. மதியணி சடையார் மருவிய உமையார்—அருள்பாலா!
கதிமிகு மயிலா! கமழ்மல ரணிசீர்—மிகுதோளா!
துதிபெறு சரணு! துரைமகள் கணவா!—எனையாளாய்.
நதிமிகு வயல்சூழ் நலமுயர் சிகிமா—மலையாளா!

2938. தாதுலவு தாமரை வாச மாதினை
தானிகரு ரூபமின் வேட நாயகி—புணர்தோளா!
சூதுலவு பாதக ராக வேவரு
தோசியர்கள் மாநிதி தூர விடஅருள்—புரிவாயே.
கோதுலவு நோய்மிடி தீர வேயனு
கூலமிக வாகவு மோக மாயென்—முன்வாயே.
வாதுலவு சோலைகள் சூழு தோகையின்
மாமலையின் மீதினில் வாழு நாயக!—எனையாளாய்.

2939. வருத்த மேசெயு நோயை
மறுத்து வீழிட மேன்மை—அருளாயோ?
ஒருத்தர் ஆதர வேது?
உயர்ச்சி யாகிய தோகை—மயில்வீரா!
கருத்த னே!கிருபை யான
கமழ்ச்சி யாகிய நீப—மலர்மார்பா!
திருத்த மாகிய தோகை
சிறக்கு மாமலை வாழு—முருகோனே!

2940. ஆதரவு புரிவாய் ஆடுமயில் தனிலே—வருவாயே! [ளா!
காதன்மிகு குறவோர் காரிகையை இனிதாய்—அணைதோ
மாதயவு புரிவாய் வாசமிகு மலர்மா—லிகைமார்பா!
தாதுலவு பொழில்சேர் தானமிகு சிகிமா—மலையாளா!

2941. துடியிடை துடங்கு
துணைமுலை இரண்டின்—மடமானுள்
வடிவுடைய மங்கை
மயிலிகுற நங்கை—அணைதோளா!
அடியன்முன் மிகுந்த
அழகியசெ கண்டி—தனில்வாராய்.
முடியது நிறைந்த
முளரிமி னுறைந்த—சிகிமேரா!

2942. கூவிவிளை யாடு கோலமயின் மீது—வருவாயே.
ஆவிநிலை யாகி ஆளவரம் யாவும்—உதவாயோ?
பாவியர்கள் மீது பாடுவதை நாளும்—விலகாயோ?
வாவிநிறை தோகை மாமலையின் வாச!—முருகோனே!

2943. கர்தன்மி குத்த மாத
ராசைவ ருத்த மேனி
காரினி றத்து வாடி—அலையாதே
மாதய வுற்று நாயன்
மேனிசி றப்ப தாக
மாமயி லிற்கு லாவி—வருவாயே.
தாதவிழ் புட்ப நீப
மாலைத ரித்த மார்பா!
சாமி!யெ னக்கு வேண—தருளாயோ?
சீதள முற்ற சாரல்
சோலைநி றைத்த தோகை
சீர்மலை வித்த கா! பொ—னயிலாளா!

2944. பிறையணி சடேசர் அருளியதோர் பால!
பிரபல ஈச!—முருகோனே!
நறையுலவு நீப மலர்அணியு மார்ப!
நலமுதவி யேசெய்—குவைநாதா!
மறையவர்கள் கோடி இமையவர்கள் கோடி
மகிமையொடு தாழும்—இருதாளா!
கறைமழைக டாவு மலர்உலவு சோலை
கமழ்சிகியின் மேரில்—வருதேவே!

2945. அகம்புரி தானவர்
குலங்கழி வாகிட
அலங்கிரத வேல்விடு—செயவீரா!
மகம்புரி மாதவர்
கணங்கொளும் வானவர்
மகிழ்ந்தடி யார்பணி—இருதாளா!
சுகம்புரி வேடமின்
வனந்தனி லேயணை
சுகந்தம தேபுனை—புயலோலா!
செகம்புரி நாயகர்
தரும்புதல் வா! குகா!
செகண்டியின் மாமலை—வருதேவே!

2946. கரிய வேடுவர் அருளு நாயகி
கருணை யாய்மரு—வியதோளா!
அரிய நான்மறை முதலி னேர்பணி
அழகி தாகிய—இருதாளா!

வரியு லாவிய அளிகொ ணீபமென்
மலரு லாவிய—திருமார்பா!
உரிய நாயினன் வளர்க வேயருள்
உயர்சி காமலே—முருகோனே!

2947. காதல்தரு மாதர் மாயமட வார்கள்
காமவலை யூடு—திரிவேனோ?
நீதயவ தாக மாமயிலில் ஏறி
நேசமட வார்க—ளொடுவாராய்.
வாதமர்செய் சூரன் ஆவியகன் றோட
வாளயிலை ஏவு—செயவீரா!
சீதமதி தாவு சோலைநிறை வான
சீர்சிகியின் மேரில்—வருதேவே!

2948. வருதுயரம் தீர உடன்அருளை நீசெய்
மயிலின்மிசை யேறி—வருவாயே.
மருவுலவு நீப மலர்அணியும் மார்ப!
வனமகளை மேவு—குகநாதா!
செருசெயசு ரோணை மடியயயி லேவி
செயிருலவ வேமுன்—புரிநாதா!
கருமுகில்க டாவு பொழினிறைய நீடு
கமழ்சிகியின் மேரில்—வளர்தேவே!

2949. மடவர லான மாது
வனசமி ஞளை நேரு—குறமாளுள்
தடமுலை சேரு தோள!
சகவடி யார்கள் கோடி—பணிதாளா!
நடமிடு தோகை வாக
னமதினில் ஏறி யாசை—யுடன்வாராய்.
வடவரை நேரு தோகை
மலையினி ளுளு வாழு—முருகோனே!

2950. முலையான் மயலிடு மாதர்கள்
முரணு சையி—லலையாதே
நிலையா கியகிருபை யேபுரி
நிருபா! குக! குரு—பரவேளே!
அலையா ழியில்அணை யேதுயில்
அழகு மாலுட—மருகோனே!
கலைமா மதிதவழ் சோலைகள்
கமழ்தோ கையின்—மலைநாதா!

2951. மனத்தில் வந்திடு நோயது தீரிட
மயிற்று ரங்கையு லாச! நி ஞயன்முன்—வருவாயே.
சினத்த செங்கணின் மாவசு ரோன்உயிர்
தெறிக்க அம்புக ளேவிய மாலுட—மருகோனே!
புனத்தில் வென்றிகொள் வேடுவர் மாதுடன்
புணர்ச்சி கொண்டிடு மாபுய வா! கிருபை—புரிவாயே.
கனத்த மங்குல்க டாவிய சோலைகள்
கதித்த நன்றுள தோகையின் மாமலை—முருகோனே!

2952. மெத்தமய லாகிய குறத்திதனை மேவுபுய!
வித்தைகளை நீயருள்வை—முருகேசா!
பத்தரமுனி வோர்கள்பணி பெற்றசர ணே!சரச
பட்சமயி லேறிவரு—குகநாதா!
மத்தகெச வாண்மைமி குத்துதுணை யாகவரு
வச்சிரதரன் மாமகள்தன்—மணவாளா!
சத்தமுகி ருவிய பொழிற்சிகியின் மாமலை
சத்ருசெய வேலவ!—அருளாயோ?

2953. தாதவிழு நீப மாலை
சூடிய புயாச லேச!
சாமிகுரு சாமி! வேண—தருள்வாயோ?
தீதசுர ஞன சூர
ஞவிகள் மீது வோட
தீரஅயி லேவு சூர!—முருகோனே!
காதலியின் வேட மாது
மேவுகண வா! கு கேச!
கானமயில் ஏறி யாடி—வருநாதா!
போதடரு சோலை சூழு
தோகைமலை மீது வாழும்
போய்விலகு வாசை தீர—அருளாயோ?

2954. கோக னகமலர் மாது சேர்புயன்
கூர்கொள் கணைவிறன் மாய ஞருட—மருகோனே!
தேக மிசைவரு நோய்கள் தீரிட
தீர மிகுமயி லேறி நாயன்முன்—வருவாயே.

---

2952. வச்சிரதரன் - வச்சிராயுதத்தை ஏந்திய இந்திரன்.

2954. கோகனக மாது - தாமரைமலர் வாழும் திருமகள்.

யோக முனிவரர் வான வோர்முத
லோடி நின்திருப் பாத மேபணி—சமுகேசா!
மாக மளவிடு சோலை தாவிய
வாச மிகுசிகி மேரில் வாழ்வுறு—குகவேளே!

2955. மோதியபடை விழவே
மூரியின் அசுரனையே—அடுசூரா!
மாதிருமயில் புணர்வோய்!
மாமயின் முருகயனே!—எனையாளாய்.
வேதியர்முதன் முனிவோர்
மீறிய அடியவரே—பணிதாளா!
ஆதிய! அருள் புரிவாய்
ஆரண! சிகி மலைவாழ்—குகநாதா!

2956. நோய கன்றிட வேம ருந்தருள்
நோக வென்றிடு—அயிலாளா!
வாய்நி றைந்திடு பாடல் தந்தருள்
வாச மிஞ்சிய—மலர்நீபா!
வேய்நி கர்ந்திடு தோளி தண்டலை
வேட மங்கையை—அணைதோளா!
காய்நி றைந்திடு சோலை உந்திய
கார்த வழ்ந்திடு—சிசிமேரா!

2957. வானவர் முடியர் கோடி
மாமுனி வர்கள் கோடி—பணிதாளா!
தேனலர் அணியும் மார்ப!
சீதர ஞர்த ஞைச—மருகோனே!
ஈனம்அ தேனும் நோயை
ஈடழி படமு ஞக—வருவாயே.
கானகம் உலவு சீர்கொள்
கார்தவழ் சிகியின் மேரில்—வருதேவே!

2958. அடல்புரி சூரன் அலறிட வேலை—எயும்நாதா!
கடல்துயில் மாயன் கருணைகொ ளாசை—மருகோனே!
மடலவிழ் நீப மலரணி மார்ப!—எனையாளாய்.
தடவரை யான் தகுசிகி மேரில்—வருதேவே!

---

2955. ஆதிய - மூலமானவனே.

2956. நிகர்ந்திடு - 'நிகர்த்திடு' என்பது மெலிந்தது.

2959. பொருதிடு சூர னுவி
புளபட வேலை யேவு—செயவீரா!
திருமகள் மேவு மாயன்
தினமகி ழாசை யான—மருகோனே!
மருவுள நீப மாலை
மணமலி மார்ப! நாளும்—அருளாயோ?
கருமுகி லாவு சோலை
கமழ்சிகி மேரில் வாச!—எனையாளாய்.

2960. ஆட்டி விடும் பரமென
ஆக்கி விடுதுன் பமது—தவிராயோ?
கூட்டி னுலகஞ் சுகமென
கோர்க்கு மருள்கொண் டிடல்விதி—வசமாமோ?
பாட்டின் மிகவந்து அருள்புரி
பார்க்க நினதன் பன்முனம்—வருவாயே.
வீட்டின் வருஇன் பமதருள்
மீப்ப யிலுதண் டலைமிகு—சிகிமேரா!

2961. சோதி மணியணி வேணி நாயகர்
தூய இதழியின் மாலை சூடிய—சிவபாலா!
வாதி னுயர்கன சூர னுர்உயிர்
மாய அயில்விடு தேவ நாயக!—எனையாளாய்.
சாதி உயர்குற மாது சேர்புய!
சாமி மயின்மிசை ஏறி நாயன்முன்—வருவாயே.
மேதி னிகள்புகழ் நாத னே! யருள்
மீறு சிகிமலை மீதி லேவரு—குகநாதா!

2962. சுகவாழ்வினில் வருநோயது
தணிவாய்விட—அருளாயோ?
மகமாமுனி வரர்வானவர்
வருதானவர்—பணிதாளா!
சுகமேபுரி குறநாயகி
துரைநாயகி—புணர்தோளா!
இகவாழ்பர முதிர்வாழ்வருள்
இனிதாகிய—சிகிமேரா!

2963. வடிவுடைய மாது வனம்வளரு தேவி—புணர்தோளா!
அடியவர்கள் கோடி அமரர்முனி கோடி—பணிதாளா!
கொடியினிடை யான குமரிதரு பால!—எனையாளாய்.
முடியுடைய தோகை முதியமலை வாழு—குமரேசா!

---

2962. துரைநாயகி = தேவசேனை.

2964. வீர மிஞ்சிய சூரை வென்றிடு
வேலி லங்கிய—துரைநாதா!
சார மிஞ்சிய பாடல் தந்தருள்
சாமி எந்தன்முன்—வருவாயே.
ஆர மிஞ்சிய மார்பி லங்கிய
ஆர! விண்திரி—மயில்தோழா!
ஈர மிஞ்சிய தேவர் கண்டி
டார்செ கண்டியின்—மலைநாதா!

2965. கவன மிஞ்சிய களிற டம்புரி
கனசெ கண்டியில்—வருதேவே!
எவன மிஞ்சிய குறம டந்தையை
இனிது டன்புணர்—புயவேளே!
புவன மிஞ்சிய அடியர் வந்தடி
புரியும் அன்புயர்—குகநாதா!
தவன மிஞ்சிய நிறையும் அண்டர்கள்
தனிநி றைந்திடு—சிகிமேரா!

2966. மனத்தின்நோய் தீரிடவே
மகிழ்ச்சியா நீயென்முன்—வருவாயே.
சினத்தஅசு ரோனுடலே
தெறிக்கவே லேவியவா—எனையாளாய்.
புனத்தில்வாழ் வேடமினள்
புணர்ச்சியா நாயகமே!—கிருபைதாராய்.
இனத்தில்வாழ் மாமணிசேர்
எழிற்சிகர மாமலைவாழ்—குகநாதா!

2967. ஓயாத துயரம் ஓயாத பிறவி—ஒழியாயோ?
மாயாத அருளை வாயார உதவி—புரியாயோ?
தோயாத தமிழ்கள் தூய்வாக மயிலில்—வருவாயே.
தேயாத பொழில்கள் சேர்தோகை மலையில்—வருதேவே!

2968. பாதலமுதல் மூவுலகினர் பாதமதினை பணிவார்நீ—மகிழ்வா
தாதவிழ்மலர் சூடியபுய சாமியென்வினை-தவிராயோ? [யே.
ஆதரவுனை யேயலதிலை யான்மகிழிட—வருவாயே.
சீதரனெனும் மால்மருகைய! சீர்சிகிமலை—முருகோனே!

---

2964. விண் திரி மயில் - விண்ணின்கண் உலவுகின்ற மயில்.

2965. எவனம் - இளமை. மிஞ்சிய அடியர் - எண்ணிறந்த அடியார்கள்.

2969. கூவியமயில் ஏறிய கோதறுகரு ணாகர!—அருளாயே.
பாவியென்வினை தீரிட பாதமதனை யேயருள்—குகநாதா!
தேவிநல்லுமை நாயகி சீதரருட சோதரி—தருபாலா!
தாவியபொழில் சூழ்தரு சாரல்க ளுளபர தோகையின்—
மலைநாதா!

2970. ஆதரவு புரிவாய் ஆடுமயில் தனிலே—வருவாயே.
காதன்மிகு குறமான் கானமதி லணைவாய்—எனையாளாய்:
மாதரசி யுமையாள் மால்கள்மிகு புதல்வா!—அருளாயோ?
சீதமதி தவழ்மா சீர்சிகியின் மலைவாழ்—குகநாதா!

2971. மிஞ்சு ஒருடல் வென்று வீழிட—எயுநாதா!
கொஞ்சு சீர்கிரி கொங்கு காமகள்—புணர்தோளா!
வஞ்சி நேரிடை மங்கை யாளுமை—தருபாலா!
மஞ்சி தாவிய மண்டு காவனை—சிகிமேரா!

2972. தஞ்சம் வேறிலை வந்து நீகிருபை
தந்து ஆதரி—குகநாதா!
வஞ்ச னுமவு ணன்றன் மார்பினில்
மண்ட வேஅயில்—தொடுவீரா!
கஞ்ச மாமலர் மங்கை சேர்விறல்
கண்டு ஆசைகொள்—மருகேசா!
மிஞ்ச வேபொழில் மண்டு தோகையின்
மின்பொன் மாமலை—வருதேவே!

2973. ஆவி போகுமுனே நீயென் மீதினிலே
ஆசை யாயென்முனே—வருவாயே.
கூவி வாழ்குயில்போல் ஆன தோர்மொழியாள்
கோதி லாவனமான்—மகிழ்தோளா!
பாவி யானவர்பால் யாசி யாதருள்வாய்
பாரு ளோர்முதலோர்—பணிதாளா!
தேவி மாதுமையாள் பால கா! அருள்வாய்
சீர்சி காமலைமேல்—வருதேவே!

2974. வடிவு தங்கிய கனதை மிஞ்சிய
வனத்தின் மாதினை—அணைதோளா!
இடியெ னும்படி அதிர வந்திடு
இகல்செய் கின்றவர்—எதிராளா!
கடிதி னின்றுயர் நடையி யன்றிடு
கனக நஞ்சிகி—மயில்வீரா!
முடியி லங்கிய பொழினி றைந்திடு
முதிய குன்றையின்—மலைநாதா!

2975. செருப்ப மின்றிடு சூருட னேயெதிர்
செயிர்செ யுங்கன வேலவ னே!கிருபை—புரிவாயே!
விருப்ப மிஞ்சிய வேடுவர் நாயகி
மிகுத்த இன்பம தாய்அவள் மீதினில்—அணைதோளா!
மருச்சி றந்திடு நீபமென் மாலிகை
மகிழ்ச்சி கொண்டிட வேபுனை நாயக!—எனையாளாய்!
தருப்பொ லிந்திடு தோகையின் மாமலை
தனிச்சி றந்திடு நாயக னே! குரு—பரவேளே!

2976. ஆதரவு புரிவாய் ஆடுமயின் முருகா!—குகநாதா!
போதமிகு முனிவோர் பூசுரர்க ளடியார்—பணிதாளா!
சீதரர்தன் மருகா! தேவியுமை யவள்பா—லக! வேளே!
மாதரசி குறமான் மால்கொள்புய! சிகிமா—மலைநாதா!

2977. மருப்பொ லிந்திடு நீபமென் மாலிகை
மணிப்பு யந்தனி லேபுனை நாயக!—எனையாளாய்.
கருப்பொ லிந்திடு கார்குழன் மாதர்கள்
கனத்தின் மிஞ்சிய மாமயல் தீரிட—அருளாயோ?
செருப்பொ லிந்திடு சூருட னேயடல்
செயிற்ற சுந்தர வேலவ னே!கிருபை—புரிவாயே.
தருப்பொ லிந்திடு சோலைகள் சூழ்தரு
தழைத்த குன்றையின் மாமலை வாழ்தரு—குகவேளே!

2978. தாதவிழ் நீப மாலை
தானணி மார்ப! நாளும்—அருளாயோ?
சீதம தான சோதி
சேர்மதி சூடு நாதர்—தருபாலா!
மாதர சான தேவி
வாழ்குற மானை மேவு—புயநாதா!
ஆதர வேசெய் வாய்பொ
ஞர்சிகி மேரில் வாச!—எனையாளாய்.

2979. வாதுபுரி சூரன்
மாயஅயி லேவு—செயவீரா!
தாதுலவு நீப
சாமி!குரு நாதா!—எனையாளாய்.

---

2977. செயிற்ற - வென்ற.

சூதுமுலை மாது
தோகைமயில் வேடர்—மகள்தோளா!
போதுலவு சோலை
பூணுசிகி மேரில்—வருநாதா!

2980. ஆடியமயில் வீரா!
ஆரணமறி யாதாய்!—எனையாளாய்.
நாடியபடி தானே
நாரண!மரு கேசா!—குகநாதா!
தேடியஅடி யார்பால்
தேவையதை நீயே—அருளாயோ?
பாடியதமிழ் தாராய்
பாவல!சிகி மேரா!—கிருபைதாராய்.

2981. மீறியதுயர் தீரிட
வேமயில்தனில் ஏறிமுன்—வருவாயே.
சீறியவர வேபுனை
தேனலர்புனை வேணியர்—அருள்பாலா!
மாறியமன மாவுடன்
வாதுசெய்அயி லா!குக!—குமரேசா!
நாறியபொழில் சூழ்தரு
நான்மறைபுகழ் தோகையின்—மலைநாதா!

2982. புனற்றாமரை வாழ்கொடி
புணர்க்காருடல் மாயவன்—மருகோனே!
அனச்சீர்நடை யேபயில்
அருட்பார்வதி யாளுட—புதல்வோனே!
மனத்தேவரு நோய்தவிர்
மயிற்பாவல! நாயக!—எனையாளாய்.
இனச்சீர்மணி யேநிரை
எழிற்றாரகை மாமலை—வருதேவே!

2983. செருபுரி சூரோன் றெறிபட வேலை—எயுநாதா!
வருதுய ரோட மயின்மிசை ஏறி—வருவாயே.
குருபர குக!நா தா!கும ரேச!—எனையாள்வாய்.
தருமிகு சோலை தழைசிகி மேரில்—வருதேவே!

---

2979. போது - மலர்.

2982. காருடல் - கருநிற உடல்; திருமால் நீலநிறத்தினன் என்பதறிக.

2984. விதியால்வரு துயராகிய வினைதீரிட—அருளாயோ?
கதியானடை பயில்தோகைய! கமழ்நீபமென்—மலர்மார்பா!
மதிமாமுக அயில்வேல்விழி வனநாயகி—புணர்தோளா!
நதிசேர்வயன் வளர்நேம நன்கார்சிகி—மலைநாதா!

2985. மருப்பொ லிந்திடு நீப மாலிகை
மணிப்பு யந்தனி லேபுனை நாயக!—முருகோனே!
செருப்பு ரிந்திடு சூருட னேயெதிர்
செயிற்று வந்திடு கூரிலே வேலவ!—எனையாளாய்.
வருத்த மிஞ்சிய நோய்தனை யேதவிர்
(மயிற்குகே சசியென பூயென)—அருள்தாராய்.
தருச்சி றந்திடு சோலைகள் சூழ்தரு
தழைத்த குன்றையின் மாமலை வாழ்வுறு—செகநாதா!

2986. பாவை யாகிய மாத ரால்வரு
பாழ்கொள் மாமயல்—தவிராயோ?
தேவை யாகிய யாவு மேயருள்
தேவ நாயக!—எனையாளாய்.
கோவை யாகிய வாயி னுளுமை
கோல மாகிய—புதல்வோனே!
சேவை யேபுரி தேவர் சூழ்தரு
சீர்சி காமலை—முருகோனே!

2987. சீறிய வரவு சூடிய முடியர்
தேனு குழலி—உமைபாலா!
மீறிய கொடிய தீவினை யகல
வேகிருபை புரிவை—முருகோனே!
மாறிய மனதி னுர்அவு ணர்களை
வாடிட அயிலை—எயுநாதா!
தேறிய பொழில்கள் சூழ்சிகி மலைய!
தேவர்கண் முதல்வ!—எனையாளாய்.

2988. கோதுகிளி மொழியாள்
கோவைகனி இதழாள்—குறமானுள்
மீதுமயன் மிகலால்
வேரிமல ரணைமேல்—மகிழ்தோளா!
மோதுபடை யுடனே
மூடவரு அசுரோர்—குலகாலா!
போதுநிறை பொழில்சூழ்
பூவுலவு சிகிமா—மலைநாதா!

2985. மூன்றும் அடியின் பிற்பகுதி தெளிவாக இல்லை.

2989. மதுது ளிக்கு நீப
மலரி ருக்கு மார்ப!—அருளாயோ?
விதுத ரித்த வேணி
விமல ருக்கு வாசை—மிகுபாலா!
பதும முற்ற பாத!
பனக முற்ற மாயன்—மருகோனே!
சதும றைக்கு மாதி
தகுசி கிப்பொன் மேரில்—வருதேவே!

2990. மருவு லாவிய நீப
மலரு லாவிய மார்ப!—எனையாளாய்.
செருவு லாவிய சூரன்
திறமெ லாமழி வர்க—எயும்வீரா!
குருப ர!குக! நாதா!
குமர யா!எளி யேனை—இனியர்ளாய்.
தருவு லாவிய சோலை
தகுசி காமலை வாச!—அருளாயோ?

2991. வருந்திய நோயை
மடிந்திட வேண—தருளாயோ?
திருந்திய ரூப
சிறந்திடு வேடர்—மகள்தோளா!
பொருந்திய பாடல்
புரிந்திடு வாய்பொன்—மயிலாளா!
பெருந்திரு மேவும்
பிறங்கிய தோகை—மலைநாதா!

2992. வந்த சூருடன் மண்டு போர்புரி—அயிலாளா!
எந்தன் நோய்தவிர் இந்தி ராதிபர்—பணிதாளா!
அந்த மேவிய அன்பி னுள்குற—மயில்தோளா!
சந்த மேவிய தண்சி காமலை—முருகோனே!

2993. வனச மாமலர் வனிதை சேர்விறல்—பணிதாளா!
கனக லோகர்கள் கனிவ தாய்எதிர்—பணிதாளா!
அனம தாகிய அழகு வேடமின்—அணைதோளா!
புனமு லாவிய புகழ்சி காமலை—முருகோனே!

2994. கலக லெனநடை பயிலு மயின்மிசை
கருணை யுடன்என்முன்—வருவாயே
வலவை யுளபுய னசுரர் குலபதி
மடிய அயில்விடு—குகநாதா!

புலவர் புகழ்தரு குமர! குருபர!
புனித மலரணி—புயவேளே!
சலதி வளைதரு புலவர் புகழிய
சயில சிகிமிசை—வருதேவே!

2995. ஆடிய மயிலா! ஆரண முதலே!—எனையாளாய்.
தேடிய சரணு! சீர்திக முயிலா!—அருளாயோ?
பாடிய தமிழ்தா பாவல! முருகா!—குகநாதா!
கூடிய பொழில்சேர் கோதறு சிகிமா—மலையாளா!

2996. தயவி லாததொரு மடமி ளருளு
சலதி யானமயல்—முழுகாதே
இயல்ப தானநின தருளை நீயுதவு
எளியன் மீதுதய—வுடனேதான்.
செயம தாகவரு வசுரை நாசமிடு
திறம தானஅயில்—முருகோனே!
புயல்க டாவுகன முடிகள் சூடுநிறை
பொழில்கள் சூழுசிகி—மலைநாதா!

2997. சூரு டையமுடி தூளு படஅயில்—விடுசூரா!
ஆரு மறிவரும் ஆறு முக!முரு—கைய! வேளே!
வாரு புனைமுலை மாதர் மயல்தனை—விலகாயோ?
சீரு நிறைதரு தேவர் புகழ்சிகி—மலைநாதா!

2998. வாது புரிசூரன் மாய அயிலேவு—செயவீரா!
மாது குறமானை மாவி னுடன்மேவு—புயலோலா!
கோது தவிர்பாடல் கூறு வரம்யாவு—முதவாயோ?
தாது லவுநீபத் தாம! சிகிமேரில்—வருதேவே!

2999. சானகிபுணர் கார்நிறவிறல்
தாமரைவிழிமகிழ்—மருகேசா!
தானவர்குல மாவுடல்தடி
தார்புனைஅயின்—முருகோனே!
தேனலர்புனை மார்ப!நல்வரம்
சீர்முழுவது—முதவாயோ?
கானகமயில் மேவியபுய!
கார்தவழ்சிகி—மலைநாதா!

---

2994. சயிலசிகி - சிகிமலை.
2996. சலதியானமயல் - கடலாகப் பொங்கிய காதல் மயக்கம்.
2997. தூளுபட - துகள்பட, பொடியாக.
2999. முதலடியில் நான்காஞ்சீரில் ஓரசை மிகுதியாக அமைந்துள்ளது.

3000. ஆடியமயி லேறிய ஆரணமுடி வாகிய—குகநாதா!
நாடியபுல வா! குக! பாவல! குரு நாயக!—எனையாளாய்.
மூடியபிணி தீரிட மோகனவன மானணை—புயலோலா!
கூடியபொழில் சேர்சிகி கூரருமலை மேவிய—முருகோனே!

3001. தாதுறு நீப மாலை
தானணி மார்ப! நாளும்—அருளாயோ?
மாதுபொன் வேட மானை
மாலுடன் மேவு தோகை—மயிலாளா!
வாதுசெய் சூர னவி
மாய்த்திட வேலை யேவு—செயவீரா!
போதுறு சோலை சூழு
பூமலி தோகை மேரில்—வருதேவே!

3002. துதிபெறு நாதா! துரைமக னுதா!—அருளாயோ?
மதிநுதல் மானுள் மலைமகள் பாலா!—எனையாளாய்.
கதியருள் சீலா! கமழ்மலர் நீபா!—செகநாதா!
நதிமிகு நேமா! நறுசிகி மேரா!—அமரேசா!

3003. கானக மடந்தை
காதல்கொள் கடம்ப—மலர்மார்பா!
தானவர் குலங்கள்
தான்அழிய வன்று—செயும்வேலா!
பானல நிறைந்த
பாரணை யிலங்கு—மதியேசேர்
தேனலர் அணிந்த
சீர்சடையர் மைந்த!—சிகிமேரா!

3004. ஒருத்தி வேடமி னுவக்கு மாகிய—புயநாதா!
கருத்தி னுருக கடப்ப மாலிகை—அணிமார்பா!
வருத்த நோய்தவிர் வனப்பின் மாமயில்—வருதேவே!
திருத்த மாகிய சிகிப்பொ னுர்மலை—வளர்தேவே!

3005. மனமாயை ஒழிய வரம்யாவு மருள்வை—குகநாதா!
தனமாத ருடைய தகுமாசை தவிர—வருவாயே.
அனமான நடையள் அரிதான வடிவி—குறமானுள்
தினமேவு கணவ! திருவாழு சிகியின்—மலைநாதா!

---

3000. கூரருமலை - (சிகி எனும்) பெயர் மிக்க அரிய மலை.

3003. சீர் சடையர்-சிறப்புமைந்த சடையினை உடையவராகிய சிவபெருமான்.

3004. உவக்குமாகிய - மகிழ்தற்கு இடமாகிய. 'என் கருத்தில் தங்குக' என்பது இரண்டாவதடியிலமைந்த வேண்டுகோள்.

3006. காருக் கிசைத்த குழலாள்
கானக குறப்பெண் மடமா—னணைதோளா!
வாருக் கிசைத்த முலையர்
மாதர்க் கிழைத்த மயல்தீ—ரிடவாராய்.
போருக் காரிகைத்த வசுரோன்
போகக் கனத்த அயிலே—வியசூரா!
மேருக் கிசைத்த சிகிமா
மேருக் கிசைத்த குகனே!—அருளாளா!

3007. வடிவு தங்கிய குறம டந்தையை
மருவு மிங்கித—முருகோனே!
கடிக மழ்ந்திடு உயர்க டம்பணி
கருணை தங்கிய—குகநாதா!
அடியன் எந்தனை வளர வுங்கிருபை
அதனை வந்தருள்—மயிலாளா!
நெடிய பைம்பொழில் முடியி லங்கிய
நிறைசி கண்டியின்—மலைநாதா!

3008. வருத்துதுயர் தீர மயிற்பரியி லேறி—வருவாயே.
முருக்கினிதழ் தேமல் முலைக்குமரி யசை—மகவேளே!
மருப்பொலியு நீப மலர்ப்புயவ! நாளும்—அருளாயோ?
திருப்பொலிசெய் சோலை திறத்தசிகி மேரில்—வருதேவே!

3009. ஒருவர்துணை யேது
ஒருநிமிச நாயன்—முன்வாராய்.
மருவுலவு நீப
மலரணியு மார்ப!—எனையாளாய்.
பொருதுசமர் ஆடு
புகழுயில! தோகை—மயிலாளா!
கருமுகில்க டாவு
கமழ்சிகியின் மேரில்—வருதேவே!

3010. வால மதிநுதலாள்
மாது குறமயிலாள்—புணர்தோளா!
சீல! மதிபுனைவோர்
தேவர் மக!அரனார்—தருபாலா!
கோல மயின்முருகா!
கூர யில!எனையாள்—குகநாதா!
தால நிறைசிகியாம்
சாரல் மலையரசே!—அருளாயோ?

---

3008. முருக்கினிதழ் - செங்கிற முருக்க மலரினை ஒத்த உதடுகள்,

3011. கலைபழகு பவர்நினது
அடிபரவு பொற்சரண!
கருணைபொழி மைப்புயல!—வருவாயே.
கொலையசுர ரைக்களம
தினிலெதிரி டப்பொருது
குருதிபெறு சத்தியணி—செயவீரா!
சிலைநுதலர் பக்கம்வரு
மயல்தவறி டக்கிருபை
செயுவையம ரர்க்கரச!—எனையாளாய்.
தலைமைபெறு பொற்கிரியை
நிகரவரு சக்கிரசிகி
தருமலையில் அற்புத! பொன்—மயிலாளா!

3012. வருநோய்கள் தீர மயின்மீது ஏறி—வருவாயே.
கருமேனி மால்தன் கனிவான வாசை—மருகோனே!
திருமேவு சோலை திகழ்தோகை மேரில்—வருதேவா!
தருமேவு சோலை தனில்வாழு மானை—அணைதோளா!

3013. மயல்தீரிட அருளேபுரி மயிலேறிய—பெருமாளே!
அயலாயெதிர் வருசூருடல் அடுபோர்புரி—குகநாதா!
குயிலாகிய மொழிவாயினள் குறநாயகி—புணர்தோளா!
செயலாகிய பொழிலேநிறை சிகிமாமலை—வருதேவே!

3014. மடலெ டுத்தமண மலிக டப்பமலர்
மருவு மற்புயவ!—முருகோனே!
அடலெ டுத்தவசு ரனையு ரத்தில்விழ
அயிலெ டுத்தவிர—மிகுதேவே!
கடல டுத்தபுட வியின்வ ளர்ச்சிபெறு
கனமி குத்தசிகி—மலைநாதா!
உடலெ டுத்தயெனை யுறுதி பெற்றிடநல்
உதவி யிப்பவருள்—புரிவாயே.

---

3011. கலை பழகுபவர் - கலையுணர்வில் இடையறாது தோய்பவர். மைப்புயல - கரிய முகிலே. குருதிபெறு சத்தி - இரத்தம் தோய்ந்த வேல். செயுவை - செய்வாய்.

3014. மற்புயவ - மற்போரில் ஈடுபட்ட புயங்களை உடையவனே. விரமிகு - 'வீரம் மிகு' என்பது குறுகியது. கடலடுத்த புடவி - கடலால் சூழப்பட்ட உலகம். இப்ப - இப்பொழுது.

3015. அதிரூப மடமாது
தருமாசை யதனால்
அழியாது கனமான
வரநீசெய்—குவையே.
மதிதாவு சடைவேணி
அரனார்சொல் புதல்வா!
மயிலேறி விளையாடு
குக! வேண—தருள்வாய்.
கதியாக வருசூரன்
உடல்கீறு படவே
கதிர்வேலை விடுதேவ!
கமழ்நீப—மலரா!
விதிமாயன் உயர்வானர்
பணிபாத முதலே!
விரைமேவு பொழில்மேவு
சிகிமேரின்—அரசே!

3016. படையெ டுத்துவரும்
அசுர ரைப்பொருது
பனிரெனக் கதிர்கொள்—அயிலாளா!
நடையெ டுத்தமயில்
முதுகி னிற்கமல
நலமு கத்தினொடு— வருவாயே.
விடையெ டுத்தவர
னுடனு மைக்கிவரு
விழைவு பெற்றகுரு—பரவேளே!
தொடைத ரித்தபுய!
சிகிம லைக்கரசே!
துதிப தக்குமர!—எனையாளாய்!

3017. மனத்தில் வருதுயர் தீரிட
மயிலின் மிசைவரு வாய்குக!—குமரேசா!
வனம றவர்தரு நாயகி
மகிழ வருபுய வா!குரு—பரவேளே!
அனவ ரதமடி யேனிடம்
அதிக வரமினி யேயருள்—புரிவாயே.
இனம ணிகணிரை யாயொளிர்
இலகு முடிதிகழ் சோலையின்—மலைநாதா!

3018. கடிதி னடைபயில் மயிலில் வருகுக!
கருணை பொழிமுரு—கைய!வேளே!
அடிய னிடம்வரு துயர்க ளழிபட
அருள்செய் குருபர!—அமரேசா!
வடிவு மிகுகுற மயிலி புணர்புய!
வரத! சரவண—பவ!வேளே!
முடிக ணிரையுள பொழில்க ணிரையுள
முதிய சிகிமலை—வருதேவே!

3019. வருசூரனை மடிவாகிட—எயும்வீரா!
கருமாமுகில் கமழ்சோலைமி—னணைதோளா!
அருமாமறை அணுகாதிடு—இருதாளா!
திருமேவிய சிகிமாமலை—முருகோனே!

3020. சதுமறை முனிவர் இமையவர்
சகல ரும்மகிழ்—வுறுநாதா!
மதுமல ரணிபுய! முருகய!
மயின்மி சைவரு—குக!வேளே!
முதுவடி யவரொடு வெனைநினை
முதல்வ! பொன்குற—மகள்தோளா!
விதுதவழ் மலர்நி றைபொழின்
மிகுமுளரி மினுறை—சிகிமேரா!

3021. கஞ்சமலர் வாவி சூழுங்
கங்குறவழ் சோலை நேம—வளநாடா!
வஞ்சசுரன் நாச மாக
மண்டுசம ராடு கூரின்—அயிலாளா!
அஞ்சிவினை யோட வோட
அந்தமயி லேறி நாயன்—முன்வாராய்.
மிஞ்சியுயர் கோடு லாவு
மின்குலவு தோகை மேரில்—வருதேவே!

3022. மனத்தில் உற்றிடு துயர மற்றிட
மயிலி லற்பொடு—வருவாயே.
உனது பத்ம பதமே நித்தியம்
உறுதி வைத்திடு—மெனையாளாய்.

---

3018. வரத - வரங்களைத் தருபவனே.

3020. 'முதிய அடியவர்களுள் ஒருவனாக என்னையும் நினைந்து ஏற்றுக்கொள்' என்பது மூன்றும் அடியின் முற்பகுதியின் பொருள்.

அனந டைக்குற மயிலி யைப்புணர்
அழகி யதுரை—முருகோனே!
தினக ரப்பிரபை முடிநி ரைத்திடு
சிகிம லைக்குரு—பரநாதா!

3023. வாவி சூழ்தரு நேம நாட!விண்
வாவு தோகையின்—மயிலாளா!
தேவி மாதுமை யாள்சொல் பாலக!
தேவ தேவர்கள்—பணிதாளா!
பாவி யானவர் பாக மோடிடல்
பாவம் நீயதை—விலகாயோ?
காவி னீடிய தோகை மாமலை
கார ணு!குரு—பர!வேளே!

3024. மனதினில் வருதுய ரமெலா மொருகண
மடிபட உனதிரு—விழிபாராய்.
வனகிரி நிகரிரு தனகிரி யுயர்குற
மயிலியை மருவிய—இருதோளா!
உனதிரு பதகம லமதனை மனதினி
லுறுதிய தெனநினை—எனையாளாய்.
தினகர னொளிவிடு கொடுமுடி யிலகிய
சிகிமலை வருகுரு—பர!வேளே!

3025. மதுமிகுநீப மலர்மலி மார்ப!—குகநாதா!
சதுமறை தேடு சரணு! அண்டர்—பணிதேவே!
கதுமென ஆடு கனமயி லேறி—வருநாதா!
முதுசிகி மேரில் வருமுதல் வோனே!—எனையாளாய்.

3026. வடிவாகிய குறநாயகி
மனதாசைகொள்—புயநாதா!
அடியேனுட மிடிதீரிட
அரசே!கிருபை—புரிவாயே.
மடிவாகிட வசுரோனுடல்
வலியேபுரி—செயவீரா!
முடிசேர்கன சிகிமாமலை
முதல்வா!நலம்—உதவாயோ?

---

3023. 'பாவத்திலேயே வாழ்கின்ற பாவிகளின் பக்கத்தைச் சேர்தலாகிய பாவத்தினை நீ விலக்கமாட்டாயா' என்பது மூன்றும் அடியின் கருத்து.

3027. நலமிடு தோகை மயிலா!
நலமுதவி நீசெய் குமரா!—எனையாளாய்.
அடமுலவு சூர னுடனே
அமர்புரியு வேல! அருளே—புரிவாயே.
தடமுலவும் கேம நாட!
தருணமிது வேளை யென்மூனே—வருவாயே.
புடவிபுகழ் தோகை மலையாய்!
புகழ்மயிலின் நாத! சண்முகா!—அருளாயோ?

3028. சோதி மணியணி தூய சடையிறை—தருபாலா!
வாதின் மிகுவல மாவை அயில்கொடு—எயும்வீரா!
சூதி னிணைமுலை தோகை குறமயில்—புணர்தோளா!
மோதி வளர்பொழில் மூடு சிகிமலை—வருதேவே!

3029. எனது துயர்தீர எளிய னிடமாக—வருவாயே.
மனது மயல்தீர வரமு தவிசெய்வாய்—குகநாதா!
புனம யிலிமேவு புதிய மலர்நீப—மணிமார்பா!
கனக மலையான கமழ்சி கியின்மேரில்—வருதேவே!

3030. ஆடிய மயிலா! ஆதர வருள்வாய்—அமரேசா!
பாடிய தமிழா! பாவல! எனையாள்—முருகோனே!
நாடிய குறமா துள்தொறு மணவாய்—புயலோலா!
நீடிய பொழில்சேர் நீள்சிகி மலைவாழ்—குகநாதா!

3031. கானக மடந்தை
காதல்கொள் கடம்ப—மலர்மார்பா!
தேனலர் இலங்கு
சீர்மிகு நலங்கொள்—இருதாளா!
தானவர் குலங்கள்
தான்விழ இலங்கு—அயிலாளா!
வானவர் மிகுந்த
வாணுயர் செகண்டி—மலைநாதா!

3032. மடந்தை மாருடன் மயங்கு நோய்தவி—ரிடுவாயே.
கடம்பு சூடிய கனங்கொள் சீர்புய—முருகோனே!
படங்கொ ளரவணி பயங்கொள் வேணிய—ரருள்பாலா!
நடங்கொள் தோகைய! நறுஞ்சி காமலை—வருதேவே!

---

3028. சூது - சொக்கட்டான் காய்.

3032. படங்கொள் அரவு - படத்துடன் கூடிய பாம்பு.

3033. கங்கை யணிசடையார்
கங்குல் மிகுமிடறுர்—அருள்பாலா!
பொங்கு மிகுமயிலா!
புண்ட ரிகசரண!—கிருபைதாராய்.
பங்கம் மிகுவயல்சூழ்
பண்பு மிகுவளரே—மனன்னுடா!
தங்க மிகுமலைநேர்
தண்சி கியின்மலைநா—யக!வேளே!

3034. நெஞ்சின் வருநோயை
நின்கிருபை வேல்கொ—டுருவாயே.
வஞ்ச மிகுசூரன்
மண்டி வருபோரி—லடுவேலா!
தஞ்சமிலை நோகை
தங்கு மயில்ஏறி—வருவாயே.
மிஞ்ச வளர்சோலை
மென்சி கியின்மேரின்—முருகோனே!

3035. மருத டர்த்தவர் கனியு திர்த்தவர்
மகிழும் அற்புத—முருகோனே!
செருவி லைத்திரி புரமெ ரித்தவர்
திரும கக்குரு—பர!வேளே!
அருவி னைக்குநின் மயிலி லுற்றுநின்
அடிய னுக்குமுன்—வருவாயே.
திருநி றைத்திடு பொழில்மி குத்திடு
திகழ்சி கிக்கிரி—முருகோனே!

3036. வஞ்ச னாகிய சூரன் மார்பினின்
மண்ட வேல்விடு சூர னே!கிருபை—புரிவாயே.
கஞ்ச னாரிமை யோர்கள் வேதியர்
கண்டு தாள்தொழு நாத னே!அருள்—புரிவாயே.
தஞ்சம் வேறிலை யாள யாகுக!
தந்த தோமென வாட லேபுரி—மயிலாளா!
மஞ்ச தேதவழ் சோலை நீடிய
வண்சி காமலை வாச னே!தமி—ழுதவாயோ?

3037. மதமொ ழுகிய யானை
மனம கிழுயர் வான—துணையாளா!
பதமெ ரிசனம் நீதா.
பரும யிலினின் மீதே—வருவாயோ?

---

3036. 'எனக்கு வேறு பற்றுக்கோடில்லை ; நின் அடிமை ஐயா நான்' என்பது மூன்றும் அடியின் முதற்பகுதியின் பொருள்.

நிதநி தநித நாயன்
நின்ன ருள்பெற வேண—தருளாயோ?
சுதன்என் முனருள் நீசெய்
சுபசி கிமலே நாத!—குகவேளே!

3038. வாசனைமிகு நீபமென்
மாலிகைபுனை மார்ப! நல்—லருளாயோ?
காசணிமுலை மாதர்கள்
காதலையினி நீதவிர்—முருகோனே!
நேசமதுள வேடமி
னேமருவிய நாயக!—எனையாளாய்.
மாசகல்பொழில் சூழ்சிகி
மாமலைதனில் வாழ்வுறு—குகநாதா!

3039. அனியாய லோப ரவர்வாச லோடி
அலையாது கோடி—அருளாயோ?
கனிவாக நாயன் மகிழ்வாக ஆடு
கனதோகை யேறி—வருவாயே.
இனிதான மாத ரெழிலாலும் வாடி
இனிமோச மாவ—தறியாயோ?
தனியான தோகை மலைவாச! நீடு
செகநாத! தேவர்—புகழ்பாதா!

3040. மானுள்குற மாதினுள்
மாலாயணை சீர்புயா!—எனையாளாய்!
தேனுர்கன நீபனே!
தேவோர்புகழ் நாதனே!—அருளாயோ?
நானுவித பாடலே
நாயேனிடம் நீசெய்வாய்—குகவேளே!
கானுர்பொழில் மீதிலே
கார்தாவிய தோகைமா—மலையாளா!

3041. சோதிமய மாகிய தூயமலர் நீபமென்—மணிமார்பா!
வாதினுயர் சூரனை மாயவழி லேவிய—செயவீரா!
ஆதிபர மேசுரி யாரணியு மாமகள்—அருள்பாலா!
தாதிலகு பூவனச் சாரன்மிகு தோகையின்—மலைநாதா!

3042. நடனமிடு மயிலா!
நறுமலர்கொள் சரணு!—அருளாயோ?
கடனிகரு படைசூழ்
கரியவசு ரனையே—எதிர்வேலா!

தடமுலையின் மயிலாள்
சரசிகுற மகளாள்—புணர்தோளா!
வடவரையை நிகராய்
வளர்சிகியின் மலையா!—அமரேசா!

3043. சுபகர விலாச மருவிய வுலாச!
துரைம கள்தெய் வானை—புணர்லோலா!
தபசுசெயு மோன முனிவரர்கள் தேடு
சரண! சண்மு கேச!—குகநாதா!
உபசரண மீது யுரிமையடி யேன்முன்
............—வருவாயே
சபைநடன ராசர் தருபுதல்வ! தோகை
............—மலைநாதா!

3044. சானகி மடந்தை யாள்சிறை யகன்று
தான்விலகி வந்ததொரு—ரெகுராமன்
மானல மிகுந்த சீர்மருக! எந்தன்
மாசது அகன்றிடமுன்—வருவாயோ?
வானவர் நிறைந்த சீர்கொலு விருந்த
மாலிகை அணிந்தபுய!—குகநாதா!
தானவர் குலங்கள் நாசமிடு சூந்த!
சாவத சிகண்டிமலை—முருகோனே!

3045. ஒருவர்துணை யேது உனதடிய லாது—புகல்வாயே.
வருவர்வினை யோடி மடியஅடு கூரின்—அயிலாளா!
பெருமயிலி லேறு பெரியகுரு நாத!—கிருபைதாராய்.
தருவுலவு சோலை தருசிகியின் மேரில்—வருதேவே!

3046. ஆடல்புரி மயிலாய்! யான்மகிழ வுடனே—வருவாயே.
மூடனெனும் அசுரோன் மூடுபடை விழவேல்—விடுசூரா!
ஏடவிழு மலர்வாழ் ஏருலவு மறையோன்—பணிபாதா!
பாடவருள் புரிவாய் பார்புகழு சிகிமா—மலைநாதா!

3047. வருத்து நோயினால் மடிக்க லாகுமோ?—அறியாயோ?
கருத்த னே!சொலாய் கமழ்ச்சி நீபமா—லிகைமார்பா!
மருக்கு லாவுமோர் மலர்க்கு நேரதா—கியதாளா!
திருத்த மானசீர் சிகிப்பொன் மேரில்வாழ்—குகநாதா!

---

3043. பின்னிரண்டடியின் இறுதிப் பகுதிகள் சிதைந்துள்ளன.

3047. மடிக்கலாகுமோ - மடியலாகுமோ என்பதின் விரித்தல். 'கமழ்' என்ற சொல் கமழ்ச்சி என விரிந்து வந்துள்ளது.

3048. வாதாடிய சூரனை மார்மீதி லேபட—அயிலாலே
கோதாகிய போர்புரி கோவே! கிருபை நீபுரி—குவைநாதா!
மாதாகிய வேடமின் மாலாயணை நாயக!—குகவேளே!
போதார்பொழில் சூழ்தரு பூமேவிய தோகையின்-மலைநாதா!

3049. கச்சு மேவு தனத்து நாயகி
கற்பி னீடு குறத்தி சேர்புய!—முருகோனே!
பச்சை மேனி நிறத்து மேனிஇன்
பப்பார் வைவி றற்கு வாகைகொள்—மருகோனே!
இச்சை யான படிக்கு மாமயி
விற்கு லாவி மகிழ்ச்சி யாகமுன்—வருவாயே.
வச்சிர பாணி முதற்பொ னுடினர்
மட்டி லாதவர் மொய்த்த தோகையின்—மலைநாதா!

3050. படையெடுத்துவரு பருத யித்தியனை—அடுவேலா!
நடைமி குத்தகன நலம யிற்பரியின்—வருதேவே!
இடைகொ டிக்குமரி இனிய மைக்குறமின்—மயலாளா!
புடையி னற்பொழில்கொள் புகழ்சி கிக்கிரியி—னரசாளா!

3051. முத்துமுதல் ரத்தினமுடி
மொய்த்தமுடி வைத்தவழு—குளதேவே!
சத்துருமி குத்தபடை
தட்டழிய வெற்றிபுரி—சமராளா!
கொத்துளக டப்பமலர்
குப்பல்என வுற்றதிரு—மணிமார்பா!
சித்துவிளை வித்தகுக!
சித்திரசி கிக்கிரியின்—அரசாளா!

3052. மோதிய படைவிழ
மூரியி னயிலே—வியசூரா!
சாதியி லுயர்குறமான்
தான்மகிழ் வடிவாளா!—அருளாயோ?
பாதியின் மதியணிவோர்
பாலக! முருகயனே!—எனையாளாய்.
சோதியின் மிகுமுடிசேர்
தோகையின் மலையரசே!—கிருபைதாராய்.

---

3050. பருதயித்தியன் - பருத்த அரக்கன். 'கொடி இடைக்குமரி' என இயைக்க. புடை - பக்கம்.

3051. குப்பல் - மிகுதியைக் குறிக்கும் சொல்.

3052. மூரி - வன்மை.

3053. மதுக ரித்தத மிழ்ச்சொ லெனக்கருள்
மயின டத்திய—குகநாதா!
சதும றைக்குரு பரின னக்கருள்
தருவை அற்புத!—இருபாதா!
விதுத ரித்திடு சடைமு டித்தவர்
விமலர் அற்புத—மக!வேளே!
பதும மைக்கொடி நிறையு மைப்புயல்
படியு மெய்ச்சிகி—மலைநாதா!

3054. மறையோர்பணி வரதா!அருள்—புரிவாயே.
நறைநீபமெ னலமார்ப!மென்—னயிலாளா!
முறையாயறு முகனே!யென்முன்—வருவாயே.
கறைமாமுகில் கமழ்தோகையின்—மலைநாதா!

3055. மருமீறிய நீபமென்
மலர்மாலிகை சூடிய—குருநாதா!
திருமீறிய பாவையின்
திகழ்வேடுவி மேவிய—புயநாதா!
உருமீறிய பேரொலி
உடனுடிய சூரனை—அடுநாதா!
தருமீறிய சோலைகள்
தருதோகையின் மாமலை—வருநாதா!

3056. கறைமி டற்றினர் கருணை யுற்றவர்—அருள்பாலா!
நறைமி குத்திடு நளின முற்றவர்—பணிபாதா!
பிறைநு தற்கொடு இணைவி ழிக்குற—மயில்தோளா!
நிறைசி கிக்கிரி நிருப! வித்தையை—அருளாயோ?

3057. மதுமலர் நீப மலரணி மார்ப!—எனையாளாய்.
சதுமறை தேடு சரவண நாத!—எனையாளாய்.
முதுமுனி வோர்கள் முளரிமி னுதன்—மருகோனே!
விதுதவழ் சோலை மிகுசிகி மேரில்—வருதேவே!

3058. வருசூருடன் வலுபோர்புரி—அயிலாளா!
திருமேவிய திகழ்வேடமின்—அணைதோளா!
மருநீபமென் மலர்சூடிய—புயநாதா!
தருமேவிய தகுதோகையின்—மலைநாதா!

---

3054. நறை - தேன்.

3057. ‘முதிய முனிவர்கள் பணியும் திருமகள் நாதனாகிய திருமாலின் மருகன்’ என மூன்றும் அடிக்குக் கொள்க.

3059. ஆடிய மயிலா! யான்மகி ழிடவே—வருவாயே.
பாடிய புலவர் பார்புகழ் சரணு!—எனையாளாய்.
நாடிய பாடல் நாரணன் மருகா!—அருளாயோ?
கூடிய பொழில்சேர் கோலசி காதென்—மலைநாதா!

3060. மயிலா கியவேட மகளா சையினீடு—குகநாதா!
கயலா கியபார்வைக் கமலா சனிநாதன்—மருகோனே!
வயல்சூ ழுயர்சேம வளநா ட!பொனுன—மயிலாளா!
புயல்தா வியசோலை புடைசூழ் சிகிமேரில்—வருதேவே!

3061. எதிரிடு சூரன் இடறிட வேலை—எயும்நாதா!
மதிநுதல் மாது வனமயின் மேவு—புயநாதா!
கதிமிகு தோகை கனமயி லேறு—முருகோனே!
விதிபணி பாத! விரைமிகு தோகை—மலைநாதா!

3062. ஆதிபர மேசுரித னுவலுள மாமகனே!—வருவாயே.
மோதிவரு சூரர்படை மோசமிட வேலையெயு—முருகோனே!
பாதிமதி யானநுதல் பாவைமட வார்மயலை—விலகாயோ?
சோதிமுத லானதரு சூழ்சிகியின் மேரில்வரு—குகநாதா!

3063. துயர்க்கடல் முழுகிப்பிணி
துறையுற்றிடு—பிழைபாராய்.
அயனைச்சிறை தனில்வைத்திடு
அருமைத்துரை!—எனையாளாய்.
கயமுற்றிடு வதனத்தவர்
கருணைத்துணை—முருகோனே!
செயமின்வளர் அயிலைத்தரி
சிகிமெய்க்கிரி—வருநாதா!

3064. ஆதரவு வேறு முளதோ
யான்மகிழ வேண தருள்வாய்—அமரேசா!
பாதமடி சூடும் அடியேன்
பார்வைநிறை வாக வருவாய்—குகநாதா!
சீதமதி சூடு சடையார்
தேடரிய தான புதல்வா!—மயிலாளா!
வேதமறி யாத சரணு!
மேருகிரி யான சிகிமா—மலைநாதா!

---

3063. செயமின் - வீரமகள்,

3065. சதுர்வேத முடிவான தனிநாளு மரசாளு—முருகோனே!
மதுமேவு மலர்நீப மலர்சூடு புயநாத!—அருளாயோ?
விதுதாவு எழில்சூடு மிகுதோகை மலைமேவு—குகநாதா!
பதுமாச னவிலாசர் பணிபாத!அடியென்முன்—வருவாயே.

3066. நடனமிடு மயிலா! நலமுதவி புரிவாய்—அமரேசா!
குடமிகரு முலையாள் குறமயிலை யணைவா—யெனையாளாய்.
மடமயிலி யுமைமான் மகிழுவரு புதல்வா!—குகநாதா!
தடமுலவு பொழில்சூழ் தகுசிகியின் மலையா!—அருளாயோ?

3067. வனிதை குறவோர்கள் மயிலை மணமேசெய்—குகநாதா!
பனிம திகுலாவு பவள நிறவேணி—யருள்பாலா!
இனிய தமிழ்பாட லினில திகமாக—அருளாயோ?
கனியு லவுசோலை கமழ்சி கியின்மேரில்—வருதேவே!

3068. வனவேடுவர் மகள்மேவிய—குகநாதா!
மனநோய்தவிர் வரதா!குரு—பர!வேளே!
அனமானன அழகாகிய—உமைபாலா!
கனசோலைகள் கமழ்தோகையின்—மலைநாதா!

3069. மனதில் ஆசையொடு அடியன் வாழ்கவர
மயிலி லேறுகுக!—அருளாயோ?
உனது பாதமது தினம தாகமன
துறுதி யாகநினை—அடியேன்யான்.
கனக மானமுடி யிலகு ஆறுமுக!
கருணை நாயக!வி—ணவர்நாதா!
வனத்து மாதுவளு தினமு மேவளரும்
மயிலின் மாமலையில்—வருதேவே!

3070. தாதுறுமலர் நீப மாலிகை
தானணிபுய! நாத! நாயக!—அருளாயோ?
மாதுமைகௌ மாரி நாயகி
வாரணிமுலை தேவி யாடரு—புதல்வோனே!
சூதுளகரி தான மாபெல
சூரனையுடல் கீற வேல்விடு—செயவீரா!
வாதுயர்பொழில் சேர்சி காமலை
வாழ்வுறுகுக! நாத! நாயன்முன்—வருவாயே!

---

3068. அனமானன - அனம் மான் அன, அன்னம் மான் ஆகிய இரண்டையும் ஒத்த.

3069. விணவர் - விண்ணவர், விண்ணுலகத்தினர்,

3071. அரிய மறைபுகழ் அழகு திகழ்குரு—பரிவேளே!
தரிய லர்களுடல் தமைய றிவுபட—விடுவேலா!
உரிய னெனவரு உனத டியனிடம்—வருவாயே.
கரிய முகிறவழ் கனசி கிரியின்மலை—வருதேவே!

3072. அரனுருட வொருபாதிகொள்
அனைமாதுமை—தருபாலா!
சிரமாறினில் முடியோடுயர்
திறமாமயின்—மிசைவாராய்.
உரமேயிரு பகுவாகிட
ஒளிமாவைகொல்—வடிவேலா!
வரமேயருள் புரிவாய்குக!
மயின்மாமலை—வருதேவே!

3073. வால மாமதி சூடு வேடுயர்
மாது மாமகள்—அருள்பாலா!
ஆல மாகிய சூர னுருடல்
ஆவி போகிட—அடுவேலா!
கோல வேடுவர் மாது சேர்புய!
கோதி லாமயில்—முருகோனே!
நீல மாமுகில் தாவு சோலைகள்
நீடு தோகையின்—மலையாளா!

3074. ஒருத்தர் துணையேது
உனக்குவது தோண—விலையோதான்.
வருத்த மிடுசூரை
வதைத்த அயிலாள!—எனையாளாய்.
விருத்த முலைமாது
விருப்ப மிகுவேடர்—மகள்தோளா!
திருத்தம் உயர்வான
சிகிக்கி ரியின் மேரில்—வருதேவே!

3075. வனசமலர் அடியை மனதிலனு தினமு—மறவேனன்.
உனதடியன் வளர உறுதியொடு தயவு—புரிவாயே.
புனமயிலி மருவு புயகுமர! நடன—மயிலாளா!
கனகமலை நிகரு கனசிகியின் மலையில்—வருதேவே!

---

3074. தோணவிலையோ - தோன்றவில்லையோ.

3076. போது நீப மாலை சூடு
போத ஞான நாதனே!
மாது வேட ராசை யான
மானை மேவு யோகனே!
கோது நீடு சூரன் மார்பு
கூற தாகும் வேலனே!
வாது வோடு சோலை சூழும்
மாசிகாம லேசனே!

3077. குலத்தினுயர் வேடர் கொடிக்கு மலர்மாலை—புனைமார்பா!
சலத்தையணி வேணி தனக்கு மகவான—குகநாதா!
பலத்தவசு ரோனைப் பருத்த அயிலான்மு—னடுவீரா!
தலத்தினுயர் தோகை தருப்பொ லியுமேரில்—வருதேவே!

3078. மனதினில்உறை துயர்தொலைவிட
வரமருள்குக!—குமரேசா!
அனநடைபயில் மலர்நிகர்பத
அழகுளகுற—மயில்தோளா!
தினகரவொளி விடுமணியிமை
சிகிமலைவரு—குருநாதா!
தனகிரியுள மயிலியர்மயல்
தனையடுகதிர்—அயிலாளா!

3079. ஆடியமயின் மீதினில்எனை
ஆளிட இனி—துடன்வாராய்.
நாடியஃபடி யேயினிதுள
நான்மகிழ்ட—அருள்தாராய்.
பாடியபுல வா! குருபர!
பார்வதிதரு—புதல்வோனே!
கூடியபொழில் சூழ்சிகிமலைக்
கோ!கிருபைபுரி—முருகோனே!

---

3076. சிகாமலேசனே - சிகாமலைக்குத் தலைவனே.

3077. சலத்தை அணிவேணி - கங்கையைத் தலையில் கொண்டுள்ள சிவ பெருமான்.

3078. தொலைவிட - தொலைவில் விட்டோட. தினகர ஒளி விடு மணி - ஞாயிற்றினை ஒத்து ஒளிவிடுகின்ற ஒளிக் கற்கள்.

3079. ஆளிட - ஆண்டுகொள்ள. கோ - தலைவனே.

3080. மதுமலர் நீப மலரணி மார்ப!—எனையாளாய்.
சதுமறை தேடு சரண! சிகாமென்—மலைநாதா!
விதுதரி வேணி விளைவுள காதன்—மக! வேளே!
கதுமென ஆடு கனமயி லேறு—குகநாதா!

3081. அதிபதி சூரன் அலறிட நீடு
அயிலதை யேவு—செயவீரா!
கதியுயர் தோகை மிகுமயி லேறு
கருணையெ னாத!—எனையாளாய்.
மதிநிக ரான முகவொளி மாது
வளர்குற மாது—புணர்தோளா!
நிதிவளர் நேம வளநக ரான
நலமிகு தோகை—மலைநாதா!

3082. வருத்து நோய்தனை வருத்தி யோடிட—அருளாயோ?
பொருத்து சூருடல் பொறுக்க லர்தயில்—விடுவீரா!
நிருத்த மேபுரி நிலைப்பொன் மாமயில்—முருகோனே!
பருத்த மாமுடி பணைத்த சோலைகொள்—சிகிமேரா!

3083. அனவரத காலும் அடியனிடம் வேண—தருளாயோ?
நனையுலவு நீப நறுமலர்கொள் மார்ப!—எனையாளாய்.
முனையில்வரு சூரன் முடியவயி லேவு—செயவீரா!
கனைகடல்கள் சூழு கனசிகிரியின் மேரில்—வருதேவே!

3084. வனிதைகுற மடந்தை
மருவுபுய! சிறந்த—குகநாதா!
முனிவுளஅ வுணன் றன்
முடிவினெதிர் வந்து—அடுவீரா!
கனிவுடன்என்முன் வந்து
கனவரம துவந்து—தருவாயே.
பனிமதிவல முந்து
பனைமுடிகொள் சிகண்டி—மலைவாழ்வே!

---

3081. கருணையெனாத - அருள் நிறைந்த அடியேனின் தலைவனே. ‘மாதாகிய மாது’ என மூன்றும் அடியில் கூட்டுக.

3083. நனை - அரும்பு. முனை - போர்முனை.

3084. கனவரமதுவந்து - பெரிய வரங்களை மனமகிழ்ச்சியுடன்.

3085. பாதக வினையன்
பாவமத் தனையும்—விலகாயோ?
ஆதவன் வருமுன்
ஞயலர் அல்லி—நிகர்பாதா!
வாதட ரசுரன்
மார்பினின் படமுன்—நடுவீரா!
தாதவிழ் பொழில்கள்
தானடர் சிகியின்—மலைநாதா!

3086. சதுவேத முடிவே! தமியேன்முன் வருவாய்—அமரேசா!
விதுசூடு முடியார் விரைசேரு சடையார்—அருள்பாலா!
மதுநீப மலரா! வடிவான மயிலாய்!—அருளாயோ?
முதுதோகைமலையாய்! முனைவேல! எனையாள்—குகநாதா!

3087. அடுசூரன் உடல்கீறு அயிலாள!—அருள்வாய்.
வடுவான விழிமாது வனமானை—அணைவாய்.
கடுமேவு மிடறுர்தன் கனிவான—புதல்வா!
உடுதாவு சிகிமேரில் உயர்தேவ!—குருவே!

3088. கோலா கலமயின் வாகா! குருபர!
கூறா கியவயில்—முருகோனே!
நாலா கலைகளெ லாமே யருள்புரி
நாரா யணன்மகிழ்—மருகேசா!
மாலா கியகுற மாதுள் மருவிய
வாகா! அடியன்முன்—வருவாயே!
பாலா கியமதி சூழ்தோ கையின்மலை
பாவா ரண! இனி—அருள்வாயே.

3089. கண்டமது கறையார்
கஞ்சமலர் அயனுர்—பணிவோர்சீர்
அண்டர்பணி யரனுர்
அன்புமிகு புதல்வா!—எனையாளாய்.
தண்டலையின் மடமான்
அறிந்தமயில் முருகா!—எனையாளாய்.
கொண்டல்படி பொழில்சூழ்
குன்றைமலை யரசே!—அருளாயோ?

---

3087. உடு - விண் மீன்.

3088. கூறுகிய அயில் = (சூரபதுமனை இரு) கூறுகளாக ஆக்கிய வேல். பாவா ரண - பாவாகிய வேதத்தை உடையவனே.

3089. கண்டமது கறையார் - கருநிறம் அமைந்த கழுத்தினை உடையவர்.

3090. ஆடிவரு தோகைமயி
லாள! எனை யாதரிபொ—னயிலாளா!
மோடியுட னேயெதிர்செய்
மூரியசு ரோனுடன்மு—னடுசூரா!
பாடிவரு நாயன்மிடி
பாழ்படயி னுளருள்செய்—அமரேசா!
கூடிவளர் சீர்பொழில்கொள்
கோலமிகு **தோகைவரை**—அரசாளா!

3091. வாதுபுரி சூரன் மாயவயி லேவு—செயவீரா!
சூதுமிக ரான தூயமுலை வேடர்—மகள்தோளா!
போதுமலர் நீப! போகசுக ராச!—குருநாதா!
மாதுவுமை யாள்தன் மாபுதல்வ! **தோகை—மலை**நாதா!

3092. மடமயின் வேட மாது
மருவிய மார்ப! வேண—தருளாயோ?
நடமிடு தோகை மீது
நலமுடன் ஆள் நீமுன்—வருவாயே.
அடமிடு சூர னுவி
அகவிட வேலை யேவு—செயவீரா!
நடமிகு **தோகை யான**
**தருமலை** வாச! ராச!—குருநாதா!

3093. தாதவிழ் நீப மாலை
தானணி மார்ப! கோடி—அருள்தாராய்.
மாதர சான தேவி
வான்மயில் மேவு தோள!—எனையாளாய்.
கோதறு பாட லேசெய்
(சோமனைவாலபானதன்)—மகவேளே!
மோதடர் சோலை சூழும்
மூதுள **தோகை** மேரில்—வருதேவே!

3094. கனகமய மான கயிலைநிகர் **தோகை—மலை**நாதா!
அனவரத காலு மடியைமற வாத—எனையாளாய்.
சனகன்மயி னுதர் தனதுமரு கேச!—அருளாயோ?
மனதினினை கோடி வரமினிய தாக—அருளாயோ?

---

3090. மிடி - வறுமை.

3093. மூன்றும் அடியின் பிற்பகுதி தெளிவில்லை.

3094. சனகன் மயில் - சனக மன்னன் பெற்றெடுத்த மயில்போன்ற சானகி.

3095. கடமத மொழுகிய
கரிமுக ருடதுணை—பெறுநாதா!
உடல்வரு துயர்தனை
உடன்வில கிடஅருள்—புரிவாயே.
மடமயில் குறமகள்
மருவிய குருபர!—முருகோனே!
வடவரை நிகர்தரு
மயின்மலை தனில்வரு—குகநாதா!

3096. மதுக ரித்ததமி ழதனையெ னக்கருள்
மயின டத்திய—செயவீரா!
பருமமெய்த்திரு நிகர்கு றக்கொடி
பணைமு லைக்கிணை—புயநாதா!
சதுமு கர்க்கொரு சிறைப டைத்தவ!
சதத ளப்பதம்—அருளாயோ?
விதுத வழ்கன சிகரம் உற்றிடு
விரைபொ ழில்சிகி—மலைநாதா!

3097. இதுசமைய மாகை யாலே
எளியனிடம் ஆசை யாக—வருவாயே.
புதுமையுள வேடர் மாது
புள்கமுலை மீது சேரு—புயலோலா!
மதுவொழுகு நீப மாலை
மருமமணி நாத! தோகை—மயிலாளா!
விதுதவழு சோலை சூழும்
விதிபரவு தோகை மேரில்—வருதேவே!

3098. தாதவிழ் நீபத் தார்ணி மார்ப!—எனையாளாய்.
மாதர சான மான்மகள் மேவு—புயவேலா!
சீதமு லாவு சீர்சடை நாதர்—அருள்பாலா!
போதடர் சோலை பூமலி தோகை—மலைநாதா!

3099. மாதவர்பணி பாதா!
வாசனைமிகு நீபா!—அருளாயோ?
தாதவிழ்பொழின் மானுள்
தான்மருவிய தோளா!—கணநாதா!

---

3095. கரிமுகருட - யானைமுக விநாயகருடைய.

3096. சததளப் பதம் - நூற்றிதழ்த் தாமரையினை ஒத்த திருவடி.

3097. விதி - பிரமன். மருமம் - மார்பு.

ஆதரவுவுனை வேறுய்
ஆருளரறி யாயோ?—முருகோனே!
சீதளமிகு காரார்
சீர்சிகிமலை நாதா!—குகவேளே!

3100. காத லாகிய மாத ரால்வரு
காம நோய்தவி—ரிடுவாயே
பாத மாமலர் காண வேயருள்
பாவ நாச! நன்—முருகேசா!
மாத வோர்பணி நாத னே! குக!
வாச நீபமென்—மணிமார்பா!
போத னே! பொழில் சூழ்சி காமலைப்
பூப னே! வரம்—உதவாயோ?

3101. கானக மடந்தை காதல்கொள் கடம்ப—மணிமார்பா!
தானவர் குலங்கள் தானழிய வன்று—செயவீரா!
பானல நிறைந்த பான்மதி யணிந்த—வர்பாலா!
வானவர் பணிந்த வாழ்பதி நிறைந்த—சிகிமேரா!

3102. ஒருத்தர்துணை யேது உடன்அருளை நீசெய்—குகநாதா!
மருவுலவு நீப மலரையணி நாத!—எனையாளாய்.
பொருதசுரன் மாள புகழயிலை யேவு—செயவீரா!
தருவுலவு தோகை தருமலையின் வாச!—அருளாயோ?

3103. வருந்திய நோயினல்
மடிந்திடல் ஆகுமோ—அருள்தாராய்.
பருந்துகள் தாவவே
பரந்திடு சேனையோ—டெதிர்வேலா!
பொருந்திய தோகையாய்!
புனைந்திடு நீபமா—லிகைமார்பா!
திருந்திய சோலைசூழ்
செகண்டியின் மேரில்வாழ்—குகநாதா!

3104. மயிற்பரி நடத்திய
மலர்ப்புய! எனக்கருள்—புரிவாயே.
அயிற்கொடு எதிர்த்திடு
அவர்க்கெதிர் தொடுத்திடு—செயவீரா!
குயிற்குற வெனக்கொடி
குறத்தியை யணைத்திடு—புயநாதா!
ஒயிற்குரு பரக்குக!
உயர்ச்சிகொள் சிகிக்கிரி—முருகோனே!

3105. மருப்பொலியு நீப மாலை
வனப்புலவு மார்ப! நாளும்—அருளாயோ?
கருப்பொலியும் நோய்கள் தீரக்
கருத்திலெளி யேன்முனைக—வருவாயே.
செருப்பொலியும் ராவ ணாதி
செருக்குமறு ராம ராசை—மருகோனே!
தருப்பொலியு மாவு லாவு
தழைத்தசிகி மேரில் வாழு—முருகோனே!

3106. கொடிய தீவினை விலக நீயருள்
குமர! சேவக!—குருநாதா!
குடிலில் வாழ்குற மயிலி மேவிய
குணவி லாச! பொன்—மயிலாளா!
வடிவ தாகிய அயில னே! அருள்
மனமு லாவிய—மலர்நீபா!
முடிக ளேநிறை பொழில்கள் சூழ்கரு
முதிய தோகையின்—மலைநாதா!

3107. சூதுசெயு வோர்கள் தோசியர்கள் பாக—மணுகாதே
நீதயவ தாக நீடுவரம் யாவு—முதவாயோ?
மாதுகுற மானை மாலினொடு மேவு—புயநாதா!
போதலர்கொள் சோலை பூணுசிகி மேரில்—வருதேவே!

3108. வந்தவினை தீர மங்கலம தாக—வருவாயே.
சந்தமுலை வேடர் தங்கள்மகள் மேவு—புயநாதா!
கந்தமிகு நீப! கங்குனிற மாயன்—மருகோனே!
அந்தமிகு தோகை அண்டர்பணி மேரில்—வருதேவே!

3109. வந்த சூருடன் வம்பு தானிடு—அயிலாளா!
கந்த மேவிய கஞ்ச மாமகள்—மருகோனே!
சந்த நாவல! சந்திர வானன!—முருகோனே!
அந்த மேமிகு அண்ட ரேபணி—சிகிமேரா!

3110. வடிவேலவா! வரதா! குகா!—அருளாயோ?
குடிவாழ்மினள் குறமாதினள்—புணர்தோளா!
அடியேன்முனே யழகாகவே—வருவாயே!
முடிசேர்சிகா முதுமேரில்வாழ்—குருநாதா!

---

3107. தோசியர்கள் = குற்றம் செய்வோர்.

3111. வனம்வரு வேடுவர் மனமகிழ் நாயகி—புணர்தோளா!
மனமதி லேவரு மறுதுய ரோடிட—அருளாயோ?
சினமிகு சூருடல் தெறிபட வேயயில்—விடுசூரா!
இனமணி சேர்முடி எழிலுள தோகையின்—மலைநாதா!

3112. சானகி மணவாளனர்
தான்மகிழ் மருகேசனே!—அருளாயோ?
வானவர் பணிதாளனே!
மாமண மிகுநீபமா—லிகைமார்பா!
கானக மயிலாசையாய்!
காரண! கருணாகரா!—கிருபைதாராய்.
பானல மதியானனா!
பாவல! சிகிமேரில்வாழ்—குகநாதா!

3113. மதியணி சடையார் மனமகிழ் புதல்வா!—அருளாயோ?
விதிபர வியவா! விரைமிகு மலர்மா—லிகைமார்பா!
கதிமிகு மயிலா! கனமிகு அயிலா!—குகநாதா!
துதியுள சரண! சுபகர சிகிமா—மலையாளா!

3114. கோதுகிளி யாக் கூறுமொழி வாயள்—குறமானள்
மாதுபுணர் தோளா! வாசமிகு நீப—மலர்மார்பா!
வாதுபுரி சூரன் மாயவழி லேவு—செயவீரா!
தாதலவு சோலை தானுலவு தோகை—மலைநாதா!

3115. மடமயில் குறத்தி மருவிய புயத்த!—எனையாளாய்.
திடவசு ரருக்கு சினமொடு வயிற்கொ—டெயும்வீரா!
படவர வணிந்த பணிமுடி யரர்க்கு—வருபாலா!
தடமிகு பொழிற்கொள் தகுசிகி மலையி—னரசாளா!

3116. வனச மாமலர் வளரு மானுடன்—மயலானோர்
மனதி னுவல்கொள் மருக னே! கிருபை—புரிவாயே.
சினவ ராவணி செயச டாதரர்—அருள்பாலா!
கனக மோதிடு கனசி காமலை—முருகோனே!

3117. தாதகி சூடிய வேணியின் நாயகர்
தான்மகிழ் வாகிய—புதல்வோனே!
வாதடர் சூருட லேயிரு கூறிடு
மாறுனை வேலவ!—அருளாயோ?

கோதகல் பாடல்கள் பாடிட வேயருள்
　　கோகன காசனர்—பணிதாளா!
சீதசி காமலை மேவிய நாயக!
　　தேவர்கள் தேவ! பொன்—அயிலாளா!

3118. விரிவிழை யாடிய மலரணி சீர்புய!—முருகோனே!
கரிமுக வோருட கனதுணை நாயக!—எனையாளாய்.
தரியல ரோடெதிர் தகடிலை வேலணி—குகநாதா!
விரிபொழில் சூழ்தரு விழைசிகி மாமலை—முருகோனே!

3119. வருநோய்கள் தீர மயின்மீதி லேறி—வருவாயே.
திருமேவு மாயன் தினமாவ லான—மருகோனே!
கருமேனி யான கன்வேடர் மாது—புணர்தோளா!
தருமேவு சோலை தகுதோகை மேரில்—வருதேவே!

3120. எதிரி யானவர்கள் எளிய தாகஅயில்—விடுவாயே.
மதிகள் சூடுசடை வரத ரானஅரன்—மகவேளே! [யோ?
கதிகொள் தோகைமயிற் கருணை நாத! கிருபை—யருளா
பதியி னோர்கள்பணி பரிய தோகைமலை—முருகோனே!

3121. கனத்த தோகை மயிலா!
　　கருத்தில் ஆசை யுடனே—அருளாயோ?
அனத்தை நேரு நடையாள்
　　அரிக்கி நேரு மினையாள்—அருள்பாலா!
மனத்தின் நோயை யடுவாய்
　　வனத்தின் மாது புணர்வாய்—அமரேசா!
சினத்த சூரை யடுவாய்
　　திருச்சி காமென் மலையா!—எனையாளாய்.

3122. சகல பிணிகள் தீரவே
　　தனது மயிலில் ஏறியே—வருவாயே.
குக! குமர நாதனே!
　　குருபர! வி லாசனே!—அருளாயோ?
மகபதிமி னளையே
　　மயலொடுகு லாவியே—அணைதோளா!
பகரறிய வேதனே
　　பணியவரு தோகைமா—மலைநாதா!

---

3117. கோகன காசனர் = தாமரையைத்தன் இருக்கையாக உடைய பிரம்மா.

3120. எளியதாக = மிக விரைவில் வீழ்ந்துபட.

3122. மகபதி மினள் = இந்திரன் வளர்ப்பு மகளாகிய தேவயானை.

3123. கனத்த பூமுலையாள் கறுத்த கேசமினள்—நலமேசேர்
மனத்தி னுசையதாய் மகிழ்ச்சி வேடமினள்-புணர்தோளா!
சினத்த சூருடனே செயிக்கும் வேலவனே!—எனையாளாய்!
இனைத்து மாமணிசேர் எழில்சி காமலைமேல்—வருதேவே!

3124. அருண மேனிய! மயிலி லேறிமுன்
அழக தாகவும்—வருவாயே!
திருமி னுளொடு மருவு நாயகர்
திகிரி மாயவன்—மருகோனே!
கருணை நாயக! கிருபை வாரிதி!
கதிர்கொள் வேலவ!—முருகோனே!
தருவு லாவிய பொழில்கள் சூழ்தரு
தகுசி காமலை—வருதேவே!

3125. மண்டு போரினெடு வந்த சூரனெடு—எதிர்வேலா!
செண்டு மாமுலையாள் திங்க ளானனமின்—வனமானள்
கண்டு போலமொழி கங்குன் மேனிகுற—மயில்தோளா!
வண்டு சூழ்பொழில்கள் மண்டு தோகைமலை—முருகோனே!

3126. ஆடியமயி லேறிய துரை
ஆறிருவிழி—முருகோனே!
நாடியபடி யேயருள்புரி
நாரணருட—மருகோனே!
பாடியதமிழ் நாவல! குக!
பார்புகழ்குரு—பர!வேளே!
நீடியபொழில் சூழ்சிகிமலை
நீதசண்முக—அமரேசா!

3127. வானவர்பணி தாளனே!
மாமயின்முரு கேசனே!—எனையாளாய்.
தானவர்குல காலனே!
சானகிமண வாளனுர்—மருகேசா!
கானகமயில் தோளனே!
காரண! கரு ணைநிதி!—கிருபைதாராய்.
தேனலர்பொழில் சூழுமோர்
சீர்சிகிமலை வாசனே,!—குகநாதா!

3128. நடன மிட்டிடு மயிலில் உற்றவ!
நலமெ னக்கருள்—புரிவாயே.
மடம யிற்குற மயிலி யைப்புணர்
வடிவு பெற்றிடு—குமரேசா!

கடம தக்கன களிறு வற்புத
    கருணை யுற்றிடு—துணையாளா!
தடவரைக்குயர் கனமி குத்திடு
    தழைசி கிக்கிரி—முருகோனே!

3129. வடிவு பெற்றிடு மடம யிற்குற—மகள்தோளா!
அடிய னுக்கருள் அமர ருக்குயர்—குகநாதா!
கடிமி குத்திடு கனக டம்பணி—புய! வேளே!
முடித ழைத்திடு முதிய நற்சிகி—மலைநாதா!

3130. கனக மயமான கமல மலரான—இருதாளா!
தினக ரனைநேரு திரும யிலிமேவு—முருகோனே!
மனதில் வருநோயை மருவ விடல்ஞாய—மலைநாதா!
புனம யிலிதோளா! புனித சிகிமேவில்—வருதேவே!

3131. மதிசூடிய சடையார்
    மணியாகிய முடியார்—அருள்பாலா!
கதியாகிய மயிலா!
    கமழ்நீபமென் மலரா!—எனையாளாய்.
துதிசே ரிருசரண!
    துரை! வேலவ! கிருபையே—புரிவாயே.
நதிசூழ்தரு பொழில்சேர்
    நலமாகிய சிகிமா—மலையாளா!

3132. வஞ்சனைபுரி சூருடன்
    மண்டிட்டவரு தானையை—யடுவேலா!
வஞ்சியைநிக ராமிடை
    மங்குல்கொள்குழல் வேடமின்—அணைதோளா!
நஞ்சணியா வாசனள்
    நந்தணிகர மாயவன்—மருகோனே!
மிஞ்சியபொழில் சூழ்தரு
    விண்புவிபுகழ் தோகையின்—மலைநாதா!

3133. ஆடிய மயிலா! யான்மகி ழிடவே—வருவாயே.
பாடிய புலவா! பான்மதி வதனா!—அருளாயோ?
நாடிய படியே நாரணர் மருகா!—முருகோனே!
கூடிய பொழில்சேர் கோதறு சிகிமா—மலைநாதா!

---

3130. தினகரனை நேரு திருமயிலி - ஞாயிற்றினை ஒத்த ஒளி அமைந்த முடி.

3132. மங்குல் கொள் குழல் - மேகத்தின் கரிய நிறத்தினைத் தன்னகத்தே கொண்ட கூந்தல்.

3134. தூயமலர் நீப! சூழுமடி யார்கள்—பணிதாளா!
மாயமரு கேச! வாதுபுரி சூரன்—எதிர்வேலா!
நாயனிட மாக நாடிமயி லேறி—வருவாயே.
செயசிகி மேரா! சேவக!வி லாச!—எனையாளாய்.

3135. கோகனக மான கோலமனை மாது—மருகேசா!
மாகவன மீறு வாழ்மயிலி லேறி—வருவாயே.
நாகமதி சூடு நாதரருள் பால!—குமரேசா!
மாகமுயர் சோலை வாழுசிகி மேரில்—வருதேவே!

3136. எனதுதுயர் தீர இனிஅருள் நீசெய்—குகநாதா!
உனதுதய வாலும் உயர்கிருபை நீசெய்—அமரேசா!
தனகிரியின் மாது தருவுலவு சோலை—மகள்தோளா!
கனமுலவு தோகை கமழ்சிகியின் மேரில்—வருதேவே!

3137. சோதிகொள் கடம்ப மாலை
தோளிலே யணிந்த நாத!—எனையாளாய்.
வாதிக வுயர்ந்த சூரை
மாளிட எதிர்ந்த வேல!—அருளாயோ?
மாதினி நிறைந்த கான
மான்மகள் மகிழ்ந்த ரூப—முருகோனே!
போதணி நிறைந்த சோலை
பூமலி செகண்டி மேரில்—வருதேவே!

3138. வனசமலர் மாது மருவுபுய மாயன்—மருகோனே!
மனதிலுறு நோயை மடியவரம் நீசெய்—குகநாதா!
தனகிரியின் மாது தருவுலவு வேடர்—மகள்தோளா!
சினவசுர கால! சிகிமலையின் வாச!—அருளாயோ?

3139. வஞ்ச னாகிய சூரை
மண்டு போரினில் மீறு—அயிலாளா!
நஞ்ச மாமிட றீசன்
நங்கை மாதுமை யாள்தன்—மகவேளே!
தஞ்சம் வேறிலை நாத!
சந்த நாவல! கோடி—அருள்தாராய்.
கஞ்ச வாவிகள் சூழு
கங்கு ரேய்சிகி மேரில்—வருதேவே!

---

3137. வாதிகவுயர்ந்த சூர் - வாதிடும் தன்மையும் பகைமைத் தன்மையும் உயர்ந்த சூரனான சூரபதுமன்.

3140. கருணைபொழி மேகமே! கமழுமலர் நீபனே!—அருளாயோ?
திருவமரு மாயனார் திகிரியணி மாயனார்!—மருகேசா!
ஒருதுணையி லாமலே உனதடிமை யாகினேன்-எனையாளாய்.
தருவுலவு சோலைசூழ் தழைசிகியின் மேரில்வாழ்-குகநாதா!

3141. தலையணிந்திடு கடவுள் சங்கரர்—அருள்பாலா!
சிலையி லங்கிய திகழு மின்னுதல்—மடமானாள்
மலையில் வந்திடு மறவர் பைங்கொடி—புணர்தோளா!
நிலைசிகண்டியின் நிருப! இன்பொடு—அருளாயோ?

3142. வனம டந்தையை மருவு மிங்கித—முருகோனே!
கனமு மிஞ்சிய கயிலை யங்கிரி—யவர்பாலா!
மனம கிழ்ந்தென்முன் மயிலி லன்போடு—வருவாயே.
தினக ரன்றவழ் சிகியெ னுங்கிரி—வாழ்தேவே!

3143. நடனமிடு மயிலா! நளினமல ரிணையா—கியதாளா!
மடமயிலி குறமான் மருவுபுய முருகா!—எனையாளாய்.
கடகரியின் முகனார் கருணையுள துணையாய்!—அமரேசா!
தடமுடிகொள் பொழில்சேர் தகுசிகியின் மலைமேல்—
[வருதேவே.

3144. நிசிசரர் பொடிபட நெடியபொ னயில்விடு—பெலவீரா!
பசியவின் னுலவிய பயனுள மொழிமயில்—புணர்தோளா!
சசியணி சடைமுடி தழைகயி லையின்மலை—யவர்பாலா!
கசியவரு விகள்மிகு கமழ்சிகி மலைவரு—குகநாதா!

3145. கனக கிரிவரு பரமர் அருள்மக!
கருணை பொழிகுரு—பரநாதா!
பனக சனரமை முகிலி னிறமிகு
பருதி விறல்மகிழ்—மருகேசா!
அனமெ னடைமயில் குறவர் மகளொடு
அதிக மயலொடு—புணர்தோளா!
வனச மலர்கள் நிதமு முறைசிகி
மலையில் வருகுக!—அருளாயோ?

---

3141. நிருப - அரசனே.

3144. பெலவீரா - வன்மையுள்ள வீரனே.

3145. பனகசனர் - பாம்பணைப் பயில்வோர்.

3146. வனிதை மார்களுட மயலி னேருதலை—விலகாயோ?
பனியின் மாமதிகொள் பவள வேணியருள்—புதல்வோனே!
இனிய தானதமிழ் எளியன் மீதுதய—வொடுதாராய்.
கனிகள் தாவுபொழில் கமழ்சி காமலையின்—முருகோனே!

3147. காரண!கரு ணாகரா!
காதலிகுற மாதினள்—அணைதோளா!
நாரணர்துள மலையார்
நாகணை துயில் மாயனர்—மருகேசா!
பூரணமதி வேணியார்
பூமகளுமை யாள்சொல்பா—லக!வேளே!
வாரணமுகர் சோதரா!
வானவர்தொழு தோகைமா—மலையோனே!

3148. வாதுபுரி சூரன் மாயஅயி லேவு—செயவீரா!
சூதுமுலை மீறு தோகைபுன மாது—புணர்தோளா!
சேதுலவு நீபத் தேமலர்கள் சூடு—புயவேலா!
போதுலவு சோலை பூமலைசி காமின்—மலைநாதா!

3149. தாதவிழு நீப மாலை
தானணி மார்ப! கோடி—அருள்தாராய்.
மாதரசி யான தேவி
மானின்மகள் மேவு தோள!—எனையாளாய்.
சீதமதி சூடு வேணி
தேவர்பணி நாத! தேவர்—அருள்பாலா!
போதலரு சோலை சூழும்
பூமலிசி காமென் மேரில்—வருதேவே!

3150. மாத வர்பணி தாளா!
வாச மென்மலர் நீபா!—அருளாயோ?
ஆத ரவுட னளாய்
ஆடி யமயி லாளா!—அமரேசா!
போத ணிகுழன் மானள்
பூம கள்புணர் தோளா!—மருகோனே!
தாத விழ்பொழி லேசேர்
சாரல் கொள்சிகி மேரா!—எனையாளாய்.

---

3146. 'எளியன்மீது தயவொடு இனியதான தமிழ் தாராய்' என இயைக்க.

3151. சதுமறை யவர்பணி சரவண பவ!குக—குருநாதா!
மதுநிறை கமலமென் மலர்மகள் புணர்பவர்—மருகேசா!
கதுமென நடைபயில் கனமயின் மிசைவரு—குமரேசா!
விதுதவழ் பொழிலுயர் விரையுள சிகிமலை—முருகோனே!

3152. மனதி லுற்ற நோயை
மடிய வெற்றி யேசெய்—குகநாதா!
அனந டைப்பெ ணுள்நல்
அழகு பெற்ற வேடர்—மகள்தோளா!
சினமி குத்த சூரன்
தெறிப டப்பொன் வேலை—விடுசூரா!
கனம துற்ற சோலை
கமழ்சி கிப்பொன் மேரில்—வருதேவே!

3153. தாதுலவு நீபத் தார்புனையு மார்ப!—எனையாளாய்!
மாதுபுன வேடர் மனைமகளை மேவு—புயநாதா!
சூதுபுரி வோர்கள் சூரன்முத லோர்க—ளெதிர்வேலா!
மூதுமறை தேடு மோது பொழில் சூழுஞ்—சிகிமேரா!

3154. அடல்புரி சூரன் அலறிட வேலை—எயும்வீரா!
கடல்துயின் மாயன் கனிவொடு வாசை—மருகோனே!
மடமயில் வேடர் மகள்மய லான—புயநாதா!
தடமிகு சோலை தழுவிய தோகை—மலைநாதா!

3155. வேதர் முதலினர் மேலோ ரொடுபணி—புரிதாளா!
நாத! சரவண நாமா! உயர்செநெல்—விளைகேமா!
காதார் விழியுமை காறி யபிட—றருள்பாலா!
வாதா டியபொழில் வாகாய்! நிறைசிகி—மலைநாதா!

3156. கானக மடமானுள் காதல்கொள்—புயநாதா!
வானவர் பணிதாளா! மாமலர்—புனைமார்பா!
தானவர் குலகாலா! தாமரை—நிகர்தாளா!
தேனலர் பொழில் காவார் சீர்சிகி—மலைநாதா!

3157. கோதுகிளி மொழியாள்
கூர்கணையின் விழியாள்—குறமானுள்
மாதுபுணர் புயவா!
வாசமல ரணிசீர்—புயநாதா!
சேதுவிதழ் உமையாள்
தேவிதரு புதல்வா!—அமரேசா!
ஓதுதமி ழருள்வாய்
ஒகைறினை யொயிலா!—சிகிமேரா!

3158. கோதறு முனிவர் கூடிய புலவர்—பணிதாளா!
மாதவன் மருக! வாசனை மலர்கள்—புனைமார்பா!
காதலி குறவர் கானக மயிலி—மயலாளா!
சீதளம் செறியும் சிகிமலை குகனே!—அருளாயோ?

3159. வனச மண்டப வனிதை பங்கினர்—மருகேசா!
அனாக டம்பயில் அழகு சுந்தரி—தருபாலா!
மனம கிழ்ந்திட மயிலில் வந்தருள்—புரிவாயே.
கனக மிஞ்சிய கமழ்செ கண்டியின்—மலைநாதா!

3160. கஞ்ச மலரவிழ் கந்து ளிறகுழன்—மடமானுள்
மஞ்ச மிசையணை மங்கு ளிறவிறல்—மருகோனே!
தஞ்ச மிலையருள் தங்க மலைநிகர்—சிகிமேரா!
மிஞ்ச மயில்வரு மின்கு லவுமுடி—யமரேசா!

3161. ஆடிய மயிலா! வானன மதியா!—அருளாயோ?
நாடிய படியே நான்மகி ழிடவே—வருதேவே!
தேடிய வடியார் சீர்பட வருவாய்—அமரேசா!
கூடிய பொழில்சேர் கோலசி காமென்—மலைநாதா!

3162. மதியணி செஞ்சடை
மணிமிடறு தந்தருள்—புதல்வோனே!
கதியுள பைஞ்சிறை
கமழ்சிகி வந்தருள்—புரிவாயே.
சுதியுள வண்டுகள்
சுழல்பொழின் மங்கையை—அணைதோளா!
நதிமிகு குன்றையின்
நலவரு பைந்தமிழ்—அருள்நாதா!

3163. தாதவிழ் நீப மாலை
தானணி மார்ப! கோடி—அருளாயோ?
வாதடர் சூர னுவி
மாறிட வேலை யேவு—செயவீரா!
சூதடர் மாத ராசை
தூளிட வேய்யி னுளில்—அருளாயோ?
போதலர் சோலை சூழும்
பூமலி தோகைமேரில்—வருவாயே.

3164. சரவண பவனே! சண்முக குமர!—அருளாயோ?
அரனருள் புதல்வா! அடியன்முன் வருவாய்—அமரேசா!
திரமுள வசுரோன் தெற்றிய வயிலே—வியசூரா!
விரசன மயிலா! விரையுபர் சிகிமா—மலைநாதா!

3165. பாதிமதி சூடிய வேணியர னருள்
பாலகும ரேச!பொன்—மயிலாளா!
ஆதிபர மேசுரி வாலைகௌ மாரியின்
ஆசைமிக வாகிய—புதல்வோனே!
போதிலுயர் நீபம தானமலர் சூடிய
பூரணதிரு பாநிதி!—அருளாயோ?
மாதிலுயர் வேடுவர் மாதுபுணர் நாயக!
வாசமிகு தோகையின்—மலைநாதா!

3166. வடிவுடைய குறவோர்
மகளையணை புயனே!—அருளாயோ?
கடினம்மிகு வசுரோன்
கனபடைக ளுடனே—அடுவாயே.
படியின்மிசை யடியேன்
பழவினையை விலகாய்—அமரேசா!
முடிநிரைகொள் பொழில்சேர்
முதியசிகி மலையா!—எனையாளாய்.

3167. வனத்தி லுறுவேடர் மகிழ்ச்சி யுறுமாது—புணர்தோளா!
சினத்தி லுயர்சூரன் திறத்த படைமாள—அடுசூரா!
மனத்து யரமோட மயிற்பரியி லேறி—வருவாயே.
இனத்து மணிநீடு மெழிற்சி கியின்மேரில்—வருதேவே!

3168. நெஞ்சகம் வருநோயை நின்கிருபை யினிலோட—அரு
[ளாயோ?
கஞ்சனை யடுமாயன் கண்டினி வினிதான—மருகேசா!
வஞ்சக மடவார்கள் மண்டிய மயலோட—அருளாயோ?
மஞ்சது விளையாடு மண்டுபொழி லதுசூழுஞ்—சிகிமேரா!

3169. மாதவர் முனிவர் வானவர் முதலோர்—பணிதாளா!
தாதவிழ் மலர்கள் தானிரை பொழின்மின்—மணவாளா!
ஆதர வுகள்செய் ஆடிய மயிலாய்!—எனையாளாய்.
வாதடர் பொழில்கள் வாய்சிகி மலையில்—வருதேவே!

---

3164. திரமுள - திறமுள,

3170. கொன்றை சூடிய செஞ்ச டாதரர்
கும்ப மாமுலை—யுமைபாலா!
வென்ற வீரர் கலங்கி யோடிய
விந்து போயிட—அசுரோன்மேல்
சென்று வேல்விடு கந்த நாயக!
சிந்து ரானனர்—துணையாளா!
மன்ற னீடிய குன்றை யாதிப!
வந்து வேணது—தருவாயே.

3171. மடவாருட மயல்தீரிட—அருளாயோ?
கடவாரணர் கனமாகிய—துணையாளா!
படராவணி பரமேசுரர்—அருள்பாலா!
தடமேவிய தருதோகையின்—மலைநாதா!

3172. மயிலி லேறி யடியேன்
மகிழ வாசை யுடன்நீ—வருவாயே.
குயிலி வேடர் மகளாள்
குறமி னாசை மிகுசீர்—மணவாளா!
அயிலை மீறு வசுரோன்
அலற யேவு குகனே!—அருளாயோ?
ஒயிலி லுலாவு முருகா!
உயரு தோகை மலைசேர்—அமரேசா!

3173. கூரிய வேலா! கோதறு நாத!—அருளாயோ?
தாரணி மார்பா! தாமரை யாளார்—பணிநாதா!
வாரணி முலையாள் மாதுமை புதல்வா!—மயிலாளா!
சீரிய காவார் சீர்சிகி மலைமேல்—வருதேவே!

3174. கலசமுலை மாதர் கபடமயல் தீர—அருளாயோ?
வலவையுள சூரன் மடியவழி லேவு—செயவீரா!
குலமறைகள் தேடு குருபரவி லாச!—முருகோனே!
அலருலவு சோலை அழகுதிகழ் தோகை—மலைநாதா!

3175. வனசமுலை மாதர் மருவுமய றீர—அருளாயோ?
மனதினுறு நோயை மடியவனு பூதி—புரிவாயே.
சினவரவு சூடு திகழ்சடையி னதர்—அருள்பாலா!
கனககிரி நேரு கமழ்சிகியின் மேரில்—வருதேவே!

3176. சந்தத மிகுந்த சங்கரி மகிழ்ந்த—புதல்வோனே!
பைந்தமி ழுகந்த பங்கசமி லங்கு—இருதாளா!
வந்தருள்செய் கந்த! வஞ்சசுரரை வென்ற—அயிலாளா!
கொந்தலர் நிறைந்த குன்றைமலை வந்த—முருகோனே!

3177. சதுமறை பரவுஞ் சரவண குகா! முன்—அருளாயோ?
பதுமமென் மலரின் பதுமையள் மருகா!—குகநாதா!
கதுமென நடையார் கனமயில் மிசையே—வருதேவே!
விதுதவழ் முடிசேர் விரையுள சிகிமா—மலைநாதா!

3178. கலக மயிலேறு கருணைபொழி நாத!—அருளாயோ?
வலுமை யுளசூரன் மடியவயி லேவு—செயவீரா!
பலனருள் வைதேவர் பணிபுரிசெய் நாத!—முருகோனே!
கலகநிறை தோகை கனகமலை வாச!—உமைபாலா!

3179. மயிலேறிய பெருமான்! வடிவாகிய துரையே!-அருளாயோ?
குயிலாகிய மொழியாள் குறநாயகி கணவா!—எனையாளாய்.
ஒயிலாகிய குமரா! உமைநாயகி புதல்வா!—அமரேசா!
வெயிலார்பொழில் நலமாய் விரைசேர்சிகி மலைமேல்—வரு
[தேவே!

3180. மரையைநிகர் சரண!
மயிலில்வரு முருக!—எனையாளாய்.
துரைமுருக! குமரா!
சுகமினவள் மயிலாள்—புணர்தோளா!
விரையுலவு மலரான்
மிகுவசுரர் முதலோர்—பணிதாளா!
தரைபுகழு சிகியாந்
தகுமலையின் அரசே!—அருளாயோ?

3181. கடகரிதுணை கமழ்மலரணி—புயநாதா!
அடமிகுகன அசுரனையடு—குகநாதா!
நடமிடுமயின் நலமிகுபரி—முருகோனே!
வடவரைநிகர் மயின்மலைவரு—குமரேசா!

3182. தாதவிழு நீப மாலை
தானணியு மார்ப! தேவர்—பணிபாதா!
மாதரசி யான தேவி
மாமயிலி வேட மாது—புணர்தோளா!

3176. வஞ்சசுரர் - வஞ்சனையொடு கூடிய அசுரர்.

3178. கலகமயில் - கலகமிட்ட அசுரனாகிய மயில்.

சீதமதி சூடு வேணி
தேவமக! தேவ நாதர்—அருள்பாலா!
போதலர்கொள் சோலை சூழும்
பூமலைசி காமென் மேரு—வளர்தேவே!

3183. மதுரி தமொழி மடவ ரல்குற—மகள்தோளா!
சதுர்வி தமறை தயவொ டுதுதி—புரிபாதா!
கதமெ னவொரு கனந டையமயில்—மயில்வாகா!
விதுத வழ்பொழின் மிகுசி கிமலை—வருதேவே!

3184. கறைமி டற்றினர் கமழ்ச டைச்சிவன்—அருள்பாலா!
சிறைம யிற்பரி தினந டத்திய—முருகோனே!
குறைவி லைத்திடு கொடுத யித்தியர்—செயவீரா!
மறைமு ழக்கிய மணிச்சி கிக்கிரி—வருதேவே!

3185. தந்திமுக நாயகர் தன் றுணைவ! தேவர்—பணிபாதா!
நந்திதனி லேறு நம்பரருள் பால!—எனையாளாய்
அந்திமதி சூடும் அம்பிகையின் மாது—அருள்பால!
மந்திபயில் சோலை வண்சிகி மேரில்—வருதேவே!

3186. மலர்நி றைத்திடு மலரி லுற்றிடு—அயன்வானோர்
கடல்து யிற்றிடு கண்ணன் அன்பொடு—பணிநாதா!
அடல்வ ளைத்திடு அசுரர் தோசியர்—குலகாலா!
இடமி குத்திடு எழில்சி கிக்கிரி—முருகோனே!

3187. மாதுநவ நற்றின் மாதுயர் குறப்பெண்—மணவாளா!
சூதுபுரி யுற்ற சூரனெதி ரிட்ட—அயிலாளா!
கோதகல் செருச்செய் கோலமயி லுற்ற—முருகோனே!
சேதுள கடப்ப சீர்சிகி மலைக்கு—அரசாளா!

3188. வடிவுடைய குறத்தி மருவுஇரு புயத்த!—முருகோனே!
அடியவருட் மனத்தி லனுதினமு மிருக்கும்—அமரேசா!
கடிகொள்நல கடப்ப கனமயிலில்வரு சிறப்பு—மிகுநாதா!
முடியிலகிய சிகிப்பொன் முதியமலையி லுற்ற—குகநாதா!

3189. நடனமிடு மயிலா! நலமுதவி புரிவாய்—அமரேசா!
கடமிலகு களிறூர் கருணையுள துணையா!—அருளாயோ?
திடமுலவு மசுரோன் தெறிபடமு னயிலே—வியசூரா!
வடவரையை நிகராய் வளர்சிகியின் மலைமேல்—வருதேவே!

3190. நடமிடு மயிலா! நலமுதவி செய்வாய்—அமரேசா!
கடமத களிறூர் கருணைகொள் துணைவா!—எனையாளாய்.
படவர வணிவோர் பதுமைதென் னுமையாள்-அருள்பாலா!
தடமிகு முடிசேர் தழைசிக்கி மலைமேல்—வருதேவே!

3191. மாதரசி யான தேவி
வானவரர் போற்று மானை—அணைதோளா!
தாதவிழு நீப மான
தாமமணி மார்ப! வேணை—தருளாயோ?
மோதமர்செய் சூர னவி
மோதுபடை யோடு வோட—எயும்வேலா!
சீதமதி தாவு சோலை
சேர்சிக்கியின் மேரின் வாச!—முருகோனே!

3192 ஆடியமயில் வாசா! யான்மகிழிட நீயே—அருளாயோ?
பாடியதமிழ் வாயா! பார்புகழ்குரு நாதா!—அருளாயோ?
மோடிசெயசு ரோன்மேல் மூடியபடை யாலே-அடுவீரா!
தேடியவடி யார்பால் சீர்புரிசிக்கி மேரா!—குகநாதா!

3193. காவினில் வாழ்வுறு காதலி மேவிய—இருதோளா!
தாவிய பூமயில் தானினி யேறிமுன்—வருவாயே.
கூவிய சேவல! கோகன கா! முனம்—அருளாயோ?
பூவிய லாய்வளர் பூமலி சோலைகொள்—சிக்கிமேரா!

3194. மருமலர் நீப! மலரணி மார்ப!—எனையாளாய்.
அருமறை தேடும் அழகிய பாத!—அருளாயோ?
திருமகள் மேவு செயவிற லாசை—மருகோனே!
தருநிறை சோலை தழைசிக்கி மேரில்—வருதேவே!

3195. தருப்பொலி கான மாது
தனைப்புணர் ஞான நாத!—அருளாயோ?
மருக்கமழ் நீப மாலை
மணிப்புய மீது சூடு—செகநாதா!
விருப்போடு தோகை மீது
மிகக்கன மாக வேமுன்—வருவாயே.
திருப்பொழில் சூழ நீடு
சிக்கிக்கிரி வாச! கோடி—அருள்தாராய்.

3196. மதிநுதல் வேடர் மகள்புணர் தோள!—அருளாயோ?
விதியிமை யோர்கள் மிகுகனி வான—இருதாளா!
அதிபெல சூரன் அலறிட வேலை—யெயும்நாதா!
கதிபெற மேலாம் கமழ்சிகி மேரில்—வருதேவே!

3197. அடுசூருடன் அடலேபுரி—செயவீரா!
கடுசேர்மிடர் கமழ்வேணியர்—அருள்பாலா!
வடுநேர்விழி மடமான்மகள்—புணர்தோளா!
உடுதாவிய உயர்தோகையின்—மலைநாதா!

3198. மடலேநிறை மலர்வான்மயில்—மருகோனே!
அடலேபுரி யசுரோனுடல்—அடுவேலா!
விடமாமிடர் விதிமால்பணி—யவர்பாலா!
திடமாமுடி திகழ்தோகையின்—மலைநாதா!

3199. கூரிய வேலணி கோலவு லாசநன்—முருகோனே!
வாரிரு பூமுலை மான்மகள் மேவிய—புயலோலா!
போரிகல் சூருடல் போகிட வேஅயில்—விடுசூரா!
சீரிய சோலைகொள் சீர்சிகி மாமலை—முருகோனே!

3200. மாதவர் தேடு சரண!
வாசனை நீப மலர்மா—லிகைமார்பா!
சீதர மாயன் மருகா!
சீரணி தோகை மயிலா!—அருளாயோ?
காதலி வேடர் மகள்சேர்
காரண! நாத! முருகா!—எனையாளாய்.
தாதவிழ் சோலை நிறைசீர்
தான்மலி தோகை மலையா!—அருளாயோ?

3201. வனசமலர் மாது மருவுபுய நாத!—மருகோனே!
சினவசுரன் மீது திருவயிலை யேவு—செய்வீரா!
மனதில்வரு நோயை மடியவர மேசெய்—அமரேசா!
கனமுலவு சோலை கமழ்சிகியின் மேரில்—வருதேவே!

3202. கூடியபடை யோடிடர்புரி கோவவுணனை—யடுசூரா!
நாடியபடி நீயருள்புரி நாரணருட—மருகேசா!
பாடியபுல வர்கிருபைபுரி பார்புகழ்குக!—குருநாதா!
ஆடியமயி லா!சிகிமலை யா!வரமருள்—முருகோனே!

---

3197. மிடறு என்னும் சொல் மிடர் என நின்றது.

3198. 'விதிமால் பணி விடமாம் மிடறவர் பாலா' என மூன்றும் அடியை இயைக்க.

3203. ஒவியமிக ராகியவடி வோர்குறமயில்—அணைதோளா!
பூவியன்மயி லாகியயுமை பூவைமினருள்—குகநாதா!
ஆவியை நிறை வாகிடவருள் ஆரணமுடி—அமரேசா!
மேவியபொழில் சூழ்சிகிமலை மேல்வருகுரு—பர!வேளே!

3204. கனகமலை நேரு கனசிகியின் மேரில்—வருதேவே!
வனசமலர் மாது மருவுபுய நாதன்—மருகோனே!
தனகிரியின் மாது தருவுலவு கான—மயில்தோளா!
சினவரவு சூடு சிவனருளு பால!—அருளாயோ?

3205. தாதவிழு நீப மாலை
தானணியு மார்ப! கோடி—அருளாயோ?
பாதகம லேச ரான
பான்மதி யுலாவு வேணி—யருள்பாலா!
மோதசுரர் நாச மாக
மூடுபடை யோடு வேலை—எயும்வீரா!
வேதமறி யாத தோகை
மீதுவரு நாத! வேண—தருளாயோ?

3206. வடிவேலவா! மயிலேறியே—வருவாயே.
குடிசேவளர் குறமாதுதான்—அணைதோளா!
படியேநிதம் பணிநாயகா!—எனையாளாய்.
அடியேன்முனம் அருளாய்சிகா—மலைநாதா!

3207. தாச னையர் தாழ்வி லாமலே—அருளாயோ?
ஈச னையா! நீயெ னைசைபோல்—அருளாயோ?
ஈச னர்மின ளேசொல் பாலகா!—மயிலாளா!
வாச னீபனே! வானர் சேர்சிகா—மலைநாதா!

3208. மாதரசி வேட மாது
மாலினுடன் மேவு நாத!—முருகோனே!
தாதவிழு நீப மாலை
தானணியும் மார்ப! கோடி—அருளாயோ?
மாதயவ தாக நீநின்
மாமயிலில் ஏறி யாசை—யுடன்வாராய்.
சீதமதி தாவு சோலை
சேர்சிகியின் மேரில் வாழும்—முருகோனே!

---

3207. 'அடியனாகிய நான் அயர்ந்து தாழ்ந்து போகாவண்ணம் அருள்புரியாய்' என்பது முதலடியின் கருத்து. ஈசனையா = தலைவனாகிய ஐயனே.

3209. சந்திர வேணியர் அன்புட னேயருள்
சங்கர னர்அருள்—புதல்வோனே!
இந்திர னர்முதல் அன்பர்கள் யாவரும்
இன்புட னேபணி—புரிபாதா!
கொந்தினி தான கடம்பணி மாயுய!
குங்கும நேய!—குகவாராய்.
வந்தினி தான வரந்தரு வாய்குக!
வண்சிகி மாமலை—முருகோனே!

3210. செம்பதுமை மேவு மார்பர்
செங்கணெடு மாலி னர்தம்—மருகோனே!
நம்பருமை வாலை தேவி
நண்பர் கயிலாச வாசர்—அருள்பாலா!
இம்பருல கோர்கள் வாழ
இன்கருணை யாழி போல—வருவோனே.
கொம்பர்மர மீதி லாடு
குன்றைமலை மீதில் வாழும்—முருகோனே!

3211. கான நாயகி காத லாகிய—முருகோனே!
மோன ஞானியர் மோக மாகிய—இருதாளா!
ஈன மாவுடல் ஈர வேயயில்—விடுதேவே!
வான மேவிய மாசி காமலை—முருகோனே!

3212. சங்க பாணிம கிழ்ந்து வானவர்
தங்க ளோடுமுன்—பணிபாதா!
வங்க மாய்வரு பங்க நோய்களை
மங்க வேல்விடு—குருநாதா!
திங்கள் சூடிய சங்க ரேசுரர்
செங்க ணயகர்—அருள்பாலா!
எங்க ணயக! குன்றை மாமலை
இன்கு கா!கிருபை—புரிவாயே.

3213. ஆடிய மயிலா! ஆவல்கொள் வரமே—தருவாயே.
பாடிய புலவா! பான்மதி வதன!—அருளாயோ?
மோடியி னசுரோன் மூடிய படையோ—டடுவேலா!
நீடிய பொழில்சேர் நீள்முடி மிகுதோ—கையின்மோா!

---

3211. ஈர - பிளக்க.

3212. சங்க பாணி - சங்கினைக் கையில் ஏந்திய திருமால்.

3214. வருவாய்! வருவாய்! மயின்மீ தினிலே
தருவாய் தருவாய் தமிழ்யா வையுமே
கருவாய் கருவாய் கலகாத ருள்வாய்
மருவாய் மருவாய் வளர்தோ கையனே!

3215. வாதுபுரி சூரன் மாயவயில் ஏவு—செயவீரா!
கோதுகிளி யான கோமகளி னாசை—மகிவேளே!
மாதுகுற மானை மாலினொடு மேவு—புயநாதா!
மோதுபொழில் சூழும் மோனசிகி யான—மலைநாதா!

3216. அடமேபுரி அசுரோனுடல்—அடுவீரா!
கடமாமுகர் கனமாகிய—துணையாளா!
படராவணி பரமேசுரர்—அருள்பாலா!
தடமாகிய தகுதோகையின்—மலைநாதா!

3217. தாதவிழ நீபா! தாமரையை நேரா—கியநாதா!
கோதகலும் வேலா! கூறறிய வேதா—பணிபாதா!
மூதசுரர் காலா! மோதுபொழின் மானாள்—மயலாளா!
மாதயவி னாலே மாவருள்செய் வாய்தோ—கையின்மேரா!

3218. சீரார்கன தோளா!மலர்—புனைமார்பா!
வாரார்தன மானார்குற—மயில்தோளா!
நேரார்புரம் நீறாய்விடு—பவர்பாலா!
காரார்பொழில் கால்மீறிய—சிகிமேரா!

3219. மனனோய்தவிர் மகிபா!மயின்—முருகோனே!
அனமார்நடை அனைமாதுமை—அருள்பாலா!
சினமாவுடல் திறமாவடல்—புரிநாதா!
புனமேநிறை புகழ்தோகையின்—மலைநாதா!

3220. கலாபமயில் வீரா! கடாசலமென் மானாள்—புணர்தோளா!
உலாச!முரு கேசா! உமாபதிதன் பாலா!—கிருபைதாராய்.
விலாச!வரு னாதா! விகாதசுரர் காலா!—முருகோனே!
குலாவுபொழில் சூழ்சீர் குலாவுசிகி மேரா!—அமரேசா!

---

3214. கலகாதருள்வாய் = கலங்காதிருக்க அருள்புரிவாய்.

3217. கூறறியா = கூற அறியா; (பிரணவத்தின் பொருளைச்) சொல்ல அறியாத.

3220. விகாதசுரர் = கொடிய அரக்கர்.

3221. ஆடியமயில் வாகனு! ஆதரவினி நீசெய்வாய்—அமரேசா!
பாடியபுல வாகுகா! பான்மதியணி வேணியர்-அருள்பாலா!
நாடியபடி நீசெய்வாய் நாரணர்மரு கேசனே!—குகநாதா!
கூடியபொழில் சேருமோர் கோநறுசிகி மேரில்வாழ்—முரு
[கோனே!

3222. வஞ்சி யாள்குற மங்கை மேவிய—புயநாதா!
அஞ்சி யேவரு அரக்க ரானவர்—அடுசூரா!
நேஞ்சி னேய்தவிர் நின்கிரு பாகடல்—அருளாயோ?
மஞ்சி சூழ்தரு மண்டு சோலைகொள்—சிகிமேரா!

3223. கனக தண்டை கலக லெனவே—வருவாயே.
அனந டஞ்செய் அழகு வஞ்சி—உமைபாலா!
வனச மங்கை மருவு மன்பர்—மருகேசா!
புனமி குந்த புதிய குன்றை—மலைநாதா!

3224. சரசிகுற மாது தழுவுபுய லோல!—முருகோனே!
உரமுலவு சூர னுடன்அமர்செய் கூரின்—அயிலாளா!
அரவுபுனை வேணி யரனருள்செய் பால!—எனையாளாய்.
பரவடியர் நாத! பரமசிவ! தோகை—மலைவேளே!

3225. வானவர்பணி தாளனே!
மாமணிமலர் நீபனே!—அருளாயோ.
கானகமகள் நாதனே!
காசினிபுகழ் தேவனே!—எனையாளாய்.
பானலமதி சூடுசீர்
பார்வதிமயி லுதனர்—அருள்பாலா!
தேனலர்நிறை சோலைசூழ்
சீர்சிகிமலை மேவுநா—யக!வேளே!

3226. மயிலேறி யடியேன்முன் வருவாய்தென்—முருகா!
குயிலான மொழியார்கள் குணமூடல்—விடுவாய்.
ஒயிலாக வடியேன்முன் உடனுகை—வருவாய்.
செயிநீடு வயல்சூழு திகழ்தோகை—மலையா!

---

3224. பரமசிவ - உயர்ந்த சிவபெருமான் ஆயவனே! 'சங்கரனே சண்முகன்' என்னும் கருத்து வலியுறுத்தப்படுகிறது.

3226. தென் - இனிய. குணமூடல் - குணமாகிய ஊடலினை. விடுவாய் - விடுவிப்பாய், நீக்குவாய்.

3227. ஏதுதுயர் ஏதுபணி
ஏதுவெதி ராளியிவை—அடுவாயோ?
மாதுமட வார்மயலை
மாளமயில் ஏறிநலம்—அருள்வாயோ?
தீதுவனு காதகொரு
சீரடியர் வாழ்கவரம்—அருளாயோ?
மூதுசிகி மாமலையி!
மோகசுர சா! சமர—வடிவேலா!

3228. வனசமலர் ஆசனர்
மறைபயிலும் வாயினர்—குருநாதா!
உனதடியை நாயினன்
உறுதியென வேகினை—குவனுளாய்.
மனதிலுறு நோயினை
மடியவர மேயருள்—புரிவாயே.
கனகமலை நேர்புரி
கனசிகியின் மாமலை—வருதேவே!

3229. ஆதரவு புரிவாய் ஆறுமுக வடிவே!—எனையாளாய்.
சீதமதி யணிவோர் தேவர்பணி முதலோர்—அருள்பாலா!
காதலுட னடியேன் காணவென்முன் வருவா—யமரேசா!
மோதலர்கொள் பொழில்சூழ் பூமருவு சிகிமா—மலைநாதா!

3230. கனத்ததன வேட மாது
கருத்திலுறு வாசை தீர—வணைதோளா!
மனத்திலுறு நோய்கள் தீர
மயிற்பரியில் ஏறி நீமுன்—வருவாயே.
சினத்துவரு சூரன் மார்பு
தெறிக்கவயி லேவு வேல!—எனையாளாய்.
இனத்துமணி மேவி கோடு
இருக்குமணி யான தோகை—மலைநாதா!

3231. பாவி யாகிய பேர்கள் பால்வரு
பார மானது—விலகாயோ?
தேவி யாகிய மாது மாபதி
தேவ னுயகர்—அருள்பாலா!

---

3227. மயலைமாள = மயலானது மாண்டொழியு மாறு.

3229. முதலோர் = முதன்மையாகிய சிவபெருமான்.

கோவி யாகிய சூர னுருடல்
கூறு தானிடு—அயிலாளா!
தாவி யாகிய சோலை சூழ்தரு
சாரல் சேர்சிகி—மலைநாதா!

3232. நடமாடிய நலமாகிய—மயிலாளா!
அடமாகிய அசுரோனுடல்—அடுவேலா!
கடவாரணர் கருணைநிதி—துணையாளா!
வடமேரிணை மயின்மாமலை—முருகோனே!

3233. சரவண பவனே! தனமினி யருள்வாய்—அமரேசா!
அரவணி சடையார் அருளிய புதல்வா!—எனையாளாய்.
விரவுடன் மயில்மேல் வெளிப்பட அடியேன்—இடம்வாராய்.
கரதல கமலா! கமழ்சிசி மலைமேல்—வருதேவே!

3234. கான நாயகி காத லாகிய—மணவாளா!
தான வோர்குலஞ் சாக வேயடு—அயிலாளா!
ஞான மாதவர் நாளு மேபணி—யிருதாளா!
வான ளாவிய மாசி காமலை—முருகோனே!

3235. மடமயி லான தேவி
மணமலி கான மாது—புணர்தோளா!
அடம்விளை சூரன் ஆவி
அகலிட வேலை யேவு—செயவீரா!
கடகரி நாதர் தேடு
கருணைகொ ளாசை யான—துணையாளா!
தடமிகு சோலை சூழு
தழைசிகி மேரில் வாச!—எனையாளாய்.

3236. அடம்புரி சூரன் அழிந்திட வேலை—எயும்நாதா!
கடம்பணி மார்ப! கனிந்தருள் வேண—தருளாயோ?
படம்புரை நாகம் பணிந்திடு நாதர்—அருள்பாலா!
தடங்கொளுஞ் சோலை தழைந்திடு தோகை—மலைநாதா!

3237. வனசமலர் மாது மருவுகும ரேச!—அருளாயோ?
தனகிரியின் மாது தகுகுறமி னுளை—அணைதோளா!
சினவசுர னுவி தெறிபடப்பொன் வேலை—எயுநாதா!
கனககிரி யான கமழ்சிகியின் மேரில்—வருதேவே!

---

3233. விரவுடன் - விரைவுடன். கரதல கமலா - கமலமாகிய கரதலங்களை உடையவனே, தாமரையாகிய கைகளைப் பெற்றவனே.

3238. தாதுலவு நீப மான
தார்புனையு மார்ப! கோடி—அருளாயோ?
வாதுலவு சூர னவி
மாயவயி லேவு சூர!—கிருபையாளா!
மாதுகுற மாது ஆசை
மாலையணி தோள! தோகை—மயிலர்ளா!
மோதுபொழில் சூழ்கொள் தோகை
மூதுமலை மீது நாளு—வளர்தேவே!

3239. மனநோய்தவி ரிடவேயொரு மயிலேறிமுன்—வருவாயே.
அனமாகிய நடையேபயில் அழகார்குற—மகள்தோளா!
சினமேவிய யசுரோனுடல் தெறியேபட—விடுவேலா!
கனமாகிய பொழிலேநிறை கமழ்தோகையின்—மலைநாதா!

3240. ஆடியமயில் வாகன! ஆதரவுயினி நீசெய்வாய்—அமரேசா!
நாடியவர மேசெய்வாய் நாரணர்மரு கேசனே!-எனையாளாய்
பாடியபுல வா! குகா! பார்புகழ்குரு நாயகா!—அருளாயோ?
கூடியபொழில் சேருமோர் தோகநுசிகி மேவில்வாழ்—முரு
[கோனே!

3241. எதிர்வரு சூர னிடமயி லேவி—எயும்வீரா!
கதியுள தோகை கனமயி லேறு—முருகோனே!
துதிபெறு பாத! துரை! வடி வேல!—அருளாயோ?
மதிதவழ் சோலை வளர்சிகி மேவில்—வருதேவே!

3242. ஆதரவு புரிவாய் ஆறுமுக வடிவே!—அருளாயோ?
சீதமதி புனைவோர் தேவரா னருள்பா—லக! வேளே!
மாதயவு புரிவாய் மாவுடலை யிருகூர்—செயும்வேலா!
வாதடர்கொள் பொழில்சூழ் வாழ்சிகியின் மலையா!—எனை
[யாளாய்.

3243. பொருது சூருடல் புளவ தாய்விடு—அயிலாளா!
மருவு லாவிய வனச மாதுட—மருகேசா!
கருணை நாயக! கமழு நீபமென்—மலர்மார்பா!
தருவு லாவிய தகுசி காமலை—முருகோனே!

3244. தாது லாவிய நீப மாலிகை
தானு லாவிய—புயநாதா!
மோது சூருடன் மீறு சேனைகள்
மோச மாய்விட—எயும்வேலா!

சூது சேர்முலை வேட நாடிகி
தோகை மேவிய—புயவேலா!
வாது சேர்பொழில் சூழ்சி காமலை
வாழ்கு கா! கிருபை—புரிவாயே.

3245. நடனம் உற்றிடு மயின டத்திய
நருக டப்பணி—மணிமார்பா!
அடம்வி ளைத்திடு பெலமி குத்திடு
அசுர னைக்கொலும்—அயிலாளா!
உடலில் உற்றிடு பிணித விர்த்தெனை
உனது சிற்றடி—தனிலாளாய்.
கடம தத்தினர் துணைப டைத்தவ!
கனசி கிக்கிரி—முருகோனே!

3246. வனச மாதுதனை மருவு மாயனுட—மருகோனே!
மனது நோய்தவிர மயிலில் ஏறியென்முன்—வருவாயே.
தனது சேவடியின் தனைஎந் நாளுநினை—எனையாளாய்.
கனக மேரைநிகர் கமழ்சி காமலையின்—முருகோனே!

3247. ஆடிய பம்பரம்என ஆகிய துன்பமவை—விலகாயோ?
நீடிய கடம்பமலர் வேணியம் புதல்வா!நல்—லருளாயோ?
தேடிய செஞ்சரண!பொன் சீரிய இந்திரர்முதல்—பணி
[தேவே!
கூடிய தண்டலைகளின் சீருள குன்றைமலை—வருதேவே!

3248. மதுமலர் நீப! மலரணி மார்பா!—எனையாளாய்.
கதுமென வாடு கனமயி லேறி—வருவாயோ?
சதுமறை தேடு சரண! கு கேச!—அருளாயோ?
விதுதவழ் சோலை மிகுசிகி மேரில்—வருதேவே!

3249. மரைமலரின் மாது மருவுவிற லார்தன்—மருகோனே!
விரைநிறையு நீப மலரணியு மார்ப!—அருளாயோ?
கரையில்கிருபை யாள! கலசமுலை வேடர்—மகள்தோளா!
உரையில்மிகு மேரை உவமையுள தோகை—மலைநாதா!

3250. கலசத்தன மாதர்கள் கொடியஅயி லாலவர்
கருணைக்குளம் நானலை—வதுவாமோ?
கமழ்நெட்டிதழ் சூழ்தரு மலரைத்தரி மார்ப! நின்
கமலக்கழல் சேவடி—அருளாயோ?

---

3246. சேவடியின்தனை - செந்நிறத் திருவடியினை.

அலசற்படு நோயெனை மெலியப்பட வேசெயு
மதுவைத்தவி ராதது—எதனாலோ?
அடியருக்குனை யேயல தொருவர்கதி யேதய!
அழகுற்றிடு நாயக!—எனையாளாய்
குலமுற்றிலு மெயழி படமொய்ப்படை யோடெதிர்
குலவச்சம ரேபுரி—வசுரோன்மேல்
கொடியக்கதிர் வேல்கொடு செயவெற்றிகொள் வோ
குமரக்கரு ணாகர—முருகோனே! [னௌம்!
தலமுற்றிலு மேயருள் புரிவித்தக! நீபமென்
தருமெய்க்கணி சூடிய—புயநாதா!
இழைநற்பொழில் சூழுள சிகிமெய்ச்சிரி மேவிய
இன்பத்தமிழ் பயில்வாய்நல்—லருளாயே.

3251. வடிவுடைய ரூப மாது
மறவர்குல மானை மேவு—இணைதோளா!
கடிதுநடை யேசெய் தோகை
கமழ்சிகியி லேறி யாடி—வருவாயே.
துடியையிக ராமி டைகொள்
துரைமகளின் ஆசை யான—மக! வேளே!
அடியவர்கள் தேடு பாத!
அழகுதிகழ் தோகை மேரில்—வருதேவே!

3252. அடியவர் தொழுகுரு பர! சர வண பவ!
அதிக நன்மையருள்—புரிவாயோ?
குடிவளர் மறவர்கள் குலம்வரு மடமயில்
குறமகள் புணர்புய!—குமரேசா!
துடியிடை யுமையவள் தருஅறு முக! குக!
துரைமகள் புணர்புய!—அருளாயோ?
முடிவிரை பொழினிறை சிகிமலை வருபவ!
முதியநற் றமிழ்தனை—அருளாயோ?

3253. வருநோய் தவிர்வாய் மயிலே றியவா!
பொருசூ ருடனே புகழ்வேல் விடுவாய்.
கருமே னியினர் கனமால் மருகா!
திருசேர் பொழில்சூழ் சிகிமா மலையா!

3254. உனது சேவடி யதனை நான்தொழ
உறுதி யாகவே எனையாளாய்.
உரிய வானவர் முனிவர் தானவ
ருலகர் வானவர்—பணிதேவே!

சினவ ராவணி பவள வேணியர்
சிவசி காமணி யருள்பாலா!
திருமி ளுள்புணர் கரியமேனியர்
திகழு மாலுட—மருகோனே!
மனது நோய்தனை யகல வேயுன்முன்
வருவர் பாலருள் புரிதேவே!
மருவு லாவிய நலவி லாசமென்
மலரின் மாலிகை—மணிமார்பா!
கனக மாமலை நிகர தாமுயர்
கமழ்சி காமலை முருகோனே!
கருணை நாயக அருமை நாயக!
கமல சேவடி—தருவாயே!

3255. சகல மானபிணி சகல மானதுயர்
தவிர வேகிருபை—புரிவாயே!
அகல காயிழைபொ னிகர தானமயில்
அழகு வேடமகள்—புணர்தோளா!
பகவ ளுர்பிறைகொள் சடையி ளுரருள்செய்
பரம ளுர்உதவு—புதல்வோனே!
ககன மேல்உலவு பொழில்கள் மேவுநலங்
கமழ்சி காமலையில்—வருதேவே!

3256. மலருலவு கொம்பினுர் தருமயலில் வெம்பியே
மலரணைவி ழுந்துதான் மெலியாதே
வடிவழகு கொண்டதோ ரங்கனமிடு கின்றதோர்
மயின்முதுகில் வந்துவே—ணதுதாராய்.
கலகமிடு கின்றபே ரிடமணுகி நண்பதே
கனவினினை கொண்டிரா தருளாயோ?
கருணைபொழி கந்தனே! யெனதுதுயர் வெந்துதான்
கருகிவிட வந்துநீ—யருளாயோ?
திலகநுதல் மங்கையாள் மலையரசன் மங்கையாள்
திரிபுரைதன் மைந்தனே! எனையாளாய்.
செகமுழுது வென்றதோர் அசுரர்குலம் நைந்துதான்
தெறிபடவெல் குந்தமே—வியதேவே!
குலமடவி யின்பமான் தனமிணைகொள் மங்கையாள்
குறவர்தரு செங்கையாள் மயலாலே
குளிர்புனம தெங்குமே திரிகுமர! குன்றையாம்
குலவுமலை வந்தவா!—அமரேசா!

3257. செருபுரி சூரன் தெறிகெட வேசெய்—அயிலாளா!
மருமிகு நீப மதுமலர் சூடு—மணிமார்பா!
தருவினில் வாழுந் தனமயில் வேடர்—மகள்தோளா!
திருநிறை சோலை திகழ்மயின் மேரில்—வருதேவே!

3258. வனசமலர் மாது மருவுவிற லார்தன்—மருகோனே!
அனநடையின் மாது அழகுமிகு வேடர்—மகள்தோளா!
மனதில்வரு நோயை மடியவர மேசெய்—அமரேசா!
கனகமலை யான கமழ்சிகியின் மேரில்—வருதேவே!

3259. அடியவர்தொழு சரண!
அமரர்கள்பணி சரண!—அருளாயோ?
கடிமிகுமலர் அயனார்
கனிவொடுநித நிதமே—துதிதாளா!
மிடியொடுஅடி யவர்பால்
வெகுவெகுபிணி தனையே—அடுதேவே!
முடிமிகுசிகி மலையா!
முனைபுரிதுதி அயிலா!—எனையாளாய்.

3260. வந்த நோய்தவிர்
செந்தி மாமலை
மங்க ளேசுர—முருகோனே!
சந்த மாமுலை
மங்கை யாள்கன
சந்திர வேணியர்—மகவேளே!
அந்தம் மேவிய
குன்றை யாதிப!
அன்ப னுமெனை—அருளாயோ?
கந்த னே!நட
மிஞ்சு தோகையா!
கஞ்ச மாமலர்—நிகர்தாளா!

3261. ஆதரவு புரிவாய் ஆறுமுக வடிவே!—அருளாயோ?
மாதயவு புரிவாய் மாமயிலில் வருவா—யமரேசா!
தாதவிழு மலர்வாழ் சாமிமுத லினரே—பணிபாதா!
சீதமிகு பொழில்சேர் சீர்சிகியின் மலைமேல்—வருதேவே!

3262. மண்மலி பூநிறை புயகும ரேச! பொன்
மலைநிகர் தோகையின்—மலைநாதா!
குணதிசை மேலுதி யிளவெயில் போலொளி
குலவிய மேனியின்—அமரேசா!
கணமதி லேயடி யவர்வினை தூளிடு
கதிர்வடி வேலவா!—அருளாயோ? ÷
பணவர வேறிய சடைமுடி நாயகர்
பரமர்தன் ஆசையின்—மகவேளே!

3263. ஓதிய மறைபயில் வாயினர் மணமலி
ஓர்மறை யயன்மகிழ்—முருகோனே!
சாதியி லுயர்குற வேடமி னுளொடு
தான்மகிழ் வாயணை—புயநாதா!
வாதினில் உயர்தரு சூருடல் கிழிபட
மாவயில் ஏவிய—செயவீரா!
மேதினி புகழ்வரு தோகையின் மலைவளர்
மேன்மைகொள் குருபர—முருகோனே!

3264. நடமாடிய மயிலேறிய நறுமாலிகை—யணிவோய்.
படராவணி சடைநாயகர் பரமேசுரர்—புதல்வா!
அடமேபுரி வசுரோனுடல் அடலேபுரி—அயிலா!
தடமாமுடி நிறைசோலைகள் தழைதோகையின்—மலையா!

3265. எனதுடைய நோய்கள் தீரிட
எழின்மயிலில் ஏறி நாயன்முன்—வருவாயே.
மனதிலுள மாசு தீரிட
மகிமைதனை யேசெய் வாய்குக!—குமரேசா!
வனசமல ரான சீர்பத!
மருவுலவு நீப மாலிகை—புனைமார்பா!
கனகமலை யான சோலைகள்
கமழ்சிகியின் மேரி னுயக!—அருளாயோ?

3266. கால தூதர்கள் வருமுனே
கால்கை மேலது குளிர்முனே—வருவாயே.
சால மேபுரி விழியினர்
சாடை யால்வரு மயலையே—தவிர்வாயே.

---

3262. குணதிசை - கிழக்குத் திக்கு. உதி இளவெயில் - தோன்றுகின்ற இள ஞாயிறு. பண அரவு - படத்துடன் கூடிய பாம்பு.

கோல மேமிகு குறமினுள்
    கூட வேபொழி லதனிலே—மயலாவாய்.
பால னுன்எனை வளர்கவே
    பார்வை யேபுரி சிகியின்மா—மலைநாதா!

3267. அனமென்நடை பழகியகிளி
    அழகியகுற—மகள்தோளா!
மனதுடதுய ரதுவிலகிட
    வருவை பொன்மயில்—மிசையேதான்.
சினவரவணி சடைமுடியவர்
    திருவுமையவள்—தருபாலா!
கனககிரியை நிகர்சிகிமலை
    கருணைகள்மிகு—குகநாதா!

3268. வந்த நோய்தவிர் வண்டு லாவிய—மலர்நீபா!
சந்த நாவல! சந்திர வானன!—முருகோனே!
அந்த மாகிய அண்டர் வானவர்—பணிதாளா!
தொந்த மாகிய துங்க மாமயில்—மலைநாதா!

3269. ஆடிய மயிலா! ஆரண முடிவே!—அருளாயோ?
நாடிய படியே நாரணன் மருகா!—கிருபைதாராய்.
பாடிய புலவா! பார்வதி துணையா!—அமரேசா!
கூடிய பொழில்சேர் கோதறு சிகிமா—மலைநாதா!

3270. சானகி மடந்தை மேவு
    தாரது புனைந்த மாயன்—மருகோனே!
வானவர் மகிழ்ந்து தேடும்
    வாசனை நிறைந்த பாத!—எனையாளாய்.
கானக மடந்தை மேவு
    காரண! கனிந்து வேண—தருளாயோ?
தேனலர் அணிந்த மார்ப!
    சீர்சிறை செகண்டி மேவில்—வருதேவே!

3271. நடனம் ஆடிய மயிலா!
    நறிய நீபமென் மலர்மா—லிகைமார்பா!
குடம தாகிய முலையாள்
    குறமி னுள்புணர் புயவா!—எனையாளாய்.
கடநல் யானையின் முகனுர்
    கருணை யாகிய துணையா!—அமரேசா!
தடமு லாவிய பொழில்சேர்
    தகுசி காமலை தனிலே—வருதேவே!

3272. எனது துயர் தீர எழில்கொள்மயி லேறி—வருவாயே.
கனகமய மான கயிலைநிகர் தோகை—மலைநாதா!
அனநடையின் மாத ரவர்கள்மய லாலே—மெலிவேனோ?
புனமயிலி மேவு புயசயிலl வேண—தருளாயோ?

3273. வடித்தரச மொழியார் மயக்குவிழி மயலால்—மெலிவேனோ?
துடிக்குமொரு தீர! துரைக்குமர குருவே!—அடியார்பால்
மிடிப்புலியை யடுவாய் விரைக்கமல அயனார்—பணிபாதா!
கடிப்பொழில்கள் நிறைசீர் கமழ்ச்சிகியின் மலைமேல்—
வருதேவே!

3274. உனைவிட வேறுகதி உலகினில் யாவரது—அறியார்போல்
எனைநினை யாதுவரு ளினிஅருள் அருளாதது—எதனாலோ?
புனைமண நீபமலர் புரிநல மாலைபுனை—புயநாதா!
கனைகடல் சூழுமுயர் கமழ்சிகி மேரிலுறை—குகவேளே!

3275. தாதவிழு நீப மாலை
தானணியு மார்ப! வேண—தருளாயோ?
மாதரசி யான தேவி
வானரசன் மாது மேவு—புயநாதா!
சீதமதி சூடும் வேணி
தேவரருள் பால! தோகை—மயிலாளா!
வாதடரு சோலை சூழும்
வானகமிகு தோகை மேரில்—வருதேவே!

3276. துயரான் மெலிந்து விடுவெனை இன்று
சுபமாக வந்து—அருளாயோ?
கயலுவு கின்ற தெனவே யிரண்டு
கணினர் செயுந்தொ—ழிலினாலே
மயலான் மயங்கி அழியாம லுந்தன்
மலரான பாதம்—அருளாயோ?
செயலான பைம்பொ ழில்கடாவு கின்ற
திருவார் செகண்டி—மலைநாதா!

3277. மனத்தில்வரு நோயை வருத்தியக லோட—அருள்வாயே.
சினத்தசுரன் மார்பு திறக்கவயி லேவி—யடுசூரா!
தனத்தியர்கள் ஆசை தனக்குவெளி காதல்—தவிராயோ?
இனத்தின்மணி சேரும் எழிற்சிகியின் மேரில்—வருதேவே!

3278. மாய மேபுரி ரூப மாகிய
மாத ரால்வரு—மயலாலே
நோய தாய்விழு மோச நீதவிர்
நூறு வேள்வியன்—மருகோனே!

---

3278. நூறுவேள்வியன் - இந்திரன்.

காய நோய்தவிர் தோகை யாமவர்
காத லா!குக—குமரேசா!
தேய மேபணி பாத! நாயக!
சீர்சி காமலை—வருதேவே!

3279. மடமயி லான சாயல்
மகளிர்கள் ஆசை நோயை—அடுவாயே.
படவர வேறு வேணி
பரமர்த ஞசை யான—மக!வேளே!
தடவன மாது மேவு
தயவுள தேவ! வேண—தருளாயோ?
வடவரை யான தோகை
மலைமிசை வாழு நாத!—அமரேசா!

3280. வாதுபுரி யசுரர் மாயவயி லேவு—செயவீரா!
கோதுகிளி யான கூர்நயன மாது—தருபாலா!
மாதுகுற மானை மாலினொடு மேவு—புயலோலா!
மோதுபொழில் சூழு மூதுசிகி மேரில்—வருதேவே!

3281. ஆடியமயில் வாகன!
யான்மகழிட வேயினள்—அருளாயோ?
நாடியபடி யேசெய்வாய்
நாரணன்மரு கேசனே!—கிருபைதாராய்.
பாடியபுல வா!குகா!
பாதகவினை தீரவே—அருளாயோ?
கூடியபொழில் சூழுமோர்
கோதறுசிகி மேரினில்—வருதேவே!

3282. நெஞ்ச நோய்தவிர் நின்பொன் மாமயில்—தனில்வாராய்.
வஞ்ச ஞகிய வம்பின் மாவுடல்—அடுவேலா!
கஞ்ச ஞயகர் கண்டு மேபணி—புரிதாளா!
தஞ்சம் வேறிலை தண்சி காமலை—முருகோனே!

3283. படவ ராவணி பரமர் ஆசையின்—மக!வேளே!
நடன மேபுரி நலமு லாவிய—மயிலாளா!
அடம தேபுரி அசுர னவியை—அடுவேலா!
தடம தாகிய தழைசி காமலை—முருகோனே!

3284. உனசரண மீது யனுதினமும் நாயன்
உறுதி மறவாத—படியாளாய்.
மனதில்வரு நோயை அகலிடவும் நெஞ்சம்
மகிழிடவும் வேணது—அருளாயோ?

தினகரனை நேர ஒளிருவடி வான
செயவடிவின் வேல !—அருளாயோ ?
கனககிரி யான சிகிமலையில் வாச !
கருணையுள தேவ !—முருகோனே !

3285. மடவார்மயல் தனிலானுடல்
மடியாதருள்—புரிவாயே.
உடனேய்தனை யணுகாதினி
உடனேயருள்—புரிவாயே.
நடமாடிய மயில்ஏறிமுன்
நலமேதர—வருவாயே.
தடமாமுடி நிறைதோகையின்
தகுமாமலை—முருகோனே !

3286. அற்புத மலரில் குலவிய
அச்சு தன்மனை—மருகோனே !
பொற்புயர் கனமைக் குழன்மயில்
புற்றர வல்குல்—மடமானுள்
சொற்கிளி குறநற் கொடிபுணர்.
சொக்கு யர்புய !—முருகோனே !
சற்குண அடியற் கருள்குக !
தத்திய மயின்மலை—வாழ்வோனே !

3287. தத்திவினை யாடிய சத்திமயி லேறிய—குகநாதா !
அத்திமுக நாயகர் அற்புதம தாகிய—துணையாளா !
பத்தியுட னேயணி பத்தனெனை யாதரி—முருகோனே !
சித்திபெறு தோகையின் சித்ரமலை மேவிய—குகநாதா !

3288. கட்டி யமல ருற்றி டுகுழல்
கட்ட முகுள—குறமானுள்
கிட்டி யமயல் பெற்றி டுகுக !
கெக்க விமயில்—அமரேசா !
மட்டி கள்அவு ணற்க யில்விடு
மற்பு யகுக !—குமரேசா !
மெட்டி சையுற நற்சி கிமலை
மெய்க்கு ருபர !—முருகோனே !

3289. அடம்புரி சூரன் அழிந்திட வேலை—எயும்வீரா !
நடம்புரி தோகை நலந்திகழ் சீர்கொள்—மயிலாளா !
மடந்திகழ் வேடர் மகிழ்ந்திடு மாது—புணர்தோளா !
தடந்திகழ் தோகை தகுஞ்சிகி மேரில்—வருதேவே !

3290. வித்தைதனை யருள்வாய் மெய்ச்சிகி மலைமேல்—வருதேவே!
கத்தையுள சடையார் கட்டழகி யுமையா—னருள்பாலா!
பத்தர்பணி சரணு! பத்மதள வதனு!—எனையாளாய்.
தத்திநடை பயில்சீர் தக்குசிகி மயிலா!—குகநாதா!

3291. சமராடிய அசுரோனுடல் தலையேயிரு—பிளவாய்
அமரோர்மகிழ் படவேமுனம் அயிலேவிய—திறலாய்!
நமனுரெனை யணுகாதிட நலமேஅருள்—புரிவாய்.
குமரா!குரு பரனே! உயர் குகனே!சிகி—மலையா!

3292. வடித்ததமிழ் பாட மகிழ்ச்சியுடன் வேண—தருளாயோ?
கடிக்கமல நாதா! கருத்தமுகின் மேனி—பணிபாதா!
குடிக்குறவர் மாது குலத்துமய லாசை—முருகோனே!
நடிக்குமயி லாளா! நலத்தசிகி மேரில்—வருதேவே!

3293. அடியவர்பணி சரணு!
அழகியசிறை மயிலா!—எனையாளாய்.
குடிவளர்குற மயிலா!
குவிமுலைநிறை புயவா!—அமரேசா!
முடிபுனையம ரர்களே
முறைமுறைபணி குகனே!—அருளாயோ?
கடிகமழ்பொழில் நிறைசீர்
கனசிகிமலை தனில்வாழ்—குருநாதா!

3294. உனது பாதமதை
உறுதி யாகநினைவென்—முன்வாராய்.
கனமி னுள்குறவர்
கவினு மாதுபுணர்—புயலோலா!
வனச மாதுதனை
மருவு வேதனுட—குருநாதா!
கனக மானதொரு
கனசி காமலையின்—முருகோனே!

3295. மற்புயவசு ரைப்படவயில் மைக்கொடுவிட—மெனவேதன்
வெற்றிகொள்கம லக்கையினின் விட்டிடுகுரு—பரவேளே!
அற்புதமல ரிற்குலவிய அச்சுதன்மனை—மருகோனே!
பொற்கிரிநிகர் சித்திரமிகு பொற்சிகிமலை—முருகோனே!

3296. மத்தநிகர் முலையாள்
மட்டுளகன குழலார்—மயலாலே
சித்தமது அலைவாய்ச்
சிக்கிடலது பழியா—மதுதீராய்.

---

3296. மத்தகம் என்ற சொல் மத்தம் என வந்துள்ளது.

தத்துநெறி முடிவே!
சத்தியையணி துரையே!—அருளாயோ?
முத்தர்கள்பணி சரணு!
மொய்த்திடுபொழி னிறைதேர்—கையின்மேரா!

3297. கட்டியமலர் உற்றிடுகுழல் கட்டழகுள—மடமானார்
கிட்டியசர சத்தினல்மதி கெட்டழிபடல்—தவிராயோ?
சட்டியின்விர தத்தினிலருள் தற்பர!குக!—தருவாயே.
விட்டினியொளிர் மட்டவிழ்பொழில் மெய்ச்சிகிமலை—வரு
[தேவே!

3298. அரியமறை தேட அரியவிரு பாத!—எனையாளாய்.
கரியநிற மான கடவுள்மகிழ் வான—மருகோனே!
தரியலர்க ளான சவரியவு ணோர்கள்—குலகாலா!
பரியமுடி நீடு பழமையுள தோகை—மலைநாதா!

3299. அடியார்கள் மிடிதீர அருளாய்நல—முதவாய்.
கடியான மலர்நீப கமழ்மாலை—யணிவாய்!
அடிவான மடவார்கள் மயறீர—வருவாய்.
கடியான பொழில்சேரு குளிர்தோகை—மலையாய்!

3300. அடம்புரி சூரன் அருவரை மார்ப—னைநேராய்
மடங்கிட வேலை மண்டிடஏவு—செயவீரா!
கடம்பமர் மார்ப! கனிந்திடு வேண—தருளாயோ?
தடம்பொழில் சேரு சகம்புகழ் தோகை—மலைநாதா!

3301. வஞ்ச நெஞ்சனை மண்டி வந்திடு—அசுரோன்மேல்
நெஞ்ச மிஞ்சிட நின்று வென்றிடு—அயிலாளா!
கஞ்ச னஞ்சிறை கன்றி யன்றிடு—முருகோனே!
தஞ்சம் வந்தருள் தங்க மென்செறு—சிகிமேரா!

3302. நடனமயில் வாகனு! நலமுதவி யேசெய்வாய்—அமரேசா!
மடமயிலி வேடமான் மருவுபுய நாதனே!—கிருபைதாராய்.
துடரும்வினை நோயெலாந் துகளுபட வேசெய்வாய்—கும
[ரேசா!
தடமுலவு சோலைகள் தடங்களுடை சிகியில்வாழ்-குருநாதா!

3303. குயிலா கியமொழி மாதர்கள் குவிமாமுலை—மயலாலே
ஒயிலா கியநடை போகிட ஒளியோடிட—அலைவேனோ?
மயிலா கியபரி மேல்வரு மருமாலிகை—புனைமார்பா!
வெயிலா கியமுடி மேவிய விரைசேர்சிகி—மலைநாதா!

3304. தத்தை நிகர்மொழியாள்
சற்குண குறமினுள்—புணர்தோளா!
வித்தை தனையருள்வாய்.
விரத்தி யுளசிகிமா—மலைநாதா!
கொத்தை யுளமலராங்
கொட்டு மதுமலர்நீப—மென்மார்பா!
சித்தை யுளகுருவே!
சித்திர மயிலுடையா—அருளாயோ?

3305. அடங்காத சூரன் அழிந்தோட வேலை—எயும்வீரா!
நடந்தாவு தோகை நலஞ்சேர்சி காநன்—மலைநாதா!
படஞ்சேர ராவின் படர்ந்தேறு வேணி—தருபாலா!
மடஞ்சேரும் வேடர் மணஞ்சேரு மாது—புணர்தேவே!

3306. மருவி ளங்கிய இதழ்து லங்கிய
வனச மண்டப—மடமானுள்
அருமை தங்கிய எதிரில் வந்திடு
அசுரர் சங்கரர்—மருகோனே!
செருவி ளங்கிய யசுரை வென்றிடு
திறவி ளங்கிய—அயிலாளா!
தருவி ளங்கிய முடியி லங்கிய
தழைசெ கண்டியின்—மலைநாதா!

3307. வந்து வரந்தருவாய் வண்டுளர்நீப—மென்மார்பா!
செந்து வரஞ்சிதவாய் செங்கம லக்கிளியாள்—மருகேசா!
பந்து நிகர்ந்திடுசீர் பண்புயர் கொங்கைமினுர்—மயல்தீராய்.
நந்து தவழ்ந்திடுசீர் நன்றுள குன்றையின்மா—மலையாளா!

3308. எனது துயர்தீர எளிய னிடவேண—தருளாயோ?
மனதில் வருநோயை மடிய வரம்யாவு—முதவாயோ?
வனச மலர்மாது மருவு புயநாதர்—மருகோனே!
கனக மலைநேருங் கமழ்சி கியின்மேரில்—வருதேவே!

3309. தத்திய மயிற்றினம் வருசற் குருபர!—குமரேசா!
பத்தியி னன்பொடு பணிபத மென்மலர்—நிகர்பாதா!
நத்தொரு கரங்கொளு மவனட் புயர்நல்—மருகோனே!
அத்தியின் முகனுக் கிளையஅற் புதமிகு—சிகிமேரா!

---

3309. நத்து - சங்கு.

3310. கடமத வாரணனார்
கருணைகொள் சீர்துணைவா!—எனையாளாய்.
அடமிகு சூருடனே
அழகிய வேல்தொடுவாய்—அமரேசா!
மடமா லாகியதோர்
மடவர ராசையதே—அகற்றாயோ?
தடமிகு சோலைகள்சூழ்
தழைசிகி மாமலைமேல்—வருதேவே!

3311. மனநோய் தவிராய் மயிலே றியவா!—குகநாதா!
அனமா நடையாள் அழகா கியவே—டமினாதா!
சினமா கியசூர் திறமே கெடவேல்!—விடுசூரா!
வனமே வியசீர் வளர்தோ கையின்மா—மலைநாதா!

3312. அடம்புரி சூரை அடங்கிட வேசெய்—அமரேசா!
கடம்புரை சீர்கொள் கமழ்ந்திடு மார்பின்—குறமானாள்
மடங்கொளும் வேட மடந்தையை மேவு—குகநாதா!
நடம்புரி தோகை நலந்திகழ் மேரில்—வருதேவே!

3313. ஆதரவு புரிவாய் ஆறுமுக வடிவே!—கிருபைதாராய்.
மாதயவி னுடனே மாமயிலி லேறி—வருவாயே.
சூதமரு முலையாள் தோகைகுற மயிலாள்—புணர்தோளா!
சீதமதி தவழ்சீர் சேர்சிகியின் மலைமேல்—வருதேவே!

3314. கறைக்கண் டர்தரு கனக்குஞ் சிறைமயின்—முருகோனே!
நறைச்செங் கமல நலக்கும் குமமுலை—மினாள்
நிறைச்செங் கனியி னிறத்தின் கொடியின்—மருகோனே!
இறைக்கும் பொழில்நல் லெழிற்குன் றையின்—மலைநாதா!

3315. ஆடியமயில் வாகனா! ஆதரவினி நீசெய்வா—யமரேசா!
நாடியபடி யேசெய்வாய் நாரணன்மரு கேசனே?—அருளா
[யோ?
பாடியபுல வா!குகா! பான்மதிவத னா!கிருபா—னிதி!நாதா!
சூடியபொழில் சூழவே தூநலம்வளர் தோகைமா—மலைநாதா!

3316. அரவணி சடையார் அழகிய புதல்வா!—அருளாயோ?
திரமிகு அசுரோன் தெறிபட அயிலே—வியசூரா!
கரதல கமலா! கருணையி னுடனே—வருவாயே.
வரமருள் குகனே! மயின்மலை மிசைவா—மமரேசா!

---

3310. அகற்றாயோ = நீக்கமாட்டாயோ.
3316. கரதல கமலா = கையாகிய தாமரையினை உடையவனே.

3317. ஆவி போகு முனமே
ஆசை தீர வரமே—புரிவாயே.
கூவி யாடு மயிலா!
கூர த்ான வயிலா!—அருளாயோ?
பாவி யான எளியேன்
பார நோயை யினிநீ—தவிராயோ?
தாவி நீடு பொழில்சேர்
சார னீடு சிகிமா—மலைநாதா!

3318. வடிவி லழகிய
மயிலி குறமகள்—புணர்தோளா!
அடிய னெனையினி
அடிமை கொளமனம்—நினைவாயோ?
கொடிய வசுரர்கள்
குலம தழிபட்—விடுவேலா!
மிடியை யடுகுக!
விரைசெய் சிகிமலை—முருகோனே!

3319. பரமேச ரருள்பால! பணியேசெய்—எனையாளாய்.
உரமான வசுரோனை யுடல்கீறு—அயிலாளா!
வரநாத! நட்மாடு மயில்ஏறு—குகநாதா!
பிரகாச மிகுதோகைப் பெருமேரு—வருவாயே.

3320. எனது தீவினை யதனை நீதவிர்
எளிய னாசையை—அருளாயோ?
மனது நோய்தவிர் அரக ராகுகா!
மயிலி லேறிய—குகநாதா!
சினமு லாவிய யசுர ரைவெனு
திறமு லாவிய—அயிலாளா!
கனக மாமலை நிகர தாகிய
கனசி காமலை—முருகோனே!

3321. சகத்தோர்பணி தமிழ்ப்பாவல!—அருளாயோ?
மகத்தேமிகு வானோர்பணி—புரிதாளா!
சுகத்தேவினை சுபக்கானமின்—அணைதோளா!
இகத்தேயருள் பொழிற்சீர்சிகி—மலைநாதா!

3322. வாரி முடித்த குழலார்
வானை நிகர்த்த விழியார்—மயலாலே
போரில் இளைத்த சகலர்
போல இருத்த லலமோ?—அறியாயோ?

3322. சகலர் = பலவகை மக்கள்.

தாரின் மிகுத்த புயவா!
சாமி யெனக்கு வரமே—அருள்வாயே.
மாரி தழைத்த பொழில்சேர்
வாழ்வு படைத்த சிகிமா—மலைநாதா!

3323. அடுத்த வடியார்கள் அழிக்கு மிடிதீர—அருளாயோ?
எடுத்த படைவீழ இனிக்கொ டியசூரை—யடுவேலா!
தொடுத்த மலர்நீப! துரைக்கு மரநாத!—எனையாளாய்.
தடுத்து எனையாள்வை தழைத்த சிகிமேரில்—வருதேவே!

3324. சரச மிஞ்சிய தரும டந்தையை—யணைதோளா!
அரவ ணிந்திடு அரன்ம கிழ்ந்தருள்—புதல்வோனே!
வரம கிழ்ந்தருள் மயிலி லன்பொடு—வருவாயே.
திரவி யங்கொளு சிகியி லங்கிய—மலைநாதா!

3325. எதிர்வரு சூர னிடம்அமர்செய் சூர!—அருளாயோ?
மதியை யணிவேணி மனதுடைய வாசை—மகிவேளே!
கதியுலவு தோகை கனமயிலி லேறு—முருகோனே!
துதியுலவு தோகை சுபமலையின் வாழ்வாய்!—அருளாயோ?

3326. வருசூருடல் மடிவாய்விட—அடுவேலா!
கருவேநிறை தனநாயகி—புணர்தோளா!
குருநாயக! குகநாயக!—எனையாளாய்.
திருவேநிறை சிகிமாமலை—முருகோனே!

3327. சூரை வதைத்த வேலவா!
தோகை தரித்த நாயக!—அருளாயோ?
வேரை யறுத்த நோய்தனை
மீள அடிப்பை தோகையின்—மயிலாளா!
தாரை முடித்த மார்பனே!
தாவில் வெற்றி வேலவ!—குகநாதா!
சீரை மிகுத்த தோகையின்
தேமலை யிற்கு லாவிய—முருகோனே!

3328. அடியாருட வினைதீரிட அருளேபுரி—குகநாதா!
கொடிநாகிய வசுரோனுடல் குறையேபுரி—அயிலாளா!
துடிபோலிடை அயில்போன்விழி துரைநாயகி—புணர்தோ
[ளா!
கடியார்பொழி னிறைதோகையின் கனமாமலை-முருகோனே!

---

3323. அடியார்கள் அழிக்கும் - அடியார்களை அழிக்கும்.

3329. பந்தவினை தீராய்! பண்குலவு வாயா!—எனையாளாய்.
கந்தகுரு நாதா! கஞ்சமிகர் தாளா!—அருளாயோ?
வந்தவினை தீராய் வண்சிகியின் மேலாம்—முருகோனே!
சந்தமிகு சீரார் தண்சிகியின் மேரா!—அருளாயோ?

3330. கடம்பணியு மார்பா! கனிந்ததமிழ் வாயா!—அருளாயோ?
நடம்புரியும் நாதா! நறுந்துளப மாயோன்—மருகோனே!
உடம்பமரு மூழால் உவந்ததுயர் தீராய்—முருகோனே!
தடம்பரவு கானுர் தகுந்த சிகிமேரா!—எனையாளாய்.

3331. தானவர்குல காலா! தாமரைநிகர் தாளா!—அருளாயோ?
வானவர்முனி வோரே மாலுடனித மேதான்—பணிபாதா!
தேனலரணி மார்பா! சீதைதன்மய லானோர்—மருகோனே!
கூனல்மதி யார்கா கூடியசிகி மேரா!—எனையாளாய்.

3332. எதிர்த்து வந்தொரு போர்புரி சூருட
விரட்டி கொண்டிட வேயயி லேவிய—செயவீரா!
மதிக்க நைந்திடு வானன மாதர்கள்
மருட்டு கின்றிடு மாமய லாலினி—மெலிவேனோ?
கொதித்த செந்தழல் போலுமென் நோய்களைக்
குறைத்த ழித்திடத் தோகையி லேவினுள்—வருவாயே.
விதிக்கு முன்சிறை தானிடு நாயக!
விரைப்ப சும்பொழில் சூழ்சிகி மாமலை—முருகோனே!

3333. மடமயி லான தேவி
வனமக ளான மாது—புணர்தோளா!
நடமிடு தோகை யேறு
நளினம தான பாதம்—அருளாயோ?
உடல்படு நோயை யோட
உடனருள் செய்க வேல!—குகநாதா!
வடவரை யான தோகை
மலைதனில் வாழு நாத!—அருளாயோ?

3334. கறையாகிய மிடறூரருள் கருணாநிதி—அருளாயோ?
இறையேபுகழ் சரணா!குக மயிலாகிய—பரியாளா!
குறையாகிய இடைநாயகி குறமானொடு—புணர்தோளா!
சிறையாகிய கனமேமிகு சிகிமேரினில்—வருதேவே!

3335. எனது தீவினை இதனை நீயழித்—திடுவாயே.
மனது நோய்தனை மடிய வேணது—புரிவாயே.
சினவ ராவணி சிவன்தன் பாலக!—முருகோனே!
கனக மாமலை கனசி காமலை—வருதேவே!

---

3331. கூனல்மதி - வளைந்த நல்ல சந்திரன்.
3334- குறையாகிய இடை - சிறுத்த இடை.

3336. வந்தபிணி தீர வந்துவரம் நீசெய்—அமரேசா!
கந்தமிகு நீப! கஞ்சமல ரான—இருதாளா!
அந்தமிகு தோகை அங்கிரியில் வாச!—எனையாளாய்.
சந்தமிகு பாடல் தந்துஇனி யாளாய்—முருகோனே!

3337. எனது நோய்தனை இனியி நாளிதை—விலகாயோ?
அனம தாகிய அழகின் மாநடை—மடமானுள்
தனது நாயக! தகுசி காமலை—முருகோனே!
வனச மாமலர் மயிலி யாளுட—மருகோனே!

3338. ஒருத்தர்துணை யேது உனதுபத சேவை—அருளாயோ?
மருவுலவு நீப மலரைஅணி மார்ப!—முருகோனே!
திருமகளு லாவு திறல்விறலி ஞசை—மருகோனே!
தருவுலவு தோகை தருமலையின் வாச!—அமரேசா!

3339. வஞ்ச ஞகிய சூரனே
மண்டி போரொடு சாகவே—அடுவேலா!
கஞ்ச மாகிய பாதனே!
கந்த னே! கிருபை நீசெய்வாய்—அமரேசா!
தஞ்சம் வேறிலை ஆளயா
தந்தி யானனர் காதலா—கியதோளா!
மஞ்ச தேபடி சோலைசூழ்
வண்சி காமலை வேலனே!—அருளாயோ?

3340. தீவினை யால்வரு நோய்தனை யேதவிர்
சேவல தாகிய—துசநாதா!
பாவிக ளாய்வரு வோரிட மேசெலல்
பாவம யாஅதை—விலகாயோ?
நாவினி லேவெகு பாடல்க ளேயருள்
நாரண ஞருட—மருகேசா!
தாவிய தோகையின் மாமயி லா!வருள்
சாரல்கொள் தோகையின்—மலைநாதா!

3341. வருவாயொரு மயின்மீதினின்—முருகோனே!
தருவாய்வெகு தயவாய்நலம்—உதவாயோ?
முருகா!குரு முனிவோர்பணி—இருதாளா!
தருவேநிறை தழைதோகையின்—மலைநாதா!

---

3340- சேவலதாகிய துச நாதா - சேவல் அமைந்த கொடியை உடைய நாதனே,

3342. மதிசூடிய சடைநாயகர் மகிழ்பாலக!—முருகோனே!
கதியாகிய மயிலேறிய கருணைநிதி!—அருளாயோ?
விதிமால்பணி சரண!குக! விரைநீபமென்—மணிமார்பா!
நதிசூழ்தரு சிகிமாமலை நகுவேலவ!—முருகோனே!

3343. வாதுபுரி சூரன் மாயவழி லேவு—செயவீரா!
சூதுநிக ரான தூயதன வேடர்—மகள்தோளா!
சீதமதி வேணி தேவரருள் பால!—அருள்தாராய்.
மோதுபொழில் சூழும் மூதுசிகி மேரில்—வருதேவே!

3344. தானவர்குல காலா!
தாரணிபுய நாதா!—எனையாளாய்!
வானவர்பணி பாதா!
மாமயின்முரு கேசா!—அருளாயோ?
கானகமயில் தோளா!
காரணகுரு நாதா!—அமரேசா!
தேனலர்பொழி லேசேர்
சிகிமாமலை மீதே—வருதேவே!

3345. அந்திமதி சூடும்
அண்டர்பணி நாதர்—அருள்பாலா!
உந்திவரு நோயை
உண்டுவிட வேநல்—லவிழ்தமேதா.
மந்திவளர் கான
மண்டுசிகி மேரில்—வருதேவே!
சந்திரமுக வேடர்
தங்கொடியை மேவு—புயவேளே!

3346. அடியர்பணி சரண!
அழகுமயின் மிசையே—வருவாயே.
கடிகமழு மலர்மான்
கருணையுள துளவர்—மருகேசா!
துடியைநிகர் இடையாள்
துரைமகளை யணைவாய்—அமரேசா!
முடியுலவு பொழில்சேர்
முதுசிகியின் மலையா!—அருள்வாயே.

---

3345. அவிழ்தம் - மருந்து.

3346. துளவர் - துளசிநாதராகிய திருமால்,

3347. நடிக்கு மாமயிலா!
நலத்தை நீயருள்வாய்—அமரேசா!
கடிக்கும் அராவணிவோர்
கருதர ஞர்துணையா—எருள்பாலா!
துடிக்கு நேரிடையாள்
துணைப்பெண் ணுள்தனேயே—அணைதோளா!
முடிச்சி காமலையாய்!
முளைத்ததீ வினைதீராய்—முருகோனே!

3348. படவர வல்கு லார்கணை விழியார்
படுமயல் அதனுல்—மெலிவேனே?
தடவரை மயில்போல் தினைவனம் வருமான்
தனைவனம் அதிலே—புணர்தோளா!
அடமிகு வசுரோன் வருபடை யுடனே
அழிபட வயிலே—வியசூரா!
நடமிடு மயிலாய்! அடியன்முன் வருவாய்.
நலங்கள் மிகுசிகா—மலைநாதா!

3349. அனநடையின் மாது அழகுதிகழ் வேடர்—மகள்தோளா!
மனமலர் மாது மருவுமுகின் மேனி—மருகோனே!
மனதில்வரு நோயை மடியவரு ணீசெய்—அமரேசா!
இனமணிகள் சேரு மெயில்உலவு தோகை—மலைநாதா!

3350. நோவி ஞலையே மேனி வாடியே
நோக லாகுமோ?—குகநாதா!
கூவு தோகைசேர் ஆடு தோகையர்
கோல மேனியா!—எனையாளாய்.
காவு லாவிய வாழ்வே! மாதிஞள்
காச லாகவே—புணர்தோளா!
பூவு லாவுசீர் சோலை சூழுமோர்
பூவுலாவுதோ—கையின்மேரா!

3351. அதிக மயலாக முனிவர் முதலோர்கள்
அமரர் முதலோர்கள்—பணிபாதா!
கதியு லவுதோகை மிகும யிலிலேறிக்
கருணை யுடன்நாளும்—வருவாயே.
மதியை யணிவேணி தருகு நலமாகும்
வடிவு மிகுவேலா!—எனையாளாய்.
துதியு லவுபாத! கொந்து லவுசீர்கொள்
சுபமு லவுதோகை—மலைநாதா!

---

3350. நோவிஞலையே - துன்பத்திஞல் ஐயனே.

3352. அடம்புரி வோர்க ளிடந்தய வாக
அமர்ந்திடல் ஞாய—மிலேதேவே!
கடம்பெனும் மாலே யணிந்திடு மார்ப!
கனிந்தருள் யாவும்—உதவாயோ?
நடம்புரி தோகை யெனும்பரி யேறி
நலந்தர நாய—னிடம்வாராய்.
தடந்திகழ் சோலே நிறைந்திடு தோகை
தகுங்கிரி நாத!—எனேயாளாய்.

3353. பொருது சூருடல் புளவ தாகிட—விடுவேலா!
மருவு லாவிய வனச நாயகி—இணேநாதர்
மருக! நாயக! முதிய நான்மறை—பணிதாளா!
தருவு லாவிய தகுசி காமலே—முருகோனே!

3354. கனக தண்டை கலக லென்ன—வருவாயே.
மனது கந்து வரமி னஞ்செய்—அமரேசா!
எனது துன்பம் திரிய நன்று—உதவாயே.
வனச மங்கை வளர்செ கண்டி—மலேநாதா!

3355. குயிலாகிய மொழிமாதர்கள் குவிமாமுலே—மயலாலே
ஒயிலாயலே கிறநோய்தவிர் உமைபாகர்தன்—மகவேளே!
மயிலேறிய குக!நாயக! மகிபா!கிருபை—புரிவாயே.
செயிலார்வனே பொழிலூர்வளர் செறிதோகையின்—மலே
[நாதா!

3356. வானவர் பணிசெய் பாத!
வாசமெ னீப மாலே—புனேமார்பா!
கானக மாது மேவு
காரண! தேவ தேவ!—எனேயாளாய்.
சானகி மாது மேவு
தார்புனே மாய ஞர்தன்—மருகோனே!
தேனலர் சோலே சூழு
சீர்சிகி மேரில் வாச!—முருகோனே!

3357. வனசமலர் மாது மருவுபுய மாயன்—மருகோனே!
கனமுலவு தேவி தழுவுபர மேசர்—அருள்பாலா!
எனதுபிணி தீர எளியனிட மாக—வருவாயே.
கனகமலே யான கமழ்சிகியின் மேரில்—வருதேவே!

3358. சானகி மணுளஞர் தார்புனேபேர் மாயஞர்—மருகோனே!
வானவர்கள் யாவுமே மாலினெடு நாளுமே—பணிதாளா!
கானகமின் மாதினுள் காதலொடு மேவியே—புணர்தோளா!
தேனலர்கொள் சோலேசூழ் சீர்சிகியின் மேரில்வாழ்—குக
[நாதா!

3359. அரிய மறைபுகழ் அழகு திகழுயில்—முருகோனே!
தரிய லர்கள்பணி சரவ ணகுமர!—குகநாதா!
கரிய நிறவுடல் கருணை விறலுட—மருகோனே!
பரிவி னுடுவருள் பரிய சிகிமலை—வருதேவே!

3360. வேறு துணையேது? ஆத ரவுஏது?
வேறு முகமாதல்—தகுமோதான்.
கூறு அயிலாள! முனைக வருசூரன்
கூறு படஏவும்—செயவீரா!
ஆறு முகநாத! தோகை மயிலாள!
யான்மகிழ வேண—தருளாயோ?
மீறு பொழில்சூழும் தோகை மலைமேவும்
வேத குருநாத!—எனையாளாய்.

3361. வந்தவினை தீர வந்துவரம் வேண—தருளாயோ?
கந்தமல ரான கஞ்சமலர் மாது—மருகோனே!
எந்தனிட மாக இந்தவிசை தோகை—மிசைவாராய்.
சந்தமிகு சோலை தங்குசிகி மேரில்—வருதேவே!

3362. ஏதுதாய ரேதுபிணி
ஏதுமிடி ஏதுஅவ—திகள்தாமே
மோதுபடை யோடும்வரு
மூடனசு ரோனைவெலு—மயிலாளா!
கோதுகிளி யானமொழி
கூறுமவள் வேடர்மகள்—புணர்தோளா!
தாதுலவு சோலைநிறை
தாழ்வில்சிகி மேரில்வரு—முருகோனே!

3363. பாடிய புலவா! பான்மதி வதனா!—அருளாயோ?
நாடிய படியே நாரணர் மருகா!—எனையாளாய்.
ஆடிய மயிலா! ஆர்புனை யரனார்—அருள்பாலா!
மூடிய பொழிலே மோதிய சிகிமா—மலைநாதா!

3364. பொருது சூருடல்
புனவ தாகிட—எயும்வேலா!
கருமை மேனியர்
கருணை மாலுட—மருகோனே!
அருமை யாயென்முன்
அழகு தோகையின்—மிசைவராய்.
திருகொள் சோலைகள்
செழிசி காமலை—முருகோனே!

3365. வடிவி வேடுவர் மயிலி மேவிய—இருதோளா!
மடியு நோய்தவிர் வனச மாமலர்—இருதாளா!
அடியன் மீதினில் அருள்செ யாதது—எதனுலோ?
முடிகொள் சோலைகொள் முதிய தோகையின்—மலைநாதா!

3366. நடனமிடு மயிலா!
நளினமல ரிணையா—கியதோளா!
அடமதுசெ யசுரோன்
அமரில்விழ அயிலே—வியசூரா!
விடவரவு புனைவோர்
விதுபுனையு மரனார்—அருள்பாலா!
தடமுடிகொள் பொழில்சேர்
தகுசிகியின் மலைமேல்—வருதேவே!

3367. அரவி னடித்த அழகிய வித்தன்—மருகேசா!
பரவடி யற்கும் பரிவொடு வெற்றி—புரிநாதா!
கரகம லத்த! கதியடி யற்கு—அருள்தேவே!
வரமருள் முத்த! மகிமை படைத்த—சிகிமேரா!

3368. நடிக்குமயி லேறி
நலத்தருள நாயன்—முனம்வராய்.
மிடிக்குள்மெலி யாது
விருப்பமுடன் வேண—தருள்வாயே.
கடிக்கமல மார்பு
கருப்புநிற மாயன்—மருகோனே!
முடிச்சிகியின் மேரில்
முருக்கலர்கொள் சோலை—மலைவாழ்வே!

3369. தாதவிழ் நீப மாலை
தானணி மார்ப! கோடி—அருளாயோ?
மாதர சான தேவி
வானவர் தேவர் மாது—புணர்தோளா!
ஆதர வாக வேண
ஆசைய தாக மேன்மை—தருவாயோ?
சீதமு லாவு சோலை
சேர்சிகி மேரில் வாச!—முருகோனே!

3370. சந்திர வதன மாதர்
தங்கொடு மைய லின்கண்—மெலியாதே
வந்தினி யருள்செய் தேவே!
வங்கண மயலி வேடர்—மகள்தோளா!

தந்தியின் வதன ரானோர்
தந்துணை முருக! வேண—தருளாயோ?
செந்தியின் மலையின் வாச!
தென்சிகி மலைவி லாச!—அமரேசா!

3371. சோதி மதியணி தூய சடைமுடி—யவர்பாலா!
தாதி லகியபொன் தாவு மலரணி—புயநாதா!
ஆதி முனிவர்கள் ஆவ லொடுபணி—இருதாளா!
மோதி விளைபொழில் மூடு சிகிமலை—முருகோனே!

3372. காதன் மிகுத்த வேடர்
காரிகை யைகு லாவி—அணைதோளா!
மாதர் மயற்குள் வீழும்
மாலை அகற்றி வேண—தருளாயோ?
சீத மதிப்பொன் வேணி
தேவர் மகிழ்ச்சி யான—மகவேளே!
மாதவர் பத்தர் தேடு
வாகுள நற்சி காமென்—மலைநாதா!

3373. மயக்கு கூர்விழி இருட்செய் சீர்குழன்
மடப்பெ ணுருட—மயல்தீராய்.
குயத்தின் யானையில் விழச்செ யாதுநல்
குணத்தி லேவர—அருளாயோ?
செயத்தி னல்அவு ணருக்கு வேல்விடு
திறக்கு கா! குரு—பர!வேளே!
வயற்கு ளேபயிர் விளைக்கு நாடுகள்
வளப்ப மாகிய—சிகிமேரா!

3374. வருசூருடன் வருபோர்புரி—அயிலாளா!
முருகார்மலர் முடிவேடமின்—அணைதோளா!
அருமாமறை யவர்தேடிய—இருதாளா!
திருவேகிறை சிகிமாமலை—முருகோனே!

3375. மடமாதர் தருமாசை மயலான—வலையூடே
படஞாய மிலைவேண பரஞானம்—அருள்வாயே.
நடமாடு மயிலாளா! நலம்யாவு—மருள்வாயே.
வடமேரை நிகரான மயின்மேரின்—அரசாளா!

3376. வடித்தர மொழியார் மருட்டுமய லதனால்—மெலிவேனோ?
படித்துரை முருகா! பணைத்தவுடல் மயில்வா—கனவேளே!
துடிக்குநிக ரிடையாள் துரைக்கொடியை மயலா—
அணைதோளா!
முடிச்சிகர மிகுசீர் முதுச்சிகியின் மலைமேல்—வருதேவே!

3377. அடியவர் பணிசரணு !
அமரர்கள் தொழுகுமரா !—எனையாளாய்.
குடிவளர் குறமயிலாள்
குவிமுலை தனிலணைவாய்—அமரேசா !
கடிமல ரணிபுயவா !
கனமயின் மிசைவருவாய்—குகநாதா !
முடிபுனை பொழில்நிறைசீர்
முதுசிகி மலையரசே !—அருள்வாயே.

3378. மடவார் மயலால் மருளா தருள்வாய்.
கடவா ரணனுர் கனிவா கியவா !
உடல்தீ வினையால் உருகா தருள்வாய்.
மடமே நினையாய் வருதோ கையனே !

3379. ஓது தமிழ்பாடி ஊமை யதுதேற—அருள்தேவே !
தீது தனையோட தேவர் பணிநாத !—அருளாயோ?
தாது லவுநீப ! சாமி குருநாதா !—எனையாளாய்.
மோது கடல்சூழு முது சிகிமேரில்—வருதேவே !

3380. அடம்புரி வோர்கள்
அனம்படை யார்கள்—இடமேதான்
நடந்தினி தான
நலஞ்சொலல் பாவம்—அதுதீராய்.
கடம்பணி மார்ப !
கனிந்தருள் யாவும்—உதவாயோ ?
தடங்கொளும் சோலை
தழைந்திடு தோகை—மலைநாதா !

3381. மனத்துயர் தீர வேல !
மகிழ்ச்சிய தாக வேண—தருளாயோ ?
சினத்துட னுக மூடு
செருச்செய மாவை வேல்கொண்—டடுசூரா !
வனத்துமி னுளை மேவு
மயிற்பரி யேறு தேவர்—பணிநாதா !
இனத்துமா மணிக ணீடு
எழிற்சிகி மேரில் வாச !—எனையாளாய்.

3382. மனதிலுறு நோயை மடியவரம் நீசெய்—அமரேசா !
கனகமயி லேறு கருணைமிகு நாத !—எனையாளாய்.
அனநடைமின் வேடர் அருமைமகள் மேவு—புயநாதா !
இனமணிகள் சேரு மெழிலுலவு தோகை—மலைநாதா !

3383. நடனம் புரிமயின்மேல்
நளினம் புரைசரண !—வருவாயே.
கடக மிணைகையினர்
கலகந் தனினுளையா—தருளாயோ ?
படமிஞ் சியவரவா
பரணம் புரிசடையார்—அருள்பாலா !
தடமிஞ் சியபொழில்சூழ்
சகமும் புகழ்கிரிமா—மலைநாதா !

3384. எனதுதுயர் தீர
எழில்மயிலின் மீது—வருவாயே.
சினவரவு சூடு
சிவனுடைய ஆசை—மக!வேளே !
அனநடையின் வேடர்
அருமைமக ளாசை—மகவேளே !
கனகமலை யான
கமழ்சிகியின் மேரில்—வருதேவே !

3385. மாத ராசையால்
வாட லாகுமோ யெளியேனுன்
மாயமாய் யாவுமே
மாறவே செய்குவா—யமரேசா!
சீத மானதோர்
நீப மாலையாய் ! வலுலோபர்
தேடி நாயினேன்
யாசி யாமலே—அருளாயோ ?
வந்த தேசெய்வோர்
தான வோர்களே களமீதே
மாள வேலையே
ஏவி சூரனே—அடுவோனே !
போத மாதவோர்
தேடு நாயகா ! மயிலாளா !
பூவு லாவுசீர்
சோலை சூழுதோ—கையின்மேரா!

3386. வஞ்ச மேபுரி வம்ப னாகிய—அசுரோன்மேல்
அஞ்ச வேல்விடு அண்டர் நாயக !—அருளாயோ ?
கஞ்ச னார்பணி கண்டு வேதம—துரைசெய்வாய்.
தஞ்சம் வேறிலை தண்சி காமலை—முருகோனே !

3387. தாதவிழு நீப மாலை
தானணியு மார்ப! கோடி—அருளாயோ?
மாதரசி யான வேடர்
மாமகளை மேவு! சீர்கொள்—புயநாதா!
சீதமதி சூடு வேணி
தேவமக! வேத நாதர்—அருள்பாலா!
வேதமுனி வோர்க ளேடு
மீறுசிகி மேரில் வாச!—முருகோனே!

3388. நடஞ்செய் மாமயிலா!
நலங்க ணீபுரிவா—யமரேசா!
அடஞ்செய் சூருடனே
அடும்பொன் வேல்கொடுபோர்—புரிசூரா!
படங்கொ ளரவணிவோர்
பகிர்ந்த சீர்சடையார்—அருள்பாலா!
தடங்கொள் சோலைகள்சூழ்
தழைத்த தோகையின்மா—மலைநாதா!

3389. அடுத்த அடியர்களை
அலைக்கு மிடியையடு—குவைநாதா!
தடுத்து எதிரசுரன்
தனைப்பொன் அயில்கொடுடன்—அடுவீரா!
கொடுத்து அடியருடை
குறைக்கு அருள்புரிவை!—குருநாதா!
தொடுத்த மலர்கொள்புய!
சுபப்பொன் மலையைநிகர்—சிகியாளா!

3390. வடிவுடைய நாத! மயிலில்நிதம் வருவாய்.
கடிகொள்மலர் மார்பா! கருணையுள துரையே!
துடியுலவு மசுரோன் துகள்படமுன் அடுவாய்.
முடியுலவு சீர்சேர் முதியசிகி மலையாய்!

3391. வானவர் பணியு பாத!
மாமயி னடிக்க யேறி—வருவாயே.
கானக மயிற்கு வேண
காதல்செய் குக!கு மாரா!—குருநாதா!
தேனலர் தரித்த மார்பா!
தேடிய எனக்கு வேண—தருளாயோ?
மானல மிகுத்த தோகை
மாமலை தனக்கு ராச!—முருகோனே!

3392. தொலையாத வாசை யான
அலைநேமி மீதி லாழ்தல்
சுகம்யாது? ஈது தீர்தல்—அரிதாமோ?
கலைமேவு சோம னீடு
பொழில்சூழு கான மாது
கனகாத லாக மேவு—புயநாதா!
மலையாது நோய்கள் தீர
நடமாடு தோகை மீறு
மயிலேறி ஆசை யாக—வருவாயே.
இலைவேலை மாவின் மார்பில்
உறைவு சூர! நாத!
எழிலான தோகை மேரில்—வருதேவே!

3393. வண்டு மூமலர் மாவிகை
வண்பு யமதி லேயணி—குகநாதா!
கண்டு நிகர்மொழி வேடமின்
கண்டி னிதுடன் மேவிய—புயநாதா!
அண்டர்கள் பணிபுரி நாயக!
அன்ப னெனையினி யாதரி—குமரேசா!
தண்ட லைமிகு தோகையின்
தங்க மென்மலை மீதினில்—வருதேவே!

3394. மாய மாதர்கள் ஆசை யால்உடல்
வாட நோவது—அதுவாமோ?
தூய மாதர்கள் தேடு சீர்பத!
தோகை யேறிய—குகநாதா!
வேய தாகிய வாகு நாயகி
வேட மாதொடு—புணர்தோளா!
காய நோய்தவிர் ஆர ணாகன
கார்கொள் தோகையின்—மலைநாதா!

3395. தொலையாத காம வாசை
துகளாகி நாயன் வாழ—அருளாயோ?
அலையாது பாத நீழல்
அருளாத தேது பாவ—மறியேனே.
கலையாவு மேசெய் வாய்பொன்
கமழ்தோகை யான வாசி—தனில்வீரா!
குலைவாக மாவில் ஏவு
குளிர்சாரல் சேர்சி காமென்—மலைநாதா!

3396. வடவரைநிகர் மயின்மலைதனில்—வருதேவே!
கடகளிறுட கருணைகொள்துணை—முருகோனே!
மடமயில்குற மகள்தனையணை—புயநாதா!
நடமயில்தனி னலமுடனென்முன்—வருவாயே.

3397. மதுமலர் சோலை நீடிய
மலையினிற் காண மேவிய—குறமானுள்
புதுநலத் தாசை மீறிய
புகழ்இதழ் சீர்கொள் மாபுய—முருகோனே!
விதுவினை புனைவர் நீள்சடை
விமலருக் காவ லாகிய—புதல்வோனே!
சதுமறைத் தேவர் தேடிய
சரணமை சோலை சூழ்சிகி—மலையோனே!

3398. வஞ்சனைபுரி சூருடல்
மண்டி டஅயில் எவிய—செயவீரா!
அஞ்சி டவரு நோய்தனை
அழித்தி டமயி லேறிமுன்—வருவாயே.
நஞ்ச ரவினை யேபுரி
நந்தி யின்விடை யாரருள்—மகவேளே!
கஞ்ச மினுறை கோடுயர்
கங்கு றவழ்சிகி மாமலை—முருகோனே!

3399. உமையவள் புதல்வா! உரிமையி னுடனே—அருளாயோ?
இமையவர் முதலோர் இனிமையி னுடனே—பணிபாதா!
சமையம தனிலே மயின்மிசை உடனே—வருவாயே.
அமைநிகர் புயமின் அகமகிழ் கணவா!—சிகிமேரா!

3400. மயிலேறிய பெருமான்
மகிழ்வாய்வரம் அருள்வாய்—முருகோனே!
ஒயிலா! குற மடமான்
உடனேமகிழ் குமரா!—குகநாதா!
குயிலாகிய மொழியாள்
குவிமாமுலை யுமையா—ளருள்பாலா!
வெயிலார்பொழி னிறைசீர்
மிகுதோகையின் மலையாய்!—வருவாயே.

---

3398. 'நஞ்சினை உடைய பாம்பினை விரும்பி அணிபவரும் நந்தியை இடப வாகனமாக உடையவரும் ஆகிய சிவபெருமான் அருள்புரிந்த பாலனே' என்பது மூன்றும் அடியின் பொருள்.

3401. கடவானையின் கனிவாகிய—துணையாளா!
மடமானெனும் மயிலாள்குற—மகள்தோளா!
அடமேபுரி வசுரோனுடல்—அடுவீரா!
தடமேமிகு திகுதோகையின்—மலைநாதா!

3402. துயர்தீரிட வருவாய் துரைவேலவ! அருளாய்.
மயலாகிய குறமா னுள்மீதினில் அணைவாய்.
கயலாகிய விழியார் கனமாய்கையை ஒழிவாய்.
புயல்தாவிய பொழில்சேர் புகழ்தோகையின் மலையா!

3403. எனது நோய்தனை இனிமி காதருள்—புரிவாயே.
மனதி னுசையின் மகிழ வேணது—தருவாயே.
தினமு லாவிய திறலின் மாவுடல்—தடிவேலா!
கனக மேயொளிர் கமழ்சி காமலை—முருகோனே!

3404. அணுவாகிலும் எளியேனிடம்
அருளாததென்—முருகோனே!
அணுகாதமர் புரிசூருடல்
அதுவேயடு—துணைவேலா!
எணுமாயுசு குறையாதருள்
எழில்சேர்சிகி—மயிலாளா!
விணுலாவிய பொழிலேநிறை
மிகுதோகையின்—மலைநாதா!

3405. ஆடுமயில் வாகனு!
ஆதரவு செய்வாய்—அமரேசா!
வாடுமிடை யார்களே
மாமயலை நீயிநாள்—விலகாயோ?
பாடுமுயர் நாவலா!
பான்மதிகொள் வேணியர்—அருள்பாலா!
காடுநிறை தோகையாங்
கார்மலையின் நாயகா!—அருளாயோ?

3406. வருகிற துயரை மடியநி னருள்செய்—அமரேசா!
ஒருமயின் முதுகி னுடனென்முன் வருவை—முருகோனே!
அருமறை முதல்வ! அழகிய குறமின்—அணைதோளா!
திருமகள் உறையுஞ் சிகிமலை யரச!—வடிவேலா!

---

3404. விண் + உலாவிய - விண்ணுலாவிய என்று வரவேண்டியது எதுகை நோக்கி 'விணுலாவிய' என்றாயிற்று.

3407. சத்துரு வாகிய
தக்கனை நேரிடு
பரமேசனுர்—அருள்பாலா!
கொத்துடை மாமலர்
கொட்டிமுன் பூசனை
புரிவோர்பால்—அருளாயோ?
நத்துயர் பாணியர்
நத்திய மேன்மைகொள்
மருகேசா!—குகநாதா!
மொய்த்துயர் சீர்பொழில்
முக்கிய மாகிய
சிகியான—மலைநாதா!

3408. வந்த துயர்தீர
மண்டு சிறையான—மயில்வாராய்.
சந்த மிகுநீப!
கஞ்ச மலரான—இருதாளா!
சந்த மிகுபாடல்
தந்து நயமான—அருள்தாராய்.
கொந்த லர்கொள்சோலை
கொண்ட சிகிமேரில்—வருதேவே!

3409. நடத்து மயிலேறி நலத்தை அருள்வாய்தென்—முருகேசா!
அடத்தில் வருசூர னகத்தை அழியவேசெய்—அமரேசா!
குடத்தை நிகரான குவிந்த தனமினளை—அணைதோளா!
திடத்த பொழில் சேருஞ் சிகிக்கி ரியின்வாச!-முருகோனே!

3410. தாதுறு நீப மான
தார்புனை மார்ப! வேண—தருள்வாயே.
வாதுறு சூர னவி
மாளிட வேலை யேவு—செயவீரா!
கோதுறு நோய்கள் தீர
கோகன கான னுளென்—முன்வாராய்.
போதுறு சோலை சூழும்
பூமலி தோகை மேரில்—வளர்தேவே!

3411. மலைச்சாரல் வாழ்கு றப்பெண்
மயிற்காசை யேவி ழைந்த—அழகாளா!
சிலைப்பாண மேயெ டுத்துத்
தெறித்தேமுன் ராவ ணற்கு—எதிராக

அலைத்தொட வேத ளத்தை
அடித்தோட வேசெய் யுமால்—மருகோனே!
இலைச்சோலை சூழ்த லத்த
எழில்தோகை மேரி லுற்ற—முருகோனே!

3412. வனசமலர் மாது மருவுபுய நாதர்—மருகோனே!
அனமுலவு சோலை யழகினுயர் மாது—புணர்தோளா!
மனதில்வரு நோயை மடியவர மேசெய்—அமரேசா!
கனகமலை நேரு கனசிகியின் மேரில்—வருதேவே!

3413. வானவன் மடந்தை யோடு
வாழ்புன மடந்தை யோடு—மணிதோளா!
தேனலர் மிகுந்த நீப!
சீர்மலி யலங்கல் மார்ப!—அருளாயோ?
சானகி மணந்த மாயன்
தார்புனை சிறந்த மால்தன்—மருகோனே!
நானம திலங்கு சோலை
நாற்புறம் மலிந்த தோகை—மலைநாதா!

3414. தீவினை யால்வரு
நோய்தனை யேஇனி
தீரிட வேகிருபை—புரிவாயே.
பாவிய ராகிய
பேரிட மேசெலும்
பாவம தாமதை—விலகாயோ?
ஆவியை யேநிக
ராமிரு வோருடன்
ஆடிய மாமயின்—மிசைவாராய்.
தாவிய சீர்பொழி
லேநிறை தோகையின்
சாரல்கொள் மாமலை—முருகோனே!

3415. அனியாய மான
மிடியூடு லாவி
அழியாது கோடி—நிதிதாராய்.
சனியான பாவி
அணுகாது தோகை
தழைவான சீர்கொள்—மயின்மீதே

3413. வானவன் மடந்தை = தேவசேனை. வாழ்புன மடந்தை = வள்ளியம்மை.

இனிதாக வேயென்
　　முனமாசை யாக
　இனிவாரா தென்?வேல்—அணிவோனே !
பனியான சோலை
　　தவழ்சாரல் மேவு
　பகர்தோகை மேரில்—வருதேவே !

3416. நடமாடியலை யிலேவியங்கு நறுநீபமென்—மணிமார்பா !
கடமாகிய தனநாயகி கமழ்வேடமின்—அணைதோளா !
திடமாகவே அசுரோனுடல் தெறியாய்விட—விடுவேலா !
வடமேரின் இணையாகிய மயின்மாமலை—வருதேவே !

3417. மனதில்வரு நோயை மடியவரம் நீசெய்—அமரேசா !
வனசமலர் மாது மருவுயுய நாதன்—மருகோனே !
அனநடையின் மாது அழகுதிகழ் வேடர்—மகள்தோளா !
கனகமலை நேரு கனசிகியின் மேரில்—வருதேவே !

3418. விகுவேசெய் மாத
　　ருடவாசை யான
　வெகுவாகு மாழி—தனிலேதான்
புகுதாம லேகின்
　　அனுபூதி யேசெய்
　புரையே யிலாத—மயிலாளா !
பகுவாக மாவி
　　னுடன்மீது வேறு
　படவேலை யேவு—செயநாதா !
தருசோலை சூழும்
　　முடிமேவு தோகை
　தனிமேரு லாவு—குகநாதா !

3419. வருசூருடன் எதிரேபுரி
　　வையுலாவிய—அயிலாளா !
மருவேநிறை யிதழ்சேர்கன
　　மலர்நீபமென்—மணிமார்பா !
அருவா!மறை புகழ்நாயக !
　　அருளேபுரி—முருகோனே !
தருவேநிறை சிகியாகிய
　　தருதோகையின்—மலைநாதா!

---

3416. 'நடமாடுகின்ற காலத்து அங்கும் இங்கும் அலைகின்ற நீபமாலையினைத் தரித்த மார்பினை உடையவனே'—முதல்வரியின் பொருள்.

3420. அயிலான விழிமாத ரவராசை—வலையூடே
ஒயிலாக விழுவேனை யுயர்வான—கிருபைதாராய்.
குயிலான மொழிமாது குறமானை—யணைதோளா!
செயிலாரும் வளையூருந் திறனேம!—சிகிமேரா!

3421. தங்கச்சிலை யாலெதிர் தானவர்
தங்கட்குடல் கீறிட வேபுரி—பவர்பாலா!
பங்கப்பட வேயெதிர் யாவொடு
பம்பிக்கடல் போல்வரு சேனையை—அடுவேலா!
திங்கட்கினை யாகிய ஆனன!
செஞ்சொற்றமிழ் பாடிய நாவல!—அருளாயோ?
புங்கப்பொழில் சூழ்தரு சீருள
பொன்சித்திர மாகிய தோகையின்—மலைநாதா!

3422. வஞ்சனை உற்ற அவுணனை வெற்றிகொள்
வண்புக ழுற்றிடு—அயிலாளா!
அஞ்ச முற்றிடு பங்கய வற்புத
அம்பத மெய்க்குற—மகள்தோளா!
நஞ்சது வுக்கினை கொண்டிடு உலுத்தரை
நன்கு மதித்திடல்—விலகாயோ?
தஞ்ச மெனவருள் குன்றை மலைக்குக!
சங்கரர் பெற்றிடு—புதல்வோனே!

3423. நடிக்குமயில் ஏறி யெனக்குளதி ராக
நலத்தருள ஆவ—லுடன்வாராய்.
படிக்குமுயர் வான தமிழ்க்குமுத லே!விண்
படர்ச்சிதரு சோலை—மயிலாளா!
குடிக்குயர மான முடிக்குமர நாத!
குகச்சரவ ணேச!—அருளாயே.
மிடிக்குணவி யாமல் விலக்கிடுவை நாளும்
விரைச்சிகியின் மேரில்—வருதேவே!

3424. மருட்டு மாதர்கள்
மயக்கு மாசையின்—மெலிவேனோ?
திருட்டு லோபியர்
சிரித்தி டாதவர்—இடமேதான்
இருக்கு மாநிதி
இளிச்ச வாயெனல்—விலகாயோ?
திருக்கு லாவிய
சிகிப்பொன் மேரினில்—வருவாயே.

3425. பொருது சூருடன் இறைகொள் தானவர்
பொடிய தாய்விழ—அடுவேலா!
மருவு லாவிய கமழு நீபமென்
மலரின் மாலிகை—புனைதோளா!
கருகி நோயினில் மெலிப டாதருள்
கனிவ தாயினி—உதவாயோ?
தருவு லாவிய பொழில்கள் சூழ்தரு
தகுசி காமலை—முருகோனே!

3426. ஆடிய மயில்மேல் யான்மகி ழிடவே—வருவாயே.
தேடிய அடியார் தேவர்கள் முதலோர்—பணிபாதா!
பாடிய புலவா! பார்வதி புதல்வா!—அருளாயோ?
நீடிய பொழில்சேர் நீள்சிகி மலையா!—முருகோனே!

3427. அந்தி மதிபுனை செஞ்ச டையின்முடி
அண்டர் பணியரன்—அருள்பாலா!
தந்தி முகருட சிந்தை மகிழ்துணை
தங்க மயின்மிசை—வருதேவே!
செந்தி மலைவரு கந்த! குருபர!
செஞ்சொல் பயில்குக!—குமரேசா!
மந்தி பயில்தரு கின்ற பொழிலணை
மங்கு றவழ்சிகி—மலைநாதா!

3428. வஞ்சனைபுரி சூருடன்
மண்டிடவரு சேனையை—அடுவேலா!
நெஞ்சினில்வரும் நோய்தனை
நின்றயவினி லேயதை—விலகாயோ?
தஞ்சமதினி யாதரி
சங்கரர்தரு பாலகா!—எனையாளாய்.
மஞ்சதுதவழ் சோலைகள்
மண்டியசிகி மேரினில்—வருதேவே!

3429. ஆருதுணை நீயறிய
ஆறுமுக னே! அருள்வாய்—குகநாதா!
சேருநிறை யானபடை
தேரவரு சூருடைய—பகைவேலா!
தாருலவு கேசமயில்
சாரல்மலை மாதுபுணர்—புயநாதா!
காருலவு சோலைநிறை
கானமயில் மேரில்வரு—குகநாதா!

3430. ஆறுமுக மிலங்க பாதம்அணி சிலம்பு
ஆரமொடு குலுங்க—வருவாயே.
வீறுபடை கொண்டு தானெதிர்செய் கின்ற
வேகஅசுர் வென்ற—அயிலாளா!
தேறுபட அன்பன் மீதுவரு கின்ற
தீவினைகள் இன்று—துடையாயோ?
பாறுமுத லண்ட மிலாதுயர் வளர்ந்த
பார்மிகுதி குன்றை—மலைநாதா!

3431. அண்டர்பணி சரணு!
அன்பன்எனை யினியா—ளிடவாராய்.
வண்டனென வருசூர்
மண்டிவரு படையோ—டடுவேலா!
தண்டமிழை யருள்வாய்.
சங்கரர்தன் மகவே!—கிருபைதாராய்.
கொண்டல்படி பொழில்சூழ்
குன்றைமலை யரசே!—அருளாயோ?

3432. தீரா தவினை தீரிட வேயருள்
தேவா திபர்யா வர்களு மேபணி—இருதாளா!
தரா னதொரு நீபம தேயணி
சால்பா கியகல் யானையி ருட—துணையாளா!
போரா டியவல சூரனை யேயடு
பூபா! கதிர்கொள் வேலவ னே!கிருபை—புரிவாயே.
வாரா டியதன மயில்மகிழ் வாகிட
வாழ்வே! மிகுசி காமலை மேல்வரு—குகநாதா!

3433. மாதவ ரடியார் வாசனை மலர்தூய்—நிதமேதான்
பாதமென் மலரே பாரோடு பணிவார்—அருளாயோ?
தாதவிழ் மலரான் தான்மகிழ் குருவே!—அருளாயோ?
மாதய வுடனே வாழ்வருள் சிகிமா—மலைநாதா!

3434. வனச மண்டப
மகளி லங்கிய
திருமாயன்—மருகோனே!
எனது சிந்தையில்
நான்ம யங்குதல்
தவிராய்பொன்—முருகோனே!

---

3430. பாரு என்பது பாறு என எதுகை நோக்கித் திரிந்தது ; பொருள், மண்ணுலகம்,

உனது அன்பனை
உரிமை கொண்டுடன்
நிதம்ஆள—வருவாயே.
கனக மிஞ்சிய
கமழ்செ கண்டியின்
மலைமீது—வருவாயே.

3435. நலமிடு மயிலா! நலமினி அருள்வாய்—அமரேசா!
மடமயிற் குறமான் மருவிய புயவா!—எனையாளாய்.
குடநிகர் முலையாள் குமரிதன் மகவே!—கிருபைதாராய்.
திடமுடி நிரைசேர் சிகிமலை மிசைவாழ்—குகநாதா!

3436. மாறுபா டான மாதர்
மாசைபோ லான மாலை—விலகாயோ?
சீறுபா ருன மாதர்
தேவிய ராலு மோசம்—விலகாயோ?
கூறுவே லாயு தா!யென்
கோலநா யகா!வி லாசா!—முருகோனே!
மீறுசீர் சோலை சூழும்
மேன்மைசேர் தோகை மேரில்—வருதேவே!

3437. தார்தவிழ் நீப மாலை
தானணி மார்ப! கோடி—அருளாயோ?
மர்தர சான தேவி
வானவ ராசன் மாது—புணர்தோளா!
சீதரன் மேவு மாது
தேவியி னைச யான—மருகோனே!
கோதக லான சோலை
கூடிய தோகை மேரில்—வருதேவே!

3438. ஆனை முகத்து ஆடு கரத்தர்—துணையாளா!
சேனை படைத்த சீரசு ரைக்கொல்—அயிலாளா!
தானை செழித்த தார்விற லுக்கு—மருகோனே!
வானை யடுத்த மாமுடி பெற்ற—சிகிமேரா!

3439. உடலில்வரு நோயை
உடன்விலக வேணும்—அருளாயோ?
மடமயிலி வேடர்
மகளைமய லாக—அணைதோளா!
குடமுலையின் மாதர்
குலவுமயல் தீர—அருளாயோ?
வடவரையை நேரு
மயின்மலையின் வாச!—முருகோனே!

3440. சீத மதியணி வேணி யருளிய
சேயெ! வெகுகிருபை—புரிவாயே.
தாத விழுமலர் நீப மணிபுய!
சாமி! குக!குரு—பர!வேளே!
காதன் மிகுகுற மாது புணர்புய!
கான மயில்தனில்—வருதேவே!
வேத முனிவர்கள் நாளு பணிபவ!
மீறு சிகிமலை—முருகோனே!

3441. தத்தி விளையாடு மயிலா!
சத்தி குறமாது கணவா!—எனையாளாய்.
முத்தி யடியார்க ளிடமே
முற்று மருளேசெய் சோலை—மலைநாதா!
நத்தி லகுபாணி மாவின்
நன்மை மிகுமாது மருகா!—முருகேசா!
சித்தி விளையாடு கனமார்
சித்திர மிகுதோகை மலைமேல்—வருதேவே!

3442. வருகிற நோயை மடிபட வேலை—எறியாயோ?
பொருதிடு சூரன் புளபட வேமுன்—அடுவோனே!
மருவுள நீப மலரணி மார்ப!—அருளாயோ?
திருவுள தோகை திகழ்மலை வாழ—முருகோனே!

3443. பொருது சூருடல் புளவ தாகிட—எயுவீரா!
மருவு லாவிய வனச மாமலர்—நிகர்தாளா!
திருவு லாவிய சிகியின் மாமலை—வருதேவே!
முருக! நாயக முதல்வ! தேவர்கள்—பணிதாளா!

3444. மோச மாகிய தீவினை யால்மயல்
மூடு நோய்தனை யேதவி ராய்அம—ரர்கள்நாதா!
நாச மாகிட வேயெதி ரேவரு
நாலு சேனையு மேவிழ மாவுடல்—அடுவேலா!
பாச மோடெதிர் பாபியர் லோபர்கள்
பாக மேசெலல் பாவம யா! கிருபை—புரிவாயே.
தேச தேசமெ லாம்நிறை வோர்பணி
சீர்சி காமலை நாயக னே!யினி—எனையாளாய்.

3445. ஒருவர்துணை யேது உனைமறக்கொ ணுதது—எதனலோ?
இருவர்மய லாள! எளியனுட தீவி—னைகள்தீராய்.
மருவுலவு நீப மலரணியு மார்ப!—அருளாயோ?
திருவுலவு சோலை செழுமையுள தோகை—மலைநாதா!

3446. நடிக்குஞ்சிறை மாமயில் ஏறிமுன்
நலத்தண்டைகள் ஒலிட வேஎன்முன்—வருவாயே.
படிக்கும்வர மேகிருபை நீயருள்
பணிச்செஞ்சடை நாயக ஞருடை—மகவேளே!
இடிக்கும்படி யேயதிர் வாய்விடு
இசைக்கும்படை யோடெதிர் சூருடல்—தடிவேளே!
வடிக்குங்கன தேன்வழி சோலையின்
வளப்பஞ்செறி தோகையின் மாமலை—முருகோனே!

3447. திடமுடன் எதிர்த்த செருபயி லசுரர்க்கு—விடுவேலா!
நடமிடு மயிற்கு நலமிகு நடத்து—முருகோனே!
மடமயில் குறத்தி மகள்மண முடித்த—புயலோலா!
வடவரை நிகர்த்த மயின்மலை சிறக்க—வருதேவே!

3448. தாதவிழு நீப மாலை
தானணியு மார்ப! கோடி—அருளாயோ?
மாதரசி யான தேவி
வானரசர் தேவி மாது—புணர்தோளா!
மோதமர்செய் சூர ஞவி
மோசமிட வேலை யேவு—செயவீரா!
சீதமதி தாவு சோலை
சேர்சிகியின் மேரில் வாழு—முருகோனே!

3449. மோதியபடை வீழிடயெதிர் மூரியினசு—ரர்கள்காலா!
தாதவிழ்மலர் நீபமதணி தாரணிபுய!—முருகோனே!
ஆதரவினி நீயருள்புரி ஆறிருபுய!—எனையாளாய்.
மாதயவுள நாயக!வருள் மாமிகுசிகி—மலைநாதா!

3450. அடம்புரி சூரன் அகந்தையை வேரோ—டெடுவேலா!
நடம்புரி தோகை நலந்திகழ் கான—மயில்வீரா!
மடந்திகழ் வேடர் மகிழ்ந்திடு மாது—புணர்தோளா!
தடம்திகழ் தோகை தகுங்கிரி வாழு—முருகோனே!

3451. வந்த தீவினை வெந்து வீழிட
மண்ட வேலினை—எயும்வீரா!
சந்த மேவிய பண்பு லாவிய
தன்சொல் பாவினை—அருளாயோ?
கந்த மாமலர் கொண்ட கார்குழல்
கஞ்ச நாயகி—மருகோனே!
அந்த மேவிய குன்றை மாமலை
அன்ப ரே! அடி—யனையாளாய்.

3452. மனதில் வருதுயர் அகல வருள்புரி
மயிலில் வருகுரு—பர!வேளே!
உனது பதமதை யனுதி னமும்துதி
உறுதி யெனநினை—எனையாளாய்.
வனச மலர்தனில் உறையு மடமயில்
மருவு புயவிறல்—மருகோனே!
கனக மலைநிகர் சிகியின் மலைவரு
கருணை சரவண—முருகோனே!

3453. மடக்கொடி யான குறக்குயின் மாது
மயற்சிகை வான—புயலோலா!
கடக்களி றூன முகத்தினர் ஆசை
கருத்துள சோத—ர!குகேசா!
திடக்கன சூர னுடற்பிள வாகச்
செயித்திட வேலை—யெயும்வீரா!
தடம்பொழில் சூழு சிகிக்கிரி வாச!
தமிழ்ப்புல வா!தென்—மயிலாளா!

3454. சணத்தி லேயெதிர் தருக்கு வேல்விடு—செயவீரா!
மணத்த நீபமென் மலர்ப்பு யாசல!—முருகோனே!
பணத்த ராவணி பணைத்த வேணியர்—அருள்பாலா!
வணத்த சோலைகள் வளைத்த தோகையின்—மலைநாதா!

3455. படையொ டெதிர்வரு அசுர னுடலது
பகர அயல்விடு—செயவீரா!
மடையில் வருகுவ வண்டுண் தென்மலர்
மதுவ ழியுவயல்—வளநேமா!
அடைய லர்கள்பணி சரண! குருபர!
அழகு திகழ்மயின்—முருகோனே!
விடையில் வருபவர் அருளு முருகைய!
விரைசெய் பொழின்மிகு—சிகிமேரா!

3456. ஆடியமயின் மீதினிலெனை ஆளிடமுனம்—வருவாயே.
கூடியகவி வாணரில்வெகு கூர்மையனென—அருளாயோ?
நாடியபடி யேஅருள்புரி நாரணனுட—மருகோனே!
தேடியநிதி யே! குருபர! சீர்சிகிமலை—முருகோனே!

---

3454. 'சணநேரத்தில் விரைந்தெதிர்க்கும் வேல்விடும் வெற்றி வீரனே' என்பது முதலடியின் பொருள்.

3455. அடையலர்கள் = பகைவர்கள்.

3457. தாதவிழு நீப மான
தார்புனையு மார்ப! கோடி—அருளாயோ ?
மாதரசி யான தேவி
வானரசன் மாது மேவு—புயலோலா!
மோதமரர் சூழு மாவை
மூரிமிகு வேலை யேவி—அடுசூரா!
சீதமதி தாவு சோலை
சேர்சிகியின் மேரில் வாழு—முருகோனே!

3458. இடியேறென வெகுசேனைகள் எதிராகிட—வருமாவே
படலேபுரி அயிலா! யினி அருளேபுரி—குகநாதா!
மடமாமயில் எனவேவரு மறமான்மயல்—மிகுதோளா!
தடமாமுடி நிறைதோகையின் நகுமேரினில்—வருதேவே!

3459. மனதி லாசைகள் தவிர வேயருள்
வனச மாமலர்—இருதாளா!
தனமி னூர்தரு மயல்கள் தீரவே
தருநல் பேரருள்—முருகோனே!
கனக மாமயி லினிதி னேவரு
கழலி னய்!குக!—எனையாளாய்.
வனசம் போல்முகம் மலர வேமுனம்
மயிலி லேவரு—சிகிமேரா!

3460. விதியால்வரு கிறநோய்தனை மெலிவாய்விழ—அடுவாயே.
கதியானடை பயின்மாமயில் கனமார்கிய—பரியாளா!
நதியால்விளை வயலேநிறை நலனேமகன்—னகராளா!
மதியானன! எனையாளிட வருவாய்சிகி—மலைநாதா!

3461. வருத்த மேசெயு விழிப்பெ ணூருடை
மயக்க மாவலை—விலகாயோ ?
கருத்த னே!கிருபை யெனக்கு நீசெய்வை
கடப்ப மாலிகை—புனைமார்பா!
விருத்த மாயுள சடைப்பொன் வேணியர்
விருப்ப மாகிய—புதல்வோனே!
திருத்த மாமுடி நிறைத்த சோலைகொள்
திருச்சி காமலை—முருகோனே!

3462. மடவார்தரு மயலான்மெலி—குவனூனே.
இடர்தீரிட இசைவாய்மயின்—மிசைவாராய்.
கடவானனர் கருணாநிதி—துணையாளா!
தடமாடிடு தகுதோகையின்—மலைநாதா!

3463. வடவரையை வளைத்த வலுவுளமின் கரத்தர்—அருள்பாலர்!
மடவியர்த மயற்குள் மடிவதை விலக்கி—அருள்வாயோ?
திடமுளவசு ரற்கு செருக்கொளயி லைக்கொ—டெயும்வீரர!
தடமுளபொழி லுக்குள் தழுவியபொ னிறைத்த—சிகிமேரா!

3464. மயலேபுரி விழிமாதர்கள் மருளாசையை—விலகாயோ?
புயலேநிகர் குழலாள்வளர் புனநாயகி—புணர்தோளா!
கயலேநிகர் விழிமாதுமை கௌமாரிதான்—மகவேளே!
வயலேநிறை பொழில்சூழுயர் வளர்தோகையின்—
[மலைநாதா!

3465. எனது தீவினை யெள்ளள வாகிலு—மணுகாதே
உனது சீர்பத முரிமை யாயினி—அருள்வாயோ?
சினவ ராவணி சிவச டாதரர்—அருள்பாலா!
கனக மாகிய கமழ்சி காமலை—முருகோனே!

3466. மாத ராசையின் நாயி னேன்விழ
மாய மோஇதை—அறியாயோ?
கோத ராவணி வேணி யாரருள்
கூறு பாலக!—எனையாளாய்.
சீத மாமதி ஆன ன!உயர்
தேவர் மாதவர்—பணிபாதா!
நாத ராகவன் வேத னேபுகழ்
ஞால மீதுயர்—சிகிமேரா!

3467. அடமேபுரி அசுரோனுடல்—கிழிவேலா!
நடமாடிய நலமாமயில்—மிசைவாராய்.
மடவாருட மயல்தீரிட—அருளாயோ?
தடமாமுடி தகுதோகையின்—மலைநாதா!

3468. மாய மேபுரி மாத ரால்வரு—மயலாலே
நேய மாகிய நீடு நோய்தனை—அகலாயோ?
சேய னே!குரு தேசி கா!கிருபை—புரிவாயே.
தூய சோலைகள் சூழ்சி காமலை—முருகோனே!

3469. மதித ரித்திடும் சடைமு டித்தவர்
மலைவி ழைந்தவர்—தருபாலா!
கதிப டைத்திடு சரமி குத்திடு
கனம கிபரி—மிசைவாராய்.
குதிநி கர்த்திடு விழியர் தம்மிடம்
குலவு நட்பினை—விலகாயோ?
அதிப திக்குரு பர!சி கிக்கிரி
அதில ருள்செய—வருவாயே.

3470. குயிலாகிய மொழிமாதர்கள் குவிமாமுலை—மயலாலே
வெயிலான்மெலி பயிர்போலவும் விளராதருள்—புரிவாயே.
அயிலாலெதிர் படுசூருடன் அடுபோர்புரி—செயவீரா!
ஒயிலாகிய அருள்வாய்குக! உயர்தோகையின்—மலைநாதா!

3471. அதிரூப மடவார்கள் அனுராக மதனாலு—மெலிவேனோ?
விதியாலு மதியாலும் விளைநோயை யடுவாய்தென்—
[மயிலாளா!
உதிசூரி யனைநேரு உருவாள! வடிவாள!—அருளாயோ?
கதிரான முடிசூழுங் கனதோகை மலைமீது—வருதேவே!

3472. முகமதி மீறு குரல்குயி லான
முதல்விய ளாகு—மறமானள்
அகமகிழ் வாக மருவிய லோல!
அழகிய தோகை—மிசைவாராய்.
மகமுனி வோர்கள் அமரர்கள் கோடி
மலர்கொடு தாவு—சரணேசா!
இகமதில் வேண தருள்குரு நாதா!
எழில்மிகு தோகை—மலைநாதா!

3473. உடலி லுற்றிடு பிணியை யிற்றிட
உனது நற்கிருபை—புரியாயோ?
கடக ரிக்கிசை வதன அற்புதர்
கருணை யுற்றிடு—துணையாளா!
மடம யிற்குற மகள்ம யலொடு
மருவு மயக்க—முருகோனே!
மடன்மு றுக்கவிழ் பொழினி றைத்திடு
மயின்ம லைக்குரு—பரவேளே!

3474. ஆடிய மயிலா! ஆறிரு வதனா!—எனையாளாய்.
நாடிய படியே நாள்தொறும் வரமே—அருளாயோ?
வாடிய அடியார் மனமகி ழிடவே—வருவாயே.
பாடிய புலவா! பார்புகழ் சிகிமா—மலைநாதா!

3475. வருத்த சேனைக ளோடு
வளைத்து போர்செயு மாவை—யடுவீரா!
கருத்த னே!கிருபை நீசெய்
கமழ்ச்சி யாகிய நீப—மலர்மார்பா!

திருத்த மாகிய தோகை
சிறக்கு மாமயி லேறு—முருகோனே!
தருக்கொள் சோலைகள் மீது
தழைத்த தோகையின் மேரில்—வருதேவே!

3476. உடலெ டுத்த நாள்முதலா
உனது பத்தியே மறவாத—எனையேதான்
மடவி யற்குள.மதிகமதாய்
மயலி லுற்று மெலிவதையே—எய்வாயோ?
கடக ரிக்கு இளையவனே!
கருணை பெற்ற துரைமுருகா!—கிருபைதாராய்.
தடமு டிப்பொன் வரைநிகராத்
தழைசி கித்தென் வரையினிலே—வருதேவே!

3477. மகநாறு புரிவானவன்
மகளாசை மிகுமாலிகை—புனைமார்பா!
அகமேசெய் அயல்மாவுடன்
அடுபோர்செய் கதிர்வேலவா!—எனையாளாய்.
முகமாய மிடுபாவையர்
மொழியேதகு மெனுமாசையை—அழியாயோ?
செகம்யாவு நிதமேபணி
திருமேவு சிகிமாமலை—முருகோனே!

3478. மடமாமகள் மயலால்நல வழியாவையு—மறியாதே
நடமாடுதல் நலமா?மலர் நறுநீப!—கிருபைதாராய்.
குடமாமுலை உடைநாயகி குறமான்மரு—வியதோளா!
தடமாமுடி நிறைசோலைகள் தகுதோகையின்—மலைநாதா!

3479. அடவியில் வருகுற மயிலியின் அழகினில்
அதிமய லொடுபுணர்—புயவேளே!
கடகரி யுடமுகக் கமலம தனுகொளும்
கருணையின் மிகுபவர்—துணைநாதா!
கெடவதி மயல்புரி மடவிய ரிணைவெகு
கெருவம தகலிட—அருள்வாயே.
தடவரை யினிலுயர் பொழினிறை சிகிமலை
தனில்வரு குருபர!—முருகோனே!

3480. தனியேவரு புனநாயகி தனையேபுணர்—புயநாதா!
கனிவாகிமுன் மயிலேறிய கருணாநிதி!—வருவாயே.
பனிவார்சடை முடிநாயகர் பரமேசர்தன்—மகவேளே!
பணிவோர்முதல் இனரேபணி முதல்வா!சிகி—மலைநாதா!

3481. மடம யிற்கிணை குறம கட்கொரு
மணம லர்த்தொடை—புனைநாதா!
கடக ரிக்கிசை துணைவ! வற்பொடு
கமல நற்பத—மருளாயோ?
திடமி குத்திடு வசுர னைக்கொலு
செயம்வி ளைத்திடு—அயிலாளா!
வடவ ரைக்கிசை முடிப டைத்திடு
வளர்சி கிக்கிரி—முருகோனே!

3482. கலக மேபுரி அசுர னுருடல்
கவர வேயயில்—விடுசூரா!
பலனை யேயருள் புரிவை நாயக!
பரம னரருள்—புரிபாலா!
திலக வாணுதல் மயிலி வேடமின்
செயுமில் லாசையின்—மணவாளா!
உலக மேபுகழ் சிகியின் மாமலை
உடைய நாயக!—அருளாயோ?

3483. கானக மயிலி மேவு
காரண! நாத! கோடி—அருளாயோ?
தானவர் வீழ வேமுன்
தான்வரு வோர்கள் மாள—விடுவேலா!
பானல மான சோதி
பாதியின் மாதி னுசை—மகவேளே!
வானவர் கோடி சூழ
மாமிகு தோகை மேலில்—வருதேவே!

3484. ஆதிபர மேசர்தரு ஆறுமுக நாத!
கோதிலகு சூரனுடல் கூறிடுபொ னயிலா!
பாதிமதி யானநுதல் பாவையர்கள் லோலா!
சோதிமுடி மேவுகன தோகைமலை நாதா!

3485. அடலேபுரி அசுரோனுடல்—அடுவேலா!
மடமான்மயில் வழியேதிரி—குதல்தீராய்.
உடல்நோய்தனை உடனேதவி—ரிடவாராய்.
கடல்சூழ்புவி கமழ்தோகையின்—மலைநாதா!

3486. கானக மயிலி மேவு
காரண! நாத! கோடி—அருளாயோ?
வானவர் மகளை மேவு
வாசனை யான நீப—மலர்மார்பா!

பானல மிலகு சோதி
பான்மதி சூடும் வேணி—அருள்பாலா!
தேனல ருலவு சோலை
சேர்சிகி மேரில் வாழு—முருகோனே!

3487. எதிர்வரு சூரன் இடறிட வேலை—எயும்வேலா!
கதிர்மிகு சோமன் கமழ்கன வேணி—அருள்பாலா!
ததியுறை மாயன் தகுமரு கேச!—அருளாயோ?
மதிதவழ் சோலை வளர்சிகி மேரில்—வருதேவே!

3488. தீராத வினைதீர வேயருள்
சேயான யெனைநாளு மேதய—வுடன் ஆளாய்.
வாராரு முலைவேட நாயகி
வளராசை கடன்மீதி லேமுழு—கியலோலா!
தாராரும் வடிவேலி னேஎதிர்
சாவாக வருசூர னுவியை—அடுவோனே!
வேராரு கனசோலை சூழ்தரு
மேலான மகமேரை நேர்சிகி—மலையோனே!

3489. மடவாருட மயல்தீரிட—அருளாயோ?
கடமாவுட கனமாகிய—துணையாளா!
நடமாடிய நலமாகிய—மயிலாளா!
தடமாமுடி தகுதோகையின்—மலைநாதா!

3490. மாதவர்பணி தாளா! மாமலரணி மார்ப!—அருளாயோ?
கோதறுகுரு நாதர்! கூரியவடி வேலா!—எனையாளாய்.
மாதர்கள்மயல் தீராய் வாசனைமலர் நீபா!—குகநாதா!
தாதவிழ்பொழி லேசேர் தாவறுசிகி மேரே—வருதேவே!

3491. வடித்த பாகுமொழி வகுத்த சோலைமயில்—புணர்தோளா!
படித்த நாவலவ! பணைத்த தோகைமலை—அருளாளா!
துடித்து வீழவெதிர் துணிக்க வேலைவிடு—செயவீரா!
நடித்த மாமயிலின் நலத்த தோகைமலை—வருதேவே!

3492. வஞ்சனை சூது புரிந்திடு சூருடன்
மண்டம ரேபுரி—திகழ்வேலா!
கஞ்சனை யேசிறை கொண்டகு கா!முனம்
கண்டம ரோர்பணி—புரிநாதா!

---

3492. கஞ்சன் - தாமரையில் வாழும் பிரமன்.

நெஞ்சினின் நோய்தவிர் எத்தனை யாதரி
    நின்கிருபை யேபுரி—குருநாதா!
மஞ்சனு லேதவழ் தண்டலை சூழ்தரு
    மண்புகழ் **தோகைமயின்**—மலைநாதா!

3493. நடிக்கும் மயிலேறி நலத்த வரமேசெய்—திடவாராய்.
படிக்க வரமேசெய் பணித்த சிகிமேலில்—வருதேவே!
வடித்த தமிழ்பாட மகிழ்ச்சி யொருவேணை—தருளாயோ?
மிடிக்கு அழிவாக விரைப்பொன் மணிமார்பு-அருளாயோ?

3494. மருப்பொலி நீப மாலை
    மணிப்புய மீது சூடு—முருகோனே!
கருக்குழி வீழ் டாது
    கணச்சிறை யான தோகை—மிசைவாராய்.
உருப்பொலி வேடர் மாது
    உருத்தொடு மேவு காத!—எனையாளாய்.
பொருப்பினி னீட தான
    புகழ்ச்சிகி **மேனில்** வாச!—அருளாயோ?

3495. கருதியபடி யருள்வாய் கருணையின் முருகையனே!
பொருதியவசு ரூடனே புளவிடவயில் விடுவாய்.
மருவுளமல ரயனார் வழிபடுகுரு பரனே!
திருவுலவிய பொழில்சேர் சிகிமலைவரு குகனே!

3496. மயக்கிய மாதர் மயற்பல வாதல்—தவிராயோ?
பயப்பட நோய்கள் பறந்திட வேணை—தருளாயோ?
செயப்பட மாவை இறந்திடு வேல்கொ—டெயுநாதா!
நயப்படு சோலை நணித்திடு **தோகை**—மலைநாதா!

3497. உடலில்வரு நோயை யழிவுபட நாளும்
    உனதுதய வாலும்—அடுவாயோ?
மடவியர்க ளோடு அதிகமய லாலும்
    மனநினைத்தல் பாவம்—அடுவாயே.
குடர்தசைக ளாலு மெடுசென்ம நோய்கள்
    குறைதனலம் வேணை—தருளாயோ?
வடவரையை நேரு முயர்பொழில்கள் சூழு
    **மயின்மலையின்** வாச!—முருகோனே!

3498. குடியில்வளர் குறத்தி மடவாள் மணந்த
    குருபர! எனக்கு—அருளாயோ?
அடியவர் தமக்கு வருபிணி யகற்றி
    அருமையிடு வெற்றி—முருகோனே!

இடியென அதிர்ந்து படையோடு நெருக்கி
எதிரிடு செய்வை—அயிலாளா!
முடிபுனை திறத்த மலருகு பொழிற்பொன்
முதியசிகி வெற்பின்—அமரேசா!

3499. திங்கள் தரித்த சடையார்
செங்கம லத்தர் முதலோர்—பணிதேவே!
சங்கர ருக்கு மகனுய்த்
தண்டுளை யுற்ற விறலார்—மருகோனே!
பங்கம திருக்கும் வயல்சூழ்
பண்பு செறித்த வளநே—மநன்னுடா!
துங்க மிகுத்த பொழில்சூழ்
சுந்திர முற்ற சிகிமா—மலைநாதா!

3500. மனத்திஞுறு நோயை மடியவர மேசெய்—முருகோனே!
தனக்கிரியின் மாதர் தழுவுமயல் தீர—அருளாயோ?
பனகமுடி வேணி பரிவுமிகு பால!—அமரேசா!
கனககிரி யான கமழ்சிகியின் மேரில்—வருதேவே!

3501. தீவினை தீரிட வேகிருபை யேபுரி
சேவக! நாவல!—முருகோனே!
பாவிய தாகியே நான்மெலி யாதுநின்
பார்வையி ஞல்இனி—எனையாளாய்.
ஆவியை வேறொரு கூடினி லேநுழை
யாய்இனி தாய்நின—தடிதாராய்.
தாவிய கோடுள சோலைகள் சூழ்தகு
சாரல்கொள் தோகையின்—மலைநாதா!

3502. சகத்தோர் முதலினோர் தமிழ்ப்பா வலர்கள்—பணிதாளா!
மகத்தே புரிபவன் மகட்காய் மணமலர்—புனைமார்பா!
முகத்தா மரைகன முலைப்பா வையருட—மயல்தீராய்.
மிகத்தா துறுமலர் விரைச்சோ லைகளிணை—சிகிமேரா!

3503. ஆடிய மயில்நாதா! ஆதர வினிநீதான்—குகவேளே!
பாடிய கனிவாயா! பார்புகழ் குருநாதா!—அருளாயோ?
வாடிட வசுரோன்மேல் வாளமர் செய்வேலா—யுதவீரா!
கூடிய பொழில்சூழ்சீர் கோதறு சிகிமேரா!—அருளாயோ?

3504. என்து தீவினை யுடலி னேய்தவி
ரிடவு மேகிருபை—புரிவாயே.
மனதி லேவரு துயர மேயற
மயிலி லேறிமுன்—வருவாயே.
கனக ளுருடல் கிழிய வேயடு
கரிய மாயவன்—மருகோனே!
தினக ராதிபர் உலகி லேயுயர்
திருவு லாவிய—சிகிமேரா!

3505. அரிய தவத்தினர் பரவு மலர்க்கழல்
அழகு படைத்திடு—குகநாதா!
கரிய நிறத்தினர் துளையணி யற்புதர்
கருணை மிகுத்திடு—மருகோனே!
பரிய படைகொடு வருமவு ணர்குலம்
பழிசெயும் மற்புய—முருகோனே!
உரிய எனக்கருள் கனசிகி நற்கிரி
உயர்குரு வித்தக!—வருவாயே.

3506. வனச மண்டப மாது
மருவு கொண்டலின் மேனி—மருகோனே!
மனது கந்திடு நோயை
மடிய அன்போடு வேணது—அருளாயோ?
புனம டந்தையை யாசை
பொருந்தி யிங்கித மாக—வணையாயோ?
கனக மிஞ்சிய தோகை
கமழ்செ கண்டியின் மேரில்—வருதேவே!

3507. கொடிய னுகிய வசுரன் மாளிடக்
குலவு கூரிய—அயிலாளா!
அடியன் மேல்வரு துயர மோடிட
அளவி லாதருள்—புரிவாயே.
வடிவி யாகிய குறமி னுளொடு
மருவு நாயக!—எனையாளாய்.
கடிகொள் சோலைகள் அதிக மாகிய
கனசி காமலை—முருகோனே!

---

.3504. கனகன் - இரணியன்.

3508. வடித்த பாகுமொழி மயிற்பெண் வேடமகள்—
[புணர்தோளா!
நடித்த தோகைமயின் நலத்த வாசிதனில்—வரும்வீரா!
படித்த பாவலரில் பரர்க்கு ஆசைதரு—புதல்வோனே!
தடித்த சோலைநிறை தகுத்த தோகைமலை—வருதேவே!

3509. அடம்புரி சூரன் அழிந்திட வேலை—எயும்வீரா!
நடம்புரி தோகை நலம்திகழ் வர்கன—முருகோனே!
வடம்புரி ஆனை மகிழ்ந்திடு சீர்கொள்—துணையாளா!
தடம்புரி சோலை தகுந்திடு தோகை—மலைநாதா!

3510. நெஞ்சினில் வருதுயரை நின்கிருபை கொள்விலகி—
[அருடாராய்!
வஞ்சனை புரிகொடிய மங்கைய ரிடமணுகல்—தவிராயோ?
நஞ்சினு முயரவுணர் நன்றுகொல் குலமழிய—விடுசூரா!
மிஞ்சிய பொழிலுலவு மின்பயில் சிகிமலையில்—வருதேவே!

3511. திருக்கலச முலைமாதர்
திருக்கதனில் விழுகாமல்—அருள்தாராய்!
மருக்கமழு மிதழ்நீப!
மலர்க்கணித மணிமார்ப!—முருகோனே!
கருக்குழியி லுழலாது
கருத்திறெனும் எனையாள—வருவாயே.
தருப்பொலிவு மிகுசோலை
தழைத்தசிகி மலைமேவு—குமரேசா!

3512. அடம்புரி சூரன் அகந்தையை யோட—அருள்வாயே.
நடம்புரி தோகை நலந்திகழ் வாக—னகுகேசா!
மடந்திகழ் மாதர் மயங்கிய வாசை—தவிராயோ?
தடந்திகழ் தோகை தகுந்திடு மேரில்—வரும்வேளே!

3513. மயலாகிய விழிமாதர்கள் வழிபோகிற—விதிதீராய்.
குடமீறிய வடிவேல்நிறை குறநாயகி—மணவாளா!
அயலாரிட மணுகாதினி அருளேபுரி—குமரேசா!
மயல்சூழ்தரு பொழில்சூழ்தரு வளர்தோகையின்—
[மலைநாதா!

3514. கொடிதாகிய வினையேவிழை குலைமாவுடல்—அடுவேலா!
வடிவேல்நிறை மடமாதர்கள் மயல்தீரிட—அருள்வாயே.
அடியாருடை இருள்தீரிட அருளேபுரி—குவைநாதா!
கடியார்பொழி னிறைதோகையின் கனமாமலை—
[வருதேவே!

3515. பரியி லுயர்ந்த பரிய மயிற்பொன்—முருகோனே!
விரிதிரை யுற்ற விறலின் மகிழ்ச்சி—மருகோனே!
கரிய நிறத்த கனவசு ரைக்கொல்—அயிலாளா!
உரிய தவத்தர் உயர்புகழ் பெற்ற—சிகிமேரா!

3516. அடலேபுரி சூருடல் அழிவாகிட வேலதை—எயும்வீரா!
கடமாமத மேமிகு கருணைநிதி நாயகர்—துணையாளா!
மடவார்மய லாலினி மடியாதரு ளேர்புரி—முருகோனே!
குடமேநிகர் கோளே குளிர்சாரல்கொள் தோகையின்—
[மலைநாதா!

3517. மடவார்கள் மாயை யெனுமாழி வீழு
வதுபாவம் நீங்க—அருளாயோ?
அடமேசெய் சூர னுடல்மீது போர்செய்
அழகான வேலை—யணிநாதா!
படராவு சூடு சடையார்செம் மேனி
பரமேச ராசை—மகவேளே!
தடமேவு சோலை நிறைசார வீடு
தருதோகை மேரில்—வருதேவே!

3518. வடம்புனை தனத்து மடந்தைய ரிடத்து—மயலாலே
உடம்பது வளைத்து உவந்திடல் விலக்கி—அருளாயோ?
நடம்புரி திறத்த நலந்திகழ் மயிற்கு—முருகோனே!
இடந்திகழ் பொழிற்பொ னிலங்கிய சிகிப்பொன்—
[மலையாளா!

3519. வாதுறு சூரன் மாளிட வேலை—எயுநாதா!
தாதுறு நீபத் தார்புனை மார்ப!—எனையாளாய்.
கோதுறு நோயைக் கூவிட வேதான்—வருவாயே.
மோதுறு சோலை மூடிடு தோகை—மலைநாதா!

3520. ஆடிய மயிலா! யான்மகி ழிடவே—அருளாயோ?
நாடிய படியே நாத!கு கேசா!—அருளாயோ?
பாடிய புலவா! பான்மதி வதன!—அருளாயோ?
கூடிய பொழில்சேர் கோதறு சிகிமா—மலைநாதா!

3521. மறைமுனியணி மலரிணையுள—பதநாதா!
கறைமிடறினர் கருணைகொள்குரு—பர!வேளே!
சிறையுளவளர் சிகிமின்சிவ—குக!நாதா!
நிறைபொழின்மிகு நிலையுளசிகி—மலைவேளே!

---

3516. நான்காவது அடியின் இரண்டாவது சீர் தெளிவாக இல்லை.

3522. வாருலவு தனமின் மாதுபுணர் புயநன்—முருகேசா!
தாருலவு புயவ! சாமிகுரு பரிபொன்—மயிலாளா!
சீருலவு சரண! தேவர்பணி புரிசெய்—அமரேசா!
போருலவு அயில்கொள் பூமலி சிகியின்—மலைநாதா!

3523. அனநடை யான அழகுள வேடர்—மகள்தோளா!
வனமிகு தோகை மயின்மிசை யேறி—வருவாயே.
மனமிகு நோய்கள் மடியவுன் பாதம்—அருளாயோ?
கனகமென் மேரு கமழ்சிகி மேரில்—வருதேவே!

3524. வடித்த பாகு மொழியாள்
மணத்த கேச மடமான்—மகள்தோளா!
துடித்த சேனை யுடனே
துரத்தி மாவி னுடல்சீ—றியவேலா!
படித்த பாவ லர்க்கா
பசைத்த தோகை மலைமேல்—வருதேவே!
முடிப்பொன் மேரு கிரிநேர்
முதுச்சி காநன் மலைமேல்—வருதேவே!

3525. வடிவுட குறத்தி யிருதன மயக்கில்
மலர்வன முழுக்க—அலைவோனே!
படிறுறு மனத்து அசுரனை யழித்த
பலகலை தரித்த—அறிவோனே!
அடியவர் மனத்து வருதுயர் அழித்து
அருடனை மிகுத்து—உதவாயோ?
முடியுயர் சிகிப்பொன் மலைக்குடி யிருந்த
முருக!குக! முத்தி—அருள்வோனே!

3526. மடந்தை மாதர்கள் மயங்கு நோயினில்—விழலாமோ?
புடங்கொ ளாடகம் பொதிந்த மேனியின்—முருகோனே!
நடஞ்செய் தோகையின் நலங்கொள் மாபரி—
[தனில்வாராய்!
இடங்கொள் சோலைகள் இலங்கு தோகையின்—மலைநாதா!

3527. விரிமலர் கமல மலர்தனிக் குடியின்
விதிதனக் கிசைசெய்—குருநாதா!
தரியலர்க் கிசையும் படைதனுக் கெதிர்கொள்
சமரமுற் றிடுபொன்—அயிலாளா!

---

3526. புடமிடப்பட்ட பொன்தன்மை அமைந்த திருமேனியைப்பெற்ற முருகனே' என்பது இரண்டாமடியின் பொருள்.

கரியயற் புதநன் னயமிகுத் திடுபொன்
　　கமலையற் புயரவர்—மருகோனே!
பரியசி கரமது உயர்நற் சிகிய
　　பணிகொள்பொற் கிரியில்—வருதேவே!

3528. மனமாயை யதுவோட மயின்மீது—வருவாயோ?
அனமான நடைமாது அழகூடு—திரிதேவே!
கனமான அருளேசெய் கமலேசன்—இமையோரே
தினமாக நிறைதோகை செழிமேரில்—வருதேவே!

3529. அடமி குத்துவரு அசுரை வெற்றிபுரி—அயிலாளா!
கடக ரிக்கியொரு கருணை யுற்றதுணை—முருகோனே!
மடம யிற்பரியில் வருது ரைக்குமர!—குருநாதா!
தடமி குத்தமுடி தழைசி கிப்பொன்மலை—முருகோனே!

3530. நோயால் வருந்தி மேலே இடைந்து
　　நோகா திரங்கி—மெலியாதே
தூயா! கனிந்து நீயே வரஞ்செய்
　　சூழ்தோகை கொண்ட—மயில்வாராய்.
பாயாடை கொண்ட வோரோட வென்று
　　பாவாண முன்வந்த—முருகோனே!
சேயா! செகண்டி மேரே வளர்ந்த
　　தேவே! யிரங்கு—குகநாதா!

3531. கங்கை தரித்த சடையார்
　　கண்டு மயக்கு விறலார்—மருகோனே!
செங்கை குவித்து நினையே
　　சிந்தை யுற்று வடியார்—பணிதாளா!
மங்கைய ருக்கு உளமே
　　மண்டை கிருக்கு மடியேன்—மயல்தீராய்.
தங்கை தரித்த வயிலா!
　　தண்டலை யுற்ற சிகிமா—மலைநாதா!

3532. பாகாகிய மொழிமாதர்கள் பான்மாய்கையை—விலகாயோ?
வாகாகிய வனநாயகி மாலோடலை—குகநாதா!
சாகாவரம் அடியாரிடந் தானேயருள்—குருநாதா!
யோகா! கிருபை தருவாய்சிகி யோர்மாமலை—வருதேவே!

3533. மனதி லுற்றிடு துயரொ ளித்திடு
　　வரத வற்புத!—முருகோனே!
அனந டைக்குற மயிலி யைப்புணர்
　　அழகு பெற்றிடு—குகநாதா!

தினக ரப்பிரபை யொளிப டைத்திடு
செகயி ரச்சக!—நயவேளே!
கனக மெய்க்கிரி நிகரெ னக்கதிர்
கமழ்சி கிக்கிரி—வருதேவே!

3534. அடுத்து வந்திடு வோர்களை நாள்தொறும்
அணைத்து இன்பொடு வாழ்வதை யேபுரி-முருகோனே!
கடுத்து வந்தெதிர் சூருட னேயெதிர்
கமழ்ச்சி மிஞ்சிய கூர்துணை யாகிய—வயிலாளா!
தொடுத்து நன்றுள நீபம தேயணி
துரைநல் வேடமி ளள்புணர் நாயக!—எனையாளாய்.
கொடுத்து எந்தனை யாதரி நாயக!
குளிர்ச்சி மிஞ்சிய தோகையின் மாமலை—வருதேவே!

3535. தீரா தவினை தீர வேயருள்
தேவா தியர்கள் நாளு மேபணி—இருதாளா!
காரா னகுழன் மாத ராருட
காமா சைகொடு மேனி வாடுதல்—தவிராயோ?
தாரா ருபுய நாத னே! கிருபை
தாராய் தென்மயின் மீதினி லேவரு—குகநாதா!
சீரா ருபொழில் சூழு மாமிகு
தேனு ருசிகி மேரிலேவரு—முருகோனே!

3536. வருத்திய நோயை வருத்திடு வாய்சிறை—மயில்ளா!
கருத்தினி னுளுங் கவுத்தி யம்கினை—எனையாளாய்.
பருத்திடு சூரன் படைகெட வேலை—எயும்வீரா!
திருத்திய சோலை சிறப்புயர் தோகை—மலைநாதா!

3537. ஓதாத மறைமுனிவோர்
ஊடேபொ னுலகினுளோர்—தொழுநாதா!
வேதாவை யொருசிறைமேல்
மீளாது செய்துபின்மீ—ளிடுநாதா!
போதாரு புயமுருகா!
போர்வாயி லணியயிலா!—குகவேளே!
தாதாரு பொழினிறைசீர்
சாகாத வரமருள்தோ—கையின்மேரா!

3538. சாடியபடை வீழிடத் தார்மிகுவயி லேவிய—செயவீரா!
கூடியவடி யாருட கோதறுபட வேகிருபை—புரிவாயே.
ஆடியமயின் மீதினில் ஆவல்களுட னேயென்முன்—வரு
[வாயே.
தேடியபொழில் சூழ்தரு சீர்சிகிமலை மீதினில்—வளர்தேவே!

3539. அடமேபுரி வசுரோ னுடல்—கிழிவேலா!
நடமாடிய நலமாமயில்—மிசைவாராய்,
கடமாமத களிறுனனர்—துணையாளா!
தடமாமுடி தகுதோகையின்—மலைநாதா!

3540. வீறுபுரி சூரன் மீதிலயி லேவு—செயவீரா!
மாறுபடு நோய்கள் மாளவரு ளேசெய்—குகநாதா!
நாறுமலர் சூடு நாகநட ராசர்—அருள்பாலா!
மீறுபொழில் சூழு மேன்மைமிகு தோகை—மலைவாழ்வே!

3541. மதுவொழுகிய நீப மலரணிபுய மார்ப!—எனையாளாய்.
சதுமுகன்முத லோர்கள் சகம்வளரடி யார்கள்-பணிபாதா!
விதுவணிசடை யீசர் விமலர்தன்மக வே!பொன்-மயிலாளா!
பதுமெனமகள் சேர்நன் பணைமுடிமிகு தோகை-மலைநாதா!

3542. படையெ டுத்துவரு மிகுபெ லத்ததொரு
பணைபு யக்கொடிய—அசுரோன்மேல்
உடைப டக்கதிரி னயில்கொ டுக்கவிடு
உலவு நற்சிறையின்—மயிலாளா!
முடைமி குத்ததயி ரதனை உண்டநலன்
முளரி யாள்புணர்வோன்—மருகேசா!
மிடைநெ ருக்குமிகு பொழினி றைத்துமிகு
வியனெ ழில்படைத்த—சிகிநாதா!

3543. கானக மடந்தை காதல்கொள் கடம்ப—மலர்மார்பா!
வானவர் கனிந்து மாலோ டணிந்த—இருதாளா!
சானகி மகிழ்ந்த தாரணி யும்விண்டு—மருகோனே!
பானல மிகுந்த பான்மதி தவழ்ந்த—சிகிமேரா!

3544. படித்த பாகுமொழி வனத்தின் மாதுமரு—வியதோளா!
நடித்த தோகைமயின் நலத்த மாவில்வரு—குகநாதா!
படித்த பாவலவ! பணைத்த சூரனுடன்—எதிர்வேலா!
முடிச்சி காமலைய! முதுப்பொன் மேருமயில்—அருள்பாலா!

3545. வந்த தீவினை மங்கி யோடிட—அருளாயோ?
கந்த மேவிய கஞ்ச னூர்பணி—புரிபாதா!
சந்த நாவல! சங்க பாணியின்—மருகோனே!
அந்த மேவிய அண்டர் நாயக!—சிகிமேரா!

---

3540. நாக நடராசர் - நாகத்தினை அணிந்த கூத்தராசனார்.

3542. உக்கவிடு - அழிய விடுகின்ற.

3546. கருத்தினி னினைத்த கருத்தினை யெனக்கு—உதவாயோ?
பெருத்திடு தனத்தி பெடைக்குயில் குறத்தி-புணர்தோளா!
வருத்தியே யடைத்து வலுத்தசு ரனுக்கு—விடுவேலா!
திருத்திய முடிப்பொன் சிகிக்கிரி யுயர்த்த—முருகோனே!

3547. காதல் கொண்ட வேட மாது
காம மிஞ்ச வேமுன் னேடி—அலைவோனே!
மாதர் தங்கள் ஆசை யூடு
மாய்த லின்று வோட வேண—தருளாயோ?
தாத விழ்ந்த வாச நீபத்
தாரி லங்கு மார்ப! கோடி—அருளாயோ?
வேத னண்டர் சூழுஞ் சோலை
மீறு குன்றை மேரில் வாச!—முருகோனே!

3548. கதம்பமலர் மார்பா! கரந்தைபுனை நாதர்—அருள்பாலா!
நிதம்பரவு நாய னிறைந்தபவ மாள—அருள்வாயே.
மதங்கொள்வலு வானை வனங்குலவு மானின்—துணையாளா!
பதங்குலவு சோலை பசைந்திடுசி காமின்—மலைநாதா!

3549. அரியதவ மேபுரி அவர்பணி நாயக!—எனையாளாய்.
கரியநிற மேனியின் கமழ்துளவ மாயன்—மருகோனே!
தரியலர்க ளாகிய சமர்மிகு சூருடல்—அடுவேலா!
விரிமலர்கொள் சோலைகள் மிகுசிகியின் மாமலை—முரு
[கோனே!

3550. விதிமால்முதல் விரைவாய்நிதம்—பணிபாதா!
கதியாகிய கனதோகையின்—மிசைவாராய்.
பதிவாழ்பவர் பணியேபுரி—குகநாதா!
மதிசூழ்பொழின் வளர்தோகையின்—மலைநாதா!

3551. மனமாயை தவிராய் மயிலேறு—குகனே!
அனமான குறமான் அணைமீது—மயலோய்!
சினமாவி னுடனே செயவேலை—விடுவாய்.
கனமான சிகியாங் கமழ்தோகை—மலையாய்!

3552. மதிசூடிய சடையார் மகிழ்பாலக! எனையாள்—குகநாதா!
நிதியாவையும் அருள்வாய் நிறைதோகையின் மயிலா!—
[குருநாதா!
ததியேயுணு விறலார் தழைமாதுளை புனைவோர்—மருகேசா!
நதிசூழ்தரு முடிசேர் நலமார்சிகி மலைமேல்—வருதேவே!

---

3552. தழைமாதுளை - தழைத்த பெருமை பொருந்திய துளசி,

3553. மடவாருட மயலானித—மெலிவேனோ?
கடவாரணர் கருணாநிதி—துணையாளா!
அடமாகிய வசுரோனுடல்—கிழிவேலா!
தடமாமுடி தகுதோகையின்—மலைநாதா!

3554. தந்தி முகத்தினர் அன்பு மிகுத்தவர்
சங்கரி பெற்றவர்—துணையாளா!
நந்தியி லுற்றவர் செஞ்சடை பெற்றவர்
நம்பர மற்கொரு—புதல்வோனே!
வந்திடு பத்தர்கள் நன்மை மிகுத்திட
வந்து நலத்தருள்—புரிவோனே!
செந்தி மலைக்குக! குன்றை மலைக்குக!
செங்கம லப்பதம்—அருளாயோ?

3555. அடத்தில்வரு சூரன் அகத்தை அழிவாக—அடுவீரா!
குடத்தினிக ரான குயப்பெண் மறமாது—புணர்தோளா!
நடத்துமயி லான நடப்பரியி லேறு—முருகோனே!
தடப்பொழில்கள் சூழுந் தகுச்சிகிரியின் மேரில்—வருதேவே!

3556. உரிமை யாயெனை யுலகி லாண்மைக—ளுடனுளாய்.
கரிய மாலுட கருணையாகிய—முருகோனே!
அரிய மாதவர் அடியர் யாவரும்—பணிபாதா!
பரிய கோடுயர் பழைய தோகையின்—மலைநாதா!

3557. மனமாய்கை யான பொருளாசை யான
மயறீர வேண—தருளாயோ?
வனமூடு வாழு மறவோர்க ளாசை
மயிலான தேவி—மயலாளா!
அனமான மாது அவராசை யாலும்
அலையாது மேன்மை—தருவாயே.
இனமான சோலை நிறையாக நீடு
எழிலான தோகை—மலையாளா!

3558. மானைத்தரி கரனுர் தோகைச்சிகி யுமையாள்
மாலுக்கிசை வடிவா—னவர்பாலா!
மீனைப்பொரு விழியார் மாதர்க்கிசை மயலான்
மேன்மைக்குறை படவே—அலையாதே
தேனைத்தரி மலர்சேர் நீபத்தணி யுடனே
சீருற்றிடயென் முனமே—வருவாயே.
வானைத்தட வியநற் சோலைப்புன மிகுசூழ்
வாசச்சிகி மலைமேல்—வருதேவே!

3559. பாவிகளென வேதிரி வோர்களைநய மாகிய
பாடல்கள்பல பாடியு—மடிவேனோ?
ஆவிகள்நல மேயிலா லோபிகளிட மேஅணு
காவகைபல மாநிதி—தருவாயே.
தூவியசிறை மாவன மானடைபயில் வேடுவர்
தோகையின்மயி லாளுட—மயலாளா!
தாவியபொழில் சூழ்தரு தோகைமலை மேல்வரு
சாமி! பொன்மயி லேறிமுன்—வருவாயே.

3560. மிடியோடிட மயிலேறிமுன் விளையாடியெ—னெதிர்வாராய்!
கடியாரிதழ் மலர்நீபநன் கமலாசனர்—பணிபாதா!
வடிவேல்கொடு எதிர்சூருடல் மடிவாய்விழ—எதிர்வோனே!
அடியார்பணி சரணு!கிருபை அருள்வாய்சிகி—மலைநாதா!

3561. ஆடிய மயிலா! ஆரண குருவே!
பாடிட வருவாய். பாவல! முருகா!
நீடிய சிகியா! நேருறு மலையா!
வாடிட அசுரோன் மாய்படு அயிலா!

3562. தாதவிழ் நீப மாலை
தானணி மார்ப! கோடி—அருளாயோ?
வேதமுங் காண லாகா
வேரிகொள் வாச மான—இருதாளா!
காதலி யான தேவி
கார்குழன் வேட மாது—புணர்தோளா!
ஆதர வேசெய் நாத!
ஆர்பொழில் சூழ்சி காநன்—மலைநாதா!

3563. அண்டர்பணி நாதா! அன்பனெனை யாளாய்!
தண்டமிழ்சொல் வாயா! சங்கரிதன் பாலா!
வண்டசுர னோடே வம்புபுரி வேலா!
தண்டலைகொள் மேலாந் தண்சிகியின் மேரா!

3564. வஞ்ச னாகிய சூரன்
வந்த போர்விழ வேலை—விடுசூரா!
கஞ்சன் மாழ்கிட வேசெய்
கங்குன் மேனிய னார்தன்—மருகோனே!
தஞ்சம் வேறிலை யாள்வை.
சங்க ரா!கிருபை நீசெய்—குகநாதா!
மஞ்சு சூழ்தரு சோலை
மண்டு தோகையின் மேரில்—வருதேவே!

3565. நடமாடிய மயிலேறிய நகுதாமரை—நிகர்தாளா!
குடமாமுலை யவரால்வரு குறையாகிய—மயல்தீராய்.
அடமேபுரி அவுணோர்தலை யசுரோனுடல்—கிழிவேலா!
தடமாமுடி பொழில்சூழ்தரு தகுதோகையின்—மலைநாதா!

3566. விருது கட்டிவரு அவுணர் கெட்டழிய
வெகுது னைக்கதிர்கொள்—அயிலாலே
பொருது வெற்றிபுரி பிரப லக்குமர!
புகழ்ப டைத்தகுரு—பர!வேளே!
அருமை யுற்றுளனை உலகி லற்பினொடு
அடியன் முக்கியமிக—நிதமாளாய்.
தருத ழைத்தபொழி லிலகு நற்சிகிரியின்
தகும லைக்குள்வளர்—அரசாளாய்!

3567. வருசூர னுடல்கீறு வடிவான—அயிலா!
மருவாச மிகுநீப மலர்சூடு—புயவா!
கருமேக முகின்மேனி கனமாயன்—மருகா!
திருமேவு பொழில்சூழு சிகிமேரி—லரசே!

3568. அதிகபலமுள அசுர னுடல்கிழி—அயிலாளா!
மதியை யணிசடை மயிலி யுமைதரு—புதல்வோனே!
விதியின் முதலினர் வெகுப ணிவிடைகள்—புரிபாதா!
கதிர்கொள் முடியுள கனசி கியின்மலை—முருகோனே!

3569. சகலவினை தவிர்வாய். சதுமறையின் முதலே!
பகரறிய குருவே! பரிவினொடு வருவாய்.
தகரமணி குழலாள் சரசிகுற மயிலாள்
அகமகிழு வடிவே! அரியசிகி மலையா!

3570. மருப்பொலி நீப மாலை
வனப்புற மார்பின் மீது—புனைவேளே!
கருப்பையில் வீழி டாது
கருத்த!நன் மேன்மை யாக—வருவாயே.
தருக்குயர் சூர னுவி
தனைக்கொல வேலை யேவு—செயநாதா!
திருப்பொழில் சூழ மேவு
சிகிக்கிரி மீது வாச!—முருகோனே!

---

3569. தகரம் - மயிர்ச் சாந்து.

3571. வருசூருடன் வலுபோர்புரி—செயவேலா!
தருவேடவர் தருமானணை—புயவேளே!
கருமேனியர் கருணைநிதி—மருகோனே!
திருவேல்நிறை சிகிமாமலை—வருதேவே!

3572. மாதவர் பணிசரணு! மாமிகு நடைமயிலா!
பாதக மதைவிலகாய் பான்மதி நிகர்வதனு!
காதல்கொள் குறமயிலாள் கானக மதிலணைவாய்!
சீதமர் பொழில்பலசேர் சீர்சிகி மலைமுருகா!

3573. வனச மாதுபணி வனிதை தேவியுமை—தருபாலா!
சினமு லாவுகன திறல சூரனுடல்—கிழிவேலா!
உனது பாதமதை உறுதி யாகநினை—எனையாளாய்.
கனக மேரைநிகர் கருது தோகைமலை—முருகோனே!

3574. கஞ்ச னுர்சிறை வீழவே
கண்டு மீளிட வேசெய்வாய்—அமரேசா!
வஞ்ச-மேசெய லாதயா
வந்து வேண தேசெய்வாய்—குகநாதா!
தஞ்சம் வேறிலை ஆளயா
தங்க மாகிய தோகைமா—மலைநாதா!
நஞ்ச ராவணி நாதனுர்
நங்கை மாதுமை பாலகா!—எனையாளாய்.

3575. வடிவுற்றிடு தோகை மயிலிற்றுரை! நாயன்—முன்வாராய்!
அடியற்கருள் வேண அருளைப்புரி நாத!—முருகோனே!
மிடியைத்தவிர் வேல! விரைபெற்றிடு நீப—மலர்மார்பா!
கடிநற்பொழில் சூழு கயிலைச்சிகி மேரில்—வருதேவே!

3576. எதிர்வரு சூரன் இடறிட வேலை—எயும்வீரா!
கதிருள் தோகை கனமலைவாழு—முருகோனே!
மதிதவழ் கான மலைமகள் வேட—மயில்தோளா!
விதிபர வியசீர் மிகுமலர் நிகரா—கியதாளா!

3577. மதுமாமலர் மணமாலிகை—புனைமார்பா!
சதுமாமறை தனையேபுகல்—பவர்நாதா!
பதுமாசனி பகர்சீர்தமிழ்—தருவாயே.
விதுதாவிய விரைசேர்சிகி—மலைவேளே!

3578. அடியார்முதல் அமரோர்பணி—இருதாளா!
வடிவேல்நிறை வலுகூரிய—அயிலாளா!
குடிலேவளர் குறநாயகி—புணர்தோளா!
கடியார்பொழில் கமழ்தோகையின்—மலைநாதா!

3579. கருணை யோடுமுனம் கமல நாதர்பணி—குகநாதா!
அருண மேனியுடல் அழகு தோணயென்முன்—
[வருவாயே!
பொருது சூரனுடல் புளவ தாகவயில்—விடுசூரா!
மருவு லாவுபொழில் வளர்சி காமலையின்—முருகோனே!

3580. வந்த சூருடல் மண்ட வேலதை—எயும்வீரா!
கந்த மாகிய கஞ்ச னுயகர்—பணிதாளா!
அந்த மேவிய அண்ட ரேபணி—முருகோனே!
சந்த நாவல! தங்கு தோகையின்—மலைநாதா!

3581. தஞ்சம் வேறிலை சங்க பாணியின்—மருகோனே!
கஞ்சன் மால்முதற் கண்டி லாதவர்—புதல்வோனே!
வஞ்ச மேபுரி வண்ட மாவுடல்—அடுவேலா!
மஞ்சு சூழ்தரு வண்சி காமலை—முருகோனே!

3582. வடிவேலினுல் வருசூரனை—அடுவேலா!
அடியார்கள்பா லருள்தேவனே!—எனையாளாய்.
கடிநீபமாங் கமழ்மாலைசூழ்—மணிமார்பா!
முடிசேருமோர் முதுதோகைமா—மலைநாதா!

3583. கந்த மேவிய கடம்ப மாலிகை
கண்ட மீதணி—முருகோனே!
அந்த மானசெ கண்டி மேல்வரு
அண்டர் நாயக!—அருளாயோ?
சொந்த மானநின் அன்பன் வாழிட
சுந்த ரேசுர!—அருளாயோ?
வந்த நோய்தவிர் குன்றை மாமலை
வந்த நாயக!—அமரேசா!

3584. வருத்து நோய்தனை வருத்தி யோடிட—அருளாயோ?
கருத்த னே!யருள் கமழ்த்த நீபமென்—மணிமார்பா!
பொருத்து சூருடல் புளப்ப வேல்விடு—செயவீரா!
திருக்கு லாவிய சிகிப்பொன் மாமலை—முருகோனே!

3585. அந்தி மதிஅணி சடையார்
அன்பு மிகுஉமை யவள்பா—லக!வேளே!
தந்தி முகருட துணையா!
சங்க ரியினுட மருகா!—எனையாளாய்.

புந்தி மகிழ்தரு குறமான்
புங்க மிகுதன மதனா—டணைதோளா!
மந்தி தவழ்பொழி னிறைசீர்
வந்து நிறைசிகி மலைமேல்—வருதேவே!

3586. ஆடிய மயின்மீதே யான்மகி ழுவேதானீ—வருவாயே.
பாடிய கனிவாயா! பான்மதி முகலோலா!—குகநாதா!
கூடிய பொழின்மானுள் கூடிய புயசீலா!—அமரேசா!
தேடிய இருதாளா! சீர்சிகி மலைமீதே—வருதேவே!

3587. அடமேபுரி அசுரோனுடல்—அடுவீரா!
குடமாமுலை குறநாயகி—புணர்தோளா!
நடமாடிய நலமாமயில்—வருதேவே!
திடமாமுடி சிகிமேரினில்—முருகோனே!

3588. தாதுறுமலர் சூடியபுய! தாமரைநிகர்—இருதாளா!
வாதுறுவசு ரோன்உடல்கிழி மானுனைமிகு—அயிலாளா!
தீதறுகொடு நோய்தவிரிடு சீர்மயின்மிசை—வருதேவே!
மூதுறுபொழில் சூழ்தருசிகி மூரியின்மலை—முருகோனே!

3589. வருசூருட உடல்கீறிடு வனுவேலணி—முருகேசா!
கருமாமுகில் நிறமேனியர் கருணைநிதி—மருகோனே!
அருமாமறை துதிசீர்பத அழகாகிய—மயிலாளா!
திருவேநிறை பொழில்சூழ்தரு சிகிமேரினில்—வருதேவே!

3590. ஆடிய மயிலே றியென்முன் ஆசைக ளுடனே—வருவாயே.
பாடிய புலவோர் துதிசெயும் பார்வதி யாள்தரு—புதல்
[வோனே!
கூடிய படையோ டெதிர்வரு கோதுறு வசுரை—வெல்
[வேலா!
வாடிய அடியார் தெளிவுசெய் வாச னைமிகு—சிகிமேரா!

3591. வலுத்த சூருட உடற்கு நேர்பட
வருத்தி வேல்கொடு—எயும்வீரா!
உலுத்தர் பானிதி பெறச்செ யாதருள்
ஒருத்தர் வேறிலை—உதவாயோ?
வெறுத்தி யயரெனை விடுத்த லேதய
விருப்ப மாயென்முன்—வருவாயே.
குலுக்கு நாகம திருத்து சோலைகள்
கொழுத்த தோகையின்—மலைநாதா!

---

3591. 'வெறுத்து அயர்கின்ற என்னைக் கைவிடுதல் எதனால் ஐயனே'—என்பது மூன்றும் அடியின் முதற்பகுதியின் பொருள்.

3592. சதுமறை தேடு சரண! எங் நாளு—மெனையாளாய்.
பதுமமென் மாது பனிமிகு கேச—மயில்மாயோன்
விதுமுக நாதன் விறலுட வாசை—மருகோனே!
முதுசிகி மேரில் முருக! என் னுசை—வடிவேலே!

3593. கான நாயகி காத லாலணை—புயவேளே!
வான வோர்கன மாய னுர்முத—வினர்தேவே!
நான மேமிகு நாம வேலணி—குகநாதா!
ஞான நாயக! நாத! தோகையின்—மலைவேளே!

3594. வாடிடவேவரு நோயத னுயிர்
மாண்டிடு மோடிட்—வருவாயே.
பாடிய நாயினன் மீதினி லேவரு
பாவம தோடிட—அருள்வாயே.
தேடிய வேடுவர் மாகுல நாயகி
தேவியை யேயணை—குகநாதா!
சூடிய காவன மேவிய சீர்நிறை
தோகையின் மாமலை—முருகோனே!

3595. சூர னெடெதிர் தோகை மாமயின்—முருகோனே!
மார னுருட மாமயல் மாதர்தம்—மயநீராய்.
ஆர மேபுனை ஆர னு!கிருபை—அருளாயோ?
சாரல் சூழ்தரு சார்சி காமலை—வருதேவே!

3596. கடவாரணர் கருணாநிதி—துணையாளா!
மடமானிகர் மயில்வேடமின்—அணைதோளா!
அடமேபுரி அசுரோனுடல்—கிழிவேலா!
தடமாமுடி தகுதோகையின்—மலைநாதா!

3597. மட்டவிழ் நீப மாலை
மற்புய வாச மாக—அணிதேவே!
துட்டர்கள் தான வோர்கள்
சுற்றமெ லாமும் வீழ—அருள்வேலா!
கட்டழ கான வேடர்
கற்பின்மென் மாது மேவு—புயலோலா!
வட்டநி லாவு லாவு
வர்த்தனை யான தோகை—மலைநாதா!

3598. மடமயில் சான்கி மருவிய ராகவன்—மருகோனே!
கடகரி யானனர் கருணைகொ ணுயகர்—துணையாளா!
அடமிகு சூருடன் அடல்புரி நேரிய—அயிலாளா!
திடமுடி சேர்தரு சிகிமலை வாழ்குக!—அருள்நாதா!

3599. ஆடியவரு தோகையின்மயி
 லாள!அடி யேன்மகிழ—அருளாயோ?
பாடுல கோர்களுட
 பாவமது வோடிடமுன்—வருவாயே.
மாடமதில் சூழவரு
 மாவுலவு நேமவள—நகராளா!
கூடுபொழில் சூழ்சிகியின்
 கோலமிகு கோடில்வளர்—குகவேளே!

3600. மடவார்க ளாசை யான
 மடுவீழல் பாவ மாகும்—விலகாயோ?
உடலாடு நோய்கள் தீர
 உயர்தோகை மீதி லேறி—அருள்தாராய்.
விடராவு லாவு வேணி
 விமலேச ராசை யான—மகவேளே!
திடமான கோடு சோலை
 திகழ்தோகை மேரில் வாச!—முருகோனே!

3601. ஆவி போகு முனமே
 ஆட லான மயின்மேல்—வருவாயே.
சேவி லேறி வருவோர்
 தேவ தேவ ரிறையோர்—அருள்பாலா!
காவி னீடு குடிலாள்
 காதன் மாது கணவா!—எனையாளாய்.
தூவி மேவு பொழில்சேர்
 தோகை மேரி லரசே!—அருளாயோ?

3602. கனகாசலம் நிகராகிய கனதோகையின்—மலைநாதா!
மனநோய்தனை அகலோடிட வரமேயருள்—புரிவாயே.
சனகாதியர் குருநாயகர் தமையேகிருபை—புரிவாயே.
புனனுயகி மயலாலணை புனிதா!சிறை—மயிலாளா!

3603. கண்ட மதுகறையார் கஞ்ச விழியுமையாள்—அருள்பாலா!
அண்டர் பணிசரணு! அன்பர் பணிசரணு!—எனையாளாய்.
தொண்டன் முன்வருவாய் தொங்க லணிபுயவா!-குகநாதா!
தண்ட லைகொள் சிகியாம் சந்த மலைமிசைவாழ்—குமரேசா!

3604. அடமேபுரி வசுரோனுடல்—அடுவேலா!
கடவாரணர் கனமாகிய—துணையாளா!
நடமாடிய நலமாகிய—சிகியாளா!
தடமாமுடி தருதோகையின்—மலைநாதா!

3605. மாதவர்பணி தாளா! வாசனைமிகு நீபா!
தாதவிழ்சடை யார்பால் தார்குழன்மயில் பாலா!
ஆதரவுசெய் வேலா! ஆறிருபுய நாதா!
சீதமிகு நலனுர் சீர்சிகிமலை வாழ்வே!

3606. கடம்பணி மார்ப! நாளுங்
கரந்தைகொள் வேணி யார்தன்—மகவேளே!
மடமயில் வேட மாது
மனமகிழ்ந் துலாச மாக—அணைதோளா!
உடம்புள நோயை மாய
உளங்கனி வாக வேண—தருளாயோ?
நடம்பயில் தோகை யாள!
நலந்திகழ் தோகை மேரில்—வருதேவே!

3607. மாதவர்பணி நாயக! வாரணமுக னுடை—துணையாளா!
காதலிகுற நாயகி கானகமதின் மேவிய—புயவேளே!
ஆதரவது வேபுரி ஆறிருபுய வா!குக!—குமரேசா!
தாதவிழ்பொழி லேகிறை சாரல்கொள்சிகி மாமலை—முரு
[கோனே!

3608. மருப்பொலி நீப மாலை
மலர்ப்புய மீது சூடு—குகநாதா!
திருப்பெணி னுள்த னுசை
திருத்துளை மாய னுர்தன்—மருகோனே!
வருத்திய நோயை மாய
மடித்திடு வாய்தென் மேவு—சிறையாளா!
தருப்பொலி சோலை நீடு
தழைத்திடு தோகை மேரில்—வருதேவே!

3609. சரச மடமாதர் தழுவு சுகமீது—மயலாலே
உரசி மனநோக உழலு வதுதீர—அருளாயோ?
கரக முலைமாது கமலை மகிழ்வான—மருகேசா!
வரம ருள்செய்தோகை மலையின் மிசைமேவு—குருநாதா!

3610. அடியேனுட மிடிதீரிட அழகார்மயின்—மிசைவாராய்.
குடிவாழ்குற மயின்மீதுயர் குவிமாமுலை—சேர்ந்திடுவாய்.
கடியார்கன மலர்நீபமென் கமழ்மாலிகை—புனைவேளே!
முடிசோலையி னிரைசேர்தரு முதுதோகையின்—மலைநாதா!

---

3605. ‘சடையையுடைய சிவபெருமானின் ஒரு பாகத்திலுள்ள மயில்போன்ற பார்வதி பெற்ற பெருமகனே!’ என்பது இரண்டாவது வரியின் கருத்து.

3611. மருட்டு தொழிலான்முன் மயக்கு மடவார்கண்—மயலாலே
உருக்கு லையவாசை உணக்கு வதுதீர—அருள்வாயே.
இருட்டு நிறமேனி எழிற்கொ டியசூரை—அடுவேலா!
திருச்சி கியின்மேரா! சிறைச்சி கியின்மீதில்—வருதேவே!

3612. மருக்குலவு நீப மாலை
மணிப்புய மூலாச மாக—அணிவேளே!
கருப்பையினில் வீழி டாது
கருத்தினனி வேண கோடி—அருளாயோ?
பொருப்பிலயி லேவு வீர!
பொறுத்தசிறை மேவு தோகை—மயில்வீரா!
திருக்குலவு சோலை சூழுஞ்
சிகிக்கிரியின் வாச மான—முருகோனே!

3613. கருணை நிதியே! கமழ்மா விகைசூ—டியமார்பா!
மருமா மலர்சேர் மணிமா மகள்மரு—வியநேசா!
பொருசூ ருடனே புகழ்வேல் தனையே—எயும்வீரா!
அருமா மறைசேர் அழகா கியதோ—கையின்மேரா!

3614. உடம்பி லேவரு பிணியை
உடைந்து ஒடிட இனிநீ—அருளாயோ?
கடம்ப மாமலர் அணிவாய்!
கலங்கு நாயினன் மயல்தீ—ரிடுவாயே.
வடங்கொள் பூண்முலை மடவார்
மயங்கு நோயினின் மெலியா—வகைதாராய்.
விடங்கொ ளரவம் வளர்சீர்
விளங்கு தோகையின் மலைமேல்—வருதேவே!

3615. உடலெ டுத்ததுயர் உலகிலு ற்றவிழ—அருளாயே.
மடலெ டுத்தகமழ் மலர்க டம்பையணி—கனமார்பா!
கடலெ டுத்தவிறல் கருணை யுற்றகன—மருகேசா!
திடலெ டுத்தபொழில் செழிசி கிக்கிரியின்—மலைநாதா!

3616. வருத்திய நோயினுல் மடிந்திட ஞாயமா—அறியாயோ?
கருத்தினி லாசையாய் கனத்திடு மேனிவே—டமினாடே
திருத்திய கானிலே சிறப்பொடு சேர்புயா!—குகவேளே!
உருத்திகழ் கோடுசேர் உயர்ச்சிகொள் தோகைமா—மலை
[நாதா!

3617. வனச மங்கையை மருவும் இங்கிதர்—மருகோனே!
எனது துன்பம தினிய கன்றிட—அருள்வாயே.
மனது கந்திடு மயனி றைந்திட—அருள்வாயே.
கனக வங்கிரி கவினு குன்றையின்—மலைநாதா!

3618. மடவார்தரு மயலால் மனநோய்பட விதியோ?—குகநாதா!
தடவாரண முகனுர் தமையேதுணை கொளுநா-யகவேளே!
படராவணி முடியார் பணிமாமுலை யுமையாள்-அருள்பாலா!
நடமாடிய மயிலா! நலமேமிகு சிகிமா—மலையாளா!

3619. இருவினை தீரிட இனியரு ளேபுரி—குகநாதா!
மருமலர் நீபமென் மணிமிகு மாலிகை—புனைமார்பா!
செருபுரி சூருடல் தெறிபட வேலதை—எயும்வீரா!
திருமிகு சோலைகள் திகழ்சிகி மேரினில்—வருதேவே!

3620. தாதவிழு நீப மாலையணி மார்பா!
தாமரையின் மாது—மருகோனே!
மாதயவ தாக வேமயிலில் ஏறி
வாசிஞெடு தேடி—வருவாயே.
சீதமதி சூடு வேணிமக தேவர்
தேவியுமை யாள்தன்—மகவேளே!
வாதடரு சோலை சாரல்நிறை தோகை
மாமலையின் வாச!—முருகோனே!

3621. மனமாயை தீராமலே
வதையாது ஓயாமலே—உழலாதே
எனதாசை போஞயனே!
எளியேனை யேநாடவே—வருவாயே.
புனமாது மேல்ஆசையாய்!
புகழான வேலாயுதா!—அருளாயோ?
கனகோடு சேர்தோகையாங்
கமழ்மேரி லேவாசமே—புரிநாதா!

3622. நடனமிடு மயிலா! நளினமலர் நிகர்சீ—ரிருபாதா!
மடமயிலி குறமான் மருவுபுய முருகா!—எனையாளாய்.
அடமுலவு பலனு மசுரன்முடி தகர்வே—லணிவோனே!
திடமுலவு பொழில்சேர் சிகிமலையி னரசே!—அருளாயோ?

3623. எனது நோய்தனை யினியி லாதக—விடனீதான்.
மனதி ஞசையின் வரம தேபுரி—குவைநாதா!
வனச மாகிய மணமு லாவிய—இருதாளா!
கனக மாமுடி கமழ்சி காமலை—வருதேவே!

3624. மருமலர்தனில் வாழ்வுறு
மறைவாயினன்—குருநாதா!
குருபர! மணி முடிவானவர்
குறைதீரிட—வருதேவே!

உருவாகிய வுடன்மீதினில்
உறுநோய்விழ—அருளாயோ?
திருவேகிறை பொழில்சேர்தரு
சிகிமாமலை—முருகோனே!

3625. எதிர்வரு மசுரனை எழில்கொளு வேல்கொடு
இலகுவில் வென்றிடு—செயவீரா!
மதிகொளு சடைமுடி யிமையர் பணிதரு
மலரிணை அடியவர்—தருபாலா!
கதிகொள் மயில்தனில் வருகு மர! குக!
கருணை யொழுகிய—முருகோனே!
அதிக பொழில்மிகு சிகியின் மலைவரு
அழகு திகழ்குரு—பரவேளே!

3626. சிறைலி ரித்திடு சிகிம யிற்பரி—முருகோனே!
மறைப யிற்றிய மலர்ம னைக்குரு—பர!வேளே!
கறைமி டற்றினர் கருணை யுற்றிடு—புதல்வோனே!
நறைமி குத்திடு நலச்சி கிக்கிரி—மலைநாதா!

3627. சமரம் விளைத்திடு தருவை உயிர்க்கொலை—செயும்வீரா!
அமரர்கள் பத்தர்கள் அனுதின மன்பொடு—பணிதாளா!
குமர! சிறைச்சிகி குதிகொள விப்பமுன்—வருவாயே.
பமர மடுத்திடு பணைபொழி லுற்றிடு—சிகிமேரா!

3628. வஞ்ச னையிடு சூருடன்
வம்புக ளோடு வேல்விடு—செயவீரா!
கஞ்ச மலரின் அயனுர்முதல்
கண்டு பணிபுரி சீர்மிகு—இருதாளா!
பஞ்ச வணமயின் மீதினிற்
பங்க சமுக மேதெரி—சனைதாராய்.
நெஞ்ச கமதி லேகிருபை
நேயம் முழுவது மேகொடு—அருள்வாயே.

3629. இருவினை தீரிட எளியன்முன் மாமயி—வினில்வாராய்.
கருமுகி ருவிய கனபொழில் மாமலை—சிகிமேரா!
அருமறை தேடரு அழகிய சீர்பத—மலர்தாராய்.
திருமகள் நாயகர் திருமரு கா!குரு—பர!வேளே!

---

3625. மலரிணை அடியவர் - மலர்போன்ற திருவடியை உடையவர்.

3627. 'சமரம் விளைத்திடு தரு' சூரபதுமன் இறுதிப்போரில் மாமரமாய்ப் பொருத நிகழ்ச்சியை அறிவிக்கின்றது. பமரம் - பேரோசை.

3630. அனநடை மாதரார் வரமய லாலுமே—அலையாதே
மனமயல் தீரவே வரமினி யேசெய்வா—யமரேசா!
புனமயில் வேடமான் புணர்புய நாதனே!—எனையாளாய்.
கனகம தானவோர் கனசிகி மேரில்வாழ்—குகநாதா!

3631. காத லாகிய கான நாயகி—புணர்தோளா!
மாத ராருட மாயை தீரிட—அருள்வாயோ?
சீத மாமதி தேவ ஞருட—புதல்வோனே!
போத ஞர்பணி பூவு லாவிய—சிகிமேரா!

3632. அரிவையர் மயல்தனை அழிபட அருள்புரி—குருநாதா!
பரிவோடு அடியன்முன் பணிமயில் தனில்வரு-குவைநாதா!
தரியலர் முடிவிழத் தகடிலை யயிலதை—விடுவீரா!
வரிமலர் மிகுபொழில் வனசிகி மலைமிசை—வருதேவே!

3633. தானவர்கள் சேனை சரிந்துவிழ வேலை—எயும்வீரா!
வானவர்கள் கோடி வாசமலர் தூவி—நிதமேதான்
ஞானமொடு தேடு நாறுமல ரான—இருதாளா!
தேனலர்கொள் சோலை சீர்சிகியின் மேரில்—வருதேவே!

3634. குடியோர்பலர் கூடியே
குகாஎன வாயினுல்—சொலுமேலோய்!
அடியேன்நல மாகவே
அழகாகிய தோகைமேல்—வருவாயே.
மிடியாவையும் ஓடவே
வெகுவாய்வரம் யாவுமே—தருவாயே.
கடியார்பொழில் சூழுமோர்
கனதோகையின் மேரில்வாழ்—குகநாதா!

3635. இருவினை யகலாதே இனிமெலி குதலாமோ?—குகநாதா!
அருமறை புகல்நாதா! அடியனை யினியாளாய்—
[முருகோனே!
கருமுகி னிறமாலின் கருணைகொள் மருகேசா!—அருள்
[வாயே.
தருநிறை பொழில்சூழு சிகிமலை முருகேசா!—மயிலாளா!

3636. எனதாசை போலவே எழிலான தோகைமேல்—வருவாயே.
மனநீடு நோயெலாம் மடிவாக வேயிநாள்—அருளாயோ?
புனமாது சேர்புயா! புதுநீப மாலைசூ—டியதோளா!
கனமான சோலைசூழ் கமழ்தோகை யானதோர்—மலை
[நாதா!

3637. வஞ்ச னாகிய சூரன்மேல்
மண்ட வேலினை யெய்திடு—வெகுசூரா!
கஞ்ச னுருடன் யாருமே
கண்டு மாமலர் தூவியே—பணிபாதா!
நஞ்ச ராவணி வேணியார்
நங்கை மாதுமை பாலகா!—அருளாயோ?
மஞ்சு லாவிய சோலைசூழ்
வஞ்சி காமலை மீதுவாழ்—குகநாதா!

3638. எதிர்வரு சூரன் இடரிட வேலை—எயும்வீரா!
நதியணி வேணி நலமிகு பால!—எனையாளாய்.
துதிபெறு பாத! துரைமுரு கேச!—அருளாயோ?
கதிபெறு தோகை கனகிரி வாழு—முருகோனே!

3639. வித்துரு மத்தை நிகர்த்த நிறத்தினள்
விற்கு நிகர்த்த நற்கிளி ஒப்பிதழ்—பெருமாளுள்
முத்து நிகர்த்த எயிற்றினள் பொற்புயர் [தோளா!
மொய்த்த மலர்க்குழல் மைக்குற மெய்க்கொடி—புணர்
கொத்து மலர்க்கொடு நிற்பத அர்ச்சனை
கொட்டிமு னற்பொடு பத்தர் துதித்திடு—குகவேள்!
கத்து மயிற்பரி நத்தி நடத்திடு
கர்த்த! சிகிக்கிரி வித்தக! மெய்ப்பத—முதவாயோ?

3640. வாது புரிந்திடு சூர னுடன்படை
மாய மிலங்கிய வேல்கொடு வென்றிடு—செயவீரா!
மாது மடம்பயில் தோகை நலங்கிளர்
வாசமி குந்திடு கேச மடந்தையர்—மயலாளா!
போது சிறந்திடு சோலை வளர்ந்திடு
பூமலி கின்றிடு நேம வளம்செறி—நலநாடா!
தாது பொருந்திய பூமலி தண்டலை
சாலி மலிந்திடு வாழ்வுயர் குன்றையின்—மலைநாதா!

3641. வடிவா கியகுற
மயிலாள் புணர்புயவா!—அருளாயோ?
அடியார் பணிபத!
அடியே னிடமருள்வாய்—குகநாதா!
மிடியோ டிடமயின்
மிசையே றிமுன்வருவாய்—அமரேசா!
கடியார் பொழில்நிறை
கமழ்தோ கையின்மலைமேல்—வருவேளே!

3642. தாது றுமலர் நீப மென்றுயர்
தார ணிபுய—முருகோனே!
வாது றுபிணி வீழி டவருள்
மாம றைபுகழ்—இருதோளா!
போது றுபொழில் சூழ்த ருகன
பூம லிசிகி—மலைவேளே!
தீது றுவடல் தான வர்விழச்
சேய யில்தொடு—செயவீரா!

3643. கடவாரணர் முகநாயகர்
கருணைநிதி—துணையாளா!
மடமானிகர் குறநாயகி
மயலால்அணை—புயநாதா!
நடமாடிய மயிலேறிமுன்
நலமேஅருள்—தரவாராய்!
தடமாமுடி நிரைசேர்தரு
தகுதோகையின்—மலைநாதா!

3644. கானக மடந்தை காதல்கொள் நலங்கொள்—புயநாதா!
வானவர் மகிழ்ந்து மாலோடு பணியும்—இருதாளா!
தேனவிழ் கடம்ப சீருள மலர்ந்த—மலர்மார்பா!
மானல மிகுந்த வாழ்வுயர் செகண்டி—மலைநாதா!

3645. கருணை நிதியே! கமழ்நீ பமென்மா—லிகைமார்பா!
அருமா மறையோர் அடியார் முதலோர்—பணிபாதா!
வருவாய் குமரா! மயிலா! அருள்வாய்—குகநாதா!
திருமே வியசீர் திகழ்தோ கையின்மா—மலைநாதா!

3646. மதுமாமலர் அயனுர்முதல் மறவாதிடு—இருதாளா!
பதுமாசன மதிலேயுறை பிணைமாமுலை—மடமானுள்
விதுவேநிறை முகநாயகர் விறலானவர்—மருகேசா!
முதுதோகையின் மலைநாயக! முனைவேலவ!—அருளாயோ?

3647. பாவி யெனவே திரிவார்
பாக மணுகா தவகை—அருளாயோ?
கூவி விளையா டிவரு
கூடு சிறைசேர் சிகியின்—மிசைவாராய்.
தேவி யுமைநா யகிதன்
தேவர் சிவநா தரருள்—புரிபாலா!
ஆவி யகலா தவகை
ஆத ரவுநீ செய்சிகி—மலைவேளே!

3648. செருவைப்புரி சூருயிர் சிதறக்கதிர் வேல்கொடு—எயும்வீரா!
பெருமைச்சிறை சூழ்தரு பிரபலச்சிகி வாகன!—முரு
[கோனே!
அருமைத்திற னுகநின் னடியிலரு ளேபுரி—குகநாதா!
திருவுற்றிடு தோகையின் திகழ்மைச்சிகி மாமலை—
[வரும்வேளே!

3649. மறைமுனி வர்கள்முத லிமையவர் அடியவர்
மலர்கொடு பணிபுரி—இருதாளா!
இறையவ ரிடம்வள ருமையவள் மனமகிழ்
எழிலுள மகவெனு—முருகோனே!
சிறைநிறை யுளகன மயின்மிசை வருகுக!
செயமிகு வயிலணி—அமரேசா!
குறையென திடமக லிடவருள் புரிகுக!
குமர! நல்சிகிமலை—முருகோனே!

3650. தாதவிழ் நீப மாலை
தானணி மார்ப! கோடி—அருளாயோ?
மாதர சான தேவி
வானவ ராசன் மாது—புணர்தோளா!
ஏதம தான சூர
னேமடி வாக வேலை—எயும்வீரா!
வாதடர் சோலை சூழு
வாசனை யான தோகை—மலைநாதா!

3651. கருத்திலுறு நோய்கள் கலக்குவதை ஓட—அருளாயோ?
செருப்புரிசெய் சூரன் தெறிக்கஅவன் மீதில்—விடுவேலா!
மருப்பொலிசெய் நீப மலரமைய நாளும்—அணிமார்பா!
திருக்குலவு தோகை செழித்தமலை மீதில்—வருதேவே!

3652. அடமேபுரி சூரனுர் அழிவாய்விட வேலையே—வியவீரா!
நடமாடிய தோகையா! நலமாகிய வாகனு—அருளாயோ?
படராவணி வேணியார் பதுமாசன மாதுமா—மகள்பாலா!
தடமாமுடி சேருமோர் தகுதோகையின் மேரில்வாழ்—
[குகநாதா!

3653. மனநோய்தவிர் மயிலேறிய—முருகோனே!
வனவேடுவர் மகிழ்நாயகி—புணர்தோளா!
சினராவணி செயவேணியர்—தருபாலா!
கனசோலைகள் கமழ்தோகையின்—மலைநாதா!

3654. அற்பொடு பத்தர்கள் அர்ச்சனை பெற்றிடு—இருதாளா!
கற்புயர் மெய்க்கொடி கட்டழ குக்குற—மகள்தோளா!
மற்புய முற்றிடு கெட்டவு ணர்க்குலம்—அடுவேலா!
பொற்புயர் விர்த்திகொள் பொற்சிகி நற்சிகி—மலைநாதா!

3655. எனது துயர்தீர எளிய னிடமாக—வருவாயே.
அனந டையின்மாது அழகு வுமையாள்தன்—மகவேளே!
வனச மலர்மாது மருவு விறலாசை—மருகோனே!
கனக மலையான கமழ்சி கியின்மேரில்—வருதேவே!

3656. அடியேனுட மிடிதீரிட
அழகார்மயின்—மிசைவாராய்.
குடிவாழ்குற மயிலாள்புணர்
குகனே!கிருபை—புரிவாயே.
வடிவேலவ! எனையாளாய்.
மகவான்மகிழ்—மருகேசா!
முடியேநிறை சிகியாகிய
முதுமாமலை—அமரேசா!

3657. ஆடியமயின் மீதினில்
யான்மகிழிட நாயக!—வருவாயே.
கூடியபடை யோடெதிர்
கோதுளவசு ரோனுடல்—கிழிவேலா!
நாடியபடி யேயருள்
நாரணருட ஆசையின்—மருகோனே!
நீடியகன காசல
நேர்சிகிமலை மீதினில்—வளர்தேவே!

3658. வஞ்ச னுகிய சூரன்மேல்
மண்ட வேலினை ஏவுமா—பலவீரா!
தஞ்சம் வேறிலை ஆளயா!
தந்தி யானனர் சோதரா!—எனையாளாய்.
அஞ்ச வேவரு நோயையே
அஞ்ச வேயடு நாயகா!—குகநாதா!
மஞ்சு சூழ்தரு சோலைசூழ்
வண்சி காமலை மீதில்வாழ்—குருநாதா!

3659. வனச மலர்மாது மருவு விறலாசை—மருகோனே!
மனதி லுறுநோயை மடிய வருளேசெய்—அமரேசா!
தினக ரனைநேரு செயவொ ளியின்மேனி—முருகோனே!
தனக மலைநேருங் கனசி கியின்மேரில்—வருதேவே!

3660. அடுத்து வந்தெதிர் ஆடிய சூருடை
அகத்தை யுந்தணி வாகிட வேல்விடு—செயவீரா!
தடுத்து எந்தனை யாதரி ஏனுடல்
தனிற்கொள் துன்ப தேயக லோடிட—அருளாயோ?
விடுத்த செங்கம லாசன மேல்வரு
விதிக்கி சைந்துப தேசம தேயருள்—கனிவாயா!
எடுத்த பைந்துணர் சூழ்தரு சோலைக
ளிசைத்த குன்றையின் மாமலை மேல்வரு—குகநாதா!

3661. மனதாசையின் படியேயருள் மயிலேறிய—பெருமாளே!
சினமேமிகு அசுரோனுடல் தெறிவாய்விட—அடுவீரா!
வனவேடுவர் தருமாமகள் மயலால்மரு—வியதோளா!
கனகாசல நிகராகிய கனதோகையின்—மலைநாதா!

3662. மற்புய ராவண னைக்கொல வேபடை
மட்டில தாய்அமர்—புரிமாயோன்
அற்புத மாமரு கிக்கும ரா!கிருபை
அற்பொடு வேணது—தருவாயே.
கற்புடை யாளெனு நற்குற மாமயில்
கட்டழ கான்மயில்—தொழுநாதா!
பொற்புயர் தோகையின் மெய்க்கிரி நாயக!
புத்தரை யேவெனு—முருகோனே!

3663. கொஞ்சு கிளிமொழியாள்
குங்கும மென்முலையாள்—குறமானுள்
ரஞ்சி தமதுடனே
ன்றம ளியினைசேர்—புயவேளே!
மிஞ்சி யமர்புரிசூர்
வென்றுவி ழஅயிலே—வியவீரா!
மஞ்சி வண்பொழில்சூழ்
வஞ்சி கியின்மலைமேல்—வருதேவே!

3664. வஞ்சியர் மயலாலே
வந்திடு துயர்தீராய்—அமரேசா!
கொஞ்சிய கிளிமொழியாள்
குங்கும முலைவனவே—டமின்வாகா!

---

3660. ஏனுடல் - என்னுடல், சந்தம் நோக்கி நீண்டது. விடுத்த செங்கமலம் - இதழ்விரிந்த செந்தாமரை. துணர் - கொத்து.

அஞ்சிட வருமசுரோன்
அந்திட வயில்தனையே—வியசூரா!
மஞ்சிகள் தவழ்பொழில்சூழ்
வண்சிகி மலையரசே!—அருளாயோ?

3665. வடிவான குறநாயகி
மயலாலடர் வனமீதினில்—அணைதோளா!
கடியாகிய மலர்நீப!பொன்
கமழ்தோகையின் மயிலேறியே—வருவோனே!
அடியேன்எனை நிதமாதரி
அமரோர்முத வினர்நாள்தோறும்—பணிபாதா!
முடியேநிறை யுளசோலைகொள்
முதிர்தோகையின் மலைநாயக!—எனையாளாய்.

3666. வந்ததுயர் தீரவே வந்துமயின் மீதிலே—அருளாயோ?
கந்தமலர் நீபனே! கங்கைதரு பாலனே!—அருளாயோ?
சந்தமுலை யார்கள்தாம் தந்தமயல் தீரவே—அருளாயோ?
கொந்தலர்கொள் சோலையே கொண்டசிகி மேரில்வாழ்-குக
[நாதா!

3667. வனச மண்டபம் வளரு மங்கையின்—மருகேசா!
புனமடந்தையின் புயமி லங்கிட—அணைதோளா!
சினமி குந்திடு திறல ரக்கனை—அடுவேலா!
கனக மிஞ்சிய கனசி கண்டியின்—மலைநாதா!

3668. மதுமலர் நீப மலரணி மார்ப!—அருளாயோ?
கதுமென வாடு கனமயி லேறு—முருகோனே!
பதுமமென் வீடு பழமறை வேதன்—பணிநாதா!
விதுதவழ் சோலை மிகுசிகி மேரில்—வருதேவே!

3669. நடன முற்றிடு நலம யிற்பரி—முருகோனே!
குடமு லைத்திரு குறம டக்கொடி—புணர்தோளா!
அடம்வி ளைத்திடு அசுர னைக்கொலு—மயிலாளா!
வடவ ரைக்கிசை மயின்மலைக்குரு—பர!வேளே!

3670. குமரிகு றத்தி மாது
குவிமுலை யிற்கு லாவி—அணைதோளா!
பமரம சித்கு வாசன்
பதுமம லர்ப்பொன் மாது—மருகோனே!

---

3664. அந்திட = அழிந்திட; அம்திட எனக்கொண்டு வேலொடும் கூட்டலாம்.

அமரர்கள் பத்தர் கோடி
அனுதின மற்பி னேடு—பணிதாளா!
சமரிடு வெற்றி வேல!
தழைபொழி லுற்ற தோகை—மலைநாதா!

3671. மயிலாகிய பரிமேல் வருவாயென் முன் முருகா!
குயிலாகிய மொழியாள் குறநாயகி கணவா!
ஒயிலா!வுமை புதல்வா! உதவாய்கிருபை தனையே.
அயிலாலமர் புரிவாய்! அழகார்சிகி மலையா!

3672. ஆதி சேடன்முடி யாட ஆடுமயின்—வருகோனே!
ஓதி யேறிவரு வோன்விண் வானர்பணி—இருதாளா!
மாதி னள்குறமின் மாது மேவுபுய!—குகநாதா!
போதி னீடுபொழிற் பூணு தோகைமலை—முதியோனே!

3673. வடித்த பாகின் மொழியாள்
மயிற் பெணன குறமா—னணைதோளா!
கடிக்கு மராவை யணிவோர்
கருத்தி னுசை மகவே!—அருளாயோ?
நடித்த தோகை மயிலா!
நலத்த வாணர் பணிசீ—ரிருதாளா!
முடிப்பொ னுடு நிகர்சீர்
முதுச்சி காநன் மலைமேல்—வருதேவே!

3674. தாதவிழு நீப மாலை
தானணியும் மார்ப! கோடி—அருளாயோ?
மாதரசி யான தேவி
வானரசன் மாது மேவு—புணர்தோளா!
வேதமுனி வோர்கள் கோடி
மேல்அமரர் கோடி கோடி—பணிதாளா!
ஆதரவு நீசெய் தேவ!
ஆர்பொழில்கள் சூழு தோகை—மலைநாதா!

3675. மயலால் வருந்து வதைநீமுன் வந்து—அருளாயோ?
கயலா மிரண்டு கணைபோ லிலங்கு—விழிமானுள்
குயமே லணைந்த குகநாத! அன்பு—புரிவாயே.
புயல்மே லுயர்ந்த புகழான குன்றை—மலைநாதா!

3676. தேக பிணிவரு நோயால்
சீர ழிவதிது வாழ்வா?—குகநாதா!
நாக மதையணி வோர்பால்
நாரி தருமக வேநீ—அருளாயோ?

கோக னகநிகர் பாதா!
கூரி லகுமயி னுதா!—மயிலாளா!
யோக முனிவர்க ளுதா!
ஓது சிகிமலை வாழ்வே!—முருகோனே!

3677. உடல்வ ருத்திய உயர்ப ணிப்பிழை—தவிராயோ?
மடம யிற்குற மயிலி யைப்புணர்—புயநாதா!
அடம்வி ளைத்திடு அசுர னைப்பொரு—புகழ்வேலா!
திடமு டிக்கன சிகிம லைக்குரு—பர!வேளே!

3678. மடியாவகை யலராம்பத—மருளாயோ?
அடியாருட கொடுநோய்தனை—விலகாயோ?
கொடிநேரிடைக் குவிமாமுலை—அணைதோளா!
கடியார்பொழில் கமழ்தோகையின்—மலைநாதா!

3679. உடலில் வருத்திய நோயை
உனது கடைக்கணை நேராய்—விழியாயோ?
மடமிகு நற்குற மாது
மயலில் மிகுத்திடு தேவ!—அருளாயோ?
கடகரி நற்றுணை யாளா!
கமழ்செய் கடப்பமென் மாலை—புணர்தோளா!
அடவி தழைத்திடு தோகை
அணிமலை யிற்குரு நாத!—வருவாயே.

3680. அடம்புரி சூர னுவி
நெருங்கிய சேனை யோடு
அழிந்திட வேலை யேவு—செயவீரா!
நலம்புரி தோகை யான
நலந்திகழ் வாசி மீது
நலந்தர வாசை யாக—வருவாயே.
மடந்திகழ் வேட மாது
குயந்தனி லாசை யாக
மணந்திடு தேவ தேவ!—அருளாயோ?
இடம்பர வான சோலை
தழைத்திடு தோகை யான
இலங்கிய மேரில் வாச!—முருகோனே!

3681. கும்ப மாமுலை ரெண்டு மீறிடு
கொண்ட லேயினை மண்டு வார்குழன்—மடவாரால்
நொம்ப வேமய னைந்தி டாவகை
நின்க ணேயருள் தந்து நீதய—வுடனாளாய்.

சம்ப மாயெதிர் வந்த சூருடன்
சண்டை யேபுரி கின்ற வேலவ!—அருளாயோ?
அம்ப ராதிபர் கண்டு மேபணி
அந்த மாகிய குன்றை மாமலை—முருகோனே!

3682. அடங்காத சேனை யோடு
நடந்தேறி முன்பி ணுக
அலங்கார மாக வேநல்—விருதோடே
மிடந்தானி லாது சூழ
வருசூர ணோடு போர்செய்
மிகுங்கானம் வாழ்செய் தோகை—அயிலாளா!
வடஞ்சேர்பொன் மேரை நேரு
இரண்டான மார்பின் மாதர்
வசஞ்சாரு நோய்கள் தீர—அருளாயோ?
விடஞ்சோரு வானின் மீது
வளர்ந்தேறு தோகை மேரில்
மிகுந்தாசை யாக வாழு—முருகோனே!

3683. கானக மடந்தை யாளொடு மிகுந்து
காதல்கொள் கடம்ப—மணிமார்பா!
பானல மெனுஞ்சொ லாரொடு மயங்கல்
பாவம தையின்று—அடுவாயே.
சானகி மணந்த நீலநி றமிஞ்சு
சாமி விறல்விண்டு—மருகேசா!
தேனல ரிலங்கு சோலைநிறை கின்ற
சீருள செகண்டி—மலைநாதா!

3684. பொற்கிரி யிற்கிணை நற்றன முற்றிடு
பொற்புய மெய்க்குற மைக்குயி லைப்புணர்—புயநாதா!
அற்புத நற்கொடி சொற்கிளி மைக்குழ
லைப்புணர் பொற்புயர் அற்புயர் சக்கரர்—மருகேசா!
கற்கவி யைப்பகர் பத்தர்க ளுக்கருள்
கர்த்த! தழைத்திட அற்பு விளைத்திடு—குகவேளே!
மற்கட முக்கிய மிகத்தவு நற்பொழில்
மட்டில வுற்றிடு கிகிக்கிரி வித்தக!—அருளாயோ?

---

3681. கொண்டலே இணை...குழல் - மேகமே சமம் என்று கூறத் தகுந்த கூந்தல். ரொம்ப - நிரம்ப என்னும் சொல்லின் திரிபு.

3682. விடஞ்சோருவான் - நஞ்சினை ஒத்த நீலநிறம் பரந்த விண்.

3684. சக்கரர் - சக்கராயுதத்தை உடைய திருமால். மர்க்கடம் - குரங்கு. மிகத்தவு - மிகவும் தாவுகின்ற.

3685. வந்த சூருடன் மண்டிய சேனையை—அடுவீரா!
சந்தமின் ஞருடல் தங்கிய மாமயல்—தவிராயோ?
அந்தரி யாமுயர் அம்பிகை யாருடை—புதல்வோனே!
தந்தருள் வாய்கிருபை தண்டலை சூழ்சிகி—மலைநாதா!

3686. ஆகத்தினி லேவரு நோய்தனை
மீறித்திரி யாவகை தோகையில்
ஆசைப்பட வேவரு வாய்குரு—பர!வேளே!
தேகத்தினை யேயிரு கூறிட
வேகிட்டிமு னேசம ரேசெய்து
சேனைத்திரள் சூழசு ரோனைமு—னடுவேலா!
மாகத்தினில் வாழ்தரு தேவர்கள்
வேதத்தினை யேபயில் ஞானியர்
வாசக்கமழ் பூகொடு தூவிய—இருதாளா!
பாகத்தினி லேயிரு வேரொடு
கூடிப்புணர் நாயக னே!கிருபை
பார்மெச்சு சிகிமாமலை மேல்வரு—குகநாதா!

3687. பங்கய மேல்வள ருந்திரு நாயகி
பண்புடன் மேவிய விண்டுத னுவல்கொள்—மருகேசா!
சங்கரி யாமளை கொங்கவிழ் கேசமின்
சந்திர சடாதரி யம்பிகை யாளுடை—மகவேளே!
அங்கமு லாய்சது ரங்கமெ லாம்மிக
அண்டிய போர்புரி யுந்திற மாவினை—அடுவீரா!
திங்களு லாவிய தண்டலை சூழ்தரு
தென்சிகி மாமலை வந்தகு கேசனே!—அருளாயோ?

3688. சானகிமண மேவிய
தார்புனைபுய மாயவன்—மருகோனே!
வானவர்முதல் வேதியர்
மாமுனிவர்கள் நாள்தோறும்—பணிபாதா!
கானகமயி லாள்புணர்
காரண!கரு ணாநிதி!—அருளாயோ?
மானலமிகு சோலைகள்
வாழ்தருசிகி மாமலை—முருகோனே!

3689. மனதில் வந்திடு துயர கன்றிட
வரம கிழ்ந்தினி—உதவாயே.
சினமி குந்திடு படைநெ ருங்கிடு
செருவ டங்கிட—எயும்வேலா!

சனநெ ருங்கிய கனமி குந்திடு
சனதி வந்தெனை—இனியாளாய்.
கனக மிஞ்சிய வளர்செ கண்டியின்
கனதை கொண்டிடு—மலைநாதா!

3690. உடலெ டுத்தது யர் தனையே யெப்படியும்
ஒழிய நற்கதியை—அருளாயோ?
மடலெ டுத்தமண மலிக டப்பமணி
வளர்பு யக்குமர!—குருநாதா!
குடலெ டுத்தவயி று வலியை யற்றுவிடு
குருதி யுற்றகதிர்—வடிவேலா!
கடலெ டுத்தபுவி யடிய வர்க்கருள்செய்
கனதை பெற்றசிகி—மலைவாழ்வே!

3691. தேகத் தினிலே வருநோ யதுவே
தீரக் கிருபை யேபுரி வாய்குரு—பரவேளே!
பாகத் தினிலே யிருபே ருடனே
பார்வைக் குளமே மயலா கியநல்—முருகோனே!
மோகத் தினிலே மடவா ருடனே
மூடித் திரியா அலையா வகையே—அருளாயோ?
பூகத் தினிலே கதிர்தா வியுமே
பூமிச் சிகிமா மலைவாழ் தருமெம்—துரைநாதா!

3692. மடக்கொடி மாத ராசை
வருத்துதன் மோச மாயை—யதுதீராய்.
திடப்படு சூர னுவி
தெறித்திட வேலை ஏவு—செயவீரா!
குடக்குய மாது தேவி
குறத்தியை மேவு தேவ!—குருநாதா!
தடப்பொழில் சூழு சீர்கொள்
தழைத்திடு தோகை மேரில்—வருதேவே!

3693. அற்புத மாமல ரிற்கிசை மாமக
ளைப்புணர் மாயவன்—மருகோனே!
கற்புயர் வேடுவர் நற்கொடி யாள்புணர்
கட்டழ காகிய—முருகோனே!
நிற்கடி யானெனை யிப்படி நோயினில்
நித்திய மாழிடல்—அழகாமோ?
வற்பொழில் சூழ்தரு சித்திரசி காமலை
வந்திடு நாயக!—அமரேசா!

---

3689. சனதி - சன்னிதி, சந்நிதி.

3694. பருவமடை மாதர் வடிவமதி லாசை
படவலைதல் தீர—அருளாயோ?
அருமறைகள் தேடு குமர! குரு நாத!
அழகுதிகழ் தோகை—மிசைவாராய்.
செருவில்வலு வான வசுரனுடல் கீறு
செயவயிலை யேவு—முருகோனே!
கருமுகில்கள் தாவு பொழில்கள்நிறை வான
கனசிகியின் மேரில்—வருதேவே!

3695. வலுத்த சதுரங்கப் படையோடு
மகிழ்ச்சி யதுபொங்க வருசூரை—யடுவேலா!
உறுத்து கெடுகின்ற வவஸுடு
உடற்குள் நிறைகுன்ற அணுகாத—வகைதாராய்.
வெலுக்க வருகின்ற கெடுநோயை
விரட்டி நலமென்று இனிவேண—தருளாயோ?
குலுக்கு வளிமிஞ்சு பொழில்சூழும்
கொழுத்த வளமுந்து சிகிமேரில்—வருதேவே!

3696. கந்த மலிவாவி யம்பு யமினுளின்
கண்கு விருமாவல்—மருகோனே!
செந்த மிழினேர்கள் வந்து பணிதாள!
திண்பு யகுகா!மெய்—வடிவேலா!
சந்த திருநாவின் தொந்த அடியார்கள்
தங்க ளையுவாழ்வு—தருவோனே!
அந்த ரமளாவு தென்சி கியின்மேவு
அன்பு டையசேவல்—முருகோனே!

3697. கூறுபடு வேலினுன்முன் கூடிவரு சேனைமாய—அடுவீரா!
மாறுபடு நோயைவீழ மாயநல மானவேண—தருளாயோ?
நீறுபுனை நாதனூர்த னீவியபி ராமியாள்தன்—மகவேளே!
மீறுபொழில் சூழு தோகை மீதுவளர் தேவதேவ!—
[முருகோனே!

3698. மடவார் மயக்கு மயலால்
மனமே மிகுத்து நிதமே
மடியா தெனக்கு வரமே—புரிவாயே.
படராவு வுற்ற சடையார்
பகுபா தியுற்ற மயிலாள்
பணைமா முலைப்பெ ணுமையாள்—அருள்பாலா!

---

3696. சந்த.........அடியார்கள் - இனிய இசையமைந்த பாடல்களைப் பாடும் தொடர்புடைய அடியார்கள்;

நடமாடு பொற்பின் மயிலே
றியநாத! வித்தை யருள்வாய்
நலமார் கடப்ப மலர்மா—லிகைமார்பா!
தடமார் பொழிற்பொ னிரைசீர்
சிகிமா மலைக்கு வரசே!
தமியேனை யற்பி னுடனே—அருள்வாயே.

3699. அடம்புரி சூர னோடு
நெருங்கிய சேனை மாய
அலங்கிருத மான வேலை—எயும்வீரா!
நடம்புரி தோகை மீறு
செகண்டியி லேறு நாத!
நலந்தனை யேசெய் வாய்பொன்—முருகோனே!
கடம்பணி மார்ப னே!மி
னிலங்கிய வேட மாது
கலந்தனை தேவ! கோடி—அருளாயோ?
குடம்புரை சோதி யான
விளங்கிய கோடு லாவு
குளிர்ந்திடு தோகை மேரில்—வருதேவே!

3700. உடலெ டுத்தபல னதிலெ னக்குவெகு
உறுதி என்று அரு—ளுவைநாதா!
மடலெ டுத்து நறு மணமெ டுத்துமது
வளர்க டப்பமல—ரணிமார்பா!
மடலெ டுத்துகுயின் மொழிம யிற்கிசைய
மகிழும் பண்புமிகு—குகநாதா!
திடலெ டுத்தபுவி யடிய ருக்கருள்செய்
சிகிம லைக்குவரு—துரைவேளே!

3701. கூகைக்கூ கூவெனுது காலனுர் தான்வராது
கோழையேன் மீறி டாது—அருளாயோ?
பாகைநேர் கூறினுள்பொன் னுனபூ மேனியாள்தென்
பாவைகா ணோர்மி னுள்தன்—மணவாளா!
தோகையே மீறுவாடு வாசிமேல் ஏறுநாத!
தூயவே லாயுதா!நல்—லருளாயோ?
வாகையே சூடுகின்ற தோகைமா மேரில்வாச!
வானரா சாதிராசன்—மருகோனே!

3702. வாதுபுரி சூர னுவி
சேனைமுத லோர்கள் யாவும்
மாயவதி கூர்மை வேலை—எயும்வீரா!
மாதுகுற மாது மேவு
நீபமலர் மாலை மார்ப!
வானரச னோடு தேவர்—பணிபாதா!
கோதுகளிலாது தேக
மேன்மைமிகு வர்க வேசெய்
கோதுபுரி வேத னூர்தன்—முதலோனே!
வாதுலவு சோலை சூழு
தோகைமலை மீது வாழும்
வாகைபுனை தோள! கோடி—அருளாயோ?

3703. உறுதி யாகநன் மயிலி லேறிமுன்
உவகை யோடுமுன்—வருவாயே.
தறுக ணுகிய படைகள் வீழிடத்
தருபொன் வேல்விடு—செயவீரா!
சிறுகு சீரிடை மயிலி வேடுவர்
சிறுமி யுனொடு—புணர்தோளா!
நறுமென் வாசனை மிகுசி காமலை
நலமு லாவிய—முருகோனே!

3704. கருத்தி னுசை யதுபோல்
எனக்கு வேண தருள்வாய்.
கமழும் நீப மலர்மா—லிகைமார்பா!
செருச்செய் சூர னுடனே
மிகுத்து சேனை படவே
செயிக்க வேலை யெயுமா—பெலவீரா!
வருத்த மான பிணிதீ
ரிடச்செய் வாய்பொன் மயிலா!
மகத்து வேத முனிவோர்—பணிபாதா!
திருக்கொள் சோலை நிறைசீர்
சிறப்ப தான முடிசேர்
சிகிப்பொன் மேரு கிரியா!—அருளாயோ?

3705. நடிக்கு மயிலேறி மிகுத்த மகிழோடு
நடத்தி யடியேன்முன்—வருவாயே.
குடிக்கு றவர்மாது தனக்கு மணமாலை
குளிர்ச்சி யுளமோடு—அணிநாதா!

வடிக்கு மதுவான தமிழ்ச்சொல் கனிவாய!
மணத்த மலர்நீப—மணிமார்பா!
மிடிக்குண் முழுகாம லினிக்கி ருபையேசெய்.
விரைப்பொ ழில்கொள்தோகை—மலைநாதா!

3706. மதுது ளித்திடு கமல முற்றிடு
மயிலி யைப்புணர் புயமாயோன்—மருகோனே!
கதுமெ னக்கன நடைப யிற்றிடு
கமழ்ச்சி றைச்சிகி மயின்மீது—வருதேவே!
பதும மெய்க்கழல் அணிசெய் அற்புத!
பருவ நற்குற மயில்தோளா!—எனையாளாய்.
விதுத வழ்பொழில் நிறைசி கிக்கிரி
மிசைவ ளர்ச்சிசெய் அமரேச!—அருளாயோ?

3707. வஞ்ச கத்த னுகிய சூருடன்
மண்டி டப்பொன் வேலினை யேவிய—செயவீரா!
கஞ்ச னைக்கொல் மால்மரு கா!குகா!
கங்கை யுற்ற வேணிய னுருடை—புதல்வோனே!
தஞ்ச மின்று வேறிலை நீயருள்
தண்ட லைக்குள் வாழ்தரு வேடமின்—அணைதோளா!
மஞ்ச முக்கு சோலைகள் சூழ்தரு
வண்சி கிப்பொன் மாமலை மேல்வரு—குமரேசா!

3708. கான கத்தி னுறை மான்ம ருட்டுவிழி
காரி கைக்குறமின்—மயலாளா!
நான முற்றகம லாச னக்கடவுள்
நாளும் அர்ச்சனைசெ—யிருதாளா!
தான வர்க்கிறையை வாழ வைத்தகுக!
தாரை யுற்றகதிர்—வடிவேலா!
தேன லர்பொழில்கள் சூழ்சி கிக்கிரியின்
தேவ! அற்பினெடு—வருவாயே.

3709. ஆடிய மயிலா! ஆறிரு புயவா!
பாடிய புலவா! பான்மதி வதனு!
சூடிய பொழில்சேர் தோகையின் மலையர!
நாடிய வருள்தா நான்மகி ழிடவே.

3710. கலிகால மோயி தேது
அடியேன்எ நாளும் வாழக்
கனிவாக ஆளி டாத—வகையேனோ?
மெலிவாகி டாது கோடி
நிதியீய வேணு நாத!
விறுதாய்வி டாம லேகீ!—அருளாயோ?
வலிதான சூர னுவி
பறிபோக வேலை யேவு
மணமாலை சூடு தோள!—செயவீரா!
மலிவான சோலை சூழு
சிகிமேரி னுளும் வாச!
மயிலேறி யாடி யோடி—வருவாயே.

3711. வீறு படைத்த சூரன்
மீது நுனைப்பொன் வேலை—எயும்வீரா!
கூறு படைத்த பார்வை
கோகன கப்பெ ணுள்தன்—மருகோனே!
ஆறு படைத்த சீர்கொள்
ஆனன முற்ற தேவ!—முருகோனே!
நாறு படைத்த சோலை
நாள்தொறு சுற்று தோகை—மலைநாதா!

3712. மாதவர் பணிசரணு! மாமயின்—மிசைவருவாய்.
கோதறு குருபரனே! கோகன—கியின்மருகா!
தாதவிழ் மலைபுனைவோய்! தார்புனை—புயமுருகர!
சீதள மிகுபொழில்சூழ் சீர்சிகி—மலையரசே!

3713. சேனைதி ரட்டிமு னேவரு மற்புய
சீர்அசு ரைக்கொலும்—வடிவேலா!
பானைவ யிற்றின ரானை முகத்தினர்
பாதி மருப்பினுர்—துணையாளா!
தேனை நிறைத்திடு நீப மலர்ப்புய!
தேவி குறத்தியை—அணைதோளா!
வானை மறைத்திடு சோலை நிறைத்திடு
மாம யினற்கிரி—முருகோனே!

3714. சினத்தெ திர்த்திடு சூர்படை மாளிடத்
திருத்த கட்டிலை வேலதை யேவிய—செயவீரா!
மனத்து தித்திடு நோய்பட வேயருள்
மலர்க டப்பமென் மாலிகை சூடிய—புயநாதா!

---

3712. மாலை என்ற சொல் மலை எனக் குறுகிற்று.

தனக்கு றத்திமி னொளொடு மேவிய
 தமிழ்ச்சொ லற்புத நாயக னே!கிருபை—புரிவாயே.
கனத்த பொற்புயர் சோலைகள் சூழ்தரு
 கமழ்ச்சி யுற்றிடு தோகையின் மாமலை—முருகோனே!

3715. பிறவி யாகிய கடலில் வீழிடு
 பிணியை நீவில—கிடுவாயே.
துறவி யாகிய குரும காமுனி
 தொழுது பூசனை—புரிநாதா!
உறவி னல்மட வியர்க ளாசையின்
 உருகி டாவகை—அருளாயோ?
நிறவின் மாமணி யிலகு சீர்முடி
 நிரைகொள் தோகையின்—மலைநாதா!

3716. தருப்பொலி கான மாது
 தனைப்புன மீது மேவு—புயநாதா!
செருப்புரி சூர னவி
 தெறித்திட வேலை ஏவும்—செயவீரா!
மருப்பொலி நீப மாலை
 மணங்கமழ் மார்ப! கோடி—அருளாயோ?
தருத்திகழ் தோகை யான
 தகுக்கன மேரில் வாச!—அருளாயோ?

3717. வருநோய்தவிர் மயிலேறிய—பெருமானே!
பொருசூருடல் புளவாகிட—விடுவேலா!
தருகான்மயில் தனைமேவிய—புயநாதா!
மருசேர்பொழில் வளர்தோகையின்—மலைவேளே!

3718. மடமயில் குறத்தி மருவிய புயத்து—முருகோனே!
நடமிகு மயிற்பொன் நலமிகு பரிக்கு—வலுவோனே!
அடமிகு சுரர்க்கு அவனுடல் பிளக்க—விடுவேலா!
தடமுடி நிறைத்த தகுசிகி மலைக்கு—அரசாளா!

3719. கடகரி முகத்தர் வயிறது பெருத்த
 கடையொரு மருப்பர்—துணையாளா!
குடநிகர் தனத்தர் இருவிழி மிரட்டு
 குரல்கிளி மடத்த—மடமானர்
இடமினி மயக்க மதையொழித் தருள்வை
 எழிலுள மயிற்ப—ரியினதா!
தடமுடி நிறைத்த சிகியெனு மலைக்குத்
 தகுகுரு பர!ப்பொன்—முருகோனே!

3720. வடிவே லெடுத்து மயிலேறி யின்று—வருவாயே.
அடியேனு மெத்த அதிநோய்க ளுற்று—மெலிவேனே?
குடிவாழ்கு றத்தி குவிமா முலைக்கு—இசைதோளா!
முடிமே னிலைத்த முதுதோகை நற்கி—ரியின்வாசா!

3721. எனக்கு வந்திடு நோயை
இனிப்ப றந்திட வேண—தருளாயோ?
கனக்கு கொங்கையின் மாது
கமழ்ச்சி கொண்டிடு வேட—மகள்தோளா!
சினத்து வந்தெதிர் சூரைச்
செயித்து வென்றிசன் மாலை—புனைமார்பா!
வனத்தி லங்கிய சோலை
வளர்ச்சி கொண்டிடு தோகை—மலைநாதா!

3722. நச்சர வுற்றிடு மைச்சடை பெற்றிடு
நற்பர மற்கிசை—புதல்வோனே!
இச்சண மற்பொடு பச்சைம யிற்பரி
யிற்க ணருள்செய—வருவாயே.
கச்சணி பொற்குய விற்புரு வக்கொடி
கட்டழ கிக்குற—மகள்தோளா!
முச்சிம ணிப்பல பெற்றமு டிக்கண
முற்றிடு நற்சிகி—மலைநாதா!

3723. எந்தன்வி யாதி தீர
எந்தன்மு னுக வோடி—வருவாயே.
சந்தம தான தோகை
தங்கும யூர மீது—வருவாயே.
வந்தவல் சூரன் மேலே
மண்டிட வேலை யேவு—குகநாதா!
கொந்தவிழ் சோலை சூழுங்
குன்றையின் மேரில் வாச!—முருகோனே!

3724. சங்கணி கரத்தர் பங்கினி விருத்து
சங்கரி மயிற்கு—வருபாலா!
பங்கச மணப்பெண் நின்றிடு உரத்தர்
பைந்தழை நிறத்தர்—மருகோனே!
கொங்கவிழ் கடப்ப ணிந்திடு புயத்த!
கொண்டைம யிற்ப—ரியின்வீரா!
மங்கள மிகுத்த தண்டலை பெருத்த
மஞ்சு தவழ்சிகி—யின்மேரா!

3725. உடலதனில் வருத்து நோயை
உடனதை விரட்டி யோட—அருளாயோ?
கடலலைமிசை துயிற்செய் நாதன்
கமலமின் மணத்த மாயன்—மருகோனே!
அடலதனை விளைத்த சூரன்
அலறிட அடித்து வோட—விடுவேலா!
தடமுடி பெருத்த தோகை
தகுசிகி மலைக்குள் வாச!—அமரேசா!

3726. தேகத்தினி லேவரு நோயது
தீறக்கிருபை யேபுரி வாய்குரு—பரவேளே!
பாகக்கொடி யேயுள நாயகர்
பாதிச்சசி சூடிய வேணிய—ரருள்பாலா!
வேகத்தினி லேவரு சூரனை
மீறிப்பொரு வேலவ னே!யருள்—புரிவாயே!
தாகப்படி நீயென்மு னேவருள்
சாரற்சிகி மாமலை மீதினில்—வருதேவே!

3727. வந்த தீவினை மங்கி யோடிட—அருள்வாயே.
சந்த மேவிய சங்க நாவலர்—புகழ்பாதா!
அந்த வேடுவர் அன்பின் மானணை—புயநாதா!
கந்த னே!பல கங்கு லாவிய—சிகிமேரா!

3728. எனது தீவினை யினியி லாதமை—அருளாயே.
மனது நோய்தனை மடிய வேகிருபை—புரிவாயே.
சினவ ராவணி சிவசி காமணி—அருள்பாலா!
கனக மேரெனுங் கனசி காமலை—முருகோனே!

3729. மதிசூடிய சடையார் மகவே! கிருபை புரிவாய்.
துதியேமிகு சரணு! துணைமாதர்கள் கணவா!
கதியாகிய மயிலா! கமழ்நீபமென் மலரா!
அதிசோலையி னிரைசேர் அழகார்சிகி மலையா!

3730. அடமேபுரி அசுரோனுடல்—கிழிவேலா!
படராவணி பரமேசுரர்—புதல்வோனே!
உடனேய்தனை யுடனேடிட—அருள்வாயே.
தடமாமுடி தகுதோகையின்—மலைநாதா!

---

3727. கங்குலாவிய - இரவுபோன்ற இருள் செறிந்த.

3731. அடடா இவன் உடலெடுத்தது
அனியாயமதென உரைப்பர்கள் எதிராய்.
விடராவணி சடைமுடித்திடு
விமலேசர்தன் மகிழ்குக்குரு—பரவேளே!
உடலால்வரு துயர்தடுத்திடு
உயர்தோகையினடல்பரிக்கொரு—துரைநாதா!
கடல்தானையை மிகவடக்கிய
கனநேமபொனிரைசிகிக்கிரி—முருகோனே!

3732. தருவாழ்பொழில் தனில்வாழ்குற—மயில்தோளா!
செருவேபுரி திடசூருடல்—அடுவேலா!
கருமேனியின் கனமாலுடன்—மருகோனே!
திருவேநிறை சிகிமாமலை—முருகோனே!

3733. துதியேமிகு தாளா! துரைநாயகி நாதா!
மதிசூடியர் பாலா! மதுசேர்மலர் நீபா!
கதியாகிய வேலா! கனதேவர்கள் தேவே!
முதிர்தோகையின் மேரா! முருகா! குக! குமரா!

3734. முன்னால்வதி தீவினை யோயிது
என்னையறியேன்சொல் என்முனம்
முன்னேமயிலேறியே நோய்தனை—அடுவாயே.
உன்னாலுடல் நோயது தீரிட
இந்நாள்முடி யாவகை தானெது?
உண்ணுமது நீபமென் மாலிகை—புனைமார்பா!
மின்னாள்குற மாமகளால்மயல்
தன்னாலணை சேர்புயவா! அருள்
விண்ணோடர்களேபணி சீர்மல—ரிணைதாளா!
தென்னார்பொழில் சூழ்தரு தோகையின்
விண்ணார்மலை மீதினில் வாழ்குக!
திண்ணார்துணை வேலவனே! கிருபை—புரிவாயே.

3735. மாதவர் பணிசரணா! மாமயின் மிசைவருவாய்.
தாதவிழ் பொழின்மிசைவாழ் தார்புனை குறமயிலா!
மாதரசின் நன்மணவா! வாலொளி மிகுமயிலா!
சீதள மதிதவழோர் சீர்மிகு சிகிமலையா!

3736. எனதுடலில் வருநோயை யினிவிலக வருள்வேண—
[தருள்வாயே.
தினகரனை நிகர்கோடி திகழ்வரு பிரபையான—முருகேசா!
மனதில்வரு துயர்தீர மயிலின்மிசை யினியேறி—வருவாயே.
கனகமலை சிகரான கமழ்சிகியின் மலைவாச!—அமரேசா!

3737. கங்குன் மேனிய ரங்கம் பற்பல
கண்ட வாயின—ரவுணோர்சூழ்
பொங்கு சேனையின் மண்டு சூருடல்
புண்டு போய்விழ—அடுவேலா!
சங்கு மாமிட றுற்ற மங்கையர்
தந்த மாமையல்—பிளவாயோ?
கொங்கு பூநிறை மிஞ்சு சோலையின்
குன்றை மாமலை—வருதேவே!

3738. சனனம் எடுத்த முதலாய்
தமிய னெனக்கு நலமே—யிலைநாதா!
மனதில் இருந்த துயர்தான்
மடிய வருட்செய் குமர!—குருநாதா!
தனகிரி பெற்ற மடவார்
தருமய லுக்குள் மெலியா—வகைதாராய்.
தினகர னுக்கு நிகராய்
திகழ்முடி யுற்ற சிகிமா—மலைநாதா!

3739. தீரா தவினை தீர்த்தகு கேச!
சேயே! யெனையருள் காத்திட வேணும்-முருகோனே!
வாரா ருமுலை சேர்த்தணை காம
மானார் கண்மய லேயோட் டினிதான்—அருளாயோ?
காரா ருகுழன் வேற்கண்மின் மாது
கானோர் கள்தரு நேர்த்திய தான—மகள்தோளா!
சீரா னபொழில் கூடிய நேம
தேனா றுமிகு சீர்சிகி மீது—வருதேவே!

3740. வலுக்கொண்டிடு சூருடை சேனைகள்
மடியும்படி வேலினை யேவிய—செயவீரா!
கலுக்கென்றிடு மாமயில் மீதுநின்
கருத்தன்பொடு நாயன்மு னேவரு—குவைநாதா!
குலுக்குந்தன மாதர்கள் மாமயல்
கொதிக்குந்தணல் தீரிட வேயருள்—மழைபொழிவாய்.
பலுக்குங்கன சோலைகள் சூழ்தரு
பருக்குஞ்சிகை சேர்சிகி மாமலை—முருகோனே!

3741. அடுபோர்புரி வலுதானவர்
அழிவாய்விடு விறலானோர்—மருகோனே!
படுபாவிகள் இடமேபெறு
புயனீயென அணுகாதே—அருளாயோ?

வடுபோல்விழி யவரேதரு
மயலால்மெலி குதலாமோ?—குகநாதா!
கடூராமுடி மிசைவாழ்தரு
கமழ்தோகையின் மலைமீதே—வருதேவே!

3742. தாதவிழ்மலர் நீபா! தாமரைநிகர் பாதா!—அருளாயோ?
மாதரசெனு மானுள் வார்புனைதன வேடோர்-மகள்தோளா!
காதலியர்க ளாலே காமமெனலை மீளா—ததுதீராய்.
சீதளமிகு கானுர் சீர்சிகிமலை மீதே—வருதேவே!

3743. வடிவே லெடுத்து எதிர்சூர பன்மன்
மடிவாய் விழச்செய்—செயவீரா!
குடிவாழ் குறத்தி தனமீ தணைத்த
குருமா மணிப்பொ—னகைமார்பா!
அடியேன் வயிற்றில் வருநோய் அகற்ற
அழகான வெற்றி—யுடன்வாராய்.
முடிமீறு நற்பொ ழில்களே வளைத்த
முதுதோகை பெற்ற—மலைநாதா!

3744. முத்துநிகர் முறுவலார் வித்ருும யிதழினர்
மொட்டுமலர் முலையினர்—மயலாலே
பித்துழல்வர் நிகரதாய்க் கெட்டலைதல் தவிரயா!
பெட்புமிகு மயிலிலே—வருதேவே!
சித்துவிளைக் கருவியே! பத்தர்பணி குருபரா!
சிற்றிடையி னிருவர்நா—யகவேளே!
மொய்த்துவளர் பொழில்களே சுற்றுகன முடிகள்சேர்
முக்கியமிகு சிகியின்மா—மலைநாதா!

3745. வளையைத் தரித்த பாணி
புயலைப் பொருத்து கேச
மயிலைப் பழித்த சாயன்—மடவாரால்
தளையைப் பிணிப்ப போலு
மயலுற்ற முத்து நாயன்
தலைமைப் படச்செயாத—தெதனுலோ?
கிளையைக் கிளைத்த பாசக்
கடலிற் கிடத்தி டர்து
கெதியைச் சுருக்க தாக—அருளாயோ?
துளையைப் படத்த சூர
னுடலிற் பொருத்து வேல!
துரைநற் சிகிப்பொன் மேரில்—வருதேவே!

3746. மடவார்தரு மால்மய லாலினி
மடியாவகை யேபுரி வாய்குரு—பரவேளே!
கடவாரண ஆனன னார்மலர்
கமழ்மார்பின் விஞயகர் தாமுடை—துணையாளா!
உடனேய்தவி ராவகை யேதய!
உமைநாயகி யாள்தரு பாலக!—முருகோனே!
தடமாமுடி சோலைகள் சூழ்தரு
தழைதோகையின் மாமலை வாழ்தரு—குகவேளே!

3747. வானக மடந்தை மாமயல் மிகுந்த—புயநாதா!
சானகி மணந்த சாமிவிற லன்பின்—மருகோனே!
தேனல ரலங்கல் சீர்புய மணிந்த—முருகோனே!
மானல மிகுந்த வாழ்வுயர் செகண்டி—மலைநாதா!

3748. மடவார்தரு மாமயல் தீரிட
மயிலேறிமு னேவரு வாய்குரு—பரவேளே!
கடவாரண ஆனன னுருயர்
கனிவாகிய நாயக னுருடை—துணையாளா!
குடமாமலை வேடமி னளவள்
குறநாயகி யாள்மயல் தீரிட—அணைதோளா!
தடமாமுடி சேர்தரு தோகையின்
தகுமேரினில் வாழ்ந்திடு நாயக!—எனையாளாய்.

3749. அடம்புரி சூரன் அகந்தை யோட—அடுவேலா!
நடம்புரி தோகை நலம்பயில் சிகிமீ—தேவாராய்.
வடம்புனை மார்பின் மடந்தையின் வேடர்—மகள்தோளா!
தடம்புனை கோடு தகுந்திடு தோகை—மலைநாதா!

3750. ஆதி மூலமாம் யானை காவலோன்—மருகோனே!
வாதி லேவலோன் மாவை யேவெல்வேல்—முருகோனே!
போதின் வேதனர் பூசு ராதியோர்—பணிதாளா!
தீதி லாததோர் சீர்சி காநன்மா—மலைநாதா!

3751. கடவாரணர் முகநாயகர் கருணாநிதி—துணையாளா!
மடமாதர்கள் உடனேமிகு மயலான்மெலி—குதலாமோ?
அடமேபுரி வசுரோன்குல மிலவாகிட—விடுவேலா!
தடமாமுடி நிரையாகிய தகுதோகையின்—மலைநாதா!

3752. ஆதரவு புரிவாய் ஆறுமுக வடிவே!
தாதவிழு மலர்வாழ் சானகிதன் மருகா!
மாதயவு புரிவாய் மாமயிலின் முருகா!
நீதயவு செய்குவாய் நீள்சிகியின் மலையா!

3753. அமரர்பணி சரணு! அடியன்முன் வருவாய்.
குமரகுரு பரனே! குறமயிலி கணவா!
சமரமிடு மசுரோன் தனையெதிர்செய் அயிலா!
பமரமிகு பொழில்சேர் பரியசிகி மலையா!

3754. ஏதுபிழை யேதுகுறை
யேதுமெளி யேன்முன்மயில் மிசைவாரா—தறியேனே.
மாதுகுற மாமயிலி
மாமயிலின் நேமிதனி லுதவோனே!—எனையாளாய்.
தாதுலவு நீபமலர்
தானணியு மார்ப!நீ கிருபைதாராய்—அமரேசா!
போதுலவு சோலைநிறை
பூவிலுயர் தோகைமலை மிசைவாழ்வே!—அருளாயோ?

3755. கடகரி முகத்த ஒரெயிறு படைத்த
கனமிகை கரத்தர்—துணையாளா!
மடமயில் குறத்தி விழைதரு மயற்கு
மதிமருள் கருத்த!—அருளாயோ?
அடமிகு சுரற்கு வருபடை கெடச்செய்
அழகிய அயிற்கொள்—குமரேசா!
வடவரை நிகர்த்த பொழினிறை உயர்த்த
மயின்மலை தனக்கு—அரசாளா!

3756. மோகக்கடல் ஆழத்தினில் மூழ்கிப்படு—வதுதீராய்.
பாகக்கொடி யாரற்புயர் பார்வைக்குள—மருள்வோனே!
வேகத்தினில் ஆடித்திரி மேன்மைச்சிகி—மயிலாளா!
மாகத்தினி லேயெட்டிய வாசச்சிகி—மலைநாதா!

3757. செருவி லைத்திடு அவுண ரைக்கொலு
திகழ்ப டைத்திடு—அயிலாளா!
மருவி லைத்திடு செயக டப்பமென்
மலர்தொ டுத்திடு—சரமார்பா!
குருவி லைத்திடு மணிய முத்திய
குவிமு டிக்குக!—அருளாயோ?
தருவி லைத்திடு பொழில்வ லைத்திடு
தழைசி கிக்கிரி—முருகோனே!

3758. கால தூதர்கள் ஓடி யேவரு
கால மாகுமு னேஅய் யாயென்முன்—வருவாயே.
தூல மேனியி னேயி னுவெகு
சோப மாவது தீரி டாவகை—எதனலோ?

தால மீதினில் வாழ்வு சேர்சமு
சார சாகர மீதி லாழ்துய—ரறியீரோ?
வால மாமதி தாவு சோலைகள்
வாசம் வீசிய தோகை மாமலை—வருதேவே!

3759. இரண்டு காதி னளவு
இலங்கு பார்வை மாதர்—மயலாலே
பிரண்டு போமு னேயுன்
பிறங்கு பாத சேர்வை—அருளாயோ?
திரண்டு சேனை சூழுந்
திறங்கொள் சூர னேடு—எதிர்வேலா!
கரண்டு சூழு சோலை
கமழ்ந்த தோகை மேரில்—வருதேவே!

3760. மனதிலுறை நோயை மடியவரு ளேசெய்—அமரேசா!
உனதுடைய பாத உபயமலர் காண—வருவாயே.
சினவசுர னுவி சிதறவயி லேவு—முருகோனே!
கனகமலை யான கனசிகியின் மேரில்—வருதேவே!

3761. வேலாக்கிய விழியார் மீதாசையின் மனநோ—கிடலாமோ?
பாலாமதி யணிவோர் பாலா!உமை தருபா—லகவேளே!
கோலாகல மயிலா! கோவே!குரு பரனே!—அருளாயோ?
மாலார்பொழி னிரைசேர் வாழ்வாகிய சிகிமா—மலைநாதா!

3762. தண்டை யாடவே தந்தி மீதிலே—வருவாயே.
கெண்டை போலநேர் கின்ற பார்வைவே—டமின்வாசா!
தொண்டை வாயினுள் தொங்கல் மாதுமா—பதிபாலா!
பண்டை மேன்மைசேர் பண்ப தானதோ—கையின்மேரா!

3763. எதிர்வரு சூரன் ஆவி
இடிபட வேலை யேவி
இகல்புரி நாத! நாயன்—முனம்வாராய்.
மதிதவழ் வேணி நாதர்
உமையவ ளாசை யான
மக!குக தேவையான—அருள்தாராய்.
கதிமிகு தோகை யான
மயின்மிசை யேறி யோடி
வருதரு நாய காதே—னலர்மார்பா!
துதிமிகு பாத! சோலை
நிரைமிகு தோகை மேரில்
நுரைமுரு கேச! கோடி—அருளாயோ?

3764. உடலில் [வந்திடு துயர கன்றிட்
உடன்முன் வந்துநல்—லருள்தாராய்.
அடமி குந்துசெ யசுரர் தன்குலம்
அழிய அன்றயில்—விடுசூரா!
மடல விழ்ந்திடு செயக டம்பணி
மணிமி குந்திடு—புயநாதா!
தடமி குந்திடு பொழினி றைந்திடு
தருசெ கண்டியின்—மலைவேளே!

3765. அகம்புரி சூர னோடு
அடர்ந்திடு சேனை மாய—அடுவேலா!
மகம்புரி வான ராசன்
மகிழ்ந்தினி தான பாவை—புணர்தோளா!
சுகம்புரி வேடர் மாது
சுபஞ்செய மாலை சூடு—புயநாதா!
செகம்புகழ் சோலை சூழுஞ்
செகண்டியின் மேரில் வாச!—முருகோனே!

3766. மடக்கொடி யர்க ளால்வரும் ஆசையால்
மயக்க மிகவு நான்மெலி வானது—வசமாமோ?
அடத்தின் மிகவ சூருடை சேனையை
அருட்டி யதுவை யோடிட வேல்விடு—செயவீரா!
குடத்தை நிகர்செய் பூமுலை நாயகி
குறத்தி மாமய லால்வன மூடலைந்—திடுதாளா!
தடப்பொழில் கள்கொள் தோகையின் மாமலை
தனக்கி லகிய வேலவ னே!கிருபை—புரிவாயே.

3767. எனதுடலில் வருதுயரை இனிவிலக அருள்வை—குகநாதா!
மனதுமகி ழிடவடியர் மகிமைபெற மயிலின்மிசை—
[வருவாயே.
உனதுடைய அடிமையென உலகறிய வெகுதயவு—
[புரிவாயே.
கனதுதிகொள் பொழில்கணிறை கமழ்சிகியின் மலையில்வரு
[—குமரேசா!

3768. மதயானையின் மகிழ்வாகிய—துணையாளா!
கதமேமிகு கனசூருடல்—அடுவேலா!
முதனாயக! முனிவோர்பணி—இருதாளா!
இதமாலிகை யெழிலார்சிகி—மலைநாதா!

3769. மருப்பொ லியுநீப மலர்ப்புனையு மார்ப!—வடிவாளா!
விருப்பொ டென்முநகை விரைச்ச ரணசேவை—
[அருளாயோ?
வருத்தி யெதிர்சூரை மடிக்க வயிலேவு—செயவீரா!
தருப்பொ ழில்கொள்தோகை தழைத்த மலைமீது—
[வருதேவே!

3770. வனசமங்கை.........தாலங்கி.........
வனமடந்தையை—அணைதோளா!
எனதுவுந் தியின் றுயரை
என்று.........ளினியசுந்தர—முகநாதா!
தினகரன் றனையினை சொலும்.........
திகழு நன்றொளி—வடிவாளா!
மனம்மகிழுந் தருள்புரி செகண்டியின்
மாமலையில் வந்திடு—குருநாதா!

3771. அடமேபுரி அசுரோனுடல்—அடுவேலா!
கடவாரணர் கருணைநிதி—துணையாளா!
மடமாமயில் வனநாயகி—புணர்தோளா!
தடமாமுடி தகுதோகையின்—மலைநாதா!

3772. நோய்கள் தீரிட வருள்வாய் நூறு வேள்வியர் மருகா!
சேய னே!மயின் முருகா! சீறு சூரடு அயிலா!
மாய மாவினை தனையே மாறி யோடிட அருள்வாய்.
தூய மாமுடி நிறைசேர் தோகை யாகிய மலையா!

3773. சரசம் மிஞ்சிய வடிவி லங்கிய
தருண மங்கையர்—மயலாலே
உரசு கொண்டவ ரிடம யங்கியே
உடல்கெ டும்படி—அலையாதே
வரமி குந்தருள் புரிவை சங்கரன்
மதலை! எந்துயர்—தவிராயோ?
சுரமி குந்திசை பயில்செய் கின்னரர்
துதிசெ கண்டியின்—மலைநாதா!

3774. மாயஞ்செயு மான்விழி யாருடன்
மால்கொண்டுடல் வாடுகி றேன் அதை—யறியாயோ?
தாயன்பென வேதய வாய்அருள்
தாயங்கனு மேவிற காசம—திடுவேலா!

---

3770. இப்பாடல் பெரிதும் சிதைந்துள்ளது.

நேயங்கிளர் வேடமின் னுடை
னேஇன்ப சலாபம தாயணை—புயநாதா!
தேயம்பிறை தாவிய சோலைகள்
சீர்கொண்டிடு தோகையின் மாமலை—வருதேவே!

3775. லீலாவி னேத டர்தா
ரன்பான பார்வை யார்க
ணேரான போது மாய—மதனலே
மாலாகி மேனி வாடி
யோர்காய னீத மாக
வாயாவி போக நோதல்—தவிராயோ?
மேலான வானு ளோர்கள்
கோடான கோடி பேர்கள்
வேதர்மு னீசர் வேணர்—பணிபாதா!
கோலாக லா!கு கேச!
சீர்தோகை மேரில் வாசா!
கோதான சூரன் மார்பை—அடுவேலா!

3776. ஆடிய மயின்மீதே
யான்மகி ழுநீயே—வருவாயே.
தேடிய வடியார்மேல்
சீருள வரமேதான்—அருளாயோ?
பாடிய தமிழ்நாதா!
பார்புகழ் குருநாத!—அமரேசா!
கூடிய பொழிலேசூழ்
கோதறு சிகிமேரா!—குகநாதா!

3777. அடியாருடை மிடிதீரிட
அருளேபுரி—முருகேசா!
படியோர்பணி யிருசீருள
பதநாயக!—அமரேசா!
குடிவாழ்குற மயிலாளிரு
குயமாய்கையின்—அணைநாதா!
கடியார்பொழி னிறையேமுடி
கமழ்தோகையின்—மலைவாழ்வே!

3778. மிரட்டுத் தொழிலே புரிமாதர்கள்
மிகுத்துத் தருமா மயலான்மெலி—குதலாமோ?
வரத்தைத் தினமே புரிவாய்குக!
மயிற்பொற் பரிமீ தினிலேயெளியேன்—முன்வாராய்.

---

3778. இரண்டாம் அடியின் ஆறும் சீரில் ஓரசை மிகுந்துள்ளது.

புரத்தைக் கெடவேசெயு நாயகர்
புரக்கத் தருபா லக!வேணதை—அருளாயோ?
கரத்திற் கதிர்வேல்கொடு சூரெதிர்
கமழ்ச்சிப் பொழில்சூழ் தருதோகையின்—மலைநாதா!

3779. நடமாடிய மயிலேறிய
நகுமாமல—ருதாள்ளா!
அடமாகிய பெலமேமிகு
அசுரோனுடல்—கிழிவேலா!
குடமாகிய யிருமாமுலை
குறநாயகி—புணர்தோளா!
தடமாமுடி நிறைசோலைகள்
தகுதோகையின்—மலைநாதா!

3780. வாலை மாதர்க ளாயலை யேபுரி
வார்க ளாசையின்—மெலிவேனே?
பாலை நேர்மொழி மாது மாபதி
பால கா!கிருபை—புரிவாயே.
காலை யேவரு ஞாயிறு போலொளி
கானு மேனியின்—முருகோனே!
வேலை மாவுடல் கீற ஏவிய
வீறு ளோய்!சிகி—மலைவேளே!

3781. மடமாதர்கள் தருமாசையில்
மதிபோயலை—குதலாமோ?
கடவாரண மிசையேறிய
கருணாநிதி!—முருகோனே!
விடராவணி பெருமான்மக
வெனவேவரு—குகநாதா!
தடமாமுடி பொழில்சூழ்தரு
தகுதோகையின்—மலைவேளே!

3782. அடியாரிடம் அழகாகிய—மயின்வருவாய்.
துடியாரிடைத் துரைநாயகி—புணர்தோளா!
மடிவாகிட வலுசூருடல்—கிழிவேலா!
கடியார்பொழில் கமழ்தோகையின்—மலைநாதா!

3783. மனநோய்தனை மருவாவகை—அருளாயோ?
அனமார்நடை யழகார்குற—மயில்தோளா!
சினமேமிகு செயசூருடல்—தடுவேலா!
வனமேமிகு மயின்மாமலை—வருதேவே!

3784. மயிலேறி நடமாடி வருவாய்பொன்—முருகா!
குயிலான மொழிமாது குறமாது—கணவா!
அயிலான்மு னெதிரான அசுரோனே—யடுவாய்.
ஒயிலான குகநாதா! உயர்தோகை—மலேயா!

3785. கானக மடந்தை காதல்கொள் கடம்ப—மணிமார்பா!
தானவர் குலங்கள் தானழிய வன்று—விடுவேலா!
வானவர் நிறைந்து வார்மலர் கள்கொள்—துதிபாதா!
தேனலர் நிறைந்த சீர்பொழின் மிகுந்த—சிகிமேரா!

3786. திருப்பங்கய மாமலர் வாழ்வுறு
திருப்பைங்கொடி யாள்புணர் மாயவன்—மருகோனே!
மருத்தங்கிய நீபமென் மாலிகை
மணிச்செம்புய மீதணி நாயக!—அருளாயோ?
செருக்கொண்டிடு தானவர் சேனைகள்
தெறித்தெங்கணு மோடிட வேல்விடு—செயவீரா!
தருக்கொண்டிடு சோலைகள் சூழ்தரு
தழைக்குஞ்சிகி மாமலே வாழ்குரு—பரவேளே!

3787. தீதுறு சூர னுவி
சீறிட வேலே யேவு—செயவீரா!
மாதுமை பாக னர்தன்
மாமத லாய்!பொன் வேண—தருளாயோ?
போதுறு வேத னர்விண்
போகுயர் தேவர் கோடி—பணிபாதா!
தாதுள சோலே சூழுஞ்
சாரல்கொள் தோகை வாழும்—மலேநாதா!

3788. எனது தீவினை இடறி யோடிட—அருளாயோ?
மனது நோய்தனை மடிய வேகிருபை—புரிவாயே.
சினம தேமிகு திடவ சூரனே—அடுவேலா!
கனக மீறிய கமழ்சி காமலே—முருகோனே!

3789. ஆதரவு புரிவாய் ஆறுமுக—வடிவே!
மாதரசி குறமான் மாலினேடு—புணர்வாய்.
காதவிழு மார்பா! தார்புனேசெய்—புயனே!
சீதமதி பொழில்கள் சேர்சிகியின்—மலேயா!

3790. வடிவேலனே! மயிலாளனே!—அருளாயோ?
குடிவேடியாள் குறமாதினுள்—புணர்தோளா!
அடியென்முனே அழகாகவே—வருவாயே.
கடியார்செய்தோ கையின்மேரில்வாழ்—குகநாதா!

---

3790. குடிவேடியாள் - குடியினல் வேடர் சாதியைச் சேர்ந்தவள்; வள்ளியம்மையார்.

3791. ஒருவருட துணையுமிலை
உனதுடைய பாதமலரை—அருளாயோ?
கரும்பினின் திறமுடைய
கருணையுள விறலுடைய—மருகோனே!
பொருதுகன வசுரனுடல்
புளவுபட வயிலதனை—விடுவீரா!
திருவுலவு பொழில்கணிறை
சிகிமலையில் வருகுமர!—குருநாதா!

3792. எதிர்வரு சூர னுவி
இடரிட வேலை யேவு—செயவீரா!
மதியணி வேணி நாதர்
மனமகிழ் வான தேவி—தருபாலா!
விதிமுத லான பேர்கள்
விரைமலர் தூவி நாளும்—பணிபாதா!
கதிமயில் ஏறு நாத!
கமழ்பொழில் சூழு தோகை—மலைவேளே!

3793. வாடிய இடையாரின்
மாமய லதனாலே—மெலியாதே
பாடிய கனிவாயா!
பார்வதி தருபாலா!—அருளாயோ?
ஆடிய மயின்மீதே
யான்மகி ழிடவேதான்—வருவாயே.
சூடிய பொழிலேசூழ்
தோகையின் மலைவாச!—குகநாதா!

3794. கஞ்ச மென்விழி மாதர்கள்
கங்குல் கொள்குழன் மாதர்கள்—மயலாலே
நெஞ்ச கமெலி வாய்விட
நின்ற யவிலை யா இனி—அருளாயே.
வஞ்ச னைபுரி சூருடல்
மண்டி டஅயி லேவிய—செயவீரா!
மஞ்ச துதவழ் சோலைகள்
மண்டி யசிகி மாமலை—வருதேவே!

3795. வனச மலர்மாது
மருவு புயநாதர்—மருகோனே!
மனது டையநோயை
மடிய வரம்வேண—தருளாயோ?

உனது டையபாத
உபைய மறவாத—எனையாளாய்.
கனக மலையான
கமழ்சிகியின் மேரில்—வருதேவே!

3796. மாமழை யறியாதே
வாடிய பயிர்போலே—மெலிவேனோ?
கோமள உடலானேள்
கூரிய படைமாயோன்—மருகோனே!
யாமளை யுமைமானுள்
ஆரண முடிவானுள்—புதல்வோனே!
பூமழை பொழிபாதா!
பூமலி சிகிமேரா!—அருளாயோ?

3797. மருக்குலவு நீப மாலை
மணிப்புய மீது நாளும்—புனைவோனே!
கருக்குழி விழாது நாத!
கருத்திலுறு ஆசை யாக—அருள்வாயே.
செருக்குலவு சூரன் ஆவி
தெறித்துவிழ வேமு னுக—விடுவேலா!
திருக்கிளரும் சோலை சூழுந்
திகழ்ச்சிகியின் மேரில் வாச!—முருகோனே!

3798. சால மேபுரி மாத ரார்தரு
சாடை யான்மன—மெலிவேனோ?
ஆல மாமிட றீச னுர்தரு
ஆவ லாகிய—புதல்வோனே!
நீல வேடமி னுளை யேபுணர்
நீப மாலிகை—புனைமார்பா!
வால வேலவ! தோகை மாமலை
வாச னே!கிருபை—புரிவாயே.

3799. மடலெ டுத்த நீப மாலை
மணியு ரத்தி லாவ லாக—அணிதேவே!
அடலெ டுத்த சூர னுவி
அகலி டப்பொன் வேலை யேவு—செயவீரா!
உடலெ டுத்த நோய்கள் தீர
உயர்சி கிப்பிர காச மாக—வருவாயே.
கடலெ டுத்த தோகை யான
கனம லைக்கு நாத! வேண—கருளாயோ?

3800. செனன மெடுத்த தினமுதலாய்
செயும்வினை யற்று நினதடியே—தொழுகாதே
மனமய லுற்று நினைநினையா
மதியுள எற்கு அறிவினையே—அருளாயோ?
புனம்வளர் விற்பு ருவமினள்
புணர்புய! வித்தை யருள்புரிவாய்—அமரேசா!
கனக மலைக்கு நிகருளசீர்
கமழ்பொழில் பெற்ற சிகிமலைமேல்—வருதேவே!

3801. கறுத்து திரண்ட கேச
கயல்கட் சிவந்த வாயி—னுமைபாலா!
சிறுத்து பரந்து மீறு
சிறப்புற் றிலங்கு மார்பி—னர்கள்தோளா!
செறுத்துத் தரங்க மேசெய்
திறத்துப் பெலத்த சூரை—அடுவேலா!
பொறுத்துத் தழைத்த சோலைப்
புகழ்ச்சிச் செகண்டி மேரில்—வருதேவே!

3802. மேரை நிகர்த்த கொங்கை
மீறு பயிற்று செங்கண்—மடவாரால்
சீரை முழுக்க வென்று
தேக மிருக்க நைந்து—படலாமோ?
வாரை யடர்த்து விம்மு
வார்மு லைபெற்ற மங்கை—யர்கள்லோலா!
காரை யெடுத்து யர்ந்து
காவுக ளுற்ற குன்றை—மலைநாதா!

3803. வந்த தீவினை மங்கி யோடிட—அருளாயோ?
கந்த மாமலர் கண்ட மீதணி—குகநாதா!
சுந்த ராிநடை துங்க மாமயின்—முருகோனே!
அந்த வானவர் அன்பர் சூழ்சிகி—மலைநாதா!

3804. ஆதரவு புரிவாய் ஆறுமுக—வடிவே!
மாதயவு புரிவாய் மாலினுடை—மருகா!
மோதமரி லசுரோன் மோடிகெட—வடுவாய்!
தாதவிழு பொழில்கள் தாவுசிகி—மலையா!

3805. மயலால் வருந்தி மெலியாமல் வந்து
வரம்யாதும் தந்து—எனையாளாய்.
கயலுவு கின்ற இருபார்வை கொண்ட
கமழ்கா னிலங்கு—மடமானுள்

குயமாசை கொண்டு பிறகே திரிந்த
குமரா! வரம்பு—ரிவைநாதா!
நயமான தண்ட லேகள்தாவு குன்றை
நலமான குன்றில்—வருதேவே!

3806. பானை வயிற்றினர் கூரின்ம ருப்பினர்
பார்புகழ் விக்கினவினு—யகர்தோழா!
ஆனை யழைக்கு முனேவரு மச்சுத
னூர்மரு கக்குகனே!—அருள்வாயே.
கானை நிகர்த்திடு வார்குழல் பெற்றிடு
காரிகை மைக்குறமா—னணைமார்பா!
சேனை யடர்த்திடு சூருட லேப்பகர்
சேவக! மெய்ச்சிகிமே—ரினில்வாழ்வே!

3807. வாதுபுனை சேனை சூழவெதி ரான
மாவையடு வேல!—செயவீரா!
சூதுநிக ரான பூழலேயின் மாது
தோகைகுற மானை—யணைதோளா!
போதுமலர் வாச நாயகி சமேதர்
பூவணனு மால்தன்—மருகோனே!
தாதுநிறை சோலை சூழுசிகி மேரா!
சாமிகுரு நாத!—அருளாயோ?

3808. அறியாத பேர்கள் போல
அடியேனை வாழ வேண—தருளாதது—எதனுலோ?
பொறிநாக ரரவு லாவு
புரிவேணி நாத ராசை—மகவான—குகவேளே!
தறிவாழு மானை யான
தகுமானனூர்சோ தரா!ந—லருளேசெ—யமரேசா!
வறியோர்கள் போலி லாது
வர்மேசெய் தோகை மேரி—லேநாளும்—வருதேவே!

3809. அடல்புரி சூர னுவி
அழிபட வேலை யேவு—செயவீரா!
கடல்துயின் மாய னூர்தன்
கருணைகொ ளாவ லான—மருகோனே!

---

3808. பொறி நாகு அரா உலாவு - பொள்ளிகளோடுகூடிய இளமை பொருந்திய பாம்பு உலாவுகின்ற.

குடமிக ரான மார்பின்
    குறமகள் மேவு தோளா!—அருளாயோ?
வடதிசை மேரை நேரு
    வளர்சிகி மேரில் வாச!—முருகோனே!

3810. மடக்கொடிய ரான வேடர்
    மகட்கு மணமாலை சூடி—யணைதோளா!
கடக்களிறு கூவ வேயக்
    கணத்தில் வருமாய ஞர்தன்—மருகோனே!
திடத்திலெதி ராக வேநற்
    களத்தில் செயிக்கவசு ரோனை—அடுவேலா!
விடத்தின்மிக ரான வீங்கு
    மிருட்டு மிகுதோகை மேரில்—வருதேவே!

3811. வந்த தீவினை மிஞ்சி நோயது
    மண்ட வாடுதல்—தவிராயோ?
கந்த மான கடம்ப மேயணி
    கண்டி யாயருள்—புரிவாயோ?
அந்த மானசெ கண்டி மீதினில்
    அன்ப தாய்முனம்—வருவாயே.
சந்த மேவிய குன்றை மாமலை
    சங்க ரா!அறு—முகநாதா!

3812. அடுத்துவரு சேனை சூழ
    அடத்தின்மிகு சூர னேடு—அடுவேலா!
முடுக்கினடை யாடு தோகை
    முடிப்படியி லேறி யோடி—வருவாயே.
திடுத்தனுடை நோய்கள் தீரத்
    திறத்தில்வெகு வான மேன்மை—தருவாயே.
விடுத்தமலர் சூடு சோலை
    மிகுத்தசிகி மேரில் வாச!—முருகோனே!

3813. வந்தபிணி தீர வேமுன்
    மங்குறவழ் தோகை மேரில்—வருதேவே!
எந்தனுடை ஆசை தீர
    இன்றுதர வேணும் மீறு—மயிலாளா!
கந்தமல ரான நீபக்
    கண்டியணி மார்ப! கோடி—அருளாயோ?
செந்தமிழின் நாவ லா!பொன்
    செந்திமலை வாச னே!தெ—னயிலாளா!

3814. வாசனை படைத்த நீபமென் மலர்பொன்
மாலிகை தரித்த—புயநாதா!
மானசு மதிலுற்ற நோயினி மிகுத்து
வாதனை மலத்தில்—உழலாதே
..................முடனிப்ப..................மெயிலுற்று
நீதியோ டெனக்கு—அருளாயோ?
நாசமி குத்த தானவரோ டெதிர்த்த
நாமவயி லிச்சி—கியின்மேரா!

3815. வாடிய கொடியிடையார் கூரிய இருவிழியார்
மாயம திடுவதனுர்—மயலாலே
நாடிய யறிவினன்நான் மேனியு மெலிகுவனே?
நாரண னுடைமருகா!—அருளாயோ?
பாடிய தமிழ்முதலா! ஆடிய மயின்முருகா!
பார்வதி தருபுதல்வா!—குகநாதா!
நீடிய பொழினிரைசேர் தோகையின் மலைவளர்வே!
நீணிதி தனையருள்வாய்—அமரேசா!

3816. வடிவான மடந்தைய ராசையினுல்
மதியாவு மயங்கியெ நாள்தொறுமே—அலையாதே
கடியார்செய கடம்பமென் மாலிகையே
கமழ்மார்பின் மிகுந்தணி நாயகமே!—அருளாயோ?
குடிவாழ்குற மங்கையை யாசையினுற்
குவிமாமுலை யின்பம தாகவுமே—அணைதோளா!
அடியார்முனி அண்டர்கள் வானவர்கள்
அழகான செகண்டியின் மாமலைவாழ்—குகநாதா!

3817. மகநூறுசெய் அமரேசனின்
மகவாள்தனை மணமாலிகை—புனைநாதா!
அகமேபுரி மிகுதானையின்
அசுரோனுடல் கிழிவாய்விடு—அயிலாளா!
குகநாயக! குருநாயக!
குமரேச!பொன் மயிலேறிய—பெருமானே!
சுகவேடமின் மணநாயக!
துரைவேலவ! சிகிமாமலை—முருகோனே!

---

3814. மூன்றுவது அடி சிதைந்துள்ளது.

3817. மகம் - யாகம். மகவாள் - மகள், தேவசேனை.

3818. என்னுடை ஆசை போல
நன்னய மாக வேநீ
இந்நில மீதில் வாழ்வு—தருவாயே.
உன்னுடை பாத சேவை
யென்னிரு பார்வை காண
உன்னத மான தோகை—மிசைவாராய்.
மின்னுடல் மாத ராசை
இன்னல்கள் யாவும் வீழ
விண்ணவர் சூழ ஆவ—லுடன்வாராய்.
பொன்னுடல் மேரு போல
வன்னசி காவின் மேருப்
புண்ணிய நாத! கோடி—அருளாயோ?

3819. வருநீவண மடிவாய்விட—அருளாயோ?
திருமாலுடை திருநாயகி—மருகேசா!
அருமாமறை யவர்தேடிய—இருதாளா!
கருமாமுகில் கமழ்தோகையின்—மலைநாதா!

3820. பாதி மதித ரித்த பார்வை உமைம கிழ்ச்சி—கொளுமகவே!
ஆதி பரம ருக்கு ஆன பொருளு ரைத்த—குருநாதா!
வாதி னசுர னுக்கு மாய அயில்வி டுத்த—செயவீரா!
தாதின் மிகுபொ ழில்கள் தாவு சிகிம லைக்கு—முருகோனே!

3821. மடமாது குறமாது மயலான—கணவா!
அடமான அசுரோனை அடுசூரின்—அயிலா!
படமான அரவேணி பரமேசர்—புதல்வா!
திடமான முடிமேவு சிகிமேரில்—அரசே!

3822. வாதுபுரி சூரன் மாயவழி லேவு—செயவீரா!
மாதுகுற மானை மாலினொடு மேவு—புயநாதா!
தாதுலவு நீபத் தாமரையின் நாதர்—குருநாதா!
தீதுதவிர் சோலை சேர்சிகியின் மேரில்—வருதேவே!

3823. அந்தரம் வந்திடு
அண்டர் பணிந்திடு—இருதாளா!—அருளாயோ?
கந்தமி குந்திடு
கஞ்சமி லங்கிய—மடமாதுள்—மருகேசா!
வந்தவு ணன்றனை
மண்டிவ ரும்படை—உடனேதான்—அடுவேலா!
கொந்தலர் பைம்பொழில் [யாளாய்!
கொண்டசெ கண்டியின்—மலையோனே!—எனை

---

3821. அரவேணி - பாம்பினை அணிந்த சடைமுடி.

3824. அடிமை யாகிய எளியன் வாழிட
அருளை யேபுரி—குகநாதா!
கடிமை யாய்நடை புரியு மாமயில்
கனம தாகிய—மயிலாளா!
குடியின் வாழ்குற மயிலி மேவிய
குமர! நாயக!—அருளாயோ?
முடிக ளேநிரை பொழில்கள் சூழ்தரு
முதிய தோகையின்—மலைநாதா!

3825. மடவார்கள்தருமாசை மயலான கடன்மீது—முழுகாதே
நடமாடு மயிலேறி நலமாக யெளியேன்முன்—வருவாயே.
படராவை யணிவேணி பரமேசர் தருபால!—முருகோனே!
வடமேரை நிகராக வளர்தோகை மலைவாச!—அருளாயோ?

3826. தினக ரப்பிரபை நிகரு மெய்க்குமர!
திரும கட்கிசையும்—மருகோனே!
அனந டைக்குயிலி குறம கட்கிசையு
அழகு பெற்றபுய—முருகோனே!
மனதி லுற்றதுய ரதைவி லக்குவைபொன்
மயிலி லுற்றகுரு—பரவேளே!
கனக மெய்க்கிரியை நிகர்சி கிக்கரச!
கருணை வைத்துமுனம்—வருவாயே.

3827. கால தூதர்கள் ஓடி யேவரு
காலம் நீயதை—அடுவாயே.
வால மாமதி சூடும் வேணியர்
மாது மாபதி—தருபாலா!
பாலன் யானெனை யாளி டாவகை
பார மோயிது—விதிதானோ?
நீல வானுயர் சோலை சூழ்தரு
நேம நாடுள—சிகிமேரா!

3828. காதல் மிகுத்து மேனி மினுக்கி
காமம் விளைத்து—மயலாகும்
மாதர் மயக்குள் வீழ்ந்து தவித்தென்
வாழ்வு எனக்கு—அருளாயோ?
சீத மிகுத்த சீருடை கடப்பச்
சீமலர் உற்ற—புயநாதா!
தாதவிழ் பெற்ற சோலை மிகுத்த
சாரன் மிகுத்த—சிகிமேரா!

3829. மனத்துயர் தீர எனக்குமு னகை
மயிற்பரி யேறி—வருவாயே.
தனக்குற மாது சயிக்கினை யாசை
தனக்கிசை வான—வடிவேலா!
சினத்தெதிர் காலன் வருத்திய போது
திறத்துடன் வேண—தருளாயோ?
வனப்பொழில் சூழு சிகிக்கிரி வாச!
மலர்க்கணி சூடு—மணிமார்பா!

3830. உடல்வரு நோயை உடனகல வோட—அருளாயோ?
கடகரியி னைச கருணையுள சோத—ர!குகேசா!
மடலவிழு நீப மலரையணி மார்ப!—எனையாளாய்.
தடமுலவு தோகை தருமலையின் வாச!—முருகோனே!

3831. மயிலேறிய மகிழா! கிருபை—புரிவாயே!
குயிலாமொழிக் குறநாயகி—புணர்தோளா!
அயிலாலெதிர் அசுரோனுடல்—கிழிவீரா!
ஒயிலா!பொழி லுளதோகையின்—மலைநாதா!

3832. வனச மலர்மாது
வளரு மயின்மாது
புணர்மாயோன்—மருகோனே!
எனது டையநோயை
இனிவி லகவேண
தருளாயோ?—குகநாதா!
புன்ம யிலிவேடர்
புதல்வி தனைநாளும்
அணைதோளா!—செயவேலா!
கனக மலைபோலுங்
கமழ்பொ ழில்கள்சேரு
சிகிமேரா!—மலைநாதா!

3833. பாதக ராகிய லோபிய ராய்வரு
பாவியர் பாலணு—கிடலாமோ?
வாதம ணோர்கெட வேகழு வேறிட
வாழ்வுள காழியில்—வருதேவே!

3833. 'வாதம் புரியும் அமணர்கள் வாழ்வு கெடுமாறு கழுவில் ஏறிட வாழ்வு சிறந்த சீர்காழியில் தோன்றிய திருஞானசம்பந்தராகிய தேவனே' இரண்டாம் அடியின் பொருள்.

போதடர் சோலையி லேகரு வேடுவர்
பூவையி னுல்அலை—திருபாதா!
வேதன்வி ஞேர்முத லோர்பணி தோகையின்
மீறிய மாமலை—முருகோனே!

3834. பங்கய வான்முக மின்குயி லாமொழி
பந்தினை மாமுலை மங்கைய ரால்வரு—மயலாலே
அங்கமெ லாம்வெகு தொங்கிச மாயத
னம்புக மூல்மெலி கின்றபொ லாவினை—தவிராயோ?
சங்கரி மாதுமை பைங்கிளி யாமளை
தந்தருள் பாலக! எந்தனை யாதரி—குகநாதா!
கொங்கலர் சோலை நெருங்கிய வானுயர்
குன்றையின் மாமலை வந்திடு நாயக!—அருளாயோ?

3835. மடக்கொடியார் ஆசை யாலும்
மயக்கமிகு நோய்கள் தீர—அருளாயோ?
கடக்களிறின் ஆசை யான
கருத்திலுறு சோத ரா!பொன்—மயிலாளா!
படத்தரவு சூடு வேணி
பரர்க்குமக வான தேவ—குருநாதா!
தடப்பொழில்கள் சூழு கோடு
தழைத்தசிகி மேரில் வாச!—முருகோனே!

3836. காமக் கொடியார் வாழ்வுற் றிடுவோர்
காதற் கிசைவாய்—அலையாதே
தாமப் புயனே! தோகைப் பரியா!
தானிச் சையதாய்—வருவாயே.
வாமத் திருபே ராசைக் குமரா!
மாய்கைச் சமுசா—ரமதாலே
சேமப் படுவே னேசித் தருள்வாய்
சீர்பெற் றிடுதோ—கையின்மேரா!

3837. மருவுலவு கின்ற
வனசமலர் மங்கை
புணர்தோளார்—மருகோனே!
கருவுலவு கின்ற
கனதுயரை யின்று
தவிராயோ?—முருகோனே!

தருவுலவு கின்ற
தனபுரியி னண்டர்
பணிபாத!—அருளாயோ?
திருவுலவு கின்ற
சிகிமலையில் வந்த
குமரேசா!—உமைபாலா!

3838. சாகர மானசமு
சாரம தானதுய—ரதனாலே—மெலியாதே
சேகர மானநிதி
சேரிட வேணவருள்—புரிவாயே—அமரேசா!
மோகம தானபடை
மோதிட வேவருவன்—அசுரோன்மேல்—விடுவேலா!
சீகர மானகுறத்
தேவியை மேவுபுய!—சிகிமேரா!—குகநாதா!

3839. பாவிக ளாய்வரு லோபியர் பாலொரு
பாவின மேசொலி—அலையாதே
நீவிரை வாய்மயின் மீதினி லேறிநன்
நீதிகள் யாவையும்—அருளாயோ?
காவியின் மாமலர் பாலமர் கள்விழி
காதலி யாருடை—மயல்தீராய்.
தாவிய சோலைகள் சூழ்தரு தோகையின்
சாரலின் மாமலை—முருகோனே!

3840. அனவரத காலும் அடியைமற வாது—தொழுவேன்நான்.
மனதில்வரு நோயை மடியும்வகை தேடி—அடுவாயே.
தனமுலவு சூரன் தெறிபடமுன் வேலை—எயும்வீரா!
கனகமலை யான கனசிகியின் மேரில்—வருதேவே!

3841. கடகரி முகத்தர்
கனகர மிகுத்தவ்—வாராலே—அணிதோள்ளா!
குடநிகர் தனத்தர்
கொலுமயில் நிகர்ப்பெண்—மாராலே—மயல்தீராய்.
நடமிடு மயிற்பொன்
நலமுயர் பரிக்கு—இசைவீர!—முருகோனே!
வடவரை நிகர்த்த
மயின்மலை தனக்கு—வாழ்வாக—அமர்தேவே!

3842. கஞ்ச மாமலர் கொண்ட நாயகி
கஞ்சன் மாயவன்—மருகோனே!
வஞ்ச மாவுடல் அந்த வீழிட
மண்டி வீழிட—எயும்வேலா!
நெஞ்ச நோய்தனை யின்று தீரிட
நின்கிரு பாகடல்—முழுகேனோ?
தஞ்சம் வேறிலை வந்து வேணது
தந்து வாதரி—சிகிமேரா!

3843. அண்ட முகடுக ளெங்கு மசைபட
அந்த நடமிடு செகண்டி மிசைவரு—செயவீரா!
மண்ட வுணன்முன் கொண்டு வருபடை
மண்டி யலறிடு மாறு அயில்விடு—குகநாதா!
கண்ட மிசைக்கறை யுண்ட அரனுமை
கண்டு மகிழ்சுக அந்த மிகுகுரு—பரவேளே!
தண்ட லைகள்வளை கின்ற நலமிகு
தங்கு கொடுமுடி மிஞ்சு சிகிமலை—வருதேவே!

3844. அலைகடலில் இச்சை யுடன்வெகு நலத்த
அரவணை துயிற்செய்—தருமாயோன்—மருகோனே!
மலைமுலை தனக்கு மயல்கொளும் விதிக்கி
வரமதை எனக்கு—அருளாயோ?—அமரேசா!
கலைமதி தரித்த பரமரிடம் உற்ற
கருணையுமை பெற்ற—மகவேளே!—அருளாயோ?
உலைபட எதிர்த்த வசுரனை அடித்த
உயரயில் பிடித்த—குக!தோகை—சிகிமேரா!

3845. கதியி னடத்து மயின்மேற்
கருணை மிகுக்க யென்முனே—வருவாயே.
அதிக பெலத்து மிகவே
அலறி யெதிர்த்து வருசூ—ரதிர்வேலா!
மதிகொள் சடைப்பொன் முடியார்
மகவென வுற்ற துரையே!—அருளாயோ?
கதிமுடி பெற்ற சிகியாங்
கனமலை யுற்ற குமரா!—குகநாதா!

3846. வந்தசமு சாரத்தினல்
வந்திடுவி சாரத்தினன்—மெலியாதே—அருளாயோ?
எந்தன்மன மோகிச்சையோ?
எந்தவித மோயத்தைநீ—தருவாயோ?—அறியேனே!

கந்தமிகு சோலைக்குளே [அணைதோளா!
கண்டதொரு வேடிச்சிமேல்—மயலாலே—
கொந்தலரின் மேன்மைகொளும்
குன்றைமலை வாழ்வித்தக!—குகநாதா!—அமரேசா!

3847. திரும டந்தை மகிழ வந்த
செயமி குந்த—புயமாயோன்—மருகோனே!
ஒருக ரும்பை நிகர்சொல் லின்ற
உமைமகள் தந்த—மகவேளே!—அருளாயோ?
தரும டந்தை கணவ னும்பர்
சரண டைந்து—பணிபாதா!—எனையாளாய்.
செருமி குந்த வயல ணிந்த
திகழு மங்கை—முருகோனே!—சிகிமேரா!

3848. அடத்தில் வந்தெதிர் சூருட னேஎதிர்
அடுத்து வென்றிட வேலதை யேவிய—செயவீரா!
குடத்தின் மிஞ்சிய பூமுலை யாள்நல
குறத்தி மங்கையின் மாய்கையி லேவெகு—மயல்வாய்.
சடத்தின் மிஞ்சிய நோயது தீரிடச்
சணத்தில் எந்தன்மு னேவரு வாய்குரு—பரவேள்!
தடத்தில் வந்திடு சோலைகள் சூழ்தரு
தழைத்த குன்றையின் மாமலை வாழ்வுறு—குமரேசா!

3849. மடக்கொடியர் ஆசை
மயற்குழியில் வீழ்தல்—தவிராயோ?
கடக்களிறி னைச
கனத்ததுணை யாள!—அருளாயோ?
உடற்பிணிக ளோட
உயர்த்தசிகி மீதில்—வருவாயே.
தடப்பொழில்கள் சூழுந்
தகுத்தசிகி மேரில்—வருதேவே!

3850. எனது தீவினை முழுதும் ஓடிட
எளியன் வாழ்ந்திட—அருளாயோ?
மனது நோயது அழிய வேகிருபை
மயிலின் வாகன!—அருளாயோ?
அனமென் மாநடை பயிலும் வேடமின்
அழக தாய்அணை—புயநாதா!
கனக மாகிய முடிக ளேநிறை
கமழ்சி காமலை—முருகோனே!

---

3848. மாய்கை - மாயம், சடம் - சடலம், உடல். சணம் - கணம்.

3851. வண்டமிழ் பாடிட வந்தரு ளேபுரி—குகநாதா!
அண்டர்க ளேமுதல் அன்பர்க ளேபணி—புரிபாதா!
கொண்டல்கொள் கேசமின் கொங்கலர் சோலைமின்—
[அணைதோளா!
தண்டலை சூழ்தரு தண்மல ராகிய—சிகிமேரா!

3852. ஒருவர்துணை ஏது உனையலது வேறு—உளதோதான்
பொருசமர்செய் சூரன் புளவுபட வேலை—எயும்வீரா!
அருமறைகள் தேடு அறிவின்மல ரான—இருதாளா!
கருமுகில்க டாவு கனசிகியின் மேரில்—வருதேவே!

3853. ஆசைப் படுதுயர் தீரச் சிகிமிசை
யாய்வரு வாய்குக!—அலையேசேர்
ஓசைக் கடல்தனி லேநெட் டரவணை
ஊட்டிசை துயில்வோன்—மருகோனே!
பாசைக் கனதமிழ் பாடத் தினமருள்
பாவைக் குறமயில்—புணர்தோளா!
பூசைக் கியைபத! நாயற் கருள்புரி
பூவுற் றிடுசிகி—மலைநாதா!

3854. சென னம் எடுத்திடு துயர்தான்
சிதற எனக்கதி கமதா—யருள்வாயே.
மனமதில் இச்சைக ளதுபோல்
வரமதை யின்றுமு னருள்வா—யமரேசா!
சினஅர வைப்புரி சடையார்
சிவபர மர்க்கிசை புதல்வா!—குமரேசா!
கனக மலைக்கெதி ரிடுசீர்
கமழ்பொழி லுற்றிடு சிகிமா—மலைநாதா!

3855. அடல்புரி சூர னுவி
அழிபட வேலை யேவு—செயவீரா!
மடலவிழ் நீப மாலை
மணிமிகு மார்பின் மீது—புனைமார்பா!
உடல்விழை நோய்கள் தீர
உனவரு ளேசெய் தோகை—மயில்நாதா!
கடல்வளை தோகை மேரா!
கதிநடை யாடு தோகை—மயிலாளா!

3856. ஆதரவு புரிவாய் ஆறுமுக—வடிவே!
மாதயவு செய்குவாய் மாமயிலின்—முருகா!
சூதமரு முலையாள் தோகைகுற—மடமான்
மாதரசி புணர்வாய் வாழ்சிகியின்—மலையாய்!

3857. நடன முற்றிடு நலம யிற்பரி—மிசைவாராய்.
அடம்வி ளைத்திடு அசுர னைக்கொலு—கதிர்வேலா!
குடமு லைக்கொடி குறம யிற்கிசை—மணவாளா!
வடவ ரைக்கெதிர் மயின்ம லைக்குரு—பரவேளே!

3858. அடியவர்கள் பணிசரணு!
அறுமுகவ! குமரகுரு—பர!வேளே!
குடியில்வளர் குறமயிலி
குவிமுலையின் மயல்மிகமு—னணைதோளா!
கடிமயிலின் மிகுஉயர்செய்
கமலமலை யவனுடைய—உபதேசா!
முடிகணிறை பொழில்கணிறை
முதியசிகி மலையில்வரு—முருகோனே!

3859. மாய முகுமடவார் மாலின் மேல்படலா—மதுவேனோ?
தாயர் கருவினிலே தான்வி ழுவதுதீ—ரிடுவாயே.
காயம் வருபிணிதான் காணு முன்நலமா—கிடவாராய்.
தூய மிகுபொழில்சூழ் தோகை மலையரசே!—அருளாயோ?

3860. ஏமன் வருமுனமே ஆடு மயில்தனிலே
ஏர்பொ லியவருவாய்—அமரேசா!
காம மிகுமடவா ராசை வலைகளிலே
கால்கை யொடுவிழுநோய்—தவிராயோ?
சோம னணிசடையார் பாக முமையவள்மா
சோதி கவுரியினுள்—அருள்பாலா!
வாம மிகுமுடிசூழ் தோகை மலையரசே!
வாழ்வு தான்அருள்வாய்—குமரேசா!

3861. வருதீவினை யெனுநோய்தனை
மடிவாய்விட அருளேபுரி—குகநாதா!
கருமாமடு விழுகாவகை
கருதாததென் அறியேனது—புகலாயோ?
பெருமானிட மொருபால்வளர்
பிறைமாதுடை உமைநாயகி—தருபாலா!
திருவாவிய நிறைசோலைகள்
திகழ்தோகையின் மலைநாயக!—அருளாயோ?

3862. வடிவே லெடுத்து மயிலே நடத்தி—வருவாயே.
குடிவாழ் குறத்தி குயமீ தணைத்த—குகநாதா!
மிடிபோ யெனக்கு வெகுமா தனத்தை—அருளாயோ?
படியோர் பணித்த பருதோகை நற்சி—காவேளே!

3860. சோமன் - மதி.

3863. உடல்நோய்கெட உடனேயென்முன்—வருவாயே.
அடலேபுரி அசுரோர்குல—கலகாளா!
மடனீபமென் மலர்மாலிகை—புனைமார்பா!
தடமாபொழில் தருதோகையின்—மேலநாதா!

3864. பொங்கு கடன்மீது கண்டுயில் நாதா!
புண்ட ரிகமாது—புணர்மாயோன்—மருகோனே!
செங்கு முதவாயின் மங்கை குறமாது
திங்கண் முகமாய—மதனுலே—மயலாவாய்!
மங்கு படையோடு வந்த வசுரோனை
மண்டை யுடைவாக—வயிலாலே—எயுநாதா!
மங்கு றவழ்சோலை எங்கு நிறைவாக
மண்டு சிகிமேரில்—வருதேவே!—எனையாளாய்.

3865. குங்கும மிகுத்தமுலை யம்பதை நிகர்த்தவிழி
கொண்டலை நிகர்த்தகுழல்—மடமானர்
பொங்குமய லுக்குடைய வந்தவிழி யற்றுவிடு
புண்குருதி பெற்றவயில்—முருகோனே!
கொங்குள கடப்பமல ரன்பொடு தரித்தபுய!
குஞ்சரி மணந்தமுக!—நலவேளே!
தொங்குகனி யுற்றகன தண்டலை செழித்துவளர்
தொன்றுள சிகிக்கிரியின்—வருதேவே!

3866. மடக்கொ டியர்ஆசை
மயக்கு ழியில்வீழ்தல்—தவிராயோ?
அடத்தில் வருசூரன்
அகத்தை யழிவாக—அடுவேலா!
கடப்ப மலர்சூடு
கமழ்புய வகோடி—அருளாயோ?
தடப்பொ ழில்சூழுந்
தழைத்த சிகிமேரில்—வருதேவே!

3867. சானகி மடந்தை
தான்மகி ழுகின்ற—புயமாயோன்—மருகோனே!
வான வர்கள்வந்து
மாமலர்கள் கொண்டு—பணிபாதா!—எனையாளாய்.
தேனலர் அணிந்த
சீர்புய! நலங்கள்—தருவாயே—குமரேசா!
தானவர் குலங்கள்
சாகவயில் கொண்ட—செயவீரா!—சிகிமேரா!

3868. அந்தி மதியணி செஞ்ச டையின ரன்
அன்பி னுமையவ—டருபாலா!
தந்தி துணையிள யிந்திர மருகய!
தண்டை யணியிரு—பதநாதா!
கந்தி நினைமுலை மங்கை குறமயில்
கண்டு மயல்கொளு—முருகோனே!
செந்தி மலைவரு கந்த! குருபர!
தென்சி கிரியின்வரை—வருதேவே!

3869. வனச மங்கையை யருமை கொண்டுமுன்
மருவு கொண்ட—னிறமாயோன்—மருகோனே!
சினமி குந்தஅவு ணனைமி கும்படை
சிதற வன்றயில்—விடுவேலா—லடுசூரா!
எனது துன்பம தழிந்தி டஇனி
எந்த னுக்கருள்—புரிவாயே—குகநாதா!
மனம கிழ்ந்தருள் புரிவை குன்றையின்
மலையில் வந்தவ!—எனையாள—வருவாயே.

3870. அடியவ ருடமிடி தவிரிட
அருள்பு ரிகுரு—பரவேளே!
பிடியென வதிரிட வசுரனை
பிளவிரு செய்திடு—அயில்வீரா!
கடிகமழ் மலரணி புயகுக!
கமல மென்மல்—ரிருதாளா!
முடிநிறை சிகிமலை மிசைவரு
முருக! நன்வரம்—அருளாயோ?

3871. நடம்புரி மயிலில் ஏறி
நலந்தனை யதிக கோடி—அருளாயோ?
அடம்புரி வசுரன் ஆவி
அழிந்திட வயிலை யேவி—அடுசூரா!
படந்தகு அரவு சூடு
பசந்திடு முடியி னுதர்—அருள்பாலா!
தடங்கொளு பொழில்கள் சூழு
தகுந்திடு சிகிரின்மேரில்—வருதேவே!

3872. சிங்க மருங்குள பைங்கொடி மங்கையர்
சிந்தை மகிழ்ந்திடு—மயலாலே
அங்க மிகுந்து மயங்கிய துன்பதை
அன்றல இன்றதை—அடுவாயே.

சங்கர சம்பு விடப்பயி லுங்குயில்
 தகுந்திட வந்திடு—புதல்வோனே!
கொங்கலர் கொண்டிடு தண்டலை யுந்திய
 குன்றையின் நங்கிரி—வருதேவே!

3873. அடியனுட மிடிதீரிட
 அழகார்மயின்—மிசைவாராய்.
குடிவாய்குற மயிலாளுயர்
 கொடிபோலிடை—யவள்தோளா!
மடிவாய்விட அசுரோனிட
 வலுபோர்புரி—செயவீரா!
கடியார்பொழி னிறைதோகையின்
 கனமாமலை—முருகோனே!

3874. எனது துயர்தீர வொருநி மிசமாக
 எழிலின் மயிலேறி—வருவாயே.
மனம யலினுன்முன் வரும டவராசை
 வலையில் விழுகாது—அருளாயோ?
உனத டியலாது துணையென் பதுவேது
 ஒரும றைகள் தேடு—சரணேசா!
கனக கிரியான சிகிம லையில்வாச!
 கருணை பொழிநாத!—முருகோனே!

3875. அடுத்து வந்திடு சூருடல் கீறிட
 அடத்த செங்கதிர் வேலதை யேவிய—செயவீரா!
கொடுத்த பைந்துணர் நீபமென் மாலிகை
 துணைப்பு யந்தனி லேபுனை நாயக!—அருளாயோ?
வடுக்கண் மங்கையர் ஆசையி னுன்வெகு
 மயற்கு முன்றிடு நோயது தீரிட—அருளாயோ?
எடுத்த செந்துணர் சோலைய ளாவிய
 எழிற்செ கண்டியின் மாமலை வாழ்வுறு—குகநாதா!

3876. உடலெ டுத்த தீவினை
 ஒழிய இக்கணம் வேணது—தருவாயே.
அடலெ டுத்த சூருடல்
 அழிய நற்கதிர் வேலினை—எயும்வீரா!
திடலெ டுத்திடு பூமியின்
 தினம கிழ்ச்சிய தாகமுன்—பணிதாளா!
மடலெ டுத்திடு சோலைகள்
 வளைசி கிக்கிரி மீதினில்—வருதேவே!

3877. நடன முற்றிடு மயிலி லற்பொடு
நலமெ னக்கரு—ளிடவாராய்.
மடம கள்குற மகள்ம ணத்தினில்
மகிழும் வித்தக!—முருகோனே!
உடலில் உற்றிடு பிணிவி லக்கிவை
ஒளிர்க டப்பணி—மணிமார்பா!
தடவ ரைக்குயர் சிகிம லைக்குளே
தமிழ்ப யிற்றிய—கனிவாயா!

3878. கடம்பணிபு யாசலா! நலஞ்செய்வைகு கேசனே!
கரந்தைகொள்பொன் வேணியார்—அருள்பாலா!
நடஞ்செய்மயில் வாகனு! கனிந்ததமிழ் வாயனே!
நறுந்துளப மாயனுர்—மருகோனே!
அடங்களறி சூரனுர் நெருங்குபடை யோடவே
அடுங்கொலைசெய் வேலவா!—அருளாயோ?
தடங்கொள்கன சோலைசூழ் செகண்டிமலை வாசனே!
தருந்தவரம் யாவுமே—அருளாயோ?

3879. வடித்தெ டுத்த பாகின் மொழியார்
மயற்கு மெத்த நேர்வ தெவனே—தவிராயோ?
துடிக்கி சைத்த நூலின் இடையாள்
துரைப்பெ ணுக்கு மாலை புனைவாய்—அருளாயோ?
கடிக்க டப்ப மாலை புனைவாய்.
கனச்சி றைப்பொ னுன சிகிமா—மயிலாளா!
குடிக்கு றத்தி மேவு புயவா!
குகச்சி காதென் மேரில் வருவாய்—அமரேசா!

3880. படையெ டுத்து வருசூரர் கெட்டழிய
பரிதி யுற்றஅயில்—விடுசூரா!
நடையெ டுத்தமயில் மிசையெ னக்கருள
நலமி குத்தென்முன்—வருவாயே.
விடையெ டுக்கவரு பவள முற்றஉடல்
விமலர் பெற்றதிரு—மகவேளே!
இடைசி றுத்தகுற மகள்ம கிழ்ச்சிபுரி
எழில்மி குத்தசிகி—மலைநாதா!

3881. அடுத்துவரு சூர னுவி
அருகிட வேலை யேவு—செயவீரா!
கடுக்கொண்மிட றுன ஈசர்
கருத்திலுறு வாசை யான—மகவேளே!

வடுக்கண்மட மாத ராசை
வலைக்குள்விழல் தீர வேநல்—லருள்தாராய்.
இடுக்கணது தீரு யர்பொ
னெழிற்சிகியின் மேரில் வாழு—முருகோனே!

3882. வாதுபுரி சூரன் மாயவயி லேவு—செயவீரா!
மாதுகுற மாது மாலினொடு மேவு—புயநாதா!
சேதுலவு நீப! தேவர்முத லோர்கள்—பணிநாதா!
மோதுகன சோலை முடுசிகி மேரில்—வருதேவே!

3883. சானகி சிறையெ டுத்த
தானவன் விழஅ டித்த—ரெகுராமன்—மருகோனே!
வானவன் மகள்த னக்கு
மாலிகை புனைபு யத்த—மணவாள!—முருகோனே!
தேனலர் மனையி ருக்கும் [யிருதாளா!
தேவன்விண் ணவர்கள் பத்தர்—பணியேசெ—
கானக மிகுவ ளத்த
கார்தவழ் சிகிம லைக்கி—அரசாள!—எனையாளாய்.

3884. ஆறு முகத்து வடிவே
ஆவன மிகக்க யென்முனே—வருவாயே.
வேறுகெ திக்கி யிடமே
வேறு விடத்தி லுளதோ?—அறியாயோ?
மாறு படுத்து வசுரோன்
மாய வயிற்கொ டுடனே—எயும்வீரா!
தேறு கலக்கி முதலவர்
சீர்கொள் சிகிப்பொன் மலைவாழ்—குகநாதா!

3885. அடம்புரி சூரன் அழிந்திட வேலை—எயும்வீரா!
நடம்புரி தோகை நலந்திகழ் வாக—னகுகேசா!
உடம்பின் வியாதி உலந்திட வேண—தருளாயோ?
தடந்திகழ் சோலை தகுந்திடு தோகை—மலைநாதா!

3886. நடக்குமயில் வாக னநகன்
நலத்தை நீசெய் வாய்விண்—அமரேசா!
குடிக்குறவர் மாது சீரின்
குறத்திதனை மேவு நாத!—எனையாளாய்.
கடிக்கமல வெதன் மேலோர்
கருத்தினி லாசை யான—இருதாளா!
முடிச்சிகர மேவு தோகை
முகக்கிரியி னூம் வாழு—முருகோனே!

3887. வந்த தீவினை அற்று வீழிட
வந்து வேணது—தருவாயே.
கந்த மேவு கடம்ப மாலிகை
கண்ட மீதி—லணிதேவே!
நந்த மேயணி செங்கை மாயவன்
நன்று உலாவிய—மருகோனே!
அந்த மேவு செகண்டி மால்வரை
அன்ப தாய்வரு—குகநாதா!

3888. காதன் மிகுத்த
காரி னிறத்த—குறமானுள்—புணர்தோளா!
மாதர் மயற்கு
மாழ்த றவிர்த்து—அருள்வாயோ?—குமரேசா!
ஆதர விச்சை
யாக வெணக்கு—அருளாயோ?—குகநாதா!
சீத மிகுத்த
சீர்சிகி நற்கிரி—யின்மீது—வருதேவே!

3889. தரித்தி ரமது தீரவே
தழைத்தி டுசிகி—மீதிலே—வருவாயே.
வரிப்ப யின்நன் நீபமா
மலர்க்க ணிபுனை—மார்பனே!—அருளாயோ?
கரிக்கு முன்மட மாதினுள்
கனத்தி டுதன—வாசையான்—மெலிவேனோ?
விரித்தி டுகன சேரசூழ்
விரைச்சி கிமலை—மீதிலே—வருதேவே!

3890. கந்த மேவு கடம்ப மாலிகை
கண்ட மீதி—லணிதேவே!
வந்த தீவினை அற்று வீழிட
வந்து வேணது—தருவாயே.
சந்த நாவல! தண்து ளாயணி
சங்க பாணியின்—மருகோனே!
அந்த மேவிய குன்றை யாதிப!
அன்பர் நாயக!—அருளாயோ?

---

3887. நந்தம் - நந்து, சங்கு.

3889. வரி - வண்டுகள்;

3891. போரைப்புரி சூருயிர்
போகக்கதிர் வேல்விடு—செயவீரா!
தாரைப்புனை புயசீராய்
தக்கபடி யேகிருபை—புரிவாயே.
வாரைத்தரி பூண்முலை
மாதர்க்கிசை வாய்அலை—சூதலாமோ?
சீரைப்புனை சாரல்கொள்
தேனுற்றிடு தோகையின்—மலைநாதா!

3892. அடம்புரி சூரன் ஆவி
அழிந்திட வேலை யேவு—செயவீரா!
கடம்பலர் மாலை மார்ப!
கமழ்ந்திடு சோலை மாது—புணர்தோளா!
நடம்புரி தோகை யான
நலந்திகழ் வாக னுநல்—லருளாயோ?
தடங்கொளு சேனை சூழும்
சகம்புகழ் தோகை மேரில்—வருதேவே!

3893. வடித்தெ டுத்த பாகின் மொழியாள்
வனக்கு றத்தி மாது மயலால்—அணைதோளா!
இடிக்கி சைத்த ஓசை யசுரோன்
இறக்கக் கதிர்பொன் வேலை எயும்மா—பலவீரா!
கடிக்க டப்ப மாலை புனைவாய்!
கதிச்சி கிபொன் வாக னமதே—வருவேளே!
முடிச்சி கித்தென் மேரில் அரசே!
முகத்து இச்சை தீர நயமே—புரிவாயே.

3894. வஞ்ச மிடுசூரன் அஞ்ச அயிலேவு
மண்டி வருசேனை—விழவேதான்
கெஞ்ச வடிசூர! யென்க வலைதீரு
கின்ற வடிவான—குமரேசா!
நஞ்ச ரவுசூடு தென்க யிலைநாதர்
நங்கை யுமையாள்தன்—மகவேளே!
மஞ்சு தவழ்சோலை மிஞ்சு முடிசேரு
வந்த சிகிமேரில்—வருதேவே!

3895. வால மாமதி சூடு வேணியர்
மாது பார்வதி—தருபாலா!
கால மேகலி யான தாலென்முன்
கார னுகிருபை—புரியாதென்?

சால மேபுரி மாத ரால்வரு
தாக ஆசையை—அடுவாயே.
தால மேபுகழ் சோலை சூழ்தரு
தாழ்வி லாவுயர்—சிகிமேரா!

3896. அந்தி மதியணி செஞ்ச டையின்முடி
அண்டர் பணியவர்—அருள்பாலா!
தந்தி முகமுளை வைந்து கரமுளர்
தன்று ணைமுருக!—குகநாதா!
நந்தி னரிவிறல் பைந்து ளபமணி
நன்று மிகுபவர்—மருகோனே!
மந்தி தவழ்கன தண்ட லைகள்மிக
மண்டு சிகிமலை—முருகோனே!

3897. மாறுபடு சூரனுடல்
மாயவயி லேவுசெய—குகநாதா!
ஆறுமுக! வேலவ!வி
ஞளுமம ரேசர்பணி—இருதாளா!
மீறுதன மாமயிலார்
மேல்மயல்கொ ளாசைதவி—ரிடுவாயோ?
தேறுபொழில் சூழவரு
சீர்சிகியின் மாமலையில்—வருதேவே!

3898. கொங்கை பயிற்று மடவார்
கொண்ட மயற்கு ளலையா—தருள்வாயே.
மங்கை குறத்தி கணவா!
மன்றில் நடித்த பரமே—சுரர்பாலா!
செங்கை தரித்த வயிலா!
திங்கள் நிகர்த்த வதனு!—அருளாயோ?
கங்கை மிகுத்த வயல்சூழ்
கங்குல் தவழ்ந்த சிகிமா—மலையாளா!

3899. மடக்கொடிய ராசை வலைக்குள்விழு நோயை—விலகாயோ?
அடத்தில்வரு சூரன் அகத்தை அழிவாக—விடுவேலா!
படத்தரவு சூடு படைத்தசடை நாதர்—அருள்பாலா!
தடப்பொழில்கள் சூழ் தழைத்தசிகி மேரில்—வருதேவே!

3900. கந்தமிகும் நீப மாலை
கண்டமதி லேயொர் நாளு—மணிதேவே!
பைந்தமிழின் நாவ லா!யிப்
பந்தமிகு வாழ்வி லேநின்—னருள்தாராய்.

சந்தமதி சூடு வேணி
தந்தபுதல் வா'வி னுடர்—பணிபாதா !
கொந்தலர்கொள் சோலை சூழு
குன்றைமலை மீதில் வாழும்—முருகோனே !

3901. கண்டம்கரி நாயக னுருயர்
கங்குல்குழன் மாதுமி னளரு—ளியபாலா !
அண்டர்க்கரி தாகிய நாயக !
அன்பர்க்கரு ளேபுரி வாய்குரு—பரவேளே !
துண்டப்பிறை மாறுத லர்பணி
தொண்டுக்கிசை வாகிய நாயக !—அருளாயோ ?
கொண்டல்தவழ் சோலைகள் சூழ்தரு
குன்றைக்குடி மீமலை வாழ்தரு—குமரேசா !

3902. வஞ்சமிடு சூரன் மண்டையுடை வாக—விடுவேலா !
கஞ்சமலர் வேதன் கண்டுபணி யேசெய்—குருநாதா !
பஞ்சவாச......... பைந்துளப மாயன்—மருகோனே !
செஞ்சரண சேவை தென்சிகிரி னுத !—அருளாயோ ?

3903. ஆடிய மயிலா ! யான்மகி ழிடவே—அருளாயோ ?
பாடிய புலவா ! பான்மதி வதன !—அருளாயோ ?
நாடிய படியே நாயக ! வெகுசீர்—அருளாயோ ?
நீடிய பொழில்சேர் நின்சிகி மலையா !—அமரேசா !

3904. கடகரியின் முகத்த னார்தன்
கருணையுள துணைக்கு கா!தென்—முருகோனே !
மடவரலமை குறப்பெ ணுள்தன
மயலில்மதி மயங்கி வீழு—வடிவேலா !
நடமயிலை நடத்து சேயே !
நளினமனை மகட்கு வாசை—மருகோனே !
தடமுடியின் மிகுத்த காவு
தழுவுசிகி மலைக்கு ராச !—அமரேசா !

3905. திருமேவிய திறன்மாயவன்—மருகோனே !
பொருசூருடல் புளவாய்விட—அடுவேலா !
அருமாமறை யதுதேடிய—இருதாளா !
கருமாமுகில் கமழ்தோகையின்—மலைநாதா !

---

3902. மூன்றும் அடியின் முதற்பகுதி சிதைந்துள்ளது.

3906. ஆசைக் குறத்தி கணவா!
யானைக் கிசைத்த முகனுர்—துணையாளா!
வாசக் கடப்ப மலராம்
மாலைப் புயத்து அணிவாய்—எனையாளாய்.
தேசத் திருக்கும் அடியார்
தேடித் துதித்த மலரா—கியதாளா!
மாசற் றிருக்கு முயர்சீர்
வாழ்வுற் றிருக்கு மணிசேர்—சிகிமேரா!

3907. கந்தமிகு நீப மாலை
கண்டமதி லாவ லாக—அணிதோளா!
சந்தமிகு நாவ லர்பொன்
தங்குசிகி மீதி லேறு—குகநாதா!
அந்தமிகு தேவர் தேவர்
அன்பர்முத லோர்கள் தேடு—இருதாளா!
கொந்தலர்கொள் சோலை சூழுங்
குன்றைமலை மீதில் வாழும்—முருகோனே!

3908. மடக்கொடிய ராசை மயக்கமது தீர—அருளாயோ?
படத்தரவு சூடு பரர்க்கிசைவ தான—மகவேளே!
அடத்தில்வரு சூரன் அழிந்துவிழ வேலை—எயும்வீரா!
நடச்சிகியி லேறும் நலத்தசிகி மேரில்—வருதேவே!

3909. மாரேறிய தனத்தினர்
மான்மாதர்கள் மயக்கினில்-விழுகாதே-அருளாயோ?
சீரேறிய மயிற்குக!
தேவாதிப ரன்பொடு—பணிபாதா!—அருள்வாயே.
தாரேறிய புயத்தவ! [ரேசா!
தாளாதென்மு னிச்சையி—னுடன்வாராய்—அம
காரேறிய பொழில்சிகிக்
கார்மாமலை வித்தக!—முருகோனே!—எனையாளாய்.

3910. இடியேறென வருசூருடன் எதிரேபுரி—அயிலாளா!
கடிசேரிதழ் மலர்நீபமென் கமழ்மாலிகை—புனைமார்பா!
வடிவாகிய மடமாதர்கள் மயல்தீரிட—வருவாயே.
அடியார்முதல் இமையோர்பணி அழகார்சிகி—மலைநாதா!

3911. அற்பொடு வென்முனே அச்சுதன் மருகா!—வருவாயே.
விற்புறு குழலாள் வித்தகி புதல்வ!—அருள்தாராய்.
பற்பமின் மனையார் பத்தியி னுடனே—பணிபாதா!
பொற்புயர் பொழில்சேர் போற்சிகி மலைவாழ்—குகநாதா!

3911. அற்பு = அன்பு. பர்பம் = பத்மம் = தாமரை.

3912. அடத்தில்வரு சூரை அறுத்துவிட வேலை—எயுநாதா!
மடக்கொடிய ராசை மயற்கிழி படாது—வருவாயோ ?
விடத்தரவு சூடு விரைச்சடைய ராசை—மகவேளே !
திடப்பொழில்கள் சூழு சிகிக்கிரியின் மீது—வருதேவே !

3913. குலுக்கு முலையார்கள் மிரட்டு விழியார்கள்
குறைத்த இடையார்கள்—மயலாலே
மெலுத்து எலாமு மறக்கெடு தலாக
விதித்த தென் ? நோத—றவிராயோ ?
பலுக்கு படையோடு எதிர்த்தசு ரன்மார்பு
பகர்த்திட முன்வேலை—எயும்வீரா !
பெலுக்கு மலர்மேவு பொழிற்சி கியின்மேரில்
பெலத்த வருளேசெய்—முருகோனே !

3914. படையெ டுத்துவரு அவுணர் கெட்டழிய
பதைப தைத்துவிழ—எதிராவே
நடைப யிற்றுமயின் மிசைந டத்தியொரு
நகுஅ யிற்படையை—விடுசூரா !
மடையி லூற்றசெல மெனமி குத்தமது
மலிக டப்பமலர்—அணிமார்பா !
இடைசி றுத்தகுற மகள்ம ணத்தபுய !
எழின்மி குத்தசிகி—மலைநாதா !

3915. அண்டவர் தானவர் மண்டி யேகிற
அன்பர் வேண்டிய—அருளாளா !
கண்ட மேவநஞ் சுண்ட நாயகர்
கங்கை மாதுமை—தருபாலா !
வண்ட மாதர்கள் தந்த மாமயல்
வந்தி டாதருள்—புரிவாயே.
கொண்ட லேகிறை மண்டு சோலைகள்
கொண்ட தோகையின்—மலைநாதா !

3916. கயல்விழி மருட்டி முகமது மயக்கிக்
கருணையை இழைத்து—இசைவாலே
மயலது கொடுத்த மடவியர் தமக்கு
மருள்படு மெனக்கு—அருளாயோ ?
நயமிடு வரத்தை யினியருள் கருத்த !
நடைபுரி சிகிப்ப—ரியின்நாதா !
தயவுயர் குகக்கு ருபர ! சிகிப்பொன்
தருமலை தனக்கு—அரசாளா !

3917. மிடிக்குள் விழுகாது எனக்கு நலமான
மிகுத்த வரம்யாவு—முதவாயோ?
கடிக்கு மரவேறு சடைப்ப ரமர்தேவர்
கருத்தின் மயலான—உமைபாலா!
வடிக்கு மதுவான மொழிப்பெண் மடவார்கள்
மயற்கு ளலையாது—அருளாயோ?
குடிக்கு றமின்வாக! பொழிற்சி கிமின்மேரா!
குகர்க்கு மர!கோடி—நிதிதாராய்.

3918. கறுத்த திருமேனி விருத்த மிகுநேமி
கரத்தி லணிநாதர்—மருகேசா!
மறுத்து மொழியாத படிக்கி நலமான
மகிழ்ச்சி யுடன்வேண—தருளாயோ?
செறுத்து வருசூர னெதிர்த்து வருசேனை
செயத்தி லதுவீழ—விடுவேலா!
பொறுத்த பொழில்சூழு நிறைத்த முடிசூழும்
புகழ்ச்சி யுளதோகை—மலைநாதா!

3919. அந்தி மதியணி செஞ்ச டையின்முடி
அண்டர் பணியவர்—தருபாலா!
தந்தி யணிமுகர் தொந்தி வயிறினர்
தந்து ணைபெறுதென்—முருகோனே!
கொந்தி லகியக டம்ப மலரணி
கொண்ட புய!குக—குருநாதா!
மந்தி தவியவி ணண்டர் மிகுபொழில்
மண்டு சிகிமலை—அமரேசா!

3920. கடகரி முகத்தர் துணைபெறு திறத்து
கமழுள கடப்ப—மலர்மார்பா!
அடமிகு மவுணன் உடல்தனைப் பிளக்கும்
அயிலணி கரத்து—முருகோனே!
மடமயில் குறத்தி தனையணை புயத்த!
மயில்தனை நடத்தி—வருதேவே!
தடமுடி மிகுத்த சிகிமலை யினுற்ற
தமிழ்மிகு குக!க்கு—மரநாதா!

3921. எனதுடைய நோயை இனிவிலக வேண—தருளாயோ?
சினமுடைய சூரன் தெறிபடமுன் வேலை—எயும்வீரா!
அனநடையின் வேடர் அருமைமகள் மேவு—புயலோலா!
கனகமலை யான கனசிகியின் மேரில்—வருதேவே!

---

3919. தவிய = தாவிய.

3922. வாதுபுரி சூரன் மாயவழி லேவு—செயவீரா!
தாதுலவு நீப! தாமரையின் நாதர்—பணிபாதா!
சூதுதனை யேசெய் தோகையர்க ளாசை—தவிராயோ?
மாதுஇரு வோர்கள் மால்கொள்சிகி மேரில்—வருதேவே!

3923. மடமாதர்கள் பயில்வால்வரு
மயல்தீரிட—அருள்வாயே.
உடல்மீதினில் வருநோய்தனை
உடனேயதை—விலகாயோ?
படராவணி சடைநாயகர்
பரமேசுரர்—அருள்பாலா!
தடமாமுடி நிரைசேர்தரு
தகுதோகையின்—மலைநாதா!

3924. நடனமிடு மயிலா! நலமதனை யருள்வாய்—அமரேசா!
அடமிகுவ லவுனேன் அலறிடமு னயிலே—வியசூரா!
கடகரியின் முகனார் கருணையுள துணையா—கியநாதா!
தடமுலவு பொழில்சேர் தகுசிகியின் மலையா!—அருள்
[தாராய்.

3925. குங்குமமுலை மாத ரம்பிணைநிகர் மாதர்
கொண்டல் கொள்குழலார்—தனமாமோர்
பொங்கிய மயலாலே அங்கச னடலாலும்
புண்படு துயர்தீர—முன்வாராய்.
கொங்குள இதழ்சேரும் பங்கச மலர்வாழ்வோன்
கொண்டிடு குருவான—குகநாதா!
சங்கர பரமேசர் தந்தருள் புதல்வா!தென்
தங்கிய சிகிமேரில்—வருதேவே!

3926. கனக தண்டை மணிச தங்கை
கலக லென்று வொலிமு ழங்க—வருவாயே.
மனதில் வந்து துயர்செய் கின்ற
மருவு துன்பம் விலக நன்று—புரிவாயே.
தனமி லங்கும் மடவர் தங்கள்
தழுவு மின்ப மயல்ம யங்கல்—தவிராயே!
வனம டந்தை மருவு மன்ப!
மலர்மி குந்த பொழில்செய் குன்றை—மலைநாதா!

3927. மடந்தைய ராசை என்று
வரும்புலி யோட இன்று—அருளாயோ?
நடம்புரி தோகை கொண்ட
நலந்திகழ் கேச யம்ப—ரியினதா!

3925. அங்கசன் = மன்மதன்.

அடம்புரி சூரை வென்று
அலங்கிரித மாக வந்த—இசையாளா!
கடம்பணி மார்ப! உந்தன்
கனிந்திடு வாய்தி றந்து—அருளாயோ?

3928. வந்தவினை தீர மண்டுசிறை தோகை—மிசைவாராய்.
எந்தன்மன தாசை இன்பமிக வேண—தருளாயோ?
கந்தமிகு நீப! கங்கையணி நாதர்—அருள்பாலா!
அந்தமிகு தோகை அண்டமுயர் மேரில்—வருதேவே!

3929. கடம்பமணி மார்ப!
கரந்தையணி வேணி—தருபாலா!
நடம்புரிசெய் தோகை
நலந்திகழு வாக—ன!குகேசா!
அடஞ்செய்அசு ரோனை
அழிந்திடமுன் வேலை—எயுநாதா!
தடங்கொள் சிகிமேரா!
சகங்கள்புகழ் நாத!—எனையாளாய்.

3930. தண்டை சிலம்பு சதங்கை இலங்கிட—வருவாயே.
கொண்டை சிறந்திடு குங்கும கொங்கையின்—மயநீராய்!
இண்டை யணிந்திடு எம்பர மன்றரு—புதல்வோனே!
மண்டிய தண்டலை மஞ்சுகொள் குன்றையின்—மலைநாதா!

3931. வடித்ததொரு பாகு போல
மருட்டுமொழி வாயி னர்தன்—மயலாலே
கடித்தவிட மாக நோதல்
கருத்த!அது தீர வேண—தருளாயோ?
இடித்தகுர லான சூர
னெடுத்தபடை மாள வேலை—எயும்வீரா!
நடத்தமயி லேறு நாத!
நலத்தபொழில் சூழு தோகை—மலைநாதா!

3932. பாதக ராவரு லோபிக ளாகிய
பாவிகள் பாலணு—கிடலாமா?—அருளாயோ?
மாதர சாய்வரு வேடமி னொளொடு
மான்மிக மேவிய—புயலோலா!—குகநாதா!
தாதவிழ் நீபமென் மாமலர் சூடிய
தாவில கேச!பொன்—மயிலாளா!—வருவாயே.
தீதகல் சோலையி லேமுகி ழுவிய
சீர்சிகி மாமலை—முருகோனே!—அருள்வாயே.

3933. மடம்புரி தோகை யார்கள்
மகிழ்ந்திடு லீலை யான்முன்—மெலியாதே
நடம்புரி தோகை யேறி
நலந்தர ஆசை யாக—வருவாயே.
கடம்புரி யானை யார்தன்
கனிந்திடு சோத ரா!பொ—னருளாயோ?
தடம்புரி சோலை சூழு
சகம்புகழ் தோகை மேரில்—வருவாயே.

3934. வந்தவினை தீர வந்துவரம் வேண—தருளாயோ?
தொந்தமென வாடு துங்கமயி லேறி—வருவாயோ?
பைந்தமிழர் தேடு பங்கசம தான—இருதாளா!
கொந்தலர்கொள் சோலை கொண்டசிகி மேரில்—வருவாயே.

3935. நடிக்கு மயிலேறி
நலத்த அருளேசெய்
திடவாராய்—குகநாதா!
குடிக்கு றவர்மாது
குறத்தி மயலாள!
புயலோலா!—அமரேசா!
இடிக்கு நிகராக
இரைக்கும் அசுரோனை
அடுவேலா—யுதவீரா!
வடிக்கும் ரசமான
மதுப்பொழி கொள்தோகை
மலைமீதே—வருதேவே!

3936. வலுத்த படையோடு எதிர்த்து வருசூரன்
மடித்து விழவேலை—எயும்வீரா!
உலுத்த ரெனவாழ்வோ ரிடத்தி லணுகாமல்
உயர்ச்சி பெறவேண—தருளாயோ?
அலுத்து விடுநோயை விரட்டி யருளேசெய்
அடுத்த வர்சகாய!—முருகோனே!
வலுத்த பொழில்சூழும் முடிச்சி கியின்மேரில்
மகிழ்ச்சி யொடுவாழு—முருகோனே!

3937. வருநோய்தவி ரிடவேஎன்முன்
வருவாய் அறு—முகவேளே!
திருமான்மரு வியமால்கன
செயமாதவன்—மருகோனே!

பெருவாரிதி வளைபூவுளர்
பெருவானவர்—பணிதாளா!
கருமாமுகில் தவழ்சோலைகள்
கமழ்தோகையின்—மலைநாதா!

3938. செந்தாமரை நாயகி யாரெனசீர்
சிந்தாவடி வாகிய மாலுடமா—மருகோனே!
கந்தா!குக! காரண! காரியனே!
கங்காதர வேணிய னாருளும்—புதல்வோனே!
வந்தாதர வேபுரி வாய்குமரா!
மங்காதபொன் மாமயி லா!கிருபையே—புரிவாயே,
ஐந்தார்பொழி லேமிக வேநிரைசேர்
அஞ்சாவ டியார்பணி தோகையின்மா—மலைநாதா!

3939. வந்து வெகுகிருபை மங்க ளமதுடன்—அருள்வாயே.
நந்து தரிகர னன்று திறவிறல்—மருகோனே!
பந்து நிகர்முலை பண்பின் மயில்குற—மடமானுள்
தந்து புணர்புய! தங்க மிகுசிகி—மலைநாதா!

3940. ஆடிய மயின்மீதே ஆறுநன் முகநாத!—வருவாயே.
வாடிடை மடமானுர் மால்தனை விலகாயோ?—அமரேசா!
நாடிய படியேதா னுன்மகி ழிடவேதான்—அருளாயோ?
பாடிய கனிவாயா! பார்புகழ் சிகிமேரா!—குகவேளே!

3941. கனக தண்டை யொலிமு ழங்கக்
கனக மிஞ்சு சிறையி லங்கு—மயின்மீதே
மனம கிழ்ந்து அடியன் முன்பு
வருவை நன்று புரிவை யிந்து—முகநாதா!
தினக ரன்பொ லொளிவி ளங்கு
செயமி குந்த புய!விண் ணுடர்—பணிபாதா!
வனம டந்தை புணரு நண்ப!
மயிலி லங்கு மலையில் வந்த—குகநாதா!

3942. ஆதர வுற்ற பேரருள் செய்வை
ஆய்நடை பெற்ற—மயிலாளா!
மாதரின் முக்கிய மான குறத்தி
மாலில் மயக்கி—யகுகேசா!
தாதவி ழுற்ற நீப மலர்ப்பொன்
தார்கள் தரித்த—புயநாதா!
போதட ருற்ற சோலை மிகுத்த
பூமலி சித்திர—சிகிமேரா!

3943. முகம யக்க மாக
விழிமி ரட்டி யாசை
மொழிப யிற்றி மோக—வலையாலே
அகம யக்கி யேயுள்
ளதைவ ளைத்து வீசி
அடுப கைக்கு நாச—மிடுவாயோ?
சுகமி குந்த லீலை
புரிகு றத்தி யாசை
துறைம கட்கு மாலை—யணிநாதா!
மகமி குத்த தேவ
ரரச னற்ப தாக
மலர்சொ ரித்த தோகை—மலைவேளே!

3944. கடம்பணி மார்பா! கனிந்திடு வாயா!—அருளாயோ?
நடம்புரி தாளா! நலந்தனை நீதான்—உதவாயோ?
அடம்புரி சூர்மா அழிந்திட வேலே—வியசூரா!
கடம்புரை மார்பா! கலந்தகு கேசா!—சிகிமேரா!

3945. வடித்த பாகு மொழியாள்
மகிழ்ச்சி யான மயலால்—மெலிவேனோ?
குடிக்குள் வாழு குறவோர்
குறப்பெண் மாது மயலால்—அணைதோளா!
இடிக்கு நேரு சூர்மா
வினைக்கொல் கூரி னயிலா!—எனையாளாய்!
நலத்த தோகை மயிலா!
நலத்த தோகை மலைமேல்—வருதேவே!

3946. எடுத்த படைசூழ வ னுத்து வருசூரை
இசைத்தபடி வேல்கொண்—டடுசூரா!
கடுக்கொ ளரவேறு முடிப்ப ரமராசை
கருத்தி னுறுபால—கிருகேசா!
இடுப்பி ழையதான கனத்த தனமாதர்
இனத்தின் வருநோயை—அடுவாயே.
உடுக்கு லவுவானின் மிகுத்த பொழில்சூழு
உயர்ச்சி பெறுதோகை—மலைநாதா!

3947. வாடிய இடையார் மேரினை முலையார்
வாளிணை விழியார்—மயலாலே
மோடியமு குறையாய் நோய்பட விதியோ?
மூவர்கள் முதலே!—அருளாயோ?

ஆடிய மயின்மேல் ஆவலி னுடனே
ஆரண முடிவே!—அருளாயோ?
பாடிய அடியேன் வாழிட அருள்வாய்.
பார்புகழ் சிகிமா — மலைநாதா!

3948. வஞ்சி யெனுமிடை ரெண்டு கனதன
வண்டு நிகர்விழி—மடவாரால்
நெஞ்சு பதறிட வந்த பிணிதனை
நின்கிருபை செய்துநல்—லருள்வாயே.
கொஞ்ச கிளிமொழி வஞ்சி குறமயில்
கொண்டு மயலுடன்—அணைதோளா!
மஞ்சு தவழ்பொழில் கொண்ட சிகிமலை
வந்த குருபர!—முருகோனே!

3949. தந்தி முகத்தினர் தொந்தி வயிற்றினர்
தன்றுணை பெற்றிடு—முருகோனே!
அந்தி மதிச்சடை அம்பக நெற்றியர்
அன்பு மிகுத்திடு—புதல்வோனே!
சிந்தி னிற்றுயில் கொண்ட விறற்கிசை
செந்திரு வுக்குநன்—மருகோனே!
வந்தினி யற்பொடு எந்த னுளத்தில்
வந்தருளைச் செய்வை—சிகிமேரா!

3950. சரச மிஞ்சிய மயல்மி குந்திட
தருவு மிங்கித—மடமாதர்
சுரத மிஞ்சிய மயலில்.........டுதுயரை
...................................அடுவாயே!
கரக மிஞ்சிய அழகு கொங்கையின்
கமழ்செய் தண்டலை—மயில்தோழா!
விரவு வந்தருள் புரிவை குன்றையின்
மிகுபொன் மிஞ்சிய—மலைநாதா!

3951. பிணியாகிய துயரால்உடல்
பிழையாவகை வருதீவினை—தவிராயோ?
துணிவாயெதிர் படைசூழ்டு
துடியாய்வரு அசுரோனுடல்—துணிவேலா!
அணிவாகிய நகைசேர்புய
அருள்வேணது தருவாய்குரு—பரவேளே!
மணிசேர்தரு முடிசூழ்தரு
வடிவாகிய சிகிமாமலை—முருகோனே!

---

3950. இரண்டாம் அடி சிதைந்துள்ளது.

3952. அற்ப ரானபிர புக்க ளால்வரும்
அத்த மேகொளல்—தவிராயோ ?
கற்ப காடவி யிற்கு லாவிய
கர்த்த னேபணி—புரிதாளா !
பொற்பின் மாதரின் இச்சை யாயலை
புத்தி தீரிட—அருள்வாயே.
பற்ப மான்வளர் மெய்ச்சி காமலை
பச்சை மாமயின்—முருகோனே !

3953. புரத்தை யெரித்த புகழ்ச்சி படைத்த—அரனர்பால்
திரத்தை படைத்த திருப்பெ ணுமைக்கு—மகவேளே !
வரத்தை யருட்செய் மயிற்பரி யுற்ற—முருகோனே !
தரத்தி லுயர்த்த தழைத்த சிகிப்பொன்—மலைநாதா !

3954. பகிரதி முடித்த திரிபுர தகனர்
பரமர்த னிடத்து மையலவ ளன்பின்—மகவேளே !
வகிர்மதி நிகர்த்த நுதன்மலர் மகளை
மகிழ்வொடு புணர்ந்த செயவிம லோனின்-மருகோனே!
மதிதல மிகுத்த புகழ்சரண் பெற்று
வழிபடு மவர்க்கு நினைவுட னேஅருள்—செயுங்குகனே!
சிகிமலை யுதித்த குமர ! குருபர !
செயவசு ரனைக்கொ லாள!மீமினு—அயிலாளா !

3955. வலுத்த ராவணன் குலத்தர் சேனைகள்
மடிந்து வீழிட—அடுமாயோன்—மருகோனே !
உலுத்த ராவரு மனித்த ராகிய
ஒருத்தர் பாலணு—கிடலாதே—அருளாயோ ?
அலுத்து வீழிட வருத்து நோய்தனை
அழித்து மேன்மையை—அருளாயோ ?—அமரேசா !
பிலுக்கு மாமது மிகுத்த சோலைகள்
பெருத்த தோகையின்—மலைமீது—வருதேவே !

3956. அடமுலவு சூரன் அழிபடமுன் வேலை—எயும்வீரா !
மடமயிலி வேடர் மகளைமண மாலை—புனைவோனே !
கடகரியி னைசை கருணையுள சோத—ரகுகேசா !
தடமுலவு சோலை தழைசிகியின் மேரில்—வருதேவே !

---

3952. கற்பகாடவியிற் குலாவிய கர்த்தன் - கற்பக மரங்களால் ஆகிய காட்டில் விளங்குகின்ற தலைவனாகிய இந்திரன்.

3957. வனசமலர் மங்கையை
மருவும் இங்கித—விறன்மாயோன்—மருகோனே!
அனாக டம்பயின்
அழகு கொண்டிடு—குறமானுள்—புணர்தோளா!
மனதில் வந்திடு
மருவு துன்பம்—அதையேதான்—விலகாயோ?
கனமி குந்திடு
கமழ்செ கண்டியின்—மலைநாதா!—அருளாயோ?

3958. அடம்புரி சூரன் அகந்தை நாச—மிடுவேலா!
கடம்பணி மார்ப! கலந்திடு நோயை—அடுவாயே.
மடம்பயில் வேடர் மடந்தையை மேவு—புயநாதா!
தடங்கொளு சோலை தழைந்திடு தோகை—மலைநாதா!

3959. வடிவே லெடுத்து வருசூரை வெற்றி—புரிசூரா!
அடியா ரிடத்து அருள்வேண தின்று—உதவாயோ?
கடியார் கடம்பம் கனமார்பி லுற்ற—குகநாதா!
செடியார்பொ ழில்கள் திகழ்தோகை யுற்ற—முருகோனே!

3960. தந்தி முகவர்க் கிளைய
தம்பி! குமரக் குக!பொன்—மயிலாளா!
அந்தி மதியைத் தரித்தவிண்
ணண்டர் பணி யுற் றவரன்—மகவேளே!
கொந்தி கல்க டப்பமலர்
கொண்ட புயதற் பரனே!—அருளாயோ?
மந்தி தவுநற் பொழில்கள்
மண்டு சிகரச் சிகியின்—மலைநாதா!

3961. நடன முற்றிடு மயிலில் உற்றிடு
நறும லர்களை—புனைமார்பா!
அடம்வி ளைத்திடு கருமி றத்திடு
அசுர னைக்கொலு—மயிலாளா!
மடம யிற்குற மகளை யற்பொடு
மருவு வித்தக!—அருளாயோ?
தடம லர்ப்பொழில் தகுசி கிக்கிரி
தனின்ம கிழ்ச்சிகொள்—அரசாள்வோய்.

3962. மனதினில் வருதுயர் மடிபட அருள்புரி—குகநாதா!
பனக முனிவர்பணி பவளமெ னுடலவர்—அருள்பாலா!
அனநடை பயில்பவர் அவர்மய லினில்விழல்—தவிராயோ?
கனக கிரியைநிகர் கமழ்சிகி மலைவரு—குகநாதா!

3963. கடிமலர் நீப மாலை
கனபுய மீது சூடு—குகநாதா!
வடிவுள வேட மாது
மருவிய நாய காநல்—அருளாயோ?
துடியிடை யான மாதர்
சுகமய நீர வேண—தருளாயோ?
அடியவர் தேடு பாத!
அழகிய தோகை மேரில்—வருதேவே!

3964. மாதர்களி னுசை யான்முன்
மாயமய நீற வேண—தருளாயோ?
தாதவிழு நீப மாலை
தானணியு மார்ப! கோடி—அருளாயோ?
காதல்விளை வேட மாது
காமமய நீர மேவு—புயநாதா!
ஆதரவு நீசெய் வாய்பொன்
ஆர்சிகியின் மேரில் வாழு—முருகோனே!

3965. தேசத்தர் வந்துபணி சீருற்ற பாத!என்முன்—வருவாயே.
வாசத்தின் மிஞ்சுகன மாலுற்ற சோகமலர்—பணிபாதா!
பாசத்தை யின்றுதவிர் பாவைக்கு மிஞ்சுகுழன்—மயில்
[தோழா!
தாசர்க்கு வந்துதவு சாரற்கொள் குன்றைமலை—முரு
[கோனே!

3966. மடக்கொடிய ராசை மடுக்குழியில் வீழல்—நயமாமோ?
கடக்கரியி னுசை கருத்திலுறு சோத—ரிகுகேசா!
வடத்தினய மாக மலர்க்கணுறு மாயன்—மருகோனே!
தடப்பொழில்கள் சூழு தழைத்தசிகி மேரில்—வருதேவே!

3967. வஞ்சனை யுற்றுமுன்
வம்புவி ளைத்தடல்—புரிசூர்மா—எதிராளா!
நெஞ்சுள துன்பதை
நின்கிரு பைக்கொடு—அடுவாயே—வடிவேலா!
தஞ்சம் எனக்கிலை
தன்றய வுற்றுமுன்—வருவாயே—முருகோனே!
மஞ்சு தவழ்ந்திடு
வண்சிகி நற்கிரி—வருதேவே!—பெருமானே!

3968. கட்டழ கியரான வட்டமுலை யின்மாதர்
கட்டியணை யுமாசை—அதனாலே
கெட்டலையு எளியேனின் துட்டமதி கெட்டழிய
கெட்டிமயி லின்மீது—வருவாயே.
துட்டனென முனடி கிட்டிவரு பொல்லாத
துற்றமுடன் முன்மாவை—யடுவேலா!
வட்டவுல கின்மேன்மை யுற்றசிகி யின்மேரில்
மற்றமுனி வர்தேவர்—பணிபாதா!

3969. அடலெ டுத்துவரும்
அசுர னைக்கொலுபொ—னயிலாளா!
மடலெ டுத்துநய
மணமி குத்தகன—மலர்நீபா!
உடலெ டுத்துவதி
உயர்பி ணிக்கியழி—வுதவாயோ?
கடலெ டுத்துபுவி
கருது சித்திரசிகி—மலைநாதா!

3970. மனதில் வருதுயர்
மடிபட அருள்புரி—குவைநாதா!
அனநடை பயில்பத
அழகிய குறமயில்—புணர்தோளா!
தன்கிரி கொடுநய
சரசியர் வலைவிழல்—தவரிடுவாய்.
தினகர னொளிவிடு
செகமது உயர்சிகி—மலைநாதா!

3971. வந்தவினை தீர வண்சிகியி லேறி—வருவாயே.
கந்தகுரு நாதா! கங்குறவழ் சோலை—மலைநாதா!
அந்தமிகு வானி லண்டர்பணி பாத!—வருவாயே.
சந்தமிகு சோலை தங்குசிகி மேரில்—வருவாயே.

3972. அடம்புரி சூரன் அகந்தணி வாக—அடுவேலா!
நடம்புரி தோகை நலம்புரி வாக—னகுகேசா!
வடம்புரி வேடர் மடந்தையை மேவு—புயலோலா!
தடங்கொளு சோலை தழைத்திடு தோகை—மலைநாதா!

3973. தித்தமி திமிதியென
திக்குவென நடனமிடு—மயிலாளா!
அத்தியணி சடைமுடி
அற்பினெடு தருபுதல்வ!—அருளாயோ?

பத்தியொடு பணியவரு
 பத்தருட் மிடிதவிர—அருளாயோ?
சத்தியணி குக!குமர!
 சக்திதர! மாசிகிரியின்—மலைநாதா!

3974. சானகி மடந்தை
 தானமரு கின்ற—புயமாயோன்—மருகோனே!
வானவர்கள் அன்பர்
 மாமலர் சொரிந்து—நிதமேதான்—பணிபாதா!
கானக மடந்தை
 காதலுடன் வந்து—புணர்தோளா!—குகநாதா!
தேனலை ரலங்கல்
 சீர்பொழி லுகந்த—சிகிமேரா!—அருளாயோ?

3975. மயக்குகணை விழியால் மருட்டும் மயிலார்—மயலாலே
நயப்புவிட நயமோ? நலத்தையினி யருள்வாய்—அமரேசா!
பயப்படமுன் வருசூர் படக்கதிரி னயிலே—வியசூரா!
வயற்பொழில்கள் வளைசீர் வனப்புறுதென் சிகிமா—மலை
[நாதா!

3976. கச்சணி முலையாள் கற்புயர் குறமான்—அணைதோளா!
அச்சுதன் மருகா! அற்பொடு எனையா—ளுமைநாதா!
நச்சர வணிவோர் நட்புய ருமையாள்—தருபாலா!
மொச்சிடு வடியார் முத்திகொள் சிகிமா—மலைநாதா!

3977. தந்தி முகத்தினர் சங்கரி பெற்றவர்—நலமானோர்
தொந்தி வயிற்றினர் சுந்தர முற்றவர்—துணையாளா!
அந்திம திச்சடை அன்பர்த னக்கிசை—புதல்வோனே!
செந்திம லைக்குக! தென்சிகி நற்கிரி—முருகோனே!

3978. அடஞ்செய் மாவை அழிந்திட வேலை—எயுநாதா!
கடம்புரை மார்பின் கருங்குழன் வேடர்—மகள்தோளா!
நடம்புரி தோகை நலந்திகழ் மாமயில்—வருதேவே!
தடங்கொளு சோலை தகுந்திடு தோகை—மலைநாதா!

3979. கானக மடந்தை காதலுறு கின்ற—புயநாதா!
வானவர்கள் வந்து மாமலர் சொரிந்து—பணிபாதா!
தேனலை ரலங்கல் சேர்குழன் மடந்தை—யர்களாலே
ஈனமுறல் நன்ற தேயருள்செய் குன்றை—மலைநாதா!

3980. தண்டை சதங்கைகள் சங்க முழங்கிட—மயின்மீதே
மண்டிமு னன்பர்கள் வந்து நிறைந்திட—வருவாயே.
வண்டிசை கொண்டிடு வம்பவிழ் கின்றிடு—மலர்நீபா!
கொண்டணி றைந்திடு குன்றையி லங்கிரி—முருகோனே!

3981. வந்து வரஞ்செய்வை
மண்டிய கொண்டையின்—மயின்மீதே
பந்து திரண்டிடு
பங்கச கொங்கையின்—குறமானுள்
இந்து முகந்தனை
இன்போடு கண்டனே—முருகோனே!
கொந்துள மைப்பொழில்
கொண்டிடு குன்றையின்—மலைநாதா!

3982. வண்ட லம்பிய நீப மாலிகை
மங்க ளங்கொள் மார்பி லேயணி—குகநாதா!
அண்டர் வானவர் அன்பர்களு மேபணி
அந்த மிஞ்சிய பாத னே!கிருபை—புரிவாயே.
திண்டி லங்கிய மார்பி னுள்வளர்
திங்க டங்கிய வான னுளுமை—தருபாலா!
கொண்டல் கொண்டிடு சோலை சூழ்தரு
குன்றை யங்கிரி வாச னே!குரு—பரவேளே!

3983. விதியால்வரு துயர்யாவையும்
விழவேஅருள்—புரிவாயே.
கதியாகிய மயின்மேல்வரு
கருணாநிதி!—அமரேசா!
நதிசூழ்தரு சடைநாயகர்
நலமாகிய—புதல்வோனே!
மதிதாவிய பொழில்சூழ்தரு
வளர்தோகையின்—மலைநாதா!

3984. எனதுடைய ஆசை இனியொழிய வேண—தருளாயோ?
மனதில்வரு நோயை மடியவருள் வாய்பொன்—மயிலாளா!
அனநடைகொள் வேடர் அழகுதிகழ் மாது-புணர்தோளா!
கனகமலை யான கமழ்சிகியின் மேரில்—வருதேவே!

3985. நித்தமிடு மயில்மேல் நித்தமடி யன்முனே—வருவாயே.
அத்துவித முடிவே! அற்புமிகு குறமான்—அணிதோளா!
முத்தர்தரு புதல்வா! முத்தமிழ் சொல் புலவா!-அருளாயோ?
புத்தர்மத கலக! பொற்சிகியின் மலைமேல்—வருதேவே!

3986. அடுத்த வர்சகாய! அருட்கு ஒருமே—னனுநாதா!
கடுக்கொள் மிடறீசர் கருத்தி லுறுமாசை—மகவேளே!
எடுத்த மடனீப! எழிற்பொன் மலர்சூடு—புயநாதா!
உடுத்து கடல்சூழும் உயர்ச்சி மிகுதோகை—மலைநாதா!

---

3985. நித்தம் = நிருத்தம், ஆட்டம்.

3987. கானக மடந்தை காதலுறு கின்ற—புயநாதா!
வானவர் மகிழ்ந்து மாமலர் பொழிந்து—பணிபாதா!
தானவர் குலங்கள் சாகவயில் கொண்டு—எயும்வீரா!
தேனலர் மிகுந்த சீர்பொழி னிறைந்த—சிகிமேரா!

3988. மடக்கொடிய ராசை வலைக்குள்மடி யாது—அருளாயோ?
படத்தரவு சூடு பணைத்தசடை நாதர்—அருள்பாலா!
கடற்றுயிலு மாயன் கருத்திலுறு மாசை—மருகோனே!
தடப்பொழில்கள் சூழுந் தழைத்தசிகி மேவில்—வருநாதா!

3989. கங்கை தரித்த சடையார்
கங்கு னிறத்த மிடரார்—தருபாலா!
மங்கை குறத்தி கணவா!
வண்டின மொய்த்த மலர்மா—லிகைமார்பா!
செங்கை எடுத்த அயிலா!
திங்க ணிறத்த வதனா!—குகநாதா!
சங்கை எடுத்த விறலார்
தன்கரு ணைத்தென் மருகா!—சிகிமேரா!

3990. விற்கிணை நுதலாள் விரத்திகொள் மதியா—னனமானுள்
நற்குற மகளாள் நட்பொடு புணர்சே—வகவேளே!
அற்புத னென்முனே அச்சுதன் மருகா!—வருவாயோ?
பொற்சிகி மலையா! புத்திர னெனையாள்—குகநாதா!

3991. கனக தண்டை யொலிமு ழங்க
கமழ்க டம்ப மலர்வி ளங்க—வருவாயே.
அனந டஞ்செய் குறம டந்தை
அணையு கின்ற நலமி குந்த—புயநாதா!
மனதில் வந்த துயர டங்க
வரமி குந்து தருவை யன்பர்—பணிபாதா!
வனமி குந்த முடியி லங்கு
வரையின் மிஞ்சு கமழ்செய் குன்றை—மலைநாதா!

3992. காதுற்ற விழியார் மேருற்ற முலையார்
காருற்ற குழலார்—மயலாலே
வாதுற்ற மதனார் சேருற்று வரவே
மாசுற்று உடல்தான்—மெலிவேனோ?
மோதுற்ற அவுணோர் சேனைக்குள் வருசூர்
மோசப்ப டமுன்வேல்—எயும்வீரா!
போதுற்ற பொழிலே சூழுற்ற சிகியாம்
பூவுற்ற மலையாய்!—அருளாயோ?

3993. நதிசூடிய சடையார் நலமர்யருள்—புதல்வா!
மதியாகிய முகமான் வனவேடமின்—கணவா!
கதியாகிய மயிலர்! கருணைநிதி—அருள்வாய்.
விதிமால்பணி சரணு! விரைசேர்சிகி—மலையா!

3994. கூவிய மயிலா! கூருள வயிலா!—அருளாயோ?
பாவிய ரெனவே பார்மிசை வளரா—வகைதாராய்.
காவியின் விழியார் கார்குழன் மடவார்—மயநீராய்.
ஆவியை நலமாய் ஆதரி குகனே!—சிகிமேரா!

3995. வந்தவினை தீர வந்துவர நீசெய்—குகநாதா!
சந்தமிகு பாடல் தந்து எனையாள—வருவாயே. [ளா!
பைந்தளிர்கள் சூழும் பைம்பொழிலின் மாது—புணர்தோ
அந்தமிகு தேவர் அண்டர்ப்பணி தோகை—மலைநாதா!

3996. காலன்வரு முனமே கோனைவரு முனமே
கானமயின் மிசையே—வருவாயே.
சீலமதி நுதலார் பாவையர்கள் மயலால்
சீர்குறைத லிலனுய்—அருளாயோ?
ஆலமணி மிடறுர் தானருள்செய் புதல்வா!
ஆறுமுக வடிவே!—எனையாளாய்.
மேலமரர் முதலோர் தேடரிய சிகியாய்!
மீறுமலை யரசே!—குகவேளே!

3997. அண்டர்பணி சரணு! தொண்டர்பணி குகனே!
அன்பனினி எனையாள்—குமரேசா!
வண்டர்படி மலர்நீ பங்கொள்புய முருகா!
வண்சிறையின் மயில்வா—கனவேளே!
சண்டன்வரு முனமே வந்துவர மருள்வாய்.
தந்தியுடை துணைவா!—அருளாயோ?
தண்டலைகள் பலவும் மிஞ்சுசிகி மலையாய்!
சந்தமிகு தமிழா—விரியனுதா!

3998. ஆறு முகத்தர சே!கிரு பைக்கடல்
ஆனதி ருக்கும ரா!யெனை யற்பொடு—ஆளாயோ?
பாறு நிரைத்திட வேயெதி ருற்றிடு
பாவி பெலத்திடு சூரனை வெற்றிகொள்—வேலோனே!
சீறுசின நிரவர் பாணது............
தேவி யுமைக்கொடி யாடரு புத்திர!—முருகோனே!
மீறு மலர்ப்பொழில் சூழ்தரு மெய்ச்சிகி
மேன்மலை யுற்றிடு நாத! எனக்கருள்—புரிவாயே.

---

3998. மூன்றும் அடியின் முதற்பகுதி சிதைவுற்றுள்ளது.

3999. வருசூருடன் எதிர்போர்புரி
வடிவேல்கொடு—எயும்வீரா!
அருமாமறை யவர்வானவர்
அடியார்பணி—இருதாளா!
கருமாமுகில் நிரையாம்குழன்
கமலானனர்—மயல்தீராய்.
தருவேநிறை சிகிமாமலை
தனில்வாழ்குக!—எனையாளாய்.

4000. மாமத குஞ்சரி தெய்வ யானையின்
மாலிகை கொண்ட லாக்கையி னலணி—மயலாளா!
பூமலர் கொன்றையும் பைய ராவணி
பூவைமி னம்பிகைத் தைய லாளருள்—புதல்வோனே!
வாமநல் தண்டலைத் துய்ய தாகிய
மான்மக ளிங்கித சய்யல் வேடமி—னணைதோளா!
நேமவிண் ணுடர்மொய்த் துய்ய வேபணி
நீதிப! குன்றைநற் றுய்ய மாமலை—முருகோனே!

4001. வடித்த பாகின் மொழியார்
கணைக்கு நேரின் விழியார்
வனைத்த சீரின் நுதலார்—மயலாலே
கடித்த பாச வினையால்
அலைக்கு மாசை வலையால்
கருத்து நோதல் தனையே—தவிராயோ?
வெடித்த பூமி வெளியே
கடிப்ப லாச மதுவால்
விளைத்த நேம வளநா—டுடையோனே!
நடித்த தோகை மயின்மேல்
எனக்கு வேண தருவாய்.
நலத்த தோகை மலைநா—யகவேளே!

4002. தீவினை யால்வரு மேவலி நோயது
தீரிட வேயருள்—புரிவாயே.
தாவிய தோகையின் மாமயி லேறிய
சாமிகு கா!குரு—பரவேளே!

---

4000. கொண்டல் ஆக்கை—மேகம் போன்று கைம்மாறு கருதாது அடியார்க் கருள்புரியும் தன் திருமேனி. சாயல் என்ற சொல் சய்யல் என ஆளப்பட்டுள்ளது.

ஆவியை யெமபட ராள்பிடி யாவகை
ஆய்வரம் வேணது—தருவாயே.
கூவிய கோழியின் மாதுவ சாதிப!
கோதறு தோகையின்—மலைநாதா!

4003. தீரி டாதவனை மீறி டாதபடி
தேவை யானவர—மருளாயோ?
வாரின் மீறுதன மாத ராசையெனும்
வாரி மூழ்கும்விதி—தவிராயோ?
தூரி லேபழுப லாச மூறுமது
தோய வேவிளையும்—வயல்நேமா!
நீரி லேதுயிலு மாய ஞர்மருக!
நீள்சி காமலையின்—முருகோனே!

4004. தாதுறு நீப மாலிகை மார்ப!
தாமரை வேதன்—குருநாதா!
வாதுறு சூர ளுேடடர் சேனை
மாளிட வேலை—எயும்வீரா!
சேதுற மேனி நாயக! வேண
சீர்பல கோடி—அருளாயோ?
போதுறு சோலை சூழ்தரு தோகை
பூமலி மேரில்—வருதேவே!

4005. கடலிற் றுயிலுங் கரியத் திருமால்—மருகோனே!
மடலுற் றிடுசீர் மலர்நற் கமலா—சனர்நாதா!
அடலுற் றிடுசூர் அலறக் கதிர்வேல்—விடுசூரா!
தடல்மைப் பொழில்சூழ் தகுநற் சிகியா—மலைவேளே!

4006. வஞ்சனை யிடுசூரன்
வன்சம ரினில்மாள—அடுவேலா!
குஞ்சரி மணவாளா!
குன்றையின் மலைவாழு—முருகோனே!
கஞ்சமென் மலர்வேதன்
கைகுவி வானோர்தன்—மகவேளே!
நெஞ்சக நினைநோயை
நின்கிருபை கொடுவோட—அருளாயோ?

4007. உடம்பெ டுத்த விதியால்
உழன்று மெத்த மனநோ—குதலாமோ?
கடம்பு உற்ற மலர்சூழ்
கமழ்ந்த வெற்றி யிகுசீ—குறுவாகா!

மடங்கொள் மெய்க்கு றமினள்
மகிழ்ந்து வற்பி னுடனே—புணர்தோளா!
தடங்கொ ணற்பொ ழில்கள்சூழ்
தருந்த நற்சி கியின்மா—மலைநாதா!

4008. கொஞ்சு கிளியினை யஞ்ச மொழிபயில்
குஞ்ச ரிமயிலி—புணர்தோளா!
தொஞ்சு தளிரிட மிஞ்சி வருகிற
துன்பம் விலகிட—அருள்வாயே.
அஞ்சு அசுரர்கள் தங்க ளுடதுணை
அண்டர் பணிவிறன்—முருகோனே!
நஞ்சுண் மிடறினர் தந்த புதல்வ!பொ
னறியு யரசிகி—மலைவாழ்வே!

4009. கற்புய ருத்தமி கட்டழ குக்குற—மகள்தோளா!
விற்புரு வத்தினள் வித்தகி புத்திர!—முருகோனே!
அற்போடு நிற்பணி அத்துவி தத்தினர்—குருநாதா!
வெற்புயர் நற்சிகி வித்தக! மெய்க்கிருபை—புரிவாயே.

4010. வண்டினம் நிறைந்துமது வுண்டிடு கடம்பமலர்
வண்டொடை வணிந்தபுய—முருகோனே!
தெண்டிரைத் துயின்றிடுபொ னிந்திரை யணைந்தபுய
தென்றுளா யணிந்தவிறன்—மருகோனே!
செண்டி ணிகருந்தன மடந்தையர்கள் தந்தமயல்
சென்றுழல்வ தென்றுதவி—ரிடுமோதான்?
மண்டி வளரும்பொழில் மங்குறவ ழுஞ்சிகியில்
வந்தருக! எந்தன்முன்—வருவாயே.

4011. மடக்கொடியர் ஆசை
மருட்டுவலை வீழல்—தவிராயோ?
அடத்தில்வரு சூரன்
அகத்தையழி வாக—விடுவேலா!
நடத்துமயில் வீர!
நலத்தைவெகு வாக—அருளாயோ?
தடப்பொழில்கள் சூழுந்
தழைத்தசிகி மேரில்—வருதேவே!

4012. சரச மிஞ்சிய மடவர் இங்கித
தழுவும் ரஞ்சித—மயலாலே
உரசு கொண்டுடல் மெலிய வந்துட
னுருகு துன்ப—மதுதீராய்.

விரசில் வந்திடும் அசுரர் தன்படை
விழமுன் வென்றிடு—வடிவேலா!
அரக ரென்றுமு னடியர் கும்பிடு
அழகு தங்கிய—சிகிமேரா!

4013. கால தூதர்கள் ஆவி மேல்வரு
காலை நீயென்முன்—வருவாயே.
வால மாமதி சூடும் வேணியர்
மாதுய ராவலின்—தருபாலா!
ஏல வார்குழன் வேட நாயகி
ஏர்கு லாவிய—மணவாளா!
நீல மாகடல் சூழ்சி காமலை
நேய நாரணன்—மருகேசா!

4014. உடலில் வருபிணி விலக அருள்புரி
உலகு புகழ்வரு—இருதாளா!
கடலின் விடயர வணையின் மிசைத்துயில்
கரிய திருவிறன்—மருகோனே!
மடலி லுயர்வரு மதுவொழு கியபொன்
மலரி னயனிமை—யவர்நாதா!
அடலி லுயர்கதிர் வடிகொ ணிணமிகு
அயில!சி கிமலை—முருகோனே!

4015. கனைகட லிற்றுயில் துளையணி மற்புய
கரியவு டற்றிரு—விறலானோர்—மருகேசா!
தினைவிளை நற்புன வருகிளி யைக்கடி
திறமற வர்கோடி—புணர்தோளா!—எனையாளாய்.
அனையின் வயிற்றுதி ரமதை விலக்கிநின்
அடியது பெற்றிட—அருள்வாயே—அமரேசா!
தினையுள நற்பொழில் வளைபட வுற்றிடு
சிகிமலை வித்தக!—முருகோனே!—அருளாயோ?

4016. ஓவிய மாகிய ரூபமென் மாதர்கள்
ஊறிய காமமென்—னலையூடே
தாவியு மாழ்விதி தீரிட வேயருள்
தாதை வராதது—மெதனாலோ?

---

4013. ஏலம் - மயிர்ச்சாந்து.

4015. அனையின் வயிற்றுதிரமதை விலக்கி மீளவும் பிறவாதிருக்குமாறு செய்து என்பது மூன்றும் அடியின் பொருள்.

கூவிய கேக்ய மிற்பரி யேறிய
கூறிடு நீடிலே—அயிலாளா!
ஆவிகெ டாவகை தானருள் வாய்சிகி
யாகிய சீர்மலே—வருதேவே!

4017. சோதி நாயகர் மாது மாபதி
தூய வேணியர்—அருள்பாலா!
வாதி னல்வரு சூர னுருட
மார்பு கூரிட—எயும்வீரா!
தாதி லேமிகு நீப மாகிய
தாம னே!கிருபை—புரிவாயே.
போதி லேயுயர் சோலே சூழ்தரு
பூவு லாவிய—சிகிமேரா!

4018. தேகத்தினி லேவரு நோயது
தீரத்திற மாகிய மூலிகை—தருவாயே.
பாகத்தினி லேயிரு பாவையர்
பார்வைக்கிசை வாகிய சோதியின்—வடிவாளா!
நாகத்தினி லேதுயி னாண
ருக்கிசை வாகிய தாகிய—மருகோனே!
மேகத்தினி லேயுயர் சோலேகள்
மீதிற்செழி தோகையின் மாமலே—வருதேவே!

4019. ஏம னார்வரு போது தோகையில்
ஏறி நாயன்முன்—வருவாயே.
காம னார்செயு நோயி னல்வரு
காத லார்மயல்—தவிராயோ?
மாம னொரொடு போர தேசெயும்
மாய னுருட—மருகோனே!
பூம னார்பணி நாத! நாயக!
பூவு லாவிய—சிகிமேரா!

4020. சடல மெடுத்த படியால்
தமியன் மிகுத்த துயராழ்—குவனனே.
இடரை யகற்றி உடனே
இனிய நலத்தை யினிநீ—உதவாயோ?
படர சுரர்க்கு நிரைசூழ்
படையை யறுத்து முதலே—அழிவேலா!
புடவி வளைத்த சிகியாம்
புகழ்மலே பெற்ற வரசே!—அருளாயோ?

4021. அண்டர் வானவர் கண்டு நாள்தொறும்
அன்ப தேகொடு—பணிதாளா!
சண்ட னூர்வரு முன்பு நீடுச
தங்கை மாமயில்—மிசைவாராய்.
தொண்டர் மேனியில் வந்த நோய்தவிர்
சுந்த ராகதிர்—வடிவேலா!
கொண்ட ருவிகொ டுங்கை மேலுயர்
குன்றை மாமலை—வருதேவே!

4022. அடுத்த வர்தனை வருத்தி யபிணி
அதுக்கொ ருகெடு—தலையீவாய்.
கடுக்கை யையணி சடைப்ப ரமர்தன்
கருத்தி னலமிகு—புதல்வோனே!
வடுக்கி ணைவிழி குறக்கு லம்வரு
மகட்கி சைநல—மயலாளா!
உடுத்தி யகடல் நிலத்தி னிலுயர்
உயர்ச்சி கொள்சிகி—மலைநாதா!

4023. வார்த ரித்திடு பூமு லைக்கொடி
மாத ருக்கிசை—மயலாலே
கூர்மை கெட்டலை யாதெ னக்கருள்
கூர்ப டைக்கதிர்—அயிலாளா!
போர்வி ளைத்திடு சூர னைக்கொலு
பூம வித்திடு—புயவீரா!
கார்த ரித்திடு பூமி குத்திடு
காவ ளைத்திடு—சிகிமேரா!

4024. கருங்குழன் மாதர் கலந்தணை யாசை—யதனலே.
மருங்கது போக வருந்துயர் தீர—அருளாயோ?
நெருங்கின மார்பின் நெடுங்குழன் வேடர்—மகள்தோளா!
பொருஞ்சமர் வேல! புகழ்ந்திடு தோகை—மலைநாதா!

4025. வருநோய்தவி ரிடவேயொரு மயின்மீதினில்—வருவாயே.
செருவேபுரி அவுணரொடு செயமேபுரி—அயிலாளா!
தருநீழலில் அரசாள்தரு தருநாயகன்—மருகோனே!
கருமாமுகில் தவழ்காவுயர் கமழ்தோகையின்—மலைநாதா!

4026. நடனமிட்டிடு மயிலில் உற்றவ!
நலமெ னக்கருள்—புரிவாயே.
அடம்வி ளைத்திடு மிகுபெ லத்துயர்
அசுர னைக்கொலு—மயிலாளா!

4022. கடுக்கை - கொன்றை. வடு - மாவடு.

படர வுற்றிடு சடைமு டித்தவர்
பரமர் புத்திர!—அருளாயோ?
வடவ ரைக்கிசை சிகிம லைக்குக!
வரமெ னக்கருள்—புரிவாயோ?

4027. தந்தி முகவர்க் கிளைய
தம்பி குமரக் குருப—ரகுகேசா!
அந்தி மதியுற் றசடை
அம்பி கைதனக் கிசையு—மகவேளே!
கொந்தி ருகடப் பமலர்
கொண்ட புயவற் பிஞெடு—அருளாயோ?
மந்தி கொள்தடப் பொழில்கள்
மண்டி யசிகிக் கிரியில்—வருதேவே!

4028. கருவில் உதித்த வினைதான்
கழிய நலத்தை அருள்வாய்—அமரேசா!
செருவின் மிகுத்த வசுரோன்
திறல ழிப்பொன் அயிலே—வியசூரா!
தருவி னிழற்குள் அரசே!
தருவ ரசற்கு நலமார்—மருகோனே!
மரும லரும்ற புயவா!
வளர்சி கியுற்ற மலையா!—அருளாயோ?

4029. தஞ்சம் வேற்றிலை வந்து வேணது
தந்து நாள்தொறும்—எனையாளாய்.
கஞ்ச நான்முகன் அண்டர் வானவர்
கண்டு மேபணி—இருதாளா!
நெஞ்ச நோய்தனை வென்று மாவர
நின்ற யாலருள்—புரிவாயே.
மஞ்ச தேயுறு தென்சி காமலை
வந்த நாயக!—முருகோனே!

4030. வாடுமிடை யார்கள் கூடி
மால்செய்வதி னுனு நோத—னயமாமோ?
ஆடுமயின் மீதில் ஏறி
யான்மகிழ வேமு னுடி—வருவாயே.
ஓடுபடை சூழு சூர
னுடமர்செய் கூரின் வேல!—அருளாயோ?
நாடுமன நோகி டாது
நாளுமருள் வாய்சி கா!தென்—மலைநாதா!

4031. அடியேனிடம் மயின்மீதினில்
அழகாய்வரு—குவைநாதா!
குடிவாழ்குற மடநாயகி
குவிமாமுலை—அணைதோளா!
மிடிதீரிட வருள்வாய்குக!
விரைசேர்மலர்—அணிமார்பா!
வடிவாகிய கதிர்வேலவ!
வளர்தோகையின்—மலைநாதா!

4032. உற்றூரழ வாழ வேயுட
லொட்டாதுயி ரோடுமு னேமயின்—மிசைவாராய்.
வற்றாதகிரு பானிதி யேநல
மாட்டார்மலர் நீபமென் மாலிகை—புனைமார்பா!
செற்றூரிமை சூருட னேயுயிர்
செத்தோடிட வேயட லேபுரி—அயிலாளா!
கற்றூர்புகழ் தோகையின் மேரினிற்
கர்த்தா!யெனை யாதரி நாயக!—முருகோனே!

4033. உணவாலுறு தீவினை யோடிடவே
உயர்மாமயின் மேலுட—னேவருவாய்.
கணநாயக னருமை நாயகியாள்
கருணைநிதி யாள்தரு—பாலகனே!
பணமாரல்கு லாள்குற மானணைவாய்!
பணிநானல மாகிட—வேயருள்வாய்.
வணமேவிய சோலைகள் சூழ்தரவே
வளர்தோகையின் மேரினில்—வாழரசே!

4034. உடம்பில் வரும்நோயை
உடன்ச மர்செய்தொட—அருள்வாயே.
கடம்பு புனைமார்ப!,
கனிந்து வரம்வேண—தருளாயோ?
நடம்பு ரிசெய்தோகை
நலந்திக ழேறி—வருவாயே.
தடங்கு லவுசோலை
தன்ழைத்த சிகிமேரில்—அரசாளா!

4035. மந்திகுதி போட வுதிர்ந்த கனியுளே
மண்டுரச மேறிட—விளைநேமா!
செந்திமலை வாச! குறிஞ்சிநக ராதிப!
தென்சிகி மேரினில்—வருதேவே!

---

4033. எதுகை நோக்கி வனம், வணம் ஆயிற்று.

வந்திமையர் பூவுக்ள் கொண்டுபணி நாயக!
வன்சமர வேல்வ!—அருளாயோ?
தந்தியுட சோதர! பைந்தொடியர் நாயக!
தங்கமயின் மீதினில்—வருதேவே!

4036. கனக தண்டை யொலிமு ழங்க
கருணை கொண்டு எனது அருகில்—வருவாயே.
அனக டந்த படிக டஞ்செய்
அழகி லங்கு குறம டந்தை—புணர்தோளா!
மனதில் வந்த துயர டங்க
மடிய வந்து வரம கிழ்ந்து—தருவாயே.
வனச மங்கை யுறைசெ கண்டி.
மலையில் வந்த குகிக டம்ப!—எனையாளாய்.

4037. வானவர் மகிழ்ந்து கானமலர் கொண்டு
மாலினொடு வந்து—பணிபாதா!
கானக நடந்து வேடுவியை யன்று
காதலொடு அணைந்த—புயநாதா!
சானகி மணந்த நீலநிற விண்டு
தான்மகிழ நிதங்கொள்—மருகேசா!
தேனல ரலங்கல் மீறுபொழில் கொண்ட
சீருளசெ கண்டி—மலைநாதா!

4038. வாதுபுரி சூரன் மாயவழி லேவு—செயவீரா!
தாதுலவு நீபத் தாரணி மார்ப!—அருளாயோ?
ஆதரவு நீசெய் ஆறுமுக வேல!—அருளாயோ?
வேதமுனி தேடு மீறுசிகி மேரில்—வருதேவே!

4039. உடற்கு வந்திடு உறுத்து துன்பம—தனையேதான்
படச்செய் தின்றருள் பறைச்செ கண்டியில்—வருவோனே!
அடற்கெ திர்ந்தஅசு ரனுக்கு வென்றிடு—அயிலாளா!
தடத்தில் மிஞ்சிய தலச்செ கண்டியின்—மலைநாதா!

4040. அஞ்ச வருவசு ரன்ற னுடலழி—படுவேலா!
கஞ்ச நிகர்முகங் கங்கு னிகர்குழன்—மடமானுர்
குஞ்ச ரியையருள் கொண்டு மருவிய—புயலோலா!
தஞ்ச மிலையருள் தங்க மலைநிகர்—சிகிமேரா!

4041. மிடியாகிய ஆழியின்
விழுகாவகை யாயருள்—புரிவாயே.
குடிவாழ்குற நாயகி
குவிமாமுலை மீதினி—லணைதோளா!

கடியார்மலர் மாலிகை
கமழ்மார்பசி காமலை—முருகோனே!
அடியார்களை ஆதரி
அமரோர்பணி சீர்பதம்—அருளாயோ?

4042, வினையால்வரு துயரோடிட
வெகுசாய்வரம்—அருளாயோ?
நனைபோலெழு இருபூமுலை
நலமாதர்கண்—மிகுதீரா!
எனைநோய்தவிர் இடவேநலம்
இனிநீயுத—விடவாராய்.
சினைசேர்பொழி னிறைதோகையின்
திருமாமலை—முருகோனே!

4043. அடமாய்வரு வனுசேர்படை
அசுரோனுடல்—கிழிவேலா!
நடமாடிய சிகியாகிய
நலதோகையின்—மயினுதா!
குடமாகிய இருபூமுலைக்
குறநாயகி—புணர்தோளா!
தடமேவிய பொழில்சூழ்தரு
தகுதோகையின்—மலைநாதா!

4044. கங்குனிற மேனி மாயன்
கண்டுமகிழ் வான சீர்கொள்—மருகோனே!
பங்கில்வளர் வேட மாது
பந்தமுலை மீதில் மேவு—புயநாதா!
சங்குதவழ் நேம நாட!
சந்திரசடை நாத ராசை—மகவேளே!
மங்குறவழ் சோலை சூழும்
மண்டுசிகி மேரில் வாச!—முருகோனே!

4045. துயர்வி லக்குவாய் துரைம கட்குமா—மணவாளா!
நயமி குத்தவர் நலமெ னக்குநீ—அருளாயோ?
பயமி குத்தசூர் படநு னைப்பொன்வேல்—விடுசூரா!
வயல்வ ளைத்தசீர் வளர்சி கித்தென்மா—மலைநாதா!

4046. ஒருதீவினை யெனுமோர்கடல்
ஒழியாவகை—அருளாயோ?
திருமாலுடை மருகா!அருள்
செய்வாய்குரு—பரவேளே!

மருவார்இதழ் மிகுநீபமென்
மலர்மாலிகை—புனைதோளா!
தருவார்பொழி னிறைசேர்சிகி
தகுமாமலை—முருகோனே!

4047. இருவினை யால்வரு துயரது தீரிட
எழில்மயின் மீதினில்—வருவாயோ?
கருமுகின் மேனியர் பிரமன்வி ணோர்முதல்
கழறொழு வேயருள்—குருநாதா!
அருமறை தேடிய இருசர ணுகிருபை
அருள்செய்கு வாய்திரு—முருகோனே!
தருமிகு சோலைக ளுலவிய தோகையின்
தகுமலை வாழ்வுறு—அமரேசா!

4048. ஆகாத பாசவினை தீராது போவதென்
யானேது மேயறிகி—லேன்குகேசா!
லோகாசை யானகடல் மீதாழி டாதவகை
லோகாதி பா!கிருபை—புரிவாயே.
பாகான தேன்மொழிய ராலேவங் தோர்வினையாம்
பாதாளம் வீழ்வதனை—அடுவாயே.
மோகா!தெய் வானைகண வா!தோகை யாமலையின்
மூதா!கு கேச!குரு—பரவேளே!

4049. மோசமிடு சூரனுடன்
மூடபடை யாவும்ரண—களமீதே!
நாசமிட வேலைவிடு
நாத!குரு நாத!கிருபை—புரிவாயே.
பாசவினை தீரிடஉன்
பார்வையருள் வாய்குமர—குகவேளே!
தாசன்எனை யாளிடுவை
தாவுபொழில் சூழ்சிகியின்—மலைவாழ்வே!

4050. இருவினையால் மெலிகுவனோ?
எழில்மயின்மேல்—வருகுவையே.
கருவெனுமோர் குழியினிலே
கவிழ்வதுதீ—ரிடுகுவையே!
பொருசமரம் ஆடசுரோன்
புளவிடவேல்—விடுகுமரா!
அருமறைதே டியசிகியாம்
அழகியமா—மலைமுருகா!

4051. நஞ்சணி மிடறுர் நன்றுள புதல்வா!—எனையாளாய்.
அஞ்சிட வருசூர் அண்டிய படைமேல்—விடுவேலா!
கொஞ்சிய கிளியாங் கொங்குயர் குழன்வே—டமின்வர்கா!
மிஞ்சிய பொழில்சேர் விண்டொடர் சிகிமா—மலைநாதா!

4052. இருவினை யகலிட எளியன்முன் மயின்மிசை—வருவாயே.
செருபயி லசுரனைத் திறன்மிகு படைவிழ—அடுவேலா!
அருமறை பணிகுக! அழகிய குறமகள்—அணைதோளா!
கருமுகில் தவழ்தரு கமழ்பொழி னிறைசிகி—மலைநாதா!

4053. அடம்புரி சூரன் உடம்பது கீறி
அழிந்திட வேலை—எயும்வீரா!
நடம்புரி தோகை மிகும்பரி மீது
நலந்தர நாயன்—முனம்வாராய்.
வடம்புரி பூமுலை யின்கொடி யான
வனந்திகழ் வேடர்—மகள்பாலா!
தடம்புரி சோலை மிகுந்திடு சீர்கொள்
தழைத்திடு தோகை—மலைநாதா!

4054. அருமறை தேடிய சிரத்தார்
அடியர்க ளேதுதி பதத்தார்—சிவமானோர்
திருவுமை மாலுறை கருத்தார்
திருமக வே!நல மெனக்கே—அருளாயோ?
கருவெனு மோர்துயர் உற்றோர்
கடலினில் வீழ்தல் தவிர்ப்பாய்—அமரேசா!
தருமிகு கானகம் உற்றே
தகுமண மீறுசி கிச்சீர்—மலைநாதா!

4055. எடுத்தஉட லினுக்குவரு
மிளப்பமது தவிர்த்துவரம்—உதவாயோ?
கடுத்துநிரை படைத்துவரு
கனற்றுவிழி தகுக்குஅயில்—விடுசூரா!
தொடுத்ததொரு கடப்பமலர்
தொடைக்குமர! எனக்குவர—முதவாயோ?
அடுத்துவளர் பொழிற்சிகியின்
அடுக்கல்வரு குக!குமர!—அருளாயோ?

4056. உடற்கு வரும்நோயை
உருக்கி யதுவோட—அருளாயோ?
நடக்கும் மயில்ஏறி
நலத்தை யருள்வாய்பொன்—முருகேசா!

மடக்கு மயிலிவேடர்
    மகட்கு மணமாலை—புயநாதா !
தடப்பொ ழில்கள்சூழும்
    தழைத்த சிகிமேரில்—வருதேவே !

4057. அந்தி மதியணி செஞ்ச டையருயர்
    அண்டர் பணியரன்—மகவேளே !
கந்த மிலகுக டம்பை யணிகுக !
    கஞ்சன் முதலினர்—பணிபாதா !
வந்த வினைகள் அலைந்து விடஅருள்
    வஞ்சி குறமயில்—புணர்தோளா !
சந்த மிகுபொழில் மண்டு சிகிமலை
    தங்க அயிலணி—குமரேசா !

4058. கொடிய தீவினை வழியி னுல்வரு
    குறைகள் தீரிட—அருள்வாயே.
கடிகொள் நீபமென் மலர்கள் சூடிய
    கமழு மாலிகை—புனைமார்பா !
அடிய னேனனி மெலிப டாவகை
    அருள மாமயின்—மிசைவாராய்.
வடிவ தாகிய முடிக ளேநிறை
    மயிலின் மாமலை—முருகோனே !

4059. மான்மாதர் மயக்கி னுல்வரு
    மாலான நயப்பு தீவினை—யடுவாயே.
தேன்வாச மிகுத்த பூவிதழ்
    சேர்நீப மலர்ப்பொன் மாலிகை—புனைமார்பா !
கான்வாழு குறத்திய ராசைய !
    காலாயுத முற்ற சேவலின்—கொடியாளா !
வான்வாழ்தரு வுற்ற வன்பணி
    மாறுவள முக்கிய மாகிய—சிகிமேரா !

4060. மிஞ்சி வருதுய ரற்று விழுகிட
    வென்று நயமினி—உதவாயோ ?
நஞ்சின் விழிமட மங்கையர் செய்துயர்
    நன்ற லத்துணை—விலகாயோ ?
கொஞ்சி மொழிபயில் பெண்க ளிருவர்கள்
    கொண்ட மயலுள—முருகோனே !
மஞ்சி தவழுயர் குன்றை மலைமிசை
    வந்த குருபர !—அருளாயோ ?

---

4059. காலாயுதம் உற்ற சேவல் = காலினையே ஆயுதமாகப் பெற்ற சேவற் கோழி.

4061. மடவாருடை மயலாலினி
வருநோய்தவி—ரிடுவாயே.
உடலால்வரு துயரோடிட
உதவாய்குரு—பரவேளே !
கடவாரண முகநாயகர்
கருணாநிதி—துணையாளா !
தடமாமுடி நிரைசேர்தரு
தருதோகையின்—மலைநாதா !

4062. முருக்கி னிதழார்கள் கிளிச்சொன் மொழியார்கள்
முகத்த முகினைசை—தவிராயோ?
மருக்க மழுநீப மலர்த்தொ டைகொள்தோளா !
மயிற்ப ரியிலேறி—வருவாயே.
செருச்செ யசுரோனை எதிர்த்த படையோடு
செயித்த கதிரான—அயிலாளா !
வருத்து வினைதீர எனக்க ருளைநீசெய்
மயில்ம லையில்வாழு—முருகோனே !

4063. கனகக் கிரிதனை நிகர வளர்தரு
கமழ்செய் சிகிமலை—முருகோனே !
மனதில் வருதுயர் விலக வருள்புரி
மயிலில் வருகுரு—பரவேளே !
தினக ரனைநிகர் ஒளிகொள் குக!அருள்
திருமின் மகிழுயர்—மருகோனே !
வனச நிகர்பத! அமரர் பணிபவ!
மகிழு குறமயி—லணைதோளா !

4064. அலையாழி யிற்றுயிலும் அழகார்வி றற்குநல—மருகேசா !
சிலையார்நு தற்குறவா ! சிறுமான்ம கட்குமண-மிடுதோளா !
மலையார்மு லைக்கொடியர் மயலால்வ ருந்துவதை-அடுவாயே.
தலையார்பொ ழில்சிகியின் தருமாம லைக்குமர !—குருநாதா !

4065. தந்திமுக வற்கிளைய ! தமர்க்குநல மிகஅருள்வை—முரு
[கோனே !
சந்திர சடைப்பரமர் தங்களருள் புத்திர!குரு—பரவேளே !
நந்திரு கரத்தருடை நன்றுள மருக!க் குமர!—அருளாயோ?
செந்திரு நிறைத்துவளர் தென்சிகி மலைக்கரசு—புரிதேவே !

4066. வினையால்வரு துயர்தீரிட விரசாய்மயின்—மிசைவாராய்.
அனைமாதெனு முமைமாதருள் அழகாகிய—புதல்வோனே !
புனைநீபமென் மலர்சூடிய புனிதா!அருள்—புரிவாயே. [னே!
சினைசேர்பொழி னிறைதோகையின் திருவாழ்மலை-முருகோ

4067. மண்டு போரினில் வந்த சூருடல்—அடுவேலா!
கண்டு போன்மொழி கங்குல் சேர்குழல்—மடவரால்
கொண்டு வீழ்மயல் குன்றி ஒலிட—அருளாயா?
செண்டு போன்முடித் தென்சி காமலை—முருகோனே!

4068. கொஞ்சு கிளிமொழியார்
குங்கும முலைமடவார்—மயலாலே
நெஞ்சில் இடர்ப்படுநோய்
நின்கிருபை கொடுஅடுவாய்—அமரேசா!
வஞ்சனை யுளவசுரோன்
மண்டிய படைவிழவே—அடுவேலா!
மஞ்சிகள் தவழ்பொழில்சேர்
வண்சிகி மலைதனில்வாழ்—குகநாதா!

4069. மாத ரால்வரு நோய்கள் தீரிட
வான நாயக!—அருளாயோ?
காத லாயம ரேசன் மாமகள்
கான நாயகி—புணர்தோளா!
வேதன் மாவிமை யோர்க ளேபணி
வேல வா!கிருபை—புரிவாயே.
நாத னே!சிகி மேரில் வாழ்வுயர்
நாய கா!குரு—பரவேளே!

4070. அந்தகன் வருமுனமெய்
அன்புடன் அடியன்முனே—வருவாயே.
நந்தணி கரவிறன்மா
னஞ்சர வணைதுயில்வோர்—மருகோனே!
பைந்தொடி குறமயிலாள்
பண்பொடு புணர்புயவா!—அருளாயோ?
கொந்தலர் மிகுபொழில்சேர்
குன்றையின் மலையரசே!—அருளாயோ?

4071. தாவிய மயிலா! தானவர் கலகா!—அருளாயோ?
கூவிய கொடியார் கூரிய வயிலா!—அமரேசா!
ஆவியை நயமே யாகிட வரமே—தருவாயே.
காவியின் விழியார் காவுயர் சிகிமா—மலைநாதா!

4072. மடவாருடை மயல்தீரிட—அருளாயோ?
கடவாரணர் கருணைநிதி—துணையாளா!
அடமேபுரி அசுரோனுடல்—கிழிவேலா!
தடமேமிகு தகுதோகையின்—மலைநாதா!

4073. அஞ்சிட வருசூரனை
அண்டர்கள் மகிழ்வாகிட—அடுவேலா!
நஞ்சணி மிடறுருமை
நங்கையின் இனிதாகிட—அருள்பாலா!
கஞ்சன்வி ணமரோர்பணி
கந்தபொன் மயிலேறிய—குகநாதா!
மஞ்சது தவழ்சோலைகள்
மண்டிய சிகிமாமலை—முருகோனே!

4074. ஆடிய மயிலா! ஆதரவு செய்வாய்—அமரேசா!
கூடிய வடியார் கூறிய சரணு!—எனையாளாய்.
பாடிய புலவா! பார்வதி தனையா!—அருளாயோ?
நீடிய பொழில்சேர் நீள்சிகி மலையா!—குகநாதா!

4075. அஞ்சாமல் வருசூரனை
அண்டோர்கள் மிடிதீரிட—அடுவேலா!
மிஞ்சாம விருதீவினை
வெந்தோட அருள்யாவையு—முதவாயோ?
நஞ்சாடர வாபர
ணஞ்சூடு கனவேணிய—ரருள்பாலா!
மஞ்சாடிடு பொன்சோலைகள்
மண்டேறிய சிகாமலை—முருகோனே!

4076. பதஞ்சலி வியாக்கிரர்
பதந்தொழு சிலாக்கியர்—அருள்பாலா!
கதஞ்செய்அவு ணேருக
கடந்தடுபொன் வேற்கை—முருகோனே!
இதஞ்செய் அடியார்க்கு
இரும்பிணி யவைதீர்த்து—அருளாயோ?
சிதம்பரவு கீர்த்தி
செடுஞ்சிகியி னேர்த்தி—யுடன்வாராய்.

4077. வந்த தீவினை மண்டி டாவகை—அருளாயோ?
சந்த மான கடம்ப மாலிகை—புனைமார்பா!
மைந்த னுனஎன் முன்வந்து வேணது—தருவாயே.
கந்த மாகொள்சி கண்டி மாமலை—முருகோனே!

4078. மண்டு பொழிலினின் மந்தி குதியிடு—விசையாலே
கொண்ட மதுநிறை குன்றை மலையினில்—அரசாளா!
அண்டர் பணிதரு அந்த மிகுகுரு—பரவேளே!
தொண்ட னென்முனுயர் தொங்கன் மயின்மிசை—
[வருவாயே.

4079. மருட்டு விழியார்கள் மயக்கு மயலாலு—மெலிவேனோ?
வருத்து துயர்தீர மயிற்ப ரியிலேறி—வருவாயே.
முருத்து நகைமாது முலைக்கு றமினளை—அணைதோளா!
கருக்கொண் முகிலுருவு கனத்த சிகிமேரில்—வருதேவே!

4080. சதங்கை யொலிகள் முழங்க என்முன்
தகுந்த மயிலில்—வருவாயே.
கதங்கொள் அசுரர் குலங்கள் முழுதுங்
கரைந்து மடிய—விடுவேலா!
நிதம்ப ரவிய கனிந்த அடியார்
நினைந்த படியருள்—செய்வாயே.
பதந்தொ ழுவர்கள் மகிழ்ந்தி டவருள்
பரந்த சிகிமலை—யின்நாதா!

4081. மனதில் உற்றிடு துயர கற்றிநல்
வரமெ னக்கருள்—புரிவாயே.
அனந டைக்கொடி குறம யிற்கிசை
அழகு பெற்றிடு—மணவாளா!
சினமி குத்திடு எதிரி யைக்கொனு
திறலு டைக்கதிர்—வடிவேலா!
கனக மெய்க்கிரி நிகர்ப டைத்திடு
கமழ்சி கிக்கிரி—முருகோனே!

4082. கதிர்வே லெடுத்து மயிலே நடத்து
கனதோகை பெற்ற—துரைவேளே!
அதிராத சுத்த ரணவீர! முக்கிய
அசுரேனை வெற்றி—கொளுநாதா!
விதியா லெமக்கு வருநோயை இன்று
விலகா திருப்பது—எதனலோ?
சுதிகூடு புட்கள் மிகுசோலை யுற்ற
சுபமான நற்சி—கியின்மேரா!

4083. இருவினை தீரிட இனியரு ளேபுரி—முருகோனே!
வருதுயர் தீரிட வரமருள் வாய்குரு—பரவேளே!
அருமறை தேடிய அழகிய சீர்பத!—எனையாளாய்.
கருமுகி லுவிய கமழ்சிகி மாமலை—வருதேவே!

4084. வாரி ருக்குமலை மாத ருக்குவரு—மயலாலே
சீரி ருக்குநிறை தேய்கி டத்திரித—னயமாமோ?
தாரி ருக்குகுழல் சான கிக்கிறைதன்—மருகோனே!
காரி ருக்குமுயர் காவ னைத்தசிகி—மலைநாதா!

4085. வடித்த பாகு மொழியார்
மயற்குண் மோச முடனே—அலையாதே
நடித்த தோகை மயின்மேல்
நலத்தை யாவ லுடனே—அருளாயோ?
கடித்த ராவை யணிவோர்
கருத்தி லாசை மிகுபா—லகவேளே!
படித்த பாவில் வலவா!
பணைத்த தோகை மலைமேல்—வருநாதா!

4086. வாசனை மிகுத்த மாலிகை தரித்த—புயநாதா!
பாசம துற்ற பாவம துக்க—அருளாயோ?
தாசனென்மு னற்ப தாய்மயிலி விச்சை—யுடன்வாராய்.
மாசகல் சிகிப்பொன் மாமலையி லுற்ற—முருகோனே!

4087. சந்தமி குத்த பாடல்
தந்துந லத்தை வேண—தருளாயோ?
நந்துத ரித்த பாணி
நங்கையி லக்குமி வாச!—மருகோனே!
பந்துமு லைப்பெ ணார்கள்
பைங்கிளி யர்க்கு ளாசை—மெலிவேனோ?
கொந்தல ருற்ற சோலை
கொண்டசி கிப்பொன் மேரில்—வருதேவே!

4088. மனது நொந்திடு விசன மின்றது
மடிய வந்தருள்—புரிவாயே.
எனது துன்பம தறமி குந்தருள்
இனிய ரஞ்சித—முருகோனே!
தனம டந்தைய ருடன்ம யங்கிய
தமிய னெந்தன்முன்—வருவாயே.
கனக நங்கிரி சிகரி லங்கிய
கமழ்செ கண்டியின்—மலைநாதா!

4089. சமரிடு சூரன் றனையிரு கூறு—செயும்வேளா!
அமரரெந் நாளும் அடியிணை மீது—பணிநாதா!
பமரமு லாவும் பனிமலர் நீப—மணிமார்பா!
குமரகு கா!பொன் குளிர்சிகி மேரில்—வருதேவே!

---

4089. பமரம் = வண்டு.

4090. அஞ்சவரு சூரன் அங்கமிரு கூறு—செயும்வேலா!
கொஞ்சுகிளி யான கொங்கைமயில் வேடர்—மகள்தோளா!
வஞ்சியர்க ளான மங்கையர்க ளாசை—தவிராயோ?
மஞ்சுதவழ் சோலை மண்டுசிகி மேரில்—வருதேவே!

4091. மடக்கொடிய ரர்சை மயக்கில்விழு காமல்—அருள்வாயே.
கடக்களிற தான கனத்தமுக நாதர்—அருள்பாலா!
உடற்குள்வரு நோயை உருக்கியக லோட—அருள்வாயே.
தடப்பொழில்கள் சூழுந் தழைத்தசிகி மேரில்—வருதேவே!

4092. மருப்பொலி வாச நீப!
மலர்ப்புய நாத! கோடி—அருள்தாராய்.
கருக்குழியி தான பாவக்
கயத்தினில் வீழி டாது—அருள்தாராய்.
செருப்புரி சூரன் ஆவி
தெறித்திட வேலை யேவு—செயவீரா!
தருப்பொலி சோலை சூழுந்
தழைத்திடு தோகை மேரில்—வருதேவே!

4093. வண்ட ராகிய சூரர்மார்
மண்ட வேல்விடு வீரனே!—எனையாளாய்.
அண்டர் மாமுனி வேதன்மால்
அன்பர் யாவரும் நாளுமே—பணிபாதா!
கொண்ட லாகிய கோதையார்
கொண்ட ஆசையின் நாயகா!—அருளாயோ?
புண்ட ரீகநல் வாவிசூழ்
பொங்க மாகிய தோகைமா—மலையாளா!

4094. சந்தமிகு பாடல் தந்துதய வாக—வருவாயே.
கந்தமிகு நீப! கங்கையணி நாதர்—அருள்பாலா!
எந்தனுட நோயை யின்றகல வோட—அருள்வாயே.
கொந்தலர்கொள் சோலை கொண்டசிகி மேரில்—வருதேவே!

4095. பாசக்கயி றுலெதிர் காலர்கள்
பால்விட்டிடன் மோசம யாபத—மருளாயோ?
நேசக்குற நாயகி நாயக!
நீயிச்சைய தாய்நடை மாமயில்—மிசைவாராய்.
வாசக்கம லாசன னூர்முதல்
வானத்தவர் நாள்தொறு மேபணி—யிடுதாளா!
தாசர்க்கரு ளுதகு கா!குளிர்
சாரல்சிகி மாமலை மீதினில்—வருதேவே!

4096. ஆதியின் முதலே! ஆறிரு கரனே!—அருளாயோ?
பாதியின் மதிசூழ் பார்வதி யார்பா—லகவேளே!
ஓதிய மறையோர் ஓசைக ளுடனே—பணிதாளா!
வாதிகல் பொழில்சூழ் வார்சிகி மலைவாழ்—குகநாதா!

4097. கானக மடந்தை காதல்கொள் கடம்ப—மணிமார்பா!
வானவர் சிறந்து மாலினொடு வந்து—பணிபாதா!
சானகி மணந்த தார்புனையும் விண்டு—மருகோனே!
தானவ ரைவென்ற சாமியுயர் குன்றை—மலைநாதா!

4098. வஞ்சனைபுரி சூரன் மண்டியபடை யாவும்—அடுவேலா!
நஞ்சரவணை மாயன் நன்றுளமரு கேசனே!—எனையாளாய்.
கஞ்சனையடு நாதனுர் கண்டிடுமரு கேசனே!—அருளாயோ?
மஞ்சடர்பொழில் சூழுமோர் வண்சிகிமலை மீதிலே—வருதே
[வே!

4099. கடம்பொழி சேனை கடந்தடு யானை—துணையாளா!
மடம்பயில் மாதர் மயங்கிய ஆசை—தவிராயோ?
வடங்கொளு மார்பின் வனம்பயில் வேடர்—மகள்தோளா!
தடங்கொளு சோலை தழைந்திடு தோகை—மலைநாதா!

4100. அம்பு நிகர்த்த விழியாள்
அன்பு மிகுத்த மொழியாள்—குறமானுள்
கும்ப முலைக்கு மயலாய்
கொண்டு வனத்தில் அலைவோய்—அருளாயோ?
உம்பர் இறைக்கு அரசே!
உனத டிப்பொன் மலரே—பணிவேன்யான்.
செம்பவ ளத்த இதழாய்!
தென்சிகி யுற்ற மலையா!—முருகோனே!

4101. ஆதரவு புரிவாய் ஆறுமுக—முதலே!
தாதவிழு நீபத் தார்புனைசெய்—புயனே!
காதல்குற மயிலாள் காதல்நல—மருள்வாய்!
சீதமிகு பொழில்சேர் சீர்சிகியின்—மலையா!

4102. வண்டார் குழலார்
வஞ்சியர் மயலான்—மெலிவேனே?
தண்டைகள் ஒலியா
தந்திமி யெனவே—மயின்மீதே

தொண்டன்முன் வருவாய்
சுந்தர எழிலாய்!—அமரேசா!
மண்டிய பொழில்சூழ்
வண்சிகி மலைமேல்—வருதேவே!

4103. கஞ்சுக மொழியார் ரஞ்சித மடவார்
கந்தம துயர்கே—சமினார்பால்
கெஞ்சிய மயலாய் நெஞ்ச மொடுதுயர்
கின்றதை விலகா—தெதனாலோ?
நஞ்சர வணிவோர் தந்திடு புதல்வா!
நன்றினி யருள்வாய்—அமரேசா!
மஞ்சடர் பொழில்சூழ் தென்சிகி மலைமேல்
வந்திடு குமரா!—குகநாதா!

4104. கானக மடந்தை காதல்கொள் கடம்ப!—மயினாதா!
சானகி சிறந்து தான்மருவு விண்டு—மருகோனே!
வானவர் மகிழ்ந்து மாலோடு பணிந்த—இருதாளா!
தேனலர் நிறைந்த சீர்சிகி விலங்கல்—வருதேவே!

4105. ஒருகு றப்பெணால்
உயர்பொ ழிற்குளே—அலைவோனே!
கருநி றத்தினான்
கனத்தி றன்மா—அடுவேலா!
மரும ணத்ததோர்
மலர்த ரித்தசீர்—புயநாதா!
தருநி றைத்தபூ
தழைசி கிப்பொன்மா—மலைவேளே!

4106. வாடு மிடையார்கள் மாய மயன்மீறி—மெலிவேனோ?
காடு லவுவேடர் காதன் மடமாது—புணர்தோளா!
ஆடு மயின்மீது ஆவ லுடனாக—வருவாயே.
தோடு யர்சோலை சூழ்சி கிமேரில்—வருதேவே!

4107. சூதை நிகர்முலையார்
தோகை மயில்மடவார்—மயலாலே
வாதை படல்நலமா?
மாம யில்பரிமேல்—வருவாயே.
சீதை தன்மருகா!
தேவர் பணிசரணா!—அருளாயோ?
போதை மிகுபொழில்சூழ்
பூமலி வுறுசிகிமா—மலைநாதா!

4108. மண்டமர் கடந்த வேலா!
வந்தருள் புரிந்து வாழ்த்தா—யமரேசா!
தண்டமிழ் மிகுந்த வாயா!
சங்கரி தன்மைந்த னுக—வருதேவே!
அண்டர்பணி கொண்ட பாதா!
அன்பனென் முன்வந்து வேண—தருள்வாயே.
கொண்டல்படி கின்ற சோலைக்
குன்றைமலை வந்த நாத!—அருளாயோ?

4109. மயிலாகிய பரிமீதினில்
வருநாயக!—பெருமானே!
அயிலாயுத மணிபாணிய!
அறுமாமுக!—முருகோனே!
துயிலாதிரு விழிசொருது
துயராகுது—சகியேனுன்
ஒயிலாய்வர மணிமாலிகை
உடனேயணி—அமரேசா!

4110. அடுத்த வர்சகாய! வருட்செய் குவைநாத!
மடுக்கு ழியதான மயற்று யர்கள்தீர
நடிக்கு மயிலா!செய் நறுதோ கையின்மார்ப!
படித்த கனிவாய! பணைத்த சிகிமேரா!

4111. வஞ்சி குறமகள் அன்பு மிகுமயல்
வந்த மனமகிழ்—புயநாதா!
பஞ்சின் மெலிதுள புண்ட ரிகபத!
பந்து முலையவர்—மயலாளா!
மிஞ்சி வருதுயர் அந்து விழவருள்
வெஞ்ச மரிலுயர்—வடிவேலா!
மஞ்சி தவழ்பொழில் உந்து சிகிமலை
வந்த குருபர!—முருகோனே!

4112. மற்புய குருட லைப்புள வாய்விட
வற்கொடு வேல்விடு—செயவீரா!
அற்புத நாயகி யைப்புணர் சீர்புய!
அற்கிணே மேனியர்—மருகோனே!
விற்பொலி மாநுதல் மைக்குழ லார்மயல்
விரத்தியி னுன்மெலி—குதநீராய்
புற்புத வாழ்வினி எப்பது தீரிடும்
பெற்சிகி மேரினில்—வருதேவே!

---

4112. புற்புதம் • நீரில் தோன்றும் குமிழி,

4113. மனதில் வந்திடு மருள கன்றிட—அருளாயோ ?
கனக தண்டைகள் கலக லென்றிட—வருவாயே.
சினமி குந்திடு செயவு ணன்றனை—அடுவேலா !
வனம டந்தையை மருவு மம்புய !—சிகிமேரா !

4114. கரிய குழற்றிரு மயிலை மணந்திடு
கமல விழித்திறல்—விறன்மருகா !
அரிய தவத்தின ரிமைவர் பணிந்திடு
அழகு படைத்திடு—இருசரணு !
தரிய லர்பொதி வருஅ சுரைக்கொலு
தகடிலை யுற்றிடு—வயிலாளா !
உரிய எனக்கருள் தருவை சிகிக்கிரி
உடைகு கிக்குரு—பரவேளே !

4115. தண்டைய சைந்திடு
தங்கமி லங்கிய—மயில்மீதே
புண்டரி கம்பக !
பொன்புய ! அன்பன்முன்—வருவாயே.
கண்டமி ருண்டவர்
கண்மணி யென்றிடும்—குமரேசா !
தண்டலை மிஞ்சிய
தண்சிகி வந்திடு—மமரேசா !

4116. விற்போல்நுதல் மைப்போல்சிகி
மெய்த்தூதுளை—மடமானுர்
வற்போல்முலை யைச்சேர்தரு
மைக்காய்மெலி—வதுதீரர்ய்.
அற்போனிற மெய்ச்சூருட
லைத்தான்வெலும்—அயிலாளா !
கற்போற்சிக ரத்தோகையின்
கட்சோலையின்—மலைநாதா !

4117. முத்துநிகர் இதழாள்
மொய்த்துநிரை குழலாள்—குறமானுள்
குத்துமுலை மயலால்
கொத்துமயின் மிசையே—வருதேவே !

---

4114. தரியலர் - பகைவர்.

4115. புண்டரிகம்பக - தாமரை ஒத்த கண்களை உடையவனே !

4116. வல் - சூதாடுகாய்.

வித்துரும இதழா!
விற்புருவ வுமையாள்—தருபாலா!
கொத்துலவு பொழிலோ
குப்பெனவும் வளர்தோ—கையின்மேரா!

4118. அடம்புரி சூரன் அகந்தையை யோட—அடுவேலா!
நடம்புரி தோகை நலந்திக ழாக—வருவாயே.
மடம்பயில் வேடர் மகிழ்ந்தினி தான—மயில்தோழா!
தடங்கொளு தோகை தகுந்திடு மேரில்—வருதேவே!

4119. மடமாதர்கள் மயலான்மெலி—குதலாமோ?
அடமேபுரி வசுரோனுடல்—கிழிவேலா!
குடமாமுலை குறநாயகி—புணர்தோளா!
வடமேரினின் வடிவாகிய—சிகிமேரா!

4120. அடர்ந்த பூமுலை அடங்கி டாயிடை—மடமானர்
தொடர்ந்த மாமயல் தொலைந்து ஓடிட—அருள்தாராய்.
நடஞ்செய் தோகையின் நலங்கொள் மாவினில்—வருவாயே.
தடங்கொள் சோலைகள் தழைத்த தோகையின்—மலைநாதா!

4121. ஒருதீவினை தவிராவகை உமைபாலக!—அறியேனே!
மருவாசனை மிகுநீபமென் மலர்சூடிய—புயநாதா!
செருவேபுரி வசுரோனுடல் தெறிவாகிட—விடுவேலா!
அருமாமறை துதிநாயக! அழகார்சிகி—மலைநாதா!

4122. கட்டிய மலர்முடியாள்
கட்டழ குயர்குறமா—ணணைதோளா!
துட்டவு ணனையெதிரே
சொக்கிட அயிலதனை—விடுவீரா!
மட்டவிழ் குழலுமையாள்
மைக்கழ லரன்மகிழ்சீர்—மகவேளே!
சிட்டர்கள் பணிசரணா!
சித்திர மிகுசிகிமா—மலைநாதா!

4123. நெஞ்சினுற்றிடு துன்ப மற்றிட
நின்கிரு பைக்கடல்—முருகோனே!
அஞ்சி டப்படை மிஞ்சி டச்செயும்
அன்ற ரக்கரை—அடுவேலா!
பஞ்சி னிற்பொலி கின்ற நற்பத
பங்க யத்திரு—மருகோனே!
மிஞ்சி பெற்றிடு தண்ட லைச்சிகி
வுண்கி ரிக்குரு—பரவேளே!

4124. கடம்ப மலரணி கனிந்த இதழ்முரு—கையவேளே!
நடஞ்செய் மயின்மிசை நலங்க ளருளிட—வருவாயே.
மடந்தை குறமகள் மணந்த குக!குரு—பரவேளே!
தடங்கொள் வளர்பொழில் தழைத்த சிகிமலை—வருதேவே!

4125. வினையி னல்வரு உடலி னேய்தனை
விலக வேணது—தருவாயே.
கனைகொண் மாமணி யலையின் வாரிதி
கமழ வேதுயின்—விழிமாயோன்
மனைவி யாள்மகிழ் மருகனே! கிருபை
மயிலின் மீதினில்—வருவாயே.
சினையின் வாழ்பொழி னிரைகொள் தோகையின்
திருநன்.மேரினில்—வருதேவே!

4126. பண்ட ரிதரிடு வாயினர்
பங்க யத்த ஆனன—மடவாரால்
கொண்ட மைக்கொடு ஆசையைக்
குன்றி டக்கிருபை நீசெய்வாய்—அமரேசா!
வண்ட மிழ்ச்சொ லும் நாயகா!
வண்டி னைப்புன மாதினு—லலைதோளா!
கொண்டன் மொய்த்திடு சோலைசூழ்
குன்றை மெய்க்கிரி வாசனே!—அருளாயோ?

4127. மனம கிழ்ச்சியொடு
மயிலி னற்பரியில்—வருவாயே.
வனம துற்றகொடி
மருவு மைப்புயவா!—முருகேசா!
எனது உடற்குவரும்
இருவி னைதனை—விலகாயோ?
கனக மெய்க்கிரியைக்
கருது நற்சிகியின்—மலைநாதா!

4128. போரில்வரு சூரன் ஆவி
போகவயி லேவு வீர!—செயவேளே!
வாரின்மிகு மீறு தலமை
மாமுலையின் வேடர் மாது—புணர்தோளா!
தாரினுயர் நீப மார்ப!
சாமிகுரு சாமி! யென்முன்—வருவாயே.
காரிலகு சோலை சூழுங்
காதன்மிகு தோகை மேரில்—வளர்தேவே!

---

4126. முதல்வரியின் முற்பகுதி விளக்கமாக இல்லை. வண்டினைப் புனமாது = வண்டினைப் புனமாதாகிய வள்ளியம்மையார்.

4129. ஆதி யாகிய யார ணோகிருபை—புரிவாயே.
பாதி மாமதிப் பார வேணியர்—அருள்பாலா!
சோதி யாகிய தூய மேனியின்—முருகோனே!
தீதி லாதொரு சீர்சி காமலை—முருகோனே.

4130. அடியேனிடம் வருதீவினை
அணுகாவகை—அருளாயோ?
மிடியாகிய கொடுபாவியை
விலகாதது—எதனாலோ?
குடிவாழ்குற மயிலாள்புணர்
குகநாயக!—எனையாளாய்.
முடிசேர்சிகி மலைநாயக!
முதுமாமறை—புகழ்தேவே!

4131. கருவாகிய குழிவீழ்வினை
கலக்காவகை—அருளாயோ?
மருவாசனை மிகுநீபமென்
மலர்சூடிய—புயநாதா!
அருமாமறை புகழ்நாயக!
அடியேன்மிடி—தவிராயோ?
தருவார்பொழி னிறைதோகையின்
தருமாமலை—முருகோனே!

4132. மனம கிழ்ச்சியொடு கலவி யைப்புரியு
மடவ ரர்க்குமெலி—படுவேனோ?
உனத டிக்குயடி மையனெ னத்திரிய
உறுதி யைத்தருவை—குமரேசா!
கனத னக்குமரி குறம கட்குமணம்
கமழ்ம லர்த்தொடைய—லணிநாதா!
அனமி குத்தபொழி னிறையி லுற்றசிகி
அழகு பெற்றமலை—முருகோனே!

4133. கெடுக்கவரு மிடியா லெனக்குவெகு துயரே
கிளைக்குதனை விலகா—ததனாலோ?
அடுக்கநிரை படையோ டெதிர்த்துரண களமே
லழித்துவிட அயிலே—வியசூரா!
கடுக்கையுறு கனவே ணியர்க்குமக வெனுமோர்
கருத்தியினி யெனையா—ளிடவாராய்.
தொடுத்தமது வதினல் விளைத்தவயல் மிகுசீர்
சுரக்குசிகி மலைவாழ்—துரைவேளே!

4134. தரித்திர மாகிய கடற்குழி வீழ்வது
தனக்கொரு தோணிநி—னருளாலே
அளித்தினி தாகவு மெடுத்தெனை யாளிட
அன்பருள் வாயிது—தெரியாதோ?
வரித்திரள் சூழ்தரு கடப்பமென் மாலிகை
மணத்திடு மார்ப!ந—லருளாயோ?
வரித்திடு பூமலர் நிறைத்திடு சோலைகள்
மிகுத்திடு தோகையின்—மலைநாதா!

4135. அடியார்கள் வந்து நிரையாக நின்று
அழகாக முன்பு—தொழுநாதா!
வடிவாயி லங்கு குறமாது கொண்ட
மயலா யணைந்த—புயநாதா!
கடியார்க டம்ப மணமாலை கொண்ட
கனதோ ளிலங்கு—குகநாதா!
முடியார்செ கண்டி, மலைமீது வந்து
முருகா! சிறந்த—அருள்தாராய்.

4136. வறுமை வந்தவுடன் மெலிய நொந்திடுதல்
வருமு னன்றுபுரி—குவைநாதா!
குறுகு றென்றுவொரு கொடுமை கொண்டிடவு
குறைகொள் துன்பமதை—அடுவாயே.
அறுமு கங்களிரு சரண பங்கய!நல்
லழகு கொண்டுமயி—லுடன்வாராய்.
இறுகி றென்றுவிழ வசுரை வென்றகுக!
இளர்செ கண்டிமலை—வருதேவே!

4137. கொஞ்சிய மடவார் தந்திடு மயலது
கொண்டிட அலைவது—தவிராயோ?
நெஞ்சினில் வருதுயர் நொந்திடு மதுதனை
நின்கிருபை கொடுவில—கிடவாராய்.
பஞ்சினு மெலியடி யின்குற மடமகள்
பந்தினை முலைமிசை—அணைதோளா!
மிஞ்சிட வருவசு ரன்றனை யடுகுக!
மின்சிகி மலைவரு—குகநாதா!

4138. வடித்த பாகினை நிகர்த்த மாமொழி
மயிற்பெ ணுள்குற—மகள்தோளா!
இடிக்கு நேர்குரல் நிறைத்த நாற்படை
எடுத்து நேரசுர்—வெல்வேலா!

மிடிக்கு ளேதுயர் படுத்தி டாவகை
எனக்கு வேணது—தருவாயே.
முடிச்சி காமலை தனக்கு நாயக!
முதிர்ந்த நான்மறை—புகழ்பாதா!

4139. அந்தி மதிச்சடை யின்பர மர்க்கிசை
அன்பு மிகுத்திடு—புதல்வோனே!
பந்தி நிரைப்படை கொண்டவு ணர்க்குலம்
பண்டு விழச்செயும்—வடிவேலா!
செந்தி மலைக்குக! வந்துவெ னக்கருள்
செஞ்சர ணக்குரு—பரவேளே!
மந்தி மிகுந்திடு தண்டலை யுற்றிடு
வண்சிகி நன்மலை—முருகோனே!

4140. படையெ டுத்துவரு வசுர னைப்புளவு
படவி டுத்ததுணை—அயிலாளா!
நடைமி குத்தமயில் முருக! நற்கிருபை
நலமெ னக்குவருள்—தருவாயே.
இடைசி றுத்தகுற மகளை ணைத்தபுய!
எழில்ப டைத்தமலர்—அணிமார்பா!
அடைமி குத்தபொழி னிழனி ரைத்தசிகி
அழகு பெற்றமலை—முருகோனே!

4141. கொஞ்சியகிளி யின்சொல்மினவர்
கொண்டிடுநய—மிகுலோலா!
வஞ்சியைநிகர் கின்றிடுமிடை
மங்கையருடை—மயல்தீராய்.
அஞ்சிடவரு வெஞ்சமரசு
றன்றனைஅடு—செயவேலா!
மிஞ்சியபொழில் கொண்டிடுஉயர்
விண்பரவிய—சிகிமேரா!

4142. பச்சை மயிற்பரி தத்த நடத்திய
பத்மத ளச்சர ணக்குகனே!—எனையாளாய்.
கொச்சை மணத்த குறத்தி மயிற்கிசை
கொற்றவ! வெற்றி படைத்தயிலா!—அருளாயோ?
இச்சை படைத்த மடக்கொடி யர்க்கிசை
இட்ட மழித்து நலத்தாளா—யமரேசா!
செச்சை படைத்த புயக்கும ரக்கன
சித்திர முற்ற சிகிக்கிரிமேல்—வருதேவே!

4143. நந்தி டாதசது ரங்க மாபடை
நடந்து சூழ்வரு—வசுரோன்மேல்
குந்த மேவியொரு ரெண்டு கூறுபட
கொன்ற சூர!கிருபை—புரிவாயே.
அந்தி மாமதி யணிந்த வேணியருள்
அண்டர் நாத!நய—முதவாயோ?
மந்தி தாவுபொழில் கொண்ட தோகைமலை
வந்த வென்முருக!—அருளாயோ?

4144. அடுசூருடன் வருசேனைகள்
அழிவாய்விட—எயும்வேலா!
கடுராவணி முடிநாயகர்
கருணாநிதி—தருபாலா!
வடுவாகிய விழிமாதர்கள்
மயல்தீரிட—அருள்வாயே.
தொடுமாலிகை யணிநாயக!
சுபதோகையின்—மலைநாதா!

4145. தத்தும யிற்பரி யொக்கந டத்திய
சத்தி தரித்திடு—கரவீரா!
வித்துரு மத்தைநி கர்த்தயி தழ்க்கொடி
விற்குநி கர்ப்புரு—வமினளாம்
குத்துமு லைக்குற மைக்குழ லைப்புணர்
கொத்தல ருற்றிடு—புயநாதா!
சித்துவி ளைத்திடு வித்தக! வற்புத!
சித்திர மிகுத்திடு—சிகிமேரா!

4146. சகல பாவவினை சகல தீயவினை
தவிர வேணவரம்—அருளாயோ?
சுகர சொல்பொலு கரிய வேடமயில்
துரையின் மாதுபுணர்—புயநாதா!
மகர மான்விழி யுமையின் மாதுதரு
மக!யெ னைசதவி—ரிடுவாயே.
தகமை யானபொழி னிரைகொள் தோகைமலை
தனில்வி யாசமிகு—முருகோனே!

4147. பரத நடனம் ஆடிய
பதமென் மலரி னயகர்—அருள்பாலா!
விரவில்கதங்கொள் சூருடன்
விருத்தி லமர்செய் சேவக!—அருளாயோ?

அரவு படமென் போனிகழ்
 அழகின் மடவி யார்மயல்—தவிராயோ?
குரவு முதல சோலைகள்
 குளிர்கொள் சிகியின் மேரினில்—வருதேவே!

4148. ஆடிய திருமயிலா!
 சரவண பவனே!கி—ருபைதாராய்.
தேடிய வடியவர்பால்
 தேறிட அருள்புரிவாய்—அமரேசா!
வாடிய யிடைமயிலார்
 மாமயல் தவிரிடுவாய்—குகநாதா!
நாடிய படிஅருள்வாய்
 நன்மலர் சிகிமலையா!—அருள்வாயே.

4149. தந்தி முகத்தவர் தன்றுணை பெற்றிடு—முருகோனே!
அந்தி மதிச்சடை அம்பிகை புத்திர!—அருளாயோ?
செந்தி மலைக்குக! தென்கம லத்திறை—பணிநாதா!
கொந்திணர் நற்பொழில் கொண்ட சிகிக்கிரி—வருதேவே!

4150. அஞ்சுக மொழியாள் அம்பிகை யுமையா—ளருள்பாலா!
நெஞ்சுள துயர்தான் நின்கிருபை யதனுல்—விலகாதோ?
கொஞ்சுகுயி னுதா! கொண்டிடு மயல்தீ—ரிடவாராய்.
மிஞ்சுயர் பொழில்சூழ் விண்சிகி மலைநா—யகவேளே!

4151. அண்டர் பணிதரு அன்பர் மிகுகுரு—பரவேளே!
மண்டி வருபடை மங்கி விழுவயில்—விடுசூரா!
வண்டர் படிதரு வன்மயில் மலரணி—புயமார்பா!
கொண்டல் படிபொழில் கொண்ட சிகிமலை—முருகோனே!

4152. எனது துயரினி விலக எழில்மயி—லில்வருவாய்
வனச மலர்வரு மயிலி மருவும்—விறன்மருகா!
கனக நிறமிகு கதிர்செய் கயிலை—நிகர் சிகியாம்
வனம லையிலனு தினமும் வருகு—மரகுருவே!

4153. மனக்கனி வாக மயிற்பரி மீது—வருவாயே.
தனக்குற மாது தனக்கிசை வான—மயில்வீரா!
சினத்திடு சூரன் தெறித்திட வேலை—எயும்வீரா!
வனத்துயர் தோகை மலைக்குரு நாத!—அருளாயோ?

4154. மடந்தைய ராசை மடிந்திட வேண—தருளாயோ?
கடம்பமென் மாலை கனிந்தினி தாக—வணிமார்பா!
நடம்புரி தோகை நலந்திகழ் மாவில்—வருதேவே!
தடங்கொள்தென் சோலை தழைந்திடு தோகை—மலைநாதா!

4155. வலுத்த சூருடல் வகிர்க்க வேல்விடு—செயவீரா!
கலுக்கு எனயிசை கனத்த பணியணி—இருதாளா!
மெலுக்கு மடவியர் மிகுத்த காதலை—விலகாயோ?
குலுக்கு அலர்பொழில் குளிர்த்த சிகிமலை—வருதேவே!

4156. பத்மதள பாத! பத்திமற வாத—எனையாளாய்.
கொத்துலவு நீப! கொப்புலவு சோலை—மகள்தோளா!
சத்தியணி பாணி! சக்கிரகர மாயன்—மருகோனே!
சித்துவிளை யாடுஞ் சித்திரமிகு தோகை—மலையாளா!

4157. சரச மிஞ்சிய லளித வஞ்சியர்
தழுவு மிங்கித—மயலாலே
விரக மூந்திடும் துயரி லின்றுடல்
மெலிய வந்திடு—துயர்தீராய்.
அரவ ணிந்திடு சடைய ரம்பிகை
அருளு மன்ப!முன்—வருவாயே.
பரவு மன்பர்க ணிறைசெ கண்டியின்
பரிய குன்றினில்—அரசாளா!

4158. கோது கிளிமொழி மாத ரவரொடு
கூடி யலைகிற—மயறீராய்.
சூது மிகுமவு ணோர்கள் படவொரு
தூய நுனையயில்—விடுவீரா!
போது மிகுபொழில் நீழல் வளர்தரு
பூவை மருவிய—புயநாதா!
வாது உயர்பொழி லீடு சிகிமலை
வாழ்வ! எனதிடம்—வருவாயே.

4159. ஆடுகிற பாதர் நீடுசடை யாளர்
ஆவன்மிகு வான—புதல்வோனே!
பாடுகிற வாயர் ஆனவடி யார்கள்
பாவவினை தீர—அருளாயோ?
தோடுலவு நீப மாலையணி மார்பா!
தூயவல ரான—இருதாளா!
நாடுநகர் சூழத் தோகைமலை மேவு
நாத கிருபை யாவும்—அருளாயோ?

---

4155. பணி - அணிவகை; கால்களைக் குறித்ததாதலின் சதங்கை, தண்டை முதலிய அணிகளைக் கொள்ளலாம்.

4160. மனதாசையின் உடன்மேவிய
மயிலானமட—வியர்பால்
கனமேகுறை படவேதிரி
கலுழ்நீரிட—அருள்வாயே.
சனகாதியர் பணிநாயகர்
தருபாலக!—முருகோனே!
எனதாசை யதுபோலருள்
எழில்தோகையின்—மலைநாதா!

4161. அரவு தரித்தவர் பரமர் தமக்கிசை
அழகு படைத்திடு—உமைபாலா!
பரவடி யர்க்கிசை யிருசர ணத்திகழ்
பதும மலர்க்குரு—பரவேளே!
குரவை நடத்திடு மயிலில் வளர்ச்சிகொள்
குறவர் மடக்கிளி—புணர்தோளா!
புரவி மயிற்குக! சிகிமலை யுற்றவ!
புனித! எனக்கருள்—புரிவாயே.

4162. ஏனேமிடி யாகிய பாதக
மாமோர்கடன் மீதினி லேவிழல்
ஏதேதய னே!யரு ளாதது—தெரியாதோ?
நானேபிணி யால்வெகு சாயுடல்
நோகாவகை நீகிருபை யேசெய்வை
நாதா!கும ரேச!கு கேச!பொன்—மயிலாளா!
மானேபிணை யோயோ நேர்விழி
வேடோர்அருள் தேவியை மேவிய
வாழ்வேலணி மாணிய னே!யலர்—புனைமார்பா!
வானோர்பணி சோலைகள் சூழ்தரு
வான்தோய் சிகி தோகையின் மலைவாழ்
வாகா!சிறை மாமயின் மீதினில்—வருவேளே!

4163. அடஞ்செய் சூருடைய நெருங்கு சேனைகள்
அடங்க வேல்விடுபொன்—முருகோனே!
நடங்கொள் தோகைபயில் துரங்க மீதினில்
நலங்கள் தானருள—வருவாயே.
உடம்பில் வாழ்துயரம் ஒழிந்து ஓடிடமுன்
உவந்து நீயென்முனம்—வருவாயே.
தடங்கொள் சோலையது நெருங்கு தோகையெனுந்
தகுந்த மாமலையில்—வருதேவே!

4164. அரிய மறைபுகழ் மலரை நிகர்பத!
அழகின் மயின்மிசை—வருதேவே!
தரிய லர்கள்பணி குமர! குருபர!
சததள முளரி—முகவேளே!
கரிய குழலியர் மடவி யர்களுடை
களமை மயலது—தவிராயோ?
வரிக ளரிய பொழில்கள் உலவிய
மயிலின் மலைவரு—குகநாதா!

4165. கடவரை யுரித்த உடையினர் தரித்த
கமழிதழி யுற்ற—சடையார்பால்
மடமயிலி பெற்ற யருள்சு புத்திர!
மயில்தனை நடத்து—திறலாளா!
உடல்வரு பிணிக்கு ஒருவிடை கொடுத்து
ஒழிபட விரட்டு—வைகுகேசா!
வடவரை நிகர்த்த பொழின்முடி நிறைத்த
மயின்மலை யிலிச்சை—பெறுநாதா!

4166. அருமையுடன் வருவாய் அமரர்பணி சரணு!
குருபர!பொன் மயிலாங் குதிரைதனில் வருவாய்.
திருமகள்தன் மருகா! செயமுலவு மயிலா!
திருவுலவு சிகியார் திருமலை யினரசே!

4167. மருப்பொலியு நீப மான
மலர்புனை மார்ப! கோடி—அருளாயோ?
திருக்கொடியை மேவு நாதர்
திறத்திலுயர் ராக வேசர்—மருகோனே!
கருத்திலுறு வாசை தீர
கனத்தமயி லேறி யென்முன்—வருவாயோ?
தருக்குலவு சோலை சூழுஞ்
சகத்திலுயர் தோகை மேரில்—வளர்தேவே!

4168. என்னவினை வரினும் என்னதுயர் வரினும்
இன்னதென அறியேன்—அறியாயோ?
வன்னமயில் மிசையே யென்னிருகண் முனமே
மன்னுசிவ வடிவே!—வருவாயே.

---

4164. சததள முளரி = நூற்றிதழ்த் தாமரை.

4165. கடவரை - மதநீர் ஒழுகப்பெற்ற மலையினை ஒத்த யானை.

அன்னநடை மயிலாள் என்றும்வளர் குறமான்
அன்னவளை அணைவோய்!—அருளாயோ?
சென்னல்வயல் பொழில்சூழ் துன்னுமயின் மலையா!
திண்ணமிகு வசுரோர்—குலகாலா!

4169. ஏன யாதுயர் தீரி டாவகை
ஏத யாவது—அறியேனே.
கான நாயகி மீதி லேவெகு
காத லாயணை—புயநாதா!
வான வோர்முத லாயி னோர்பணி
மாத வா!யினி—அருளாயோ?
தேன தேபடி சோலை சூழ்தரு
சீர்சி காமலை—முருகோனே!

4170. செனனமுத லாக வருதுயர்கள் தீரத்
திருவருள்செ யாத—தெதனாலோ?
உனதடியை நாளும் உறுதிகொளு நாய
னுடைவினைகள் தீர—அருளாயோ?
செனகன்மக ளான திருமருவு நாதன்
திகழ்துளையின் மார்பன்—மருகோனே!
கனககிரி யான பொழிலுலவு சீர்கொள்
கமழ்சிகியின் மேரில்—வருதேவே!

4171. நடன மிட்டிடு மயிலி லுற்றென்முன்
நலம ருட்செய—வருவாயே.
கடம தத்துயர் களிறு வந்திடு
கருணை நற்றுணை—முருகோனே!
அடல்வி ளைத்திடு வசுரர் மைக்குலம்
அழிய விட்டிடு—அயிலாளா!
மடன்மு ருக்கவிழ் பொழில்வ ளைத்திடு
மயின்ம லைக்குரு—பரவேளே!

4172. இருவினை தீர எனதிட மாக—வருவாயே.
கருமுகி லான கமழ்குழன் வேடர்—மகள்தோளா!
செருபுரி சூரன் தெறிபட வேலை—எயும்வீரா!
மருவுள சோலை மயின்மலை மீதில்—வருதேவே!

4173. அடல்புரி சூரன் அலறிட வேலை—எயும்வீரா!
மடலவிழ் நீப மலரணி மார்ப!—எனையாளாய்.
கடறுமின் மாயன் கருணைகொ ளாசை—மருகோனே!
தடமிகு சோலை தழைசிகி மேரில்—வளர்தேவே!

4174. சானகி மணந்த சாமிவிற லுக்கு—மருகோனே!
கானம் வளர்வுற்ற காரிகை தனக்கு—மணவாளா!
தேனலர் தரித்த சீர்புய மிகுத்த—முருகோனே!
வானவர் பணித்த வாசனை படைத்த—சிகிமேரா!

4175. அந்தரம் அதில்வாழ்
அண்டர்கள் பணிதரு—இருதாளா!
கந்தர மிருகமறைக்
கங்கைகொள் சடையினர்—அருள்பாலா!
எந்தன்முன் மயின்மிசை
இன்பம துடன்வரு—குவைநாதா!
கொந்தலர் மிகுபொழில்
கொண்டிடு சிகிமலை—முருகோனே!

4176. அடல வித்திடு படைமி குத்திடு
அசுர ரைக்கொ லுங்—கதிர்வேலா!
மடலெ டுத்திடு அலர்க டப்பமென்
மலர்த ரித்திடு—புயவேளே!
இடரெ னக்குமுன் வருத லைத்தவிர்
இளமை யுற்றிடு—குமரேசா!
கடக ரிக்கொரு வினைப்ப டைத்தவ!
கனசி கிக்கிரி—மலைநாதா!

4177. மகம்வி ளைத்திடு முனிவர் பத்தர்கள்
மலர்கொ டர்ச்சனை—புரிதாளா!
அகம்வி ளைத்திடு கருமை யுற்றிடு
அசுர ரைக்கொ லு—மயிலாளா!
சுகம்வி ளைத்திடு மடவ ரிற்கன
சுரத வித்தையி—னதனாலே
இகம்வி ளைத்திடு மயல கற்றிடு
எழில்மி குச்சிகி—மலையாளா!

4178. பிறைசூடிய சடைநாயகர்
பிரியமாகவே—தருபாலா!
நறைசேர்குழன் மயிலாள்குற
நலமான்மரு—வியதோளா!
நிறையாய்வர முதவாய்குக!
நினையேவிட—உளதோதான்.
மறையேபுகழ் சிகிமாமலை
வளர்வேலவ!—எனையாளாய்.

4175. கந்தரம் - கழுத்து.

4179. ஒருவா தரவு முளதோ குகனே!
பெருமா மயிலா! பிரபலா! எனையாள்.
கருமே னியனும் கனகூர் பகையாய்!
அருமா மறையா! யருதோ கையனே!

4180. தேனுறு கமல மாமலர் வளரு
சீர்மறை யவர்தன்—குருநாதா!
வானுறு வடியர் நாள்தொறு மருவி
மாமலர் கொடுபணி—செய்தாளா!
தானுறு கவியை யோடிட அருள்செய்
தாமரை நாயகன்—முருகோனே!
மானுறு விழியர் தோகைய ரிருவர்
மால்கொளு சிகியின்—மலைநாதா!

4181. சாடை யானமுக மாய்கை யானுயரு
சாய லானமட—மானார்மேல்
சோடை யானமயல் ஆகி னெனெனைச்
சோர்தல் மாறிட—அருளாயோ?
ஆடை மாநிதி சாதம் வேணது
ஆவ லாயருள்—குகவேளே!
ஓடை வாவிகள் சூழ்சி காமலை
யோக நாயக!—அருள்தாராய்.

4182. சந்த மிகுந்த பாடல்
தந்து மகிழ்ந்து வேணது—அருள்வாயே.
அந்தம் மிகுந்த தோகை
அங்கொள் செகண்டி மீதில்—வருவாயே.
கொந்தலர் கொண்ட மார்ப!
கொங்கை யிலங்கு வேடர்—மகடோளா!
செந்தமிழ் கொண்ட வாய!
தென்சிகி யென்ற மேரில்—வருதேவே!

4183. அனியாய லோப
ரவருடு போதல்—தவிராயோ?
கனிபோலும் வாயள்
கமழ்கான மாது—புணர்தோளா!
பனியான சோமன்
படிவேணி நாதர்—அருள்பாலா!
தொனியான சோலைச்
சுகமான தோகை—மலைநாதா!

4184. ஆறுபடை வீடதனை யாளுமுரு கேச!
ஆதரவு நீதருவை யாறிருகை வேல!
மாறுபடு சூரனுடல் கீறுபட வேநீ
மாபடைக ளோடிடமுன் வேலைவிடு வீரா!
தேறுபடு தேனமரு செந்தமிழை நீதான்
தேரவரம் வேணபடி நீதருவை நாதா!
மீறுபடு சோலைநிரை மாமுடிகள் சூழும்
மேலவர்கள் தேடரிய தோகைமலை வாழ்வே!

4185. மனதில் வருதுயர் தனைவி லகிடவே
மயின்மி சைவரு—குவைநாதா!
அனமெ னடைபயில் குறவர் கொடியுடை
அழகு தருகண—வாகுகேசா!
எனது உடலினில் மருவு துயர்தனை
இடர்செ யதைவிழ—அருள்வாயே.
கனக கிரிநிகர் சிகியின் மலைவரு
கருணை பெருகிய—துரைநாதா!

4186. உடலில் வருதுயர் தனையே யழிபட
உடனென் முன்மயின்—மிசைவாராய்.
அடலில் வருகிற வசுரர் குலமது
அழிய அடல்புரி—துணைவேலா!
மடலில் மதுவொழு கியதன் மலரணி
மகிழ்ப! அருள்புரி—குகநாதா!
கடல்கள் வளைபுவி யடியர் பணிதரு
கமழ்பொன் வளர்சிகி—மலைநாதா!

4187. அஞ்சிடு படையதி ரும்படி வருஅசு
ரன்றனை யெதிர்செய்—தடுவேலா!
கொஞ்சிய கிளிமொழி ரஞ்சித மடமயில்
கொங்குள வனமகள்—புணர்தோளா!
நஞ்சினு மூயரிட வந்திடு துயர்தனை
நைந்து விலகிட—அடுவாயே.
உஞ்சிய பொழில்சிக ரந்திகழ் பிரபை
உள்ளவும் பர்பணி—சிகிநாதா!

4188. கறுத்தகுழல் சிறுத்தவிடை
கனத்ததன மிகுத்தநய—மடமாதர்
உறுத்தமயல் தனக்கிளைதல்
உனக்குமன மிரக்கமிலை—அருளாயோ?

வெறுத்தஉட லினுக்குவரு
  மிடிக்கியொரு வருத்தம்உத—வுவைநாதா!
நிறுத்தபுகழ் சிகிக்கிரிய!
  நினக்கடிய னெனக்கருள்செய்—குகவேளே!

4189. அஞ்ச வருகின்ற
  அசுரன்றனை—வெல்குமரா!
நஞ்சணி சிறந்தமிடறு
  நம்பர்அருள்—புதல்வோனே!
வஞ்சர் நிகர்துன்ப
  மதுமங்கி—விழவருள்வாய்.
கொஞ்ச மதிகொண்ட
  பொழில்கொண்ட—சிகிமலையா!

4190. கனிவாய் இலங்கு
  கமழ்கேச மங்கை—யர்களாலே
இனிநான் மயங்கல்
  இதுபாவ மின்று—தவிராயோ?
அனியாய வஞ்சர்
  அவரோ டிணங்கல்—தவிராயோ?
பனியான இந்து
  படிதோகை யின்கி—ரியினதா!

4191. கந்தம லர்க்குழன் வஞ்சிநி கர்த்திடை
  கண்கண் மிரட்டிய—மடமானர்
தந்தம யற்குளம் நொந்த எனக்கருள்
  தந்து நலத்தினை—யருளாயோ?
செந்தமி ழைச்சொல வந்தருள் செய்குவை
  செங்கம லத்துறை—குமரேசா!
கொந்தல ருற்றிடு பைம்பொழி லுற்றிடு
  குன்றை மலைதனில்—வருதேவே!

4192. நடக்கு மயிலேறி யெனக்கு எதிராக
  நலத்தை யருளவேமுன்—வருவாயே.
அடக்க வொருகோடி படைக்கு எதிராக
  அடத்தில் வருசூரை—அடுவேலா!
படைத்த ரவுசூடு சடைப்ப ரமராசை
  படைத்த சிறுவா!ந—லருளாயோ?
தடப்பொ ழில்கள்சூழ சிகிக்கி ரியின்வாச!
  தமிழ்ப்பு லவ!வேண—தருளாயோ.

4190. இந்து - சந்திரன்.

4193. மடம யிற்கிணை குறம கட்கொரு
மணமு டித்திட—வருதேவே!
அடம்வி ளைத்திடு அவுணர் நற்குலம்
அழிப டச்செயு—மயிலாளா!
குடமு லைக்கொடி யவர்வ ருத்திய
குறைது யர்க்கொரு—அருள்தாராய்.
வடவ ரைக்கிசை சிகிமலைக்கொரு
வடிவு பெற்றிடு—முதலாளா!

4194. மருட்டு விழியார்கள் நயத்த மொழியார்கள்
மயக்கு மயல்மீறி—மெலிவேனோ?
இருட்டு நிறமேனி படைத்த அவுணோர்கள்
இறைக்கு அயிலேவு—செயவீரா!
தெருட்டு பணிதீர வருட்செய் குகநாத!
திருப்பெ ணுடைஆசை—மருகோனே!
அருட்டு கனகோட ரமிச்ச முளசோலை
அடர்த்த சிகிமேரில்—வருதேவே!

4195. கனக தண்டையி னோர்மு ழங்கிய
கனமி லங்கிட—வருவாயே.
சினமி குந்திடு அரவி லங்கிய
திகழ்செய் செஞ்சடை—யவர்பாலா!
மனது கொடேன்மு னுயர்செ கண்டியின்
மயிலில் வந்தருள்—புரிவாயே.
உனது அன்பனென் னிடமெ ழுந்தருள்
உரஞ்செய் குன்றையின்—மலைநாதா!

4196. நினபரி மிசைவா! நினதருள் செய்வாய்—குருநாதா!
கனைகடல் காத்த களிதுயில் படைத்தவர்—மருகேசா!
நனைமிகு கடப்ப நறுமலர் தரித்தவ!—முருகேசா!
சினைமிகு பொழில்கொள் சிகிமலை தனில்வரு—அமரேசா!

4197. திங்களணி சடையார் செம்பவள உடலார்
தென்கயிலை மலையா—ரிடமேவாழ்
சங்கரிதன் மகவே! எந்தனிரு வினைதான்
தங்கியதை யணுகா—தருள்வாயே.
செங்கமலை புணர்தோள் விண்டுமகிழ் மருகா!
தெண்டிரையி னமுதா—கியவாயா!
அங்கமிகு முடிசேர் தென்சிகியின் மலையா!
அண்டர்பணி சரணா!கி—ருபைதாராய்,

4198. அண்டர் பணிசரணு!
அன்பனென்—முன்வருவாய்.
கண்ட நிறைகறையார்
கண்டு—மகிழ்மதலாய்!
வண்ட னெனுமசுரோன்
மங்க—அயில்விடுவாய்.
கொண்டல் படிபொழில்சூழ்
குன்றை—மலையரசே!

4199. எந்த விதத்திலும் இந்த விசைக்கொடு—வினைதீராய்.
கந்த மிகுத்திடு கங்கை தரித்தவர்—அருள்பாலா!
செந்தமி ழைப்புகல் திங்கள் முகக்குக!—முருகோனே!
பங்க வயற்பொழில் பண்பு நிறைச்சிகி—மலைதேவே!

4200. குத்துமா முலைபோல் நகை
கொச்சை வேடமின் மகள்.......
பத்து மாமுடி...................வண்ண
பட்டு வீழிட வடுமாயோன் ம.........
கொத்து ராவணி பெற்ற பாலக
குப்ப லாகிய வடியார்கள் பணி
மொய்த்த சோலைகள் சுற்று கோடுள
முக்கிய மாகிய சிகியான—மலைநாதா!

4201. தானவர்குலம் வீழிடஎதிர்
தானை களுடன்—எதிர்வேலா!
வானவர்முத லோர்விறலொடு
மாமு னிவரர்—பணிதாளா!
தேன்மலரெனும் நீபமதணி
சீர்பு யஎன்முன்—வருவாயே.
கானமயில் மேவியபுய!
கார்த வழ்சிகி—மலைநாதா!

4202. எனதுதுயர் எனதுபிணி
யெனதுகலி எனதினிடம்—அணுகாதே-அருளாயோ?
தனகிரிகள் கொடுமயலைத்
தருமடவ ருடலணைதல்—தவிராயோ?—குகநாதா!
வனசமலர் உறையயனு
மனமகிழு மடியார்களும் தொடுபாத!—அமரேசா!
தினகரனை நிகரொளிகொள்
சிகரமிகு சிகிமலையில்—வருதேவே!—எனையாளாய்.

---

4200. முதல் மூன்று அடிகளும் சிதைந்துள்ளன.

4203. தாமரை மலருறை
சானகி மடமயில்—புணர்மாயோன்
வாமன வடிவுள
மாதுலை யணிபுயன்—மருகோனே!
பூமல ரணிபுய!
போர்புரி அயிலணி—செயவீரா!
காமரு பொழில்மிசை
கார்தவழ் சிகிமலை—முருகோனே!

4204. அனமா கியநடை அழகார் குறமயில்—புணர்தோளா!
மனநோ யகலிட வரமே யருள்குக!—அமரேசா!
எனதா சையைமிக இனிமா மயில்மிசை—வருவாயே.
கனகா சலநிகர் கமழ்தோ கையின்மலை—முருகோனே!

4205. அற்புத நற்கொடி
யைச்சரி பெற்றிடு
குறமானுள்—புணர்தோளா!—அருளாயோ?
சிற்பர மர்புணர்
சிற்கொடி யுற்றிடை
உமைமானுள்—தருபாலா!—எனையாளாய்.
விற்புரு வக்கனி
மெய்க்கனி யர்க்கிடை
மையறீராய்—அமரேசா!—குகநாதா!
கற்பதி உற்றிடு
கட்டழ கிக்கன
முடியேசேர்—சிகிமேரா!—குமரேசா!

4206. நடன மிடுமயிலா! நலமது தருவாய்.
தொடர்வினை தவிராய் துரைமகள் புதல்வா!
அடமிகு வசுரோன் அலறிட அடுவாய்.
தடமிகு பொழில்சேர் தழைச்சிகி மலையா!

4207. பச்சை நிறத்த மயிலாள!
பத்ம தளத்தை நிகர்பாத!—அருளாயோ?
கொச்சை மயிற்கு றமினுள்தன்
குத்து முலைக்கு மயலாகி—அலைநாதா!
இச்சை நிறைக்க வருளேசெய்
இட்ட மிகுத்த அடியார்கள்—பணிபாதா!
செச்சை தரித்த புயவீர!
சித்திர மிகுத்த சிகிமேரில்—வருதேவே!

4208. மதிசூடிய சடைவேணியர்
மதலாய்!அருள்—புரிவாயே.
விதிமாலிமை யவர்ஞானிகள்
விரைவாய்நிதம்—பணிதாளா!
கதியாய்நடை புரிதோகையில்
கமழ்நீபமென்—மலர்மார்பா!
நதிசூழ்தரு வளநேமநன்
நயநாடசி—கிரியின்மேரா!

4209. முடித ரித்தவர் முளரி நற்பதம்—அருளாயோ?
அடிய வர்க்கருள் அமரர் வித்தகர்—பணிநாதா!
குடிசி லுற்றிடு குறவர் மெய்க்கொடி—புணர்தோளா!
படிவ ளைத்திடு பரிய மைச்சிகி—மலைவாழ்வே!

4210. படையெ டுத்துவரும் அவுணர் கெட்டழிய
பரிய வெற்றிமிக—விடுவேலா!
நடையெ டுத்தமயில் மிசையெ னக்குவருள்
நல்வ ரத்தருள—வருவாயே.
விடையி லுற்றவரன் உதவு புத்திர!குக!
விரைம லர்க்கமல—இருதாளா!
இடைசி றுத்தகுற மகள்ம ணத்தபுய!
எழில்ப டைத்தசிகி—மலைநாதா!

4211. சுடுதீவினை யதனால்வெகு துயரான்மெலி—குதல்தீராய்.
வடுவேலணி துரையேநட மயிலேறிய—பெருமானே!
கடுசூழ்தரும் மிடறுருயர் கனகாசலர்—தருநர்தா!
விருபாரணி முடிமேவிய விரையார்சிகி—மலைநாதா!

4212. பொற்றாமரை மேவிய நாயகி
பொற்பாவையை மாமண மேபுரி
ரெகுநாதன்—மருகோனே!
வற்றாதகிரு பாநிதி யே!யென்முன்
வற்கால னேஅணு காவகை
வருவாய்பொன்—மயிலாளா!
முற்றாத வேடமி னுளொடு
மொய்க்கானக் மூடலை சேர்பத
வடிவேலா!—அருளாயோ?
நற்றா ருக்வாய் நவ்வீ
நகராநாயாள்சிகாமலை
வாழ்வுரு—குமரேச!—குருநாதா!

---

4209. குடிசில் - குடிசை.
4212. இறுதிவரி தெளிவில்லை.

4213. வனசத்திரு மயிலைப்புணர்
மகிழச்சுத னருமைத்திரு—மருகோனே!
அனமுற்றிடு நடைபெற்றிடு
அழகுக்குற மயிலைப்புணர்—புயநாதா!
எனநற்றிசை நலமுற்றிடு
இசைவுற்றிடு பொருளைத்தர—நினையாயோ?
கனகச்சிலை நிகர்நற்பொழில்
கமழ்நற்சிகி மலைமெய்க்குரு—அமரேசா!

4214. சரச ரஞ்சித இதம்மி குந்திடு
தழுவும் இங்கித—மடமானுர்—மயலாலே
உரசு கொண்டிடு எனது புத்தியை
உயர்வ றிந்திட—அருள்வாயே—மயிலாளா!
கரகம் ரெண்டுள மூலைம டந்தைபொன்
கமல வஞ்சிதன்—மருகோனே!—அருளாயோ?
அரக ரென்றொலி யடியர் அண்ட
ரடர்மாசெ கண்டியின்—மலைமீது—வருதேவே!

4215. தங்கச் சடையுயர் சங்கக் குழையுள
செம்பொற் சடையவ—ரருள்பாலா!
துங்கக் கனசது ரங்கத் தொடுதரு
துண்டு படஎறி—ரயிலாளா!
சிங்கத் திலையும ருங்குல் குறமகள்
செங்கைப் பிடிநல்—மணவாளா!
தங்கக் கிரிநிகர் குன்றைக் கிரிவரு
சங்கப் புலவ! பொன்—மயிலாளா!

4216. சஞ்சிதவினை வந்ததுதவிர்
சங்கரன் அருள்—புதல்வோனே!
நஞ்சினுமுயர் கின்றிடுவிழி
நங்கையர்மயல்—தவிராயோ?
வஞ்சனையவு ணன்றனையடு
வங்கயிலணி—அயிலாளா!
மஞ்சிகள்தவ ழும்பொழில்நிரை
மண்டியசிகி—மலைநாதா!

4217. மடிந்திட வருநோய் தீர்ந்தது பயமாய்
மகிழ்ந்திட வரமே—அருள்வாயே.
கடிந்துட னெதிரே வருந்துயர் தனையே
கழிந்திட நலமே—அருள்வாயே,

முடிந்திட வருகா லர்தங்க ளையுடன்
முனிந்தவர் விழவே—அடுவாயே.
ஒடிந்திடு மிடையாள் குறம்பயில் குறமான்
உடன்குல வியதோ—கையின்மேரா!

4218. ஒருமுனி பின்பு தொடரவரு மார்பு
உயர்ரகு வமிசம்—வருமாயோன்—மருகோனே!
பொருசமர் கொண்ட சதுரங்க முடனே
பொருகிற அசுரோன்—மேல்விடுவே—லாயுதனே!
அருமறை யென்றும் அறிகிலா ரெண்டு
அழகிய பதங்கள்—அருளாயோ?—குமரேசா!
குருபர! செகண்டிமலையில்வளர் கின்ற
குமரிகுக எந்த—னிடம்வாராய்—அமரேசா!

4219. மடமயி லான குறத்தி
மகள்மய லான்முன் மயக்கி—யணைதோளா!
கடமத யானை முகத்த
கடவுள ராசை படைத்த—துணையாளா!
குடமிக ரான தனத்த
குயின்மொழி யார்கள் மயற்குண்—மெலிவேனோ?
வடவரை யான சிறப்பின்
மலர்வன மேவு சிகிக்கி—ரியின்நாதா!

4220. தரித்தமலர் நீப!
தனைப்பணியு நாய—னிடம்வாராய்.
விரித்தமலர் மேவு
மிகுத்தபொழின் மாது—புணர்தோளா!
பரித்தமயி லேறு
பரப்பிரம! அடியன்—எனையாளாய்.
வரிப்பொன்முடி மேவு
மணத்தசிகி மேரில்—வருதேவே!

4221. எனதுட துயரது இனிவில கிடவரம்—அருளாயோ?
அனநடை புரிவரு அழகிய குறமகள்—புணர்தோளா!
மனமகி ழுயென்முன் மயின்மிசை யசைபட—வருவாயே.
கனபொழின் மிகவளை கமழ்சிகி மலைவரு—குகநாதா!

4222. நாகமணி சடையார்
நாதரருள் புதல்வா!—அருள்வாயோ?
மாகமிசை வளர்வோர்
மாமுனிவர் பூதலோர்—பணிதாளா!

கோகனக சரணு!
கூரிய அயிலா—யுதவேளே!
தாகமுடன் வருவாய்
சாரனுயர் சிகிமா—மலைநாதா!

4223. மாபாதக னேவரு
போராயினு முன்கடி
மாலாகினி லவர்பெரி—யவராவார்.
தீபானுவை நிகர்சுடு
நோயான்மெலி கிடவது
தீராதது சொல்லய!—குருநாதா!
கோபாவனல் மிகுவரு
சூர்மாவுடல் புளபட
கூர்வேல்விடு நலமுள—இருதோளா!
காபாலிதனி மக!துய
காமாமலர் பொழிலுகு
கார்தாவிய சிகிமலை—முருகோனே!

4224. அந்த ரம்வளர் வானவர்
அன்பொ டுபணி நாயக!—அருளாயோ?
கந்த ரகர நாயகர்
கங்கை கொள்முடியி னுதர—ருள்பாலா!
தொந்த மதென ஆடிய
துங்க மாமயின் மீதினில்—வருவேளே!
சந்த லர்மிகு கானிறை
தண்கு ளிர்சிகி மாமலை—வருதேவே!

4225. ஆடியமயில் வாகன!இசை
ஆவலுடன்—வருவாயே.
தேடியகுற மாமகள்புணர்
சீருளபுய—முருகோனே!
நாடியபடி யேகிருபைபுரி
நாரணருடை—மருகோனே!
கூடியபொழி லேகுடிவரு
கோதறுசிகி—மலைநாதா!

4226. இருதீ வினையாம் ஒருநோ யியிலே
இனியா கினுநான்—விழுகாமே
அருளா கியமா புணையா லெனையே
அணைவா கவுமே—எடுக்காயோ?

---

4223. முதல் வரியின் பொருள் விளக்கம் தெரியவில்லை.

செருமா வுடல்கூ ரிடவேல் விடுவாய்!
செயமா லிகைகு—டியதோளா!
குருமா மணியே! தருகோ டியர்சீர்
கொழுமா மலைமேல்—வருதேவே!

4227. வந்த சூர்படை நொந்து வீழிட
மண்டு போரினில்—அடுவோனே!
கந்த மேவுக டம்ப மாலிகை
கண்ட மீதினில்—அணிவோயே!
சொந்த மாகிய மங்கை வேடமின்
துங்க மார்பினில்—அணைவாயே!
அந்த மானசெ கண்டிமால்வரை
அன்ப னே!குக!—மலைநாதா!

4228. அந்தி மதியணி அண்டர் நாயகர்—அருள்பாலா!
தந்தி துணைபெறு சந்திர முக!குக!—குமரேசா!
செந்தி ருவையணை செங்க ணலர்மகள்—மருகேசா!
மந்தி குதிபொழில் மண்டு சிகிமலை—முருகோனே!

4229. கறைமி டற்றினர் சடைமு டித்தவர்
கைலை வெற்பின—ருள்வோனே!
இறைவி அற்புத மயிலி வித்தகி
இமைய வள்தரு—புதல்வோனே!
மறைபு கழ்ச்சிசெய் சரவ ணப்பெரு
மருவு நற்குரு—பரவேளே!
சிறையின் நற்பரி மிகந டத்திய
சிகிம லைக்கிரி—வருதேவே!

4230. சந்தத் தமிழ்ப்புலமை கொண்டற்பு தச்சொன்னய!
சங்கத்தி லுற்றகுரு—பரவேளே!
செங்கற் புனைந்ததுகில் அம்பிற் புனைந்தவர்கள்
செம்பொற் கமழ்ந்தசடை—முனிவோரே
தங்கப் பதம்பணியும் கடம்பைப் புனைந்தபுய!
சந்தச் செகண்டிமலை—முருகோனே!
அந்தச் செகண்டிதனில் வந்திச்சை கொண்டுநின்
அன்பற் கிசைந்தவரம்—உதவாயோ?

4231. கலியாகிய துயராலினி
கரைகாணிட—அருளாமோர்
வலிதாகிய புணையாலெனை
மடியாவகை—செய்குவையே.

குலிசாயுதன் முதலோர்மலர்
கொள தாள்பணி—இறையோனே!
மெலிதாகிய மலர்சூழ்பொழில்
மிகுதோகையின்—மலைநாதா!

4232. தங்க மலையர்ப்பு யங்க மணிபவர்
சங்க ரிமினருள்—புதல்வோனே!
செங்க ணிறமுடை கும்ப முனியிவர்
தென்செ வியிலருள்—குருநாதா!
சங்க மிசைவரு துங்க மிகுகவி
தங்கு புலவிகல்—லருளாயோ?
துங்க மிகவரு குன்றை மலைவளர்
சுந்தர மயிலில்—வருதேவே!

4233. தத்தியமயின் பரிமிசை
தத்தகவென நடமாடி—வருவாயே.
அத்தியின்முக ருக்கிளைய!
அற்புதமல ரணிகான—இருதாளா!
பத்தியினொடு சிற்பணிசிற
பத்தர்கள்துயர் தவிராத—தெதனலோ?
சித்திரமிகு மெய்ச்சிகிமலை
சிற்பரம! மனமார—அருளாயோ?

4234. மருக்குலவு நீப மலர்ப்புனையு மார்ப!—அருளாயோ?
திருக்கொடியை மேவு செயத்திறலின் மாயன்-மருகோனே!
அருட்குலவு நாத! அனைத்தினையு மீறு—முதலாளா!
தருக்குலவு தோகை தனக்கிரியி னூரும்—வளர்வோயே!

4235. கலியாகிய அலைசேர்தரு
கடல்மேல்விழல்—தவிராயோ?
வலிசேர்அசு ரனையேவெலு
மணிவேலணி—செயவீரா!
குலிசாயுதன் முதலோர்பணி
குகநாயக!—அருளாயோ?
மலிசோலையின் வளமேமிகு
வளர்தோகையின்—மலைநாதா!

4236. வஞ்சக ரக்கர் குலங்கெ டச்செய்
மண்டி டச்சமர்—புரிவேலா!
கஞ்சம லர்க்கொடி மங்கை யைப்புணர்
கஞ்சு இடல்பரர்—மருகோனே!

நெஞ்சம திற்று யர்ந்தி டக்கன
நின்கிரு பைக்கடல்—முழுகேனோ?
மஞ்ச டர்த்திடு தண்ட லைப்பொழில்
மண்டு நற்சிகி—மலைநாதா!

4237. வடித்தெ டுத்த பாகுபோல
மயக்கி சைவா யின்வேடர்—மகள்தோளா!
இடிக்கி ணைத்த ஓசைவாயர்
இகல்து ளைத்து டற்சூரை—அடுவேலா!
நடித்த சித்ர தோகையான
நலப்ப ரிக்கு ளாய்ஓடி—வருவாயே.
கடிப்பொ ழில்பொன் மேரைநேரு
கனசி கிக்கி ரிகோடி—அருளாயோ?

4238. கால தூதர்கள் வருமுனே
பாச மேமிக விடுமுனே
கான மாதொடு மயிலிலேமுன்—வருவாயே.
வால மாமதி புனைகுவோர்
மாது மாபதி புதல்வனே!
வாச நீபமென் மலர்கள்சூ—டியமார்பா!
தூல மேனியின் தனியிலே
நோயி லுல்மெலி படுவேனோ?
தூய னே!நின தடியிலே—இடம்தாராய்.
வேல வா!குக! குருபரா!
சோலை சூழ்தரு சிகியதாம்
மேன்மை வாழ்வுறு குமரயா!—அருள்தாராய்.

4239. அருமறையவர் புகழ்தருபத!
அடியன்முன்மயில்—மிசைவாராய்.
மருவுறுமலர் நளினமதுறை
மரையனுடை—குருநாதா!
திருமகளுறை துளையணிபுய
திறவிறலுட—மருகோனே!
கருமுகில்தவழ் ஒளிவளர்சிகி
கனமலைவரு—குகவேளே!

4240 திருப்பெண் வளர்மார்பர் கருத்த திருமேனி
செகத்தை யளவுமாயன்—மருகோனே!
மருப்பொ லியுநீப! பழுத்த மணிமாலை
மகிழ்ச்சி யொடுசூடும்—உயர்நாதா!

குருக்கி னலரான சிவத்த இதழ்மாது
குறத்தி மயில்மீது—மயலாளா!
ஒருத்தர் துணையேது எனக்கு அடியேனை
உயர்ச்சி செய்தோகை—மலைநாதா!

4241. கால சேவுகர் கூடி யேவரு
காலம் நீயவண்—வருவாயே.
வால மாமத மேவு மேனியில்
வாடு நோய்தவி—ரிடுவாயே.
ஆல மாமிட றீச னுர்அருள்
ஆசை யாகிய—புதல்வோனே!
ஏல வார்குழ லார்க ளையனே!
ஏர்கொ ளுஞ்சிகா—மலைவாழ்வே!

4242. கடகரி முகத்த ரவர்துணை படைத்த
கருணைகொள் நெஞ்சத்—தருள்வேலா!
குடநிகர் வளைத்த தனகிரிக ளுற்ற
குறமகள் தனக்கு—மயலாளா!
உடல்வரு பிணிக்கு விடையது கொடுத்து
உடன்வில கிடச்செய்—குகநாதா!
வடவரை நிகர்த்த மயிலின்மலை யுற்ற
வளர்குக! எனக்கு—அருள்வாயே.

4243. எதிரிடு சூரன் இருபிள வாக—அடுவேலா!
அதிரிடு நடையே யதுபுரி மயின்மேல்—வருதேவே!
நிதிதனை யருள்வாய் நினதுடை யடியே—னிடமேதான்.
கதிர்தவழ் பொழில்சூழ் கமழ்சிகி மலைமேல்—வருதேவே!

4244. வருத்திய நோயை வருத்திய தோட—அருள்வாயே.
பெருத்திடு சேனை பெருக்கிய சூரை—அடுவேலா!
எருத்தினி லேறும் எழிற்பர மேசர்—அருள்பாலா!
திருத்திய கோடு சிறப்புயர் தோகை—மலைநாதா!

4245. கனக சபைதனில் பரத நடமிடு
கருணை அரனருள்—புதல்வோனே!
வனச மலருறை யரிய மறைபகர்
வரும யனுடைய—குருநாதா!
அனமெ னநடையுடை மடவர் களுடை
அதிக மயல்தனை—மிகுவேலா!
தினக ரனைநிகர் ஒளிகொள் முடிநிறை
சிகியின் மலைவரு—முருகோனே!

4246. அஞ்சன மிடுவிழி சண்பக மெனுமொழி
அம்புய மெனுமுக—மடவாரால்
நெஞ்சது உருகிட வந்திடு துயரதை
நின்கி ருபைகொடு—தவிர்வாயே.
வஞ்சனை புரியசு ரன்றலை யிடறிட
வம்புசெய் தயில்விடு—செயவீரா!
கஞ்சனு மவனுடன் அண்டர்கள் பணிதரு
கங்குறவழ் செய்சிகி—மலைநாதா!

4247. அருமறை முனிவரர்
அனுதின மனதொடு—பணிநாதா!
இருவினை யெனுமலை
இதில்விழல் தவிறிட—அருளாயோ?
வருதுயர் அடிபட
மயின்மிசை மகிழ்வோடு—வருவாயே.
கருமுகில் தவழ்பொழில்
கமழ்சிகி மலைவளர்—குகநாதா!

4248. உறையிடும் வாள்போல
ஒளிவிடு விழிமாதர்—மயலாலே
குறைபட விதிதானோ?
குருபர! குமரேச!—அதுதீராய்.
மறைமுனி வரர்கோடி
மலர்கொடு பணிபாதம்—அருளாயோ?
நறைபடு பொழில்சூழு
நகர்மிகு சிகிமேரில்—வருதேவே!

4249. வீதியி லேகுட மெடுத்து வருகிற
வீறுள சீர்தன மயிற்பெ ணருளிய—மயலாலே
மோதிய வேள்படை நெருக்க மெலிவது
மோசம யலானி யத்தை விலகிட—அருளாயோ?
ஆதிய னுதிய சித்திர அறுமுக!
ஆரண நாரண ருக்கு மகிழிடு—மருகேசா!
சோதிசி காமணி யுற்ற முடியுயர்
தோகையின் மேரினி லற்பிட மேவரு—குகநாதா!

4250. மஞ்ச ளான்முடி கொண்டை யாலொளிர்
மண்டு பூணகை—யதனுலே
மிஞ்ச வேவரு கின்ற மாதர்கள்
வென்று மாமயல்—தவிராயோ?

அஞ்ச வேவரு நெஞ்ச நோய்தனை
அண்டி டாவகை—புரிவாயே.
தஞ்சம் வேறிலை குன்றை யாதிப!
தந்தி யானனர்—துணைநாதா!

4251. கடவரை யுரித்த ஆடை
புனையரன் இடத்தில் வாழுங்
கமழ்குழ லுமைப்பெ ணாள்தன்—முருகோனே!
தடவரை வைத்த தேன்மு
டவனதை யிச்சை யான
சரிநிகர் அற்ற மாதர்—தமைநோவேன்.
மடமயில் குறத்தி மாது
தனைமருவு யிச்சை யாள!
மனதில்வரு கெட்ட நோயை—யடுவாயே.
வடவரை நிகர்த்த தோகை
மலையில்வளர் வுற்ற நாத!
மயில்தனை நடத்து வீர!—அருளாயோ?

4252. பதினா றுயிர சந்தத் தமிழ்பாடினர்
பதுமா பீட னரனண் டத்தில்வாழ்பவர்—பணிபாதா!
கதியா யேநடை கொண்ட நிதமாகிய
கனமார் தோகையின் அன்புப்பெற வேயென்முன்—
[வருவாயே.
நதிசூழ் வேணியர் பங்கிற் றிருமாமயின்
நலமார் மாதுமை கொங்கைக்குட மேயுமை—மகவேளே!
நிதியே நீயருள் கந்தக் குமரேச!நன்
நிலையாய் செகண்டிக் கிரிவாழ்தரு—முருகோனே!

4253. மடமயில் குறத்தி
மலைமுலை தனச்கு—உழல்நாதா!
உடல்எடுத்த துயர்க்கு
ஒருவரம் எனக்கு—அருளாயோ?
அடல்செய் எமனுக்கு
அடியனை விடுத்தல்—நயமாமோ?
வடவரை நிகர்த்த
மயின்மலை தனக்கு—முருகோனே!

4254. வஞ்ச ரஞ்சித மண்டு போர்புரி—அயிலாளா!
கஞ்ச ரண்டர்கள் கண்டுமேபணி—யிருதாளா!
அஞ்ச யென்றுமே அன்ப னுக்குமே—அருளாயோ?
பஞ்சடர்ந்திடு மன்றன் மிஞ்சிய—சிகிமேரா!

4255. நாயகி குறத்தி நாள்தோறு மணைத்த—புயலோலா!
சாயல்பெர னிறத்த தாகிய உமைப்பெண்—அருள்பாலா!
சேய்கும ரேச! சீதங்கொள் நீப—மலர்மார்பா!
பாயருவி மீறு பார்புகழ் தோகை—மலைநாதா!

4256. தந்தி முகத்தவர் தந்துணை பெற்றிடு—குமரேசா!
அந்தி மதிச்சடை அன்பர் மகிழ்ச்சிகொள்—புதல்வோனே!
மந்தி குதித்திடு மண்டு பொழிற்பணை—வளநேமா!
செந்தி மலைக்கிணை தென்சிகி மெய்க்கிரி—முருகோனே!

4257. கங்குல் நிறத்த குழலார்
கஞ்ச மலர்க்கு நிகரா—கியதாளா!
கொங்கு மிகுத்த உடலாள்
கொஞ்ச யிடைக்கு றமினுள்—புணர்தோளா!
சங்கு தரித்த கையினர்
சங்கரர் பெற்ற புதல்வா!—அருளாயோ?
மங்குல் மிகுத்த பொழிலே
மண்டு சிகிவாழ்—குகநாதா!

4258. அற்பு தமலர் நிகர்பாதா!
அச்சு தனுட மருகேசா!—கிருபைதாராய்.
விற்கி ணைதன மடமானுள்
விற்கொள் குறவர் மகள்மயலே—மிகுவாழ்வே!
அற்ப ரசுரர் தமைக்கொல்ல
அயில்கொ ளுமம லோனே!—அமரேசா!
சிற்ச பைநட மிடுநாதர்
சித்தி சிகாம லைமீதே—வருதேவே!

4259. உனதுடைய சரணமலர்
உபயமதை நினையடியன்—இடம்வாராய்.
அனநடைகள் பயில்சரணி
அழகின்மிகு குறமயிலை—அணைதோளா!
கனகசபை புகனடஞ்செய்
கருணையுள பரமர்தரு—புதல்வோனே!
வனசமலர் மிகுகழனி
மருவுசிகி மலையில்வரு—முருகோனே!

4260. தொடுத்த மாலையணி
சுக!குகேச! கிருபை—புரிவாயே.
அடுத்த நோய்தனை
அடித்து வோடவருள்—புரிவாயே.

---

4257. இறுதியடியில் ஒருசீர் குறைந்துள்ளது.

கடுக்கொள் மாமிடறின்
கமழ்த்த வேணியருள்—புதல்வோனே!
எடுத்த சோலைமிகு
எழில்கொள் தோகைமலை—முருகோனே!

4261. மருட்டு விழியார்கள்
மயற்கு ளலைவாக—மெலிவேன்யான்.
இருக்கு மறியாத
எழிற்கு மரகோடி—அருளாயோ?
செருக்கொள் அசுரோர்கள்
செயிர்த்து விழவேகொள்—நெடுவேலா!
தருக்கொள் சிகிமலைமேல்
தனிற்கு லவும்பால—வடிவேலா!

4262. சரச ரஞ்சித மடவர் அன்போடு
தழுவும் இங்கித—மயலாலே
விரக மிஞ்சியெ னுடல்வ ரும்பிணி
மெலிய யென்றதை—அடுவாயோ?
கரகம் ரெண்டுள தனம டந்தையர்
கனிவு கொண்டிடு—வடிவாளா!
பரவு மன்பர்கள் வழிப டுங்குரு
பரசெ கண்டியின்—முருகோனே!

4263. அடுத்தவர் தீவினை
அழித்துடன் வேணது—அருள்வாயே.
தொடுத்திடு பூமலர்
தொகுப்பொடு தானணி—புயவேளே!
கெடுத்திடு மசுரோன்
கெளித்திட அயிலே—வியநாதா!
விடுத்திடு பூமலர்
மிகுபொழில் சூழ்சிகி—மலைநாதா!

4264. சங்கரசிவ சம்புவினுட—புதல்வோனே!
பங்கசமயில் பண்புயர்குயில்—மருகோனே!
கொங்கலரணி கொண்டிடுபுய—முருகோனே!
மங்களமிகு வண்சிகிவளர்—வருதேவே!

4265. திங்கள் தரித்த சடையார்
செங்கம லத்தர் விறலார்—இருபேரால்
எங்கணு முற்ற மதியா!
ஏங்கள யற்கு மகவே!—அருளாயோ?

கொங்குல வுற்ற புயவா!
கொண்டன்மு டிக்கு றமினள்—புணர்தோளா!
மங்குற வழ்ந்த பொழிலே
மண்டுகி கிப்பொன் வரைமேல்—வருதேவே!

4266. எனக்கு ஒருவரம் அருட்செய் குருபர!
இனத்த இதழ்மட—வியராலே
மனத்தில் வருதுயர் மிகுத்த மயறனை
மறக்க வருள்புரி—குமரேசா!
அனத்தை நிகருள நடைக்கு றமயிலை
அணைத்து மருவிய—புயநாதா!
கனத்த பொழின்மிகு சிகிப்பொன் மலைவரு
கருத்த! என்முனினி—வருவாயே.

4267. அந்தரி கௌமாரி சங்கரி குமாரி
அம்பிகை வராகி—தன்பாலா!
கொந்தலர் கொள்நீப நற்றொடை கொள்மார்ப!
குன்றை மலைவாச!—அருளாயோ?
செந்தமிழ்சொல் வாய! அன்பனெனை ஆள்வை
செங்கமல மாது—மருகோனே!
கந்தமலர் வேதன் அண்டர் பணிநாத!
கங்குறவழ் சோலை—மலைவேளே!

4268. கலியுக காலம் அதனுலோ?
கருணைசெ யாத தெனுலோ?—அறியேனன்.
நலிவிடு நோயை யடுவாயே.
நறுமலர் நீப மலர்மார்பா!—அருளாயோ?
ஒலியுள வேலை யதுமீதே
உயர்கண் மீது துயிலாளர்—மருகோனே!
மலிதரு சோலை மகிழ்வாளா!
மணிமுடி மேவு சிகிமேரா!—வருதேவே!

4269. தத்து மயிற்பரிமேல் சத்தி தரித்தருள்வாய்—வருவாயே.
வித்துரு மத்திறெளிர் விற்புரு வக்கொடியார்—மயலாளா!
மெத்த வருத்தமதாய் வேட்கை விடத்திலுளேன்—
[எனையாளாய்.
நத்த வயல்பொழில்சூழ் நற்சிகி யிற்கிரிமேல்—வருதேவே!

4270. வடித்த பாகு போன்மொழி
மருட்டு ருட்டு காதன வளாவிய—விழியாரால்
மிடிக்கு ளுற்று நோயினன்
மிகுத்த வர்க்கும் மேவிடு வாசையை—அவியாயோ?

குடித்த னத்தின் மீறிய
    குறக்கொ டிக்கி மாவிகை சூடிய—மணவாளா!
நடித்த போற்றுயர் தோகைய!
    நலத்த நற்சி காமலை வாழ்தரு—குகநாதா!

4271. சமர்மி குத்த சூருடன்
    சரிப டையுரு ளோடிட—தொடுவேலோய்!
பமர்மி குத்த கார்குழல்
    பருவ முலைப்பெ ணூர்சர—சமதாலே
தமரர்கள் சிரிக்க வாசைகொள்
    சனியை யெனக்கு வோடிட—அருளாயோ?
குமரி குறத்தி மேவிய
    குமர! சிகிப்பொன் மேரினில்—வருதேவே!

4272. கொஞ்சிய மொழியார் குங்கும உடலார்—மடவாரால்
மிஞ்சிய மயலால் வெந்துயர் படுவேன்—எனையாளாய்.
அஞ்சிட வருசூர் அழிந்திட வயிலே—வியவீரா!
மஞ்சிகள் தவழ்கா மண்டிய சிகிமா—மலைநாதா!

4273. மகத்துமுனி வோர்கள் கோடி
    மகிழ்ச்சியொடு தேவர் கோடி—பணிபாதா!
அகத்தில்வரு சூர னுவி
    அகற்றிவிட வேலை யேவி—அடுசூரா!
சகத்தடியர் வேண பேர்கள்
    தனக்கருள நீயன் போடு—வருவாயே.
சுகத்திலினி தான தேவ
    துரைக் குமர! மூது தோகை—மலைவாழ்வே!

4274. மருட்டிய விழியார்கள் மயக்கிய கடன்மீது—விழுகாதே
திருத்திய வருளான திருப்புணை கொடுமீறி—யெடுக்காயோ?
பருப்பத நிகரான பணைத்திடு தனவேடர்—மகள்தோளா!
மருத்திரு மலர்தூவு மலர்ப்பொழின் மிகுதோகை—மலை
[வாழ்வே!

4275. கானக மடந்தை மேவு
    காரண! கடம்ப மாலை—புனைமார்பா!
வானவர் மகிழ்ந்து வேண
    மாமலர்கள் கொண்டு தூவி—பணிநாதா!
தானவர் குலங்க லோடத்
    தானயி லெறிந்து மீறி—யடுவீரா!
நாண்மலர் மிஞ்சு காவில்
    நாள்தோறு நெருங்கு தோகை—மலைவாழ்வே!

4276. எந்த விதத்திலும் எந்த னுடல்பிழை
இந்த விசைக்கதை—விலகாயோ?
சந்த மிகுத்திடு செந்தமி ழைப்பகர்
சங்க மதிப்புல—மையுளோனே!
சொந்த மயிற்குற மங்கை தனக்கிசை
சுந்தர முற்றிடு—அதிரூபா!
பைந்தளிர் மொய்த்திடு தண்டலை யிற்சிகி
பண்டு மலைக்குரு—துரைவேளே!

4277. கடப்ப மாமலர் கமழ்த்த மாலிகை—புனைமார்ப!
உடற்கு ளேவரும் உறுத்து நோய்தனை—அடுவாயே.
அடத்து மேல்வரு அசுத்த மாவுடல்—கிழிவேலா!
அடர்த்த சோலைகள் அடுத்த தோகையின்—மலைநாதா!

4278. கார்த ரித்தகுழன் மேன்மு டித்தமலர்
காண யிச்சைகொளு—மடவாரால்
போர்த ரித்தமத னார்வி டுத்ததொரு
பூம யக்கமது—சொலொணாதே.
தார்த ரித்தபுய! நாத! பத்தர்வினை
தாளி டக்கிருபை—புரிவாயே.
கார்த ரித்தபொழில் சூழ்சி கிக்கிரிய!
கார ண!குமர—குருநாதா!

4279. உடல்வரு நோயை யறுபட வேண
உதவிக ணீசெய்—அமரேசா!
கடல்துயின் மாயவன் மகிழ்மரு கேச!
கருணைவி லாச!—முருகோனே!
அடல்புரி சூர னுடைகுலம் யாவும்
அழிபட வேமுன்—அடுவேலா!
மடலவிழ் சோலை வளமுயர் தோகை
மலைவரு நாத!—அருளாயோ?

4280. சரச ரஞ்சித மடவர் இங்கிதத்
தழுவும் அன்புயர்—மயலாலே
உரம யங்கிட வரும கந்தையை
உடன கன்றிட—அருளாயோ?
கரக மிஞ்சிய இருத னங்கொடு
கவரு மங்கையர்—மணவாளா!
வரமி குந்திடு பொழிலி லங்கிய
வளசெ கண்டியின்—மலைநாதா!

4281. மாத வரிரு வோர்ம னமகிழ்
வாக முன்நட மிடுநாதன்—அருள்பாலா!
சீத ளமிகு நீப மென்மலர்
சீர்பு யமதில்—அணிவோனே!
காத ளவுயர் வார ணமகள்
காத லிபுணர்—புயநாதா!
ஆத ரவருள் வாய்கு ருபர!
ஆர்பொ ழில்மிகு—சிகிவாழ்வே!

4282. ..................சரக்கரழிந்திடப்படை
மண்டி டப்புரி கின்ற நற்கதி—ரயிலாளா!
...............டத்துயர் மிஞ்சிடக் கனசம்
பிணைத்திடு துங்கவக்கணமின்—வயலாலே
...............த்திட வந்த நற்றுயர்
நின்கிரு பைக்கடல் கண்ட தற்பினு—மகலாதோ?
...............த்திடு பைந்தழை பொழில்
மண்டு பொற்சிகி யின்கிரிக்கிசை—முருகோனே!

4283. ...... .........டுத்து வருயசுரனைக் குயர்பட
எதிர்த்து அடல்புரி வேலா!
...............ளர்ச்சியுள யிருவிழிக்
குறவர் கருணையுற்ற குறமயில் தோளா!
நடம யிற்பரியின் நகர்செ ழிக்கவரு
நரர்க்க ருள்செய்—குகநாதா!
இடைசி றுத்தஉமை தரும்கு மர!குக!
எழில்ப டைத்தசிகி—மலைநாதா!

4284. கானக மடந்தை
காதல்கொள் சிறந்த—வடிவாளா!
வானவர் மகிழ்ந்து
மாமலர் பொழிந்து—பணிபாதா!
தானவர் குலங்கள்
தானழிய வென்ற—செயவீரா!
தேனலர் மிகுந்த
சீர்பொழில் நிறைந்த—சிகிமேரா!

---

4281. முதல் வரியில் ஒரு சீர் மிக்குளது.
4282. பாடல் சிதைந்துள்ளது.
4283. முதலிரண்டு வரிகள் சிதைந்துள்ளன.

4285. ஆதா ரவினை யாகிலு
மேதான் இனிநின் ஓடிட
ஆரா றுகர நாயக!—அருளாயோ?
போகா தபடி மாபடை
யேகூ றிடமு னேவரு
போர்மா வுடனே ஆடல்கள்—புரிவேலா!
பாகா யஇனி தேமொழி
காராம் கனகுழல் வாழ்வுயர்
பாவை குறமி ளுள்புணர்—குக!நாதா!
நாகா பரண தேவர்தன்
பாவா னகுரு நாயக!
நாதா! சிகியின் மேரினில்—வருதேவே!

4286. கனக தண்டைக ளாடவே
கமழ்க டம்பணி வீச்வே—வருவாயே.
மனது கந்திடு ஆசைபோல்
மனம கிழ்ந்தினி தாகவே—அருள்வாயே.
அனந டம்புரி வேடமான்
அழகு கொண்டிட மேவிவாழ்—குகநாதா!
வனச மண்டப மாதுவாழ்
வனமி குந்திடு தோகைமா—மலைவாழ்வே!

4287. வஞ்சியர் மயலாய்ப் பஞ்சைகள் எனவே
மண்டியே இதனில்—அலையாதே
நெஞ்சினில் துயரம் அஞ்சிட வருநோய்
நின்கிருபை கொடுநீ—அடுவாயே.
சஞ்சரி குறமான் கொஞ்சிடு மொழியாள்
தங்கிய மயலால்—அணைதோளா!
மஞ்சிகள் படுசேர் கொண்டிடு பொழில்சூழ்
வண்சிகி மலைமேல்—வருதேவே!

---

4285. ஆதாரவினை - மூலமலம். 'வெல்லப் பாகினை ஒத்த மொழியினையும் மேகத்தினை ஒத்த கூந்தலினையும் உயர்ந்த வாழ்வினையும் பெற்ற குற மினுளாகிய வள்ளியை மணந்தவனே' என்பது இரண்டாம் அடியின் கருத்து. நாகாபரண தேவர் - சிவபெருமான். பாவான குருநாயக - போற்றுதற்குரிய பாவினை ஒத்த குருவாய் அமைந்த தலைவனே.

4286. கனக தண்டைகள் - பொன்னுற் செய்யப்பட்ட காலில் அணியும் தண்டைகள். கடம்பணி - கடம்ப மலர் மாலைகளாகிய அணியப்பட்டவை. அன நடம் புரி வேடமான் - அன்னம் போல் நடனம் செய்கின்ற வள்ளியம்மையார். வனச மண்டப மாது - திருமகள்.

4287. இதனில் - வஞ்சியர் மயலில். குறமான் - வள்ளியம்மையார். மஞ்சிகள் படு சேர் - மேகங்கள் தோன்றிச் சேர்கின்ற.

4288. நடிக்கு மயிலேறி கதிக்க அன்போடு
நலக்க எளியேன்முன்—வருவாயே.
கடிக்கு ளிசைவான இடைக்கு றமின்மாது
கனத்தில் இனிவாக—அணேலோலா!
வடித்த அமிர்தான மொழிக்கு மர!கோடி
வரத்தை இனிதாக—அருள்வாயே.
கடிப்பொ ழில்கள்சூழச் சிகிக்கி ரியில்வாழும்
கமழ்த்த மலர்நீபம்—அணிமார்பா!

4289. எந்தனிடம் வந்ததொரு என்பிழைகள்—அடுவாயே.
கந்தமலர் கொண்டபுய! கஞ்சமலர்—இணைதாளா!
சந்தமிகு பைந்தமிழைத் தந்தருள்வை—முருகோனே!
அந்தமிகு குன்றையெனும் அங்கிரியில்—அரசாள்வோய்!

4290. சங்கர சம்பு சதாசிவன்
தந்தருள் கின்றகு கேச!பொன்—மயிலாளா!
பங்கசம் வந்த சண்முக!
பண்செவி கொண்டுப தேசமே—புரிவாயா?
வங்கண மிஞ்சிய வேடமான்
வம்பணி கொங்கையின் மீதிலே—புணர்தோளா!
கொங்கலர் மிஞ்சிய சோலைசூழ்
குன்றையி னங்கிரி வாசனே!—அருளாயோ?

4291. இரு மடந்தையர் மருவும் இங்கித!
எனைநின் அன்பொடு—இனியாளாய்.
கருவில் வந்திடு உடல்வ ரும்பிழை
கழிய நன்றருள்—புரிவாயே.
உருவி டும்படி அவுணர் தம்குலம்
ஒழிய அன்றையில்—தொடுதேவே!
மருமி குந்திடு பொழினி றைந்திடு
வளர்செ கண்டியின்—மலைவாழ்வே!

---

4288. கதித்த அன்பு - விரைந்தோடும் அன்பு. கடிக்குள் இசைவான - திருமணத்திற்குப் பொருந்திய. கனத்தில் - கானத்தில், காட்டில். கடிப் பொழில் - நறுமணம் பொருந்திய சோலை.

4289. அந்தம் - அழகு.

4290. சங்கர சம்பு சதாசிவன் - இச்சொற்கள் யாவும் சிவபெருமானைக் குறிப்பன. வம்பு - கச்சு.

4291. இரு மடந்தையர் - வள்ளியம்மையார், தேவயானை ஆகிய இருவர். பிழை - நோய். கழிய - நீங்க. உருவிடும்படி - உருவம் இரண்டாகப் பிளக்குமாறு; சூரபன்பன் உருவத்தை முருகப் பெருமான் இரண்டாகப் பிளந்தான் என்பது இங்கு அறியத்தக்கது.

4292. திங்களணி சடையார்
தென்கயிலை அரனார்—அருள்பாலா!
பங்கசமென் மலராள்
பங்கரரி விறலார்—மருகோனே!
துங்கமயின் மலையா!
தொங்கலணி புயனே!—அருளாயோ?
இங்கடிய னிடமே
இன்கிருபை தரவே—வருவாயே.

4293. வனச மலருறை திருமின் மடமயல்
மருவும் விறலுட—மருகோனே!
எனது மனதினில் உளது யரமதை
எளிதி லடிபட—அருளாயோ?
உனது சரணநன் மலரை முடிகனில்
உவகை யுடனணிந்—திடவாராய்.
கனக மலைநிகர் சிகிநன் மலைவரு
கருணை யுளதுரை—முருகோனே!

4294. திடச வுரியம் மிகுப டையது
செறிப டவரு—கனமாசூர்
தடமி குஉர மதுகி ழிபடத்
தகும யில்விடு—செயவீரா!
மடல விழ்மண மலர ணிபுய!
மயின்மி சையென்முன்—வருவாயே.
வடவ ரைநிகர் சிகிம லைதனில்
வருகு ருபர!—அருளாயோ?

4295. கடக ரிக்கிநிகர் வதன விக்கினர்தம்
கருணை யுற்றதுணை—முருகோனே!
அடம்வி னைத்தபடை கொடு எதிர்த்துவரு
அசுர னைச்சமரி—லழிவேலா!

---

4292. துங்கம் - தூய்மை. தொங்கல் - மாலை. இன்கிருபை - இனிய திருவருள்.

4293. எளிதில் அடிபட - விரைந்தழியுமாறு.

4294. திட சவுரியம் - வன்மை மிகுந்த வீரம். கனமாசூர் - மிக்க பெருமை பொருந்திய அசுரன். தகுமயில் விடு - தக்க வேலினை விடுகின்ற.

4295. கடகரிக்கி நிகர் வதன விக்கினர் - மதம் பொருந்திய யானையின் முகத்தினை ஒத்த திரு முகத்தினை உடைய விநாயகர், சித்திர மிகு வதன - அழ

மடம யிற்பரியில் வருவை சித்திரமிகு
வதன! அற்பிஞெடு—அருளாயோ?
குடமி கர்த்தமுடி நிரைப டைத்தசிகி
குளிர்ம லைக்கரச!—அருளாயோ?

4296. வனக்குற மாது தனக்கிசை வான
மயற்கும ரேச!—அருளாயோ?
மனத்தினி னோயை எடுத்தெறி வாய்பொன்
மயிற்பரி யேறி—வருவாயே.
சினத்திடு சூரன் உரத்தினி லேவு
திறத்திடு வேலை—எயும்வீரா!
கனத்திடு சோலை நிரைத்திடு தோகை
கமழ்த்திடு மேரில்—வருதேவே!

4297. இனிச்செனனம் எடுக்காமலே
எனக்கினிய அருள்தாசெய—குகநாதா!
பனிக்கடலின் மிசைச்சீர்துயில்
பணைத்தவிறல் தனக்கேநல—மருகோனே!
தனிக்கமல மனைக்கானவர்
தனக்கிசைய செவிக்கேமறை—புகல்வாயா!
கனிக்கினிய நயத்தான்மிகு
கனத்தபொழில் வயற்சூழ்சிகி—மலைவாழ்வே!

4298. உடல்வ ருத்திய துயரொ ழித்திட
உடன்ம யிற்பரி—மிசைவாராய்.
மடல்வி டுத்திடு மணமி குத்திடு
மலர்க டப்பணி—புயநாதா!

---

கமைந்த திருமுகத்தை உடையவனே. 'குடம் போன்ற உருவத்தினைப் பெற்ற மலை உச்சிகளை வரிசையாகப் பெற்ற குளிர்ச்சி பொருந்திய மலைக்குத் தலைவனே' என்பது ஈற்றடியின் பொருள்.

4296. 'பொன் மயிற்பரி ஏறி வருவாய் மனத்தினில் நோயை எடுத்தெறிவாய்' என இரண்டாம் அடியினை இயைக்க. சினத்திடு சூரன் - சினம் செறிந்த அரக்கன். கனத்திடு சோலை - மேகங்கள் தங்கும் சோலை எனக் கொள்க.

4297. செனனம் - பிறப்பு. செய குக - வெற்றியமைந்த குகனே. தனிக் கமல மனைக் கானவர் - ஒப்பற்ற தாமரையாகிய தங்கும் இடத்திற்குரியவராகிய பிரமனார். கனிக்கினிய நயத்தான் மிகு கனத்த பொழில் - இனிய கனிகள் இன்ப நலத்துடன் மிகுந்துள்ள பெருமை பொருந்திய சோலை.

4298. மடல் - இதழ். கருள விறல் - கருடனைப் பெற்ற திருமால்,

கடலி னிற்றுயில் புரியும் அற்புத
கருள விறற்கிசை—மருகோனே!
தடமு டிக்கயி லையைநி கர்த்திடு
தமிழ் கமழ்ச்சிகி—மலைவாழ்வே!

4299. மடந்தை வேடர் மாது
மகிழ்ந்து மேவு தோள!—அருளாயோ?
அடஞ்செய் சூரன் ஆவி
அழிந்து போக ஏவும்—அயிலாளா!
நடஞ்செய் தோகை மீறு
நலங்கொள் வாக னு!விண்—ணவர்பாதா!
இடங்கொள் சோலை சூழும்
இலங்கு தோகை மேரில்—வருநாதா!

4300. பதுமா சனத்தின் வருவேத னுக்குப்
பழமா மறைச்சொல்—முருகோனே!
முதுமா முனித்த லைவரே பணிந்து
முறையாய் நிறைத்த—சமுகேசா!
மதுமா ணிரைத்த மலர்வாழ் திருப்பெண்
மயில்மாய னுக்கு—மருகேசா!
விதுதாவு சித்திர முடிசேர்சி கிப்பொன்
மிகுமேரு தித்த—செகராசா!

4301. மடமயில் குறத்தி
மருவிய புயத்து—முருகோனே!
அடமிகு அவுணர்
அழிபட விடுத்த—அயிலாளா!
கடகரி முகத்துக்
கருணைகொள் நற்று—ணையின்நாதா!
வட்டவரை நிகர்த்த
மயின்மலை தனக்கு—அதிகாரா!

---

4299. விண்ணவர் பாதா - தேவ உலகத்தினர் போற்றும் திருவடிகளை உடையவனே.

4300. பதுமா சனத்தின் வருவேதன் - பிரம்மன். நிறைத்த - நிறைந்திருக்கின்ற. சமுகேசா - சந்நிதானத்தின் தலைவனே. செகராசா - உலக நாயகனே.

4301. 'யானையின் முகத்தினைப் பெற்ற அன்பமைந்த விநாயகப் பெருமானுடன் பிறந்த எங்கள் தலைவனே' மூன்றும் அடியின் பொருள்.

4302. வஞ்ச ரக்கரை வென்ற வெற்றிகொள்
மண்ட மர்புரி—வயிலாளா!
கொஞ்சு நற்கிளி யின்சொ லுற்றிடு
குஞ்ச ரிக்கொரு—மணவாளா!
நஞ்ச ணித்திரு செஞ்ச டைப்பெரு
நம்ப ருக்கிசை—மகவேளே!
மிஞ்ச டர்ப்பொழில் உந்து நற்பொழில்
விண்டொ டர்ச்சிகி—மலைநாதா!

4303. ஆடரவு தரித்த முடியார்
யானையை உரித்த அரனார்—அருள்பாலா!
வேடர்கள் மகிழ்ச்சி பெறவே
வேடுவி அணைத்த புயவா!—அருள்தாராய்.
தாடனை பத்தி யுடனே
தானினை பத்த னிடமே—வருதேவே!
நாடரிய சிகிப்பொன் மேரில்
நாள்தோறும் உற்ற சேவக!—முருகோனே!

4304. அடவியில் வளர்குற மகள்தனை மருவிய
அழகிய மயில்வரு—குமரேசா!
நடமிடு மயில்மிசை வருகுரு பர!என்முன்
நல்மரு ளிடமுனம்—வருவாயே.
உடல்வரு துயர்தனை களையுள அயில்கொடு
உருத்திடும் அசுரனை—அழிவேலா!
கடலுடை புவிவளர் அடியவர் பணிதரு
கமழ்சிகி மலையினில்—அருள்வாயே.

4305. எந்த விதத்திலும் எந்தன் வினைக்கிடர்
இந்த விசைக்கினி—அருள்வாயே.
சந்த மிகுத்திடு பைந்தமி ழுக்குயர்
சங்கமி ருத்திய—புலவோனே!

---

4302. வஞ்சரக்கர் - வஞ்சகம் கற்ற அரக்கர்கள். குஞ்சரி - தேவயானை. நஞ்சணித்திரு செஞ்சடைப் பெரு நம்பர் - ஆலகால விடத்தினை அணிந்திருக்கின்ற செஞ்சடையினைப் பெற்ற சிவபெருமாள்.

4303. யானையை உரித்த அரனார் - சிவபெருமான். வேடுவி அணைத்த புயவா-வள்ளியம்மையை அணைத்துக் கொண்ட புயத்தினை உடையவனே. தாடனை பத்தியுடனே தானினை பத்தனிடமே - திருவடிகளை மிக்க அன்போடு நினைக்கின்ற அன்பனிடம். நாடரிய - தேடி அறிதலருமை யாகிய.

4304. உடல் வரு துயர்தனை களை - என்னுடலில் வளர்ந்து வருகின்ற துன்பந்தனைக் களைவாய் ஆக. கடலுடை புவி - கடலால் சூழப்பட்ட உலகம்.

4305. 'எப்படியேனும் இந்த முறை என்னைத் துன்புறுத்தும் நோய்க்குத் துன்பம் தரல் வேண்டும்' என்பது முதலடியின் கருத்து. சந்தம் - இன்ப ஓசை.

சுந்தர அற்புத புண்டரி கத்தலர்
சொந்த மனைக்கிறை—குருநாதா!
கந்தம லர்ப்பொழில் மண்டி வளைத்திடு
செகண்டி மலைக்குக!—கிரிவாழ்வே!

4306. வாடி டாத நீப மாலை
மார்ப! தோகை மீதி லேறு—குகநாதா!
கோடி கோடி சேனை யோடு
கூட மீறு சூர னாவி—அடுவேலா!
பாடி யாடு தேவர் சூழும்
பாவ லா!எ னைசை போல—அருளாயோ?
நீடி மீறு சோலை சூழும்
நேம! சோதி மேவு தோகை—மலைவாழ்வே!

4307. பருத்த மாமுலை அடர்த்த கூர்விழி
பணைத்தி டாஇடை—மடவாரால்
உருத்த தாகிய குடிக்கு ளேமனம்
உடற்று வாழ்வினின்—மெலிவேனோ?
கருத்த னே!அடி யனுக்கு நேர்வரு
கலிக்கி வேல்கொடு—அடுவாயே.
திருத்த மாகிய நெருக்கு சோலைகள்
செழித்த தோகையின்—மலைவாழ்வே!

4308. சரவண பவ!குக! குமரய! குருபர!
சண்முக! நல்வரம்—புரிவாயே.
அரவணி சடைமுடி மழுவணி கரதல
அரனரு ளியமகிழ்—புதல்வோனே!
கரதல! கமல!முன் னெதிர்ப்படு அசுருடல்
களிபட அயில்விடு—செயவீரா!
சிரமுடி நிரையுள பொழின்மிகு கனமிகு
சிகிமலை மிசைவரு—அமரேசா!

---

4305. 'அழகிய அற்புத தாமரை மலராகிய சொந்த வீட்டில் உள்ள பிரும்மாவின் குருநாதனே' என்பது மூன்றும் அடியின் பொருள்.

4306. சூரன் ஆவி - சூரனின் உடல்.

4307. அடியனுக்கு நேர்வரு கலிக்கு - அடியனுக்கு நேராக வரும் துன்பத்திற்கு.

4308. குமரய - குமாரனாகிய ஐயனே. அரவணி.........புதல்வோனே - பாம்பினை அணிந்த சடைமுடியினையும் மழுவினை அணிந்த கையினையுமுடைய சிவபெருமான் தந்த மகிழ்ச்சிக் கிடமாகிய திருமகனே.

4309. வருந்து வினைக்கு மருந்து எனக்கு—உதவாயோ?
முருந்து எயிற்று முளைத்த விழிக்கு—றமின்வாகா!
பொருந்து அடற்குள் புகுந்து அணற்கு—விடுவேலா!
திருந்து பொழில்கள் சிறந்த சிகிப்போன்—மலைநாதா!

4310. துயரா கியகடல் மூழ்களா கிடஅருள்—புரிவாயே.
அயலா னெனஇனை அடியே னையுநினைந்—திடலாமோ?
தயவா லருள்புரி சண்மு கிகுரு—பர!வேளே!
வயல்சூழ் சிகியெனு மலைவாழ் குக!கதி—மயிலாளா!

4311. எனதுதுயர் எனதுபிணி
எனதுடலி லதுவிலக—அருளாயோ?
மனதிலுனை யலதுதினம்
மறதியிலென் முன்மயிலில்—வருவாயே.
உனதடியர் குழுவிலிவன்
ஒருவனென நினைகுவைதென்—முருகோனே!
கனகமலை இதுவெனவும்
கனமுலவு சிகியின்மலை—வருதேவே!

4312. சிந்துர மணிந்த நுதலார்
கொந்தலர் புனைந்த குழலார்
செண்டெனு மிரண்டு முலையா—ரிருமானர்
தந்தமயல் கொண்ட புயவா!
அன்புமிகு கின்ற துரையே!
தண்டமிழை இன்று அருள்வாய்—அமரேசா!
பைந்துளை யலங்கல் புனைவோர்
பைந்தமிழை என்று முகந்தோர்
பங்கசமின் மங்கை விறலார்—மருகோனே!
வந்துவர மின்று அருள்வாய்.
குன்றைமலை யென்று மகலா
மங்களமி குந்த குமரா!—அருளாயோ?

---

4309. முருந்து-மயிலிறகின் அடிக்குருத்து; இது பல்லுக்கு உவமை ஆயிற்று. அடல்-கொல்லுதல் அமைந்த போர். அணற்கு-'அவுணற்கு' என்ற சொல் குறைந்து நின்றது.

4310. இனை அடியேன்-வருந்துகின்ற அடியவன். கதி மயிலாளா-விரைந்து செல்லும் மயிலை ஆள்பவனே!

4311. எனது துயர்........அருளாயோ-எனது துன்பமாய என் நோய் என் உடலினின்றும் நீங்குமாறு அருள்புரிய மாட்டாயா? 'உன்னை அன்றி நாள் தோறும் உள்ளத்தில் வேறெவரையும் நினையாத என் முன் மயிலில் வருதல் வேண்டும்' என்பது இரண்டாவதடியின் பொருள். கனம்-மேகம்.

4312. சிந்துரம்-நெற்றியிலணியும் செந்நிறப்பொட்டு. கொந்தலர்-கொத்தாயுள்ளமர்ந்த பூ. பங்கசமின் மங்கை-தாமரையிலெழுந்தருளிய இலக்குமி,

4313. தித்திமி திதியென நடமாடிய
சித்திர மயின்மிசை வருவாய்—குமரேசா!
பத்தியி னுடுநித நிதமாகவுன்
பத்மமென் மலர்நிகர் தாள்பணி—எனையாளாய்.
சத்தியை எதிர்வரு இகல்சூருடல்
தைத்திட விடுகன வீரபொன்—அயிலாளா!
எத்திசை யுளஅடி யோர்நிறை
எற்குயர் மணிக ளௌலாமிமை—சிகிமேரா!

4314. மடக்கொ டியராசை
வருத்து துயரான—கடல்மீதே
கிடக்கும் எனைநீயுன்
கிளைத்த அருளான—புணையாலே
எடுத்து வரம்வேண(து)
இனிக்க அருள்நீசெய்—குருநாதா!
தொடுத்த மலர்சூடு
சுகக்கு மர! தோகை—மலைவாழ்வே!

4315. கட்டிய மனையினில் உற்றிடு மனைவியர்
கத்திய புதல்வர்கள்—இவையாமோர்
கட்டிய வலையினுள் பட்டிடும் எனைவெகு
கட்டமு குளகுக!—நிதம் ஆளாய்.
மெட்டினில் எதிரசு ரைக்கொல நலஅயில்
விட்டுடன் மனமகிழ்—முருகோனே!
விட்டிடு கிரணமது உற்றிடு மணிமுடி
விருத்திகொள் சிகிமலை—வருதேவே!

---

4313. தித்திமிதிதி - ஒலிக்குறிப்பு. சித்திரமயில் - அழகிய மயில். நித நிதமாக - நாள்தோறும். பத்மமென் மலர் - தாமரை மலர். சத்தி - வன்மை. கனவீரபொன் அயில் - பெருமை பொருந்திய வீரம் அமைந்த வேல். எற்குயர் மணிகள் - ஒளியால் உயர்ந்த மணிக்கற்கள்.

4314. மடப்பம் பொருந்திய கொடியினை ஒத்த மகளிரின் ஆசை துன்புறுத்தும் துயரமாகிய கடல்மீதே கிடக்கும் என்னை நீ உன்றன் வளர்ந்த அருளாகிய தெப்பம் உதவி அவ்வழியாகவே காப்பாற்றவேண்டும்' என்பது வேண்டுகோள்.

4315. வலையினுள் பட்டிடும் - வலையினுள்ளே அகப்பட்டிடும். விட்டிடு...... முடி - தன்னிடமிருந்து ஒளிக் கதிர்களை வெளிவிடுகின்ற மணிகள் நிறைந்த முடி.

4316. சரச ரஞ்சித மடவர் அன்பொடு
 தழுவும் இங்கித—மயலாலே
உரம யங்கிய பிணிய கற்றிட
 உனது சிந்தையின்—நினையாயோ?
பரவு மன்பர்கள் இதயப் பங்கயப்
 பதியில் வந்திடு—குகநாதா!
சூரர்ப யங்கர! கிருபை தந்தருள்
 சுபமி குந்திடு—சிகிமேரா!

4317. நாடக மாடிய பாதவி னோதர்விண்
 நாடர்க ளேபணி பரமேசர்—அருள்பாலா!
ஏடலர் பூநிறை சோலைமி னாளொடு
 ஏகம தாயணை புயலோல!—அருளாயோ?
தாடனை யேபணி நாயினன் மேல்வரு
 சாடிய நோய்தனை அடுவாய்பொன்—அயிலாளா!
தேடரி தாகிய நாயக னே!வெகு
 சீர்சிகி மாமலை முருகேச!—வருவாயே.

4318. வஞ்ச ரக்கர் அஞ்ச செதிர்த்து
 மண்டி ரத்த மும்பெ ருக்க—விடுவேலா!
நெஞ்ச முற்ற துன்ப மற்று
 நின்ப தத்தை அண்டி டக்கண்—ணதுபாராய்.
கஞ்ச னுக்கு மந்திர வித்தை
 கண்டு ரைத்த செங்க ளிக்கு—நிகர்வாயா!
மஞ்ச டர்த்த பைம்பொ ழில்கள்
 மண்செ ழித்த குன்றை வெற்பில்—வருதேவே!

---

4316. இங்கிதம் - குறிப்பு. உர மயங்கிய - நெஞ்சு கலங்கிய. பிணி - மயலால் விளைந்த நோய்; காம நோய். இதயப் பங்கயப் பதி - உள்ளமாகிய தாமரை இடம். சுபம் - நலம்.

4317. நாடக.........பரமேசர் - போகயோகத் திருநடங்களைப் புரிகின்ற அழகிய திருவடிகளைப் பெற்றவரும் விண்ணாட்டுத் தேவர்களால் வணங்கப்படுகின்றவரும் ஆகிய சிவபெருமான். ஏடு - மலரிதழ். சோலைமினாள் - வள்ளியம்மையார். தாடனையே பணி நாயினேன் - திருவடிகளையே பணிகின்ற நாயினுங் கீழான அடியேன். சாடிய - வருத்துகின்ற.

4318. வஞ்சரக்கர் - வஞ்சனையமைந்த அரக்கர்கள். அஞ்செதிர்த்து - நடுங்குமாறு எதிர்த்து. 'ரத்தமும் மண்டிப் பெருக்க' - என மாறுக. பெருக்க - மிக. கஞ்சன் - தாமரையிலெழுந்தருளிய பிரமன்.

4319. மனதில் உலவிய துயரை அடிபட
மயிலி லடியன்முன்—வருவாயே.
வனச மலருறை திருவை மருவிய
மரும விறலுட—மருகோனே!
அனமெ னடைதனை நிகர்ந டையைபயில்
அழகு மிகுகுற—மயில்தோளா!
கனக மலைதனை நிகர உயர்தரு
கமழ்செய் பொழில்மிகு—சிகிமேரா!

4320. வருத்தி யபிணி தரித்தி ரமதை
மடித்தி டஅருள்—புரிவாயே.
கருத்தி னில்வரு தமிழ்ப்பொ ருளது
கருத்தொ டுவர—அருள்வாயே.
மருத்து வகுக! கடப்ப ணிபுய!
மயிற்ப ரிமிசை—வருவாயே.
திருத்தி யகொடு முடிக னமிகு
சிகிக்கி ரிதனில்—முருகோனே!

4321. மதசலம் ஒழுகிய வடிவுடை நலமிகு
வதனர்தன் மனமகிழ்—துணையாளா!
கதமிகு அசுருடல் கிழிபட எதிரொடு
கதிரையில் தொடுகன—செயவீரா!
விதிவிறல் முதலிய அமரர்கள் பணிதரு
விரைமல ரணிபுய—முருகோனே!
மதிதவழ் பொழில்முடி நிரைநிரை பலஉயர்
வளர்சிகி மலைதனில்—வருதேவே!

4322. அரும றைபயில் முனிவர் கள்முதல்
அமரர் கள்பணி—இருதாளா!
கருமு கிலெனும் ஒளிவி டுவிறல்
கருணை கொள்மரு—க குகேசா!

---

4319. துயரை அடிபட - துன்பத்தை ஓட்டுவதற்காக. மருமம் - மார்பு. கனகமலை - பொன் மலை, மேருமலை என்க.

4320. பிணி தரித்திரம்-வறுமையாகிய நோய். மருத்து வகுக - அடியாரைப் பிணிக்கும் எல்லாவகையான நோய்களையும் போக்கி அவர் நெஞ்சக் குகையில் எழுந்தருளியுள்ள முருகனே. திருத்திய.........கிரி - திருத்தமுற அமைந்த கொடுமுடிகள் பெருமையுடன் அமைந்த மயில் மலை.

4321. வதனர் - திருமுகத்தை உடைய விநாயகர். கதம்-சினம். கதிரையில்-ஒளியமைந்த வேல். விதி - பிரமன். விறல் - திருமால்; இப்பொருளில் இவ்வாசிரியர் இச்சொல்லைப் பல்வேறிடங்களில் எடுத்தாளுதல் காண்க. 'பல முடி நிரை நிரை உயர்' எனக் கூட்டுக.

செருபு ரிவசு ரனெயெ திரிடு
திறலு ளஅயில்—தொடுவீரா!
மரும லருகு பொழிலு றைசிகி
மலேவ ருகுரு—பர!வேளே!

4323. நடனம்புரி பதபங்கய
நகுவெண்பிறை அணிவேணியர்—அருள்பாலா!
கடகம்புனை இருசெங்கையர்
கருமங்கையர்—மயலாலே
உடனேந்திடு துயர்கொண்டதை
உடன்வென்றுநல்—லருள்தாராய்.
தடமிஞ்சிய பொழில்முந்திய
தகுகுன்றையின்—முருகோனே!

4324. அரவி னடித்திடு பதகம லத்தினர்
அழகுள விறற்கிசை—மருகோனே!
பரவிய பத்தர்க ளிடம்அணு கியதொல்
பழவினை அற்றிட—அருள்வாயே.
கரவிக டக்கட மதமொழு கிற்றிடு
களிறும கிழ்ச்சிகொள்—துணையாளா!
இரவி னொளிக்கிர ணமதை விரித்திடு
இசைமுடி பெற்றிடு—சிகிமேரா!

4325. எனதுட விற்கொடு வினையறு பட்டிட
இனிய வரத்தினை—அருள்வாயே.
மனதி னினைத்திடு படியென திச்சையில்
மயிலெ னப்பரி—மிசைவாராய்.
உனபதத் தினில்வர வெனுநித் தியம்பெறு
உறுதி படைத்தவன்—எனையாளாய்.
கனக மலேக்கிசை சிகிமலே உற்றவ!
கருணை மிகுத்திடு—குகவேளே!

---

4322. மரு மலருகு பொழில் - நறுமணம் மருவிய மலர்கள் வீழ்தற்கிடமாகிய சோலை.

4323. முதலடியில் ஒரு சீர் மிக்குளது. உடனேந்திடு துயர் - உடல் தன்புறு தற்கேதுவாகிய துன்பம்.

4324. அரவின்.........கமலத்தினர் - காளிங்கன் என்னும் பாம்பின்மேல் நின்று நடித்த தாமரையாகிய திருவடிகளைப் பெற்றவர்.

4325. எனதிச்சையில் - எனது விருப்பத்தின் வண்ணம். மயிலெனப் பரி - மயில் எனும் விரைந்து செல்லும் வாகனம். 'நின் திருவடியினையே சேரவேண்டும் என நாளும் உறுதி படைத்துள்ள என்னை ஆள வேண்டும்' என்பது மூன்றும் அடியில் அமைந்த வேண்டுகோள்.

4326. படஅரவு முடியில்வளர்
பணைபுடவி வளருயிர்கள்
தழைவாக—வுடனேதான்
தடமுலவு கருணைமழை
தனையிகுநேர் மயிலில்வரு
குகநாத!—அருளாயோ?
மடமயிலி குறமகளை
மருவுபுய! கமலபத!
முருகேச!—தயவாலே
திடமுடைய முடியுலவு
சிகிமலையில் வளர்குமர!
கிருபைதாராய்—செகநாதா!

4327. பதகம லத்தனில் உறுதியை வைத்திடு
பழையடி யார்க்கருள்—புரிநாதா!
மதகளி றுக்கிசை துணையுள வித்தக!
மயிலைந டத்திய—குகநாதா!
நிதநித நிற்பணி அடியனை அற்பொடு
நிலைவர மிப்பவும்—அருளாயோ?
இதழ்மலர் நற்பொழின் மிகுசிகி நற்கிரி
இனிதுள நற்குரு—பர!வேளே!

4328. மனம யங்கிட உடல்மெ லிந்திட
வலுசெய் துன்பம்—அதனாலே
தினம யங்கிய விதியை இன்றினி
திரவி யங்கொடு—தவிராயோ?
அனந டந்திடு நடைமி குந்திடு
அழகு கொண்டிடு—குறமானாள்
தனம ழுங்கிய புய!சு வுந்தர!
தனசெ கண்டியின்—மலைவாழ்வே!

---

4326. பட அரவு-படத்தினை உடைய பாம்பாகிய ஆதிசேடன். பணை புடவி-பணைத்த உலகம். தழைவாக - தழைக்க.

4327. 'இடையறாது எந்நாளும் நின்னைப் பணிகின்ற அடியேனை நின் அன்பில் நிலைத்து வாழுமாறு வரத்தினை இப்போது அருளாயோ' என்பது மூன்றும் அடியில் அமைந்த வேண்டுகோள்.

4328. திரவியம் - செல்வம். அழுங்கிய - அழுந்திய. சவுந்திர - அழகனே. தனசெகண்டியின் மலை - செல்வம் நிறைந்த மயில் மலை.

4329. கடவரை யுரித்த நடமிடு பதத்தர்
கனகமய சிற்ச
பையின்நாதர்—அருள்பாலா!
உடல்வரு பிணிக்கு வலுவுள மருத்து
உடனருள்செய் வெற்றி
உயர்வேலை—உளவீரா!
மடமயில் குறத்தி தனமதின் மயக்கி
மருவிய திறத்த
புயநாத!—அருள்தேவே!
வடவரை நிகர்த்த முடிமிகு நலத்த
மயின்மலை படைத்த
முருகேச!—கிருபைதாராய்.

4330. வஞ்சவுணர் கெஞ்சவொரு
வண்குலவு கின்றஅயில்—தொடுவீரா!
நஞ்சமுணு துங்கமிடர்
நஞ்சரவு கொண்டமுடி—யவர்பாலா!
கொஞ்சவிடை வஞ்சியர்கள்
கொஞ்சுசர சந்தினமெய்—மெலிவேனோ?
மஞ்சுதவழ் தண்டலைகொள்
வந்தடிய ரும்பரவு—சிகிமேரா!

4331. ஏம காலர்கள் வருமுனே
பாசமே என்முன் விடுமுனே
ஏக மாமுயி ரகல்முனே—மனைவாழ்வோர்
தாம னேக ரழுமுனே
தோகை யாகிய பரியிலே
தாவி யோடிட என்முனே—வருவாயே.

---

4329. கடவரை-மதநீர் ஒழுகும் மலை; யானை. கனகமய சிற்சபை-பொன்னாலாகிய அறிவுமயப் பெருஞ் சபை. மருத்து - மருந்து; வலித்தல் விகாரம். மயக்கி மருவிய - மயங்கிக் கலந்த.

4330. வண் குலவுகின்ற அயில் - வள்ளல் தன்மை விளங்குகின்ற வேல்; தொழும் அடியார் துயர் போக்கி வேண்டும் நலம் அருள்வது வேல்; ஆதலின் அதனை வண்மை உடையது என்றார். கொஞ்சவிடை - சிறிய இடை. தின - தின்ன; அழிக்க.

4331. ஏம காலர்கள் - எம தூதர்கள். பூமனர் - தாமரைப் பூவில் எழுந்தருளியுள்ள பிரமனர்.

பூம ஞர்செவி யதனிலே
வாயி ஞன்மறை சொலுமயா!
போத ஞானி யர்தொழும்—குருநாதா!
வாம நாரணன் மருகோனே!
தோகை மாமலை முருகனே!
வாச மேவிய சிகியின்மா—மலைநாதா!

4332. வருவினை தீர வுடனல மாக
வரமருள் வாய்பொன்—அயிலாளா!
செருவினை யாடி எதிரிடு சூரன்
தெறிபட மார்பி—லெயும்வீரா!
திருமகள் மேவு விறல்மரு கேச!
திருவருளேசெய்—அமரேசா!
கருமுகி ருவு பொழிலுறை சீர்கொள்
கனசிகி மேரில்—வருதேவே!

4333. ஆறு முகத்தழகா! நாய னிடத்தினிலே
ஆசை படைத்துடனே—வருவாயே.
பாறுகள் மொய்த்திடவே மாகுரு திக்கடலாய்ப்
பாய எதிர்த்துவிடு—அயிலாளா!
நாறு கடப்பணியு மார்ப! எனக்கருள்வாய்.
நாரண ருக்கிசைவாம்—முருகேசா!
தேறு தமிழருள்வாய் சோலை மிகுத்திடுமோர்
சீர்சிகி நற்கிரிவாழ்—குகநாதா!

4334. சரச ரஞ்சித வனிதை தந்திடு
தழுவு மிங்கித—மயலாலே
உரம ழிந்திடு துயரை இன்றினி
உடன்அ கன்றிட—அருள்வாயோ?
பரவு மன்பர்கள் மிகநி றைந்திடு
பழைய குன்றையில்—வருதேவே!
வரமி குந்தருள் குமர! எந்தன்முன்
வருவை அம்புய—இருதாளா!

---

4332. வினை - தீவினை. நலம் - நன்மை. செருவினை ஆடி - போர்த்தொழிலில் ஈடுபாடுற்று.

4333. பாறு - கழுகு. கடப்பு - கடம்பு, வலிந்து நின்றது, தேறுதமிழ் - தெளிந்த இன்சுவைத் தமிழ்.

4334. அம்புயம் - தாமரை,

4335. படையெ டுத்துவரு அசுர னைப்பொருது
பனிரி டக்கதிர்கொள்—அயிலாளா!
நடைப யிற்றுவன நடைமி குத்தகுற
நயம கட்குமணம்—இடுதேவே!
விடையெ டுத்துவரு குயின்மொ ழிக்குமரி
விழைவு உற்றஅர—னுடைபாலா!
கடைவி ழிக்கருணை புரிவை நற்சிகியின்
கனம லைக்கரசு—புரிநாதா!

4336. கடம்ப வனமுறையுங்
கரந்தை புனைசடிலர்—தருபாலா!
அடம்பு ரியசுரன்
அகந்தை விழஅயிலை—எயும்வீரா!
நடஞ்செய் மயிலேறி
நலந்தர என்முனைக—வருவாயே.
தடங்கொள் பொழில்சூழுந்
தகுந்த சிகிமேரில்—வருதேவே!

4337. வருத்த மேபுரி படைக்கு ளேவரு
வலுத்த சூருடன்—எதிர்வேலா!
பருத்த கானம துக்கு ளேவளர்
பகட்டு வேடமின்—அணைதோளா!
ஒருத்த னாகிய எனக்கு வேணது
உருத்த தாய்அருள்—புரிவாயே.
திருத்த மாகிய முடிப்பொன் மேருயர்
சிகிக்கி ரீசநல்—அருள்தாராய்.

4338. தரித்திர மான கடற்குழி வீழ்வன்
தனக்கிசை வான—புணைதாராய்.
வரிப்புலி தேடு பதப்பர மேசர்
மனக்கனி வான—புதல்வோனே!

---

4335. சிறந்த அழகிய நடையை நடக்கும் வள்ளியம்மையைத் திருமணம் புரிந்த தேவனே' என்பது இரண்டாவது வரியின் பொருள். விடை............ அரன் - விடைமீதிவர்ந்து வருகின்ற குயிலை ஒத்த மொழி பேசும் பார்வதி அம்மையை விரும்பிய சிவபெருமான்.

4336. சடிலர் - முடியினைப்பெற்றவர்.

4337. வருத்தம் - துன்பம். பருத்த கானம் - அடர்ந்த கொடிய காடு. உருத்ததாய் அருள் . அன்புமிக்க தாய் அருள்வது போன்ற அருளினை.

4338. வரிப்புலி - வியாக்கிரம பாதர்; இம் முனிவர் சிவனருள் தேடிப்பெற்றவர். கரிக்கிசை ஆனனர் - யானையினை ஒத்த முகமுடைய விநாயகர்,

கரிக்கிசை ஆன் னருக்குள ஆசை
கனத்திடு சோத—ர்குகேசா!
விரித்திடு சோலை நிரைத்திடு தோகை
மிகுத்திடு மேரில்—வருதேவே!

4339. ஒருவர் சகாயம் இலையதை நீயும்
உடனறி யாதது—எதனாலோ?
திருமகள் மேவும் மருமலர் மார்பர்
செபமிகு மாயன்—மருகோனே!
வருதுய ராலும் மெலிபடு நாயன்
வளர்கிட வேண—தருளாயோ?
கருமுகி ருவ்பொழி லுள தோகை
கனகிரி வாச!—முருகோனே!

4340. சரச ரஞ்சித மடவ ரன்பொடு
தழுவும் இங்கித—மயலாலே
இரவி லுந்துயர் மிகவ ருந்திடும்
எளியன் துன்பினை—விலகாயோ?
பரவு மன்பர்கள் வளர வந்தருள்
பருவ பங்கய—இருதாளா!
கரக கொங்கையின் குறம டந்தையின்
கவரு மிங்கித!—சிகிமேரா!

4341. மாதரசி யான தேவி
வேடுவர்க ளாசை யான
மானையணை நாத! கோடி—அருளாயோ?
தாதவிழு நீப மாலை
தானணியு மார்ப! வேல!
தேவகுரு சாமி! வேண—தருளாயோ?
ஆதரவு நீசெய் வாய்பொன்
ஆனமயி லேறி ஆடி
யான்மகிழ வேமு னுக—வருவாயே.
சீதமதி தாவு சோலை
மேவுசிகி மேரில் வாச!
தேவர்முனி வோர்கள் தேடு—குகநாதா!

---

4339. சகாயம் - துணை. வளர்கிட - நலம் அமைந்த வளர்ச்சி பெற.

4340. பரவும் - (நின்னை) வணங்குகின்ற. பருவ பங்கயம் - நன்றாக முதிர்ந்து மலர்ந்த தாமரை.

4341. மான் - மான்போன்ற வள்ளியம்மை. சீதமதி - குளிர்ச்சியமைந்த சந்திரன்.

4342. குடகி றைத்திடு இருத னத்தினள்
குறம கட்கிசை—மணவாளா!
மடம யிற்பரி தனைந டத்திய
வரத! நற்றமிழ்—உதவாயோ?
கடக ரித்துணை யுளகு க!ச்சிவ
கருணை யுற்றிடு—குமரேசா!
வடவ ரைக்கிசை பொழினி றைத்திடு
மயின்ம லைக்கொரு—துரைநாதா!

4343. கானக மடந்தை மேவு
காரண! கடம்ப மாலை—புனைமார்பா!
வானவர் மகிழ்ந்து தேடு
மாமலர் குவிந்த பாத!—அருளாயோ?
தானவர் குலங்கள் ஓடத்
தானயில் மிகுந்து வீசு—திறலாளா!
தேனலர் நிறைந்த சோலை
சீர்முடி இலங்கு தோகை—மலைநாதா!

4344. ககன மிசைவளர் அடியர்க் கருள்புரி
கருணை ஒழுகிய—குகநாதா!
தகர மிலகிய குழலி குறமகள்
தனைம ருவியபொன்—புயவேளே!
மகப தியினுட மகளை மயல்கொடு
மணமென் மலர்புனை—மணவாளா!
சகல புவிபுகழ் சிகியின் மலைவரு
சரவ ணவ!நலம்—அருளாயோ?

4345. சங்கத் தமிழ்ப்புலவா!
மங்கப் பொருட்கள்சொலு
தந்திரச் சடைப்பரமர்—அருள்பாலா!
சங்கைத் தரித்தவிறல்
கொங்கிற் றுளைபுயநல்
தந்திக் குதித்தவிறல்—மருகோனே!

---

4343. குவிந்த - குவியலாகக் கிடக்கின்ற, தானவர் குலங்கள் - அரக்கர் கூட்டங்கள்.

4344. ககனம் - விண். அடியர் - தேவர். பொன்புய - அழகிய புயத்தினை உடையவனே. 'சரவணவ' சரவணப் பொய்கையில் தோன்றியவன் முருகன் என்று கூறும் கந்தபுராணம்.

4345. மங்கப்..............பரமர் - விளக்கம் அமைந்த பேருண்மைகளை எடுத்துச் சொல்லும் சடையணிந்த சிவபெருமான். கொங்கிற்றுளை - தேன் உள்ள துளசி.

அங்கக் குறத்திதனை
இன்புற் றணைத்தபுய!
அன்பர்க் கருட்செய்குரு—பரவேளே!
கங்குற் றவழ்ச்சியுள
குன்றைப் பதிக்கிறைவ!
கந்தக் கடப்பையணி—குகநாதா!

4346. ஆடர வைத்தரி வேணி மறைப்பொருள்
ஆன பரப்பிரமர்—அருள்பாலா!
நாடக! நற்பத! தோகை மயிற்பரி
நாளும் நடத்திய—திறலாளா!
மாடம திற்கன நேமந கர்க்கிறை
வாசம லர்ப்புனே—புயநாதா!
ஏடல ருற்றிடு சோலைமி குத்திடு
ஏர்சிகி நற்கிரி—வருதேவே!

4347. தருநிழல் வாச வனுமம ரோருந்
தகுமுனி வோரும்—பணிபாதா!
அருமறை தேடு இருசர ணேச!
அடியன்மு னுக—வருவாயே.
பருவம தான மதிமுக மாது
பதுமமி னுடன்—மருகோனே!
கருமுகி ருவு பொழினிறை தோகைக்
கனகிரி மேவு—குகநாதா!

4348. வந்த தரித்திரம் நொந்து விழுந்திட
மன்பொரு ளைத்தரு—குவைநாதா!
எந்த னுடற்றினு துன்ப மதற்கொரு
இன்ப மருத்துவம்—அருளாயோ?
சொந்த மிகுக்குற வஞ்சி தனத்தணை
துங்க மலர்ப்புய!—முருகோனே!
அந்தர வுச்சியில் மிஞ்சு முடிச்சிகி
அங்கிரி யிற்குரு—பரவேளே!

---

4346. ஏர் - அழகு.

4347. தருநிழல் வாசவன் - கற்பகத்தருவினடியில் ஆட்சி செலுத்தும் இந்திரன். அமரோர் - தேவர். இருசரணேச - இரு திருவடிகளைப் பெற்ற இறைவனே. பருவம........மினுள் - இலக்குமி.

4348. மன்பொருள் - என்றும் நிலைத்த பொருள். எந்தனுடற்றினு துன்பம் - என் உடலைத் தின்னும் கொடிய நோய். அந்தரவு - மிகப் பழங்காலமாக அறியப்பட்டு வரும் ஆதிசேடன் என்னும் பாம்பு. 'அந்த' என்பது பண்டறி சுட்டு.

4349. கனக தண்டை யொலிமு ழங்கக்
கனமி குந்த மயிலி லேறி—வருவாயே.
வனச மண்ட பமதில் வந்த
மறைபு கன்ற வரத னைச—யுளநாதா!
அனமி லங்க நடைப யின்ற
அழகு கொண்ட குறமின் மாது—புணர்தோளா!
சினமி குந்த வசுரர் பங்க!
சிகியெ னுங்கிரிபின்நன் வாச!—அருளாயோ?

4350. கொடுமை யாகிய மிடிகள் தீரிடக்
குகவிலாச!ந—லருளாயோ?
வடுவை நேரிரு விழியின் மாதர்கள்
மயலி னுண்மெலி—கிடலாமோ?
அடுமை யாகிய எளியன் வாழ்கிட
அருள்செய் வாய்குரு—பரவேளே!
கடுமை யாகிய மயிலில் ஏறிய
கனசி காமலே—வருதேவே!

4351. தண்டைய சைந்திட வந்துவ ரம்புரி
தங்கமி லங்கிய—வடிவாளா!
கண்டையி லங்கிய ரெண்டுள வம்பகர்
கண்டும யங்கிய—மயலாலே
அண்டையில் வந்தெவ ருஞ்சொல வுந்திரி
அன்ப னயங்கொள—அருளாயோ?
சண்டைசெய் கின்றவு ணன்றனை வென்றவ!
தன்சிகி யங்கிரி—வருதேவே!

4352. மறைமுனி வோர்கள் யணியிரு பாத!
வரமதை வேண—தருளாயோ?
கறைமிட றுசை மிகுவுமை மாது
கனதன மேயுண்—மகவேளே!

---

4349. அசுரர் பங்க - அசுரரைப் பங்கப்படுத்தியவனே.

4350. மிடி - வறுமை. வடு - மாம்பிஞ்சு. அடுமை - 'அடிமை' என்ற சொல் எதுகை நோக்கித் திரிந்தது. வாழ்கிட - வாழ என்னும் பொருளது. கடுமை- விரைவு.

4351. தங்கம் இலங்கிய வடிவாளா - பொன் போன்று விளங்கும் அழகிய உருவம் பெற்றவனே.

4352. கறைமிடறு - நீலநிறக்கண்டம் கொண்ட சிவபெருமான். அறை கழல் வீரன் - ஒலிக்கின்ற கழலணிந்த வீரனாகிய அசுரன். நறை - தேன்.

அறைகழல் வீரன் அசுரனை வீழ
அயில்விடு சூர!—அருளாயோ?
நறையுள சோலை மிகுசிகி யான
நலம்வளர் மேரில்—வருதேவே!

4353. கந்த மிகுத்த கடம்பை அணித்திடு
கந்தர அற்புத—முருகோனே!
சந்த மிகுத்திடு செந்தமி ழைச்சொலு
தண்கனி யுற்றிடு—திருவாயா!
சுந்தர நர்த்தன பைஞ்சிறை உற்றிடு
துங்க மயிற்பரி—மிசைவாராய்.
வந்தவி னைக்கொரு தந்திரம் தந்தருள்
மங்கு றவழ்சிகி—மலைவாழ்வே!

4354. ஆதரவு புரிவாய்
ஆறுமுக வடிவே!—அருளாயோ?
தாதவிழு மலராம்
தாரணியு முதலே!—குகநாதா!
சீதமிகு பொழில்சேர்
சீர்சிகியின் மலைமேல்—வருதேவே!
மாதரரு குறமான்
மாதுபுணர் புயவா!—அமரேசா!

4355. மடக்கொடிய ராசை
மருட்டுவரம் வேண—தருளாயோ?
கடற்புவிய லாசை
கருத்தினுறு நோயை—அடுவாயே.
அடத்தில்வரு சூரை
அகத்தையழி வாக—அடுவாயே.
நடத்துமயி லாள!
நலத்தையருள் தோகை—மலைநாதா!

---

4353. கந்தம் - நறுமணம். அணித்திடு - அணிந்திடு; வலித்தல் விகாரம். கந்தர அற்புத முருகோனே - கழுத்தினைப்பெற்ற வியக்கப்படும் மாபொருளாகிய முருகப்பெருமானே. சுந்தர நர்த்தன........மயில் - அழகிய ஆடல் வல்ல பசிய சிறகுள்ள தூயமயில்.

4354. அரியமாதராகிய குறமகள் என நான்காம் அடியின் முதற்பகுதிக்குக் கொள்க.

4355, 'மடக்கொடியரிடத்துத் தோன்றும் மடத்தன்மையாகிய ஆசையை அஞ்சுவிக்கத் தக்க வரங்களை நிரம்பத்தருக' என்பது முதலடியிலுள்ள வேண்டுகோள்.

4356. ஆதிய னாதியும் ஆகிய காரண!
யான்மகிழ் வாகிட—அருளாயோ?
பாதியின் மாமதி சூடிய நாயகர்
பார்வதி பாகர்தன்—மகவேளே!
மோதிய சூர்படை வீழிட வேலுயில்
மோடிம தாய்விடு—செயவீரா!
ஓதிய மாமறை வேதியர் ஞானியர்
ஓர்முனி வோர்பணி—சிகிமேரா!

4357. வடித்த பாகை நிகர்த்த தான
மதுச்சொல் மாது—மயலாலே
துடிக்கு தாவி அதற்கு வேண
துரைக்கு கேச!—அருளாயோ?
குடிக்குண் மீறு வனத்து வேடர்
குலப்பெண் மேவு—மணவாளா!
கடிப்பொ னுன பொழில்சி காநன்
கனத்த மேரில்—வருதேவே!

4358. ஆதி நாயக! நாயன் வாழ்கிட
ஆவ லாய்அருள்—புரிவாயே.
பாதி மாமதி சூடும் வேணியர்
பால கா!கிருபை—புரிவாயே.
மோதி யேவரு சூர னுர்படை
மோச மாகிட—விடுவேலா!
சோதி யாகிய கோடு சேர்தரு
தோகை மாமலை—முருகோனே!

4359. அண்டர்பணி கொண்டபத!
அன்பனனி இன்பமுற—அருள்வாயே.
வண்டனசு ரன்றனுடன்
வந்தபடை நைந்துவிழ—விடுவேலா!
புண்டரிக மங்கைபுணர்
புங்கமிகு கின்றவிறல்—முருகோனே!
கொண்டல்படி தண்டலைகொள்
குன்றைமலை வந்தகுரு—பரவேளே!

---

4356. ஓர் முனிவோர் - முருகன் திருவடிகளை எப்போதும் எண்ணிக் கொண்டிருக்கின்ற முனிவர்கள்.

4357. மது - தேன்.

4358. சோதியாகிய கோடு - ஒளி மயமாகிய மலைக்குவடு.

4359. கொண்டல் - மேகம். தண்டலை - சோலை.

4360. வந்தவினை எந்தனிடம்
மங்கிவிழ உந்தனுட—கிருபைதாராய்.
சந்தமிகு செந்தமிழ்சொல்
தண்கனிநி கர்ந்தமொரு—திருவாயா!
அந்தமதன் நைந்துவிழ
அன்றெரியும் அம்பகர்சொல்—குகநாதா!
பைந்தளிர்கொள் தண்டலைகள்
பம்மியசெ கண்டிவரை—முருகோனே!

4361. கொங்கு மிகுந்த கடம்பணி அம்புய!
கொண்டல் படிந்திடு—சிகிமேரா!
பொங்கு அரும்புய! அம்புவி யெங்குள
புங்கமிக் கன்பர்கள்—பணிபாதா!
மங்கி நிறங்கொளும் சங்கரி யந்துணை
தங்கிய வம்புயர்—முருகோனே!
எங்கு நிறைந்தருள் கொண்டிடு சுந்தர!
எந்தன்முன் வந்தருள்—புரிவாயே.

4362. வாசனை மிகுந்த நீபமென் மலர்ப்பொன்
மாலிகை தரித்த—புயநாதா!
ஈசரிட முற்ற தோகைகவு ரியப்பெண்
ணேய ருள்செய் புத்திர!—அருளாயோ?
மாசடர் விழிப்பெண் வேடுவ குறப்பெண்
மால்மி குபுய!—முருகோனே!
பாசடை மிகுந்த காவனம் வளைத்த
பார்புகழ் சிகிக்—கிரியின்நாதா!

---

4360. தண்ணிய செந்தமிழைப் பயில்கின்ற திருவாய் ஆதலின் அதற்குத் தண்கனியை உவமையாக்கினர் ஆசிரியர். 'மன்மதனை எரித்த கண்ணினைப் பெற்ற சிவபெருமான் மகிழ்ந்தழைக்கும் முருகனே' என்பது மூன்றும் அடியின் பொருள்.

4361. பொங்கு அரும்புய - மிக்க அன்பர்களைக் கருணையுடன் தழுவிக் கொள்ளும் அருமை வாய்த்த புயங்களை உடையவனே. மங்கி.........முருகோனே- மாலைக்காலத்தை அடுத்த கருநிறத்தைக் கொண்ட சங்கரிக்குத் துணையாக அமைந்த திருப்புயங்களைப் பெற்ற சிவபெருமான் திருமகனாகிய முருகனே.

4362. ஈசரிடமுற்ற............புத்திர - சிவபெருமானின் இடப்பாகத்தில் அமைந்த தோகைபோல்வாளாகிய கௌரியம்மையார் திருவருள் செய்கின்ற புதல்வனே! மாசடர் விழிப்பெண் - ஆணவம் முதலிய குற்றங்களை அழித்தொழிக்கும் விழியினைப்பெற்ற வள்ளியம்மை. பாசடை - பசிய இலை. காவனம் - சோலைக் காடு.

4363. தடக்கட லான சமுசார
மதில்தின மூழ்கி உழல்வேனை
தருக்குள புகழாம் கரையேற—அருள்வாயே.
விடற்கரி தான வெகுமோகம்
விரைந்திடு மோசப் புலனும்
விருப்பினி னுரு மெலியாது—அருளாயோ ?
கடக்களி றூன முகநாதர்
தனக்கிசை வான துணையாளா !
தமிழ்க்கனி வாய முருகோனே !—வருவாயே.
திடப்படு சூரை வெல்வோனே !
சிகிக்கிரி மேவு குருநாதா !
சிறைச்சிகி யான பரியேறு—குகநாதா !

4364. மிடியாகிய கடலாழ்கிட
விதியோ? கிருபை—புரிவாயே.
மடிவாகிட அசுரோன்உடல்
வகிர்கூரயின்—முருகோனே !
அடியார்பணி புரிசீர்பத
அயனர்பணி—குருநாதா !
கடியார்பொழின் மிகுதோகையின்
கனமாமலை—வருதேவே !

4365. நடனமயி லேறி
நலமருள நீமுன்—வருவாயே.
மடக்கொடியின் வேடர்
மயிற்கு மணமாலை—அணிநாதா !
தடக்களிறி னையான
தழைத்தமுக நாதர்—துணையாளா !
திடத்தநலம் மேவு
சிகிக்கிரியில் நாளும்—வருதேவே !

---

4363. உழல்வேன் - துன்புறுவேன். தருக்கு - பெருமிதம். புகழ்க்கரை - புகழ்பொருந்திய கரை. கடம் - மதநீர். தமிழ்க்கனிவாய முருகோனே - தமிழ் மொழியைப் பேசும் இனிக்கும் கனிபோன்ற வாயினைப்பெற்ற முருகனே.

4364. அயனர் - பிரமனர்.

4365. மடக்கொடியின் வேடர் மயில் - மடமை பொருந்திய கொடிபோன்ற வேடர் குலத்துத் தோன்றிய மயில்போல்வாளாகிய வள்ளியம்மையார்.

4366. வருத்த மான நிலையால்
மிகுத்த சோர்வி னுடனே
மனத்தி னேக விதியோ?—அறியாயோ?
கருத்த ஏழை அடியேன்
மருத்தி னாலு முடனே
கனத்த நோயை அடுவாய்—அமரேசா!
பருத்த தோகை மயில்மேல்
நிருத்த மாக யென்முனே
பணிப்பொ னீப முடனே—வருவாயே.
திருத்த மான முடிசேர்
நிறைத்த சோலை வளரும்
சிகிக்கி ரீச அருள்வாய்—குமரேசா!

4367. அந்தரி வராகி நீலி
அம்பிகை குமாரி சூலி—தருபாலா!
வந்தொரு நோயை யோட
வண்கிருபை வேண கோடி—தருவாயே.
சந்தமிகு பாடல் வாய!
சம்பிர விலாச! யோக!—முருகோனே!
அந்தர வினோர்கள் ஞானர்
அன்பர்கள் அனேகர் தேடு—சிகிமேரா!

4368. நோயான்மெலி நாயேனுடல்
நோகாதருள்—புரிவாயே.
தாயார்கரு மீதேறிய
தாழ்வோடிட—அருள்வாயே.
தூயா!செக நாதா!வலு
சூர்மாகிழி—அயிலாளா!
சேயா!மலர் நீபா!பொழில்
சேர்தோகையின்—மலைநாதா!

4369. திருமடந்தை மருவு கின்ற
செயமு குந்தன்—மருகோனே!
செருமி குந்த அவுணர் தங்கள்
திகழ்கு லங்கள்—சுடவேதான்

---

4366. 'நோயினால் நிறம்மாறித் துன்புறும் எளியேனை மருந்தினால் குண மாக்குவாய்' என்பது இரண்டாவது அடியின் வேண்டுகோள்.

4367. அந்தரி முதல் சூலி வரை அமைந்தவை பார்வதியைக் குறிப்பன. வேண - வேண்டியன என்னும் பொருளது.

பொருது கின்ற அயில! அன்பு
பொழிய என்முன்—வருவாயே.
தருமி குந்த பொழிலி லங்கு
தனிய குன்றை—மலைநாதா!

4370. வாதைப் படுத்து நோயை
மாயப் படுத்தி வேண—தருளாயோ?
சீதைக் கிசைத்த நாதர்
தேன்மைப் பசுந்து ழாயான்—மருகோனே!
கோதைக் குறப்பெண் ஆசை
கூர்வித் தகிக்கு கேச!—அருளாயோ?
கூதைப் பொழிற்கு லாவு
கோதற்ற நற்சி கேச!—முருகோனே!

4371. எனது மனத்தை வருதுய ரத்தை
இனியழி யச்செய்—குகதேவே!
சினவவு ணர்க்கொல் துணைஅயி லப்பொன்
திகழ்மயி னின்ற—குருநாதா!
வனச மனைப்பெண் மயில்புணர் அத்தர்
மகிழ்மரு கக்கு—மரிவேளே!
கனக மலைக்கு நிகரமை சித்திர
கமழ்சிசி யிற்கி—ரியின் வாழ்வே!

4372. ஏம காலர்கள் பாச மேவுமு
னேயு னருள்—செய்வாயே.
காம மாதியி னைசை யால்வரு
காம நோயினின்—மெலிவேனோ?
தேம லாமுலை வேடநாயகி
சேர்பு யாசல!—முருகோனே!
வாம மாமயில் வாசி யாயருள்
வாய்சி காமலை—வருதேவே!

---

4369. பொருதுகின்ற - போர் செய்கின்ற. அயில - வேலாயுதத்தையுடைய வனே. தனிய - ஒப்பற்ற.

4370. மாயப்படுத்தி - மாயமாக மறையச்செய்து. இசைத்த - இசைந்த; பொருந்திய. தேன்மைப் பசுந்துழாய் - தேன் பொருந்திய கருநிறத்த பசிய துளசி. கோது - குற்றம்.

4371. வனசமனைப் பெண்மயில் - தாமரையாகிய வீட்டில் வாழும் பெண்ணாகிய மயில்போலும் இலக்குமி.

4372. புயாசல - புயமாகிய மலையினைப்பெற்றவனே; திண்மை காரணமாகப் புயத்திற்கு மலை உவமை ஆயிற்று.

4373. அண்டர் முனிவர்கள் கண்டு பணிபாதா!
அந்த மயின்மிசை—வருதேவே!
கண்ட நிறைகடு வுண்ட அரனருள்
கந்த! எளியன்முன்—வருவாயே.
வண்ட னெனுமவு ணன்றன் முடிவிழ
மண்டு செருபுரி—திறல்வேலா!
கொண்டல் படிதரு தண்ட லைகள்மிகு
குன்றை மலைவரு—குகவேளே!

4374. எந்த னிடத்தில் வந்தபி ணிக்கொரு
இன்று மருத்துவ—மதுபாராய்.
தொந்த விதத்தினில் அன்ப னயப்ப(து)
இந்த விதத்தென—அருளாயோ?
குந்த மெடுத்தெதிர் வந்தவு ணர்ப்படை
கொன்று செயித்திடு—திறவாளா!
அந்த மிகுத்திடு குன்றை மலைக்கிசை
அண்ட ரிறைக்கிறை—முருகோனே!

4375. எனதுட லெடுத்த வினைதவி ரிடச்செய்
எளிய னுக்குமு—னம்வாராய்.
தினகரப் பிரபைக்கு நிகரொளி விரித்த
திருவொளி படைத்த—முருகோனே!
அனநடை படைத்த அழகிய குறத்தி
அணைபுய! சிகிப்பொன்—மயிலாளா!
கனகமய முற்ற சிகிமலையி லுற்ற
கருணையுள வித்த—க!குகேசா!

4376. மடவியர் மயக்கு
மயலினின் மயக்கு—மெனையாளாய்.
அடமிகு அவணற்கு
அழிபட அயிற்கொ—டெயும்வீரா!

---

4373. பணிபாதா - பணிகின்ற திருவடிகளை உடையவனே. கண்ட........ அரன் - கழுத்தின்கண் நிறைந்த நஞ்சினை உண்ட சிவபெருமான். கொண்டல் - மேகம்.

4374. 'எந்தனிடத்தில் வந்த பிணிக்கொரு மருத்துவம் இன்று பாராய்' என இயைக்க. மருத்துவமது - 'அது' பகுதிப்பொருளில் வந்த விகுதி. அன்பனாகிய நான் நயந்துவேண்டி நிற்பது இன்னது என அறிந்து அருள்புரியமாட்டாயா' என்பது இரண்டாம் அடியில் உள்ள வேண்டுகோள். அண்டர் - தேவர்.

4375. தினகரன் - நாளினை உண்டாக்குபவன்; ஞாயிறு. கனகமயம்-பொன் மயம்.

கடமத மிருந்த
களிறுடைத் துணைக்கு—மர!வேளே!
வடவரை நிகர்த்த
மயில்மலை யுற்ற—முருகோனே!

4377. அருந்தவர் முதலினர் மலர்ந்திடு மலர்கொடு
அகங்குழை வொடுபணி—புரிபாதா!
முருந்தென முகையென நிறைத்திடு எயிறுள
முகங்கம லமெனவும்—வருமானார்
தருந்தட மயலினில் மெலிந்திடு துயரது
தணிந்திடு வடியர்கள்—துதிநாதா!
பெருந்தரு மிகுபொழி னிறைந்திடு சிகியெனும்
பிறங்கலில் வருகுரு—பரவேளே!

4378. சாகர மானசமு சாரம தானகடல்
தான்விழு நாயனலை—கிடலாமோ?
பாகன சீர்சொல்கனி வாயினள் வேடுவர்தன்
பாலகி மேவுபுய—முருகோனே!
ஆகம வேதமறி ஞானியர் வானவர்கள்
ஆவலி னோடுபணி—இருதாளா!
சேகர மானபொழி லேநிறை வானகன
சீர்சிகி மேரில்வரு—முருகோனே!

4379. சார மானதமிழ் பாட வேணஅருள்
தானி லாதபடி—அலைவேனோ?
தார மானயிரு மாத ராசைபெறு
சாமி நாத!கிருபை—புரிவாயே.
பார மானமுலை மாத ராலும்வரு
பாவ மோகவலை—அதனாலே
தீர மானநயம் யாதி லேனருள்வை
தேவ தேவ!சிகி—மலைவாழ்வே.

---

4376. மயலினின் மயக்கும் - மையலில் மயங்கித் தவிக்கும். வடவரை - வடமலை; மேரு என்க.

4377. முருந்தென......எயிறுள - மயிலிறகின் அடிக்குருத்து என்று சொல்லுமாறும், முல்லையரும்பு என்று கூறுமாறும் அமைந்த பற்களைப்பெற்ற. மானார் - மான்போன்ற விழிபெற்ற மங்கையர். தணிந்திடு - தணித்து விடுவாய். தரு - மரம். பிறங்கல் - மலை.

4378. சாகரம் - கடல். அலைகிடலாமோ - அலைந்திடுதல் ஆகுமோ. பாகன - வெல்லப்பாகினை ஒத்த. பாலகி - மங்கை.

4379. சாரம் - நயம் அமைந்த இன்பம். தாரம் - மனைவி. தீரமான நயம் யாதிலேன் - வலையினுள் அகப்படாதிருத்தற்கமைந்த வன்மையொடு கூடிய அறிவு நயம் எதும் என்னிடத்தில் இல்லை.

4380. வஞ்ச ரக்கர் அஞ்ச டர்த்து
வந்தெ திர்த்த வன்மை முற்று
மழிவாக—அடுவேலா!
நெஞ்ச முற்ற துன்ப மற்று
நின்ப தத்தி லன்பு றச்செய்
நடமாடு—மயிலாளா!
கஞ்சன் விட்ட ரெண்ட ரக்கர்
கண்டெ திர்க்க அன்று வெற்றி
புரிமாயன்—மருகோனே!
மஞ்ச டர்த்த தண்ட லைப்பொன்
வண்சிகித்தென் குன்றி ருக்கும்
முருகேச!—அருளாயோ?

4381. அடத்தில் வருசூரன்
அகத்தை யிருகூறு—செயும்வேலா!
கடத்தின் முனிதேடு
கருத்து ளகுகேச!—குருநாதா!
மடக்கொ டியர்ஆசை
மருட்டு மயலாலு—மெலிவேனோ?
திடத்த பொழில்சூழும்
சிகிக்கி ரியின்வாச!—அருளாயோ?

4382. அரவ சயனத்தில்
அரிய துயிலுற்ற திருமாயன்—மருகோனே!
பரவடி யருக்குப்
பரிவினொடு வித்தை அருள்தேவ!—குருநாதா!
மரவுரி தரித்த
வனமுனிவர் அற்பி னொடுதேடு—இருதாளா!
வரமருள்சி கிப்பொன்
மலையில்வரு சித்திர மயினாத!—வருவாயே.

---

4380. அஞ்சடர்த்து - அஞ்சுமாறு தொகுதியாய் முன்னேறி. கஞ்சன் - கம்சன்; கிருஷ்ணாவதாரத்தில் கண்ணனுக்கு மாமனாகத் தோன்றியவன்.

4381. சூரபதுமன் இரு கூறான பின்னரே நெஞ்சம் மாறி அன்பனானான்; ஆதலின், ஆசிரியர் ' அகத்தை இருகூறு செய்யும் வேலா ' என்கிறார்.

4382. அரவசயனம் - ஆதிசேடனில் கிடத்தல். அரியதுயில் - அறிதுயில், அற்பினொடு - அன்பினொடு.

4383. ஆதரவு எனக்கு நீயல திருக்கு
தா? அது மனத்தில்—அறியாயோ?
காதலி குறத்தி மேவிய புயத்த!
காளைமுரு கக்கு—மர! வேளே!
சீதமதி யுற்ற வேணிய ரிடத்த
தேவியுமை பெற்ற—புதல்வோனே!
வாதடர் பொழில்கள் சூழ்தரு சிகிப்பொன்
மாமலை படைத்த—துரைநாதா!

4384. தரித்திரம் வந்து மிகுத்திடு கின்ற
தனைக்கெடு வென்ற—ததுபாராய்.
வரிப்புலி யொன்று விழிச்செவி யொன்று
மகிழ்ச்சிகள் கொண்டு—பணிவோர்பால்
உரித்துடை மங்கை உமைக்கொடி தந்த
உயர்ச்சிகி வந்த—குகநாதா!
விரித்திடு கின்ற மணிச்சிக ரங்கள்
மிகுத்திடு குன்றை—மலைவாழ்வே!

4385. சீதமதி யுற்ற வேணிய ரிடத்த
தேவியுமை பெற்ற—புதல்வோனே!
தாதவிழ் கடப்ப மாலிகை தரித்த
சாமியென திச்சை—யதுதாராய்.
மாதர்கள் மயக்கு மோகமதி லுற்று
மாளுவதை வெற்றி—தருவாயே.
வாதடர் தழைத்த சீர்பொழி னிரைத்த
மாவள மிகுத்த—சிகிமேரா!

4386. கங்கு னிறத்தினர் திங்க ளெயிற்றினர்
கம்ப வுயர்ச்சியர்—திறலவுணோர்
தங்குல முற்றும ழிந்திட வெற்றிகொள்
தண்கனி நெட்டிலை—வேல்முருகா!

---

4383. 'நீ அலது ஆதரவு எனக்கு இருக்குதா? அது மனத்தில் அறியாயோ?' எனக் கூட்டுக. 'இருக்குதா' இருக்கின்றதா என்பதின் மரூஉ.

4384. 'வந்து மிகுத்திடுகின்ற தரித்திரந்தனைக் கெடு என்ற அதுபாராய்' எனக் கூட்டுக, வரிப்புலி - வியாக்கிரமபாதர். விழிச்செவி - பதஞ்சலி. உரித்துடை மங்கை - உரி (தோல்) உடை அணிந்த மலைமகள்.

4385. மாளுவதை - இறப்பதினின்றும்.

4386. முதலடி அரக்கர் தன்மையை விளக்குகின்றது.

செங்குமு தத்தினை வென்றவி ழிக்கொடி
திங்கண்மு கக்குற—மகள்தோளா!
மங்கு றவழ்பொழின் மிஞ்சிய நற்சிகி
வந்த குக!குரு—பரவேளே!

4387. பதஞ்சலி யிருவர் மனந்தின மகிழ
பதம்பணி கிடமுன்
நடமாடு—பெருமானர்
கதஞ்செயு மயிட னுடன்சம ரிடுபெண்
கமழ்ந்திடு குழலி
உமைமாது—தருபாலா!
பதந்தனை யடியர் கனிந்திட அருள்செய்
பரம்பொருள் முருக!
நலமான—அருள்தாராய்.
மிதந்திடு மறிவு சிறந்திட அருள்வை.
மிகும்பொழி னிரைகொள்
சிகிமேரில்—வருதேவே!

4388. நலத்தொரு மயிற்பரியை
நடத்தியென்—முன்வருவாய்.
பெலத்தசுரை யுரத்தையிரு
பிளப்பில்—அடுவயிலா!
வலத்தமரு மிடத்தமரு
மடக்கொடி—யர்மயலா!
பலத்தருகள் நிறைச்சிகியின்
பருப்பத! நல்—லருள்வாய்.

---

4387. பதஞ்சலி வியாக்கிரம பாதர் ஆகிய இருவரும் கண்டு களிக்கத் தில்லையில் சிவன் ஆனந்தத் தாண்டவம் ஆடிய செய்தி முதலடியில் குறிக்கப்படுகிறது. கதம் - சினம். மயிடன் - மயிடாசுரன்; இந்த அரக்கனுடன் போராடி அவனை அழித்தவள் சிவை என்பது இங்கு அறியத்தக்கது. எதிலும் பற்ருது உணராது அறியாமை உருவில் விளங்கும் அறிவினை. 'மிதந்திடும் அறிவு' என்ருர் ஆசிரியர்.

4388. 'வலத்தும் இடத்தும் முறையே அமைந்துள்ள மடக்கொடியராகிய வள்ளியம்மையார் தேவசேனையார் ஆகிய இருவரிடத்தும் அன்பு கொண்டவனே' என்பது மூன்ரும் அடியில் கண்ட பொருள். பலத்தருகள் - பலவகை மரங்கள். பருப்பதம் - மலை.

4389. கடமத மொழுகிய களிறுட துணையுள—முருகேசா!
இடர்படு துயரினில் எளியனை விடுவது—நலமோதான்?
மடமயில் குறதன மகள்மரு வியபுய!—எனையாளாய்.
வடவரை நிகர்தரு மயின்மலை தனில்வரு—குகநாதா!

4390. மனதி லுற்றிடு துயர்தெ றித்திட
வரமெ னக்கருள்—குருநாதா!
தனம யக்கினில் மனம யக்கிய
சனியி லிப்படி—உழல்வேனே?
அனந டைக்கொடி குறம யிற்கிசை
அழகு பெற்றுயர்—கதிரேசா!
தினக ரப்பிரபை முடிநி ரைத்திடு
சிகிம லைக்கிசை—குகவேளே!

4391. உனது பங்கய பதமி ரண்டினில்
உறுதி கொண்டிடும்—அடியார்பால்
மனது கொண்டுடன் இனிய அன்பொடு
வரமி குந்தருள்—புரிவாயே.
எனது சிந்தையின் இனைவ கன்றிட
இனிம கிழ்ந்தருள்—புரிவாயே.
கனது ரங்கமென் மயிலில் வந்திடு
கமழ்செ கண்டியின்—மலைநாதா!

4392. கனக மன்றினில் இருவர் கண்டிட
களிந டம்புரி—பெருமானர்
தனமி லங்கிய உமைம கிழ்ந்தருள்
சண்முக! வந்தருள்—புரிவாயே.
சினமி குந்திடு அசுர ரைவெலும்
திறமி குந்திடு—அயிலாளா!
புனமி லங்கிய சிகியெ னுங்கிரி
புகழ்கு றிஞ்சிய!—அருளாயோ?

---

4390, மாதரால் விளையும் மனமயக்கத்தை ஆசிரியர் எந்த அளவு வெறுக்கின்றார் என்பது 'சனி' எனக் குறிப்பதினின்றும் வெளிப்படுகின்றது.

4391. இனைவு - துன்பம்.

4392. கனகமன்று - பொன்னம்பலம். சண்முகன் - ஆறுமுகன். குறிஞ்சி - மலையும் மலைசார்ந்த இடமும்.

4393. மிடியாகிய பெருவாழியில்
விழுகாவகை—அருளாயோ?
மடிவாய்விட எதிர்சூரனை
வடிவேல்கொடு—எயும்நாதா!
அடியார்துயர் அதுவோடிட
அழகார்மயின்—மிசைவாராய்.
முடியார்பொழில் அரைசூழ்தரு
முதுகோகையின்—மலைவாழ்வே!

4394. பாவ மாகிய கடலில்
வீழு நாயனை ஒளியாம்
பாத மாகிய புணையா—லெடுவாயே.
தேவ னுகிய முருகே!
தீய வினையழிந் திடவே
தேற முன்வரு குவையே—முருகோனே!
மூவ ரானவர் முதலே!
ஏத யாதய விலையா ?
மூடு நோயினி னுடனே—கிடலாமோ?
சேவ லாகிய கொடியாய்!
தாவு சோலைக ணிரைசேர்
சீர்சி காமலை யரசே!—அருளாயோ?

4395. கடலிற்றுயின் மாயன்
கருணைக் கிசைவ தான—மருகோனே!
மடலிற்படு வேதன்
மன துக் கிசைவ தான—குருநாத!
உடலிற்றுயர் ஓட
உடன்மெய்ச் சிகியி லேறி—வருவாயே.
அடலிற்றுட மனதார்
அசுரைக் கொலுசி காநன்—மலைவாழ்வே!

4396. சாகரசமு சாரம தால்வரு
தாழ்வினை இனி யோடிட வேயருள்—புரிவாயே.
பாகனமொழி யாகிய மாதர்கள்
பாழ்படுமய லான்மெலி நோய்தனை—அடுவாயே.

---

4393. பெருவாழி - பெரிய ஆழி ; பெருங்கடல். விழுகாவகை - வீழாத வாறு. மடியாய்விட - மடிந்துபட.

4394. எடுவாயே ; எடுத்தற்கு வருவாய் ஆக.

4395. மடல் - தாமரை இதழ். வேதன் - பிரமன். அடலிற்றுட மனதார் அசுர் - கொல்லுதலில் துட்ட மனம்பெற்ற அரக்கர்.

கோகனகமி ஞசன ஞர்பணி
கூரறியநல் மாகுரு வே!கிருபை—புரிவாயே.
சேகரமிகு காவன மேவிய
சீர்சிகிமலை மீதினி லேவரு—குகநாதா!

4397. எனதிச்சையை நிறைவுற்றிட
இனியற்பொடு—அருள்வாயே.
கனகச்சிலை கொடுமுப்புரம்
கனலச்செயும்—அவர்பாலா!
வனசத்திரு மயிலைப்புணர்
மகிழ்அச்சுதன்—மருகோனே!
புனமொய்த்திடு முடியுற்றிடு
புகழ்அச்சிகி மலைநாதா!

4398. லோபிக ளாகிய பாவியர் பால்மனம்
நோகிட வேயலை—கிடலாமோ?
கோபிக ளாகிய தானவர் வீழிடக்
கூரயில் ஏவிய—செயவீரா!
நாபியி லேவரு மாமறை யேபுகல்
நான்முக ஞருட—குருநாதா!
சோபித மாகிய மாமுடி யேநிரை
**தோகையின் மேரினில்—வருதேவே!**

4399. கடவரை யுரிவை தரித்த நாயகர்
கயிலையின் மலையினி லுற்ற நாயகர்—அருள்பாலா!
மடமயில் குறவர் கொடிக்கு மாலிகை
மகிழ்வொடு புனையு நலத்த நாயக!—அருளாயோ?
திடமுள வசுரை யெதிர்த்து வேல்விடு
செயமிகு புயவ!யெ னக்கு வேணது—தருவாயே.
நடமிடு மயிலை நடத்தி யேவரு
நலமிகு குமர!சி கிக்கிரீசுர!—அருளாயோ?

4400. ஏனோ பிறத்தி யார்போல்தான்
நீநினைக்க லாமோ?—சொலுவாயே.
வானோர் மகிழ்ச்சி யாகவே
வாதார்த ருவாழ்வோன்—பணிபாதா!

---

4398. லோபிகள் - உலோபிகள் - கொடுத்தறியாக் கொடியவர்கள். கோபிகள் - சினமுடையோர். நாபி - கொப்பூழ்; திருமாலின் நாபியில் பிரமன் தோன்றினன் என்பர். சோபிதம் - நிறைவு.

4399. கடவரை - யானை; யானையின் உரியைப் போர்த்தவர் சிவனார். மாலிகை - மாலை.

4400, பிறத்தியார் - முகம்அறியா மற்றவர். கானோர் - காட்டில் வாழ்வோர்; குறவர் என்றவாறு.

தேனே டிதழ்ப்பொ னீபனே !
    தேவா!யெ னக்கன்பு—அருளாயோ ?
கானேர் குறத்தி அணைவோனே !
    காவாய்நல் தோகை—மலைநாதா !

4401. சங்கத் தமிழ்ப்புலவர்
    தங்கட்கு இசைத்தமிழ்—புகல்வாயா !
திங்கட் சடைப்பரமர்
    செம்பொற் குழைக்குமரி—தருபாலா !
பங்கப் படுத்தியிரு
    பங்கிட் டெதிர்த்தசுரை—அடுவேலா !
துங்கச் சிகிப்பரிய !
    தொண்டர்க் கிசைத்தசிகி—மலைநாதா !

4402. ஒருமுனிவன் ஒருசெவிதனில்
    ஒருமறைபுகல்—கனிவாயா !
இருவினைதனை இருமிடமற
    இருவரமருள்—உதவாயோ ?
கருமுகினிற மிகுவிறலுட
    கருணைகொள்மரு—க!குகேசா !
செருபுரியசு ரனையடுபவ!
    சிகிமலைதனில்—வருதேவே !

4403. வடித்தெ டுத்த பாகு போல
    வழுத்து இச்சை யானவேடர்—மகள்தோளா !
குடித்த னத்தி னாழி மீது
    குதப்பு வர்க்கு வேண கோடி—அருளாயா ?
நடித்த சித்திர மான தோகை
    நலப்ப ரிக்கு கேச! சூரை—அடுவேலா !
படித்த வற்பு தா!வி சாகா !
    பணைத்த நற்சி கார மலேச !—முருகோனே !

---

4401. சங்கத்.........திருவாயா- சங்கத்தெழுந்தருளியிருந்த புலவர்களுக்குச் செந்தமிழைக் கற்பித்த திருவாயினைப் பெற்றவனே. குழை - காதணி.

4402. ஒரு முனிவன் - அகத்தியன். மறை - தமிழ். இருவினை - நல்வினை தீவினை ஆம் இருவினைகள். இருவினைகள் அழிதற்கும் இருவரங்கள் வேண்டப் படுகின்றன.

4403. குடித்தனத்தின் ஆழி - குடும்பமாகிய கடல். குதப்புவர் - உழலுவோர். மலேச - மலைக்குத் தலைவனே.

4404. கமலத் திருமகள் புணரச் சுதனிருள்
கடலிற் றுயில்பவன்—மருகோனே!
அமரரக் கிறைதரு மகளுக் கிசைபட
அணியைப் புனைபுய!—முருகோனே!
சமணக் கொடியரை அழியக் கழுதனில்
தனிவைத் திடுகவு—ணியர்கோவே!
பமரக் குழுமிகு பொழிலுற் றிடுகமழ்
பணைநற் சிகிமலை—வருதேவே!

4405. அடம்புரி சூரன் அழிந்திட வேலை—எயும்வீரா!
நடம்புரி தோகை நலந்திகழ் மாம—யிலினுதா!
மடந்திகழ் வேடர் மகிழ்ந்தமி ழனை—அணைதோளா!
தடங்கொளு சோலை தழைந்திடு தோகை—மலைவாழ்வே!

4406. பிறையெ யிற்றினர் பனைமி றத்தினர்
பிரளி யுற்றவர்—அவராலே
நிறைத வத்தினர் கெடுத லைத்தவி
ரிடந லத்தினை—அருள்தேவே!
குறையி டைத்தன கிரிப டைத்திடு
குறம கட்கொடி—புணர்தோளா!
நறைமி குத்திடு பொழினி றைத்திடு
நலசி கிக்கிரி—வருதேவே!

4407. கோகன கத்தினில் வாழ்மறை யுற்றவர்
கோத றினத்தவர்—குருநாதா!
சாகர நற்சமு சாரம தில்திரி
தாழ்வத னுக்கொரு—அருள்தாராய்.
மோகம் விளைத்திடு மாதர் பயிற்றிய
மோடி யினிற்றிரி—கிடலாமோ?
தேகம் வருத்திய நோயத னைத்தவிர்
சீர்சிகி மெய்க்கிரி—வருதேவே!

4408. அந்தி மதிசூடு செஞ்ச டையின்நாதர்
அன்பு மிகுபாலக!—முருகேசா!
இந்திர விணோர்கள் வந்து பணிபாத!
எந்தன் வினைதீர—அருளாயோ?

---

4404. அமரர்க்கிறை தருமகள் - தேவசேனையம்மையார். 'காழியில் பிறந்த திருஞானசம்பந்தர் அமணரைக் கழுவேற்றினர்; சம்பந்தரை முருகன் என்பர்' இக்கருத்து மூன்றும் அடியில் குறிக்கப்படுகிறது. பமரக்குழு - வண்டுக்கூட்டம்.

4407. கோகனகம் - தாமரை. மறை உற்றவர் - வேதம் பாடுபவர். கோதறினத்தவர் - குற்றமற்ற கூட்டத்தினர். திரிகிடலாமோ - திரியலாமோ.

தொந்தி வயிறனை யின்க ருணைமீறு
சொந்த மிகு சோத—ர!விலாசா!
மந்தி குதிபோடு கின்ற கனகானம்
மண்டு சிகிமேரில்—வருதேவே!

4409. வஞ்சனை படைத்த ரஞ்சித மிகுத்த
வஞ்சியர் மயற்குள்—மெலிவேனோ?
அஞ்சலி கொடுத்து என்றன திடத்தில்
அன்பு மிகவுற்று—அருளாயோ?
நெஞ்சதி லுழற்று கின்றிடு துயர்க்கு
நின்கிருபை வைத்து—அருளாயோ?
மஞ்சுடர் பொழில்கள் மண்டிய சிகிப்பொன்
வண்சிலை தனக்கு—அரசாளா!

4410. மயலாகிய மடவார்தரு மருளாலலை—கிடலாமோ?
அயலானென நெடுநாள்தொறும் அறியாதது—எதனுலோ?
கயலார்விழி இருமாதர்கள் கணவா!கிருபை—புரிவாயோ?
புயருவிய மதுபாய்தரு பொழில்சூழ்சிகி—மலைநாதா!

4411. சரச மிஞ்சிய மடவர் தந்திடு
தழுவு மிங்கித—மயலாலே
சிரந டுங்கிட வருகொ டுந்துயர்
சிதற நன்றருள்—புரிவாயே.
அரக ரென்றசொ னிறையும் அன்பர்கள்
அனுதி னம்வழி—படுபாதா!
மரம்நெ ருங்கிய பொழினி றைந்திடு
மணமி குந்திடு—சிகிமேரா!

4412. ஏதுதுய ரேதுபிணி
ஏமனவன் ஏதுநின—தடியார்பால்.
மாதுகுற மானையணை
வாகுதிகழ் வேல!அருள்—புரிவாயே.
மோதுபடை யோடுவரும்
மூடசுரை கூறுபட—அடுவீரா!
வாதுநிறை சோலையடர்
மாமயிலின் மேரில்வரு—குகநாதா!

---

4409. வண்சிலை - வளம் நிறைந்த மலை.

4410. கிருபை - திருவருள்.

4412. 'முருகனை வழிபடும் உண்மை அடியார்க்குத் துயர், பிணி, எம வாதனை முதலியன இல்லை' என்பது முதலடி.

4413. சகதல மயக்க மெனுமனையி லுற்ற
சகலது யரற்ற—விழவேதான்
அகமகிழ அற்பி னெடுளென்முன் இச்சை
அளவறு நலத்தை—அருளாயோ?
மகபதி நிரைத்த யிமையவர் நெருக்க
மலர்கொடு தரித்த—இருதாளா!
சிகரமிகு பொற்பி னுயர்மலை நிகர்த்த
சிகிமலை தனக்கு—வருதேவே!

4414. கொத்தலரு நீப மாலை
குப்பெனவு மேவு மார்ப!—அருளாயோ?
நத்தணிகை நீல மாயன்
நட்புமிகு தேவி மாது—மருகோனே!
அத்தனர னர்சொல் பால!
அசுரன்றனை யேகொல் கூராம்—அயிலாளா!
பத்தரிமை யோர்கள் தேடு
பத்மமயில் ஏறுந் தோகை—மலையாளா!

4415. உனதுடைய பாத சேர்வை
உடனனுக வேணும் வேண—தருளாயோ?
தனகிரியின் வேட மாது
தழுவுபுய வாவு லாச!—வடிவேலா!
மனதில்வரு சோகம் மாய
மடியவொரு தீப மாக—வருவாயே.
கனகமக மேரு போலுங்
கமழ்சிகியின் மேரில் வாச!—முருகோனே!

4416. வடிவே லெடுத்து எதிர்சூ ருடற்கு
வகிராக யெற்று—செயவீரா!
குடிவாழ் குறத்தி மயலான் மயக்கு
குமரா! மயிற்ப—ரியின்நாதா!
அடியேன் மிடிக்கு வரமே அருட்செய்
அமரோர் துதித்த—இருதாளா!
கடியார் பொழிற்பொன் முடிசூழ் நலத்த
கமழ்தோகை நற்கி—ரியினாதா!

---

4414. நத்தணிகை - சங்கினைக் கொண்ட கை; நந்து என்பது நத்து எனத் திரிந்தது.

4415. சேர்வை - சேவை. கனகமகமேரு - பொன்மயமாகிய மேருமலை.

4416. எற்று - செலுத்துகின்ற. 'குறத்தியை மையலால் மயக்குகின்ற குமரனே' எனக்கொள்க.

4417. மருக்குலவு நீப மலர்ப்புனையு மார்ப!—எனையாளாய்.
செருக்குலவு சூரன் தெறித்துவிழ வேலை—எயும்வீரா!
பொருப்பினுயர் தோகை பொருப்பில்வரு தேவ!—
[அருள்வாயோ?
விருப்பினொடு தோகை மிகுத்தமயின் மீது—வருவாயோ?

4418. எனது இச்சையை நிறைய எப்படி
இனிய நற்பொருள்—தருவாயே.
மனது வைத்துடன் நடன முற்றிடு
மயிலி லிப்பொழு—தினில்வாராய்.
தனது பத்தர்கள் வளர வைத்திடு
சரவ ணக்குரு—பர!வேளே!
உனது வித்தையை யினமெ னக்கருள்
உயர்சி கிக்கிரி—முருகோனே!

4419. தினக ரற்கினை யொளிப ரத்திய
செயவு டற்குரு—பர!வேளே!
அன்ந டைக்குற மயிலி யைப்புணர்
அழகு பெற்றிடு—புயநாதா!
மனதி னிற்றுயர் விலகி டக்கன
வரம ருட்செய்வை—அமரேசா!
உனது நற்பத தெரிச னைப்பட
உதவு சித்திர—சிகிமேரா!

4420. அஞ்சாத அரக்கர் குலத்தினை
அண்டாது உடற்றிய வெற்றியி—னயிலாளா!
பஞ்சான னத்தர் அருள்குக!
பண்பார்மயி லிற்பரி யிற்றினம்—வருநாதா!

---

4417. மரு - நறுமணம். செரு - போர்த்தன்மை. பொருப்பு - மலை.

4418. 'எனது விருப்பம் நிறையுமாறு எப்படியாலும் இனிமையமைந்த நற்பொருளைத் தருவாய் ஆக' என்பது முதலடியின் பொருள். தனது........வேளே - தன்னைப்போற்றும் அடியார்களை எல்லாவகை நலத்தாலும் வளரவைக்கும் குருபரனாகிய வேளே. வித்தை - ஞானம்.

4419. தினகரற்கினை........குருபர - ஞாயிற்றினை ஒத்த ஒளியினைப்பரப்பும் வெற்றியுற்ற திருமேனியை உடைய குருவாகிய முதற்கடவுளே. 'உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு, பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டா அங்கு, ஓவற இமைக்கும் சேண்விளங் கவிரொளி' எனும் திருமுருகாற்றுப்படை வரிகள் இங்கு நினைத்து கொள்ளுதற்குரியன.

4420. அண்டாது - நெருங்கி வாழ வொட்டாது. உடற்றிய - துன்புறுத்தி அழித்த. பஞ்சானனத்தார் - ஐந்து முகத்தினை உடைய சிவபெருமான். செஞ்சாலி - சிறந்த நெல்.

நெஞ்சார்துய ரைக்கெட வேயருள்
நின்பால்வரு பத்தருக் கேயருள்—புரிவாயே.
செஞ்சாலி வயற்பொழி லேமிகு
தென்தோகை மலைக்கிசை வாகிய—பரமேசா!

4421. பிறையெ யிற்றினர் முகினி றத்தினர்
பிரளி யுற்றவர்—வலுவானோர்
அறைக ழற்கழ லசுர ரைக்கொல
அயிலெ டுத்தெதிர்—சமராளா!
கறைமி டற்றினர் அரிய புத்திர!
கடிக மழ்மண—மலர்நீபா!
மறைது தித்திடு குருப ரக்குக!
வடிவு பெற்றிடு—சிகிமேரா!

4422. கலகலெனத் தண்டை யாடிடவே
கனமிகுநற் கொண்டை மாமயின்மேல்—வருவாயே.
வலஅவுணர்க் கொன்ற வேலவனே!
வனசமலர்ச் செங்கை நாயகனே!—எனையாளாய்.
செலையணிமெய்ச் செஞ்சடை ஈசுரனர்
திருமகளைப் பொழுது மாதரி—முருகோனே!
அலகில்வளர் பைம்பொழில் சூழ்தருசீர்
அழகுளபொற் குன்றை மாமலைமேல்—வருதேவே!

4423. சினவரவு தரித்த வேணியர்
திருமறைகள் துதித்த நாயக—ரருள்பாலா!
மனமுலவிய பிணிக்கு நீயொரு
வரமதினை எனக்கு நீயருள்—குகநாதா!
புனமயில்தனை மகிழ்ச்சி யாயணை
புயமுருக! நனயத்தை யேயருள்—குகநாதா!
வனசமலர் மகள்மிகுத்த தோகையின்
மலையில்வளர் குருபரசி கேசவி—ணமரேசா!

4424. வஞ்சிகுற மாது
வம்புமுலை மீது—புணர்தோளா!
ரஞ்சிதமி னார்கள்
ரஞ்சிதமய லாலும்—மெலிவேனோ?

---

4421. வடிவு - அழகு.

4422. வல அவுணர் - வன்மை நிறைந்த அரக்கர். வனச.........நாயகனே- தாமரை மலரினைப் போன்ற செந்நிறக் கையினைப் பெற்ற தலைவனே.

4423. நனயத்தையேயருள் - நன்மை அமைந்த இன்பமாகிய பெருநயத்தினையே அருளுக.

4424. வம்பு - கச்சு. பஞ்சவர்.........மாயன் - மாபாரத யுத்தத்திற்குக் காரணமாகிய பாண்டவர்களுக்குத் துணைபுரியும் பண்பினைப் பெற்ற திருமால்.

பஞ்சவர்ச காய
பண்பின்விறல் மாயன்—மருகோனே!
மஞ்சுதவழ் சோலை
மன்னுபொழில் தோகை—மலைவாழ்வே!

4425. வடிவேல் எடுத்து
வளர்தோகை நற்ப—ரியில்வாராய்.
கடியார் கடப்ப
கனமா மலர்ப்பொன்—மணிமார்பா!
குடிவாழ் குறத்தி
குயமா முலைக்கு—மயலாளா!
முடியார் சிகிப்பொன்
முதுமேரி லுற்ற—குகநாதா!

4426. மடவார் மயலான் அடியேன் கெடிதே
மதிசோ ரிடவே—அலையாதே
திடமா கியதோர் வரமே புரிவாய்.
சிகியா கியதோர்—பரியாளா!
கடவா ரணமா கியமா முகனார்
கருணா நிதியார்—துணையாளா!
தடவா விகள்சூழ் சிகிமா மலைமேல்
தனிநா யகமே!—அருளாயோ?

4427. தீவினை யால்வரு மாதர்க ளேயது
தீரிட வேயருள்—புரிவாயே.
பாவிக ளாகிய லோபிகள் பானிதி
பாவியெ ணுதருள்—புரிவாயே.
தேவியு மாபதி பால!கு கேச!தென்
சீர்சிகி மேல்வரு—குமரேசா!
தீவிய கானகம் மேவிய தோகையின்
சீர்பெறு மாமலை—முருகேசா!

4428. யுத்தக ரத்தினி ரைப்ப டைக்கெதிர்
உற்றுடல் பெற்றிடு—அயில்வீரா!
மத்தக வெற்பி னிகர்த்திடு பொற்றன
மட்டவி ழற்குழ—லியர்லோலா!

---

4426. மதிசோரிடவே - அறிவு சோர்ந்திட. தனி நாயகமே - ஒப்பற்ற தலைமை அமைந்தவனே.

4427. பாவியெணுது - பாவியாகிய யான் எண்ணுதிருக்குமாறு. தீவிய - திவ்விய, சிறந்த.

4428. யுத்தகரத்தினிரைப்படை - யுத்தத்தில் ஈடுற்றுக் கைகளில் வரிசையாகப் படைகளை ஏந்திய வீரர். அற்குழல் - இருள்போன்ற கூந்தல். சித்தசன் - மன்மதன்.

சித்தச னைக்கெட முற்ற எரித்திடு
　　சிற்பர மற்கொரு—புதல்வோனே!
முத்தமி ழைத்தரு வைப்பொழி னித்தியம்
　　மொய்த்திடு நற்சிகி—மலைநாதா!

4429. வானவர் மடந்தை யான்மயல் மிகுந்து
　　மாவுடல் பகிர்ந்த—அயிலாளா!
கானக மடந்தை யால்அலை யுகின்ற
　　காரண! கடம்ப—மலர்மார்பா!
தேனலர் வந்த பாவைபுணர் கின்ற
　　சீர்விறன் மகிழ்ந்த—மருகேசா!
தூனல மிகுந்த சோலையுறை கின்ற
　　தோகைமலை வந்த—முருகோனே!

4430. அடலெ டுத்திடு
　　அசுர னுக்கருள்—புரிவோனே!
மடலெ டுத்திடு
　　மலரி ணைத்தெரி—யல்மார்பா!
உடலெ டுத்திடு
　　உயரு மிப்பவம்—ஒழியாயோ?
கடலெ டுத்திடு
　　கமழ்சி கிக்கிரி—வளர்வாழ்வே!

4431. தருண மங்கையர் மருவு மிங்கித
　　சரச மிஞ்சிய—மயலாலே
உருவி லங்கிய எனது அங்கம
　　துருக வன்துய—ருறுவேனோ?
செருவி லங்கிய வசுரை வென்றுடல்
　　சிதற வன்றமர்—புரிவேலா!
திரும டந்தையின் மருக! வந்தருள்
　　சிகியெ னுங்கிரி—முருகோனே!

4432. அரக்கர் குலத்தின் மிகுத்த பெலத்த
　　அகத்தசு ரற்கு—எதிராளா!
புரத்தை விழித்துக் கொன்ற நலத்த
　　புயத்தபர மர்க்கு—வருபாலா!

---

4429. அலையுகின்ற - அலைகின்ற. தூனலம் - தூய நன்மை.

4431. தருண மங்கையர் - பருவம் வாய்க்கப்பெற்ற மகளிர். உருவிலங்கிய எனது அங்கம் - தன் உருவத்தினின்றும் வேறுபட்ட எனதுடல்

வரத்தை அருட்செய் கரும ர!ப்பொன்
மயிற்பரி யின்ப—ரிபினுதா!
திரத்த பொழிற்கள் நிரைத்த பணைத்த
சிகிக்கிரி யிற்கு—லவுநாதா!

4433. சாகர மானசமு சாரத் தானதுய—ரதனுலே
தேகம தேவளரும் தோதுலே யாதபடி—அலேவேனோ?
மாகம தேசெய்கன வானவர்க ளேநிதமும்—பணிபாதா!
வேகம தானமயில் மீதினில் வேல!சிகி—மலேநாதா!

4434. கடக்க ளிற்றினே நிகர்த்த அத்திற
கனத்து திக்கையர்—துணையாளா!
மடக்கொ டிக்குற மயிற்கு வற்புத
மலர்த்த ரித்திடு—மயலாளா!
நடத்து சித்திர மயிற்ப ரிக்குக!
நலத்த வற்புத!—அருளாயோ?
தடப்பொ ழில்சிகி மலேக்கு ளுற்றவ!
சகத்தர் சித்தர்கள்—பணிபாதா!

4435. பனையைநிகர் உருவம்மிகு
பவளநிற மயிலில்—குலவு.........
அனையதவ முதலியன
அழியுமிடி அடுவமரர்—குலதேவே!
நனைகுலவு மணமுலவு
நளினமலர் அயனுடைய—குருநாதா!
சினையுலவு பொழில்கள்நிறை
சிகிமலேயின் அனுதினமு—முயர்வாழ்வே!

4436. சாடைக் கருங்கண் மீறுற்ற கொங்கை
தாருற்ற பங்கி—மடவாரால்
வாடைக் கிரங்கி மோகித் திருந்து
மாயத் திரிந்து—அலேவேனோ?
ஆடைற் றுமுண்ணு தெனவக்கும்
ஆசைக்கு ணந்து—மெலிவேனோ?
பூடைக் கிசைந்த வோருக்கு வன்பு
போதுற்ற குன்றை—மலேவாழ்வே!

---

4235. முதலடியின் இறுதிச்சீர் சிதைந்துள்ளது.

4436. மூன்றும் அடியின் முதற்பகுதி உள்ளவாறே பதிப்பிக்கப்படுகிறது.

4437. மாதர் பயிற்றிய மாய வலைக்குளில்
மாளிட வைத்தது—நலமாமோ?
ஆதர வெனக்கருள் வாய்கும ரக்குக!
ஆறுமு கத்தழ—குளநாதா!
தாதவி ழற்புத மாமலர் உற்றவர்
தான்மகிழ் அற்புத—குருநாதா!
வாதடர் மைப்பொழில் சூழ்தரு நற்சிகி
மாமலை யிற்குல—வியதேவே!

4438. சாகர மாகிய வாழ்வினி லேவரு
தாழ்துயர் தீரிட—அருள்வாயோ?
கோகன காசன னோர்முனி வோர்பணி
கூறுய ராசன—முருகோனே!
பாகன சேர்மொழி வேடமி னுளொடு
பாவைதெய் வானையு—மணைதோளா!
மாகன காசல மேகிக ராகிய
மாமயின் மேனினில்—வருதேவே!

4439. சாரச மதுலீலா
மாதர்க ளுடமாலால்
தானகமது நோகா—தருள்வாயே.
போரடர்கன அசுரோன்நால்
நெடும்படை கெளிபடவே
பூமலிவயில் விடுஅமரா!—இறைவோனே!
தாரணியுய முருகோனே!
நாயடியன் முன்வரவா
தாமரைநிகர் பாதா!—அருளாயோ?
காரணி பொழினிரைசூழ்
தோகையி னலமேரா!
காரண!கரு ணேசா!—செகராசா!

4440. புண்ட ரிகவிழி மாயவனை
புந்தி தனிவரு வேதியின்—குருநாதா!
தொண்ட னெனையினி யாதரி
துங்க மயில்மிசை வேலொடு—வருவாயே.

---

4437. தாதவிழ்.........உற்றவர் - பிரமன்.

4438. மாகனகாசலம் - பெருமை பொருந்திய பொன்மலை; மேருமலை.

4439. சாரசம் - சரசம் என்ற சொல் நீண்டது. வரவா - வருதற்கு வருவாய்.

தண்ட மதையினி நீசெய்வை
சங்க மதில்வரு பாவல!—அருளாயோ?
அண்டர் பணிபுரி பாக!நல்
லன்பு மிகஅருள் தோகையின்—மலைவாழ்வே!

4441. மருவளர் கடம்ப மலரணி புயங்கள்—உடனேதான்
திருநட மிலங்கு சிறைமயிலி லன்பி—னுடன்வாராய்.
அருமறை புகழ்ந்த அழகிய குழந்தை—வடிவேலா!
திருநிறையு மிந்திர சிதைவகல் குன்றை—மலைவாழ்வே!

4442. மருமணம் மிகுந்த
வனசமலர் வந்த—அயனுர்பால்
பொருதுருவு கின்ற
புகழ்குரு! மிகுந்த—அருளாயோ?
அருமறை புகழ்ந்த
அழகிய நடங்கொள்—மயிலாளா!
திருமகள் உறைந்த
சிகிமலையில் வந்த—முருகோனே!

4443. விதியார் வகுத்த உடல்மேல் வகுத்த
வினையோ டச்செய்தல்—புரிவாயே.
கதியார் மயிற்ப ரியிலே நடத்து
கருண கடாச்ச—ரகுகேசா!
மருவார் கடப்ப மலர்சூடு கரத்த
வரதா!யென்மு—னம்வாராய்.
தருவாழ் பொழில்கள் நிறைதோகை யுற்ற
சமரார் தகட்டி—னிலைவேலா!

4444. வந்தபிணி யாலும் நொந்து துயராகி
மங்கியுட னேவ—தறியாயோ?
கந்தமிகு நீப மென்றுமணி மார்ப!
கண்டுமொழி மாதர்—மயலாளா!
சந்தமுலை மாதர் தந்தமய லேறிச்
சங்கையில காம—மதனலே
இந்தவிதம் நோதல் கண்டருள்வை நாத!
இந்துதவழ் தோகை—மலைநாதா!

---

4443. கருண கடாச்சர குகேசா - அருள்பொலிவைப்பெற்று விளங்கும் முருகனே. சமர் - போர்.

4444. கந்தம் - நறுமணம். கண்டுமொழி - கற்கண்டினை ஒத்த இனிய மொழி. சந்தம் - சந்தனம். இந்து - சந்திரன்.

4445. கலைமதி தரித்த சடைமுடி மிகுத்த
கருதரிய சுத்த
மறைநாத—ரருள்பாலா!
உலைவரு துயர்க்கு விலகிட நலத்த
ஒருவர மெனக்கு
அருளேசெய்—குகவேளே!
சிலைதனை முறித்துச் சனகியை மணத்த
திருவிறல் தனக்கு
மருகேச!—முருகோனே!
மலைகளி லுயர்த்த சிகிமலை யிலுற்ற
வளர்குரு பரப்பொன்
மயிலேறி—வருவாயே.

4446. வங்கண மிகுத்த பைங்கிளி குறத்தி
வஞ்சியை அணைத்த—புயநாதா!
செங்கணர வுற்ற செஞ்சடையர் பெற்ற
செந்திரு நிலைறத்த—குகவேளே!
பங்கச மலர்சூழ் மங்கையை அணைத்த
பைந்துளை யருக்கு—மருகேசா!
தங்கமலை மெச்சு குன்றைமலை யுற்ற
சம்பிரம குகுகு—மரவேளே!

4447. எந்த விதத்திலும்
எந்தன் வினைக்கருள்—புரிவாயே.
கந்த மலர்க்கிசை
கங்கு னிறக்குழன்—மடவாரால்
வந்த மயற்கொரு
வண்பொரு ளற்பொடு—தருவாயே.
சந்த மிகுத்திடு
தண்டமி ழைச்செய்வை—சிகிமேரா!

4448. மருட்டிய பார்வை
மடக்கொடி யாசை—மருளாலே
மருக்கொளி போல
மனத்துய ராதல்—அறியாயோ?

---

4445. உலைவருதுயர் - துன்பத்திற்கு இடமாகிய துயரம். சிலை - வில். சனகி - சானகி; இராமபெருமானின் மனைவியார்.

4446. வங்கணம் - நயம்.

4447. வினைக்கருள்புரிவாயே - வினைகள் ஓடுமாறு அருள் செய்க.

விருப்பொடு வேடர்
மினுக்கலை யாது—அலைபாதா!
தருப்பொலி சோலை
தழைத்திடு தோகை—மலைவாழ்வே!

4449. மிடியால் வருந்தும் எளியேனை முனின்று
விரைவாக வந்து—அருளாயோ?
கடியார் கடம்ப மலர்தா னிலங்கு
கனசீர் புயங்க—ளுடன்வாராய்.
அடியார் நிறைந்து துதியே புரிந்து
அழகாய் நிறைந்தி—டவும்வாராய்.
முடிதானி றைந்து பொழிலே வளர்ந்து
முதிர்தோகை யங்கி—ரியினுதா!

4450. சந்த முலைக்குற மங்கை தனக்கிசை
சந்திர முகக்குரு—பரவேளே!
வந்த வினைக்கு மருந்து களைச்செய்வை
வண்டமி ழைச்சொலு—கனிவாயா!
கந்த மிகுத்த கடம்பணி வித்தக!
தந்தி தனக்கிசை—துணையாளா!
பைந்தளி ருற்றிடு தண்டலை பெற்றிடு
பண்புயர் நற்சிகி—மலைநாதா!

4451. மறைமுத லான சிவபர மேசர்
மருவிய தேவி—தருபாலா!
அறைகழல் வீரன் ஒருவசு ரேசன்
அழிபட வேலை—எயுநாதா!
குறையிட மாது குறமயில் மாது
குயமதில் மேவு—புயவேளே!
சிறைமயி லான பரிமுரு கேச!
சிகிமலை வாச!—அருளாயோ?

---

4448. மினுக்.........பாதா - மின்னலை ஒத்த வள்ளியம்மைக்காக அலையாது அலைகின்ற திருவடிகளை உடையவனே. முருகனுக்கு அலைவு இல்லை; அலையென்பது வெறுந்தோற்றமே. வான்மதி நீரில் தெரியும். நீர்மதி காற்றால் அலையும்; அதே வேளையில் வான்மதி அலையாது. அவ்வாறே முருகனும்.

4450. சொலு - சொல்லுகின்ற. தந்தி - விநாயகர்.

4451. நல்லழகு பொருந்திய நங்கையர் இடை சுருங்கி இருக்கும் எனும் இலக்கணம் பற்றி ஆசிரியர் 'குறை இடமாது' என்றார்.

4452. பெலமி குத்தகொரு திரிபு ரத்தவர்கள்
பிழைபட க்கொன் றிடு—விழியாரோர்
குலம கட்குமுனம் மணம்மு டித்தசெய
குலவும் நற்பரமர்—அருள்பாலா!
வலமை யுற்றகன அசுர னைப்பொருதும்
வளகதிர்க் கொடிய—வடிவேலா!
உலகம் உற்றஅடி யவரை மிகப்பெறுபொன்
உயர்சி கிக்கிரியில்—வருதேவே!

4453 நயவஞ்சகன் எனயெந்தனை
நழுவும்படி—செயலாமோ?
மயல்கொண்டினி யலையெந்தனை
மகிழும்படி—அருளாயோ?
கயல்ரெண்டுள விழிமங்கைமின்
கமழ்தண்டலை—யில்தோளா!
புயல்வெண்மதி தவழுங்கன
புகழ்மிஞ்சிய—சிகிமேரா!

4454. மருட்டிய விழியார் நெருக்கிய குழலார்
கருத்துறு மதிய—மயலாலே
இருட்டியென் மனது மயக்கிடு மதனை
இழிபட அருள்கள்—புரிவாயே.
அருட்டியின் வருவ சுரற்கெதி ரொடுபொன்
அயிற்படை யதனை—விடுசூரா!
அருட்டின மருள்வை சிகிக்கிரி வருபொன்
அருட்குரு! அருளை—உதவாயோ?

4455. எனது தீவினை கருகி யோடிட
இனிய தாம்வரம்—அருள்வாயே.
மனது நோயது தவிர வேயருள்
வடிவ தாகிய—குமரேசா!
வனச மாமலர் மகளை மேவிய
மரும ஞருட—மருகேசா!
கனக மாகிய சிகர மீறுயர்
கமழ்சி காமலை—வருதேவே!

---

4452. பலம் என்ற சொல் 'பெலம்' என ஆளப்பட்டது. திரிபுரத்தவர் சிவனை மறந்தாராக அவர்களை இறைவன் சிரித்தெரித்தான் என்பது கதை. வலமை - வலிமை.

4453. நழுவும்படி - நின் திருவருட் பார்வையில் அகப்படுத்தாது விலகும்படி. 'புயலும் வெண்மதியும் தவழும் சிகி' எனக்கொள்க.

4454. அருட்டியின் - மிரட்டலுடன்.

4456. விதியி னல்வரு வினையும் மேல்வரு
வினையு மோடிட—அருளாயோ?
மதியி னல்வரு பழிகள் பாதகம்
மடிய வேஅருள்—புரிவாயே.
கதியி னல்நடை புரிசெய் தோகைய!
கருணை நாயக!—நயவேளே!
துதியி னுயர் கமல னர்குரு
சுக!கு கேச!பொன்—மயின்மேரா!

4457. ஞான வித்துகள் ஆன வற்புதர்
நாளு மற்பொடு—பணிபாதா!
சான கிக்கொரு மாலை யிட்டிடு
சாமி மெச்சிய—மருகோனே!
வான வர்க்கர சான வச்சிரர்
மாதி னைப்புணர்—புயநாதா!
கான முற்றிடு தோகை மெய்க்கிரி
கார ணக்குரு!—பரவேளே!

4458. மருப்பொலி நீப
மலர்ப்புனை மார்ப!—அருளாயோ?
திருக்கமல வாசத்
திருக்கொடியின் மாது—மருகேசா!
கருக்குழியில் வீழ்தல்
கழித்துவிடு வாய்பொன்—மயிலாளா!
தருப்பொலிசேர் சோலை
தழைத்தசிகி மேரில்—வருதேவே!

4459. வினையால் வருந்தும் எளியேன் மெலிந்து
விழுகாம லின்று—அருளாயோ?
நினையான் விழைந்தென் மணமார் கடம்ப
நலமாலை கொண்ட—புயநாதா!
முனைவே லிலங்கு செயவீர! எந்தன்
முனமாக வந்து—அருளாயோ?
சினநீ டடர்ந்த பொழில்சூழு கின்ற
சிகியான குன்றை—மலைவாழ்வே!

---

4457. சிவனுக்கும் பிரணவத்தை உபதேசித்துப் பெருமை உற்றவன் முருகன் என்பதைக் கூறுவது முதல் வரி. வான.........வச்சிரர் - தேவர்களுக்குத் தலைவனாகிய வச்சிராயுதத்தை ஏந்திய இந்திரன்.

4459. நினையான் விழைந்தென் - நின்னை நான் விரும்பி நாடி நிற்கின்றேன். சினை - கிளை.

4460. ஆதி நாயகர் ஆன நாயகா!
ஆவ லாகிய—உமைபாலா!
பாதி மாமதி யான வாணுதல்
பாவை வேடமின்—அணைதோளா!
மோதி யேவரு சூர னார்படை
மோச மாகிட—விடுவேலா!
சோதி யாகிய கோடு லாவிய
தோகை மாமலை—வருதேவே!

4461. சஞ்சித வினையால் வந்திடு துயர்தான்
தண்கிருபை கொடுநீ—அடுவாயே.
வஞ்சியர் மயலாம் துன்பலை தனிலே
மண்டிய எனைநீ—அருள்வாயே.
அஞ்சிய அசுரோன் கொண்டிடு படையே
அழிந்திட அயிலே—வியசூரா!
மஞ்சிகள் தவழ்கா மண்டிய சிகியாம்
வண்கிரி தனில்வாழ்—குகநாதா!

4462. நடன முற்றிய மயிலி லுற்றவ!
நறுக டப்பணி—மணிமார்பா!
அடமி குத்திடு அவுணர் நற்குலம்
அழிய வெற்றிகொள்—அயிலாளா!
......டவெகுறி கமல முற்றிடு
மறைமு நற்கருள்—குருநாதா!
அடம கற்றிடு குமர! வித்தக!
அழகு பெற்றிடு—சிகிமேரா!

4463. கஞ்ச மலர்த்திரு மங்கை தனக்கிசை
கங்கு னிறத்தினர்—மருகேசா!
வஞ்ச மிகுந்தவு ணன்றனை வெற்றிகொள்
வண்புக ழுற்றிடு—செயவீரா!
நஞ்ச மிடற்றினர் தன்புதல்வ!குக!
நந்தரு ளைச்செய்வை—அமரேசா!
மஞ்சடர் நற்பொழில் மிஞ்சுசி கிக்கிரி
வந்த துரைக்குரு—பர!வேளே!

---

4461. சஞ்சிதவினை - பழம் பிறப்புக்களில் செய்து தொடர்ந்து வருகின்ற வினை. துன்பலை - துன்பம் தரும் அலை.

4462. மூன்றும் அடியின் முதலிருசீர்கள் சிதைந்துள்ளன.

4463. வஞ்சமிகுந்தவுணன்றனை - வஞ்சனைமிக்க அரக்கனை. நஞ்சம் - விடம். நந்தருள் - வளரும் திருவருள்.

4464. பாசம் விட்டுஎம தூதர் கட்டிடுதல்
பாவம் அப்படி—வரலாமோ ?
நேசம் வைத்தென்மு னேசி றைப்பரி
நீத மற்பொடு—வருவாயே.
வாச நற்கம லாச னர்க்கருள்
மாச கற்றிய—குருநாதா !
ஈச! மைப்பொழில் சூழ்சி கிக்கிரி
ஏக மெய்ப்பொருள்—முருகோனே !

4465. அடவியில் வருகுற மடமகள் மயல்கொடு
அலைகிற பதமதை—அருளாயோ ?
நடமிடு மயிலெனு மொருபரி மிசைவெகு
நலமுத விசெய்திட—அருளாயோ ?
அடம்வினை அசுரர்கள் குலம்அழி படஉயர்
அயில்தனை விடுசெய—முருகோனே!
வடவரை நிகர்தரு சிகிமலை உலவிய
வரத!சண் முக!குக !—எனையாளாய்.

4466. மனதில்வரு துயர்க்குவொரு
மருந்து இனி—உதவாயோ ?
சினத்தரவு தரித்தமுடி
சிவத்தசிவன்—அருள்பாலா!
கனத்தபடை நிரைத்துவரு
கருத்தசுரை—அடுவேலா !
இனத்துமணி மிகுத்தமுடி
எழிற்சிகியின்—மலைவாழ்வே!

4467. வினையால் வருத்து துயரால் மிகுத்து
மெலிவேனை ரெட்சி—குமரேசா!
அனைமார் வயிற்றுக் கருவீழல் மெத்த
அனியாய மத்தை—அடுவாயே.
புனைமாலை யுற்ற குழலார் அணைத்த
புயவாசை யிற்றி—ரியலாமோ ?
சினைவா தடர்த்த பொழில்சூழ் கனத்த
சிகிமேரில் உற்ற—குகநாதா!

---

4464. நீதம் - நிதம் என்ற சொல் நீண்டது.

4465. பதம் - பாதம் ; திருவடி. செய்திட - செய்வதற்காக.

4468. செந்திரும டந்தைபுணர்
செங்கண்விற லன்புமிகு—மருகோனே!
வந்திமையர் தங்களிறை
மண்படிய நெஞ்சினொடு—பணிபாதா!
சந்திரசடி லங்கொளிறை
தந்தவொரு மைந்த!அருள்—புரிவாயே.
பந்திநிறை கின்றதொரு
பைம்பொழினி றைந்தசிகி—மலைநாதா!

4469. விதியால்வரு துயராகிலும்
வினையால்வரு துயராகி லு—மணுகாமே
துதியாகிய அயில்வீர! பொன்
உயர்தோகையின் மயிலேறிமுன்—வருவாயே.
மதிசூடிய சடைவேணியர்
மகிழ்வாகிய உமைபாலக!—அருள்வாயே.
கதியேபெற அடியார் நிறை
கமழ்தோகையின் மலைவாழ்ந்திடு—குமரேசா!

4470. வனச மாமலர் இலகு நாயகி
மருவு நாயகன்—மருகோனே!
மனது நோய்தவிர வரமெ லாமருள்
மயிலி லேறிய—குகநாதா!
சினவ ராவணி சடையின் நாயகர்
திருவின் மாமகள்—அருள்பாலா!
கனக மாமலை நிகர தாகிய
கமழ்சி காமலை—முருகோனே!

4471. வேதாகம ஞானேதயா! மேலோர்பணி—புரிபாதா!
வேதாஉப தேசா!நுனி வேலாயுத—முருகோனே!
சீதாமரு கேசா!அருள் தேவா!கிருபை—புரிவாயே
மாதாகளி நாதா! சிகி மாமேரினில்—அரசாளா!

4472. கூலனைத் தரித்த வேணிய ரிடத்த
கோமளை தனக்கு—வருபாலா!
மாவனு வுரத்தை யேபகி ரிடச்செய்
மாவிகை தரித்த—அயிலாளா!

---

4468. நெஞ்சினொடு பணிபாதா - உள்ளத்தோடு பணிகின்ற திருவடிகளை உடையவனே.

4471. வேதா உபதேசா - பிரமனுக்கு உபதேசம் செய்தவனே. சீதாமரு கேசா - சீதைக்கு மருகனாகிய இறைவனே. மாதாகளி நாதா - சிலையாகிய பெருமாட்டி களித்தற்குரிய தலைவனே.

4472. கூலன் - கூன்மதி போலும். கோமளை - பார்வதி தேவியார். மா - மாமரமாக நின்ற சூரபதுமன்.

தாவிய மயிற்பொன் ஆனபரி யுற்ற
சாமியரு ளைச்செய்—அமரேசா!
தேவியர் குறத்தி மேவிய புயத்த!
சீர்சிகி மலைக்கு—வருதேவே!

4473. வடிவே லெடுத்து எதிர்சூர பத்மன்
மடிவாக வெற்றி—புரிவீரா!
அடியார் தனக்கு வருநோய் தவிர்த்து
அருள்வாய் கடப்ப—மணிமார்பா!
குடிவாழ் குறத்தி மயலா லிணைத்த
குயமீ தணைத்த—புயநாதா!
கடியார் பொழிற்சி கியின்மேரி லுற்ற
கருணை நிதி!பொன்—மயிலாளா!

4474. மதிதாதகி சூடிய சடைவேணியர் பால்வரும்
மணிமா துமை நாயகி—தருபாலா!
விதிமாலறி யாதபொன் மலராகிய சீர்பத!
விரைசேர்கன நீபமென்—மணிமார்பா!
கதியாய்வரு நால்படை நிரைசூழ்டு சூருடல்
கமராகிட வேல்தொடு—செயவீரா!
அதிபா!சிகி மால்வரை தனில்வாழுயர் நாயக!
அழகா! குக!காவல—அருளாயோ?

4475. மனதா சையினல் மடவா ருடனே
மயலா மதனல்—அலைவேனே?
வனமா தரசோ டினிதா யலைவாய்.
மயிலே றியசே—வக!வேளே!
சனகா திபர்பால் உபதே சிகனர்
தருபா லக!வே—ணதுதாராய்.
கனகா சலநேர் சிகிமா மலையா!
கருணை நிதியே!—அருள்தாராய்.

---

4473. எதிர்சூரபத்மன் மடிவாக வடிவேல் எடுத்து 'வெற்றிபுரி வீரா' என இயைக்க. இணைத்த - இரண்டாக இணைந்த.

4474. மணிமாது - கருநிறம் பெற்ற மங்கை. விதி - பிரமன். கதி - விரைவு. கமராகிட - பிளந்திட. காவல - எம்மவர் உயிர் உடல் ஆதிய எல்லாம் காப்பாற்றுகின்றவனே.

4475. வனமாதரசு - வள்ளியம்மையார். சனகர் முதலிய நால்வருக்கும் வட ஆலின் கீழிருந்து அறம் அருளினன் அரன் என்னும் கதையை மூன்றும் அடி அறிவிக்கின்றது.

4476. ஆல காலவிடம் நேர தானவிழி
யார்கள் ஆசையினின்—மெலிவேனோ?
கால தூதர்வரும் வேளை நாயனலே
காலே யோடியென்முன்—வருவாயே.
கோல மானஅடி யார்கள் வானவர்கள்
கோடி கோடிபணி—புரிபாதா!
நீல மாமயில! சோலை வேணபல
நீடு தோகைமலை—முருகோனே!

4477. மரும லர்ந்திடு மலர்க்க டம்பையணி
மரும! அன்பொடுமுன்—வருவாயோ?
பொருது கின்றஅசு ரனைமுன் வென்றிடுவிண்
புலவர் வந்துபணி—இருதாளா!
இருவ ரன்பினெடு மருவு மம்புயவ!
இலகு கின்றமயின்—முருகேசா!
கருகி றங்கொள்முகி றவழு கின்றபொழில்
கமழ்சே கண்டிமலை—வருதேவே!

4478. வனிதைய ரிருவ ராசை
வளரிடு மேனி நாத!—வடிவேலா!
இனிதய வேகொள் வேல!
இசைபட மாவி னேடு—பொருவேலா!
முனிவர்கள் கோடி வேத
முதல்வர்கள் கோடி கோடி—பணிபாதா!
பனிமிகு சோலை சூழும்
பருமலை யான தோகை—மலைவாழ்வே!

4479. வாதுற்றிடு சூரைப்பகர்
வாகச்செயும்—அயிலாளா!
போதுற்றிடு வொருக்கருள்
போலச்சொலும்—குருநாதா!
தாதுற்றிடு நீபப்புய!
தாளைப்பணி—பவர்நாதா!
வாதுற்றிடு சோலைச்சிகி
வாழ்வுற்றிடு—குகவேளே!

---

4476. அலைகாலே - தன்புறுகின்ற காலத்தில்.

4477. விண்புலவர் - விண்ணாட்டுத் தேவர்கள். அம்புயவ - அழகிய புயத்தினை உடையவனே.

4480. பழைய வினைக்கொரு புதிய மருந்தருள்
பருவ மயிற்குற—மகள்தோளா!
கழையை நிகர்த்திடு புயவுமை நற்கொடி
கவரு மதிச்சடை—யவர்பாலா!
வழையு மிடைத்திரு மகளை மணத்தவர்
மகிழு விறற்கொரு—மருகோனே!
தழையு மலர்ப்பொழில் நிறையு முயர்ச்சிகி
தனிவரை யுற்றிடு—குகநாதா!

4481. முந்திய தீவினையால் வந்திடு நோயதுதான்
மொண்டெறி துன்பினில்நா—னலைவேனோ?
தந்தியி னனனுர் கொம்பொரு பாதியினர்
தன்றுணை நாயகனே!—கிருபைதாராய்.
அந்தியின் மாமதிசூ டுஞ்சடை வேணியரன்
அன்புயர் பாலகனே!—அமரேசா!
வந்தினி தாவலினு ளுந்தொழு தோகையின்மா
வண்கிரி வாழ்குருவே!—அருளாயோ?

4482. கருக்குழியில் வீழ்த்த
கனத்ததுயர் தீர்த்து—அருளாயோ?
முருக்குஇதழ் வாய்த்த
முகத்தகுற மினுட்கு—மயலாளா!
செருப்புரியு மாவைச்
செயித்தஅயி லாள!—அருளாயோ?
திருக்குலவு சோலை
திகழ்சிகியின் மேரில்—வருதேவே!

4483. மாதர்கள் மயக்க மாகிய கடற்குள்
வாழிட லெனக்கு—விதியாமோ?
தாதவிழ் கடப்ப மாமண மிகுத்த
தார்புனை புயத்த!—வடிவாளர்!
சூதடர் தனத்து வேடுவர் குலத்துத்
தோகையை யணைத்த—மணவாளா!
பாதவ நிரைத்த சோலைநிறை வுற்ற
பார்புகழ் சிகிக்கி—ரியின்நாதா!

---

4480. கழை = மூங்கில்; மகளிரின் தோளுக்குவமை ஆக்கப்படுகிறது. வழையுமிடை = வளையுமிடை; எதுகை நோக்கிளகரம் ழகரமாயிற்று.

4483. வடிவாளா = வடித்தெடுத்த கூர்மையாகிய வாள் ஏந்தியவனே. பாதவம் = மரம்.

4484. பிறையெ யிற்றினர் மனவி டுத்தவர்
பிடிப டுத்திட—வருபோதே
உறைவி டுத்தொளி ரிடுஅ யிற்கொ
டுடனெ னக்குமுன்—வருவாயே.
நறைமி குத்திடு செயக டப்பணி
நலமி கப்புனை—புயநாதா!
சிறைம யிற்குரு பர!யெ னக்கருள்
சிகிம லைக்கொரு—துரைவேலா!

4485. மோது சமர்க்கெதி ராமவு ணர்க்கொல
மூரி அயிற்றொடு—செயவீரா!
மாது குறக்கொடி யானை யணைத்திடு
மாலை தரித்திடு—புயநாதா!
ஏது தரித்திர மேது உடற்பிணி
ஏது வுனைப்பணி—அடியார்பால்
தாது வுகுத்திடு சோலை நிறைத்திடு
சாரல் மலைச்சிகி—வருதேவே!

4486. அருமறை துதிசரண! எனதுடல் பிணிதவிராய்.
அழகுள துரைமுருகா!—கிருபையாளா!
கருவெனு மொருகுழியே விழுவது கருமமயா!
கருணையின் விழியருள்வாய்—அமரேசா!
முருகலர் பொழிறனையே வளரொரு குறமயிலாள்
முனம்வெகு விரகமதாய்—மகிழ்வோனே!
மருமல ரணிபுயவா! மயின்மலை வருகுருவே!
மணியொளிர் முடியரசே!—அருளாயோ?

4487. சகலசவு பாக்கியம்
தனையருள்செய் தந்தை—முருகோனே!
அகமகிழ வாக்கில்
அழகியசொல் லாக்கு—தமிழ்தாராய்.
முகமினிய கோட்டின்
முலையிலகு வெட்டு—வியின்நாதா!
மகபதி யெலார்க்கும்
வரமருள்சி காப்பொன்—மலைவாழ்வே!

---

4484. பிறை எயிற்றினர் - பிறைபோலும் பற்களைப்பெற்ற எமதூதர்கள்.

4485. அவுணர்க்கொல - அரக்கரைக் கொல்லுவதற்காக.

4486. விரகமதாய் - விரகம் கொண்டவனைப்போல.

4488. கலைமதி தரித்த சடைமுடி தரித்த
கருணையுயர் கர்த்த—ரருள்பாலா!
உலைநதி கொதித்தல் எனவரு துயர்க்கு
ஒருவவிழ்த மிப்ப—அருளாயோ?
சிலைநுதல் மிகுப்பெண் குறமயில் புணர்த்த
திருமலர் தரித்த—புயநாதா!
மலையது இடித்த அயிலது பிடித்த
வரத!சிகி மெய்க்கி—ரியின்வாழ்வே!

4489. தேனல ரலங்க லாகிய கடம்ப!
தேவர்கள் நிறைந்து—பணிபாதா!
தானவர் குலங்கள் போகிட அடர்ந்த
தார்பொலிசெய் குந்தம்—விடுசூரா!
ஊனமெ னுடம்பில் நோயது தவிர்ந்து
போகமிக வந்து—அருளாயோ?
வானள வுயர்ந்த சீர்பொழி னிறைந்து
வாழ்சிகி யெனுங்கி—ரியினுதா!

4490. மடக்கொடியர் மயற்கடலில்—விழுவோனே!
அடத்தில்வரு வர்க்குஅயில்—விடுவீரா!
திடப்புயவ! சிறைப்பொன்மயில்—முருகோனே!
தடப்பொழில்கள் தழைத்தசிகி—யில்வாழ்வே!

4491. திதுபுரி சூரன் ஆவியது வோட
தீரவடி வேலை—எயும்வீரா!
மாதுகுற மானை மேவுபுய நாத!
வாசமலர் நீப—மணிமார்பா!
போதுவளர் நாத னுர்பரவு பாத!
போகமுயர் வேல!—முருகோனே!
வாதுலவு சோலை மேகநிரை சேரும்
வாழ்சிகியின் மேரில்—வருதேவே!

---

4488. மலை - கிரௌஞ்சம் என்னும் மலை.

4489. தார்பொலி செய்குந்தம் - மாலைகள் விளங்குகின்ற குருதிதோய்ந்த குத்துவாள்.

4490. 'மடக்கொடியர்' என்பது வள்ளியம்மையார் தேவ சேனையார் ஆகிய இருவரையும் குறித்தது.

4491. போதுவளர் நாதனுர் - தாமரை மலரில் தங்குகின்ற பிரமனுர்.

4492. மான மாகிய பூட ஞதிகள்
மாறி டாவகை—அருளாயோ?
கான மானுட வாசை நாயக!
கார ணு!கிருபை—புரிவாயே.
வான வோர்பணி வேத நாயக!
வாச நீபமென்—மணிமார்பா!
தான வோர்குலம் வீழ வேல்விடு
சாமி தோகையின்—மலைவாழ்வே!

4493. படையெ டுத்துவரு வசுர வற்கொடியன்
படஅ யிற்கொடுயிர்—கொளுவீரா!
நடைமி குத்தமயில் மிசைந டத்திவரு
நகுக டப்பமல—ரணிமார்பா!
விடையி லுற்றசடை முடிய ரற்குநலம்
விளையு நற்புதல்வ!—அருளாயோ?
அடைத ழைத்தகுளிர் பொழில்வ ளைத்தசிகி
அழகு வுற்றமலை—வருதேவே!

4494. வடிவேல் எடுத்து அசுரோன் உடற்கு
வகிர்வாக வெற்றி—புரிவீரா!
குடிவாழ் குறத்தி தனைசேர் கரத்த!
குமரேச! வித்தை—அருள்வாயே.
மிடியோட யிப்ப அருள்தா வெனக்கு
விரைவாக மயிற்ப—ரியில்வாராய்.
அடியார்கள் அற்பி னுறைதோகை வெற்பின்
அரசே! நலத்த—அருள்தாராய்.

4495. கதியின டத்திய மயிலி னலப்பரி
ககன மதின்வழி—வருவாயே.
நிதியையெ னக்கருள் குருபர! அற்புத!
நிசிசரர் மைக்குலம்—கொளும்வேலா!
விதிசெவி யிற்பிர ணவமுரை வித்தக!
விளைவரு ளைத்தரு—வைகுகேசா!
அதிக மலர்ப்பொழி னிரைநிரை யுற்றிடு
அழகு படைத்திடு—சிகிமேரா!

---

4492. மானத்தை அணியாக ஆசிரியர் கூறுவதை முதலடியில் காண்க. கான மான் - வள்ளியம்மையார். வானவோர் - வானுலகத்தினர். தானவோர் - தானவர், அரக்கர்.

4493. அடை தழைத்த குளிர்பொழில் - இலைகள் தழைத்துள்ள குளிர்ச்சி அமைந்த சோலை.

4495. ககனம் - விண். நிசிசரர் - இரவில் சஞ்சரிப்போர்; அரக்கர். மைக்குலம் - தீமை தரும் கூட்டம்.

4496. மாதர சாகிய வேடுவர் நாயகி
மாயம தால்மயன்—மிகுலோலா!
தாதவி ணீபமென் மாலிகை யேபுனை
சாமி!கு கேச!பொன்—மயிலாளா!
கோதசு ரோர்குல நாசம தாய்விடு
கூரயி லா!கிருபை—புரிவாயே.
வாதடர் சோலைக ளேமிகு தோகையின்
மாமலை வாழ்தரு—குகநாதா!

4497. சரச லீலைகள் அதனி லேமிகு
தருண மாதர்கண்—மயலாலே
இரவி லேவிழி துயின டாத்திடும்
எளிய னுனலம்—பெறவாராய்.
அரவு தாதகி புனையும் வேணியர்
அருள்செய் பாலக!—அருளாயோ?
பரவும் யாவரும் நிறைசெய் தோகையின்
பரிய மாமலை—வருதேவே!

4498. சங்கரி திரிபுரை
சந்திர சடாதரி—தருபாலா!
பங்கச முதலினர்
பண்பொடு தான்பணி—குகநாதா!
துங்க மயின்மிசை
தொந்தம தாயருள்—தரவாராய்.
கொங்கலர் பொழினிறை
குன்றையின் மாமலை—வருதேவே!

4499. மனத்துய ரகற்றி மகிழ்ச்சிய தாக்கி—அருளாயோ?
சினத்தவு ணோர்க்கு செயித்தயி லெற்று—செயவீரா!
புனக்கொடி யவரை புயத்தினி லொக்க—அணைவாகா!
கனத்தரு வாய்த்த கமழ்ச்சிசி மேரில்—வருதேவே!

4500. பருவ மதிச்சடை முடியர னுக்கொரு
பணிதரு அற்புத—குருநாதா!
இருவினை யைத்தகர் திருவரு ளைப்புரி
எளிய னிடத்தொரு—தயவாளா!

---

4496. கோதசுரோர் - குற்றம் அமைந்த அரக்கர்.

4498. சங்கரி முதலிய சொற்கள் பார்வதியைக் குறிப்பன.

மருமலர் உற்றிடு புயசயி லக்குக!
மயிலை நடத்திய—செயவீரா!
தருநிறை நற்பொழில் உலவுசி கிக்கிரி
தனில்வளர் வித்தக!—முருகோனே!

4501. பிறையெனு மெயிற்ற ரெமன்வகையி லுற்ற
பிலயிருவர் பக்கம்—அணுகாதே
நறையுள கடப்ப மலரணி புயத்து
நலமயில் நடத்தி—வருவாயே.
சிறைபடு யிருக்கு யுனதுட பதத்துச்
சிறையினி லிருக்க—அருள்வாயே.
மறைமுனிவர் அடியர் அனுதினம் நிறைத்த
மயில்மலை தனக்கு—அரசாளா!

4502. ஆறுமுக வேல! ஆதரவு வேறு—உளதோதான்.
மாறுபடு சூரை மாளவயி லேவு—செயவீரா!
நாறுமலர் நீப! நாதர்குரு நாத!—அருளாயோ?
கூறுபடை யாள! கோலமிகு தோகை—மலைவாழ்வே!

4503. ஒருவ ராலும்வெல முடிவி லாதஅடல்
உயரு மாவைவெலும்—அயிலாளா!
வருவி யாதிதனை யடர்கி லாதுசெய
வரமெ னேருதவி—செய்வாயே.
முருகு லாவுமிதழ் மலரின் நீப!பொருள்
மொழியும் வாயினரன்—புதல்வோனே!
தருவு லாவுபொழி னிறைசி காமலைய!
தருணம் நாயன்முனம்—வருவாயே.

4504. புனக்கொடி மீது புணர்ச்சியி னுசை—மிகுவேலா!
மனக்கொடி தாக வருத்திய நோய்தவி—ரிடுவாயே.
உனக்கினி தான உருக்கொடு நாயன்—முனம்வாராய்.
கனப்பொழில் சூழும் கமழ்ச்சிகி மேரில்—வருவாயே.

4505. அடுத்து வந்தெதிர் படைக்கு முன்சமர்
அடித்த செங்கதிர்—வடிவேலா!
தொடுத்த பைந்துளை தரித்த வம்புய
சுபட்ச விண்டுதன்—மருகோனே!
விடுத்த பைந்துணர் மலர்க்க டம்பணி
மிகுத்த அன்புள—முருகோனே!
தடுத்து எந்தனை யிரட்சி தென்சிகி
தழைத்த குன்றுள—முருகோனே!

---

4503. அடர்கிலாது செய - துன்புறுத்தாதிருக்கச் செய்யுமாறு.

4506. மகம்வி ளைத்திடு முனிவ ரற்பொடு
மலர்த ரித்துடன்—பணிதாளா!
சுகம்வி ளைத்திடு மடவர் இச்சைகள்
துலைவ றச்செய்வை—அமரேசா!
அகம்வி ளைத்திடு படையெ டுத்திடு
அசுர னைக்கொலும்—அயிலாளா!
இகப ரத்தினை அடிய ருக்கருள்
எழில்ப டைத்திடு—சிகிமேரா!

4507. கடைந்த வேல்விழி படைந்த மாதர்கள்
கலந்த ஆசையின்—மெலிவேனோ?
இடைந்த மாதுயர் நெருங்கி டாவகை
இசைந்த தோர்விட—மருள்வாயே.
அடைந்து போகிட அடஞ்செய் குருடல்
அழிந்து வீழிட—விடுவேலா!
குடைந்த சீர்பொழில் நெருங்கு தோகையின்
குளிர்ந்த மாமலை—வருதேவே!

4508. தீவினை யால்வரு பாதக நோயது
தீரிட வேகிருபை—புரிவாயே.
தாழ்வினி லேயலை நாயனை வாழ்கிடச்
சாமியி னுளருள்—புரிவாயே.
காவிய தாகிய பார்வையி னல்வரு
காமம தால்அலை—கிடலாமோ?
வாவிகள் சூழ்தரு தோகையின் மாமலை
வாழ்குரு நாயக!—முருகோனே!

4509. மகிதலத் தவர்க ளெவர்களுக் கெனினும்
மனவருத் தமது—ஒழியாதோ?
விகசிதச் சரண! அடியனுக் கருள
வெகுவருத் தமென—எணலாமோ?
சுகம்விளைத் தநய சரசமுற் றதொரு
சுபமிகுத் தகுற—மயில்தோளா!
முகமலர்ச் சியுடன் எனதிடத் தருள்வை
முதியநற் சிகியின்—மலைநாதா!

---

4508. இனுளருள் புரிவாயே - இந்த நாளில் அருள்புரிவாய். காவி - நீலோற்பலம்; இங்குத் தாரிகையார் கண்ணினைக் குறிக்கின்றது.

4510. மதிநி கர்த்திடு முகம லர்க்கொடி
வனம டக்கொடி—மயலாளா!
மதிமு டித்திடு அரன ளித்திடு
மலர்மு டித்திடு—குகநாதா!
கதியி னைப்பணி அடிய ருக்கருள்
கசமு கத்தவன்—துணையாளா!
நிதியெ னக்கருள் மலரு குப்பொழில்
நிறைசி கிக்கி ரி—வருதேவே!

4511. நாம வன்மலை வேல்இ டித்தெதிர்
நாம ரக்கனை—அடுவோனே!
காம ரக்கணி ஞர்ம ய்ற்புரி
கார ணத்தினின்—மெலிவேனோ?
தாம ரைக்கொரு பூவை யைப்புணர்
சாமி யற்புத—மருகோனே!
மாம ணித்திர ளேபு குத்திடு
வாழ்ம லைச்சிகி—வருதேவே!

4512. நூலா கியயிடை மானார் மயிலியர்
நோகா தருள்புரி—குகநாதா!
பாலா மொழிபயில் வாயாள் குறமயில்
பாகாய்! அடியவர்—பணிபாதா!
மேலா முனிவரர் தாமே துதிபல
வீரா மசுரனை—அடுவேலா!
சூலா கியகுயின் மேலே தவழ்பொழில்
சூழ்தோ கையின்மலை—வருதேவே!

4513. சங்கப் புலவர்கள் தங்கட் கிசைபொருள்
தந்தற் புதமொடு—பகர்வாயா!
வெங்கட் கரியுரி அன்பிற் புனைபவர்
விந்தைக் கௌரியின்—மகவேளே!
துங்கச் சிகியினில் என்பக் கவில்நல
தொந்தத் திமியென—வருவாயே.
திங்கட் பிறைதவழ் குன்றைக் கிரியுயர்
செந்திப் பதிவரு—குகநாதா!

---

4510. மலருகுப் பொழில் - அலர்ந்த மலர்களை வீழ விடுகின்ற சோலை.

4511. நாமவன் மலை - அச்சம் தரும் கிரௌஞ்சம் என்னும் கொடிய மலை.

4512. பாகாய் - பக்கத்தில் உள்ளவனே, சூலாகிய குயின் - கரு நிறைந்த மேகம்,

4514. கறுத்தவிட மிடறினர்
கமழ்த்தசடை முடியினர்—அருள்பாலா!
செறுத்தவசு ரன்முனே
செயிக்கஅயில் தொடுகுகா!—முருகோனே!
மறுத்துபிணி பிறவிமேல்
வளைத்தலது துயரையா!—அறியாயோ?
பொருத்ததொரு பொழில்கள்சூழ்
புகழ்ச்சிகியின் மலையில்வாழ்—குகவேளே!

4515. நஞ்சு வனைத்த மிடறர்
நம்பர் தனக்கு மகவே!—வினையாலே
நெஞ்சுள் உழற்று துயர்தான்
நின்கிரு பைகொ டுடனே—அடுவாயே.
அஞ்சன முற்ற விழியாள்
அஞ்சொல் விளைத்த குறமான்—அணைதோளா!
மஞ்சு தவழ்த்த பொழில்தான்
மண்டு சிகிப்பொன் வரைவாழ்—குகநாதா!

4516. அரகர வெனச்சொல் பயிற்(று) அடியார்க்(கு)
அருளினை விளைத்த—தயவாளா!
கரமலர் பிடித்த அயிலினை யெதிர்த்த
கனவசு ரவனுரு—விடுசூரா!
புரமதுஎரிக்க நகையினை விளைத்த
புனிதர்மகிழ் வுற்ற—புதல்வோனே!
சிரமணி நிகர்த்த முடியது நிரைத்த
சிகிமலையி லற்பு—த!குகேசா!

4517. வஞ்ச கத்தராய் அன்பு வற்றராய்
வம்பு றுப்பரா—கியவோர்பால்
நெஞ்சு ருக்கவே சென்றி ரப்பதே
நின்கு ணத்தினல்—அடுவாயே.
தஞ்செ னக்குவே றின்று விச்சையே
தந்து ரெட்சிவா—குருநாதா!
மஞ்ச டர்த்துநீள் தண்ட லைச்சிகா
வண்கி ரிக்குகா—அருளாயோ?

---

4515. அஞ்சனம் - மை; கண்ணில் எழுதப்படுவது.

4516. அசுரவனுரு விடு சூரா - அரக்கன் உருவத்தில் விடுகின்ற அச்சம் விளைப்பவனே,

4518. துயரி னைக்கெட யருளி னைச்செய்வை
சுகம யிற்குற—மகள்தோளா!
மயல்வி ளைத்திடு பவரி டத்தினில்
வசித லிற்றுயர்—வரலாமோ?
நயமி குத்திடு தமிழி னைச்சொல
நலவ ரத்தினை—உதவாயோ?
தயவு வைத்திடு எனதி டத்தினில்
தழைசி கிக்கிரி—வருதேவே!

4519. மூலத்த டங்களில் அழுந்தி டும்படி
முயங்கு மாசையின்—மெலிவேனோ?
அலைத்து முன்றிட வருத்து துன்பம
தழுக்க நைந்துடல்—மெலிவேனோ?
வலைக்கி சைந்திடு கருப்பு குந்திடு
வருத்த மின்றதை—ஒழியாயோ?
நிலைத்த தண்டலை மிகுத்த குன்றைய!
நினைக்கி சைந்தவன்—எனையாளாய்.

4520. அந்தர துந்துபி
நின்றுமு ழங்கிட
அண்டர்கள் கண்டு
வெருண்டுக லங்கிட—மயின்மீதே
வந்துநின் னன்ன
லந்திக ழும்படி
மண்புவி விண்புவி
யும்புக ழும்படி—அருளாயோ?
கொந்தல ருந்து
கடம்பணி யம்புய!
குன்றையெ னுங்கிரி
தங்கிய சங்கர!—குருநாதா!
எந்த னுடம்பினில்
வரும்பிணி நைந்திட
இன்ப வரந்தரும்
அம்புய செஞ்சர—ண!குகேசா!

4521. அனநடை புரிபவள்
அழகிய குறமகள்—புணர்தோளா!
எனதுடல் அடலினி
இருபிணி அகலிட—அருள்வாயே.

---

4518. வசிதலில் - வசித்தலில்; கலந்து வாழ்தலில். 'தழை சிகிக்கிரி வருதேவே என இடத்தினில் தயவு வைத்திடு' என நான்காம் அடியைக் கூட்டுக.

4521. 'வனமயிலியர்-அழகிய மயில் போன்ற சாயல் பெற்ற மகளிர்,

வனமயி லியர்தரு—மயலினின்
மனமது—உழல்வேனோ?
தினகரன் நிகர்முடிச்
சிகிமலை தனில்வரு—குகவேளே!

4522. இருவினையாம் பிழையகல
இனியுடல்தான்—மெலிவேனோ?
மருமலர்சூ டியபுயவா!
மயிலினிலே—றியநாதா?
செருவினிலே மிகுவசுரோன்
தெறிபடவே—அடுவேலா!
 தருநிறைதோ கையின்மலையாய்!
தனிமுருகா!—அருள்வாயே.

4523. வனசத்தினில் வளர்வுற்றபொன்
மகளைப்புணர் விறன்மாயோன்—மருகோனே!
மனமுற்றிடு விசனத்தினை
வளர்செய்வ தெதனாலோ?—அறியேனே.
உனதற்புத மலருக்கிணை
உபயச்சர ணமதேதா—னருளாயோ?
கனகக்கிரி நிகர்உற்றிடு
கமழ்நற்சிகி மலைமீது—வருதேவே!

4424. பத்தர்கள் பக்கமுன்
பத்ம விழிக்கடை
புரியாத—தெதனாலோ?
மத்தக முற்றிடு
வற்கு கர்த்திடு
தனமாதர்—மயலாலே
மெத்த மயக்கிய
மித்திர மதுக்கொரு
பொருளான—தருளாயோ?
புத்தரை வெற்றிகொள்
பொற்சிகி மெய்க்கிரி
முருகேச!—அருளாயோ?

4525. இருவினையான் மனமதுதான்
இனியுருகா—தருள்புரிவாய்.
மருவுளநீ பமலராய்
மலிதருமா—லிகைபுனைவாய்!

---

4523. மலர் - தாமரை, உபயச் சரணம் - இரண்டு திருவடிகள்.

ஒருபொழுதா கிலுமுளமே
உனைநினையா—வகையுளதோ?
கருமுகிறு வியபொழில்சூழ்
கனசிகிமா—மலையரசே!

4526. மாது குறத்தி பாகம்
மாலை மிகுத்த லோல!—அருளாயோ?
தாது நிறைத்த நீபத்
தார்கள் தரித்த மார்ப!—எதிரானோர்
கோது மிகுத்த சூரைக்
கூர்பட வெற்றி வேலை—எயும்வீரா!
மோது பொழிற்கள் யாவும்
மூடு சிகிப்பொன் மேரில்—வருதேவே!

4527. சகல மானபரி சனர்கள் சூழமயில்
தனின்மு னகவரு—குமரேசா!
மகர மானயிரு விழியி னள்குறமின்
மருவு நாத!அருள்—புரிவாயே.
இகல்செய் சூருடைய படையெ லாமதிர
எதிர தாகஅயில்—தொடுசீரா!
சிகர மேவுபொழில் மதியை மேவுகன
சிகியின் மேரில்வரு—குகநாதா!

4528. அமரர்சிறை மீட்டு
அசுரர்குலம் ஓட்டு—அயில்வீரா!
எமனுடைய ஆட்கள்
இனியணுகல் மோட்சம்—அதுவாமோ?
குமரிகுற நாச்சி
குவிமுலையில் வீழ்த்த—மயலாளா!
கமழும்மலர் பூத்த
கனபொழில்கள் சூட்டு—சிகிமேரா!

4529. ஆகாத முழுமூட ரானோர்க ளிடமோடி
ஆதாயம் இனிநீசெய்—எனலாமோ?
மாகாதி பதிசூழும் வானோர்கள் பணிபாத!
வாதாடு அசுரோனை—அடுவேலா!

---

4527. பரிசனர்கள் - உடனிருப்போர். மகரம் - மீனில் ஒரு வகை. இகல் - முரண்பாடு. சிகரம் - மலை உச்சி.

4528. குற நாச்சி - வள்ளி நாச்சியார்.

4529. ஆதாயம் - நன்மை, மாகாதிபதி-விண்ணவர் தலைவனாகும் இந்திரன்,

பாகான மொழிமாத ராலேறு மயலாசை
பாசானி தனில்விழல்—விதிதானோ?
வாகான பொழில்சூழு சீர்தோகை மலைநாத!
மாதேவ! குருநாத!—அருளாயோ?

4530. மோக மிகுத்த மாதர் பயிற்று
மோடி தனக்கு—மெலிவேனோ?
பாக மிருக்கும் வேடர் வளர்த்த
பாவை கொடுத்த—மயலாளா!
கோக னத்தின் வீடுறை பொற்பின்
கோல மயிற்கு—மருகேசா!
மாக முயர்த்த சோலை நிறைத்த
வாச மிகுத்த—சிகிமேரா!

4531. பாதக வினையா லேதுய ருடனே
பாவிய னெனவே—அலைவேனோ?
தாதவிழ் மலரே தான்வில கியதோர்
தாள்தெரி சனமே—புரிவாயே.
வாதட ரெமனர் பாசம தனிலே
மாளிட விதியோ?—குருநாதா!
காதலி குறமான் மேவிய புயவா!
கார்தவழ் சிகிமா—மலைநாதா!

4532. அரும்பை நிகராக இலங்கு மெயிர்மார்
அலங்கி ருதரூப—மதனாலே
குரும்பை முலையான இரண்டு அதினாலுங்
குவிந்த துளமாலும்—மெலிவேனோ?
துரும்பை நிகர்நாய னிடஞ்சல் தவிராதல்
துலங்கு குமரேச!—அறியேனே.
கரும்பை நிகராக இலங்கு மொழிவாய!
கமழ்ந்த சிகிமேரில்—வருதேவே!

4533. ரஞ்சித மடவார் தந்திடு மயலால்
நைந்திட வருநோய்—தவிராயோ?
பஞ்சினு மெலிதாய் கின்றிடு சரணா!
பங்கச வதனா!—அருளாயோ?

---

4530. கோகனகம் என்பது கோகனம் எனக் குறைந்தது.

4531. 'மகரந்தத்தாது பொருந்திய மலரும் இணை கூற முடியாத நின்னிரு திருவடிகளை வணங்குமாறு அருள்புரிவாய்' என்பது இரண்டாவதடியின் பொருள்.

4532. இடஞ்சல் - இடையூறு.

அஞ்சிய வசுரோன் வந்திடு படையோ
டவிந்திட அயிலே—வியசூரா!
மஞ்சிகள் தவழ்சூழ் தண்டலை நிறைசீர்
மன்றல்கொள் சிகிமா—மலைநாதா!

4534. மனதா சையினல் மடவா ருடனே
மயலான் மெலிவா—கிடலாமோ?
அனமா கியதோர் நடையே புரியும்
அழகா கியவே—டமின்வாகா!
சினமா வுடனே அடல்தான் மிகவே
செருவேல் விடுசூ—ர்குகேசா!
கனகா சலமே நிகரா கியதோ
கையின்மா மலையா!—அருளாயோ?

4535. இருவகை மனத்து மறிபடு குணத்து
இசைவில மடப்பெண்—மயலாலே
வருதுயர் தவிர்த்து நலமதை எனக்கு
மகிழ்வொடு சிறக்க—அருள்வாயே.
அருமையுள பத்த னிவனென நினைத்து
அழகிய மயிற்ப—ரியின்வாராய்.
குருமணி இமைத்த சிகிமலை யுற்ற
குக!குளிர் கடப்ப—மலர்மார்பா!

4536. மாறு பட்டமன மாத ருக்கிசையும்
மாம யக்கினிதம்—உழல்வேனோ?
கூறு பெற்றஅயி லால்து ரத்தியொரு
தோது பெற்றவுணை—அடுசூரா!
தேறு நற்றமிழை நாய னுக்கருள்வை
சேவ கத்திலுயர்—பெருமானே!
மீறு மைப்பொழில்கள் தான்வ ளைத்துநிதம்
மேவு மெய்ச்சிகியின்—மலைநாதா!

4537. அண்டர்கள் வந்துடன்
அன்பொடு பணிதரு—இருதாளா!
தொண்டர்கள் பங்கினில்
துன்பறுத் திடுசெயல்—அருள்வாயே.
வண்டவு ணன்றனை
மங்கிட வயில்கொடு—வெலுசூரா!
எண்டிசை யும்புகழ்
எங்கள் சிகிமலை—வருதேவே!

---

4534. சினமா - வெகுளியுடைய மாமரமாகிய அரக்கன்.

4535. 'பெண்' என்ற சொல் பெண்ணினத்தைக் குறித்து நிற்கின்றது. குருமணி - முழு ஒளி அமைந்த ஒளிக் கல்.

4538. எனதாசையின் அதுபோலவும்
இனிதாகிய—அருள்தாராய்.
பனகாசனன் முதலோர்முதல்
பணியேபுரி—இருதாளா!
அனமேநிகர் நடையேபுரி
அழகா!குற—மயில்தோளா!
கனகாசல நிகராகிய
கமழ்தோகையின்—மலைநாதா!

4539. கடப்பமலர் மேவு கந்த! முரு கேச!
கனத்தபிணி தீர—அருள்வாயே.
மடக்கொடியார் வேடர் மகள்அழகு மாலை
மகிழ்ச்சியொடு சூடு—புயநாதா!
அடத்தில்வரு சூரை எதிர்த்தபடை யோடு
அழித்துநல மேசெய்—குகவேளே!
திடப்பொழில்கள் சூழு சிகிக்கிரியின் வாச!
செகத்தடியர் தேவர்—பணிபாதா!

4540. வஞ்ச ரக்கரை மிஞ்சு படைத்திரள்
மங்க அடித்திடு—அயிலாளா!
நஞ்ச மிருக்கிற கண்டர் தனக்கிசை
மங்கை யுமைக்கொடி—புதல்வோனே!
தஞ்ச மெனக்கு என்று சொலச்சொல்
தன்தய வித்தனை—புரியாயோ?
கஞ்ச மலர்ப்பத! எந்தனைக் கொண்டருள்
கங்குல் தவழ்ச்சிகி—மலைவாழ்வே!

4541. கூறுபடு வேல்கொடெதிர்
கூடிவரு சேனைவிழ—அடுவோனே!
மாறுபடு மாதர்தரு
மாமயலி னுன்மெலிய—னயமாமோ?
சீறுபடு நாகமணி
தேவர்மக தேவர்அருள்—புதல்வோனே!
மீறுபொழில் சூழநிறை
மேன்மைமிகு தோகைமலை—வருதேவே!

---

4541. தேவர் மகதேவர் - தேவர்கள் போற்றும் பெருங்கடவுளாகிய சிவ பெருமான்.

4542. செங்கம லத்திறை உம்பர்த னக்கிறை
செந்திரு வுக்கிறை—பணிபாதா!
சங்கரி பெற்றிடு அன்புள புத்திரர்
தந்தி முகற்கிளை—யகுகேசா!
தங்க அயிற்கொ டெதிர்ந்து எதிர்த்திடு
தந்திர முற்றிடு—செயவீரா!
தங்க மலைக்கெதிர் குன்றை மலைத்துரை!
தன்கிருபை யேஅருள்—புரிவாயே.

4543. செனகன் மகட்கு மயலை விளைத்த
செயவிற லுக்கு—மருகேசா!
உனது பதத்தை நினையு மெனக்கு
உறுதியை யிப்ப—அருளாயோ?
எனதுட லிற்கு வருதுய ருக்கு
இனிய மருத்து—தனைதாராய்.
தினகர னுக்கு நிகர்முடி யுற்ற
சிகியின் மலைக்கு—அரசாளா!

4544. வலிய விருப்பு வார்கள்
கபடு நடத்து வார்கள்
மனதை யுருக்கு வார்கள்—மடமானர்
மலியு மயற்குளாக
மனதை யகப்ப டாது
வகைவிப ரத்தை நீயும்—உதவாயோ?
மெலிய வருத்து நோயை
உடலி லிருத்தி டாது
விதியென விட்டி டாது—அருளாயோ?
குலிசன் மகட்கு மாலை
தருகுக! அற்பு தா!விண்
குலவு சிகிக்கி ரீச!—கிருபைதாராய்.

4545. பருத்ததிரு குடத்தைநிகர்
பணைத்ததன மடக்கொடியர்—மயலாலே
வருத்தமிக உற்றதுயர்
மடித்துவிட அருட்புரிவை—குகநாதா!

---

4542. செங்கமலத்திறை - பிரமன். உம்பர்தனக்கிறை - இந்திரன். செந்திருவுக்கிறை - திருமால்.

4543. செனகன் - சனகன்; அவன் மகள் சானகி.

4544. மலியுமயல் - மிக்க காதல் மயக்கம். குலிசன்-குலிச ஆயுதத்தை ஏந்திய இந்திரன்; அவன் மகள் தேவசேனை.

மருக்குலவு கடப்பமெனு
மலர்ப்புயவ! எனக்கருள்செய்—குமரேசா!
தருக்கள்பொலி பொழில்கள்நிறை
தழைத்தசிகி மலைக்கரசு—புரிதேவே!

4546. சமரஞ்செயும் அவுணன்றனை
தலைவென்றிடு—அயிலாளா!
நமன்வந்திடு முனம்அன்பொடு
நலம்வந்தருள்—புரிவாயே.
தமர்கண்டொடு புகழும்படி
தமியன்றனை—அணியாளாய்.
பமரங்கொளு முயர்தண்டலை
படியுஞ்சிகி—மலைவாழ்வே!

4547. சங்கரி தருபுதல்வா!
தந்தித னொருதுணைவா!—அருளாயோ?
துங்கநல் மயின்முருகா!
சொந்தநி னடியவர்பால்—வருவாயே.
பங்கச இருசரணு!
பந்திணை முலைகுறமான்—மகிழ்தோளா!
திங்கள் தவழ்முடிசேர்
தென்சிகி மலையரசே!—கிருபைதாராய்.

4548. ஒருமாதர்கள் தருமாவினில்
உழலாவகை—புரிவாயே.
கருவாகிய குழிவீழிடல்
கடியாவகை—ஒதுக்கிடுவாய்.
அருமாமறை புகழ்நாயக!
அசுரோன்விழ—அடுவேலா!
கருமாமுகில் தவழ்சோலைகள்
கமழ்தோகையின்—மலைவாழ்வே!

4549. அனநடை நடக்குங் கிளிமொழி பயிற்றும்
அழகிய குறப்பெண்—மயலாலே
வனமதி லிருக்கும் குறவர்கள் குடிக்குள்
மரமென முளைத்த—கபடாளா!
எனதுட லுற்ற பரமுழு வதுக்கும்
இடர்செய்வை சித்திர—மயிலாளா!
கனப்பொழில் வளைத்த சிகிமலை யிலுற்ற
கருணைபுரி கரத்த!—அருளாயோ?

4549. வேலன் வேங்கைமரமாக நின்ற கதை இரண்டாவதடியில் குறிக்கப் படுகிறது.

4550. நாலாயிரத்து நானூற்று
நாலா விதத்து நோயாலே—சுகமிலாதே
மாலாய் மயக்கு மானுர்க்குள்
வாழ்வே னெனச்சொல் சூதாலே—மெலிவேனோ?
மேலா யிருக்க நாயேற்கு
வேளே! அருட்செய் வாய்கீர்த்தி—முருகோனே!
வேலா யுதத்தை எதிரிக்கு
மேலே தொடுத்த சீர்வாய்த்த—சிகிமோர!

4551. நடனம்புரி மயிலின்பரி
நகுசெங்கதிர்—அயிலோடே
குடரெண்டிணை தனமங்கையர்
குலவும்படி—வருவாயே.
கடமுந்திய களிறின்றுணை
கமழுஞ்செய—மலர்நீபா!
தடமிஞ்சிய பொழில்கொண்டிடு
தகுகுன்றையின்—மலைவாழ்வே!

4552. மருவிதழ் கமல
மலர்மகட் குரிய—மருகேசா!
பொருசுரற் கிகல்செய்
புதியநற் கதிரின்—அயிலாளா!
அருமறைப் பொருளும்
அறிவதற் கரிய—முதலாளா!
திருமலர்ப் பொழில்கள்
திகழ்சிகிக் கிரியின்—அரசாளா!

4553. வஞ்ச அரக்கனை
மண்டு படைத்திரள்—உடனேதான்
அஞ்ச அடித்திடு
அண்டர் நலப்பட—வருதேவே!
பஞ்ச வனச்சிறை
பண்பின் நடத்திய—மயிலாளா!
கஞ்ச மலர்ப்பத!
கண்டுளர தவழ்சிகி—மலைவாழ்வே!

4554. தரித்திர மதனுல் உனக்கடி யவர்தான்
சகத்தினி லுழலா—தருள்வாயே.
சிரித்துடன் எதிர்முப் புரத்தெரி படவே
செயித்தவர் அருள்பா—லக!வேளே!

மரித்திட வருகா லரைப்பொடி படவே
வருத்திநி னடியே—உதவாயோ?
விரித்திடு ஒளிசேர் முடிச்சிகி மலைமேல்
விருப்பொடு அரசாள்—குமரேசா!

4555. சுகலீலைகள் புரிமாதர்கள்
சுயவாழ்வினின்—மெலிவேனோ?
மகவான்முதல் இமையோர்முனி
வரரேபணி—புரிபாதா!
இகல்தானவர் குலமாவுடல்
இடரேசெயும்—அயிலாளா!
குக!காரண! குருநாயக!
குளிர்தோகையின்—மலைவாழ்வே!

4556. மாதர்ம யக்கிய மோடிவ லைக்குளில்
மாலின் அகப்படல்—நலமாமோ?
சீதம திச்சடை வேணியர் புத்திர!
தேவர்கள் பத்தர்கள்—பணிபாத!
தாதவிழ் பொற்கம லாசனன் நற்குரு
சாமி!யெ னக்கருள்—புரிவாயோ?
சூதமு தற்றரு யாவுமி கப்பொழில்
சூழ்தரு மிச்சிகி—மலைவாழ்வே!

4557. எந்தவி தத்திலும் எந்தனு டற்கொரு
இன்ப மெனக்கருள்—புரிவாயே.
பைந்தமி ழைச்சொலு மன்பர்ம னத்துயர்
பஞ்சென அப்படி—அருளாயோ?
உந்தன டித்துணை கொண்டிடு பத்தர்கள்
உண்பது டுத்துதல்—கெடலாமோ?
கொந்தல ருற்றிடு பைம்பொழில் மொய்த்திடு
குன்றைம லைக்குரு—பரவேளே!

4558. பவளத்தை யொத்தசடை
பரமர்க்கி சைத்தஉமை—தருபாலா!
கவளக் களிற்றின்முகன்
கருணைத்து ணைக்குமர!—குருநாதா!
தவளப்பி றைப்பலுள
தயவற்றி ருக்குமெம—படராலே
கவலைப்ப டுத்துமுனே
கமலப்ப தத்தையருள்—சிகிமேரா!

4559. படஅரவின் உயர்முடியில்
படபடென திமிதிதிமி—எனவேதான்
நடனமிடு மயிலின்மிசை
நலமுலவ அடியன்முனம்—வருவாயே.
திடமுடைய அசுரன்உடல்
தெறிபட நுனைஅயிலை—விடுசூரா!
வடவரையை நிகரவரு
மயில்மலையின் அரசுபுரி—பெருமானே!

4560. மதுமலர் மாலை தரித்த
வளர்குழன் மாது குறத்தி—புணர்தோளா!
சதுமறை யோர்கள் துதித்த
சரவண நாத! எனக்கு—அருளாயோ?
பதுமமென் வீடு படைத்த
பருவமின் மாது தனக்கு—மருகேசா!
விதுதவழ் சோலை நிறைத்த
வினையொளிர் தோகை மலைக்கு—அரசாளா!

4561. மாறு பட்டிடு சூர னைக்கொல
வாது பட்டெதி—ருடனேதான்
கூறு பட்டிடு வேலை விட்டிடு
கோல முற்றிடு—மயில்வீரா!
தேறு நற்றமிழ் பாடும் வித்தைகள்
தேறி டக்கிருபை—புரிவாயே.
மீறு மைப்பொழில் சூழும் நற்சிகி
மேரில் உற்றவ!—குகநாதா!

4562. குறைப டுத்திட உடலி னுக்குளே
குலவு துட்டமை—நோவாலே
பிறைம திக்கிணை நுதலி யர்க்குளம்
பிரிய முற்றிட—வாழ்வேனோ?
அறைக முற்கன அசுர னைக்கொல
அயிலி னைத்தொடு—பெருவீரா!
முறைநி றைத்திடு பொழில்க ளுற்றிடு
முதிய மெய்ச்சிகி—மேரானா!

4563. கமலசர ணத்தை மகிழ்வொடு துதித்த
கருணையடி யர்க்கு—அருளாளா!
சமரவசு ரர்க்கு ளுயர்பவ னுயிர்க்கு
தகுஅயிலை விட்ட—செயவீரா!

குமரியிரு வர்க்கு மயலினைவி ளைத்த
குக!குமர வித்தை—அருளாயோ?
அமரர்முனி வர்க்கு மிடியதுத விர்த்த
அழகியசி கிப்பொன்—மலைவாழ்வே!

4564 குருட்டு விழியாக மயக்கி விடுமாதர்
கொடுத்த மயலாலும்—அவராலும்
வருத்தம் மிகவாகி மிகுத்த துயராகி
மதிக்க அறியாது—திரியாமல்
உருத்து இவனுக மனத்தி லெணியாகும்
உரச்சி கியிலேறி—வரவேணும்.
திருத்த முளகோடு நிரைக்கு நிரைநீடும்
சிகிக்கி ரியினுளும்—வருதேவே!

4565. வண்டணி குழற்குற
மங்கையின் மயற்கிசை—வடிவாளா!
தண்டமிழ் சொலற்கருள்
தந்தினி நலத்தினை—உதவாயோ?
வண்டனசு ரைக்கொல
மண்டுகதிர் சத்தியை—விடுசூரா!
கொண்டல்படி மைப்பொழில்
கொண்டசிகி மெய்க்கிரி—வருதேவே!

4566. உனது பதமலர் தனையே மனதினில்
உறுதி யெனநினை—அடியேன்யான்
மனதில் வருதுயர் துகளு படவருள்.
மயிலில் வருகுரு—பரவேளே!
வனச மலருறை அயனு மிமையவர்
மனுமு தலியர்கள்—பணிபாதா!
கனக மயமுள சிகியின் மலைவரு
கருணை முருகைய!—அருளாயோ?

4567. சமரஞ்செயும் அவுணன்றனை
தகவென்றிடு அயில்கொண்டுடன்—வருவீரா!
எமன்வந்திடு முனம்வந்தருள்
இலகுஞ்சிகி மலைவந்திடு—குகநாதா!

---

4564. 'விழிகுருடாக மயக்கிவிடு மாதர்' என இயைக்க.

4565. கதிர்சத்தி - ஒளியமைந்த வேல். கொண்டல் - மேகம்.

4566. துகள் என்ற சொல் 'உ' கரச்சாரியை பெற்றுத்'துகளு' என வந்தது.

4567. மூன்றும் அடியின் இரண்டாம் சீர் சிதைந்தது.

தமர்வந்தழ ........
தழல்வெந்துடல் அழியும்படி—வரலாமோ?
கமழ்தண்டலை நிறைகின்றபொன்
கவருஞ்சிகி மலைவந்திடு—குருநாதா!

4568. முந்திய தீவினை யதனல்
முன்செய்த பாதக மதனல்—வருநோயால்
நொந்திட வேஉடல் மெலிவாய்
நும்பத மேவினி யனுகா—தலைவேனே?
தந்திமி னனனர் துணையா!
சங்கரி மாதுமை புதல்வா!—அருளாயோ?
அந்தியின் மாமதி தவழ்சீர்
அந்நலம் சேர்சிகி மலைமேல்—வருதேவே!

4569. மனது விட்டிட உடல்சி றுத்திட
வருது யர்க்கடல்—முழுகாதே
உனது அற்புத தயவு முற்றிய
உயர ருள்கடல்—முழுகேனே?
வனச லட்சுமி புணர்ப வர்க்கொரு
மருக! நற்பதம்—உதவாயோ?
கனக நற்கிரி நிகர்சி கிக்கிரி
கருணை யுற்றிடு—குமரேசா!

4570. மாத வம்புரி வீர வெஞ்சுரை
மாறி டும்படி—தொடுவேலா!
சீத சந்திர வேணி சங்கரி
தேவி யம்பிகை—தருபாலா!
நாத! அன்பரின் நோவை யுந்தவிர்
நாத! அன்புடன்—அருளாயோ?
ஆத வன்பிரபை சேர்கொ டுங்கிரி
யான மாமயில்—வருதேவே!

4571. நாடகம் நடத்து தாளினர் தமக்கு
நாள்தொறும் மகிழ்ச்சி—யுளபாலா!
ஏடவிழ் கடப்ப மாலிகை தரித்த
ஈராறு புயத்த—முருகேசா!

---

4568. அந்நலம் - அழகு நலம்.

4570. மாதவம்புரி வீரவெஞ்சுர் - பெருந்தவம் புரிந்த வீரம் அமைந்த கொடிய சூரன். சீதசந்திரன் - குளிர்ச்சி அமைந்த சந்திரன்.

4571. 'கூத்தரசனாகிய நடராசன் நாடகம் நடத்து தாளினர்' எனப்பட்டார்.

வேடர்கள் வனத்தி லேவளர் குறத்தி
மேன்மயன் மிகுத்த—வடிவாளா!
ஆடகம் நிறைத்த கோடுக ணிறைத்த
ஆகிய சிகிக்கி—ரியின்வாசா!

4572. வஞ்சனை மிகுத்த சூரன்
மண்டிய படைக்கெ லாமும்—விடுவேலா!
அஞ்சன நிகர்த்த பார்வை
அம்பிகை மகிழ்ச்சி யான—புதல்வோனே!
கஞ்சனை யடர்த்த வீரன்
கங்குலின் நிறத்த மாயன்—மருகோனே!
மஞ்சமர் முடிச்சி கியாம்
வண்கிரி யுற்ற தேவ!—குகநாதா!

4573. மடக்கொ டியர்ஆசை
மடுக்கு ழியில்வீழல்—விதியாமோ?
படத்த ரவுசூடு
பரமர்க்கு உளமான—புதல்வோனே!
திடத்தில் எதிர்சூரன்
தெரித்து விழுவேசெய்—அடுவேலா!
தடப்பொ ழில்கள்சூழுந்
தழைத்த சிகிமேரில்—வருதேவே!

4574. எடுத்த செனனம் அதற்கு நலமும்
எனக்கு நலமும்—உதவாயோ?
தொடுத்த கரும வினைக்கு இடமுன்
தொலைத்து அதனை—விலகாயோ?
படுத்து பிணியை யகற்றி நினது
பதத்தில் அணுக—அருளாயோ?
விடுத்து மதுவை உகுக்கு பொழில்கள்
மிகுத்த சிகியின்—மலைவாழ்வே!

4575. விற்கிணை யுற்றிடு
நற்புரு வத்தினர்
வித்துரு மத்தினை
ஒத்தித ழுற்றிடு—மடமானர்
புற்புத மொய்த்திடு
கெட்டம யக்குசெய்
பொய்க்கடு மைக்கொடு
மைச்சொல்ம யக்கினின்—மெலிவெனோ?

அற்புத மொத்திடு
பதத்தரு ளைப்புரி
வைகுக! முத்தி
அளித்தருள் வித்தக!—முருகோனே!
நற்பொழின் மொய்த்திடு
மெய்ச்சிகி மைக்கிரி
நத்திய கர்த்த!
எனக்கு நலத்தினை—உதவாயோ?

4576. கோகன கத்தின ளானகு றக்கொடி
கோலம தற்கிசை—வடிவாளா!
சாகர விற்சமு சாரம திற்புரி
தாழ்வை யகற்றிந—லருள்தாராய்.
பூக மதில்தட வாளை உதைத்தெழு
பூவள முற்றிய—நயநேமா!
மாக முயர்த்திடு சோலைநி றைத்திடு
வாசம விச்சிகி—மலைவாழ்வே!

4577. பதும பதத்தினை நிதமும் நினைத்திடு
பவர்கள்த ரித்திரம்—அறுதீராய்.
சதுமறை யைச்சொலும் அயனரி ருத்திரர்
சகலர்து தித்திடு—கிருபையாளா!
பதுவித முற்றிடு உரைசெய் கடப்பணி
பணிமிகு நற்புய!—முருகோனே!
விதுதவழ் மைப்பொழில் நிறைசிகி மெய்க்கிரி
மிகஅரு ளுற்றிடு—குகநாதா!

4578. நாட கத்தொழி லேந டத்திய
நான்ம றைப்பொருள்—முதலானோர்
ஆட கக்கிரி யீசர் நற்கரு
ணைநி திக்கொரு—புதல்வோனே!
வேடர் மெய்க்குற மாதி னுக்கொரு
மேன்ம லர்த்தொடை—அணிபாதா!
ஏட விழ்த்திடு பூம லர்ப்பொழி
லேநி றைத்திடு—சிகிமேரா!

4579. முந்திய பழவினையால் நொந்திட வருதுயரால்
மொய்ம்பது தவிறிடவே—அலைவேனோ?
தந்திமி திமியெனவே நின்றுட னடைபயில்வோர்
திண்சிகி மயின்மிசையே—றியவீரா!

---

4575. நத்திய - விரும்பிய. கர்த்த - தலைவனே.
4579. மொய்ம்பு - வன்மை.

வந்திரு வடிபணிவோர் தன்துயர் விலகிடவே
வண்பொரு ளொருபொருணீ—உதவாயோ ?
மந்திகள் மிகுகுதிபோ டும்பொழி னிறைசிகியா!
மன்கிரி வருமுருகா!—அருளாயோ ?

4580. நாடியபடி தானென்முனொரு
நாழிகை தனில்—அருளாயோ ?
வாடிடயெதிர் தானவர்குலம்
மாளிடவயில்—தொடுவீரா!
பாடியபுல வோர்மிடிதவிர்
பார்வதிதரு—புதல்வோனே!
சூடியபொழில் சூழ்தரவளர்
தோகையின்மலை—முருகோனே!

4581. வனச லெட்சுமி மருவும் மற்புய
மதும லர்த்துளை
அணிமாயோன்—மருகோனே!
தினக ரப்பிரபை நிகர்நி றக்குக!
செயக டப்பணி
புயவேளே!—அருளாயோ ?
சினமி குத்திடு படையெ டுத்திடு
திறமி குத்திடு
வசுரோன்மேல்—விடுவேலா!
கனக மெய்க்கிரி நிகர்சி கிக்கிரி
கருணை யுற்றிடு
முருகோனே!—முன்வாராய்.

4582. ஐந்துவகை யாசையால்
அங்கமது நோகவே—அலைவேனோ ?
நொந்துவிழு நோயினென்
நும்பதமி லாமலே—அலைவேனோ ?
பைந்துணரி னீபனே!
பங்கசமி னளினள்—மருகோனே!
சிந்துவளை நேமனே!
திங்கடவழ் தோகைமா—மலைவாழ்வே!

4583. மாயாவி னேதை வாழ்வான ஆழி—விழலாமோ ?
காயாவ தான கார்மேனி மாயன்—மருகோனே!
ஓயாத நோயி னூடேள ழாம—லலைவேனோ ?
செயாகு கேச! தேவேசி காதல்—மலைவாழ்வே!

4584. மனத்தினி லுதித்த
துயரதை விலக்கி
வரமதை எனக்கு—உதவாயோ?
அனநடை படித்த
இருபத மயிற்பெண்
அழகிய குறத்தி—புணர்தோளா!
சினவசு ரனுக்கு
வருபடை அளித்துச்
செயமிக அயிற்கொ—டையும்வீரா!
கனகம லையைச்ச
ரிசொலு சிகிப்பொன்
கமழ்மலை யுற்ற—குகவேளே!

4585. வந்ததீவினை தீர்த்து
வந்தெனை ஆட்கொள்—குகநாதா!
சந்தமது சேர்த்த
தண்டமிழ்ச்சொல் வார்க்கு—முருகோனே!
பைந்துணர்கள் வாய்த்த
பைம்பொழில் சூழ்ந்த—சிகிமேரா!
அந்தமறை யோர்க்கும்
அண்டர்முனி வோர்க்கும்—உயர்தேவே!

4586. வருந்தீவினை யதனாலுடல்
மடிவாய்விட—விதியாமோ?
தருநாயகர் அருள்மாமணி
தனைமேவிய—புயநாதா!
அருமாமறை புகழ்நாயக!
அடியேன்மிடி—தவிராயோ?
கருமாமுகில் தவழ்சோலைகள்
கமழ்தோகையின்—மலைவாழ்வே!

4587. ஆவி போகுமுனே
ஆவ லாயென்முனே—வருவாயே.
தேவி மாதுமையாள்
சேயே! சேவகனே!—அருளாயோ?
பாவி யானமிடி
பாரி லோடிடவே—அருளாயோ?
தூவி சோலைகள்சூழ்
தோகை மாமலைவாழ்—குகநாதா!

4588. வீலையி னுலவர் மாய்கையி னுன்மனம்
நேசம தாய்அலே—கிடலாமோ ?
வாலமி னுளென கேவல னேயென
மாயம தேசெய—விதிதானே?
காலையின் வானவ னேகிக ராயொளி
கால்திரு மேனியின்—முருகோனே !
சோலைகள் சூழ்தரு மாமுடி மேவிய
தோகையின் மாமலை--வருதேவே !

4589. நாடக நவிற்று பாதர்
பாகம திருக்கு மாது
நாயகி தனக்கு வாசை—மகவேளே !
தோடலர் குழற்பெ ணூர்க
ளால்வரு மயக்க மான
சோகமதின் மெத்தவாட—விதியாமோ?
வேடர்கள் குலத்து மாதைச்
சேரிட வனத்தி லோடி
மேல்கள வுற்ற வாசை—முருகோனே !
ஆடக நிறத்த கோடு
உலாவிய சிகிக்கி யீச !
ஆதரவு எனக்கு வேண தூ—அருள்வாயே.

4590. இருவர் காலர்கள் வருமு னேஎன(து)
இருக ணீர்மழை—பொழியாதோ ?
தருவி னீழலில் அரச னுனவன்
தருமி னுள்புணர்—புயநாதா !
உருவி லாளனுட மயலி னுன்மனம்
உருகி டாவகை—புரியாயோ ?
குருகு லாவிய தடமெ லாநிறை
குளிர்சி காமலை—வருதேவே !

4591. நானம் உற்றகுழ லார்க யத்தின்மய
லான்ம யக்கமுற—விதியாமோ ?
கான கத்தின்வளர் வேடர் பெற்றதொரு
காரி கைக்கிசையும்—வடிவாளா !

---

4590. முருகனை நினைத்து நெக்குருகி நெஞ்சம் கனிதலால் கண்கள் மழை போல் நீரினைப்பொழியும் என முதலடியின் கருத்தாகக் கொள்க,

தான வர்குலமெ லாம ழிக்கவரு
சாமி! சித்திரமயில்—மிசைவாராய்.
வான முட்டவுயர் சோலை யுற்றசிகி
மாம லைக் குமர!—குருநாதா!

4592. தாதுள நீப மாமணா மேவு
தார்மலி மார்ப!—அருளாயோ?
பாதக மான நோயது தீர
பார்வைகொ டாசை—யொடுபோராய்.
மாதய வாக வேமயில் மீது
மாதிரு பேர்க—ளுடன்வாராய்.
சீதள சோலை சூழ்சிகி யான
சீர்மலை வாழும்—முருகோனே!

4593. விடத்தை அணிமிடறர்
விருப்ப மிகுவுமையா—ளருள்பாலா!
கடத்தை நிகர்முலையாள்
கருத்தின் வழிதரியா—தருள்வாயே.
வடத்தின் விழிதுயில்வோர்
மருத்து ஊகொள்புயனர்—மருகோனே!
தடப்பொழில் வளைசீர்
தழைத்த சிகிமலைமேல்—வருதேவே!

4594. ஆடரவு தரித்த நீடுசடை முடித்த
ஆரண முதற்பொ—ருளிடமாம்
கூடமணி கையாள் கவுரியுமை பெற்ற
தோகையின் மயிற்ப—ரியின்நாதா!
ஏடவிழ் கடப்ப மாலையணி யத்த!
ஏழைஎ னக்கு—முனம்வாராய்.
மாடமலி வுற்ற நேம! வள முற்று
மாமுடிநி றைத்த—சிகிமேரா!

4595. சமரமிடும் அசுரனெடு
தழுவுபடை அழிவுபட—விடுவேலா!
குமர!சர வணபவ!யென்
கொடியவினை துகளுபட—அருளாயோ?
அமரர்முனி வர்கள்முதல்
அடியவர்கள் பணிசரண—மலராளா!
பமரநிறை பொழில்உலவு
புரியமுடி நிறைசிகியின்—மலைவாழ்வே!

4596. தரித்திர மெனுமொரு
சமுத்திரம் முழுகிடல்—தவிராயோ?
விரித்திடு இதழ்மண
மிகுத்திடு மலர்மலி—புயநாதா!
உரித்திடு மதள்புனை
உருத்திர ருதவிய—மகவேளே!
பரித்தினி துடனருள்
பருத்திடு சிகிமலை—வருதேவே!

4597. வந்தது தீவினை நைந்தது மேலது
மன்புக ழாகிட—அருளாயோ?
பந்தது போலிணை கொண்டிடு மாமுலை
பங்கய வானன—மடமாதர்
தந்தது காமம(து) இன்புறு வாசைகள்
தங்கிட லாவது—விதிதானோ?
சிந்தது ருள்தரு மைப்பொழில் மேவிய
தென்சிகர மாமலை—யொருதேவே!

4598. வஞ்சனைபுரி சூருடன்
மண்டிடஅயி லேவிய—செயவீரா!
நஞ்சணிமிட றுனவர்
நந்தணிகர நாயகர்—அருள்பாலா!
நெஞ்சகமதில் வாழ்பிணி
நின்கிருபையத னல்வில—கிடலாதோ?
மஞ்சதுதவழ் சோலைகள்
மண்டிடுசிகி மாமலை—வருதேவே!

4599. மடந்தை குறத்தி மகிழ்ந்து அணைத்த—புயநாதா!
கடம்ப வனத்தர் கலந்த புயத்தி—யருள்பாலா!
நடஞ்செய் பதத்து நலங்கொள் மயிற்ப—ரியினுதா!
தடங்கொண் முடிப்பொன் தழைத்த சிகிக்கி—ரியின்
[வாழ்வே!

4600. அடல்வி ளைத்திடு அசுர னைக்கொலு—மயிவாளா!
கடல்து யிற்றிய கரிய விட்டுணு—மருகேசா!
கடக ரிக்கொரு கருணை யுற்றிடு—துணையாளா!
வடவ ரைக்கெதிர் வளர் சிகிக்கிரி—வருதேவே!

---

4596. அதள் - தோல்.

4599. கடம்ப வனத்தர் - கடம்ப வனத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான். மதுரை, கடம்பவனம் என்றழைக்கப்படுவது இங்கு அறிதற்குரியது.

4601. கனக சபையின் நடித்த
கருணை பொழியு மாற்கு—வருபாலா!
மனதில் வருது யர்க்கு
மடிவு படந லத்த—அருள்தாராய்.
எனது மனதை மயக்கு
எழிலின் மடவி யவர்கு—ழலைவேனோ?
தினக ரனைய நிகர்த்த
சிகர முலவு சிகிக்கி—ரியினாதா!

4602. மனித ருறவாலும் அரசர் தயவாலும்
மகிமை பெறவேணு—மெனவேதான்
கனிவு வரனாளும் அளித்த விதியா! வுன்
கருணை களிலாம—லலைவேனோ?
பனிம லர்களோடு உனது இருதாள்கள்
பணிய டியர்பாழில்—விழலாமோ?
கனிர சமெலாமும் மருவி யன்போடு
கமழ்சி கியினாளும்—வருதேவே!

4603. தூலசட லத்தி னான்மனது நொந்து
தூய்மையது கெட்டு—அலைவேனோ?
காலனணு கிற்ற போதுபய முற்ற
காலமதி லிப்ப—அருளாயோ?
வாலவய சுப்பெ ணாள்மகிழ் குறத்தி
மாலையி னுற்ற—வடிவாளா!
சீலமுனி வர்க்கு ழாநிரை பணித்த
சீர்கிரி மலைக்குள்—வருதேவே!

4604. விதியி னால்வரு துயரெ லாமினி
வெளிற தாகிட—அருளாயோ?
மதியி னாலுயர் முனிவர் வானவர்
மலையி னாயகர்—பணிபாதா!
கதியி னானடை பயில்செய் தோகைய!
கருணை நாயக!—அருளாயோ?
நிதியி னாலுயர் முடிகள் சூழ்தரு
நிலைசி காமலை—வருதேவே!

4605. மடந்தைய ரிருவர் இடவலம் மருவிட
மகிழ்ந்தினி துடனென்முன்—வருவாயே.
கடம்பணி புயவ! நடஞ்செயு மயில!
கதம்புரி அசுரனை—யடுவேலா!

அடம்புரி அசுரர் குலங்கெட வருபவர்
அலங்கிரித விறலுடை—முருகோனே !
தடம்புரி பொழினிறை செகண்டியின் மலைவரு
சகம்பணி குருபர!—அருளாயோ ?

4606. எடுத்து லாவுஉ டம்பில்
இருக்கும் நோயைய டக்கி—அருளாயோ ?
அடுத்து நின்சது ரங்க
அமைப்பின் சேனைநெ ருக்க—வருசூரன்
கெடுத்து வீழுயி லங்கு
கிளைத்த வேலையெ றிந்த—முருகோனே !
தொடுத்த மாலைபு னைந்த
துரைக்கு கேச!செ கண்டி—மலைவாழ்வே !

4607. மடக்கொடிய ராசை
மடுக்குழியில் வீழ—விதியாமோ ?
கடக்களிறி னைச
கதத்திலிலி சோத—ர!குகேசா !
அடத்தில்வரு சூரை
அடக்கிவிளை யாடு—செயவீரா !
நடத்திமயி லேறு
நலக்குமர ! தோகை—மலைவாழ்வே !

4608. தேனல ரலங்கல் தேவ!அருள் தந்து
சேம மொடுவந்து—எனையாளாய்.
வானவர்கள் அன்பர் மாமுனிவ ரண்டர்
மாலோடு பணிந்த—இருதாளா !
தானவர் குலங்க ளேயழிவு கொண்டு
தான்மிகு நிறைந்த—படையாளா !
கானக மடந்தை மேவியே சிறந்த
காவல ! செகண்டி—மலைவாழ்வே !

4609. அந்திமதி சூடு கின்றசடை யாளர்
அன்புமிகு பால !—அருளாயோ ?
தந்திமுக நாதர் தன்றுணைவ ! மேன்மை
தந்துவெகு கோடி—அருளாயோ ?
புந்திவரு நோய டங்கவரு ளேசெய்
பொங்குமிகு தோகை—மயிலாளா !
மந்திகுதி போடு கின்றபொழி னீடி
மண்டுசிகி மேரில்—வருதேவே !

---

4609. புந்தி - புத்தி.

4610. கருத்தினை நினைந்த படிக்கு அருட்செய்
கமழ்த்த கடப்ப—மணிமார்பா!
வருத்த மதற்கு மருத்து வதைச்செய்
வடித்து எடுத்த—ரசமேபோல்
இருக்கு நயத்த மொழிப்பெ ணவர்க்கு
இசைத்த மயற்கு—ழுழல்வேனோ?
திருத்த மிகுத்த முடிப்பொ னிறைத்த
சிகித்தென் மலைக்கு—வருதேவே!

4611. சதும றையவர் பணித ருயிரு
சரண! என்முனம்—வருவாயே.
பதும மென்மலர் மனைவ ளர்மகள்
பதுமை யின்அரி—மருகேசா!
கதுமெ னடைப யிலும யில்வரு
கருணை ஒழுகிய—அருள்வாழ்வே!
விதுத வழ்பொழி லிலகி யசிகி
விரைம லைமுரு—க!குகேசா!

4612. ஏது பாவமோ? நாய னுசையால்
ஏவ லார்கள்போல்—மெலிவேனோ?
பாது காரயா! நீய லாதுபூ
பாரில் யாருளார்—அறியாயோ?
மோது சேனையோ டேமு னேவரு
சூரன் மீதிலே—விடுவேலா!
வாது மீறுசீர் சோலை சூழ்சிகா
வாச மேரிலே—வருதேவே!

4613. ஆடரவு தரித்த நீள்சடை முடித்த
ஆரணமு டிவுக்கு
முயர்வானே—ரருள்பாலா!
ஏடவிழ்செய் கடப்ப மாமலர்கள் தரித்த
ஏகபிர மவனு
வெனுநாத!—அருளாயோ?
மாடமலி வுற்ற நாடுநக ருற்ற
வாசமிகு சிகிக்கி
ரிமின்நாதா!—எனையாளாய்.
தேடரிய பதத்த மாமயிலை நடத்து
சேவக!மெய் வரத்தை
அருளாயோ?—குகவேளே!

4614. எனது பாவ வினையை யோட்டவே
இனிய தான—அருள்தாராய்.
வனச மாதினை புணரு மார்பினர்
மகிழு மாசை—மருகோனே!
புனமி னுள்தனை மருவு நாயக!
புகழ்சி காமலை—வருவாழ்வே!
... .... ...
... .... ....

4615. தரித்திர மான ஆழி
தனைத்தவி ராம னைய—னலைவேனோ?
விரித்திடு தோகை மீது
விருப்பொடு யேறி யேமுன்—வருவாயே.
எரித்திடு காம மாதி
இனக்குமே நோக ஆடல்—விதியாமோ?
வரிக்கதிர் சூழ்சி காமன்
மலைக்கிசை வான தேவ!—வரைநாதா!

4616. ஆறுமு கத்தில் ஆசைமி குத்த—குறமானுள்
மீறுத னத்தின் மேவுபு யத்த!—அருளாயோ?
நீறுத ரித்த நீமுனெ னக்கு—வருவாயே.
தேறுபொ ழில்கொள் சீர்கொள்சி கிக்கி—ரிபினுதா!

4617. கொங்கலர்க டம்பு
கொண்டிலகு வம்பு—யிகுகேசா!
எங்குநிறை கின்ற
எம்பெரும! இன்ப—முடனுளாய்.
சங்கணிகை நம்பர்
சங்கரர்த னன்பின்—மகவேளே!
மங்குறவழ் குன்றை
வந்ததுரை கந்த!—குகநாதா!

4618. அடல்புரி சூரன் அலறிட வேலை—எயும்நாதா!
மடமயில் வேடர் மகள்புய மேவு—புயநாதா!
கடல்துயில் மாயன் கருணையி னுசை—மருகோனே!
திடமுடி சேருஞ் சிகிமலை மீது—வருதேவே!

4619. மதுமலர் மாலை தரித்த
மணியணி மார்பு புயத்த!—அருளாயோ?
முதுமறை யோர்கள் பணித்த
முளரிக ளான பதத்த!—அருளாயோ?

---

4614. நான்காவதடி இப்பாட்டில் இல்லை.

சதுமுகன் வானவர் பத்தர்
சகலரு மாலோடு வற்பின்—பணிதேவே!
விதுதவழ் சோலை வளைத்த
வரைமிகு தோகை மலைக்குள்—வருதேவே!

4620. வினைதீறிட வருளாவகை
வினவாய்குரு—பர!வேளே!
அனைபோலெனை யினியாதரி
அமரோர்பணி—இருதாளா!
நனைநீபமென் மலர்சூடிய
நகுசீர்புய!—அருளாயோ?
எனையாளுவை சிகிமாமலை
யினிலேவரு—முருகோனே!

4621. மடந்தையர் ஆசையால்
மயங்கிட லாவது—விதியாமோ?
அடம்புரி சூருடல்
அழிந்திட வேலதை—எயும்வீரா!
நடம்புரி தோகையின்
நலங்கிளர் மாமயின்—முருகோனே!
தடம்பொழில் சூழ்தரு
சகம்புகழ் தோகையின்—மலைவாழ்வே!

4622. மாதர் மயக்கும் ஆசை
மாய்கை தனக்கு ளாவ—தெதனுலோ?
வேதனை யுற்ற நோயின்
மேவிடு தன்மை அழிக்கா—தெதனுலோ?
பாதம் துதித்த வானவர்
பாரினில் பத்தர்க ளாசை—அருளாயோ?
வாதுஅடர் வுற்ற சோலை
வாசம் மிகுத்த தோகை—மலைவாழ்வே!

4623. வார்த ரித்தமுலை
மாத ரிச்சையினில்—விழலாமோ?
போர்மி குத்தசுரன்
போயி றக்கவடல்—புரிவேலா!
தார்த ரித்தபுய
சாமி! யற்பினெடு—அருளாயோ?
கார்த வழ்பொழில்கள்
காவு மெய்ச்சிகியின்—மலைவாழ்வே!

4624. அண்டர் முதலினர் வந்து பணிபுரி
அன்பர் தொழுமிரு—பத!தேவே!
கண்ட நிறைகறை.கங்கை முடிதரு
கஞ்சன் முடியணி—யவர்பாலா!
வண்ட னெனும்அவு ணன்றன் முடிவிழ
வந்து அடல்புரி—செயவேலா!
தண்ட லேகள்மிகு குன்றை வளர்தரு
தந்தி துணைபெறு—குகவேளே!

4625. வனச மலரின் மடந்தை
மருவி யபுய நாதர்—மருகோனே!
எனது மனதில் வந்து
இடையும் விதன மென்றும்—கெடவேதான்
உனமென் மயிலில் வருவை
புதிய இதழ்கொள் கடம்ப—மணிமார்பா!
கனக மலேயி சைந்த
கமழு பொழில்கள் குன்றை—மலேவாழ்வே!

4626. சங்கரி சாமளை
சம்புசி வையாள்—அருள்பாலா!
கொங்கலர் நீபவிண்
கொண்டிடு தோகையின்—மலேவாழ்வே!
துங்கசி காமயில்
தொந்தம தாய்நட—மிடவாராய்.
மங்கது வார்குழன்
மங்கைமி னுள்மகள்—தோளாயே!

4627. மருப்பொலியு நீப
மலர்க்கணிகள் சூடு—புயநாதா!
திருக்கமல மாது
சிறக்கவளர் மார்பா!—மருகோனே!
செருப்பொலிசெய் சூரை
செயிக்கவயி லேவு—செயவீரா!
தருப்பொலிசெய் சோலே
தழைத்தசிகி மேரில்—வருதேவே!

4628. மதுர மிலகிய
வனச மயில்குற—மடமானுள்
பதும முகமிதழ்
பருக மயல்கொளும்—வடிவாளா!

முதும றைகள்புகழ்
முதல்வ! கிருபைபுரி—குகநாதா!
விதுத வழுபொழில்
மிகுசி கியின்மலை—வருதேவே!

4629. அந்தர வானவர் அன்புட னேபணி—இருதாளா!
சந்தமென் மாமலை சங்கரி யாள்தரு—புதல்வோனே!
கந்தமு லாவிய கஞ்சம தாகிய—முகவேளே!
பைந்தழை சூழ்பொழில் பம்பிய தோகையின்-மலைவாழ்வே!

4630. இருவினை வசத்தால்
இனியுட லெடுத்தே—வரலாலே
அருமைகெட வியர்த்து
அலைவது தவிர்ப்பாய்—முருகோனே!
முருகலர் தரித்தே
முனைவிழி மயக்கம்—புரிவோர்பால்
உருகடல் விலக்காய்
உயர்சிகி மலைக்கா—வில்வேளே!

4631. கலைமதி தரித்த
கடவுள்மகிழ் புத்திர!—அருளாயோ?
சிலைநுதல் நலத்த
திருமயில் குறத்தி—புணர்தோளா!
முலையதை மினுக்கு
முழுமயல் கொடுப்பர்—மயல்தீராய்.
இலைகுளிர் பொதுக்க
ளிசைபடு சிகிப்பொன்—மலைவாழ்வே!

4632. உலகமதி லெனக்கு
உதவிசெய்வ ரொருத்தர்—உளரோதான்.
வலவர்கள சுரற்கு
மகிப னுட னெதிர்த்து—விடுவேலா!
அலகில்துயர் களுக்கு
அடியனுழல் தல்மெத்த—நலமாமோ?
தலமகிமை களுற்ற
தருவுலவு சிகிக்கி—ரியின்நாதா!

---

4630. சிகிமலைக்காவில் வேளே - சிகிமலையின் அமைந்த சோலையில் எழுந்தருளியுள்ள முருகனே.

4633. வனச மலர்க்குள்
வளரு மயிற்கு—மருகோனே!
எனது துயர்க்கு
இறுதிகொ டுத்து—அருளாயோ?
பனக முடித்த
பரமர் தனக்கு—வருபாலா!
இனமணி யுற்ற
எழில்செய் சிகிக்கி—ரியின்வாசா!

4634. வஞ்ச ரக்கனுடன்
மண்டி யுத்தமிடு—செயவீரா!
கஞ்ச நற்சரண!
கந்த! அற்பிஜெடு—அருளாயோ?
நெஞ்ச முற்றதுயர்
நின்கிரு பைக்கடல்—கொட்டுவாயே.
மஞ்ச டர்த்தபொழில்
மண்டு மெய்ச்சிகியின்—மலைவாழ்வே!

4635. ஏனையா எனைப்ப டைத்து
எத்துயர் துயரப் படுத்தல்—நலமாமோ?
வானவோர் சிறைக்கெ டுத்து
மாவைவேல் தொடுத்து வெற்றி—புரிதேவே!
கானவே டுவர்க்கு றத்தி
காமவா சையிற்கு ழித்த—வடிவாளா!
நானமார் பொழிற்சி கிப்பொன்
நாளுமே மிகுத்த நற்கி—ரியினைதா!

4636. இச்சையி னல்மடவார்
இன்பத்தி லேயலையா—வகைதாராய்.
பச்சையின் மாமயிலா!
பத்மமென் மாமலர்—நிகர்தாளா!
கச்சைகொள் பூண்முலையார்
கட்டழ கானமினர்—புணர்தோளா!
செச்சைகொள் சீர்புயனே!
சித்திரசி காமலைவாழ்—அமரேசா!

---

4635. எத்துயர்.........நலமாமோ = எல்லா வகையான துன்பத்தாலும் துயருறச்செய்தல் நன்மை ஆகுமோ.

4637. தண்டை யொலிகள்
சதங்கை கலகல—வெனவேதான்
அண்டர் முதலினர்
அன்பர் நிறைகொள—வருவாயே.
வண்டர் அவுணர்கள்
மண்டி வரவரு—அசுரோன்மேல்
அண்ட அடல்புரி
அந்த மிகுசிகி—மலைவாழ்வே!

4638. வனச மண்டப மருவு மங்கைதன்—மருகேசா!
அனந டம்புரி அழகி லங்கிய—குறமானுள்
மனது தந்திடு மகிமை கொண்டிடு—கணவா!சீர்
தினக ரன்றவழ் சிகியெ னுங்கிரி—வருதேவே!

4639. மதுமாமலர் மணிமார்ப!பொன்—மயிலாளா!
சதுமாமறை தனையேபுகல்—அணிவாயா!
பதுமாசனர் பணிநாயக!—அருளாயோ?
விதுதாவிய விரைசேர்சிகி—மலைவாழ்வே!

4640. கடிகமழ் நீபக் கணியணி மார்ப!—அருளாயோ?
வடிவுள வேடர் மகள்புணர் நாத!—அருளாயோ?
அடியவர் நாளும் அடிதொழு தேவ!—அருளாயோ?
முடிநிரை சேரும் முதுசிகி மேரில்—வருவாழ்வே!

4641. உனது பதத்தி யானம்
உறுதி படைத்த நாயன்—முனம்வாராய்.
வனச மலர்க்குள் வாழும்
மயிலி தனக்கு நாதன்—மருகேசா!
சினவசு ரற்கு வீழ்வு
திறமுடன் சேர விட்ட—விடுவேலா!
இனமணி யுற்ற தோகை
எழில்மலை வித்த கா!நல்—அருளாயோ?

4642. பதுமா சனத்தன் முதலோர் மிகுத்த
பணியே புரித்த—இருதாளா!
மதுமாமி சத்தில் உயர்தான வற்குள்
வளர்மாவை வெற்றி—புரிவேலா!
சதுமா மறைக்கு மறியாத சித்த!
தமியேனை யெப்ப—டியும்ஆளாய்.
விதுதாவு நற்பொ ழில்கள்சூழ் சிகிப்பொன்
மிகுமேரி லுற்ற—குருநாதா!

4643. வடிவுடைய வேற்கண்
மடவரல்கள் பாற்றி—ரியலாமோ?
அடியருட நாப்பண்
அடியனைமெய் ஆக்கி—அருள்வாயே.
குடியில்வளர் நேர்த்தி
குறமயிலி வேட்ட—துரைவேளே!
கடிபொழில்கள் சூட்டு
கதிர்மிகுசி காக்கி—ரியினுதா!

4644. வந்த மயலில் அழிந்து போமுனம்
வந்து கிருபைகள்—புரிவாயே.
பைந்த மிழினில் உயர்ந்து துதிபுரி
பண்பி னடியவர்—பணிதாளா!
கந்த மலிசெய் கடம்ப மலரணி
கந்த மிகுபுய!—முருகேசா!
சந்த மலிபொழில் மிஞ்சு சிகிமலை
தங்கி வளர்குரு—பர!வேளே!

4645. அடல்புரி சூரர் சேனை
அழிபட வேலை யேவு—செயவீரா!
மடல்விரி நீப மாலை
மணிமிகு மார்பின் நாளும்—அணிமார்பா!
கடகரி யான னேசர்
கருணைகொள் சோத ரா!நல்—லருளாயோ?
அடவிகள் சூழு தோகை
அழகிய மேரில் வாழும்—முருகோனே!

4646. மாச றுவிமை யோர்சி றைகெட
மாவு டல்பகி—ரிடவேலால்
மோசம தடவே ஆடல் புரிவை
மூவர் களுடை—குருநாதா!
வாச னைமிகு நீப மென்மலர்
மார்ப! பொன்மயின்—மிசைவாராய்.
தாசர் கள்பணி தோகை யின்மலை
தான லமிக—வருதேவே!

4647. படையெ டுத்துவரு அசுர னைக்கொடிய
படைதொ டுத்துஅடல்—புரிசூரா!
நடைப டித்தமயின் மிசையெ னக்குமுன்
நலமு தைப்புரிய—வருவாயே.

கடைமி ரட்டுதொழின் விழும டக்கொடியர்
கனம யக்கிலினி—விழலாமோ ?
விடைகொ டுத்துவிடு வினை த னுக்குஇனி
விரைம லர்ப்பொழில்கொள்—சிகிமோர !

4648. தாத விழ்கன நீப மென்மலர்
தான ணிதொடை—யணிமார்பா !
மாத ரசெனும் வேடு வர்அருள்
தாழ்கு முன்மயில்—புணர்தோளா !
காத லர்மய லான்ம னம்நைதல்
காரி யம்மல—அதுதீராய்.
போத டர்பொழில் சூழ்த ருவிரை
பூம லிசிகி—மலைவாழ்வே !

4649. கடவரை யுரித்த இதழினை யுடுத்த
கருணைகொள் மனத்த—ரருள்பாலா !
மடவரல் குறத்தி யுடவடி வினுக்கு
மயல்கொளும் மனத்த !—அருளாயோ ?
நடமிடு மயிற்ப ரிதனைமுன் நடத்தி
நலமுற இப்ப—வருவாயே.
குடவளை முனக்கு வயல்கள் நிறைத்த
குளிர்சிகிமலைக்குள்—அரசாளா !

4650. மகரமதை நிகரும்விழி
மடவரல்கள் மயல்வலையில்—விழலாமோ ?
சுகசலதி முழுகிவெகு
துயர்படவு மலைகுவது—நலமாமோ ?
மகபதிதன் மடவரலை
மணிமுடிய சுரர்களை—யடுவேலா !
குக!குமர ! கிருபைபுரி
குளிர்சிகியின் மலையில்வரு—முருகோனே !

4651. மணிநிரை யழுத்தியுயர்
மகுடமணி சிகரத்த—ரிமையோரே
அணியணி யெனநிரைத்து
அவர்கள்மகிழ் வொடுதுதித்த—இருதாளா !

---

4650. மகரம் - மீன் வகையில் ஒன்று. சுகசலதி - சுகமாகிய கடல். மகபதி தன் மடவரல் - இந்திரனுர் திருமகளாகிய தேவசேனை அம்மையார்.

4651. மகுடமணி சிகரத்தரிமையோர் - மகுடங்களை அணிந்துகொண்டிருக்கின்ற தலையினைப் பெற்ற தேவர்கள். பழுதுசெய்து - துன்பம் விளைத்து.

பணியுமென் துயருக்கு
பழுதுசெய் துடன்விரட்டி—அடுவாயே.
துணியும்அசு ரர்களைக்கொல்
துரை!முருக! சிகிமயிற்கி—ரியினாதா!

4652. வடிவே லெடுத்து மயிலே நடத்தி—வருவாயே.
கடியார் கடப்ப! கருணை நிதிக்கு—மர!நாதா!
அடியே னெனக்கு அருள்யாவு மிப்ப—உதவாயே.
முடிசேர் சிகிப்பொன் முதுதோகை யிற்கி—ரியினாதா!

4653. என்ன விதியிது என்ன துயரிது
என்ன பழியிது—அறியேனே.
வன்ன மயில்மிசை கன்னி யர்களுடன்
மன்னு அயிலுடன்—வருவாயே.
கன்னல் மொழியினர் அல்லு குழலினர்
கண்ணின் வலையினில்—விழலாமோ?
மின்ன னிகர்முடி நண்ணு சிகிமலை
விண்ண வர்கள்பணி—குகவேளே!

4654. பரிசுத்த ராய்வரு
பத்தர்பணி யற்புதா!—அருளாயே?
தெரிசிக்க வேயெளி
யர்க்குநேர் தெளிவுற்று—வருவாயே.
பிரியத்தி னல்குறவர்
பெணுள்பிடி யைத்தழு—வணைதோளா!
கரிமைக்கு ளாய்நித
மொத்தகார் கமழ்சிகா—மலைவாழ்வே!

4655. மனமொய்த்திடு துயரைத்தணி
வரமிப்பொழுது—அருளாயோ?
எனதிச்சையின் உயர்மைக்கடல்
இனியிப்படி—உளவாமோ?
கனகப்பொழில் திடமுற்றவர்
கருணைக்கிசை—புதல்வோனே!
தினகரப்பிரபை முடிவைத்திடு
சிகிமெய்க்கிரி—முருகோனே!

---

4652. கடி - நறுமணம்.

4653. வன்னமயில் - வண்ணமயில்; அழகமைந்த மயில்.

4654. கரிமை - கரிய நிறத்தன்மை.

4655. மனம்மொய்த்திடு துயர் - மனத்தில் நிறைந்த துன்பம். தணிவரம் - நீக்குதற்குரிய வரம்.

4656. மறமுட னெதிர்த்து வருவசுர னுக்கு—விடுவேலா!
குறவருட மைக்கொள் குழலிமய லிற்கு—லவுதேவ!
வறள்கிற துயர்க்கு வரமுதவ என்று—மனமாமோ?
விறல்மருக! அத்து விதமுருக! நற்சி—கிரிநாதா!

4657. வால மதனை மருட்டிய
வானை நிகர்விழி யுற்றவர்—மடமானர்
சால மதனில் மயக்கிய
நாக மெனையு மயக்குதல்—விதியாமோ?
நீல நிகரு நிறத்தினர்
நீடு மவுணர் திறத்திடு—குலகாலா!
மால யரையு நிகர்த்தவ!
வாச முலவு சிகிப்பொன்—வரைவாழ்வே!

4658. முடித ரித்திடு வமர ருக்கொரு
முதல்வன் மைக்குழல்—மகள்தோளா!
இடியு னக்குநான் எனவ தட்டியெ
எதிர்ப டைக்கல—முடனேதான்
துடிப டைத்திடும் அவுண னைக்கொலு
துரை!யெ னக்கருள்—புரிவாயே!
அடியர் மொய்த்திடு சிகிம லைக்குக!
அழகு பெற்றிடு—மயிலாளா!

4659. சகலசன ரட்சக!
தமியனையும் ரட்சியா—ததெனாலோ?
அகமகிழ்கு றத்தியின்
அழகின்மய லுற்றவா!—அருளாயோ?
மகபதித னக்குநேர்
வருபகைத ணித்திடு—செயவீரா!
குக!குமர! பத்தர்சூழ்
குளிர்சிகி மலைக்குவாழ்—துரைநாதா!

---

4656. மறம் - வீரம்; பாவம் என்றும் ஆம். விறல் - திருமால்.

4657. வாலமதன் - இளமைப் பருவத்தினனாகிய மன்மதன். சாலம் - ஜாலம் என்ற சொல்லின் மரூஉ.

4658. முதல்வன் - இந்திரன். மைக்குழல் மகள் - தேவயானை. துடி - கொட்டும் பறை.

4659. எல்லாவகையான மக்களையும் காப்பாற்றும் நீ என்னைக் காப்பாற்றாதது எதனால்' என்பது முதலடியின் கருத்து. மகபதி தனக்கு நேர்வரு பகை - இந்திரனுக்கு நேரே வந்த பகைவனாகிய சூரபதுமன். மலைக்கு - மலையின்கண்; வேற்றுமை மயக்கம்.

4660. சதும றையவர் புகழ்ம லர்நிகர்
சரண! நினடி—யவர்பாலே
கதுமெ னநடை பயின்ம யின்மிசை
கனமு டன் இனி—வருவாயே.
பதும மென்மலர் முககு றமகள்
பருவ மதனில்—மயலாளா!
விதுத வழ்பொழில் வளைசி கிமலை
மிசைவ ருகுரு—பரவேளே!

4661. நறுமலர் தரித்த முடிபுனை நலத்தர்
நதியணி சிரத்தர்—அருள்பாலா!
சிறுமகள் படுத்து பழவினை யினுக்கு
தெறிபட விரட்டி—விடுவாயே.
கெறுவம திருக்கும் அவுணர்குடி கெட்டுக்
கிழிபட அயிற்கொ—டெயும்வீரா!
மறுவறு பொழிற்கள் மிகுகன சிகிப்பொன்
மலைதனில் உதித்த—குகநாதா!

4662. அக்கரவு புனைசடிலர்
அருள்புதல்வ! கிருபை—புரிவாயே.
பக்கம்இரு புறமும்வளர்
பத்தர்நிறை சரண!அருள்—புரிவாயே.
துக்கமிகு வருவசுரர்
தொட்டகணை விழவடல்செய்—செயமாயோன்
மிக்கமரு மக!குமர!
விரத்திபெறு சிகிமலையின்—அரசாளா!

---

4660. மலர் - இங்குத் தாமரை மலரைக் குறித்தது. கதுமென - விரைவாக. கனமுடன் - பெருமையோடு.

4661. நதி - கங்கை. 'சிறுமகள்' - ஆசிரியர் இடையறாது மகளிரால் வரும் துன்பத்தை நீக்குமாறு வேண்டுகின்றனராதலின், இத்தொடர் பொதுவாகப் பெண்களைக்குறிக்கின்றதெனக் கொள்க. கெறுவம் - கர்வம் என்ற சொல் இவ்வாறு திரிந்தது. மறு - குற்றம்.

4662. அக்கரவு - அக்கும் அரவும்; எலும்பும் பாம்பும்; இவற்றை அணிந்தவர் சிவபெருமான். துக்கம் மிகு வரு அசுரர் - மற்றவர்களுக்குத் துன்பம் மிகுந்துவளர வருவதற்குக் காரணமாகிய அரக்கர் என்க.

4663. மதம்மி குத்திடு களிறுத னக்கிணை
வதன ருக்கிளை—ய!குகேசா!
கதமி குத்திடு படைநெ ருக்கொடு
களநெ ருக்கிட—வருசூர்மா
சிதரி டக்கதிர் அயில்நொ டுத்தவ!
திரும மிற்பரி—மிசைவாராய்!
பதமெ னக்கருள் புரிவை நற்கதி
பணைபொ ழிற்சிகி—மலைவாழ்வே!

4664. தயவு தாச்சணியம் அணுவி லாக்கொடியர்
தமது பாற்செலுதல்—தவிராயோ?
செயமி லாதநிலை முதுகு காட்டியவர்
சிதற நோக்கியயில்—தொடுசூரா!
இயலி னுற்றுதிசெய் அடியர் கீர்த்திபெற
இசைவ தாய்க்கருணை—புரிவாயே.
புயல்கள் மேற்றவழும் எழில்சி காமலையில்
புனித! நேர்த்தியுள—மயிலாளா!

4665. கருணை யுற்றருள் புரிவை வித்தக
கமல நற்பதம்—அருளாயோ?
தருண மற்பொடு தயவெ னக்கருள்
சரவ ணக்குரு—பர!வேளே!
முருக லர்ப்புனை புய!த மிழ்க்குறு
முனியெ னத்தமிழ்—உதவாயோ?
திருமி குத்திடு பொழில்மி குத்திடு
சிகிம லைக்கொரு—துரைநாதா!

4666. கறையணி மிடற்றர்
கருணைமிகு புத்திர!—அருளாயோ?
மறைபுகழ் பதத்த!
வடிவயில் பிடித்த—செயவீரா!

---

4663. கதம் - கொடுஞ்சினம். களம் - போர்க்களம். சூர்மா - சூரபதும னாகிய மாமரம். கதிர் அயில் - ஒளி படைத்த வேல். 'நற்கதி பதம் எனக்கருள் புரிவை' எனக்கூட்டுக.

4664. தாச்சாணியம் - கண்ணோட்டம். அணுவிலாக் கொடியர் - அணு அளவும் இல்லாத கொடிய மக்கள். நேர்த்தி - அழகு.

4665. தமிழ்க்குறுமுனி - அகத்தியன்; அகத்தியனுக்கு முருகன் தமிழ் தந்தான் என்பது வரலாறு.

நறைமிகு குழற்பெண்
நலமிகு குறத்தி—புணர்தோளா!
பிறைதவழ் பொழிற்பொன்
பிரபைகொள் சிகித்தென்—மலைவாழ்வே!

4667. வீறு படைத்த சூர னுடற்குள்
மீது பிளக்க—விடுவேலா!
மாறு படைத்த நோயை விரட்டி
வாழ்க வரத்தை—அருளாயோ?
மீறு குயத்து நீல நிறத்து
வேடர் மகட்கு—மயலாளா!
தேறு நலத்த சோலை வளைத்த
சீர்சிகி யுற்ற—மலைவாழ்வே!

4668. அடம்புரி சூரன்
அழிந்திட வேலை—தொடுசூரா!
கடம்புகொள் மாலை
கமழ்ந்திடு மார்ப!—அருளாயோ?
நடம்புரி தோகை
நலந்திகழ் வார்கள்—அருள்வாயே.
தடம்புரி சூழுந்
தழைந்திடு தோகை—மலைவாழ்வே!

4669. இனிய தேனொழுகு கமல வாசமிகு
எழில்கொள் தேவியுட—மருகேசா!
கனியின் வாயரயி லினிய பார்வைநிற
கரிய கேசமட—வியராலே
மனித னுன்துயரம் பெறவும் நோய்களவை
வரவு நாயனலை—கிடலாமோ?
புனித மாதவர்கள் அடியர் சூழ்சமுக!
புகழ்சி காமலையின்—முருகோனே!

---

4666. நறை - தேன்; இங்குத் தேனமைந்த மலர்களைக் குறித்தது.

4667. நீலநிறம் பெற்றவர் வள்ளியம்மையார் என்பது மூன்றும் அடியில் விளக்கமுறுதல் காண்க.

4668. முருகப்பெருமானுக்கு உகந்த மலர்களுள் கடம்பு சிறந்ததொன்று; எனவே 'கடம்புகொள்.........மார்ப' என்றார்.

4669. 'கொவ்வைக் கனியினை ஒத்த வாயும் வேல்போன்ற கூரிய இனிய பார்வையும் கரிய நிறத்தலைமயிரும் பெற்ற மகளிர்' என்பது இரண்டாம் அடியின் பொருள்.

4670. மாலையி னலத்த நீப
மாலைகள் தரித்த மார்ப!—அருளாயோ?
லீலைகள் தரித்த மோக
நேரிழை யர்பக்க மோடல்—நலமாமோ?
சாலையி லுதித்த பானு
காலொளி நிகர்த்த மேனி—வடிவாளா!
சோலையின் மிகுத்த சோலை
சூழ்சிகி மலைக்குள் வாச!—மருகோனே!

4671. பைந்தமிழ் புகலுங் கனமிகு
பண்புயர் குருமுனி நாதன்—குருநாதா!
அந்தரி சுயமங் கலிநய
அம்பிகை தருமக வான—முருகோனே!
நந்தணி கரமஞ் செனும்நிற
நஞ்சணை மிசைதுயில் மாயன்—மருகோனே!
வந்தருள் புரிகுன் றையின்மலை
வண்சிறை மயில்வரு நாத!—அமரேசா!

4672. அமரர்சிறை மீட்டு
அசுரனைவெல் கீர்த்தி—வடிவேலா!
குமரிகுற நாச்சி
குவிமுலையை வெட்ட—துரைநாதா!
கமலமயி லாளின்
கணவனுட னேர்த்தி—மருகேசா!
பமரமிகு காக்கொள்
பணைமுடிசி காக்கி—ரியின்நாதா!

4673. சதும றைமுனி வர்ப ணியிரு
சரண மென்மலர்—அருளாயோ?
கதுமென் நடைய கவின்ம யில்மிசை
கதித ரயென்முன்—வருவாயே.
பதும மென்மலர் வளர்ம கள்புணர்
பவிர்மு டியவன்—மருகோனே!
விதுத வழ்பொழில் சிகியெ னுநல
மிகும லைவரு—குகவேளே!

---

4670. மாலையின்.........மாலைகள் = மாலைகளுக்குள் மிக நலம் வாய்ந்த நீப மாலை. பானு = ஞாயிறு. காலொளி = வெளிவிடுகின்ற ஒளி.

4671. நஞ்சணை = பாம்பணை.

4672. காக்கொள் = சோலைகளைக் கொண்ட.

4674. அரவச யனத்தர் கருமுகி ணிறத்தர்
அழகிய விறற்கு—மருகோனே!
பரவடி யருக்கு நிறையருள் புரித்த
பரசிவ! சித்திர—மயிலாளா!
குரமல ருற்ற புனமது வளர்த்த
குறமகள் தனக்கு—மணவாளா!
இரவென நெருக்கு பொழில்மிகு சிகிப்பொன்
இலகிய மலைக்கு—அரசாளா!

4675. சீதம திச்சடை யாரருள் புத்திர!
செயக டம்பணி—புயநாதா!
ஆதர வைசெய்வை வேதமு தற்கிறை
யாகவு தித்திடு—குகநாதா!
மாதர்வ யிற்றினி லேகரு வுற்றிடு
மாயைத னைக்கெட—அருளாயோ?
பாதவ முற்றிடு சோலைநெ ருக்கிய
பார்புகழ் மெய்ச்சிகி—மலைவாழ்வே!

4676. வடிவு மிகுத்திடு குறவர் மயிற்கினி
மயலைலி ளைத்திடு—வதிரூபா!
கடிகம ழுற்றிடு குழலர் கொடுத்திடு
கனமய லிற்றின—மலையாதே
படியி னலத்திடு மிகவரு ளைச்செய்வை
பரமசி வக்குரு—பர!வேளே!
அடியர் முதற்பல முனிவர் பணித்திடு
அழகிய மெய்ச்சிகி—மலைவாழ்வே!

4677. மயல்பி டித்து மடவர் பக்கம்
வலையி லுற்ற வினையெ னத்தி—ரியலாமோ?
கயல்கு தித்த விசைய டித்துக்
கமுத்தி றக்கும் வயல்ப டைத்த—வளநேமா!

---

4674. குரமலர் - குராமலர். இரவென நெருக்கு பொழில் - இருள் சூழ்ந்ததோ என்று சொல்லுமாறு ஆழ்ந்த நிழலைப்பரப்பும் பொழில். இலகிய - விளங்கிய.

4675. வேதமுதல் - பிரமன். பாதவம் - மரம்.

4676. குழலர் - கூந்தலைப்பெற்றவர். படி - மண்ணுலகம். பரமசிவக் குருபர - பரமசிவனுக்குக் குருவாகிய முதல்வனே. பணித்திடு - பணிந்திடு; வணங்குகின்ற.

4677. வலையிலுற்ற வினைஎன - வலையில் அகப்பட்டதுபோல. 'கயல்மீன் நீரினின்றும் துள்ளிக்குதித்த வேகத்தினால் கமுகம்பாளை திறக்கும் வயல்வளம் படைத்த நேம!' என்பது இரண்டாவதடியின் பொருள். கமுகு என்பது கமு எனக் குறைந்து நின்றது. புயலுகுத்த........சிகி - மேகம் பெய்த மழை நீரினும் மிகுதியாகச் சோலை மலர்கள் வீழவிட்ட தேன் பாய்ந்தோடும் மலை.

இயலி சைக்குள் அடியன் மெத்த
இயல்பெ னச்சொ லிடவ ருட்செய்—குகவேளே!
புயலு குத்த மழையின் மிக்க
பொழிலு குத்த மதுமி குத்த—சிகிமோரா!

4678. விதிப்பயனோ? வினைப்பயனோ?
விளைத்திடுநோய் தரித்திரநோ—யதனாலே
பதிக்குளைநான் மெலிப்படவே
பகட்டினர்பா லடிக்கடிபோ—யலைவேனோ?
மதிக்கிணையா முகக்குறமான்
மயிற்புணர்சீர் புயக்குமரா!—அருளாயோ?
கதிக்கடியார் நிறைத்திடுகா
கதித்திடுதோ கையின்கிரிவாழ்—குமரேசா!

4679. வருத்து காம நோயி னாலே
மனத்தை நோக வாழ லாவ—தெதனாலோ?
பொருத்து சேனை சூழ நாடு
புயத்து வீர னான சூரை—அடுவேலா!
பெருத்து மீறு மார்பின் மாது
பிணைக்கண் வேட மாது மேவு—புயநாதா!
திருத்து கோடு சூழு தோகை
திகழ்ப்பொன் மேரின் மீது வாழும்—முருகோனே!

4680. ஆடி யமயின் மீதி லடியவன்
ஆசை கனிறை வாகி டயென்முன்—வருவாயே.
கூடி யதுய ராய வையொழி
கோத றவர மேஇனியருள்—புரிவாயே.
பாடி யபுல வோர்க னிவொடு
பாவோ டுபுக ழேசெ யவருள்—புரிவாயே.
நீடி யபொழி லேநி றைசிகி
நேர்ம லைமிசை வாழ்கு ருபர!—முருகோனே!

4681. மாதவர் முதலினர் சூழ்தரு சமுகனே!
மாதர்கள் இருவர்கள்—புணர்நாதா!
தாதவிழ் மலரெனு நீபம தணிபுய!
தாமரை மலர்நிகர்—இருதாளா!

---

4678. பதிக்குளை நான் - அழுந்தித் துன்புறுகின்ற நான்.

4679. பொருத்து.........சூர் - பொருத்தமாய் அமைந்த சேனை சூழ்ந்திருக்க வீரத்தை நாடுகின்ற புயத்தினைப் பெற்ற சூரன். பெருத்து மீறு - மிகப்பருத்த. பிணைக்கண் - பெண்மானின் கண்.

4680. கனிவொடு - கனிந்த அன்போடு. பாவொடு - பாடலொடு.

4681. சமர்பட-போர் அழிந்துபட ; வெற்றி பெற.

மோதமர் புரிதரு சூருடல் ஒழிபட
மூடிய சமர்பட—விடுவேலா!
பாதவ நிறைகன சோலையின் வளமிகு
பார்புகழ் சிகிமலை—வருதேவே!

4682. வானவ ரைச்சிறை தானிட வைத்திடு
வானசு ரன்றனை—பொருஅயிலா!
கானவ ரற்பொடு தான்வளர் மைக்குழற்
காரிகை யைப்புணர்—புயநாதா!
ஞானர்க ளற்புத! மாமல ருற்றவர்
நாள்தொறு மற்பொடு—பணிபாதா!
பானல முற்றிடு வாழ்மதி யுற்றிடு
பார்புகழ் மெய்ச்சிகி—மலைவாழ்வே!

4683. கூன லம்பிறை சூடு செஞ்சடை
கோத ரும்புனல்
புனைநாத—னருள்பாலா!
பான லம்பெறு தூய செஞ்சொலி
பாவை சங்கரி
உமைமாது—தருபாலா!
தான லம்பெற வேணும் என்றவர்
தான்வ ணங்கிய
மலரான—இருதாளா!
தேன லங்கொளு சோலை தங்கிய
சீர்செ கண்டியின்
மலைவாழு—முருகோனே!

4684. அடத்தில் வந்தெதிர்
அமர்க்குள் வந்திடு—செயசூர்மா
கெடச்செ யும்படி
கிளர்ப்பொன் மிஞ்சயில்—தொடுசூரா!
நடத்தும் பரியினில்
நலத்த செகண்டியில்—வருதேவே!
திடத்த தண்டலை
திறத்த குன்றையின்—மலைவாழ்வே!

---

4682. ஞானர்களற்புத - ஞானிகளால் போற்றப்படுகின்ற அற்புதனே. பானலமுற்றிடு வாழ்மதி - பால்போலும் வெண்ணிறம் பெற்ற வளர்மதி.

4685. காதைப் பிடித்த விழியார்
காரைப் பழித்த குழலார்—அவராலே
பாதைக் கழித்த பயில்போல்
பாழிற் கவிழ்த்த நிதிபோல்—அலைவேனோ?
வாதைப் படுத்து வசுரோன்
மார்பைப் பிளக்க வயிலே—வியசூரா!
கோதைக் குறத்தி மயலா!
கோலச்சி கிப்பொன் மலைவாழ்—குகவேளே!

4686. இருவினைப் பயனு லடியனிப் படியே
இனியுங் கெட்டிட—அலைவேனோ?
பருவரற் பெருநீர் முழுகுபத் தனையே
பரிவுகப் பலினு—லெடுகாயோ?
அருமறைப் பொருளே! கருணைமாக் கடலே!
அமரருக் கரசே!—அருளாயோ?
திருமயிற் பரிமே னடனநற் பொருளே!
திகழ்முடிச் சிகிமா—மலைவாழ்வே!

4687. மோக மயக்கினல்
மோடி படைத்தமா—தர்களாலே
தாக மிருத்துநான்
தாழ்வு படைப்ப—தெதனலோ?
பாக மிருக்குமோர்
பாவை யிரட்டிமா—தர்கள்லோலா?
மாக முயர்த்துசீர்
வாழு மலைச்சிகா—மலைநாதா!

4688. நூறு மகத்தின ஞரருள் பொற்கொடி
நூலி னிடைக்கும—ரியினலே
வீறு படைத்திடு சூருடன் மற்பொரு
தூய கதிர்ப்படை—அயிலாளா!
தேறு தமிழ்ப்புல வோர்கள் மனக்கனி
சேரு முதற்பொருள்—பகர்வாயா!
ஆறு முகக்கும ரேச! எனக்கருள்
ஆதி மயிற்கிரி—வருதேவே!

---

4685. காதை........விழியார் - காதளவும் நீண்ட அழகிய விழியினைப்பெற்ற மகளிர். பாதைக்........பயில்போல் - இந்த உவமை விளங்கவில்லை.

4686. பருவரற்பெருநீர் - துன்பமாகிய கடல்; இத்தொடர் மிக அழகாய் அமைந்துள்ளது.

4687. மாகம் - விண்.

4689. எடுத்த செனன மதற்கு நலமும்
எனக்கு நலமு—முதவாயோ ?
தொடுத்த பழய வினைக்கு அழிவு
சுருக்கி லருள—வருவாயே.
அடுத்த அடியர் தனக்கு மிடியை
அலக்க ழிவுசெய்—தருளாயோ?
விடுத்த மலர்க ளுருக்கு மதுகள்
மிகுத்த சிலையின்—மலைவாழ்வே.

4690. மதுமலர் மாலை தரித்த
மணமலி கேசம் முடித்து
விழியாலே—எதிராவே
விதுமு மூட மிரட்டி
வெகுமய லாக விளைத்த
மடவாரால்—மெலியாதே
சதுமறை தேடு பதத்தின்
தரிசனம் நாளு மெனக்கு
உதவாயோ?—அமரேசா!
மூதுமறை யோர்க ணிறைத்த
முழக்கினர் தேடு சிகிக்கி
ரியின்மீதே—வருதேவே!

4691. வந்திடு வினையாலும் நொந்திடு துயராலும்
மண்புவி தனில்வாட—விதிதானோ?
அந்தியின் மதிசூடு செஞ்சடை முடிநாதன்
அன்பொடு தருபால!—அருளாயோ?
இந்திரன் முதலோர்கள் வந்தடி பணிதேவ!
என்துய ரினியேனு—மடுவாயே.
மந்திகள் குதிபோடும் பைம்பொழி லகலாத
வண்சிகி மலைமீது—வருதேவே!

4692. மாதவர்கள் கோடி பேர்கள்துதி பாத!
வாசமலி நீப—மலர்மார்பா!
காதலிய ரான மாதர்மய லான
காளைமுரு கேச!—அருளாயோ?

---

4689. சென்னம் - பிறப்பு. சுருக்கில் - விரைவாக. விருத்தமலர் - அலர்ந்த மலர்.

4692. காளைமுருகேச - என்றும் மாறு இளமை பெற்ற முருகேசனே. செகதேவே - உலகத்திற்குத் தலைவனே.

ஆதரவு நீய லாதுளது ஏது?
யாதுமறி யாத—தெதனலோ?
தாதவிழுஞ் சோலை சூழுசிகி மேரிற்
சாருகுரு நாத!—செகதேவே!

4693. எனது சிந்தையி னினைவெ னும்படி
இனிந லந்தனை—உதவாயோ?
கனக தண்டையி னொலிக லின்கலி
கலக லென்றிட—வருவாயோ?
உனது பங்கய மலரி லங்கிய
உபய செம்பத—முதவாயோ?
மனது நொந்திட துயர்த விர்ந்திட
மயிலில் வந்தருள்—சிகிமேரா!

4694. தரித்திர மான கடற்குழி வீழ்வேன்
தனக்கரு ளாத—தெதனலோ?
எரித்திடு நோயை விரட்டிட வேணும்
எழிற்சிறை நீடு—மயிலாளா!
விரித்திடு நீப மலர்ப்புனை மார்ப!
விதிக்குப தேச—முரைவாயா!
நெரித்திடு சோலை மிகுத்திடு நீழல்
நிறைத்திடு தோகை—மலைவாழ்வே!

4695. செனன மான அளவுஞ்
செயல்க ளலது திரிய—நலமாமோ?
உனது சரண மலரை
உறுதி யெனவு நினைதல்—செயுநாயேன்
மனிதின் மயல்கொள் துயர்கள்
மடியும் வகைக ளறிய—அறியாயோ?
கனக மலையை நிகருங்
கமழுஞ் சிகியின் மலையில்—வருதேவே!

4696. உடலில் வந்திடு துயர்த விர்ந்திட
ஒருவ ரந்தனை—அருளாயோ?
கடலி னன்பொடு துயில்பு ரிந்திடு
கருணை யின்கணர்—மருகோனே!

---

4693. உபயசெம்பதம் = இரண்டு செந்நிறத் திருவடிகள்.

4696. கருணையின் கணர் = கருணை நிறைந்த கண்களைப்பெற்றவர். மடல் = மலரிதழ்.

அடலின் மிஞ்சிய அவுணர் தங்குலம்
அழிய வன்றயில்—தொடுசூரா!
மடலி னின்றுகு மதுநி றைந்திடு
வளர்செ கண்டியின்—மலைவாழ்வே!

4697. இருவினைப் பயனு
விடர்படுப் பதுதீ—ரிடவாராய்.
கருவினுக் குளநான்
கருணையுற் றிடவே—அருளாயோ?
செருவினைத் திறன்மா
தெறிபடக் கனபோர்—புரிவேலா!
அருமறைப் பொருளே!
அணிசிகிக் கிரிவாழ்—குகவேளே!

4698. குடிவளர் குறத்தி மடவரல் தனக்குக்
குளிரிடு புனத்தில்—அலைபாதா!
அடியவர் தமக்கு வினைதனை யடித்து
அருள்தரு கனத்த—வடிவாளா!
இடியென அதிரத் தகுஅவு ணனுக்கு
எதிரிடு சமத்த!—முருகேசா!
கடிகமழ் நலத்த பொழிலது வளைத்த
கனகமய முற்ற—சிகிமேரா!

4699. அடல்புரி சூரன்
அழிபட வேலை—விடுசூரா!
கடல்துயில் மாயன்
கருணைய தான—மருகேசா!
மடலவிழ் நீப
மலரவிழ் மார்ப!—வடிவாளா!
நடமிடு தோகை
நலமயி லாள!—சிகிமேரா!

4700. கனக தண்டையொலி கலக லென்றதிர—வருவாயே.
அனந டந்துவரு அழகு கொண்டநடை—மருள்மானர்
மனம யங்கவரு மயலி னெந்துதிரி—கிடலாமோ?
எனது துன்பமற இனிக லம்புரிவை—சிகிமேரா!

---

4697. கரு........அருளாயோ - கருவினுள் அடைபட்டுக் கிடத்தற்குரிய நான் நின்னுடைய கருணையைப் பெறுவதற்கு அருள்புரிவாய்.

4698. அடித்து - அழித்து. சமத்த - போரினைப் புரிந்தவனே.

4700. அனநடந்து வரு அழகு - அன்னம் நடந்து வருவதுபோன்ற நடையழகு.

4701. அனையுடை வயிற்றுக் கருக்குழி
அதில்விழ விதித்துப் படைப்பது—நலமாமோ?
உனைநித நினைத்துத் துதித்திட
ஒருவர மெனக்குக் கருத்துட—னருளாயோ?
புனைமலர் கடப்பக் கனப்புய!
பொருளுறை தமிழ்க்குப் பொருட்சொலு—கனிவாயா!
சினைமல ருருத்துச் சிறப்பொடு
திகழ்பொழி னிறைத்துக் கதித்திடு—சிகிமேரா!

4702. துயரது தீர்த்துத்
துரைமுரு கேச!—அருளாயோ?
மயல்தரு வேட
மடமயின் மேவு—புயநாதா!
அயலவர் கள்போல்
அடியனை நாளும்—நினையாதே.
வயல்விளை நேம
மணமலி தோகை—மலைவாழ்வே!

4703. வேலை நிகர்த்த பார்வை மிரட்டி
மேலை மினுக்கி
வருமானார்—தருமாலால்
ஆலை யிடுக்கி லூரு கருப்பை
ஆக வுருக்கி
அலையாதே—அருளாயோ?
மாலை தரித்த மார்ப! எனக்கு
வாச மிகுத்த
இருதாள்தா—னுதவாயோ?
சோலை செழித்த கோடு நிறைத்த
தோகை மலைக்கு
அரசாளா!—கிருபைதாராய்.

4704. சாகர மானசமு
சாரம தானகன
மிடியாலே—அடியேனுன்
மோகம தாகிமன
மூடம தாகியுனை
நினையாதே—அலைவேனோ?

---

4701. இறையனாகப் பொருட்கு முருகனாகிய உருத்திரசன்மன் உரை கண்டனன் எனும் வரலாறு மூன்றும் அடியில் குறிக்கப்படுகின்றது.

4703. ஆலை இடுக்கிலூரு கருப்பை ஆக-ஆலையின் இடுக்கில் ஊர்ந்து செல்லும் கரும்பு தன்னுரு இழந்து துன்புறுவது போல ஆக.

பாகன கூறன்மயில்
பாவைமின் வேடர்மகள்
மயலாலே—புணர்மார்பா!
பூகமு லாவுவயல்
பூமலி தோகைமலை
வருதேவே!—அருளாயோ?

4705. நடக்குமயின் மீது
நலமருள நாயன்—முனம்வாராய்.
மடக்குயிலி சோலை
மயிற்குறமின் மேவு—புயநாதா!
திடக்குவலு சேனை
திரட்சியின சூரை—அடுவேலா!
கிடக்குமலை சூழுங்
கிளர்ச்சியுள தோகை—மலைவாழ்வே!

4706. நதித ரித்திடு சடைமு டித்திடு
நடன மற்புத சரணேசர்—தருபாலா!
கதிப டைத்திடு நடைப யிற்றிடு
கலப மெய்ச்சிகி தனிலேறி—வருதேவே!
விதிசெ விக்கொரு மறைத னைச்சொலும்
விமல நற்குரு பரநாத!—அருள்வாயே.
கெதியை யற்பொடு பணிப வர்க்கருள்
கிளர்மு டிச்சிகி மலைமீது—வருதேவே!

4707. ஆடிய விசைபோலே யான்மன—முழல்வேனோ?
பாடிய தமிழ்வாயா! பார்வதி—தருபாலா!
வாடிய இடைமானர் மாமயல்—மிகுலோலா!
சூடிய பொழில்சூழு தோகையின்—மலைவாழ்வே!

4708. தீவினை யதனு லேவரு துயரால்
தீவிழு புழுவாய்—மெலிவேனோ?
பாவினை நலமாய் நாள்தொறு முனையே
பாடிய வெனையா—ளிடவாராய்.
ஆவிய கல்முனே நீயருள் புரிவாய்.
ஆதர வுகள்வே—றுளதோதான்?
வாவிகள் பொழில்சூழ் தோகையின் மலைமேல்
வாழ்குரு பரனே!—குகவேளே!

---

4704. பூகம் - பாக்குமரம்.
4705. திரட்சியினசூர் - திரண்ட கூட்டமான அசுரன்,
4706. கெதி - கதி.

4709. வனச லெட்சுமி வாச
மரும மைக்கடன் மீது
துயின்மாயோன்—மருகோனே!
எனது டற்புணர் நோயை
இனிய றக்கருணேச!
வருவாயே—அமரேசா!
மனதி னிற்றுய ராலும்
வறுமை யிற்பட ராலும்
மெலிவாயே—உழல்வேனோ?
தினக ரப்பிரபை போலத்
திகழ்மு டிச்சிகி மேரில்
வருதேவே!—அருளாயோ?

4710. கடமத மொழுகிய கபோலத்தினின்
கறையடி மனமகிழ்ந் துனைப்பெற—வருளாயே.
நடமிடு சிறைதவழ் குதிரைக்கசை
நறுமல ரணிபுய! செயம்முற—அருளாயோ?
புடவியி லடியவ ருடைஇச்சையைப்
புரிதரு வெகுகருணைக்கட—லெனும்நாதா!
அடவியின் வகைதரு நலமுற்றிய
அழகிய சிகிமலை முருக!க்குரு—பர!நாதா!

4711. பனக சயனத்தர்
பணிதரு பதத்த—ருள்பாலா!
தனகிரி பகட்டு
தனிமடவ ருக்கு—மயலாலே
உனதடி நினைக்க
உளமதி யிப்ப—தருவாயே.
கனவர மருட்செய்
கமழ்ச்சிகி மலைக்கு—அரசாவாய்.

4712. மிடியாகிய வலைக்குள்
மெலியாவகை யெனக்கு—உதவாயோ?
அடியார்களின் நலத்தை
அறியேனெனை நலத்துள்—விடுவாயே.

---

4709. வனச.........மாயோன் - தாமரையில் வாழும் இலக்குமி வாழ்ந்து வரும் திருமார்பினைப்பெற்றுக் கரிய கடலில் அறிதுயில் செய்கின்ற திருமால்.

4710. புடவி - உலகம். அடவி - காடு.

4711. பனக.........பாலா - பாம்பணையில் பள்ளிகொள்ளும் திருமால் பணிகின்ற திருவடிகளைப் பெற்ற சிவபெருமான் தந்த செல்வமே. உளமதி - உள்ள அறிவு.

குடிவாழ்கிற குறத்தி
குயவாசையின் மயக்கி—லலைநாதா!
வடிவாகிய முடிப்பொன்
மலிதோகையின் மலைக்கு—அரசாளா!

4713. மலைநி கர்த்தகன
மடவர்த னக்குள்வரு—மயலாலே
அலையவி தித்தவிதி
தனைவி லக்கியருள்—புரிவாயே.
சிலையைவ ளைத்துவுடன்
சினகிம ணத்தவர்தன்—மருகேசா!
தலைமைப டைத்தசிகி
தகைமைமி குந்தமலை—வருவாழ்வே!

4714. வடிவே லெடுத்து மயின்மீதில் அற்பி—னெடுவாராய்.
குடிவாழ் குறத்தி குவிமா முலைக்கு—மயலாவாய்.
அடியே னெனக்கு அருள்யாவு மிப்ப—உதவாயோ?
கடியார் பொழிற்கொள் கமழ்சூழ் சிகிப்பொன்—
[மலைவாழ்வே!

4715. பாதிமதி சூடு வேணியா ரின்
பாகம்வளர் மாது—தருபாலா!
மாதிலுயர் மாது வேடர்குல மாக
மாலின்மன தாசை—மிகுதேவே!
சூதிநிக ரான பூமுலைய ராசை
சூழ்வினையின் மீறி—அலைவேனோ?
வாதிலகு சேரு சூழ்கிகர நீடு
மாமலைய ஞான—சிகிமேரா!

4716. இதுவரை யிலுமுன தடிபணி
எளிய னுடைநல—முதவாதேன்?
புதுமல ரணிபுனை புய!குக
பொலிமயில் மிசையினில்—வருவாயே.
முதுமறை புகழ்குரு பர!அருள்
முனிவரர் பணிசெயும்—இருதாளா!
விதுதவழ் பொழில்நிரை தருசிகி
விரைமலை வருமுயர்—பரமேசா!

---

4713. சினகி - சானகி. மணத்தவர் - திருமணம் புரிந்தவர்.

4715. ‘சூது’ என்ற சொல் எதுகை நோக்கிச் ‘சூதி’ எனத்திரிந்தது.

4717. மடமயில் குறத்தி
மருவிய புயத்து—வடிவாளா!
படவர வுற்றநல்
பரம னலத்த—மகவோனே!
நடமயில் நடத்து
நறுமலர் தரித்த—புயநாதா!
வடவரை நிகர்த்த
மயின்மலை தனக்கு—அரசாளா!

4718. ஆடரவு தரித்த
ஆறுலவு சடைப்ப—ரமர்பாலா!
நாடரிய பதத்த
நான்முகன் தவத்துக்—குபதேசா!
தேடரிய நலத்த
சீர்ப்பொருளை எனக்கு—உதவாயோ?
தோடலர் பொழிற்கொள்
தோகைமலை தனக்கு—வருதேவே!

4719. வீரமி குத்திடு
வேலையெ டுத்தெதி—ரிடுசூரர்
மார விடுத்திடு
மாபெல முற்றவ!—அருளாயோ?,
காரிகை மயற்கிசை
காமம யக்கினின்—மெலிவேனோ?
சீரணி மைப்பொழில்
சேர்சிகி மெய்க்கிரி—வருதேவே!

4720. எனது பிணிக்கு அவுழ்தமே
இனிய நலத்தி லருளுவாய்.
மனதி லுற்ற துயரமே
மடிய வரத்தை உதவுவாய்.
அனந டைபெற்ற குறமினள்
அவளை மகிழ்ச்சி யொழுகவே
தனகி ரிமருள் பண்புயர்
தழைசி கிமின்மெய்க் கிரியினய்!

---

4719. 'மார' என்பது 'மாற' என்ற சொல்லின் திரிபு.

4720. அவுழ்தம் - அவிழ்தம்; மருந்து.

4721. தொலையாயரு தீவினை யான்மனத்
துயராலினி வாடுவ னோயிது—அறியாயோ?
விலைமாதர்க ளால்மய லாலுடல்
மெலிவாய்விட லாகிட லாகுமோ?—அருளாயோ?
கலையாவையு மேயுணர் பாவல!
கருணாநிதி யேயென தாசையின்—அருளாயே.
தலைமீதுயர் கோடுக ளேகிரை
தருதோகையின் மாமலை வாழ்வுறு—குகவேளே!

4722. சரதத் தாலிரு நயனத் தான்மயல்
தருபொற் பாவையர்—நயமாமோ?
சுரதத் தால்மன வறிவைப் போய்விடு
சுகமத் தான்மெலி—கிடலாமோ?
விரதத் தாலனு தினமற் பாலுனை
விரைவிற் கால்தொழு—மெனையாளாய்.
பரதத் தானடை புரிமைத் தோகையின்
பரியச் சீர்சிகி—மலைவாழ்வே!

4723. தரித்திர சாகரம் விழுவோரை
சணத்தினின் மேலெழு
நிதிகோடி—தருதேவே!
மரித்திற வோர்கண் மதனாடே
வரச்செய்து சூருடன்
நடுவுபோர்—புரிவேலா!
நரித்திரண் மாவென வரவேதான்
நடத்திய நாயகர்
தருபாலா!—அருள்நாதா!
எரித்திடு நோய்தனை யடுவாயே.
எழிற்சிகி மாமலை
வருதேவே!—அருளாயோ?

4724. பரதபத யுகளமது
பணிபவர்க ளிடமருளு—மரனார்பால்
வரவுமையின் மகளுதவு
மகவெனிடை மயிலின்மிசை—வருவாயே.

---

4721. ஆசையின் - ஆசையைப்போல.

4722. போய்விடு - அழித்துவிடுகின்ற. சுகமத்தான் - சுகம் அதனால். மரபு - தொன்றுதொட்டுவந்த முறைமை. பரதம் - பரத நாட்டியம்.

4723. சணத்தினின் - மிக விரைவாக. நரிகளைப் பரிகளாக்கிய மதுரைச் சொக்கநாதரின் திருவிளையாடல் மூன்றும் அடியில் குறிக்கப்படுகின்றது.

4724. பரதபதயுகளம் - நடனமிடுகின்ற இரு திருவடிகள்.

இரவினிற வுடலவுண
　　ரிலகுகுல மழியவயில்—விடுதேவே!
குரவின்மலர் மிகுபொழில்கள்
　　குலவுசிகி மலையில்வரு—குகவேளே!

4725. பாவியென வந்து பாரில்வெகு துன்ப—மதனாலே
ஆவிதுயர் கொண்டு ஆசைபடு கின்ற—தநுதீராய்.
காவிமலர் ரெண்டு காதள வுயர்ந்த—விழிமானர்
தேவியர்பு ணர்ந்த தேவ! சிகிஅங்கி—ரியினாதா!

4726. கனக தண்டை யொலியி லங்கு
　　கழல்க ளென் றன் விழிகள் கண்டு—குளிரேனோ?
எனது சிந்தை மகிழ வந்து
　　இனிய தொண்டை இதழ்தி றந்து—அருளாயோ?
அனந டந்த நடைப யின்ற
　　அழகு கொண்ட குறம டந்தை—புணர்தோளா!
வனநி றைந்த வளமி குந்த
　　மயிலி னங்கி ரியிலி லன்பு—புரிதேவே!

4727. அடலவுணர் கிளைமுழுதும்
　　அழிவுபட வொருவயிலை—விடுசூரா!
மடலவிழு மலரணியும்
　　மருமிகல மடியனிட—முதவாயோ?
கடல்துயிலு மரியினுடைக்
　　கருணையுள மருகிகிருபை—புரிவாயே.
வடவரையை நிகரவரு
　　மயின்மலையி லிலகுகுரு!—பரவேளே!

4728. மகஞ்செய்து பேறு பெறுமகன் வாழ்வில்
　　மகிழ்ந்திடு வாச—வன்மினதான்
சுகம்பெற மேப விரும்பிமு றுடு
　　துலைந்திட மாதை—யடுவேலா!
அகமெனு மாசை மிகுந்திடு வாழ்வில்
　　அலைந்திடு நாயன்—மிடிதீராய்.
சகந்தனில் மேன்மை பெறுஞ்சிகி யான
　　தழைத்திடு மேரில்—வருதேவே!

4729. எனது மனதினிலே
　　இலகு துயரதனை—யடுவாயே.
வனச மலரினிலே
　　வளரு மகளுடைய—மருகேசா!

உனது பதமுறுந்தி
கொளுமெனையருள—மயிலாளாய்.
கனக மலைநிகரு
கமழு சிகியின்மலை—வருதேவே!

4730. ஆதரவு வேறு
ஆருமிலை தோண—விலையோதான்?
மாதரசி வேடர்
மான்மகளை மேவு—புய!வேளே!
தாதவிழு நீப!
சாமி!குரு சாமி!—அருளாயோ?
சீதமதி தாவு
சீர்சிகியின் மேரில்—வருதேவே!

4731. வனசத்திரு மயிலைத்தின
மருவிப்புணர் புயமாயோன்—மருகோனே!
எனதிச்சையை நிறையச்செய
இப்பொழுதென் விழிகாண—வருவாயே.
சினமுற்றிடு அவுணர்ப்படை
தெறிகெட்டிட அயிலாலே—பொருதேவே!
கனகச்சிலை நிகரொத்திடு
கமழ்மெய்ச்சிகி மலைமீதினி—லொருநாதா!

4732. மெலிதாகிய நூலிடை மாதர்கள்
விடுதாய்வரு மாசையி னன்மன—மெலிவேனே?
சலியாதுயிர் வாழ்ந்திடு வானவர்
சகலோர்களும் நாள்தொறு மேபணி—புரிதாளா!
வலிதாயெதிர் தானவர் சேனைகள்
மடிவாய்விழ வேயட லேபுரி—கதிர்வேலா!
மலிவாகிய சோலைகள் சூழ்தரு
வனமேவிய தோகையின் மாமலை—முருகோனே!

4733. அடல்வி ளைத்திடு அசுர னைக்கொ லு—மயிலாளா!
மடல விழ்த்திடு மலர்த ரித்திடு—குழன்மானர்
உடல்மி னுக்கினி உருகு மைக்கொரு—அருடாராய்.
நடமு ழக்கிய நலம யிற்கிரி—வருதேவே!

4734. தரித்திர நோயினல்
சனத்தினில் வாழலா—வதுவேனே?
விரித்திடு நீபமே
மிகுத்திடு மாலைசூழ்—புயநாதா!

4734. சனம் - மக்கள் கூட்டம். வரித்திரன் - வண்டுக்கூட்டம்.

எரித்திடு நோயினல்
இனித்துய ராகவே—அலேவேனே?
வரித்திரள் சூழுகா
மணத்திடு தோகைமா—மலேவாழ்வே!

4735. ஒருமடமா னுடைமயலா—லலேவேனே?
வருதுயரான் மனமுருகா—தருள்வாயே.
மருமலர்சூழ் மருமசிகா—மலேவாழ்வே!
அருமறையோ ரடியவர்தே—டியபாதா!

4736. அஞ்சிட வருநோயால்
அன்பனி னுள்துயரே—படலாமோ?
நஞ்சணி மிடறுனோர்
நம்பர னுர்தருபா—லக!வேளே!
கொஞ்சிய மொழிமானுர்
கொண்டிடு மால்தனினல்—மெலிவேனே?
மஞ்சிக ளடர்காவே
மண்டிய தோகையின்மா—மலேவாழ்வே!

4737. துயரான்மன மெலியாவகை
துரைநாயக!—அருளாயே.
மயலான் மிகு மட மாதர்கள்
வசமாகிட—விதியாமோ?
அயலானென வெணலாவது
அதுவேதய!—அருளாயோ?
கயல்தாவிய தடமேமிகு
கனதோகையின்—மலேவாழ்வே!

4738. சானகி தனக்கு மாலே
தானணி கரத்த ராசை—மருகோனே!
கானவர் மயிற்பெ ணுளேக்
காதலோ டணேத்து மேவு—புயநாதா!
தானவர் குலத்து மாவின்
சாடிய படைக்கு மீறு—அயிலாளா!
தேனலர் மிகுத்த சோலே
தேறிய சிகிக்கி ரீச!—அருளாயோ?

---

4735. மருமலர்சூழ் மரும = நறுமணம் மிக்க மலரான் சூழப்பெற்ற மார்பினை உடையவனே.

4737. 'என்னை அயலான் எனத்தாங்கள் எண்ணலாகுமோ? ஐயனே அத்தகைய எண்ணம் எதற்காக? அருள்புரிவாய்' - என்பது மூன்ரும் அடியில் அமைந்த வேண்டுகோள்.

4739. வாதைப்ப டுத்துகிற தாரித்தி ரத்தையினி
மானப்ப டுத்தி—விடுவாயே.
கோதைக்கு றத்தியிரு கானப்பு னத்திலவள்
கோலத்தி னுக்குஇனி—மயலாவோய்!
மேதைக்கெ னக்குஇனம் வேணாற்ற விச்சையது
பேணித்த ரக்கனிவு—வரொணாதோ?
போதைக்கி ழித்தொழுகு தேனாற்ற பூம்பொழிலே
பூணாற்று யர்ந்தசிகி—மலைவாழ்வே!

4740. என்ற னாருயிரி லிருந்து வாழுவதி
லென்றும் மேன்மைபெற—லறியேனே.
இந்த வேளைதனி லன்ப! வேணவரம்
இன்று தாரவென—வருவாயே.
சொந்த மானகுற மங்கை யாள்மருவு
தொங்கல் சூடுபுய—முருகோனே!
வந்த நோய்தவிர இன்று நீவருவை
வண்சி காமலையின்—வளர்தேவே!

4741. வறுமைப் பிணிதனில் மெலியப் படுகிற
மகிமைக் கெடுதல்கள்—தவிராயோ?
தறுகட் கொடியர்க ளவுணர்க் குலமது
தணியச் சமர்புரி—கதிர்வேலா!
முறுவற் பளிரென நகையைப் புரிகுயின்
மொழியைப் பயில்பவர்—மயலாலே
சிறுவப் படுவிதி யதனுக் கொருவருள்
செய்கு வைகள்சிகி—மலைவாழ்வே!

4742. துன்பக் கடல்விழு மடியவர்
துங்கப் பிணைநின தருள்கொடு—நோய்தீராய்.
இன்பச் சரசந யனமுள
இந்துப் பிறைநுதன் மடவியர்—மால்தீராய்.

---

4739. தாரித்திரம் - தரித்திரம்; வறுமை. வரொணாதோ - வர ஒண்ணாதோ. போது - பேரரும்பு.

4740. தாரஎன - தருதற்கென்று.

4741. தறுகண் - அஞ்சாமை. முறுவல் - பல். சிறுவப்படு - சிறுமைப்படு; இழிவுபடுத்தப்படு.

4742. துன்பக்........தீராய் - துன்பமாகிய கடலில் விழுந்து கரைகாணாது தத்தளிக்கின்ற அடியார்க்கு நீ தரும் தூய்மையமைந்த அருளாகிய புணையினால் என்னை வாட்டும் நோயினையும் தீர்த்துவிடு. நயனம் - கண். இந்து - சந்திரன்; மால் - மயக்கம். அங்கம் - திருமேனி.

உன்பற் றலதினி யுளதிலே
உம்பர்க் கரசியின் மயில்புணர்—இருதோளா!
அன்பர்க் கருள்தர மயின்மிசை
அங்கத் தொடுவரு குவைசிகி—மேரானா!

4743. லோகத்தி லன்பிலர்க ளாகத்த னம்பெருக்கி
லோபத்தின் மிஞ்சினர்க—ளவருடே
போகத் துணிந்தவர்கள் நேருற் றிரந்திடுதல்
போலக் கொடுந்துயர—முளதோதான்?
மோகத் தின்முந்துமட வாருக் கிசைந்தகன
மோடிக் குழன்றலேதல்—விதியாமோ?
மாகத் துயர்ந்துபொழி னீரிற் குளிர்ந்தனைய
வாழ்வுற்ற குன்றைமலே—வருதேவே!

4744. விதித்த விதியாலே வருத்த மிகுநோயான்
மிகுத்த துயர்நானே—படலாமோ?
கதித்த மயில்மீதே நடத்தி யென்முனலே
கருத்தி னுடுநீயே—வருவாயே,
உதித்த கதிர்போலே நிறத்த ஒளிர்தேகா!
உமைப்பெண் மகிழ்பால!—முருகோனே!
மதித்த முடிமேலே நிறைத்து வளர்காவே
வளைத்த சிகிநாதா!—கிருபைதாராய்.

4745. அடியவர் கோடி பேர்கள்
அடிதொழு நாத! வேண—தருளாயோ?
கடிகம ணீப மாலே
கனபுய மீது சூடும்—வடிவாளா!
மிடியினில் வீழு வோர்கள்
வினைதனை யோட வேசெய்—கதிர்வேலா!
குடிசினில் வாழு மாது
குறமயில் தோள! தோகை—மலேவாழ்வே!

4746. மடவார்கள் மயலாலென்
மனநோதல் தவிராத—தெதனுலோ?
நடமாடு மயிலேறி
நறுநீப மலர்சூடி—வருவாயே.
படராவை யணிவேணி
பரமேச னருள்பால!—அருளாயோ?
தடநீடு புயல்சூழு
தகுதோகை மலேமீது—வருதேவே!

---

4746. படரா = படத்தொடு கூடிய பாம்பு.

4747. பரவு மடியவர் கொடிய வினைகெடு
 படநல் வரமருள்—புரிவாயே.
இரவு பகலநு தினமு நினைவுள
 எனது துயரினை—அழியாயோ?
கரவு புரிவிழி மடவ ரவருடை
 கபட வுறவொடு—அலைவேனோ?
குரவு மிகுபொழி லுகும தருவிகள்
 குலவு சிகிமலை—வருதேவே!

4748. கற்பு நிறைமயில் நற்ப வளஇதழ்
 கட்டு மலரணி—குழல்மானாள்.
விற்பு ருவமதி விட்ட கணைவிழி
 விரத்தி பெறுமதி—முகமானாள்.
பொற்பு மிகுஇமை யக்கொ டியளருள்
 புத்திர! குருபர!—குமரேசா!
அற்பு ருகுபவ ருக்கு அருள்செயும்
 அத்த! சிகிமலை—வருதேவே!

4749. வருமைப் பிணியாலே
 மனமிப் படிநானே—மெலிவேனோ?
சிருமைப் படலாமோ?
 தினமிற் பதநாளாய்—நினைவோரே.
தருமைக் கணினாற்
 தருபொய்க் கனமயலா—லலைவேனோ?
இருமைக் கருடாராய்
 இனநற் பொழில் சூழ்தோ—கைமினாதா!

4750. துயரக்கடல் விடுவோர்கள்
 சுகமுற்றிட நலமான—அருடாராய்.
மயலைப்புரி மடவார்கள்
 வசமிச்சையி லலையாதே—அருடாராய்.

---

4747. கரவு புரி விழிமடவர் - களவினைச் செய்கின்ற விழிகளைப் பெற்ற மகளிர். உகுமதருவிகள் - வீழ்கின்ற தேனாகிய அருவிகள்.

4748. இமையக்கொடி - மலையரசன் மகளாகிய பார்வதி. அத்த - தலைவனே.

4749. வறுமை, சிறுமை என்பன வருமை சிருமை என ஆளப்பட்டன. இருமை - இம்மை மறுமை ஆகிய இரண்டு.

இயன்முத்தமிழ் பகர்வாயா!
இனியற்பொடு மயின்மீதே—வருவாயே.
செயமுற்றிடு புயநாதா!
சிகிமெய்க்கன மலைவாழ்வே!—புரிதேவே!

4751. தருநிறை தினைக்கதி ராவ லாய்கிழி
தமரொடு இரைத்தகை நாடி யேமுனம்—எதிராவே
வருவதை விரட்டுசொல் காதி லேவிழ
மனமது மயக்க தாக வேயவள்—முனமேபோய்
உருகிய மனத்தொடு சேரவே யவளுடை
உபய சரணத்தினில் வீழ நாயக!—அருளாயோ?
பருவரல் விலக்கியே நாளு மாளுவை
பருமணி முடிச்சிகி மேரி லேவளர்—குகவேளே!

4752. வடிவே லெடுத்து மயின்மே னடத்தி—வருவாயே.
அடியார் தனக்கு அனுபூதி மெத்த—உதவாயோ?
குடிவாழ் குறத்தி குவிமா முலைக்கு—இசைதோளா!
கடியார் பொழிற்கொள் கனதோகை மெய்க்கி—ரியினுதா!

4753. காயத்தினை மினுவெனவும்
காணப்பல பணியுடன்முன்—வருமானர்
மாயத்தினில் மனம்விழவும்
வாதைப்படு வதுமிதுவென்—விதிதானோ?
தீயத்திட அவுணர்களைச்
சீறிப்பொரு தியசவுரிய—மிகுவேலா!
தூயத்திரு முடிகுலவுந்
தோகைக்கிரி வருகுமர!—குருநாதா!

4754. வால மதிநுதன்
மாது குறமயில்—புணர்தோளா!
சால விழியர்கள்
சார மயல்தனி—லலைவேனோ?

---

4750. இயன்முத்தமிழ் - உயிரோட்டத்துடன் அமைந்த இயல், இசை நாடகம் எனும் முப்பகுதியவாய தமிழ்மொழி.

4751. முதல் மூன்று வரிகள் முருகன் வள்ளியுடன் தினைப்புனத்தில் செய்த திருவிளையாடலைக் குறிக்கின்றன.

4753. காயத்தினை.........மானர் - உடல் மின்னலென்று காண்போர் கூறுமாறு பலவகை அணிகளை அணிந்து முன்வரும் மங்கைமார். சவுரியம் - ஆற்றல்.

4754. வாலமதி - பிறைச்சந்திரன். சாலவிழியர்கள் - ஜாலம் செய்யும் கண்ணினைப் பெற்றவர்கள். 'தலம்' என்ற சொல் 'தாலம்' என நீண்டது.

கால மிதுகலி
கால மெனவருள்—புரியீரே.
தால மதிலுயர்
சார லுயர்சிகி—மலைவாழ்வே!

4755. வந்த டிபணி யடியவர்
வண்பொ ருணிறை வுறஅருள்—புரிவாயே.
சந்த டிமிக இமையவர்
தண்ட ளிர்மலர் கொடுபணி—யிருதாளா!
எந்த னைமயல தனிவினி
இன்பு றும்படி வசமிடு—மடவாரால்
சிந்த னைகெடு மதற்கெடு
தென்சி கிமலை வருகுரு—பரவேளே!

4756. பருத்த தனமாதர்
பகட்டின் மனநோத—லதனாலே
வருத்த முடனுயன்
மயக்கு மயல்வீழல்—விதியாமோ?
ஒருத்தர் துணையேது
உமைக்கு மகவான—முருகேசா!
திருத்த முளசோலை
செழித்த சிகிமேரில்—வருதேவே!

4757. கனக தண்டை யொலிமி குந்த
கழல்கள் கண்டு பணிய வந்து—அருளாயோ?
எனது சிந்தை யிலகு துன்பம்
இடர்து றந்து வெகுந லங்கள்—புரிவாயோ?
வனச மண்ட பமதின் மங்கை
மருவு கின்ற விறலி னன்பு—மருகோனே!
தினக ரன்பி ரபையின் மிஞ்சு
சிகர முந்து கமழ்செ கண்டி—மலைவாழ்வே!

4758. கடிக மழ்பொழில் வளர்கு றமயில்
கனத னமிசை—புணர்தோளா!
மிடியெ னவொரு கடல்வி ழுமெனை
வெளிப டஅருள்—புணைதாராய்.

4755. சிந்தனை.........கெடு = உள்ளத்தைக் கெடுக்கும் அத்தீய தன்மையைக் கெடுத்துவிடு.

அடிதொ ழுவரு மிமைய வர்முடி
அறைப டவுகு—மணிதானே
படிமு ழுவது நிறைப டவது
பனிரி டுசிகி—மலைவாழ்வே!

4759. கஞ்ச மலர்நிகர்
கண்கள் கொடுபயில்—புரிமானர்
வஞ்ச மயல்தனில்
மங்கி மனத்துய—ராகாதே
அஞ்ச லெனவருள்
அண்டர் பணிபுரி—குகநாதா!
தஞ்ச மிலையருள்
தங்க மலைநிகர்—சிகிமேரா!

4760. குடத்தைப் பொருதன மடமான்
குறத்திக் கிசைதரு புயவா!—அருளாயோ?
நடத்தைப் புரிபரி மயின்மேல்
நலத்தைத் தரவென்முன் வருவாய்—குகநாதா!
விடத்தைத் தருவிழி யவர்பால்
விருப்பத் தொடுதிரி குதனீ—தவிராயோ?
அடத்தைச் செயுமவு ணர்களே
அழிப்பைப் பொருதிய வயிலா!—சிகிமேரா!

4761. அடல்வி ளைத்திடு மவுணர் மெய்க்குலம்
அழிய நெட்டயில்—தொடுசூரா!
மடல்வி ரித்திடு மலர்த ரித்திடு
மடம யிற்குற—மகள்தோளா!
கடனி கர்த்திடு மிடித விர்த்தொரு
கருணை யுற்றென்முன்—வருவாயே.
உடலெ டுத்திடு துயரொ ழித்தரு
ளுடனெ னக்கருள்—சிகிமேரா!

4762. எவனக்குற மயிலுக்கிசை
எழிலுற்றிடு—துரைநாதா!
கவனப்பட வறுமைக்கன
கடலுற்றலை—வதுதீராய்.

---

4761. கடனிகர்த்திடுமிடி - ஆழங் காணமுடியாத கடலை ஒத்திருக்கும் வறுமை.

4762. எவனக்குறமயில் - இளமை பொருந்திய குறவர் மகளாகிய மயில் போன்ற வள்ளியம்மை.

தவனற்குறு முனிவர்க்கருள்
தருமெய்க்குரு—பரவேளே!
சிவனற்பொடு தருபுத்திர!
சிகரச்சிகி—மலைவாழ்வே!

4763. தாதவிழ்மண நீப மாலிகை
தானணிபுய நாத! நாயக!—அருளாயோ?
மோதமர்புரி சூர மாவுடன்
மூடிடவரு சேனை வீழிட—எயும்வேலா!
மாதவர்முத லோர்க ளேபணி
வாசனைமல ரான சீர்பத—முருகோனே!
வாதடர்பொழில் சூழ்சி காமலை
வாழ்தருகுரு தேசி கா!நடை—மயிலாளா!

4764. அந்திமதி சூடு செஞ்சடையி னுதன்
அன்பின்மிகு வான—மக!வேளே!
சந்திரமுக மாது பைங்கொடியள் வேடர்
தன்குலமி னுளை—யணைதோளா!
தந்திமுக நாதர் தன்துணைவர் மேன்மை
தந்துநய மாக—அருளாயோ?
மந்திகுதி போடு பைம்பொழில்கள் சூழு
வண்சிகியின் மேரில்—வருவாழ்வே!

4765. மனம்வ ருந்திய துயர கற்றிநல்
வரமெ னக்கருள்—புரிவாயே.
தனகி ரிக்குற மகள்ம யற்கிசை
தருகு க!க்குரு—பரநாதா!
தினக ரப்பிரபை நிறமி குத்திடு
திருவுற் றெனவு—டன்வாராய்.
கனக மெய்க்கிரி நிகர்ப டைத்திடு
கமழ்சி கிக்கிரி—வருதேவே!

4766. அண்டர்கள் பணிசரணு!
அன்புட னருள்புரிவாய்—குகநாதா!
வண்டர்கள் கனவவுணர்
மங்கிட அயில்தனையே—வியசூரா!

---

4762. தவனற்குறுமுனிவர் - தவத்தைச்செய்த நல்ல குட்டை முனிவராகிய அகத்தியர்.

செண்டட நிருதன்மான்
சிந்தை மகிழ்புதல்வா!—அருளாயோ?
கொண்டல்கள் படிபொழில்சூழ்
குன்றையின் மலையரசே!—அமரேசா!

4767. வறுமைக ளாகிய வலைகடல் மீதினில்
மடிபடு நாயன்முன்—வருவாயே.
சிறுநுத லுயகி குறமகள் மேவிய
திருமலர் சூடிய—புயநாதா!
தறுகணர் தானவர் குலமழி வாய்விடு
சமரகு கேச!பொன்—மயிலாளா!
மறுவறு சோலைகள் நிறைசிகி மாமலை
வருகுரு நாயக!—அருளாயோ?

4768. சூது நிகர்த்த மாதன முற்ற
தோகைய ரற்ப—மயலாலே
யாதும் நினைப்பி லாது மயக்க
மாக விதித்தல்—தவிராயோ?
சூது படித்த சூர னுரத்தில்
தூய அயிற்கொ—டெயும்வீரா!
போது நிறைத்த சோலை நிறைத்த
பூமலி யுற்ற—சிகிமேரா!

4769. விதித்த விதியோ?
மிடிக்கு ளலைவே—னெனையாளாய்.
கதித்த நடைசேர்
கனத்த மயின்மேல்—வருவாயே.
துதித்த சரணு!
துரைப்பெ ணிணையே—யணைதோளா!
உதித்த பொழில்சூழ்
உயர்த்த சிகிமா—மலைவாழ்வே!

4770. கானக மடந்தை
காதல்கொ டணைந்த—புயநாதா!
வானவர் மதிழ்ந்து
மாமல ரணிந்து—பணிபாதா!
தானவர் குலங்கள்
தாழ்ந்திட வன்று—விடுவேலா!
தேனலர் நிறைந்த
சீர்சிகியில் வந்த—முருகோனே!

4771. வடிவே லெடுத்து
வலுசூரை வெற்றி—புரிசூரா!
குடிவாழ் குறத்தி
குயமீ தணைத்த—புயநாதா!
மிடியால் வருத்த
மிகவே அலைத்தல்—தவிராயோ
கடியார் பொழில்கள்
கமழ்தோகை மெய்க்கி—ரியினாதா!

4772. எடுத்த உடல்தீர
எனக்கு நலமாக—அருளாயோ?
தொடுத்த கனமாலை
சொருக்கு குழன்வேடர்—மகள்தோளா!
அடுத்த மர்செய்சூரை
அலக்க ழியவேலை—எயும்நாதா!
விடுத்து மலர்தேனை
மிகுத்து விடுதோகை—மலைவாழ்வே!

4773. உத்திரமதி லடியன்முன்
உத்திரமினி யுதவுவை—செகநாதா!
பத்திரமலர் கொடுநித்தம்
பத்தியினொடு பணியடி—யவர்நாதா!
அத்திவிழி மடவியர்
அற்பதனி லலைகுத—றவிராயோ?
சித்திரமுடி மணியொளிர்
சித்தியருள் சிகிமலை—வருதேவே!

4774. அந்தர விமையவர்
அன்பர்கள் முனிவர்கள்—பணிபாதா!
இந்தணி சடைமுடி
இன்கறை மிடறின—ருள்பாலா!

---

4772. சொருக்குகுழல் - சொருகிய கூந்தல்; சேர்த்த கூந்தல்.

4773. உத்திரம் - முன்னது நாண்மீன்; பின்னது விடை.

செந்தமிழ் பகரிடு
செங்கனி யிலகிய—அருள்வாயா!
சந்தமி கும்பொழில்
தங்கிய சிகிமலை—வருதேவே!

4775. எனது துயர்தீர
இனிய வரம்வேண—தருள்வாயே.
அனந டையின்மாது
அழகு திகழ் வேடர்—மகள்தோளா!
உனது பதமீது
உறுதி செயுநாய—னிடம்வாராய்.
கனக மலையான
கமழ்சி கியின்மேரில்—வருதேவே!

4776. சிந்தையில் வருதுய ரம்பொடி படவருள்
செங்கதி ரொளிவிடு—வடிவாளா!
தந்தையி னெருசெவி யின்கனி வுடன்மறை
தங்கிட வருள்புரி—கனிவாயா!
பந்தையு மலையிணை யுஞ்சரி சொலுமுலை
பண்கிளர் மொழிமட—வியர்தோளா!
எந்தை!நி னடிதொழு மன்பனை அனுதினம்
என்தனை நினைகுவை—சிகிவாழ்வே!

4777. அருண நிறமேனி
அழகு திகழவே—அருளாயோ?
தருண மிதுவேளை
தனிமயி லிலேறி—வருவாயே.
வருண மலர்சூடு
மயிலி குறமாது—புணர்தோளா!
கருணை முருகேச!
கமழ்சி கியின்மேரில்—வருதேவே!

4778. இடியென முழக்கி
எதிரவு ணற்கு—லமெலாமே
முடிபட மிகுத்த
முனிவுட னடற்செய்—செயவீரா!

---

4776. எந்தை - அண்மைவிளி.

4777. வருணமலர் - நல்ல நிறமமைந்த பூ.

அடியவர் தமக்கு
அளவறு நலத்தை—அருள்தேவே!
கடிகமழ் பொழிற்கொள்
கனசிகி மலைக்கு—அரசாளா!

4779. சமரமிடு சூரன்
தனதுபடை வீழ—விடுவேலா!
அமரர்முத லோர்கள்
அடியர்முனி வோர்கள்—பணிபாதா!
எமன்வருமு னுக
எளியன்முனு லாச—முடன்வாராய்.
பமரமிசை சோலை
படியுமுயர் தோகை—மலைவாழ்வே.

4780. மடலெ டுத்திடு நீப
மலர்த ரித்திடு மார்ப!—அருளாயோ?
கடலெ டுத்திடு மாயன்
கருணை யுற்றிடு வாசை—மருகோனே!
அடலெ டுத்திடு சூரன்
அழிப டக்கதிர் வேலை—எயுநாதா!
உடலெ டுத்திடு பாவம்
ஒழிப டச்செய்வை தோகை—மலைவாழ்வே!

4781. மண்டப வனசம் வந்திடு மயிலி—மருகேசா!
அண்டர்க ளடியர் அன்பொடு பணிசெ—யிருதாளா!
தொண்டர்க ளுடைய துன்பம தழிய—அருள்வாயே.
கொண்டல்கள் படியும் குன்றையின் மலையில்—வருதேவே!

4782. கயலைத்தரு பார்வையி னுர்மிகு
கமழ்மைக்குழல் மாதர்கள் நீடிய—அயிலாலே
மயிலைத்தர நான்மெலி யாதொரு
வகையைச்செய வேணும யா!குரு—பர!வேளே!
செயலைத்தர னீயலதி யாரினி?
திடமுற்றிடு சூருட னேயடல்—புரிவேலா!
வயலைத்திற மாயுள நேமகல்
வளர்முற்றிடு தோகையின் மாமலை—வருதேவே!

---

4781. 'வனச மண்டபம்' என மாறுக.

4782. கயல் - மீனில் ஒருவகை; கண்ணுக்கு உவமையாகக் கூறப்படுகிறது. செயலை.........யாரினி - செயற்படுவதாகிய அருளை யான் பெறச்செய்தற்கு உரியுவர் தங்களைத் தவிர்த்து வேறு யார் உண்டு.

4783. வடிவே லெடுத்து
மயின்மே னடத்தி—வருவாயே.
குடிவாழ் குறத்தி
குவிமாமு லைக்கு—இசைதோளா!
அடியே னிடத்தில்
அருளா திருப்ப—தெதனாலோ?
கடியாற் பொழிற்கொள்
கனதோகை மெய்க்கி—ரியின்வாழ்வே!

4784. சரசத்தினில் நயமுற்றிடு தனிமெய்க்கொடி—மடவாரால்
விரகுற்றிடு மயலிற்றினம் மெலியப்படல்—விதிதானோ?
பரசுக்கர தவவற்புத பரமர்க்கிசை—தருபாலா!
வரமற்பொடு தருவித்தக! மகிமைச்சிகி—மலைவாழ்வே!

4785. கொண்டைச் சொருக்கழகு
கொங்கைப் பகட்டழகு—அதனாலே
மண்டிச்சை யுற்றலைய
வந்தத்தை யிப்பவடு—குவைநாதா!
கெண்டைப் பயிற்றுவிழி
கெந்தக்கு ழற்குறமின்—மயலாளா!
அண்டத் துயர்த்தவொரு
அந்தச்சி கிக்கிரியின்—வருதேவே!

4786. நச்சுத் தரித்தவிழி
நத்துக் கிசைத்தமிடர்—மடமானாள்
கச்சுக் கனத்தமுலை
கட்டிக் கிடக்குமயல்—தவிராயோ?
தச்சுப் படப்பொருது
சத்திப் புயத்தவுணை—அடுவேவா!
மொச்சுற் றுயர்த்த பொழில்
முத்திக் கிசைத்தசிகி—மலைவாழ்வே!

4787. மடக்கொடிய ராசை
மருட்டுவதை யோட—வருவாயே.
தடக்களிறி னைசை
தனக்கிசை வதான—துணையாளா!

---

4784. பரசு.........பரமர் - பரசு ஆயுதத்தினைக் கையிலேந்திய தவத்தினுருவாகிய வியக்கத்தகும் சிவபெருமான்.

4785. வந்தத்தை - வந்தனை; விரித்தல் விகாரம். கெந்தம் - கந்தம், நறுமணம்.

4786. நத்து - சங்கு; மகளிரின் மிடற்றினுக்கு உவமையாகக் கூறப்படுவது. மிடர் - மிடறு. மொச்சு - 'மெச்சு' என்ற சொல்லின் திரிபு.

படத்தரவு சூடு
    பருத்தசடை நாத—ரருள்பாலா!
திடப்பொழில்கள் சூழு
    சிகிக்கிரியி னுத!—அருளாயோ?

4788. சதங்கையொலி மிஞ்ச
    தகுந்தமயில் வந்து—அருளாயோ?
கதங்கொளவு ணன்றன்
    கலந்தபடை வென்ற—அயிலாளா!
பதந்தனைமு னின்று
    பணிந்தவர்கள் துன்ப—மதுதீராய்.
இதம்பெறுசெ கன்டி
    இலங்குமலை யின்பொன்—முருகோனே!

4789. சமரைப்பொரு சூர்படை
    தனைவெற்றிகொள் கூரிய—அயிலாளா!
அமரர்க்கிறை வா! உன
    தடியர்க்கருள் யாவையும்—உதவாயோ?
பமரக்கம லாசனர்
    பணிவித்தக! நாயன்முன்—வருவாயே.
கமழ்மைப்பொழில் சூழ்தரு
    கனகச்சிகி மாமலை—வருதேவே!

4790. நடனமிடு மயிலேறி
    நலமருள அடியேன்முன்—வருவாயே.
கடகளிறு துணையாள!
    கருணையுள முருகேச!—அருளாயோ?
மடமயிலி குறமாது
    மயிலினொடு புணர்தோள!—அமரேசா!
வடவவரை நிகரான
    மயின்மலையில் வருதேவே!—முருகோனே!

4791. கரிய முகிற்குழலார்
    கலக விழிக்கொடியார்—மயலாலே
பெரிய தனத்தினையே
    பிசக வலைத்திடுவே—னதுதீராய்.
தெரிய வெனக்கருள்தான்
    தெளிய தமிழ்க்குருவே!—கிருபைதாராய்.
அரிய மறைப்பொருளே!
    அழகு படைத்தசிகா—மலைவாழ்வே!

4792. உனையலது வேறு
உதவியுள தோ? சொல்—முருகேசா?
சினைகொண்மலர் நீப
தெரியலணி மார்ப!—வடிவேலா!
எனைநலம தாக
இனியமயி லேறி—வருவாயே.
அனைபொழில்கள் சூழு
அழகுசிகி மேரில்—வருதேவே!

4793. மடவரல் குறத்தி
மருவிய புயத்து—மணவாளா!
கடகளிறு முகத்தர்
கருணைகொள் துணைப்பொன்—மயிலாளா!
இடர்தனை விலக்கி
இனியநல் வரத்தை—அருள்வாயே.
திடமுடி படைத்த
சிகிமலை தனக்கு—முதனாதா!

4794. பருவ மதிச்சடை
பரமர் தனக்கிசை—புதல்வோனே!
மருமண முற்றிடு
வளர்செய் கடப்பணி—புயநாதா!
கருணை படைத்துயர்
கனமயி லுற்றென்முன்—வருவாயே.
திருநிறை வுற்றிடு
சிகிமலை யிற்குரு—பரவேளே!

4795. மாதவ முனிவர்கள்
மாமலர் கொடுபணி—இருதாளா!
தாதகி மதிபுனை
தாழ்சடை முடியர—னருள்பாலா!
பாதக முதலிய
பாவம திடர்பட—அருள்வாயே.
வாதடர் பொழிலுறை
மாமுடி மிகுசிகி—மலைவாழ்வே!

---

4792. தெரியல் - மாலை. எனைநலமதாக - எனக்கு நலம் உண்டாக.

4794. பருவமதி - பிறைமதி.

4796. இடர்ப்படு நோயினல்
எளியனை வாட்டிடா—தருள்வாயே.
கடல்துயின் மாயனுர்
கருணைகொ ளாசைசேர்—மருகோனே!
மடலவிழ் நீபமா
மலரணி மார்ப!வே—டமின்மாலால்
திடவன மூடுபோய்த்
திரிபவ! **தோகைமா—மலைவாழ்வே!**

4797. வனச மலர்மாது
மருவு புயமாயன்—மருகோனே!
புனம யில்கொள்சாயல்
புளக முலைவேடர்—மகள்தோளா!
உனது பதமீது
உறுதி யுளநாய—னிடம்வாராய்.
தினக ரனைநேரு
சிகிமி **குதோகை—மலைவாழ்வே!**

4798. ஆடிய மயின்மீதே
யான்மகிழ வேதான்—வருவாயே.
பாடிய கனிவாயா!
பாவைகு றமினுள்மே—வியதோளா!
கூடிய படையோடுங்
கோவிமுன் வருசூர—னடுவேலா!
நீடிய பொழிலேசூழ்
நேம!பொ னிறைசீர்**தோ—கையின்மேரா!**

4799. அரிய தவத்தினர்
அளவில் மகத்தினர்—பணிபாதா!
கரிய நிறத்தினர்
கனவவு ணர்க்கொலு—மயிலாளா!
பரிய சிறைச்சிகி
பரிய நடத்திய—செயவீரா!
வரியளி மொய்த்திடு
வனநிறை மெய்ச்சிகி—மலைவாழ்வே!

---

4796. வள்ளியம்மையை மணத்தற்காக வனம் சென்று முருகன் செய்த திருவிளையாடலினை இறுதியில் அமைந்த இருவரிகளும் அறிவிக்கின்றன.

4799. வரியளி - செவ்வரி பரந்த வண்டு.

4800. மாறுபடு மனத்தர்
வான்மதியின் முகத்தர்
மயலாலே—அறிவேதான்
தூறுபட விட்ட
தோசம தகற்றி
அருளாயோ?—குகநாதா!
மீறுபடு கொற்றம்
மேவவு ணரைக்கொல்
அயிலாளா!—செயவீரா!
தேறுதமி ழைச்சொல்
தேவசிகி மெய்க்கி
ரியின்மீது—வருதேவே!

4801. வனசத்திரு மயிலைப்புணர் புயமாயோன்—மருகோனே!
சினமுற்றிடு திறமுற்றிடு அசுரோன்மேல்—விடுவேலா!
மனமுற்றசுர் மடியச்செயும் அயிலாளா!—வருவாயே.
கனமுற்றிடு கமழ்மெய்ச்சிகி மலைவாழ்வே!—அருளாயோ?

4802. மடம யிற்குற மகளை யற்பொடு—புணர்தோளா!
கடக ளிற்றினர் கருணை யுற்றிடு—துணைநாதா!
நடன மிட்டிடு நலம யிற்பரி—மிசைவாராய்.
வடவ ரைக்கிணை வளர்சி கிக்கிரி—வருதேவே!

4803. அருமை மிகக்கொடு
அடிய னிடத்தினில்—வருவாயே.
செருபுரி மற்புய
செயவசு ரைக்கொலு—மயிலாளா!
கருநிற முற்றவன்
கருணைப டைத்திடு—மருகேசா!
மருமல ரைப்பொழி
வளர்பொழி லுற்றிடு—சிமேகிரா!

4804. அனநடை நடக்கும் அழகிய குறத்தி—புணர்தோளா!
கனமயின் நடத்து கமழ்மலர் கடப்ப—மணிமார்பா!
மனமதி லுற்ற வலிதுயர் இப்ப—விலக்காயோ?
தினகர னொத்த சிகாமிகு நற்சி—கியின்மேரா!

---

4800. தோசம் = குற்றம்.

4801. கனம் = மேகம்.

4805. வரியளி மூரன்று நிறைமதுவை யுண்ட
மலர்செய கடம்ப—மணிமார்பா!
தரியலர் நெருங்க வருவசுரை வென்று
தகமைபெறு கின்ற—அயிலாளா!
அரியரன் முகுந்தன் முதலியவர் மிகுந்த
அடியரொடு வந்து—பணிதேவே!
பெரியசிக ரங்கள் நிரைநிரைக ளுயர்ந்த
பிரபலமிகு குன்றை—மலைவாழ்வே!

4806. அடம்புரி சூரன்
அழிந்திட வேலை—எயும்வீரா!
நடம்புரி தோகை
நலந்திகழ் சீர்ம—யிலின்நாதா!
வடம்புரி மார்பன்
மடந்தைமின் வேடர்—மகள்தோளா!
தடம்புரி தோகை
தகுந்திடு மேரில்—வருதேவே!

4807. தொடுத்த மாலிகை தரித்த கார்குழல்
துடிக்கு நேரிடை—மடமானர்
கொடுத்து மாமயன் மிகுத்து வாடுதல்
குணக்கெ டாவதை—தவிராயோ?
கடுத்த சேனைக ணெருக்க மாய்வரு
கதித்த சூருடல்—அடுவேலா!
எடுத்த மாமுடி நிரைத்த தோகையின்
எழிற்பொன் மாமலை—வருதேவே!

4808. அடலவு ணன்றனை
அலறிட வென்றிடு—செய்வீரா!
மடலவிழ் கின்றபோன்
மலிசெய கடம்பணி—மணிமார்பா!
கடலது துயிலும்
கனகரு ணைமிகு—மருகோனே!
வடவரை மிஞ்சிய
மகிமையிற் றங்கிய—சிகிமேரா!

4809. வஞ்ச வரக்கர் குலங்க ளழித்துடன்
மண்டு நுதிக்கதி—ரயிலேதான்
மிஞ்ச வெடுத்திடு கின்ற மயிற்குக!
விண்டு முதற்பணி—இருதாளா!

---

4808. கருணை - கருணை உருவினனாகிய திருமால்.

நெஞ்ச் மதிற்றுய ரந்தனை யற்பொடு
நின்கிரு பைக்கொடு—அடுவாயே.
மஞ்சடர் மைப்பொழில் கொண்டிடு மெய்ச்சிகி
வண்கிரி யுற்றிடு—துரைநாதா!

4810. கடலிற் றுயில்பவர்
கருணைக் கிசைபடு—மருகோனே!
மடலுற் றிடுகன
மலரைத் தரிகுழன்—மடமானுர்
அடலுக் கெதிர்மயல்
அதனுக் கினியுடல்—மெலிவேனே?
திடமுற் றிடுபொழில்
திகழ்மெய்ச் சிகிமலை—வருதேவே!

4811. இனித்த மொழிமாது
எழிற்கு றமினுளை—அணிதோளா!
கனித்த நிகர்வாயின்
கனத்த முலைமாது—வுமைபாலா!
மனித்த முதலோர்கள்
மகத்து முனிவோர்கள்—பணிபாதா!
தனிப்பொ ழில்கள்சூழுந்
தழைத்த சிகிமேரில்—வருதேவே!

4812. அடியவர் முதலினர்
அனுதின மடிபணி—புரிநாதா!
கொடியெனு நுணுகிடைக்
குறமகள் மனமகிழ்—புயவேலா!
இடியென வதிரிட
எதிரிடு வசுரனை—யடுவேலா!
கடிகமழ் பொழிலுறை
கனமிகு சிகிமலை—வருதேவே!

4813. வித்துரும இதழினள்
விற்குநிகர் நுதலினள்—குறமானுள்
சித்தமகிழ் தருகுகா!
சித்திரமயில் முருகையா!—முன்வாராய்.
பத்தியொடு பணிசெய்வோர்
பத்தர்மிடி தவிரவே—அருளாயே.
முத்தமிழை யருள்செய்வாய்.
முத்தியுள் சிகியின்மா—மலைவாழ்வே!

4814. தண்டை யொலிக ளிலங்க மயின்மிசை
தங்க அயிலுடன்—வருவாயே.
கெண்டை தனைநிகர் ரெண்டு விழிபயில்
கெந்த மலர்மிகு—குழன்மானுள்
கொண்டை மயில்குற மங்கை புணர்புய!
கொங்கு லவுமல—ரணிமார்பா!
அண்டர் அடிபணி குன்றை மலைவரு
அந்த மிகுகுக!—அருளாயோ?

4815. அண்டர்கள் முனிவர்கள் வந்தடி பணிசெய
அன்புட னவர்வினை—தவிர்தேவே!
மண்டிட வருபடை கொண்டிடு வசுரனை
வம்புசெய் தவனுட—னெதிர்வேலா!
புண்டரி கமல ரிலங்கிடு முகமொளிர்
பொன்குற மகள்புணர்—புயவேளே!
கொண்டல்கள் தவழ்பொழில் மிஞ்சிய மலர்நிறை
குன்றையின் மலைவளர்—குருநாதா!

4816. வால மதிபுனை வேணி யரனருள்
வால முருகைய!—அருளாயோ?
சால மிகுகுற மாது புணர்புய!
சாமி யருள்குரு—பர!வேளே!
ஆல நிகர்விழி மாதர் தருமய
லான்மெய் மெலிந்திடல்—தவிராயோ?
நீல முகிறவழ் சோலை நிறைவனம்
நீடு சிகிமலை—வருதேவே!

4817. மடவார் மயலான்
மனநோ கிடலா—மதுவாமோ?
குடமா முலையாள்
குறநா யகியாள்—புணர்தோளா!
அடமா வுடனே
அடலே புரிவே—லணிவீரா!
திடமா முடிசூழ்
சிகிமா மலைவாழ்—குருநாதா!

4818. ஆவி போகு முனமே
ஆசை தீர நலமே—புரிவாயே.
பாவி யான புலையோர்
பால்செ லாது வரமே—புரிவாயோ?

தர்வி யோடு மயிலா!
சாமி தேவர் முதலோர்—பணிபாதா!
காவின் மீறு பொழில்சூழ்
காத லான சிகிமா—மலைவாழ்வே!

4819. சீதள நதிபுனை மௌலி
தேவர்தன் ஒருயிர் மகவின்—முருகேசா!
தாதவிழ் மலரணி குழலி
சாரலின் மலைவளர் குறமின்—புணர்தோளா!
மாதர்கண் மயலெனு மலையின்
மாழ்கிட வரும்விதி யதனை—அடுவாயே.
போதடர் பொழினிறை முடியின்
பூமலி சிகிமலை வருகு—மரவேளே!

4820. சடைமு டித்தவர் கயிலை யுற்றவர்
தவமு மெய்ப்பொடி—அணிவோர்சீர்
விடைப டைத்தவர் பரம ருக்கிசை
விமல வற்புத—மகவேளே!
நடைமி குத்திரு மயின டத்திய
நறும லர்ப்புனை—புயநாதா!
அடைய லர்க்கொலு மயின்ப டைத்தவ!
அழகு பெற்றிடு—சிகிமேரா!

4821. தானவர் குலகாலா!
தாமரை நிகர்பாதா!—அருளாயோ?
பானல மொழிமானுள்
பாவைகு றமினுளே—புணர்தோளா!
கானக மயிலாளா!
காரண! குருநாதா!—உமைபாலா!
வானவர் பணிபாதா!
மாறவழ் சிகியாமோர்—மலைவாழ்வே!

4822. அமரர் முதலினர்
அகிலர் பணிசெயு—முருகேசா!
சமர மிடுசுரன்
தனைவி ழவுமுன—மடுவேலா!
எமன்வரு முனமெ
இனியரு மயில்மிசை—வருவாயே.
குமர! குருபர!
குளிர்கொள் சிகிமலை—வருதேவே!

4823. கதறிய கடல்துயில்
கரியபொன் னரிமகிழ்—மருகேசா!
மதமிகு கரிநிகர்
வதனர்த னருமைகொள்—துணைநாதா!
சதன்மலர் வருநல
தருமறை புகலயன்—குருநாதா!
நிதமடி யவர்பணி
நிதிநவ மணிநிறை—சிகிமேரா!

4824. கறையணி கழுத்தர்
கமழ்நந்தி முடித்த
பரமேச—ரருள்பாலா!
அறைகழன் மிகுத்த
அசுரனை யெதிர்த்த
அயிலாலாள!—அருளாயோ?
முறைபணி செய்பத்தர்
முனம்வரு கருத்த
மயின்மீது—வருவாயே.
நிறைபொழின் மிகுத்த
நெடுஞ்சிகி மலைக்கு
அரசாள!—முருகோனே!

4825. வருத்திய நோயை மடித்திட வேண—தருளாயோ?
கருத்தினி லாசை கதித்திடல் போல—அருளாயே.
திருத்திய ரூப திகழ்குற மாது—புணர்தோளா!
பருத்திடு சோலை பணைத்திடு தோகை—மலைவாழ்வே!

4826. அடத்தை புரிசூருடன்
அடுத்துச் சமராடிடு—கதிர்வேலா!
படத்தைப் புரியராவணி
பணைத்துற் றிடுவேணி—யருள்பாலா!
குடத்தைப் புரிமாமுலை
குறத்திக் கிசைவாகிய—புயநாதா!
திடத்தைப் புரிகோடுயர்
சிகிப்பொற் கிரிமாமலை—வருதேவே!

4827. பானை வயிற்றினர்
பாலன நெற்றியர்—துணையாளா!
மானை நிகர்த்திடு
மால்குற நாச்சியை—அணைதோளா!

---

4826. நந்தி = நந்தியாவர்த்தம்; ஒருவகை மலர்.

சேனை மிகுத்திடு
சேவக! சூர்ப்பகை—முடிவேலா!
வானை யுயர்த்திடு
மாமுடி சூட்டிய—சிகிமேரா!

4828. பனிம திச்சடை பரம ரற்புத—மகவேளே!
கனிநி கர்த்திடு கமழி தட்கொடி—குறமாளுள்
தனிம யிற்கிசை தகுபு யகுரு—பரநாதா!
முனிவர் பத்தர்கள் முறைமி கபணி—சிகிமேரா!

4829. மனதுத் துயரதை
மடியப் படவருள்—புரிவாயே.
உனதற் புதபதம்
உறுதிப் படநினையென்—முன்வாராய்.
சினமற் புயமிகு
தினமுற் றிடுவசுரரை—வெல்வேலா!
கனமைப் பொழினிறை
கமழ்மெய்ச் சிகிமலை—வருதேவே!

4830. மாதவ முனிவர்கள்
மாமலர் கொடுபணி—இருதாளா!
பாதக முதலிய
பாவயென் வினைதவி—ரிடவாராய்.
காதலி குறமகள்
காமம தினின்மிகு—வடிவாளா!
வாதடர் பொழினிறை
வாசனை மிகுசிகி—மலைவாழ்வே!

4831. அடியவர் முதலிமை
யவர்பணி புரியிரு—பதநாதா!
துடிநிக ரிடையுள
துரைமகள் குறமகள்—புணர்தோளா!
வடியயி றனையெதிர்
வருவசு ரன்முன்விடு—திறலாளா!
கடிகமழ் பொழில்நிறை
கனமிகு சிகிமலை—வருதேவே!

4832. மறலி விடுதூதர்
வருமுன் மயிலேறி—முன்வாராய்.
குறவர் மகிழ்வான
கொடியை மயலாக—அணைதோளா!

---

4829. 2-ம் அடியின் நான்காம்சீரிலும் 3-ஆம் அடியின் நான்காஞ்சீரிலும் ஓரசை மிக்குள்ளது.

திறமு டையசூரன்
செருவில் மடிவாக—எதிர்வேலா!
நறவொ ழுகுசோலை
நலமு லவுதோகை—மலைவாழ்வே!

4833. வீரவடி வேல்கொடெதிர்
வீறுடைய சூரன்முடி—விழ்வேதான்
கோரமுட னேயடல்செய்
கோலமிகு நீபமலர்—புனைமார்பா!
நாரணனும் வாசவனும்
நான்முகனு மேபணிசெ—யிருதாளா!
சாரலுயர் சோலைவளர்
தாவுசிகி மேரில்வரு—குகநாதா!

4834. மந்திர மறையவர்
வந்தடி பணிபுரி—முருகேசா!
அந்தியின் மதியணி
அம்பர ருளிய—புதல்வோனே!
செந்திரு மகள்புணர்
தென்றுளா யணிபவர்—மருகோனே!
மந்திகள் நடமிடு
மண்டிய பொழினிறை—சிகிமேரா!

4835. ஞான முனிவர்கள் முதலோர்
நாளு மலர்கொடு துதியே—புரிநாதா!
கான வர்கள்தர வருபவள்
காத லொடுமரு வியவா!—அருளாயோ?
தேன லர்கள்புனை புயவா!
தேகம் வருதுயர் தவிராய்—அமரேசா!
வானர மதுகள் நிரையாய்
வாவு பொழில்மிகு சிகிமா—மலைவாழ்வே!

4836. வீரம் படைத்த சூரை
மேல்ரெண் டிடச்செய் கூரி—னயிலாளா!
சாரம் படைத்த சீர்சொல்
தாவுங் கடைக்கண் வேடர்—மகள்தோளா!
ஈரம் படைத்த தேவ
ரேவந்து வற்பி னெடு—பணிபாதா!
பாரம் படைத்த சோலை
பாவுஞ் சிகிப்பொன் மேரில்—வருதேவே!

4832. நறவு - தேன்.

4837. வடிவே லெடுத்து
வருசூரை வெற்றி—புரிநாதா!
குடிவாழ் குறத்தி
குவிமா முலைக்கு—நிகர்தோளா!
அடியார் தமக்கு
அவர்மேன் மிகுத்த—மயலாளா!
முடியே நிறைத்த
முதுதோகை மெய்க்கி—ரியினுதா?

4838. பொருசம ராடிய
புசபெல சூருடல்—அடுவேலா!
வருதுயர் தீரிட
வரமரு ளேபுரி—முருகோனே!
கருமுகின் மேனியர்
கருணைகொள் சீர்தரு—முருகோனே!
தருநிறை சோலைகள்
தருசிகி மாமலை—வருதேவே!

4839. கடக்களிறு முகத்தர்
கருத்தின்மகிழ் மிகுத்த—துணையாளா!
மடக்கொடியள் குறத்தி
மயற்குழியி லழுத்தி—அலைவோனே!
திடப்படைகொ டெதிர்த்து
செருப்புரிய வுணர்க்கொ—லயிலாளா!
தடப்பொழில்க ணிறைத்த
தழைத்தசிகி மலைக்கு—வருதேவே!

4840. மகமுனி வரர்பணி
மலர்நிக ரிருபத—முருகோனே!
சுகமிகு குறமகள்
துரைமகள் மருவிய—புயநாதா!
அகமுயர் படையுடன்
அமர்செயு மசுரரை—வெல்வேலா!
குக!குரு பர!அருள்
குளிர்புன நிறைகிகி—மலைவாழ்வே!

4841. அஞ்சிடவரு நோயினை
அண்டலரென வேசெய—மிடுவாயே.
நஞ்சினையணி மாமிடர்
நம்பர்தனருள் பாலக!—முருகோனே!

பஞ்சிணைநிகர் சீரடி
பண்புயர்குற மாமகள்—புணர்தோளா!
மஞ்சுகள்படி சோலைகள்
மண்டியசிகி மேரினில்—வருதேவே!

4842. எதிர்வரு சூரை யிடரவயி லேவி—அடுசூரா!
மதியையணி வேணி வரதரருள் பால!—அருளாயோ?
கதியுலவு தோகை கனமயிலி லேறி—வருதேவே!
அதிகபொழில் சூழும் அமரர்பணி தோகை—மலைவாழ்வே!

4843. வீறது படைத்த தானவர் குலத்தை
வேரொடு எடுத்த—அயிலாளா!
நாறிய கடப்ப மாமலர் தொடுத்து
நாள்தொறு நலத்த—புயநாதா!
சாறடு கருப்ப வாலைக ணிறைத்த
தாவள மிகுத்த—வயனேமா!
தூறடர் கனத்த தேனருவி யுற்ற
சோலைநிழல் பெற்ற—சிகிமேரா!

4844. வீர மிகுத்த சூர னுடற்கு
மீறு வயிற்கொ—டெயும்வீரா!
சார மிகுத்த சீர்சொல் குறத்தி
தாம முலைக்கு—இசைதோளா!
ஈர மனத்தி னேடு நலத்த
ஏவரு மிச்சை—மிகுபாதா!
தீர மிகுத்த சோலை நிறைத்த
சீர்கொள் சிகிப்பொன்—மலைவாழ்வே!

4845. சமராடிய வசுரோனுடல்
தனைநீறுசெய்—திறலாளா!
குமரா!குரு பரனே!கிருபை
குணமாய்அருள்—புரிவாயே.
எமராசன்முன் வருவேளையில்
எளியேன்முன்—வருவாயே.
அமரர்பதி நிகர்நேமவிண்
ணடர்தோகை—மலைவாழ்வே!

4846. வஞ்சனை புரிபவர்
வந்தெதி ரிடுபவ—ரவருடே
நெஞ்சுட னவரிடை
நின்றுற வுகள்செய்த—றவிராயோ?

சஞ்சித வினையது
　　தன்கிருபை யினிலதை—அடுவேனே?
மஞ்சது தவழ்பொழில்
　　மண்டிய சிகிமலை—வருதேவே!

4847. ஆடிய மயின்மீதே
　　ஆவல்க ளுடனேதான்—வருவாயே.
பாடிய கனிவாயா!
　　பார்புகழ் கணநாதா!—அருளாயோ?
வாடிய யிடைமானுள்
　　வார்முலை புனமானுள்—புணர்தோளா!
கூடிய பொழில்சேருங்
　　கோதற்று சிகிமேரா!—அருளாயோ?

4848. ஆனை முகத்தினர்
　　ஆசைமி குத்திடு—துணைநாதா!
சேனை மிகுத்திடு
　　சீர்சுர ருக்கிசை—அயிலாளா!
மானை நிகர்த்திடு
　　வாள்விழி மெய்க்குற—மயில்தோளா!
கானை நிகர்த்திடு
　　காவளர் நற்சிகி—மலைவாழ்வே!

4849. மடலெ டுத்திடு
　　மலர்த ரித்திடு—புயநாதா!
அடலெ டுத்திடு
　　அசுர ரைக்கொலு—மயிலாளா!
உடலே டுத்தவ
　　ருளம கிழ்ச்சியி—னருள்தேவே!
கடலெ டுத்திடு
　　கனமி குத்திடு—சிகிமேரா!

4850. மனத்துயர் தீரிட
　　வரத்தினில் வேணது—தருவாயே.
சினத்தினில் மீறிய
　　திறத்துள சூருடல்—அடுவேலா!
தனக்குற நாயகி
　　தனக்கிசை வேடமின்—மகள்தோளா!
எனக்கரு ளேபுரி
　　எழிற்சிகி மேரினில்—வருதேவே!

4851. வடிவே லெடுத்து
வருசூரை வெற்றி—புரிநாதா!
குடிவாழ் குறத்தி
குவிமா முலைக்கு—இசைதோளா!
அடியார் தமக்கு
அருள்வேண தைச்செய்—குருநாதா!
படிமே லுயர்த்த
பருதோகை மெய்க்கி—ரியின்வாழ்வே!

4852. வித்துரும இதழாள்
விற்குநிகர் நுதலா—ளொருமானுள்
சத்துமன திலளாள்
சற்பனைசெய் பவளா—லலைவேனோ?
நத்துலவு கரமால்
நத்துமரு கயனே!—அருளாயோ?
முத்துநவ மணிசேர்
மொய்த்தபொழி னிறைதோ—கையின்மேரா!

4853. மதிதனை யணிபவர்
மௌலிய ருளிய—மகவேளே!
விதியரி முதலிய
வெகுவெகு வடியவர்—பணிபாதா!
கதியுறு மயின்மிசைக்
கருணையி னுடனென்முன்—வருவாயே.
நதிவள முலவிய
நலமிகு சிகிமலை—வருதேவே!

4854. கனக தண்டை யொலியி லங்கு
கழல்கள் கண்டு பணிவன் முன்பில்—வருவாயே.
அனக டந்த படிக டந்த
அழகு கொண்ட குறம டந்தை—மகிழ்தொளா!
மனது கந்து கிருபை தந்து
மகிமை தந்து நலமி லங்க—அருள்வாயே.
தினக ரன்றன் ஒளியி லங்கு
சிகர மிஞ்சு வளர்செ கண்டி—மலைவாழ்வே!

4855. அடலெ டுத்திடு சூருடல்
தனநெட் டிலைகொ டேயுடன்—அடுவோனே!
மடலெ டுத்திடு நீபமென்
மலர்த ரித்திடு சீர்புய!—முருகோனே!

குடலெ டுத்திடு மாவுடல்
  குறைய மொய்த்திடு சீர்புய—முருகோனே!
திடலெ டுத்திடு சோலைகள்
  திறமி குத்திடு தோகையின்— மலைவாழ்வே!

4856. அம்பு நிகர்த்த விழியாள்
  அஞ்சுக முற்ற மொழியா—ளவளாலே
வெம்பு மனத்தி னுடனே
  மிஞ்சு மயக்கி லலைவே—னதுதீராய்.
கும்பு மிகக்க வருசூர்
  கொண்ட படைக்கு யெதிரா—யடுவேலா!
நம்பு மவர்க்கு வருவாய்
  நன்று படைத்த சிகிமா—மலைவாழ்வே!

4857. தேவர் முதலினர் பணிபுரி
  சேயி னிதழ்மல ராகிய—இருபாதா!
ஆவல் மிகுகிற மடமயி
  லாளை அணுகின மேவிய—புயநாதா!
பாவ வினைதவி ரிடுகுவை
  பாரின் மிடிதனில் விடாதருள்—புரிவாயே.
ஏவல் முதலிய பிணிதவிர்
  இச்சிகி மாமலை மீதினில்—வருதேவே!

4858. நாட்டி லுயரு நேம
  நாட்டின் வளமு லாவு—சிகிமேரா!
காட்டில் வளரும் வேடர்
  காக்கும் மயிலை மேவு—புயநாதா!
தாட்டி கமது வான
  தாக்கு படையின் மாவை—அடுவேலா!
பாட்டின் மிகுமுரு கேச!
  பார்த்து அடியனும் வாழ்க—அருளாயோ?

4859. தனக்குற மாது
  தனக்கிசை வான—வெகுலோலா!
மனக்குறை வான
  மருட்படு நோயை—அடுவாயே.
வனக்குயில் போல
  மயக்குசொல் மாதர்—மருடராய்.
இனக்குளிர் சோலை
  எழிற்சிகி மேரில்—வருதேவே!

4860. சங்கரசி வாய
சம்புமக தேவ—ருள்பாலா!
செங்கண்விறல் மாயன்
சிந்தைமகிழ் வான—மருகேசா!
துங்கமயி லேறு
சுந்தரகு கேச!—அருளாயோ?
தங்கமலை யான
தங்குசிகி மேரில்—வருதேவே!

4861. மடமயில் குறத்தி
மருவிய புயத்து—முருகேசா!
அடமிகு வெதிர்த்து
அடல்செயவு ணர்க்கொ—லயிலாளா!
கடகளிறு முகத்தர்
கருணைகொள் நலத்த—துணைநாதா!
வடவரை நிகர்த்த
மயிலமலையி லுற்ற—குகவேளே!

4862. குடவளை முழக்க ருத
குளிரது மிகுத்த நேம—வளநாடா!
இடர்படு துயர்க்கு வேணது
இனியொரு மருந்து நீயே—அருளாயோ?
தொடருள பவத்தில் வீழல்
தொலைபட விரட்டி மேன்மை—யருளாயோ?
தடமுடி நிறைத்த தோகை
தனிமலை தனக்கு நாத!—முருகோனே!

4863. கஞ்ச மலர்மாது
கண்டு களிகூரும்
விறன்மாயோர்ன்—மருகோனே!
அஞ்ச வருசூரை
அண்டி டவிடாது
சமராடி—அடுவேலா!
நஞ்ச விழியார்கண்
நங்கை யர்களாசை
மயலாலே—அலைவேனோ?
மஞ்ச மலிசோலை
மண்டி வளர்தோகை
மலைமீது—வருதேவே!

4864. கூன மதிச்சடை
கோமனை யற்பொடு—தருபாலா!
தேனல ருற்றிடு
சீர்புய வித்தக!—முருகோனே!
தானவ ரைக்கொலு
தாம வயிற்கணி—செயவீரா!
வான முயர்த்திடு
மாமுடி பெற்றிடு—சிகிமேரா!

4865. வண்டு படிந்த குழலார்
வம்பு புனைந்த முலையார்—மயலாலே
கண்டு வெருண்டு மெலிவேன்
கஞ்ச நிகர்த்த பதமே—தருவாயே.
மண்டு நெருங்கு படைசூழ்
வஞ்ச வுணன்ற னுடனே—யடுவேலா!
விண்டு நறுந்தண் மலர்சூழ்
விண்தொடர் குன்றை மலைவாழ்—குகநாதா!

4866. வனசத் திருமகள்
மருவிப் புணர்புயன்—மருகோனே!
உனதற் புதபதம்
உறுதிப் படநினை—எனையாளாய்.
மனதிச்சை யில்வரு
மயலிற் றிரிதுயர்—தவிராயோ?
தனமெய்க் கிரிநகர்
தருநற் கனசிகி—மலைவாழ்வே!

4867. வாவிநிறை சோலையுடை
மாடநிறை நேமமெனும்—வளநாடா!
ஆவிகொளு மேமனுடை
ஆள்வருமு னீயென்முனம்—வருவாயே.
தேவிகுற மாதுடைய
தேமமுலை யாசையதி—லலைதோளா!
கூவிவிளை யாடுமயில்
கோலசிகி மேரில்வளர்—குகநாதா!

4868. பிறைமு டித்தவர் பிரிய முற்றிடு—புதல்வோனே!
கறைமி குத்திடு கனகு ழற்குற—மயில்தோளா!
அறைக ழற்கன வசுர ரைக்கொலு—மயிலாளா!
சிறைம யிற்குக! திகழ்சி கிக்கிரி—வருதேவே!

4869. பதும தளத்தினர்
பழமறை யுற்றவர்—குருநாதா!
விதுதரி நற்சடை
விமலர் மகிழ்ச்சிகொள்—புதல்வோனே!
மதுமல ரைத்தரி
வனமயி லைப்புணர்—புயவேளே!
புதுமல ருற்றிடு
பொழிலுறை மெய்ச்சிகி—மலைவாழ்வே!

4870. வீரம் படைத்த சூரன்
மேலன் றெடுத்த சேனை—மிகுசூரா!
சாரம் படைத்த சீர்சொல்
தாவுங் கடைக்கண் மாதர்—மயலாளா!
கோரம் படைத்த காளி
கூடன்று நித்தமாடு—பவர்பாலா!
பாரம் படைத்த சோலை
பால்கொண்ட மெய்ச்சி காநன்—மலைவாழ்வே!

4871. ஆடி யமயி லாள! முன்வரு—குவைநாதா!
நாடி யபடி நான்ந லம்பெற—அருளாயோ?
வாடி யயிடை மாது மைதரு—புதல்வோனே!
சூடி யபொழில் சூழ்சி கிமலை—வருதேவே!

4872. கானக மயிற்குக் காதல்கொள் நலத்த—புயநாதா!
வானவர் மகிழ்ச்சி மாமன மிகுக்க—நிதமேதான்
தானல மலர்கொ டேயவடி யார்முற்—பணிநாதா!
தேனலர் நிறைத்த சீர்பொழின் மிகுத்த—சிகிமேரா!

4873. வனசத்திரு மகளைப்புணர்
புயமாயோன்—மருகோனே!
புனமெய்க்கொடி புணரற்புத
புயநாதா!—அருளாயோ?
மனதிற்றுயர் மடியச்செய்வை
முருகோனே!—செகநாதா!
கனகக்கிரி கயிலைக்கிரி
நிகராமோர்—சிகிமேரா!

4874. திங்களணி சடிலர்
தென்கயிலை யமல—ரருள்பாலா!
கொங்கலரு குழலார்
கொண்டமயல் தனிலே—மெலிவேனோ?

துங்கமயில் தனிலே
தொந்தமென வருகுவை—முருகோனே!
தங்கமலை நிகரும்
தண்சிகியின் மலையின்—முருகேசா!

4875. வந்த நோயதுதான்
மங்கி யோடிடவே—அருளாயோ?
எந்தை! நீயறியாது
இன்று யாரறிவா—ரமரேசா!
சந்த மாமுலையார்
தந்த காதலினு—லலைவேனே?
குந்த வாயுதனே!
குன்றை மாமலைமேல்—வருதேவே!

4876. ஆடிய விசைபோலே
யானலை வதுதானே—நலமாமோ?
சூடிய குழன்மானுர்
தூறுள மயலாலே—துயர்வேனே?
கூடிய வினையாலே
கோலம தறவேநான்—மெலிவேனே?
நீடிய பொழிலேசூழ்
நேரறு சிகிமேரா!—அருளாயோ?

4877. பான்மதி தரித்த
பார்வதி புணர்த்த—அவர்பாலா!
கானவர் குறத்தி
காதல்கொ ணலத்த—புயநாதா!
தேனலர் முடித்த
சீர்மட வியர்க்கு—ளலைவேனே?
வான்முகில் படிந்த
வாழ்சிகி மலைக்கு—அரசாளா!

4878. மாட மாளிகை நிரையும்
வான தூவிகள் மலியும்
வளநேம—நலநாடா!
கூட கோபுர மதில்கள்
கோடி சூழ்தரு சிகியின்
மலைமீது—வருதேவே!

ஆட லேபுரி மயிலில்
ஆசை யாயடி யவன்முன்
வரவேணும்—அமரேசா!
பாட லேயருள் புரிவை
பாத மேபணி யடியர்
வெகுபேர்கள்—துதிநாதா!

4879. சிலைநுதன் மடவார்
செயுமய லதனன்—மெலிவேனோ?
கலைபயில் முனிவர்
கதிபெற மறையே—பகர்வாயா!
அலைதுயில் விறலார்
அருமைகொள் மருகா!—அருளாயோ?
மலைமகள் புதல்வா!
மயின்மலை யரசே!—கிருபைதாராய்.

4880. விருத்த மதியணி
மிகுத்த சடைமுடி—யவர்பாலா!
பருத்த மயிலொரு
பரிக்கு இசைபவ!—அருளாயோ?
ஒருத்த னிவனென
உனக்கு மனமருள்—இலையோதான்.
திருத்த மிகுகன
சிகிக்கி ரிமயின்மிசை—வருதேவே!

4881. மந்தி வளர்சோலை
மண்டி விளையாடு—மதிராலே
சிந்து கனியோடு
தெங்கி னிளநீர்கள்—நிறைவாலே
வந்து வயல்பாய
மண்டி விளைநேம—வளநாடா!
தந்த ருள்வைதேவ!
தங்க மலையான—சிகிமேரா!

4882. காலன் வருமுனமே
காலை மயில்மிசையே—வருவாயே.
ஆல முணுமரனு
ராசை தருமகவே!—அருளாயோ?
வால வடிவுளமான்
மாது குறமயிலாள்—புணர்தோளா!
சால மிகுபொழிலே
சூழ்சி கியின்மலைவாழ்—குகநாதா!

4883. அனநடை பயில்பவர்
        அழகிய மடவர்கள்—மயலாலே
மனமது துயர்பட
        வருவது நலமல—அதுதீராய்.
வனசம லரிலுறை
        மறையவர் பணிதரு—குருநாதா!
இனமணி நிரைநிரை
        இசைமுடி பனிரிடு—சிகிமோரா!
4884. தண்டை சதங்கைகள்
        சங்க முழங்கிட—மயின்மீதே!
அண்டையில் ரெண்டுபெண்
        அன்பொ டிலங்கிட—வருவாயே.
சண்டைசெ யுங்கன
        தந்திமு கன்றுணை—பெறுநாதா!
கொண்டையி லங்கிய
        குன்றையெ னுஞ்சிகி—மலைவாழ்வே!
4885. வஞ்ச வரக்கர்
        மண்டிய படைக்கு—எதிராவே
அஞ்சவ வரைக்கொல்
        அருமை படைத்த—அயிலாளா!
நஞ்சணி மிடற்றின்
        நம்பர முதல்வர்—மகவேளே!
தஞ்சம ருளைச்செய்
        தங்கமு டியுற்ற—சிகிமோரா
4886. வடிவுள குறப்பெண்
        மடவரல் தனக்கு—மயலாவாய்.
அடியவர் நிறைத்து
        ஆகர வெனச்சொல்—சமுகேசா!
மிடியினி லழுத்தும்
        வினையினை விலக்கி—அருளாயோ?
கடிமதில் விளைத்த
        கமழ்சிகி மலைக்கு—முதலாளா!
4887. ஆடிடுமயின் மீதினி லேயெனை
        ஆளி டவினி—வருவாயே.
சூடிடுமலர் தான ணிகுழல்
        தோகை யர்புணர்—புயநாதா!

---

4885. அஞ்சவவர் - அஞ்சுகின்ற அந்த அரக்கர்.
4886. நிறைத்து - நிறைந்து நின்று.

தேடிடுமெடி யாரு டவினே
தீரி டவருள்—புரிவாயே.
நீடிடுபொழி லேகி றைசிகி
நேர்க ணமலே—வருதேவே!

4888. பத்தர்கள் முனிவர்கள்
பத்தியி ஞெடுபணி—புரிபாதா!
அத்தர்க யிலேயினர்
அற்பொடு தரவரு—புதல்வோனே!
தத்தடர் மயில்வரு
சற்குரு பர!அருள்—புரியாயோ?
சத்தமு கில்தவழ்
சக்கர முடிநிறை—சிகிமேரா!

4889. குடநிகர் தனத்தர்
குமரிய ரிசைத்த—மயலாலே
இடர்படு துயர்க்கு
இனியலை தலேத்த—விருவாயே.
கடகரி முகத்தர்
கருணைகொள் துணைவ!—குமரேசா!
வடவரை நிகர்த்த
மயின்மலே தனக்கு—இசைநாதா!

4890. ஆவியது போகு முனமே
ஆடுமயி லேறி யென்முனே—வருவாயே.
காவியலர் போலும் விழியாள்
கானமயி லான குறமா—னணைதோளா!
தேவியுமை மாது புதல்வா!
தேவர்முத லோர்கள் பணிசீர்—இருதாளா!
வாவிதிகழ் சோலே நிறைசீர்
மாமுடிகள் சூழு சிகிமா—மலேவாழ்வே!

4891. ஒருவர்துணை யேது
உனையலது வேண—தருளாயோ?
அருமறைகள் தேடி
அலறுமிரு பாத—அமரேசா!
பொருசமர மாடு
புகழ்கதிரின் வேலஎன்—முன்வாராய்.
திருவளரு சோலே
தினகரன் உலாவு—சிகிமேரா!

4892. மருப்பொலியு நீப மான
மலர்ப்புயவ! ஏழை யேற்கு—அருளாயோ?
திருப்பொலியு மார்பு செரும்
திருத்துளப மாய னுசை—மருகோனே!
தருப்பொலியு மீறு கானந்
தனிக்குலவி வாழு மாது—மயலாளா!
உருப்பொலியு மேரு போல
உயர்ச்சிபெறு தோகை மேரில்—வருதேவே!

4893. வஞ்ச மாகவெ னேடுதான்
வந்து மாயைசெய் மாதரா—சையைதீராய்.
நெஞ்ச மாசைகள் தீரவே
நின்பொன் மாமயி லேறியே—வருவாயே.
அஞ்ச நேர்வரு சூரனுர்
அண்டு சேனைக ளோடவே—அடுவாயே.
தஞ்சம் வேறிலை நாதனே!
தங்க மாமலை நேர்சிகா—மலைவாழ்வே!

4894. மிடியி னுல்வரு
வினையி னுன்மனம்—நைகுவனே?
அடிய னுன்நின்
னடியினும் மாமலர்—பணியேனே?
துடியி னூலினிடைத்
துரைமி னுள்புணர்—புயவேளே!
கடிகொள் சோலைகள்
கதுவு தோகையின்—மலைவாழ்வே!

4895. சகலசன ரட்சகா!
தருணமிது பத்தன்யான்—அருளாயோ?
அகமகிழ்கு றத்திமான்
அழகினில் மயக்கமா—யெலோலா!
பகர்ரு துயர்க்குளே
படிபவர் தமக்குவே—ணதுதாராய்.
மகபதி முனிக்குழாம்
மனதொடு துதிக்குமோர்—சிகிமேரா!

4896. வினையினு லெடுத்த காயம்
விழுமுனே நலத்தை வேண—தருளாயோ?
நனைகொள்சீர் கடப்ப மாலை
நறையுலாம் வெற்றி மாலை—புனைமார்பா!

அனையினுர்வ யிற்றின் மீது
அடியனுன் பிறத்தல் பாவ—மறியாயோ?
சினைகள்வா தடர்த்து சோலை
திறமதாய் நிறைத்த **தோகை—மலைவாழ்வே!**

4897. வஞ்சக ராகிய
மங்கைய ரால்வரு—துயராலே
நெஞ்சக நோகிட
நின்கிருபை யாலது—விலகேனே?
அஞ்சிட வேபுரி
அந்தவு ணேருட—னெதிர்வேலா!
மஞ்சடர் சோலைகள்
மண்டிய **தோகையின்—மலைவாழ்வே!**

4898. மறைமு னிவரர் மகிழ்வொ டுபணி—புரிவேதா!
அறைக முன்மிகு வசுர னையடு—செயவேலா!
குறைப டுமிடை குறம கள்புணர்—புயநாதா!
கறைமு கிறவழ் கனபொ ழினிறை—**சிகிமேரா!**

4899. சிந்தை மயங்குதுயர்
சிந்தென வந்திடுதல்—தவிராயோ?
பந்தென நன்குறமின்
பண்போடு வந்தணையும்—முருகோனே!
எந்தன்முன் னன்பினெடு
இன்புறவே வந்துநல—முதவாயோ?
பைந்தளிரு மிஞ்சுபொழில்
**பம்பியகுன் றைமலை**—வருநாதா!

4900. மாதர் மயல்வலையால்
வாடு வதுநலமோ?—அருளாயோ?
தாத விழுமலரோன்
தாக மொடுபணியும்—குருநாதா!
சீத மதிவதனு!
தேவர் முதல்முனிவோர்—பணிபாதா!
ஆத ரவுபுரிவாய்
ஆறு முகவடிவே!—**சிகிமேரா!**

4901. ஆடிய மயிலேறி
யான்மகிழ் படவேயென்—முனம்வாராய்.
தேடிய வடியார்கள்
தேமுனி வரர்சூழுஞ்—சமுகேசா!

சூடிய குழன்மாது
தோகைகு றமின்மேவு—புயநாதா!
கூடிய பொழில்சூழும்
கோதறு சிகிமேரில்—வருதேவே!

4902. மதசல மொழுகிய வளர்கரி வதனர்து—ணையினுதா!
கதமிகு வசுரொடு கனவமர் புரிதரு—செயலாளா!
இதழுள மலர்தனி னிமையவர் முதலினர்—பணிபாதா!
நிதமடி யவரிடை நினதருள் புரிசிகி—மலைவாழ்வே!

4903. சுகத்தில் மிஞ்சிய லீலைக ளேபுரி
துணைத்த நற்கொடி யாகிய நூலிடை—மடமானர்
முகத்தில் மிஞ்சிய ரூபம தால்மன
முழுக்க நொந்திடு நோய்தரு ஆசையை—அடுவாயே.
அகத்தில் மிஞ்சிய ராவண னுர்குலம்
அழிக்க வந்திடு ராகவ னுருடை—மருகோனே!
மகத்தில் மிஞ்சிய மாமுனி யோர்முதல்
மகிழ்ச்சி யன்பொடு சூழ்தரு தோகைபின்-மலைவாழ்வே!

4904. கோடி சூரியர் போல வேயொளிர்
கோல மாகிய—வடிவாளா!
வாடி யேயிடு நூலு போலிடை
மாத ராசையின்—மெலிவேனே?
தேடி யேயருள் ஞான மாதவர்
தேவர் வாசவர்—பணிபாதா!
கூடி யேவளர் சோலை சூழ்தரு
கோதில் தோகையின்—மலைவாழ்வே!

4905. எதிர்வரு சூர னுவி
இடறிட வேலை யேவு—திறலாளா!
மதிமுக மாத ராசை
மயலதி னுயன் வீழல்—விதியாமோ?
விதிதவ மாத வோர்கள்
வெகுவெகு தேவர் நாளும்—பணிபாதா!
கதிர்முடி நீடு சோலை
கமழ்சிகி மேரில் வாச!—முருகோனே!

4906. அண்டலர் கண்டுடன்
அண்டிட அஞ்சிய—அயிலாளா!—மலர்மோரா!
செண்டலர் கொங்கைகள்
திங்கணி றைந்திடு—முகமார்னர்—மயலாலே

மண்ட வருந்துயர்
    மங்கிட வந்தருள்—புரிவாயே—குகநாதா!
கொண்டல் படிந்திடு
    குன்றையி னங்கிரி—தனிலேதான்—வருதேவே!

4907. மாத ராசையின் மாளி டாவகை—புரிவாயே.
வேத மாமுனி மேல வானவர்—பணிபாதா!
சீத மாமதி சீற ருவணி—பவர்பாலா!
போத நாயக! பூவு லாவிய—சிகிமேரா!

4908. வடிவுறு குறத்தி
    மருவிய புயத்து—முருகேசா!
அடியவர் தமக்கு
    அழிவில் வரத்தை—அருளாயோ?
துடியிடை படைத்த
    துவரித ழினர்க்கு—மயலாலே
மிடிபடல் தவிர்ப்பை
    விரையுள சிகிப்போன்—மலைவாழ்வே!

4909 ஆடி யமயி லேறியே
    ஆறு நலமுக மாகவே—வருவாயே.
சூடி யகுழல் மாதினுள்
    தோகை குறமி னூளயே—புணர்தோளா!
பாடி யகனி வாயனே!
    பார்பு கழ்குரு நாதனே!—அருளாயோ?
நாடி யபடி நீசெய்வாய்.
    நான முலவு தோகைமா—மலைவாழ்வே!

4910. கந்தமல ரான
    கஞ்சமலர் மாது—மருகேசா!
சந்தமிகு பாடல்
    தந்துவரம் யாவு—முதவாயோ?
சுந்தரம தான
    துங்கமயி லேறி—வருவாயே.
அந்தமிகு தோகை
    அங்கிரியின் வாச!—முருகோனே!

4911. கானக மடந்தை
    காதல்கொள் கடம்ப—மணிமார்பா!
தேனல ரலங்கல்
    சேர்குழலி னர்தந்த—மயலாலே

மானமழி கின்ற
மாதிரியி லென்றும்—அலைவேனோ?
வானவர்க ளென்றும்
வாழ்துதிகள் செய்யும்—சிகிமோரா!

4912. ஆதிமக தேவர்
ஆறுபுனை நாதர்—தருபாலா!
சூதிலகு மார்பள்
தூயகுற மாது—புணர்தோளா!
வேதியர்வி ணோர்கள்
வேணபடி தாழு—முருகோனே!
சோதிமய மான
தோகைமலை வாழும்—அமரேசா!

4913. மாய மாகிய
மாத ராசையின்—மெலிவேனோ?
சேய தாதுதிர்
சீர்கொ ணீபமென்—மலர்மார்பா!
நாய னேனெனை
நாடி யேமுனம்—வருவாயே.
தூய சோலைகள்
சூழ்சி காமலை—வருதேவே!

4914. தரியல ரெனவரு
தகுவசு ரனையெதிர்—புரிவேலா!
அரியயன் முதலிய
அமரர்கள் முனிவர்கள்—பணிதேவே!
பரியெனு மயின்மிசை
பருவரல் தனையட—வருவாயே.
விரிகடல் வளைகன
மிகுசிகி மலைவரு—குகநாதா!

4915. மனதினி லுதித்த மருள்படு துயர்க்கு—அருளாயோ?
எனதுட லெடுத்த திதுகெடு வினைக்கு—இடமாமோ?
வனசவல ருற்ற மறையவர் தனக்கு—உபதேசா!
இனமணி யிமைக்க இருளகல் சிகிக்கி—ரியினுதா!

4916. ஒருத்தர் துணையேது?
உனக்கெதி ரிலாத—எனையாள்வாய்.
பருத்த மயிலேறு
பணைத்த அயிலான!—அருளாயோ?

வருத்தமிக வேயென்
மனத்தில்வரு நோயை—அடுவாயே.
திருத்தமுடி மீறு
சிகிக்கிரியி னுளும்—வளர்தேவே!

4917. சகலசன ரட்சகா!
தமிழறியும் வித்தியா—குருநாதா!
சுகசரச முற்றமான்
சுபமிகுகு றப்பெணுள்—அணைதோளா!
அகமகிழ இப்பவே
அடியனிடம் நட்பதாய்—வருவாயே.
மதபதி பதிக்குமேல்
வளர்முடி படைத்ததோ—கையின்மேரா!

4918. மருமலர் முளரி
வனிதையை மருவு
புயமாயோன்—மருகோனே!
அருமறை முதல்வன்
அமரர்கள் முனிவர்
முதலானோர்—பணிபாதா!
குருபர! குமர!
குக!சர வண!பொன்
மயின்மீதே—வருதேவே!
திருமுடி யிலகு
சிகிமலை மனையில்
விளையாடும்—பெருமாளே!

4919. வந்ததொரு வினையான்
மைந்தன்மிக மெலியா—தருளாயோ?
எந்தனுட துயர்தான்
என்றறுத லதுபோக்—கிலையோதான்.
பந்தமெனு மயவால்
பஞ்சையென அலையா—தருள்வாயே.
அந்தரவி ணவர்சூழ்
அன்பர்பணி சிகிமா—மலைவாழ்வே!

4920. அமரா பதிபன்முதலோர்
அடியா ரனுதினமே—பணிபாதா!
சமரா டியவசுரோன்
தனைமார் பிருபிளவாய்—அடுவேலா!

குமரா! குருபரனே!
குகனே! குறமகளா—சையினுதா!
எமரா சனையனுகா(து)
இனிமுன் வருவாயே—சிகிமேரா!

4921. இகல்புரி சூருடல்
இருபிள வாய்விட—அடுவேலா!
செகபரி பாலன!
செயமிகு தோகையின்—மயிலாளா!
சுகமிகு லீலைசெய்
சபமட வார்மய—லதுதீராய்.
பகலவ னேரொளிர்
பருமுடி சேர்சிகி—மலைவாழ்வே!

4922. தண்டை யொலிமீறு
தங்க மயின்மீது—வருவாயே.
வண்டை நிகர்பார்வை
மங்கை யிருபேர்கண்—மயலாளா!
இண்டை யணிவேணி
இன்ப ரமராசை—மிகுவேளே!
அண்ட முயர்சோலை
அந்த முயர்தோகை—மலைவாழ்வே!

4923. மடவரல் குறத்தி
மருவிய புயத்து—முருகோனே!
அடலவு ணனைக்கொல்
அழகிய அயிற்பொன்—மயிலாளா!
கடன்மிசை துயிற்கொள்
கருணைவி றலுக்கு—மருகேசா!
தடமுடி தரித்த
தருசிகி மலைக்கு—அரசாளா!

4924. மருப்பொலி நீப
மலர்ப்புயவ! வேண—தருளாயோ?
வருத்தமிடு சூரன்
மடித்துவிழ வேலை—எயும்வீரா!
கருத்திலுறு நோயை
கசக்கியது வோட—அருளாயோ?
திருத்தமிகு தோகை
சிகிக்கிரியின் வாச!—முருகோனே!

4925. ஒருவர்துணை யேது?
உனையலது வேறு—உளதோதான்.
மருவுநல நீப
மலரையணி மார்ப!—அருளாயோ?
பொருதுசம ராடு
புசவலவன் மாவை—அடுவேலா!
தருவுலவு சோலை
தழைசிகியின் மேரில்—வருதேவே!

4926. கருவி லுதிக்காமல்
கரும வினைக்காளாய்—அலையாதே
அரும றைப்பொருளே!
அடிய னிடத்தருளே—தருவாயே.
பொருசமர் புயச்சூரன்
புளவு படக்கூர்வே—லெயும்நாதா!
தருநிறை வமக்காவு
தழைசிகி மெய்க்கோடே—வருதேவே!

4927. மனவிச னத்தை
மடியும்வகை யிப்ப—அருளாயோ?
அனநடை படைத்த
அழகிய குறத்தி—புணர்தோளா!
உனதுட பதத்தை
உறுதியென வுற்ற—எனையாளாய்.
கனகநிற மொய்த்த
கமழ்ச்சிகி மலைக்கு—அரசாளா!

4928. நினது பதத்தை நாளு
நினைவின் மறக்க லாத—அடியார்பால்
மனது மகிழ்ச்சி யாக
மயிலை நடத்தி யேமுன்—வருவாயே.
சினவர வுற்ற வேணி
திருவுடைம பெற்ற வாசை—மகவேளே!
கனக நிறைத்த தோகை
கமழ்மலை யிற்கு லாவு—குகநாதா!

4929. வஞ்சனை படைத்த சூரன்
மண்டிய படைக்கு வேலை—எயும்வீரா!
நஞ்சணி மிடற்ற ராசை
நங்கையின் மகிழ்ச்சி யான—மகவேளே!

கொஞ்சவிடை பெற்ற மாதர்
கொண்டமய விற்கு லாவ—விதியாமோ?
மஞ்சடர் பொழிற்கள் சூழும்
வண்சிகி மலைக்கு வாச!—முருகோனே!

4930 உனையலது வேறு
உளதிலைநல் வாழ்வு—புரிவாயே.
கனைகடலின் மீது
கனதுயில்கொள் மாயன்—மருகோனே!
வனையரவு வேணி
மகிழவரு பால!—அருளாயோ?
சினையுலவு சோலை
திகழ்சிகியின் மேரில்—வருதேவே!

4931. வனசமலர் மாது
மருவுபுய மாயன்—மருகோனே!
அனநடையின் மாது
அழகுதிகழ் வேடர்—மகள்தோளா!
எனதுதுயர் தீர
எளியனிட மாக—வருவாயே.
கனகமலை யான
கமழ்சிகியின் மேரில்—வருதேவே!

4932. ஆதரவு யினியுளதோ?
யானறியன் இனியருளே—புரிவாயே.
சீதமதி புனைமுடியார்
தேவர்பரர் அருள்புதல்வா!—குகநாதா!
மாதர்மயல் தருவதனால்
மாய்தல்தனை இனிவிலகா—தெதனாலோ?
தாதவிழு பொழினிரைசூழ்
சாரன்மிகு சிகிமலைமேல்—வருதேவே!

4933. கூட்டில்விளை யாடு வதேனோ?
கூட்டுறவி லங்க தவனோ—டுறவேனோ?
ஆட்டியகை யாள னினிநீ
ஆட்டல்வச மாக விலையே—எதனாலோ?
கோட்டிகள்செய் சூர னுடனே
கூர்த்தவயி லேவி யடலே—புரிநாதா!
காட்டினுயர் சோலை வளமே
காட்டுசிகி மேரில் வருவாய்—அருளாயே,

4934. வடிவுறு குறத்தி
மருவிய புயத்து—முருகோனே!
அடியவர் தமக்கு
அடியனெ னிடத்தி—லருளாயே.
கடிகமழ் கடப்ப
கருணைகொள் மனத்த—அமரேசா!
முடிபுனை சிகிப்பொன்
முதுமலை தனக்கு—அரசாளா!

4935. எனது மனத்தி னினிகினை வுற்ற—படியாளாய்.
சினவர வுற்ற திகழ்சடை பெற்ற—அவர்பாலா!
உனதுட பதத்தை உருகிய எனக்கு—அருடாராய்.
தினகர னிகர்ந்த திருமுடி படைத்த—சிகிமேரா!

4936. வஞ்ச ராவணன்
மண்டு சேனையை
அடுமாயோன்—மருகோனே!
தஞ்சம் வேறிலை
தங்க மாமயின்
முருகேசா!—அருளாயோ?
அஞ்ச வேவரு
அன்பி லாவறு
மைகடீர்வாய்—அமரேசா!
மஞ்ச தேதவழ்
மண்டு சோலையணி
தோகைமா—மலைவாழ்வே!

4937. கானக மடந்தை
காதல்கொள் கடம்ப—மணிமார்பா!
சானகி மகிழ்ந்த
தார்புனையும் விண்டு—மருகேசா!
தானவர் குலங்கள்
சாடிய சிறந்த—மயிலாளா!
வானக முயர்ந்த
மாமுடி யிலங்கு—சிகிமேரா!

4938. மனதுக்கி சைந்த
வரமெப்ப வந்து—தருவாயோ?
வனசத்தி லன்பின்
வளர்வுற்ற மங்கை—மருகேசா!

---

4937. விண்டு = விஷ்ணு; திருமால்.

கனகச்ச தங்கை
 கழலிற்பு லம்ப—வருவாயே.
புனமொய்த்தி லங்கு
 புகழ்பெற்ற குன்றை—மலைவாழ்வே!

4939. வடிவுறு குறத்தி
 மயிலியை மகிழ்ச்சி—யொடுசேர்வாய்.
அடியவர் தனக்கு
 அருமையொடு வித்தை—புரிவாயே.
துடியவு ணருக்கு
 துகளிட யெடுத்த—அயிலாளா!
கடிபொழின் மிகுத்த
 கனசிகி மலைக்கு—அரசாளா!

4940. இருவிழி மிரட்டி
 எழிலுடல் பகட்டி—வலைபோலே
சுருளிட மயற்செய்
 துயரதை விலக்கி—யருளாயோ?
கருவெனு நிலத்து
 கனமுடன் முளைத்தல்—தவிராயோ?
தருபொழில் நிறைத்த
 தழைசிகி மலைக்கு—அரசாளா!

4941. விற்போலு நுதலினர்
 மெட்டான நடையினர்—மயலாலே
அற்போலும் மருளினர்
 அக்காம அலைகொளா—தருளாயோ?
கற்போலும் வலுவினர்
 கட்டான அசுரனர்—குலகாலா!
பொற்போலு முடிகள்சேர்
 பொற்றேகை மயிலின்மேல்—வருதேவே!

4942. மடவரல் குறத்தி
 மருவிய புயத்து—முருகேசா!
கடவரை யுரித்த
 கதிர்மதி தரித்த—அவர்பாலா!

---

4938. கனகச்.........வருவாயே - பொற்சதங்கைகள் வீரக்கழலுடன் கலந் தொலிக்க எழுந்தருளுவாய்.

4940. கருவெனும்..........தவிராயோ - பிறப்பென்னும் நிலத்தில் பிறத்தலை நீக்கமாட்டாயா.

உடல்வினை தனக்கு
ஒருவர மருட்செய்—அமரேசா!
தடமுடி மிகுத்த
தகுசிகி மலைக்கு—வருதேவே!

4943. கோகனக மடந்தை
கோலமுட னணைந்த
புயமாயோன்—மருகேசா!
தாகமுடன் வந்து
சாமிகிருபை தந்து
எனையாள—வருவாயே.
ஆகம்வளர் கின்ற
ஆசையகல் அன்பர்
பணிபாதா!—அருளாயோ?
மாகமு யர்அந்த
மாமுடிக ணிறைந்த
சிகியாமோர்—மலைவாழ்வே!

4944. சமராடிய சூருடல்
தழுவியாவையு மேவிழ—அடுவேலா!
நமனுர்வரு வேளையில்
நலமாகிய தோகையில்—வருவாயே.
அமராதிப ஞர்முதல்
அடியார்பணி நாயக!—அருளாயோ?
குமரா!குரு தேசிக னே!கிருபை
கொடுவாசிகி மாமலை வாழ்வுறு—துரைநாதா!

4945. அஞ்சிய சூருடன்
அண்டிமு னேயடல்—புரிவேலா!
பஞ்சினு மெல்லடி
பந்தினை முலையவர்—மயலாலே
மிஞ்சிய பிணிகொடு
வெம்பிட அலைவது—தவிராயோ?
மஞ்சிகள் படிபொழில்
மண்டிய சிகிமலை—வருதேவே!

4946 சமரிடு சூருடல்
தனையிரு கூறுசெய்—அயிலாளா!
அமரர்கள் மாதவர்
அனுதின மேபணி—இருதாளா!

4944. முதலடியிலும் இறுதி அடியிலும் சில அசைகளும் சீர்களும் மிகுந்துள்ளமை காண்க.

குமரி!சி காமணி!
குக!குரு நாயக!—அருளாயோ?
பமரமு லாவிய
பனிபொழில் சூழ்சிகி—மலைவாழ்வே!

4947. முகமாயம தேபுரி
மொழிசீனிய தாகிய—மடவாரால்
அகமேதளர் வாகிட
அலையாதினி நீகிருபை—புரிவாயே.
சுகநாயகி வேடுவி
துரைநாயகி யாள்புணர்—புயநாதா!
மகமேபுரி வோர்பணி
வளர்சோலைகள் சூழ்சிகி—மலைநாதா!

4948. மனது மயக்கிட வருதுய ரத்தினை—அடுவாயே.
உனது பதத்தினை உறுதியெ னத்திரி—பவர்நாதா!
எனது மனப்படி இனியருளைச்செய—வருவாயே.
கனக மலைக்கிணை கமழ்பொழி லுற்றிடு—சிகிமேரா!

4949. வடிவே லெடுத்து வருசூரை வெற்றி—புரிநாதா!
குடிவாழ் குறத்தி குவிமா முலைக்கு—மயலாளா!
அடியார் தனக்கு அருள்யாவு மிப்ப—அருள்வாயே.
முடிசேர் பொழிற்கொள் முதிர்தோகை நற்கி—ரியினுதா!

4950. வித்துரும விதழாள்
விற்கிசையு நுதலாள்—குறமானுள்
முத்துநகை நகையால்
முக்கியமயல் தனிலே—விழுநாதா!
தத்துமயில் மிசையே
சத்தியல கிடவே—வருவாயே.
முத்துமயில் புடைசூழ்
மொய்த்தபொழில் நிரைசூழ்—சிகிமேரா!

4951. வனசத்திரு மயிலைப்புணர் புயமாயோன்—மருகோனே!
எனதிச்சையில் இனியற்பொடு வரமேதா—னருளாயோ?
மனதிற்றுயர் மடியச்செய்து நலமேதான்—புரிவாயே.
கனகக்கிரி கயிலைக்கிரி நிகர்தோகையின்—மலைவாழ்வே!

---

4947. முகமாயமதேபுரி.........மடவார் - மாயத்தை முகத்தாலும் சர்க்கரையினை ஒத்த இனிப்பினைச் சொற்களாலும் விளைக்கின்ற மகளிர்.

4952. கந்த மலர்புனை கங்குன் மிகுகுழல்—மடமானார்
தந்த மயல்கொடு சம்பி மெலிகிடல்—விதியாமோ?
சந்த மயில்மிசை தங்க வொளிவுடல்—உடன்வாராய்.
அந்த ரவுணர்கள் அண்டர் பணிபுரி—சிகிமேரா!

4953. பொருசூருடன் புளவாய்விட—அடுவேலா!
கருமாமுகில் கமழ்மேனியர்—மருகேசா!
அருமாமறை யடியார்பணி—யிருதாளா!
தருவேநிறை தழைதோகையின்—மலைவாழ்வே!

4954. வறுமைப் பிணியினில் விழுபவர்
மனதுக் கிசைபட வருள்புரி—குருநாதா!
சிறுமைப் படுவது தவிர்செய
சிறையுற் றிடுகன மயின்மிசை—வருவாயே.
கறுவிப் புலியென வருதுயர்
கழலத் திருவருள் புரிகுவை—அமரேசா!
தறுகட் கொடுலவு ணரையடு
தகடுக் கதிரயில் முருக!சி—கியின்மேரா!

4955. சங்கத் தமிழ்புலவ!
சந்திரச் சடைப்பரமர்—தருபாலா!
பங்கப் படச்செய்பவர்
பந்துத் தனத்தியர்கண்—மயல்தீராய்.
துங்கச் சிறைச்சிகிய!
தொங்கற் புயக்குமர!—குருநாதா!
தங்கப் பொருப்பைநிகர்
தண்பொற் சிகிக்கிரியின்—மலைவாழ்வே!

4956. துதிபெறு மாதர்
துரைமகள் நாத!—அருளாயோ?
கதிமயி லேறு
கமழ்மலர் நீப—மணிமார்பா!
விதிமுத லான
வெகுவடி யார்கள்—பணிபாதா!
மதிதவழ் சோலை
மருவிய தோகை—மலைவாழ்வே!

4957. மானை நிகர்த்த விழியார்
மாலை தரித்த குழலார்—மயலாலே
கானை நிகர்த்த உடலாய்
காம மிகுக்க அலையா—தருளாயோ?

---

4952. சம்பி = சாம்பி; வாடி.

பானை வயிற்றர் துணையாய்!
　　பாத மெனக்கு வருளா—தெதனாலோ?
சேனை படைத்த வரசே!
　　சீர்கொள் சிகிப்பொன் மலைவாழ்—குக!நாதா!

4958. வறுமைப்பொ லாதபிணி
　　வலையிற்கு ளாகயினி—அலைவேனோ?
சிறுமைப்ப டாதபடி
　　திகழ்மைக்க லாபமயின்—மிசைவாராய்.
தறுமைக்க டாவில்வரு
　　தருமர்க்கா ளாகுமுன்—எனையாளாய்.
மறுமைக்கொல் பாசவினை
　　மடியச்செ யாததென்—சிகிமேரா!

4959. ஆடிய சுழல்போலே
　　ஆவிய தலையாதே—துயர்தீராய்.
பாடிய கனிவாயா!
　　பாதக வினையார்போல்—மெலிவேனோ?
வாடிய இடையாரால்
　　மாமயன் மிகவேதான்—அலைவேனோ?
கூடிய பொழிலேசூழ்
　　கோதறு சிகிமேரா!—மலைவாழ்வே!

4960. திங்கட் சடைமுடியார்
　　　செம்பொற் கமழ்மலர்சூ
　　டியமார்பா!—முடியேசேர்
தங்கச் சிலைமிசைவாழ்
　　　சம்புக் கிசைபுதல்வா!
　　என்றன்முனே—வருவாயே.
துங்கச் சிறைமயிலா!
　　　தொங்கற் புனைபுயவா!
　　அடியேற்கு—அருள்வாயே.
பங்கப் பழனமதே
　　　பண்புற் றிடுவளரே
　　மகன்னுட!—சிகிமேரா!

---

4958. பொலாதபிணி - பொல்லாத துன்பம். 'தருமைக்கடாவில் வருதருமர்-எமன். மறுமைக்கொல் பாசவினை - மறுமையிலும் நலம் விளையாதவாறு அழிக்கின்ற பற்றுகிய கொடிய தீவினை.

4959. 'சுழல்' சுழலும் பொருள் என்றேனும் கறங்கு என்றேனும் கொள்ளலாம். 'விசை' என்ற சொல்லையும் இவ்வாசிரியர் இதற்கு முன் உள்ள பாடல்களில் ஆளுவதைக் காணலாம்.

4960. சம்பு - சிவபெருமான். பங்கப்பழனம் - நுண்ணிய சேறு அமைந்த நன்செய் நிலம்.

4961. வேறு கதியிலை
    வேறு துணையிலை—அறியாயோ ?
மாறு படவரு
    மாவை அயில்கொடு—அடுசூரா !
மீறு துயர்பட
    வேண வரமிணி—உதவாயோ ?
தேறு பொழிலுறை
    சீர்கொள் சிகிமலை—வருதேவே !

4962. செங்குமுத வாயர்
    சிந்துநிகர் பார்வை—மடவாரால்
பொங்குமயன் மீது
    புண்படுதல் நீங்க—அருளாயோ ?
எங்குமொளி யான
    எங்கள்பெரு மானே !—முருகோனே !
மங்குறவழ் சோலை
    மண்டிவர தோகை—மலைவாழ்வே !

4963. பொருது சூருடல்
    புளவ தாய்விட—தொடுவேலா !
மருவு வாசையின்
    மனது நோகிட—அலையாதே
அருள்கொள் நீசெய்வை
    அழகு வேடமின்—மணவாளா !
தெருவு லாவிய
    சிகியின் மாமலை—வருதேவே !

4964. மாறு பாடுசெயு
    மாவின் மார்பிளவு—செயுவேலா !
சீறு நாகமுடி
    தேவ நாயகர்தன்—மகவேளே !
மீறு ஞானமுயர்
    வேத வேள்வியர்கள்—பணிபாதா !
தேறு சோலைவளர்
    சீர்சி காமலையில்—வருதேவே !

---

4961. மாறுப்படவருமா - அழித்தல் நோக்கமாகிய மாறுபட்ட எண்ணத்துடன் போர்க்களத்தில் முற்படும் மாமரமாகிய சூரபதுமன்.

4962. சிந்துநிகர் பார்வை - ஆழம்பெற்றும் அடியில் கிடக்கும் பொருள்களை அறிய முடியாதபடி மறைத்துக்கொள்கின்ற தன்மை பெற்றும் உள்ளகடலினை ஒத்த பார்வை.

4963. தெருவுலாவிய சிகி - பல தெருக்கள் அமைந்த சிகி.

4965. தரியல ராகிய
தருவவு ணோர்குல—கலகேசா!
கிரிநிகர் மாமுலை
கிளர்மலர் மாதுதன்—மருகேசா!
அரியயன் மாமுனி
அடியவர் மாதவர்—பணிபாதா!
வரிநிறை சோலைகள்
வளர்சிகி மாமலை—வருதேவே!

4966. இடியென வதிரிட
எதிரிட வருவவு—ணர்கள்காலா!
மிடியெனு மொருகடன்
மிசைவிழு மெனைநல—மிகவாளாய்.
துடியென நுணுகிடை
துவரிதழ் மடவியர்—மயலாளா!
கடிகமழ் பொழிலுறை
கனசிகி மலைவரு—குகநாதா!

4967. ஆவிதடு மாறி யேமன்வச மாமுன்
ஞகமயின் மீது—வருவாயே.
தேவியுமை மாது ஆசைமக வான
சீர்புதல்வ னே!நின்—னருள்தாராய்.
பாவியென வாழ்வர் பாலணுகி லாது
பாருலகி லாளு—நிதிதாராய்.
கூவிவிளை யாடு தோகைமயி லான
கோதகலு நேர்நன்—மலைநாதா!

4968. வனசத்திரு மகளைப்புணர்
திறன்மாயோன்—மருகோனே!
உனதற்புத வொளிர்நற்பத
மலர்தானே—அருளாயோ?
மனதுற்றிட வருபொய்த்துய
ரதுதீரா—தெதனாலோ?
கனகச்சிலை கயிலைச்சிலை
நிகரான—சிகிமேரா!

4969. அடலமரு சூரன் சேனை
அலறிவிழ வேலை யேவு—செயவீரா!
கடல்துயிலு மாய னரின்
கருணைமிக வான ஆசை—மருகோனே!

---

4965. தரியலர் - பகைவர். குலகலகேசா - குலத்தை அழித்த தலைவனே.
4967. எமன் - ஏமன்; கொடியவனுதலின் நீட்டப்பட்டான் போலும்.

புடவியடி யார்கள் கோடி
புனிதமுனி வோர னேகர்—பணிதாளா!
வடவரையை நேர தான
**மயில்மலையில்** நாளும் வாழும்—முருகோனே!

4970. மடவியர் தருகன
மயலினின் மனமெலி—கிடலாமோ?
நடமிடு பரியெனு
நலதொரு மயின்மிசை—வருதேவே!
அடமிகு படையுள
அசுரர்கள் குலமவிழ்—விடுவேலா!
தடமுடி முதலிய
தருநிறை **சிகிமலை**—முருகோனே!

4971. வனச மலர்த்திரு
மகளை மணத்திடு
புயமாயோன்—மருகோனே!
அனநடை பெற்றிடு
அழகு குறக்கொடி
புணர்தோளா!—அருளாயோ?
மனதின்ம யக்கிய
வறுமை தனைக்கெட
அருள்வாயே—அமரேசா!
கனகம லைக்கிணை
கமழ்பொழி லுற்றிடு
**சிகியாமோர்**—மலைவாழ்வே!

4972. அறிவி லாதவர்கள் அவர்கள் பாலிரவு—புகுதாதே
பிரிய மாகவெகு பிரபல மானநிதி—தருவாயே.
குறிக ளேபயில்செய் குறமி னுள்மருவு—புயநாதா!
வறிய னுயினிய வதிகொ ளாதருள்வை—**சிகிமேரா**!

4973. கூவி விளையாடு மயிலா!
கோக னகமான சரண!—அருளாயோ?
ஆவி தடுமாறு முனமே
ஆத ரவுவேண தருள்வா—யமரேசா!
காவி யுடைதோண வடியேன்
காண முனமாக வருவாய்—குகநாதா!
தேவி குறமாது கணவா!
சீர்கொள் **சிகிமேரி** லரசே!—செகதீசா!

4974. மதுமலர் முடித்த
வளர்குழல் படைத்த—மடவாரால்
மெதுகுற வணைந்த
விதமுள மயற்கு—எளலேவனோ ?
சதுமறை படித்த
தவசிகள் துதித்த—இருதாளா !
கதுமென நடித்த
கனமயில் நலச்சி—கியின்மேரா !

4975. கானக மடந்தை
காதல்கொள் கடம்ப—மணிமார்பா !
சானகி மணந்த
தார்புனை யும்விண்டு—மருகோனே !
தானவர் குலங்கள்
தானழிய வன்று—விடுவேலா !
வானவர் பணிந்த
வாசமிகு குன்றை—மலைவாழ்வே !

4976. வனசத்திரு மகளைப்புணர் புயமாயோன்—மருகோனே !
புனமெய்க்கொடி புணரற்புத முருகோனே !-அருளாயோ ?
மனதுத்துயர் மடியக்கிருபை புரியாத—தெதனுலோ ?
கனகக்கிரி கயிலைக்கிரி நிகராமோர்—சிகிமேரா !

4977. மிரட்டு தொழிலாலும்
விழிக்க டையினுலு—மெதிராவே
பிரட்டு மொழியாலும்
பிதற்று மடவார்கள்—மயல்தீராய்.
விரட்டு வலுசேனை
மிகுக்க வருசூரை—யடுவேலா !
திரட்டு முடிசூழுஞ்
சிகிக்கி ரியின்நாளும்—வருதேவே !

4978. அண்டர் முனிவர்
அன்பர் முதலியர்—பணிபாதா !
வண்ட னெனஎதிர்
வந்த வசுரனை—யடுவேலா !

---

4974. மெதுகுற - மென்மை அமைய.

4977. மிரட்டு, பிரட்டு என்பன சிதைந்த வழக்கின.

சண்ட னெனமுனொரு
 சண்டை செயுமுனம்—வருவாயே.
கொண்டல் படிதகு
 குன்றை மலைவரு—குருநாதா!

4979. கடமா முகத்தவர்
 கருணை நிதிக்கிசை—துணைநாதா!
படரா வணித்திடு
 பரமே சருக்கிசை—மருகேசா!
அடமா வெதிர்த்திடு
 வசுரோ னுடற்கிழி—அயிலாளா!
தடமா முடிச்சிகி
 தனிவான் மலைக்குக!—குருபரனே!

4980. ஆடை யாபரணம் யாவு மென்மினுன்—விழியாலே
சாடை யேபுரிவர் தாக மாதர்கள்தம்—மயல்தீராய்.
ஓடை வாவிகளும் ஊடு சேர்வயலின்—வளமேமா!
ஏடை யேவிரியும் ஏர்கொள்கா நிறைசி—கியின்மேரா!

4981. மாயஞ்செய நூலிடை
 மால்கொண்டிடு மாதர்கள்—மயலாலே
காயங்கெட வேயலை
 காலம்மென காலம—தறியாயோ?
வாயன்பொடு பேசியென்
 வாடுந்துயர் தீரிட—அருளாயோ?
தேயம்பணி தோகையின்
 சீர்குன்றைநன் மாமலை—வருதேவே!

4982. மதுகர மதுவுண்
 மலர்மக ளுறைபுய
 விறன்மாயோன்—மருகோனே!
சதுமறை முனிவர்கள்
 சகலரு மடிபணி
 புரிபாதா!—முருகோனே!

---

4978. 'சண்டன்' எமனைக் குறித்தது.

4979. கடமா........நாதா = மதநீர் ஒழுகும் யானையின் முகத்தினைப் பெற்றவரும் அருட்கடலும் ஆகிய விநாயகருக்குத் துணைவனாகிய தலைவனே.

விதுதவழ் சடைமுடி
விமலர்தன் னருமையின்
மகவேளே!—அருளாயோ?
புதுமல ருகுமது
புரளரு விகளென
வருசீர்தோ—கையின்மேரா?

4983. வருந்திய பணியினல்
மனத்துயர் படவுமே—அலேவேனே?
அருந்திய வுணவிலா
தருந்தவர் முதலினேர்—பணிபாதா!
முருந்திள முறுவலார்
முகஞ்செயு மயலினு—லலேவேனே?
திருந்திய முடிகள்சேர்
செகண்டியின் மலேயில்வாழ்—குகநாதா!

4984. சரசமிகு மாதர்கள்
சாடையின்விழி யான்மன—முழலாதே
தாரணிபுய நாயக!
தாவியமயின் மீதினில்—வருவாயே.
போரடுவசு ரோனுயிர்
போய்விடவொரு வேல்விடு—செயவீரா!
தோரடர்பொழி லேநிறை
தோகையின்மலே மீதினில்—வருதேவே!

4985. துடிநிக ரிடையாள்
சுககுற மடமா—னணேதோளா!
அடியிணே மறவா
அடியனே யினியா—ளிடவாராய்.
வடிவுறு மயின்மேல்
வருகுரு பரனே!—அருளாயோ?
கடிகமழ் பொழில்சேர்
கனசிகி மலேமேல்—வருவாயே.

4986. எடுத்த செனனம்
இதற்கு மகிமை—அருளாயோ?
தொடுத்த தொடையல்
சொருகுக் குழலர்—மயலூடே
அடுத்தல் தவிரும்
அருட்கொள் பெரியர்—பணிபாதா!
உடுத்த கடல்மண்
உயர்த்த புகழ்ச்சி—கியின்மேரா!

4987. பத்து முடியுள ராவணன்
படடு விழவெதி ராடிய
செயமாயன்—மருகோனே!
தத்து மயின்மிசை யேறிய
சத்துரு செயவடி வேலவ!
அடியன்முன்—வருவாயே.
சித்து விதமிடு மாதவர்
சித்திர முடியிமை யோர்முன
அடியார்கள்—பணிபாதா!
முத்து முதனவ மாமணி
முற்று மொளிவிடு தோகையின்
மலைமீது—வருதேவே!

4988. மங்கு ணிறத்தவர்
வந்து எதிர்த்தவர்—குலகாலா!
கொங்கு மலர்த்தொடை
கொண்ட புயக்குக!—குமரேசா!
பொங்கு கடற்றுயில்
புண்டரி கக்கணர்—மருகோனே!
எங்கு முயிர்க்குயிர்
என்று நிறைத்தவ!—சிகிவாழ்வே!

4989. கடகரி முகத்தர்
கருணைகொள் நலத்த—துணையாளா!
அடமிகு வலத்த
அசுரர்கு லத்தை—அடுவேலா!
நடமிடு சிறைப்பொன்
நலமிகு சிகிப்ப—ரியினுதா!
வடவரை நிகர்த்த
மயின்மலையி லுற்ற—குருநாதா!

4990. மாதவ முனிவர்கள்
மாமலர் கொடுபணி—பதஈசா!
தாவிதழ் மலர்முடி
தார்குழன் மடவியர்—மயலாலே
மேதக னேனலை
வேனது தவிரிட—அருளாயோ?
ஆதர வுகள்செய்வை
ஆர்பொழின் மிகுசிகி—மலைவாழ்வே!

---

4988. புண்டரிகக்கணர் = தாமரைபோன்ற கண்களைப் பெற்றவர், நிறைத்தவ = நிறைந்தவனே,

4991. வஞ்சக ராய்மன தன்பில ராய்வறு
வண்டர்க ளானவ—ரவர்பாலே
நெஞ்சது நோகிட பொன்றிரள் தாவென
நன்றிர வாவகை—அருளாயோ?
நஞ்சணி மாமிட றின்கமழ் வேணியர்
நங்கையு மாபதி—தருபாலா!
மஞ்சடர் சோலைகள் மிஞ்சிய தோகையின்
வண்கிரி மேல்வளர்—குகநாதா!

4992. அந்தர விமையவர்
அன்பர்கள் முனிவர்கள்—பணிபாதா!
சந்தமென் முலையுமை
சங்கரி திரிபுரை—தருபாலா!
வந்தடி பணியென்முன்
வண்சிறை மயின்மிசை—வருவாயே.
பைந்தளிர் மிகுபொழில்
பம்பிய சிகிமலை—வருதேவே!

4993. உனது பதத்தினை
உறுதியெ னப்பணி—எனையாளாய்.
மனது மயக்கிட
வருதுய ருக்கொரு—அருளாயோ?
அனநடை பெற்றிடு
அழகுகு றக்கொடி—புணர்தோளா!
கனகம லைக்கெதிர்
கமழ்சிகி நற்கிரி—வருதேவே!

4994. ஆடிய மயின்மிசை
ஆறிரு கரமில—கிடவாராய்.
வாடிய நுணுகிடை
மாதுகு றமினணை—புயநாதா!
சாடிய படையொடு
தானெதி ரசுரரை—அடுவேலா!
சூடிய பொழிலுறை
தோகையின் மலைவரு—குகவேளே!

4995. பாதக ராய்வெகு
பாவிக ளாய்வரு—கொடியோரே
வாதட மேசெயு
மாவவு ணோர்குல—கலகேசா!

சூதடர் பூண்முலை
தோகைமி னிரு—வர்கள்தோளா!
வாதடர் சோலையின்
வாசமு லாவிய—சிகிமேரா!

4996. வானதி தரித்த
மாமுடி படைத்த
விமலேசர் தருபாலா!
தானவர் குலத்தன்
தார்முடி விழக்க
திரின்வேலை—விடுதேவே!
தேனலர் தரித்த
சீர்குழன் முடித்த
குறமாது—புணர்தோளா!
வானவர் பணித்த
மாமுடி நிரைத்த
சிகிமேரில்—வருதேவே!

4997. அருமறை படைத்த
அயனமரர் பத்தர்—பணிபாதா!
பொருபடை மிகுத்த
புயவவு ணனைக்கொ—லயில்வீரா!
வருகுற மயிற்கு
மணமலர் தரித்த—மணவாளா!
திருவளர் நிறைத்த
சிகிமலை யுற்ற—குகநாதா!

4998. பிஞ்சு மதிசூடு
பெண்கொ டியுமாமின்—அருள்பாலா!
கொஞ்சு மொழிமாதர்
கொண்ட மயல்தீர—அருள்தாராய்.
அஞ்சு படையோடு
அண்ட வருசூரை—அடுவீரா!
மஞ்சு தவழ்சோலை
மண்டி வளர்தோகை—மலைவாழ்வே!

4999. அந்தர வானவர்
அன்பர்கள் மாதவர்—பணிபாதா!
கந்தர நீனிறர்
கங்கையின் வேணிய—ரருள்பாலா!

பைந்தளிர் சூடிய
பங்கச மாமுகள்—புணர்தோளா!
வந்தருள் நீசெய்வை
வண்புகழ் சேர்சிகி—மலைவாழ்வே!

5000. வாதுக் காகமு ளுடிய
வாசத் தார்புனை வேணிய—ரருள்பாலா!
சூதுக் கேகிகர் பூண்முலை
தோகைக் கான்மயின் மேவிய—இருதாளா!
போதுற் றேவளர் நான்முகன்
போதத் தான்மக ஞானியர்—பணிபாதா!
சேதுச் சீர்மணி மாமுடி
சேர்நற் றேகையின் மேரினில்—வருதேவே!

5001. தனகிரி படைத்த
சரசமட வர்க்கு—இசைவாவே
மனதுமய லுற்று
வருவது தவிர்த்து—அருளாயோ?
உனதிரு பதத்தை
உறுதிகொ ளெனக்கு—அருளாயோ?
தினமணி இமைத்த
சிகரமிகு மெய்ச்சி—கியின்மேரா!

5002. ஒருபோதும் நினையாத
உபயோக மிலரான—அவர்பாலே
தருவாய்பொ னெனவோடல்
தவிர்வாய்தென் மயிலேறு—பெருமாளே!
குருவான குமரேச!
குகாசு! இனியென்முன்—வருவாயே.
திருவாமு முடிகோடி
திகழ்தோகை மலைவாச!—முருகோனே!

5003. அடியவர் முதலினர்
அனுதின மகிழ்வொடு—பணிபாதா!
கடிகமழ் மலர்புனை
கரியகு ழலினர்கள்—மயலாளா!
வடிவுள மயின்மிசை
மகிழ்வொடு அடியன்முன்—வருவாயே.
முடிநிரை நிலையுள
முதியசி கியின்மலை—முருகோனே!

5004. சமராடிய அசுரோனொடு தகுபோர்புரி—திறலாளா!
அமராதிபன் முதலோர்பணி அலர்போலொளிர்—இரு
குமராகுரு பரநாயக! குறநாயகி—மகிழ்தோளா! [தாளா!
நமனுருடை பகைதீருவை நலதோகையின்—மலைவாழ்வே!

5005. எதிரிட்டசு ரரைக்கொன்றிட இலைநெட்டயில்—விடுசூரா!
அதிரக்கன நடைபெற்றிடு அழகுத்திறல்—மயிலாளா!
மதியைத்கரி சடைபெற்றவர் வரதர்க்கொரு—மகவேளே!
கதிரிற்கன முடியுற்றிடு கமழ்மெய்ச்சிகி—மலைவாழ்வே!

5006. சங்கரி திரிபுரை
சந்திர சடைமுடி—யுமைமானுர்
பங்கச பதமயில்
பைங்கிளி மொழிபயில்—பவள்பாலா!
மங்கள குறமகள்
வஞ்சியை மயலொடு—புணர்தோளா!
கொங்கலர் பொழிலுறை
குன்றையின் மலைவரு—குகநாதா!

5007. மனதில் மயக்கிட
வருதுய ருக்கொரு—அருள்தாராய்.
சினவசு ரைக்கொனு
திறலயி லைப்படை—கனவீரா!
அனநடை பெற்றவள்
அழகுகு றக்கொடி—புணர்தோளா!
வனசம லர்க்கொடி
வளர்சிகி நற்சிகி—வருதேவே!

5008. வெங்கணசுர் சுற்ற எதிரும்
மிஞ்சுபடை யுற்று வடல்செ—யயிலாளா!
பங்கச நிகர்த்த சரண!
பைங்கிளி தரித்த வொளிர்கை—முருகோனே!
தங்கநிற முற்ற மயில!
சந்திரன்நிகர் பெற்ற வதன!—அருளாயோ?
செங்கதிர்மு டிப்பொ னிலகு
தென்சிகி மலைக்கு வரசு—புரிநாதா!

5009. மாயஞ்செயு மாதர்கள்
மால்கொண்டதி னுன்மன—மெலிவாயே
காயங்கெட வேயலை
காலந்தவிர் மாதவர்—பணிபாதா!

நேயம்படு வேடமி
    னேயன்பொடு சேர்தரு—புயநாதா!
தேயம்பணி யேசெயும்
    சீர்குன்றையின் மாமலை—வருதேவே!

5010. வறுமை யுற்றிடு பிணியான்
    மனது கெட்டிட விதியா—வதுயேனோ?
சிறுநு தற்கொடி யிடையார்
    திருகு மைக்கணில் அலையா—தருளாயோ?
தறுகண் வெற்றியி னவுணோர்
    தனையெ திர்த்தடல் புரிகூ—ரயிலாளா!
மறுகு தேய்ப்பிணி விலக
    வரமெ னக்கருள் சிகிமா—மலைவாழ்வே!

5011. வாசக் கமல மலர்மீதே
    வாழ்வுற் றிடுதிரு மகள்மாயோன்—மருகோனே!
நேசக் குறமயில் புணர்நாதா!
    நீடுற் றிடுகதி ரயிலாளா!—அருளாயோ?
நாசப் படவரு வசுரோன்மேல்
    நாடிச் சமர்புரி செயவீரா!—சிருபைதாராய்.
மாசற் றிடுவொளிர் முடியேசேர்
    மாகத் துருவிய சிகிமேரா!—மலைவாழ்வே!

5012. மொழிகளு கலென
    முலைதள தளென—நயமாவே
விழிகுழை படவே
    வெகுமயல் தருமா—தர்களாலே
அழிவர வலையா
    தருள்தர வருவாய்—மயின்மீதே.
பழிபிணி தவிர்வாய்.
    பருமணி முடிசேர்—சிகிமேரா!

5013. அடம்புரி சூர னிறைந்திடு சேனை
    அழிந்திட வேலை—விடுசூரா!
நடம்புரி தோகை யிலங்கும யூர
    நலம்பட மீது—வருவாயே.
சடம்புரை யாக வருத்திய நோய்கள்
    தகர்ந்தது வோட—அருளாயோ?
தடம்புகழ் வேதர் நிறைந்திடு சோலை
    தகுஞ்சிகி மேரில்—வருதேவே!

5014. தாதவிழ் மலர்நீப!
தார்புனை புயநாதா!—அருளாயோ?
ஆதர வுடனுள்வாய்
ஆறிரு புயவீர!—வடிவேலா!
காதலி குறமானுள்
காவிறை மகள்மானுள்—புணர்தோளா!
வாதடர் பொழிலேசூழ்
வானடர் சிகியாமோர்—மலைவாழ்வே!

5015. தரித்திர மான நீடு
தடக்கட லாழ்கி லாது—அருளாயோ?
கரித்திர ளான சேனை
கனத்திடு சூரன் வீழ—அடுவேலா!
விரித்திடு தோகை யாடல்
மிகுத்திடு கேகை யாந—லருடாராய்.
வரித்திரள் சூழு சோலை
வனத்தொடு மேவு தோகை—மலைவாழ்வே!

5016. அண்ட ரண்டபகிர்
அண்ட மெங்குமசை—படவேதான்
சண்ட னஞ்சவிசை
தன்ப தங்கொடி—மயில்வாகா!
தொண்டர் வந்துபணி
துங்க மங்கள—சருவேசா!
கொண்டல் கொண்டபொழில்
குன்றை யங்கிரி—வருதேவே!

5017. செகத்தி லுயிர்கள்
செழிக்க வருள்செய்—கிருபைநாதா!
மகத்து முனிவர்
வழுத்து துதிகொ—ளிருதாளா!
இகத்தி லடிய
ரிடத்தி லருள்செய்—துடனுளாய்.
அகத்து வசுரை
அழித்த வயில!—சிகிமேரா!

5018. வனசத் திருமகள்
மருவிப் புணர்புயன்—மருகோனே!
புனமெய்க் கொடிமயில்
புளகத் தனகிரி—புணர்தோளா!

---

5014. காவிறைமகள் - கற்பகச் சோலையின் தலைவனுகிய இந்திரனின் மகள் தேவசேனை. வானடர் சிகி - விண்ணளவும் பாய்ந்து வளர்ந்திருக்கின்ற சிகிமலை.

மனதுற் றிடுதுயர்
        மடியக் கிருபைபுரி—குருநாதா!
கனகக் கிரிநிகர்
        கமழ்மெய்ச் சிகிமலை—வருதேவே!

5019. துவர்க்கிசை வான வாயர்
        சுகத்தினி லாசை யாகி—அலைவேனோ?
பவத்துடர் தீர வேணு
        பரிப்பொடு தோகை மீது—வருவாயே.
அவத்தின ரான சூரர்
        அழிந்திட வேலை யேவி—யடுசூரா!
தவத்தினர் தேடு பாத!
        தழைத்திடு தோகை மேரில்—வருதேவே!

5020. கடக்களி றுடைய முகத்தினர்
        கருணைகொள் துணைப டைத்திடு—முருகோனே!
நடமிடு மயிலை நடத்திநன்
        நயவரு·ளுதவ யெனக்குமுன்—வருவாயே.
மடமிகு குறவர் குலக்கொடி
        வனமுலை யிறுக வணைத்திடு—புயநாதா!
தடமுடி பொழில்க ணிறைத்திடு
        தழைசிகி யெனுமலை யுற்றிடு—செயலாளா!

5021. வடிவே லெடுத்து வருசூரை வெற்றி—புரிநாதா!
குடிவாழ் குறத்தி குயமீ தணைத்த—புயநாதா!
அடியார் தனக்கு அருள்வீ டளித்த—குருநாதா!
கடியார் பொழிற்கள் கமழ்தோகை மெய்க்கி—ரியினாதா!

5022. கடகளிறு முகத்தர்
        கருணைகொள் நலத்த—துணையாளா!
படவர வணிந்த
        பரமர்தன் மகிழ்ச்சி—பெறுபாலா!
நடமிடு திடத்த
        நளமுள வரிக்கி—முருகோனே!
வடவரை நிகர்த்த
        மயின்மலை யிருக்கு—மமரேசா!

5023. அலையாத வினையால்வரு
        துயர்யாவு மதுவேசெய்—ததனாலே
மலையாக மனமேயென
        வருதேயது வேறுவகை—அருளாயோ?

நிலையாத மனைவாழ்வினை
நிசமாக நினைவாருனை—யறியாரே.
கலையாவு நிறைநாயக!
கமழ்தோகை மலைமேல்வரு—குருநாதா!

5024. கடலாகிய துயரக்
கரையேறிட வருளே—புரிவாயே.
மடல்சூழ்தரு மலரின்
வருநாயகன் முதலோர்—பணிபாதா!
அடலாயெதி ரசுரன்
அறவேகதிர் வடிவேல்—விடுநாதா!
தடமாமுடி பொழில்கள்
தழைதோகையின் மலைமேல்—வருதேவே!

5025. வடித்த பாகுமொழி
மருட்டு கூரின்விழி—மடமானர்
படித்த லீலைமயல்
மடுத்து பாடிலலை—கிடலாமோ?
நடத்த தோகைமயில்
நலத்த மாவிலினி—வருவாயே.
முடித்த பூவையணி
முதிர்ச்சி காமலையி—னமரேசா!

5026. மடக்கொடி குறத்தி
மருட்டிய மயக்கி—லலைபாதா!
கடக்களிர் நிகர்த்த
கனத்திடு முகத்தர்—துணையாளா!
அடத்தினின் மிகுத்த
அவர்க்கெதி ரயிற்கொ—டெயும்வீரா!
திடத்திடு பொழிற்கொள்
சிகிக்கிரி தனக்கு—அரசாளா!

5027. அதிகநய மான
அழகு திகழ்மாதர்—புணர்தோளா!
மதியணியும் வேணி
மகவெனுமு லாச—முருகோனே!
கதியினிட மாடு
கனசிறையின் மீறு—மயிலாளா!
நதியுலவு நேம
நயமுலவு நாட!—சிகிமேரா!

5028. தயவு மிகுத்துடல்
தனில்பிணி யைத்தவிர்—குகநாதா!
கயலை நிகர்த்திடு
கதிர்விழி யுற்றிடு—மடமானர்
குயமி றுகப்புணர்
குளிர்மல ரைத்தரி—புயநாதா!
வயல்வள முற்றிடு
மலர்பொழில் மெய்ச்சிகி—மலைவாழ்வே!

5029. சந்தத் தமிழ்பாடிய நாவலர்
தங்கட் கிசைவாகியே வேணது—அருள்தேவே!
பந்தத் தினிலேயலை யாவகை
பண்புற் றிடநீவர மேயினி—உதவாயோ?
வந்தற் புடனேகிரி வாகன!
வஞ்சற் கிடமாயலை யாவகை—செய்வாயே.
கந்தப் பொழில்சூழ்தரு மேரிணை
கங்குற் படுதோகையின் மாமலை—வருதேவே!

5030. வடிவுக் கிணைவிழியார்
மலரைத் தரிகுழலார்—மயலாலே
கெடுதற் படவிடுவோர்
கெறுவத் தினையடுவா—யமரேசா!
கடுவைத் தரிமிடறுர்
கமழ்நற் சடையரனு—ரருள்பாலா!
நெடுமைப் பொழினிரைசேர்
கிளர்மெய்ச் சிகிமலைவாழ்—குகநாதா!

5031. கடக்களி றுனனர்
கருத்தினி லாசைகொள்—துணைநாதா!
மடக்கொடி வேடுவர்
மயிற்கிசை வாகிய—வடிவாளா!
திடப்படு சூருயிர்
தெறித்திட வேயடல்—புரிவீரா!
தடப்பொழில் சூழ்தரு
தழைத்திடு தோகையின்—மலைவாழ்வே!

5032. மதிமு டித்தவர் மகிழ்சு புத்திர!—அருளாயே.
துதிப டைத்திடு துயம லர்ப்பத—முருகோனே!
கதியெ னக்கருள் கருணை யுற்றிடு—வமரேசா!
கதிர்மு டிச்சிகி கமழ்ம லைக்குரு—பரவேளே!

---

5032. 'தூய' என்ற சொல் 'துய' எனக் குறைந்து நின்றது.

5033. ஆவியது போகு முனமே
ஆதரவு நீசெய் குவைமா—மயிலாளா!
தேவிகுற மாது தனையே
தேனெழுகு கான மதிலே—புணர்நாதா!
காவில்வரு நாதன் முதலோர்
காதலொடு பூவி னுடனே—பணிநாதா!
வாவிவன மேவு வயல்சூழ்
மாமுடிக ணீடு சிகிமா—மலைவாழ்வே!

5034. மதுமலர் மாலிகை
வளர்புய மேலணே—குகநாதா!
விதிமுத லோர்பணி
விரைமிகு சீரிரு—சரணேசா!
முதுதமிழ் பாடிய
முதிர்கனி வாயுள—குமரேசா!
சதுமறை யேபணி
தருவளர் தோகையின்—மலைவாழ்வே!

5035. சரண டைந்தவர்
தனது துன்பதை—அடுவாயே.
வரமி குந்தருள்
மயிலி லன்புடன்—வருவாயே.
அரவ ணிந்தவர்
அருமை கொண்டிடு—புதல்வோனே!
குரவ தண்பொழில்
குளிர்செ கண்டியின்—மலைவாழ்வே!

5036. கங்கு னிறமேனி மிஞ்சு மவுணோர்கள்
கண்டு விழவேமு—னடுவேலா!
கொங்கு லவுநீப! வண்டு முறுமாலை
கொண்ட புயநாத!—அருளாயோ?
செங்கு வளையான அம்ப கமினார்கள்
திங்கள் முகமாய—மறியீரோ?
மங்கு றவழ்சோலை துங்க முடிமேவு
வண்சி கியின்மேரில்—வருதேவே!

5037. வீர மிஞ்சிய சூர னைந்திட
வீறு கொண்டுட—னடுவேலா!
சார மிஞ்சிய வில்லை யும்புரி
தாக மங்கையர்—மயலாளா!

ஆர மிஞ்சிய மார்ப! அன்புட
ளுக வந்தருள்—புரிவாயே.
ஈர மிஞ்சிய தேவ ரன்பர்க
ளேப ணிந்திடு—சிகிமேரா!

5038. கடலிற்றுயில் பவருக்கொரு கருணைத்திரு—மருகோனே!
அடலுற்றிடு திறல்பெற்றிடு அசுரைப்பொரு—வயிலாளா!
நடனப்பரி மயில்வித்தக! நளினப்பத—மருளாயோ?
மடலுற்றிடு மலர்மைப்பொழில் வளர்மெய்ச்சிகி—மலைநாதா!

5039. நோயது படைத்து
நோகிட வருத்த—மிகவேநான்
தாயது வயிற்றில்
தானுட லெடுத்த—னலமாமோ?
வாயது துதித்து
மாதவர் பத்தர்—பணிபாதா!
தூயது நிறைத்த
சோலைகொள் சிகிப்போன்—மலைவாழ்வே!

5040. மாதர் மயக்கெனு
மாய வலைக்கு—ளலைவேனோ?
பாத மலர்த்துணை
பாடிய பத்தன்முன்—வருவாயே.
தாதவிழ் பெற்றிய
தார்கள் தரித்திடு—புயநாதா!
வாதடர் மைப்பொழில்
வாழுமு டிச்சிகி—மலையோனே!

5041. வனசத்திரு மகளைப்புணர் விறன்மாயோன்—மருகோனே
புனமெய்க்கொடி புணர்வித்தக! மயின்மீது—வருவாயே.
எனதிச்சையை இதுநாள்வரை நினையாத—தெதனலோ?
கனகச்சிலை கமழும்மைப் பொழில்குன்றை—மலைவாழ்வே!

5042. ஆசாபா சக்கடலு
ளாழ்வாய்நீ யிப்படியே—எனலாமோ?
காசார்பார்த் தனமான்
கரவேவாழ் மைக்குறவே—டுவிபாகா!
தூசார்நீ யப்புயனே!
சேர்த்தாய்மா துக்கொருகான்—மருகோனே!
ஈசார்நீ யற்புடனுள்
ஏர்சேர்தோ கைக்கிரிவாழ்—குகநாதா!

---

5042. 'நீ இப்படியே ஆசாபாசக் கடலுள் ஆழ்வாய் எனல் ஆமோ' எனக் கூட்டுக.

5043. எந்தன் மனப்படி
எந்த விதத்திலும்—அருளாயோ?
கந்த மலர்க்கொடி
கங்கு னிறத்தினர்—மருகோனே!
செந்தமி ழைப்புகல்
திங்கண் முகத்தொளிர்—கனிவாயா!
சந்த மலர்ப்பொழில்
தங்கு சிகிக்கிரி—வருதேவே!

5044. வஞ்ச மேபுரி தானவர்
மண்டு சேனைகள் வீழிட—எதிர்வேலா!
தஞ்சம் வேறிலை வேணருள்
தந்தி டாவகை தானது—எதனலோ?
கஞ்ச நாயகி நாதனர்
கங்குன் மேனிய ராசையின்—மருகோனே!
மஞ்சு சூழுயர் சோலைகள்
மண்டு தோகையின் மேசினில்—வருதேவே!

5045 நாடகமிடு தாளினர்
நான்மறை புகழ் நாயகர்—அருள்பாலா!
மாடகமுய ராள்மொழி
மாதர்கள்மய லான்மன—முழல்வேனே?
ஏடகமலர் வேதனு
மேவருமுனி வோர்களு—நிறைமேரா!
ஆடகமலை போனுயர்
ஆர்பொழிலுறை தோகையின்—மலைவாழ்வே!

5046. சதமகன் முதலினர்
சகலரு மடிதொழு—முருகோனே!
மதவரை நிகரிடு
வதனர்த னருமை—துணைநாதா!
கதமுடன் வருபடை
கழிபட வயில்விடு—செயவீரா!
உதயவ னிகர்முடி
ஒளிர்சிகி மலைமிசை—வருதேவே!

5047. அடியவர் முதலினர்
அவ்ரவர் பணிபுரி—யிருதாளா!
குடிவளர் குறமயில்
குவிமுலை முகடுற—வணைதோளா!

துடியிடை மடவியர்
துயர்பட வருவினை—தவிராயோ?
முடிபொழில் நிறைதரு
முதுசிகி மலைவளர்—குகநாதா!

5048. உலக வழக்கினில்
உழறல் தவிர்த்தினி—யருளாயோ?
கலக விழிச்சியர்
கனமய லுற்றினி—யலைவேனோ?
திலக நுதற்கொடி
தினைவன மைக்குற—மயிலாளா!
பலகலை வித்தக!
பனிடு நற்சிகி—மலைவாழ்வே!

5049. திங்களணி சடையார்
தென்கயிலை மலையா—ரருள்பாலா!
தங்களுட வடியார்
தன்குறையை யடைவே—யருளாயோ?
பங்கச சரணமே
பண்புயரு மலரே—யருளாயோ?
மங்கள சிகியின்மா
வண்கிரியின் மலைவாழ்—குகநாதா!

5050. வானத் தரகுசெய்
வாசத் தருவளர்—பவன்வானோர்
தானற் பொடுபணி
தாமப் புயகுரு—பரநாதா!
கானக் குறமயில்
காமக் கடல்முழு—கியகோலா!
ஞானத் தவர்நிறை
நாகத் தினிலுயர்—சிகிமேரா!

5051 வனசத் தடமலர்
மயிலைப் புணர்பவர்—மருகோனே!
உனதற் புதபதம்
உறுதிப் படநினை—பவர்நாதா!

---

5050. வாசத்தரு வளர்பவன் - இந்திரன். தாமப்புய - மாலைகளை அணிந்த புயங்களை உடையவனே. நாகம் - மலை.

மனதுற் றிடுதுயர்
மடிய ப்படவொரு—அருள்தாராய்.
கனகக் கிரியுயர்
கயிலைக் கிரிகிகர்—சிகிமேரா !

5052. நச்சு விழிச்சியர்
நத்து மிடற்றினர்—மயலாலே
எச்சு வலைத்திட
இப்படி யுற்றிட—விதியாமோ ?
அச்சுத னுக்கொரு
அற்பு மிகுத்திடு—மருகோனே
மொச்சு நிரைத்துவிண்
முற்று பொழில்சிகி—மலைவாழ்வே !

5053. தீவினை யான்மன நோகிட வேவலி
தீரிட வேயருள்—புரிவாயே.
பாவிய ராகிய மூடர்கள் கோவியர்
பாலணு காவகை—யருளாயோ ?
தாவிய தோகையின் மாமயில் வாகன !
சாடிய தானவர்—குலகாலா !
கூவிய சேவல ! ஆதர வேயருள்
கூரிய வேலவ ! சிகிமேரா !

5054. மாதவ முனிவர் தேவர்
மாமலர் இதழ்கள்தூவு—மிருபாதா !
ஆதர வுனைய லாது
யாவரு மிலைய யாந—லருளாயோ ?
காதல ரிருமி னர்கள்
காமம துவிலே யாளும்—வடிவாளா !
பூதல மதனி னீடு
பூமலி சிகியின் மேரில்—வருதேவே !

5055. உனது பதத்தினை உறுதி பிடித்திடு—மடியாரே
மனது மகிழ்க்கொள மயிலை நடத்திமு—னருள்தேவே !
அனநடை பெற்றவள் அழகு குறக்கொடி—யவள்தோளா !
தினகர னுக்கெதிர் சிகர முயர்த்திடு—சிகிமேரா !

---

5052. எச்சு வலைத்திட - எச்சாகிய வலையில் இட ; எச்சு - ஏசுதல் ; குறை கூறுதல்.

5056. ஆறு முகத்தழ
காக வெனக்குமுன்—வருவாயே.
மீறு படைத்திரள்
மேவயெ திர்த்திடு—அசுரோன்மேல்
கூறு படைத்திடு
கூரயி லைத்தொடு—செயவீரா!
தேறு மகிழ்க்குரு
தேசிக! மெய்ச்சிகி—மலைவாழ்வே!

5057. ஆடிய மயின்மீதே
ஆறிரு புயநாத!—வருவாயே.
பாடிய கனிவாயா!
பார்வதி தருபாலா!—அருளாயோ?
கூடிய படைவீழக்
கூரிய வயிலேதான்—விடுசூரா!
நீடிய பொழின்மேரா!
நேர்சிகி மலைமீதே—வருதேவே!

5058. பாதார விந்த மதையே
பாராதி ருத்தல் நலமோ?—அருள்வாயே.
நீதானி லங்கு மயில்மேல்
நேயேனும் காண வருவாய்—தயவாலே.
ஆதார மொன்று மிலையே
ஆருறு செங்கை வடிவே!—மணமேசேர்
போதாரும் தண்ட லைகளே
போதாக குன்றை மலைமேல்—வருதேவே!

5059. நூலினை நிகரிடை
நூபுர மணிபத—மடமானர்
பாவினி யலைகுதல்
பாவம தையினி—யடுவாயே.
வேலினை யெதிர்வரு
வீறுள வசுரன்மு—னையுநாதா!
வாலிய மதிதவழ்
மாமுடி யுயர்சிகி—மலைவாழ்வே!

5060. மாதவ முனிவர்கள்
வானவர் முதலினர்—பணிபாதா!
காதலி குறமகள்
காமமென் மடுவினி—லலைநாதா!

5059. வாலியமதி - வெண்ணிறச்சந்திரன்.

ஆதர விலையரு
    ளாய்குரு பர!முரு—கையனே! பொன்
கோதகல் கொடுமுடி
    கோடுயர் சிகிமலை—வருதேவே!

5061. வான வர்முதல மரர்மு னிவரர்—பணிபாதா!
கான கமயில் காதல் கொள்மல—ரணிமார்பா!
தான வர்படை தான்வி ழவடு—வயிலாளா!
தேன லருகு சீர்பொ ழினிறை—சிகிமேரா!

5062. கடவுளர் முதலினர்
    கருணையி னொடுபணி—புரிபாதா!
மடமயில் குறமினை
    மயலொடு புணர்தரு—புயநாதா!
குடவயி றுடதுணை
    குக!குரு பர!அருள்—புரிவாயே.
தடவரை நிகர்முடி
    தழைசிகி மலைவரு—குகநாதா!

5063. மங்கல குறமடமான்
    வண்குழன் முடிமயிலாள்—புணர்தோளா!
சங்கரி யுமைபுதல்வா!
    தன்கழல் பணியெனையா—ளிடவாராய்.
செங்கணி னடலரியான்
    திண்படை விழவயிலே—வியவீரா!
கொங்கல ருகுபொழில்சேர்
    குன்றையின் மலையினில்வாழ்—குகநாதா!

5064. அடல்புரி சூரன் சேனை
    அலறிட வேலை யேவு—செயவீரா!
கடல்துயில் மாய னார்தன்
    கருணைய தான ஞான—மருகேசா!
நடமிடு தோகை யாள!
    நறுமலர் நீப மாலை—புனைமார்பா!
மடலவிழ் சோலை நீடு
    மணிமுடி மேவு தோகை—மலைவாழ்வே!

5065. துயர மெனுங்கடல்
    துலைய வரம்புரி—குவைநாதா!
நயமிகு வன்பர்கள்
    நறுமலர் கொண்டிடு—இருபாதா!

கயல்க ளிரண்டுகொள்
கடைவிழி மங்கையர்—புணர்தோளா!
வயல்க ணிறைந்திடு
வளர்முடி யின்சிகி—மலைவாழ்வே!

5066. சங்கரி திரிபுரை
சந்திர சடைமுடி—யுமைபாலா!
பங்கச யிருபத
பங்கிரு யிருமட—வியர்தோளா!
செங்கணி னசுருயிர்
சிந்திட வயில்விடு—செயவீரா!
மங்கது தவழ்பொழின்
மண்டிய சிகிமலை—வருதேவே!

5067. வித்துரும இதழினள்
விற்குநிகர் நுதலினள்—குறமானள்
குத்துமுலை மயலுளாய்!
கொத்துமண மலர்கள்சூ—டியமார்பா!
தத்துமயில் முருகையா!
சத்தியணி யிருகையா!—அருளாயோ?
நத்துலவு வயல்கள்சூழ்
நற்றமிழ்கள் துதிசிகா—மலைவாழ்வே!

5068. வடிவே லெடுத்து
வருசூர் படைக்கு—விடுதேவே!
படியேழ் துதித்த
பரமா! நலத்தை—யருளாயோ?
கடியார் கடப்ப
கருணை நிதிப்பொன்—மயிலாளா!
அடியார் நிறைத்த
அழகார் சிகிக்கி—ரியினதா!

5069. அமரர் பணிசரணை!
அடியன் மிடிதவிரா—தெதனலோ?
சமர மிகுவசுரோன்
தனையயில் கொடடனே—கொழுநாதா!
குமர! குருபரனே!
குளிர்தினை யின்வனமா—னணைதோளா!
பமர நிரைபொழில்சூழ்
பதிதுதி சிகியின்மா—மலைவாழ்வே!

5070. அடவியி லிருக்கும்
அழகுள குறத்தி—புணர்தோளா!
கடதட மிகுத்த
களிறுமுகர் தனக்கு—மகிழ்தோளா!
நடமிடு கனத்த
நலமிகு மயிற்ப—ரியினுதா!
தடமுடி படைத்த
தருசிகி மலைக்கு—வொருநாதா!

5071. வானகத் தரசாகிய
வாசவற் கிசைமாபுதல்—வியினுதா!
தானவர்க் குலமேன்மைய
தானமற் புயசூருட—னடுவேலா!
சானகித் திருவேபுணர்
தாமமைத் துணைமாயவன்—மருகோனே!
ஞானவித் தகரேபணி
நாடுமெய்ச் சிகிமாமலை—வருதேவே!

5072. தேனலர் முடித்த
சீர்குழன் மிகுத்த—மடவாரால்
நானவ தியுற்று
நான்மெலி வுபெற்ற—லைகலாமோ?
நீனல மிகுக்க
நீடிய வரத்தை—யுதவாயோ?
வானவர் முடிப்பொன்
மாமணி யிமைத்த—சிகிமேரா!

5073. எடுத்த செனனம்
இதற்கு நலமு—மிலையோதான்.
தொடுத்த வினைகள்
துலைத்து விடநி—னருடாராய்.
கெடுத்த அசுரன்
கிளைக்கு யழிவு—புரிவேலா!
விடுத்த மலர்கள்
மிகுத்த பொழில்கள்—சிகிமேரா!

5074. ஆதர வெனக்கு
ஆருள ரற்பி—னுடன்வாராய்.
காதள வடுத்த
கார்விழி மயிற்கு—றமின்பாகா!

கோதகல் நலத்த
 கூர்குறு முனிக்கு—வுபதேசா!
வாதடர் பொழிற்கொள்
 வாகுள சிகித்தென்—மலைவாழ்வே!

5075. வடிவுறு குறத்தி
 மயலினின் மயக்கம்—மிகுவோனே!
கடிமலர் தரித்த
 கமழ்புய! வெனக்கு—அருளாயோ?
அடியவர் தமக்கு
 அருளிய நலத்த—கனிவாயா!
படிபுகழ் மிகுத்த
 பருமுடி படைத்த—சிகிமேரா!

5076. மதுமலர் நீப
 மலரணி மார்ப!—அருளாயோ?
பதுமமென் மாது
 பணைமுலை மேவி—வளர்நாதா!
சதுமறை தேடு
 சரவண நாத!—அருள்ாயோ?
முதிர்பொழி லீடு
 முதுசிகி மேரில்—வருதேவே!

5077. கரிய மிடறினர்
 கடவு ளுமைபதி—தருபாலா!
தரிய லர்கள்பணி
 தருவை யடல்புரி—அயிலாளா!
பரிய மயிலெனும்
 பரியில் வருகுரு—பரவேளே!
வரிக ணிறைபொழில்
 வளரு சிகிமலை—முருகோனே!

5078. அடவியின் வருமகள் அவடனை மருவிய—புயநாதா!
கடகளி றுயர்முகர் கனவட் டிடையவர்—துணைநாதா!
மடமயி லெனவரு மகளிர்கள் மயல்தவ—றிடவாராய்.
வடவரை நிகர்தரு மயின்மலை மிசைவரு—குருநாதா!

5079. கடம்பை யணிபுயத்தர்
 கனிந்த ருளுநயத்தர்—முனிவோர்பால்
நடம்பு ரிசெய்பத்தர்
 நறும்ப வுன்நிறத்த—ருள்பாலா!

வடங்கள் தரிதனத்தார்
வழங்கு மயலதனை—தீரிடுவாய்.
இடங்க வெனமுடிபிடித்தே
இலங்கு சிகிமதுகனே!—அருடாராய்.

5080. பதும மலர்த்திருப்
பருவ முலைகளுடன்
அணைமாயோன்—மருகோனே!
சதுமறை யுற்றவர்
தனைமகி ழச்செயு
முபதேசா!—அருள்தாராய்.
முதுதமிழ் வித்தக!
முனிவர் முதற்பணி
புரிநாதா!—கிருபைதாராய்!
மதுமலர் மைப்பொழில்
மயில்மலைக்கொரு
பொருள்போலே—வருதேவே!

5081. சிலையை நிகர்நுதலாள்
சிறிய நுணுகிடையள்—குறமானுள்
மலையை நிகர்முலைமேல்
மயலி னெடுபுணர்வியராய்!—அருள்தாராய்.
கொலைகள் புரிவசுரோன்
குலமு முதுமழிவாய்—விடுவேலா!
கலைகள் பயில்புலவர்
கமழ்சி கியின்மலைமேல்—வளர்வேலா!

5082. கதிமிகு மயின்மிசை
கருணையி னுடனென்முன்—வருவாயே.
அதிமய லொடுபுணர்
அவர்மய லதுதவி—ரிடுவாயே.
கெதியருள் குருபர!
கிருபைபுரி தயவுள—குகநாதா!
மதிதவழ் பொழிலுறை
வளர்சிகி மலைமிசை—வருதேவே!

---

5079. நான்காம் அடியின் முதற்பகுதி விளங்கவில்லை.

5081. இரண்டாம் அடியின் நான்காம் சீரில் ஓரசை மிகுதியாக உள்ளது.

5083. மீறிய வசுரன் மேலடர் புரியு—மயிலாளா!
சீறிய வரவு சீர்சடை யணியு—மவர்பாலா!
கூறிய தமிழர் கோகன கநயனன்—குருநாதா!
தேறிய பொழில்சேர் சீர்சிகி மலைவாழ்—குகநாதா!

5084. மதுமலர் தரித்த
வளர்குழல் முடித்த—மடவாரால்
பதுமமென் விழிக்குள்
பயில்தரு மயற்கொ—டலைவேனோ?
சதுமறை துதித்த
சரவண பவ!க்குரு!—அமரேசா!
விதுதவழ் பொழில்கள்
மிகுசிகி மலைப்பொன்—மலைவாழ்வே!

5085. தண்டமி ழார்நிறை
சங்கம தனிலொரு—புலவோனே!
அண்டர்கள் முனிவர்கள்
அன்பர்கள் பணிசெயு—மிருதாளா!
வண்டனை யெதிர்வரு
வம்பனை வசுரனை—யடுவேலா!
கொண்டல்கள் படிதரு
குன்றையின் மலைவரு—குகநாதா!

5086. மருப்புய நீப மாலை
மணிப்புய மீது சூடு—மமரேசா!
கருக்குழி வீழி டாது
கருத்தினி லாசை யாக—நினையாயோ?
பொருப்பென வேமு ணேடு
புயத்தசு ரோனை வேல்கொ—டெயும்வீரா!
திருப்பொலி சோலை நீடு
சிகிக்கிரி நாத! கோடி—அருளாயோ?

5087. வருதுய ரக்கடலை
மடிப டக்கிருபை—புரிவாயே.
கருவி ழிக்குமரி
கமழ்கு றக்குறமி—னணைதோளா!
பொருதி றத்தவுணர்
புரைப டப்பொருது—மயிலாளா!
தரும லர்ப்பொழில்கள்
தழை சிகிக்கிரியில்—வருதேவே!

5083. 'தமிழர் கூறிய கோகனக நயனன்' என மாறுக.

5088. அடியவர் பணிபுரி
அடியிணை தொழுமென்முன்—வருவாயே.
கடிகமழ் மலரணி
கனபணி யிருபுய!—அருளாயோ?
துடிநிகர் இடைமயில்
துரைமகள் குறமகள்—புணர்தோளா!
வடிவுள முடிநிறை
மாயின்மலை மிசைவரு—குகநாதா!

5089 மருட்படு விழியார்
மயற்கி டையாது—மலைவேனோ?
விருப்பொடு மடியார்
வினைப்பிற விகள்தீ—ரிடுநாதா!
செருக்கிள ரசுரோன்
தெரித்தவன் விழவே—அடுவேலா!
திருக்கதிர் முடிசேர்
சிகிக்கிரி மலைவாழ்—குகநாதா!

5090. மதுமலர் தரித்த
வளர்பிறை நுதற்பொன்—மயில்போல்வார்
மெதுவுட லணைத்த
வெறிமய றனக்கு—மெலிவேனோ?
பதுமமென் மனைப்பொன்
பழகிய புயத்தர்—மருகோனே!
விதுதவழ் பொழிற்கொள்
விரைச்செறி சிகிப்பொன்—மலைவாழ்வே!

5091. மாதருடன் மயலான்
மாயம தனிலே—அலைவேனோ?
ஆதரவு தருவாய்
ஆறுமுக வடிவா—கியநாதா!
வாதடர வருசூர்
மாயவயில் விடுசே—வக!வீரா!
சீதமதி தவழ்சீர்
சேர்சிகியின் மலைவாழ்—குகநாதா!

5092. வனசத்தினில் வளர்மெய்க்குயில்
புணர்தோளர்—மருகோனே!
புனமைக்கொடி புளகத்தன
மிசையேதா—னணைதோளா!

உனதற்புத உபயச்சர
　　ணினைவோர்பால்—வருவாயே.
கனகச்சிலை கயிலைச்சிலை
　　நிகராமோர்—சிகிமேரா !

5093. வாதுபுரி சூரன்
　　மாயஅயி லேவு—செயவீரா !
போதுமளர் மாது
　　போலவரு வேடர்—மகள்தோளா !
மாதுவுமை யாடன்
　　மாமகவ தாக—வருதேவே !
கோதுவகல் சோலை
　　கோலமிகு தோகை—மலைவாழ்வே !

5094. கடமத மொழுகிய
　　களிவத னருடை—துணைநாதா !
உடல்படு துயரினை
　　ஒளிபட நலவருள்—புரிவாயே.
மடமயில் குறவர்கள்
　　மகளரு மையின்மரு—வியதோளா !
வடவரை நிகர்தரு
　　மயின்மலை மிசைவரு—குகநாதா !

5095. கஞ்ச நிகர் மலரார்
　　கண்டு தருமயலான்—மதிசோர்வாய்
தஞ்ச மிலையருள்வாய்
　　சங்க ரிதன்மகவே !—அருளாயோ ?
வஞ்ச மிகுபிணிதான்
　　மங்கி யதுபடவே—அருளாயோ ?
மஞ்ச டருபொழில்சூழ்
　　வஞ்சி கியின்மலைவாழ்—குருநாதா !

5096. வாடிய கொடியிடையார்
　　மாமயல் தனிலலைவாய்—மெலிவேனே ?
ஆடிய பரிமயின்மேல்
　　ஆரணர் முதலினர்சூ—ழிடவாராய்.
நாடிய வரமருள்வாய்
　　நாமபொன் வடிவயிலா—யுதவீரா !
கூடிய பொழினிரைசேர்
　　கோதறு சிகிமலைவாழ்—குகநாதா !

5097. மடமாதர்கள் மயலாலுடல் மனநொந்திடல்—விதியாமோ?
திடமாகிய அவுணோர்படை தெறிவாகிட—அடுவேலா!
உடனெய்தனை யுடனேகெட வொருமாமயின்—
[மிசைவாராய்
வடமேரினை நிகராய்வரு மயின்மாமலை—முருகோனே!

5098. சவுரிய னாகிய தருவினை யேயடு—அயிலாளா!
கவுரிமி னருள்தரு கமழ்மல ரணிப்புய!—அருளாயோ?
அவியுண ரிமையவர் அடியவர் முதலினர்—பணிபாதா!
குவிதரு முடிநிரை குளிர்சிகிமலைவரு—துரைவேளே!

5099 கொங்குலவு நீப குஞ்சரச்ச கோதர—!குமரேசா!
கங்குனிற மான கண்டரருள் பாலா!—அருளாயோ?
செங்குமுத வாயன் திங்கண்முக மாதர்—புணர்தோளா!
மங்குறவழ் சோலை மண்டுசிகி மேரில்—வருதேவே!

5100. அயலார்கள் போல
அடியேனை யெனுத—லெனையனே!
கயலான பார்வை
கமழ்கேச மாதர்—மயலாலே
துயராக வாடல்
துலையா மலைய—லைகுவனோ?
வயலாழி சூழும்
மயிலான தோகை—மலைவாழ்வே!

5101. பாதகத்தி னல்வரு
பாவமிப்ப வோடிட—அருளாயோ?
வாதவித்தை மாதவர்
வானவர்க்கு ழாமுத—லினர்நாதா!
சீதளச்ச டாடவி
தேவரற்பு தமாகிய—புதல்வோனே!
கோதகன்ற சோலைகள்
கூடுமெய்ச்சி கிமாமலை—வருதேவே!

5102. உனது பாத மலரை
உறுதி யாக நினையு—மெனையாளாய்.
மனது நோய்கள் தவிர
மயிலி லேறி யென்முன்—வருவாயே.

---

5101. சீதளச்சடாடவி தேவர் = குளிர்ந்த சடைக்காட்டினைப் பெற்ற சிவபெருமான்.

சினவ ராவு புனையுஞ்
சிவனிட மேவு கவுரி—தருபாலா!
கனக மேரு சிகருங்
கமழ்சி காநன் மலையில்—வருதேவே!

5103. கடன்மிசை துயில்புரி
கமழ்துள யணிபுயன்—மருகோனே!
மடமயில் குறவர்தன்
மகள்மயல் தனின்மயல்—புரிநாதா!
உடல்வரு பிணிதனை
ஒழிபட வருள்புரி—தயவாளா!
நடமிடு மயிலெனு
நறுமலை வருகுரு—பரவேளே!

5104. பனகச யனத்து
பரவரிய முத்த—ரருள்பாலா!
அனமிலு மிகுத்த
அழகிய நடைக்கு—றமினாதா!
உனதுடைய பத்தன்
உறுபிணி தனக்கு—அருளாயே.
வனமுயர் சிகிப்பொன்
மலைவரு நலத்த—குகநாதா!

5105. அடிய னேனிடம்
அள்வி லாவர—மருளாயோ?
குடியி லுல்வரு
குறைக டரிட—நினையாயோ?
வடிவி னுள்குற
மயிலி னுள்புணர்—புயநாதா!
கடிகொள் சோலைகள்
கமழ்சி காமலை—வருதேவே!

5106. வஞ்சி நுண்ணிடை
மங்கை யர்மய—லதனாலே
நெஞ்சி லன்புடன்
நின்று நோகிடல்—விதியாமோ?
பஞ்சின் மெல்லடி
பந்தின் மென்முலை—யவர்தோளா!
மஞ்சு வந்துறு
வண்செ கண்டியின்—மலைவாழ்வே!

5107. அடிய ரனேக பேர்கள்
அதிலொரு பாவி யாக—வெணலாமோ?
மிடிதனி லாழ்கி டாது
வெகுதய வாக வேண—தருளாயோ?
வடிவுறு தோழி மர்தர்
மனமகிழ் வாக மேவு—புயநாதா!
முடிபுனை சோலை நீடு
முதுசிகி மேரின் வாழு—முருகோனே!

5108. அண்டரு முனிவர்கள் அன்பி னெடுபணி—புரிதாளா!
வண்ட னெனுமவு னன்றனை யமர்செயு—மயிலாளா!
செண்ட னையமுலை திங்கள் முகமட—வியர்தோளா!
கொண்டல் படிதரு குன்றை மலைவரு—குகவேளே!

5109. கானக மயிலி
காதல்கொள் வடிவ!—அமரேசா!
தானவர் குடிகள்
தானழி வாக—யடுவேலா!
வானவர் முனிவர்
மாலொடு பரவு—மிருதாளா!
தேனலர் நிறைகொள்
சீர்சிகி மலையில்—வருதேவே!

5110. சூடிய மலரணி
தோகையர் மயல்மடு—வினில்வீழ்வோர்
வாடிய மனதினை
மாசது தவிரிட—அருளாயோ?
பாடிய தமிழொடு
பான்மொழி யொழுகிய—கனிவாயா!
ஆடிய மயின்மலை
யா!குக! குருபர!—முருகோனே!

5111. படையெ டுத்துவரு பனைபு யத்தசுரை—யடுவேலா!
நடைமி குத்தொரு நலம யில்பரியில்—வருதேவே!
இடையி ளைக்குமுயர் இருத னத்தியர்கண்—மயலாளா!
விடைய வர்க்குமக! விரைம லர்ப்பொழில்கொள்-சிகிமேரா!

5112. மோதம ருற்றிடு மூடன ரக்கனை—யடுவேலா!
காதன் மிகுத்திடு காரிகை மெய்க்குற—மகள்தோளா!
சீதம லர்த்திடு சேர்புய னுக்கிசை—மருகோனே!
வாதடர் மைப்பொழில் வாழ்சிகி நற்கிரி—வருதேவே!

5113. கூனிய பிறையணி
கூடிய சடையுயர்—பெருமானுர்
தானருள் திருமக !
தாவிய மயின்மிசை—வருதேவே !
வானவர் முனிவர்கள்
மாமுனி வரர்பணி—புரிபாதா !
தேனலர் உகுபொழில்
சேர்சிகி மலேமுரு—கயிவேளே !

5114. வாடிடு மிடையார் வாரணி முலேயார்—மயலாலே
தேடிய துயரே தீரிட வகைதா—னருளாயோ?
சூடிய தொடையார் தோகையின் மயில்வா—கனவேளே!
கூடிய பொழில்சேர் கோதறு சிகிமா—மலேவேளே !

5115. வீறு படைத்திடு சூர னுடற்கிழி
வேலே யெடுத்திடு—செயவீரா !
மீறு தனத்திய ராசையி லுற்றிடு
வேனெனே யற்பொடு—அருளாள்வாய்.
கூறு விழிச்சியர் ஆசை படைத்தவ!
கோகன கச்சரண்—முருகேசா!
தேறு பொழிற்கன மாமுடி யுற்றிடு
சீர்சிகி மெய்க்கிரி—வருதேவே!

5116. மடவியர் மயற்கு மனமது இளேத்து—அலேயாதே
உடனவர் மெனக்கு வுதவிசெய் நலத்த—மயிலாளா!
நடமிடு பதத்தர் நயமிகு உமைப்பெண்—மகவேளே !
தடமுடி படைத்த தழைசிகி மலேக்கு—முதலாளா !

5117. ஆதிபர மேசர் ஆரணவி லாச—ரருள்பாலா !
மாதிலுயர் வேடர் மாமகளே மேவு—புயநாதா !
வாதிலுயர் சூரை மாயவழி லேவு—செயவீரா !
சோதிமய மான தோகைமலே வாச !—முருகோனே !

---

சுப்பராயர் துணே.

குன்றக்குடியார் துணே.

முருகன் துணே.

---

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி

[எண் — பக்க எண்]

ஆ

உ



ஊ

எ

சி



சீ



சு



சூ



செ

தா



தி



தீ

துு



தூ



தே



தொ



ந

நா



நி



நூ



நெ



நோ

d

Printed at
RATHNAM PRESS,
Madras-1.